திருமயிலைத் திருத்தலம்

இலக்கிய, வரலாற்றுப் பார்வை

டாக்டர்
சு. ராஜசேகரன்

1442

அ 23:38.2111.M
N89
128507

திருமயிலைத் திருத்தலம்

இலக்கிய, வரலாற்றுப் பார்வை

(MYLAPORE THROUGH THE AGES)

டாக்டர் சு. ராஜசேகரன்
தமிழ்ப் பேராசிரியர்,
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, நந்தனம்,
சென்னை-600 035.

ராஜலட்சுமி பதிப்பகம்
47, சடையப்ப முதலி தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை-600 015.

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	Tirumayilai Tiruttalam-Ilakkiya, Varalarrup Parvai
Author	:	Dr. S. Rajasekaran, M A., Ph D;
Publisher★	:	Rajalakshmi Pathippagam 47, Sadayappa Mudali Street, Saidapet, Madras-600 015.
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	Dec, 1989
Copyright	:	Author
Paper used	:	14.2 kg D/Demmy White Printing Paper
Size of the book	:	21 × 14 Cms.
Printing Types	:	10, 12 Point
Number of Pages	:	400
Number of Copies	:	1,000
Price	:	**Rs. 60**/ (Rupees Sixty only)
Printers	:	Kadhiravan Achagam L. B. Road, Madras-41.
Binding	:	Paper Back
Artist	:	P. N. Anandan
Subject	:	A study on Mylapore Temples

தமிழ்நாடு
128507

எங்கள் அன்னையாரின் திருவடிகட்கு



அமரர் திருமதி சு. ராஜலட்சுமி அம்மையார்

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர், தமிழ் மொழித்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
பல்கலைக் கழக இணைவகம், சென்னை-600 005.

அணிந்துரை

திருமயிலை என்று போற்றப்படும் மயிலாப்பூர் பழங்காலம் முதல் பெரும் புகழ் பெற்று விளங்கும் திருத்தலமாகும். தமிழகத்தின் அழகிய கடற்கரையின் ஓரத்தில் அமைந்திருக்கும் மயிலாப்பூரில் அருளாளப் பெருமக்களும் ஆட்சியாளர்களும் காலந்தோறும் தோன்றி இவ்வூருக்குத் தனிச்சிறப்பைத் தந்துள்ளனர். தமிழ்மறை தந்த திருவள்ளுவராலும் திருமுறை தந்த ஞானசம்பந்தராலும் புகழ்பூத்துப் பொலிந்த நகரம் திருமயிலை. விடுதலைக்கு முன் ஆண்ட பிற நாட்டவரும் மயிலைப்பகுதியில் வாழும் சூழலை விரும்பினர் என்பதை அவர் தம் வரலாறும் காட்டும். பழங்காலத்தே துறைமுகமாய்த் துலங்கிய திருமயிலை இன்றும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் தமிழகத்தின் சிறப்புக்குரிய நகரமாய்த் துலங்குவது இதன் சிறப்பைக் காட்டும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க திருமயிலையின்சிறப்பை இலக்கிய வரலாற்றுப் பார்வையில் அணுகி அரிய ஆய்வு நூலாகப் படைத்துள்ளார் டாக்டர் சு. இராஜசேகரன். வரலாற்றுப் புலமையும் இலக்கிய நுட்பமும் மிளிர ஆய்வுக் குறிப்புகளைப் பெரிதும் முயன்று தேடி ஆய்வினைச் செம்மையாகச் செய்துள்ள பாங்கு நூலின் ஒவ்வொரு நிலையிலும் திகழ்வதைப் படிப்போர் நன்குணர்வர்.

திருமயிலையின் வரலாற்றுப் போக்கினைப் பழந்தமிழ் இலக்கியங்கள், திருமுறை இலக்கியங்கள், அண்மையில் தோன்றிய நூலகள், இசைப்பாடல்கள் முதலான அனைத்துச் சான்றுகளின் வழியேயும் ஆராய்ந்து மயிலையின் பெருமையை முழுமையாகச் சித்தரித்துள்ளது இந் நூலின் தனிப் பெரும் சிறப்பாகும். திருமயிலைக்குக் காலந்தோறும் வழங்கி வந்த பெயர்கள் பற்றிய ஆய்வு நுட்பம் மிக்கது. அண்மைக் காலத்தே வளர்ந்து வரும் இடப் பெயராய்வின் (Toponomy) அணுகுமுறையை யொட்டிச் சிந்திப்பதற்கு இவ் ஆய்வு பெருந்துணை புரியும். நூற்றாண்டு தோறும் திருமயிலை பெற்ற பெயர்களை முறைப்படுத்தித் தருவது ஆய்வாளரின் முறையான அணுகுமுறையையும் அவர் தம் கடுமையான உழைப்பையும் காட்டும்.

இலக்கியம் போற்றும் திருமயிலை (பக் 79—228) என்னும் இயல் திருமயிலையைக் குறித்துப் பாடிய அனைத்து இலக்கி

யங்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது. இன்றும் எளிதாகக் காணக்கிடைக்காத அரிய நூல்களைத் தேடிப்படித்து அவற்றின் வழியே ஆய்வை நிகழ்த்தியிருக்கும் ஆய்வாளரின் முயற்சி பாராட்டிற்குரியதாகும், திருமுறை இலக்கியங்கள், தல புராணங்கள், துதிப்பாடல்கள் எனப் பல்வகை இலக்கியங்களின் பட்டியலையும் காணமுடிகின்றது. குறிப்பாகச் சென்ற நூற்றாண்டில் எழுதப் பெற்ற திருமயிலை இலக்கியங்களின் சிறப்பையும் இவ் வியலால் அறிய முடிவது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் இயல் திருமயிலையில் உள்ள திருக்கோயில்கள் பற்றிய செய்திகளைக் கொண்டு விளங்குகின்றது (229—279). சமயப் பொதுமை மிளிரும் இடமாகத் திருமயிலை விளங்குவதை இவ் வியல் நன்கு சித்திரித்துள்ளது. காலந்தோறும் அனைத்துச் சமயங்களையும்அணைத்துச்செல்லும் அருளிடமாகத்திருமயிலை விளங்குவதை இக் குறிப்புகள் காட்டுகின்றன. கபாலீசுவரர் திருக்கோயிற் சிறப்பும் திருவிழாக்களும் பற்றி அடுத்த இயல் விளக்குகின்றது (283—340). திருக்கோயிலின் அமைப்பையும் சிறப்பையும் கோயிற்கலை கொண்டும், பிற அறிஞர் தம் குறிப்புகள் கொண்டும் புலப்படுத்தியுள்ளார். திருவிழாக்களின் சிறப்பையும் அவற்றின் நுட்பத்தையும் கலை, பண்பாடு, மானுடவியல் முதலாய பல்துறைக் கருத்துக்களோடு பொருத்திக் காண்பது வளர்ந்து வரும் ஆய்வின் சிறப்பைக் காட்டுவதாக அமையும். இறுதியாகத் திருமயிலையின் தனிச்சிறப்புகள், தொகுப்புரையில் ஆய்வின் முடிபுகள், நூற்பட்டியல்கள் தரப் பெற்றுள்ளன.

பேராசிரியர் டாக்டர் சு. இராஜசேகரன் அவர்கள் ஆய்வுரையை உரிய ஆய்வு நெறிமுறைகளோடு நன்கு வகைப் படுத்தி உருவாக்கித் தக்க சான்றுகளுடன் தம் ஆய்வுக் கருத்து களை நிறுவியுள்ளார், அமைதியும் அடக்கமும் நிறைந்த அவர்களின் உழைப்பையும், பெருமுயற்சியையும், வரலாற்றுப் புலமையையும், இலக்கிய ஆர்வத்தையும் புலப்படுத்தும் வண்ணம் இவ் ஆய்வு நூல் அமைந்துள்ளது.

பழந்தமிழரின் தொன்மைச் சிறப்பையும் பண்பாட்டையும் புலப்படுத்தி வரலாற்றுணர்வோடும், இலக்கியச் சான்று களோடும் ஆராயப் பெற்ற திருமயிலைத் திருத்தலம்-இலக்கிய, வரலாற்றுப் பார்வை என்னும் ஆய்வுரையைத் தமிழுலகம் ஏற்றுப்போற்றுமாக. ஆசிரியர் இன்னும் பல நூல்களைப் படைத்துத் தமிழுக்கு வளம் சேர்க்க நல்வாழ்த்துக்கள்.

சென்னை-600 005
28-11-1989

அன்புடன்
இ. சுந்தரமூர்த்தி

நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறை இணைப் பேராசிரியர் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் 'திருமயிலைத் திருத்தலம்—இலக்கிய, வரலாற்றுப் பார்வை' என்னும் தலைப்பினைத் தேர்ந்தெடுத்து அளித்தும், ஆய்வு நிகழ்த்துங்கால் பல்லாற்றானும் துணைபுரிந்தும், ஆய்வு வழி காட்டியாய் அமைந்து உதவினார். இந்த ஆய்வு நூல் சிறந்த முறையில் அச்சாகி உரிய காலத்தில் வெளிவருவதற்குப் பெரிதும் உதவிய தோடு, அணிந்துரையும் வழங்கினார். அவருக்கு நன்றி.

என் ஆய்வுப் பணிக்கு இசைவு வழங்கிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித் துறைத் தலைவராகப் பணியாற்றி இப்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பதவியேற்றுள்ள பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு என் நன்றி.

என் அன்னை இந்த நிலவுலகத்தை விட்டு நீங்கிச் சென்றாலும் அவர் அருளால் இந்த ஆய்வேடு நூலாக வெளிவருகிறது. என் அன்னை அமரர் திருமதி சு. ராஜலட்சுமி அம்மையாரின் திருவடிகளை வணங்குகிறேன்.

வாழ்த்துகளை வழங்கிக் கொண்டிருக்கும் என்னுடைய தந்தையார் திரு. அ. சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி.

ஆய்வு செய்யும் போது உதவிகள் செய்த என் அருமைத் தம்பி அமரர் அ. சு. சுந்தரமூர்த்தி பி.இ; அவர்களை இந்த நேரத்தில் நினைவு கூர்கின்றேன்.

பேராசிரியர் டாக்டர் சு. ந. சொக்கலிங்கம், பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன் ஆகியோருக்கு நன்றி.

என் குருநாதர் சென்னை முத்தியாலுபேட்டை உயர்நிலைப் பள்ளி முன்னாள் தலைமைத் தமிழாசிரியர் அமரர் திரு. சி. வ. தணிகாசலம் பிள்ளை அவர்களுக்கு என் வணக்கங்கள்.

திருமயிலையைப் பற்றிய பல செய்திகளை எனக்குச் சொல்லிய என்னுடைய பெரிய தந்தையார் திருமயிலை திரு.எஸ். காளத்தி முதலியார், எனக்குத் தொடக்க காலத்திலிருந்து உதவிகள் செய்து வரும் திரு. டி. சம்பந்த முதலியார், வாழ்த்துகள் வழங்கி வரும் திரு. E. C. மோகன முதலியார் ஆகியோருக்கு நன்றி.

அறிவுக் களஞ்சியமாக விளங்கிய அமரர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்களை வணங்குகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் ஆய்வுத் துறை இணைப் பேராசிரியர் டாக்டர் எஸ். குருமூர்த்தி, நந்தனம் அரசு ஆடவர் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள் திருவாளர்கள் தில்லை இரா. கோவிந்தன், மா. இலக்குவன், அமரர் வளவன் (கோ இராமமூர்த்தி), வ கனகராசு, டாக்டர் மின்னூர் சீனிவாசன், டாக்டர் கு. விவேகானந்தன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடியியல் பேராசிரியராகப் பணியாற்றும் திரு. மு. கோ இராமன், உ. வே. சாமிநாதையர் நூலகத்தில் பணி புரியும் திரு சாயிராமன், மறைமலையடிகள் நூலகத்தில் பணியாற்றிய திரு. வி. கோவீந்தராசன், தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பக ஆராய்ச்சி அலுவலர் திரு. எத்திராசன், அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் பணியாற்றிய டாக்டர் இராசேந்திரன் ஆகியோருக்கு நன்றி.

அரிய நூல்கள் பலவற்றைத் தந்து உதவிய கவிஞர் டாக்டர் த. கோவேந்தன், டாக்டர் குமார. பத்மநாபன் ஆகியோருக்கு நன்றி.

அருள்மிகு கபாலீசுவரர் கோயிலின் முன்னாள் தக்கார் திரு. மா. து. குப்புசாமி முதலியார், துணை ஆணையாளர், கோயில் நூலகப் பணியாளர்கள் திரு. கனகராசு, கோடீசுவரன், ஒளிப்பதிவாளர் திரு விஜயகுமார் ஆகியோருக்கு நன்றி.

என்னுடைய ஆய்வேடு நூலாக வரவேண்டும் என்று விரும்பி, என்னை ஊக்குவித்த சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் நண்பர்கள், திரு. மா. பத்மநாபன், திரு. ஜே. எம். கல்யாணசுந்தரம் ஆகியோருக்கு நன்றி.

இந்நூல் வெளிவருவதற்குப் பெரிதும் உதவிய என் தம்பி டாக்டர் சு. சிவகுமார், எம். எஸ்., எம். என். ஏ. எம். எஸ்; (நரம்பியல் அறுவை மருத்துவர், சென்னைப் பொது மருத்துவ மனை), இளைய தம்பி திரு. சு.கிருபாசங்கர், நல்ல யோசனைகள் கூறிய என் தங்கை செல்வி சு. மாதவி, என் மனைவி ரா. சரளா ஆகியோருக்கு நன்றி.

நல்ல முறையில் நூலை அச்சிட்டு, உரிய நேரத்தில் அளித்த கதிரவன் அச்சக உரிமையாளர் திரு. நா. கண்ணன், அழகிய அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்த ஓவியர் திரு. P. N. ஆனந்தன் ஆகியோருக்கு நன்றி.

என்னுடைய ஆய்வேட்டினை நூலாக வெளியிட இசைவு வழங்கிய சென்னைப் பல்கலைக் கழகத்தினருக்கு நன்றி.

சென்னை-600 015
8.12-1989

சு. ராஜசேகரன்

பொருளடக்கம்

இயல்		பக்கம்
	அணிந்துரை	3
	நன்றியுரை	5
	குறுக்க விளக்கம்	8
	முன்னுரை	9
	அரிய நூல்களின் முகப்புப் பக்கங்கள்	13
ஒன்று	திருமயிலையின் தொன்மை வரலாறு	17
இரண்டு	இலக்கியம் போற்றும் திருமயிலை	77
மூன்று	திருமயிலைத் திருக்கோயில்கள்	229
நான்கு	அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிற் சிறப்பும் திருவிழாக்களும்	281
ஐந்து	திருமயிலையின் தனிச்சிறப்புகள்	341
	தொகுப்புரை	367
	பின்னிணைப்பு	372
	துணைநூற் பட்டியல்	378

குறுக்க விளக்கம்

அதி.		அதிகாரம்
அ.கீ.சு.நூ.	...	அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
அம்புலி.	...	அம்புலிப் பருவம்
இ.வி.	...	இலக்கண விளக்கம்
உலா.	...	திருமயிலை உலா
கலம்பகம்.	...	திருமயிலைக் கலம்பகம்
கழகம்.	...	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
காப்பு.	...	காப்புப் பருவம்
குமரவேள்.	...	குமரவேள் பூசித்த சருக்கம்
குறள்.	...	திருக்குறள்
கோவை.	...	திருமயிலைக் கோவை
சப்பாணி.	...	சப்பாணிப் பருவம்
சிறுதேர்.	...	சிறுதேர்ப் பருவம்
சிற்றில்.	...	சிற்றில் பருவம்
சுக்கிரன்.	...	சுக்கிரன் அருச்சனைச் சருக்கம்
செங்கீரை.	...	செங்கீரைப் பருவம்
தலவிசிட்டம்.	...	தலவிசிட்டச் சருக்கம்
தால்.	...	தாலப்பருவம்
திருமுருகு.	...	திருமுருகாற்றுப்படை
திருவிழா.	...	திருவிழாச் சருக்கம்
தீர்த்தம்.	...	தீர்த்தச் சருக்கம்
தொ.எ.	—	தொடர் எண்
தொல்.	...	தொல்காப்பியம்
நகரம்.	...	நகரச் சருக்கம்
நாட்டு.	...	நாட்டுச் சருக்கம்
நாலாயிரம்.	...	நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
ப.	...	பக்கம்
பக்.	...	பக்கங்கள்
பரி.	...	பரிபாடல்
பா.	...	பாடல்
பா-ள்.	...	பாடல்கள்
பார்வதி. அருச்.	...	பார்வதியார் அருச்சனைச் சருக்கம்
பார்வதி. சாபம்.	...	பார்வதியார் சாபச் சருக்கம்
புறத்.	...	புறத்திணையியல்
புறம்.	...	புறநானூறு
பொருள்.	...	பொருளதிகாரம்
முத்தம்.	...	முத்தப் பருவம்
யமகம்.	...	திருமயிலை யமக அந்தாதி
வருகை.	...	வருகைப் பருவம்
வேதம் பூசித்.	...	வேதம் பூசித்த சருக்கம்

முன்னுரை

திருமயிலை பழமையும் பெருமையும் ஒருங்கே அமையப் பெற்ற திருத்தலமாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் பெற்ற பெருமையும் மயிலைக்கு உண்டு. அங்கம் பூம்பாவையான இடம் திருமயிலையாகும். அருணகிரி நாதரின் சந்தத் தமிழும் மயிலையின் புகழ் பாடியிருக்கிறது. கூத்தாடும் பிள்ளையாரும், கபாலீசுவரரும், கற்பகவல்லியும், சிங்காரவேலரும் அருள்மழை பொழியும் தலம் திருமயிலையாகும். திருவள்ளுவர், பேயாழ்வார், செயின்ட் தாமஸ் ஆகியோரின் அறிவுப் புயலும் ஆன்மீகப் புயலும் வீசிய இடம் மயிலை. ஆங்கிலேய அதிகாரிகளும் விரும்பிக் குடியேறிய இடம் திருமயிலையாகும்.

மைப்பூசும் ஒண்கண் மட நல்லாரும் வளைக்கை மட நல்லாரும், நிறைந்த மாமயிலை என்றும், புன்னையங்கானலும் மடலார்ந்த தெங்கும் அணி செய்யும் மயிலாபுரி என்றும் பாவலரால் போற்றப்பட்ட ஊர் மயிலாப்பூர். இசைக்கலையிலும் நாட்டியக் கலையிலும் நாடகக் கலையிலும் சிறந்து விளங்கும் கலைஞர்கள் வாழுமிடம் மாமயிலை. தவ முனிவர்களும் தமிழ்ச் சான்றோர்களும் தங்கள் பணியைச் செய்வதற்குத் தேர்ந்தெடுத்த இடம் மயிலை. சட்டம் என்ற இருட்டறைக்குள் தங்கள் வாதம் என்னும் விளக்கை ஏற்றி வைக்கும் வழக்கறிஞர்கள் எண்ணற்றோர் ஏற்றமுடன் திகழுமிடம் திருமயிலை. உடல் நோய் தீர்க்கும் உயர்ந்த தொண்டினைச் செய்யும் சிறந்த மருத்துவர்கள் வாழ்ந்த இடம், வாழுமிடம் ம்யிலாப்பூர். கலையரங்குக்ளும், கவின் பூங்காக்களும், சிறந்த கல்வி நிறுவனங்களும், பெரிய நூலகங்களும் நிறைந்திருக்கும் திருத்தலம் மயிலை.

அருள்மிகு திருக்கோயில்கள், அழகிய மாடவீதிகள், அலை பாயும் மணற்பரப்புள்ள அழகிய சாந்தோம் கடற்கரை ஆகியவற்றைக் கொண்டதாக இருப்பதாலும், எண்ணற்ற சிற்றிலக்கியங்களைப் பெற்றிருத்தலாலும் அவற்றில் ஈடுபாடு கொண்டு திருமயிலைத்தல வரலாறு, கோயில்கள், இலக்கியங்க்ள் ஆகியவை பிஎச். டி. பட்டத்திற்கு ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது.

திருமயிலையைப் பற்றி இதுவரை முறையான ஆய்வு நூல்கள் தோன்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. திரு

இவ் ஆய்வில், இலக்கியங்கள், வரலாற்று நூல்கள், கல்வெட்டுகள், கள ஆய்வு, பேட்டிகள் ஆகியவற்றின் அடிப்படையில் காலந்தோறும் மயிலை இருந்து வந்த நிலைமையும், மயிலைக் கோயில்களும், இலக்கியங்களும் ஆராயப்படுகின்றன.

அரிய நூல்களின் முகப்புப் பக்கங்கள், கபாலீசுவரர் கோயில் தொடர்பான ஒளிப் படங்கள் இந் நூலில் உரிய இடங்களில் இணைக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் திருமயிலை இலக்கியங்களின் விளக்கப்பட்டியல் இடம் பெறுகின்றது. இவ் ஆய்வேடு துணை நூற் பட்டியலுடன் நிறைவெய்துகிறது.

உ

திருச்சிற்றம்பலம்.

திருமயிலையுலா

இஃது

புரசை-அஷ்டாவதானம்

சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கர்,

திருமயிலை வித்வான்,

சண்முகம் பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

தெய்யூர் - சு. சொக்கலிங்கம் பிள்ளையவர்களால்

எம்பரர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சேய வருஷம்

மாசி.

Copy-right Rigistered.

[library stamp]

3 ßl. ௩௬ ௯௦௨௰

உ

திருச்சிற்றம்பலம்.

திருமயிலைக் கலம்பகம்.

இஃது

புரசை-அஷ்டாவதாரம்

சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கர்

திருமயிலை வித்வான்,

சண்முகம் பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

ஷையூர்-சு. சொக்கலிங்கம் பிள்ளையவர்களால்

எம்பரர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சோபகிருது

மகாரவி.

Copy-right Rigistered.

54.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமயிலைத் தலபுராணம்.

இவை

ஸ்ரீ கைலாயபரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம்

ஸ்ரீ அமுர்தலிங்கத்தம்பிரான்சுவாமிகளியற்றிய

மூலமும்,

உரையாசிரியர், மகாவித்வான் காஞ்சிபுரம்

சபாபதி முதலியாரவர்களா லியற்றிய

பொழிப்புரையும்,

ஷையார் மாணாக்கர், புரசை அஷ்டாவதானம்

சபாபதி முதலியாரவர்களால் பார்வையிட்டு,

பையூர்க்கோட்டம்

பெ. சுந்தரமுதலியாரவர்கள் குமாரர்

இராமசாமி முதலியாரவர்களால்

சென்னை:

பால்குரிசி - சிவலிங்கையரவர்களது

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

கலியுகாதி௵ சகாப்த௵-க்கு

நந்தன௵ மீனரவி.

Copyright Registered.

இயல் I

திருமயிலையின்

தொன்மை வரலாறு

திருமயிலையின்

தொன்மை வரலாறு

முன்னுரை

தமிழகத்தின் கடற்கரையோரமாக உள்ள ஊர்களில் பழமையும் பெருமையும் பொருந்திய ஊர் மயிலாப்பூராகும். வடக்கே திருவொற்றியூரும் தெற்கே திருவான்மியூரும் அணி செய்ய, சென்னை மாநகரின் நடுநாயகமாகத் திருமயிலை விளங்குகிறது.

தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகிய தொண்டை நாட்டில் பாடல் பெற்ற சிவத் தலங்கள் முப்பத்திரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்றாகத் திருமயிலை விளங்குகிறது. அழகிய திருக் கோயில், பெரிய திருக்குளம், அகலமான தேரோடும் மாட வீதிகள் முதலியவற்றை உடையதும் வேறு பல பெருமைகளை உடையதும் இந் நகரமேயாம்.[1] ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டிய பிறகு அதனோடு சேர்ந்து பெரிய நகரமாகத் திருமயிலை உருவா யிற்று.[2] பழங்காலத்தில் புகழ் பெற்ற துறைமுகமாகவும் திருமயிலை விளங்கியது.[3]

திருமயிலை பெயர் விளக்கம்

தமிழ்நாட்டில் இறைவன் திருக்கோயில் உள்ள ஊர்களெல் லாம் திரு என்னும் அடைமொழியைப் பெற்றிருக்கின்றன. அது போலவே, திருக்கபாலீசுவரர் எழுந்தருளியிருக்கும் இடமாதலின் இத்தலம் திரு என்னும் அடைமொழியோடு விளங்குகின்றது.

மயிலாப்பூர் என்னும் பெயர்தான் மயிலை என மருவியது. மயில் ஆர்ப்பு ஊர் - மயில்கள் ஆரவாரம் செய்யும் ஊர் எனப் பொருள் படும்.[4] மயிலாப்பூர் மயிலை என மருவியது. மயிலை என்னும் மரூஉச் சொல் திரு என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருமயிலை என்று ஆகியது.

திருமயிலையின் பெயர்கள்

கி. பி. 119 - 161 காலப்பகுதியில் வாழ்ந்த மேல்நாட்டுப் புவியியல் அறிஞர் தாலமி, தன்னுடைய புவியியல் நூலில் 'மலியார்பா' (Maleiarpha)[5] என்று குறிப்பிடுவது திருமயிலையைக் குறிக்கும் என்பர் வரலாற்றறிஞர்.[6] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமழிசையாழ்வார், 'மாமயிலை' என்னும் பெயரால் திருமயிலையைக் குறிப்பிடுகின்றார்.[7] கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இவ்வூர் 'மயிலாப்பில்',[8] 'மயிலாப்பு',[9] என்னும் பெயர்களால் வழங்கப்பட்டது என்பதை அப்பர் திருவாக்கால் அறியலாம். இக்காலத்திலேயே 'மயிலை' எனவும் அழைக்கப்பட்டது என்பதைச் சம்பந்தர் பாடிய பூம்பாவைப் பதிகம் உணர்த்துகிறது.[10] கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார், 'மயிலை', 'மாமயிலை',[11] என்றும் சுந்தரர் 'தொன்மயிலை'[12] என்றும் குறிப்பிடுகின்றார்கள். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் 'மயிலை',[13] 'மயிலாபுரி'[14] என்னும் பெயர்களால் இவ்வூர் அழைக்கப்பட்டதை நந்திக்கலம்பகம் உணர்த்துகிறது. இக்காலத்தில் 'மயிலார்ப்பில்' எனவும் இவ்வூர் அழைக்கப்பட்டதைப் பல்லவப் பரம்பரையின் இறுதிக்காலத்தில் வாழ்ந்த கம்பவர்மன் காலத்துக் கல்வெட்டு உணர்த்துகிறது.[15] கி. பி. பதினோராம் நூற்றாண்டில் 'மயிலை' என அழைக்கப் பட்டது என்பது திருத்தொண்டர் திருவந்தாதியால் அறியப் படுகிறது.[16]

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் 'மயிலை',[17] 'மயிலாப் பில்',[18] 'திருமயிலாபுரி',[19] 'திருமயிலை',[20] 'தென்மயிலாபுரி',[21] 'மயிலாப்பூர்'[22] என்னும் பெயர்கள் இவ்வூருக்கு வழங்கின. கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவிற்குவந்த வெனிசு வணிகர் மார்க்கோபோலோ, மயில்கள் நிறைந்த பகுதி என மயிலையைக் குறிப்பிடுகின்றார்.[23] 'திருமயிலாப்பூர்' எனவும் இவ்வூர் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகளால் அறியலாம்.[24] கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் 'மயிலாப்பில்' என்னும் வழக்கைத் தொல்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை உணர்த்துகிறது.[25] இந்த நூற்றாண்டிலே, ஜான் டி மரிக்நோலி (John De Marignoli) என்னும் வழிப்போக்கர் மயிலையை, 'மைராபோலிஸ்' (Mirapolis) என்று குறிப்பிடு கின்றார்.[26] கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் 'மயிலை' என்றே குறிப்பிடுகின்றார்.[27] அருணகிரிநாதர் காலத்தில் 'மயிலாபுரி' எனவும் வழங்கப்பட்டது[28]. கி. பி பதினாறாம் நூற்றாண்டில் டூரேட் பார்போஸா (Durate Barbosa)

என்பவர் 'மைலாபூரா' (City of Mylapura) என்று குறிப்பிட்டு உள்ளார்.[29] போர்த்துக்கீசியர்கள் 'மெலியபூர்' (Meliapur) என வழங்கினர்.[30], கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் 'மிலாப்பூர், (Milapore) என வழங்கப்பட்டது.[31] மறைத்திரு ஆன்ட்ரியா லோபெஸ், சே.ச. (Fr. Andrea Lopez S. J.) உள்ளூர் மக்களால் சாந்தோம், 'மைலாபபூர்'(Maylapore) எனக் குறிப்பிடப்படுகிறது என்று கூறியுள்ளார்.[32] வடமொழியில் உள்ள பிரம்மாண்ட புராணம் மயிலையை 'மயூரபுரி', 'மயூர நகரி' என்று குறிப்பிடு கின்றது.[33] சென்னை வாழ் மக்கள் 'மயிலாப்பூர்' (Mayilapore) என அழைத்தனர். ஆங்கிலேயர் 'மைலாப்பூர்' (Mylapore) என அழைத்தனர்.

திருமயிலைக்கு வழங்கும் வேறு பெயர்கள்

திருமயிலைக்குப் புன்னைவனம்,[34] வேதநகர்,[35] சுக்கிரபுரி;[36] பிரமபுரம்,[37] கந்தபுரி,[38] கபாலீச்சரம்,[39] கபாலி மாநகர்,[40] என்னும் வேறு பெயர்களுமுண்டு. தமிழ்நாட்டுச் சமணர்கள் இவ்வூரைப் பத்மநாதபுரம், வாமநாதபுரம் எனும் பெயர்களால் அழைத்தார்கள்.[41] போர்த்துக்கீசியர் வருகைக்குப் பிறகு மயிலையின் கடற்கரைப்பகுதி செயின்ட் தாமஸின் நினைவாகச் சாந்தோம் என்றழைக்கப்படுகிறது.[42]

பெயர்க்காரணங்கள்

திருமயிலைக்குரிய பெயர்க்காரணங்கள் பல. அவற்றுள் திருமயிலைத் தலபுராணத்தில் கூறப்படும் செய்தி வருமாறு:

ஒரு காலத்தில் சிவபெருமான், உமையம்மையாருடன் திருக் கைலாயத்தில் வீற்றிருந்தார். அப்போது அம்மையாரின் வேண்டு கோளுக்கிணங்க ஐந்தெழுந்தின் பெருமையையும், திருநீற்றின் மகிமையையும் பற்றிப் பெருமான் விளக்கம் செய்துகொண்டு இருக்கும் போது ஒரு மயில் தன் தோகையை விரித்தாடியது. அதன் அழகை உற்றுநோக்கிய அம்மையார் அதன் ஆட்டத்தில் தமது கவனத்தைச் செலுத்தினார். இதைக் கண்ணுற்ற சிவ பெருமான், 'நீ பூதலத்தில் மயில் உருப்பெற்றிடுவாய்' என்பதாக ஆணை பிறப்பித்தார். இந்நிலைக்கு வருந்தியதேவியார், 'இதைத் தவிர்ப்பது எங்ஙனம்?' எனக் குறையிரப்ப இறைவன் புண்ணிய நாடாகிய தொண்டை நாட்டிற்குச் சென்று தவமியற்றுவாய்' என்பதாகக் கூறினார். அவ்வாறே அம்மையார் தொண்டை நாட்டில் இப்போது மயிலாப்பூராக அமைந்துள்ள பகுதியில்

புன்னை மரத்தின் கீழ்ச் சிவலிங்கம் ஒன்றைத் தாபித்துப் பூசித்து வந்தார். அப்போது சிவபெருமான் தேவியின் முன் தோன்றி, 'மயிலாய் இருந்த பழி உன்னை விட்டகன்றது. கற்பகவல்லி யென்பதான பெயர் உனக்காகுக !' என்பதான வரமும் ஈந்தனர். உமாதேவியாரும் பரமனாரை நோக்கி அடியேன் இங்குத் தவம் செய்து உய்ந்தேன். இப்பெரும்பகுதிக்கு மயிலை என்னும் பெயர் ஓங்க வேண்டும். என்னுடன் தாங்கள் பிரியாது இங்கிருக்க வேண்டும். இங்கு வந்து வழிபடுபவர்களுக் கெல்லாம் தாங்கள் அருள் புரிய வேண்டும் என வேண்டிக் கொண்டபடியால் மயிலை என்னும் பெயர் பெற்றது என்று திருமயிலைத் தலபுராணம் கூறுகிறது.[43]

> புன்னாகவனத் தெழில்சேர் கயிலை மலையுமை
> மயிலாய்ப்பூசை செய்யு
> நன்னாமத்தான் மயிலையென விளங்கு மூதூர்

என்றும் மயிலைத் தல புராணம் கூறுகிறது.[44]

வைணவர்களுடைய ஸ்ரீகருட புராணத்தில், பிருந்தாரண்ய க்ஷேத்திர மகாத்மியத்தின் இரண்டாம் அத்தியாயத்தில் மயூரபுரி மகாத்மியம் விளக்கப்படுகின்றது. ஸ்கந்தனுடைய வாகன மான மயில், தான் ஸ்கந்தனைச் சுமப்பது குறித்து ஒரு சமயம் கர்வமடைந்தது. ஸ்கந்தன் அதைத் துரத்தி விட்டான். அந்த மயில் இந்த இடத்தில் இருந்து பிரம்மாவைக் குறித்துத் தவம் இருந்து அவனுடைய அருளினால் மீண்டும் தன் பதவியைப் பெற்றதினால் அன்று முதல் இந்தப் பட்டணம் 'மயூரபுரி, என்றும் 'மயூரநகரி' என்றும் பெயர் பெற்று விளங்கியது. நாளடைவில் அது திரிந்து 'மயிலை' என்றும் 'மயிலாப்பூர்' என்றும் வழங்கப்பட்டு வருகிறது என்று வைணவப் புராணம் கூறுகிறது.[45]

மயிலாப்பு என்பதற்குப் பொருள் 'மயிலாதல்' என்பதாகும். உமை மயிலாக ஆகிய செயல் காரணமாகத்தான் 'மயிலாப்பு' என்னும் பெயர் பெற்றது என்பார் அ. மு. பரமசிவானந்தம்.[46] மயிலை என்னும் பழைய பெயரும் புரம் என்னும் வடமொழிச் சொல்லும் சேர்ந்து மயிலாப்பூர் என்றாகியது என்பார் எஸ். கல்யாணசுந்தரம்.[47] பழைய சைவ சமயப் புராணக் கதையை விரும்பாதவர்கள்தாம் மயில்களின் ஆரவாரத்தினால் மயிலாப்பூர் என்றாகியது என்பர் என்று அ. மு. ப. கூறுகிறார்.[48]

'சென்னைத் திருமயிலையம்பதியின் முழுப்பெயர் மயில் ஆர்ப்பு ஊர் என்பது, இச்சொற்களைப் புணர்த்திக்கூறுங்கால் மயிலார்ப்பூர் ஆகும். மயிலார்ப்பூர் என்பது நாளடைவில் மயிலாப்பூர் என்று வழங்கப்பட்டு, அதன்பின் மயிலை என மருவி வழங்கலாயிற்று' என்பர் பாலூர் கண்ணப்பமுதலியார்.[49] டாக்டர் பொற்கோவின் கருத்தும் இதுவே யாகும்.[50]

திருமயிலை வடமொழியிலும் 'மயூரசப்தபட்டினம்' என்று குறிக்கப்படுகிறது.[51] தாலமி கூறும் 'மலியார்பா'[52] என்பது மயிலார்ப்பு என்பதன் திரிபாக இருக்க வேண்டும். ஆகவே, மயிலார்ப்பூர் என்பதே பழம்பெயராக இருந்திருக்க வேண்டும். வடமொழிப் புராணமும், மயில்கள் இருந்தகாரணத்தினால்தான் மயூரபுரி என்னும் பெயர்பெற்றது; அங்குப் பிறந்த திருமகளுக்கு மயூரவல்லித் தாயார் என்னும் பெயரிடப்பட்டது என்று கூறுகிறது.[53] சமணர்களும் மயிலாபுரி என்று குறிப் பிடுகின்றனர்.[54]

கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் மறைத்திரு இப்போலிட்டோ தேசிதேரி சே.ச.(Fr.Ippolito Desideri, S.J.) அவர்கள் 'மைலாப்பூர்' (Mailapur) என்று குறிப்பிட்டு மயில்நகர் (Peacock City) என்று விளக்கம் தருகிறார். மிகப்பழங்காலத்தில் மயிலைப் பகுதியை ஆண்ட அரசர்களின் மரபுரிமைச் சின்னமாக (Coat-of arms) மயில் விளங்கியிருக்கும். ஆகவே மயிலாப்பூர் என்னும் பெயர் பெற்றது என்று கூறுகிறார்.[55] மயிலையை ஆண்ட மிகப் பழைய குலம் தன்னுடைய குலமரபுச் சின்னமாக மயிலைக் கொண் டிருக்கலாம். அதன் காரணமாக அப்பெயர் பெற்றது என்று எஸ். கல்யாணசுந்தரம் குறிப்பிடுகின்றார்.[56]

மேற்கூறிய அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும்போது மயிலை என்னும் பெயர் வந்ததற்கு மூன்று காரணங்கள் கூறப் பெறுகின்றன. அவை : 1. புராணக்கதைகளால் அப்பெயர் பெற்றமை ; 2. அப்பகுதியை ஆண்ட பழைய குலத்தவரின் மரபுரிமைச் சின்னமான மயில் ஊரின் பெயராக அமைந்தமை ; 3. மயில்களின் ஆரவாரத்தினால் அப்பெயர் பெற்றமை ஆகியவையாகும்.

இவற்றுள் மூன்றாவது காரணமே பொருத்தமுடையதாகும். மயிலோடு தொடர்புபடுத்தி மயிலை பேசப்படுகிறது. தமிழ் நாட்டில் இதைப்போல, மயிலம், மயிலாடுதுறை என்னும் பெயரில் மயிலோடு தொடர்புபடுத்திப் பேசப்படும் ஊர்கள் உள்ளன.[57]

ஆகவே, மயில்களின் ஆர்ப்பரிப்பினால் இத்தலம் 'மயில் ஆர்ப்பு' எனப் பெயர்பெற்றது என்று கூறலே பொருத்தமுடைய தாகும். பின்னர் இப்பெயர் வழக்கில் 'மயிலாப்பு' என்றாகிறது. இதனை அப்பர் தேவாரத்தால் அறியலாம்.[58] மயில் ஆர்ப்பு இல் என்பது வழக்கில் மயிலார்ப்பில், மயிலாப்பில் எனவும் வழங்கப்பட்டதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.[59] இப் பெயர்களே மருவி 'மயிலை' என்றாயிற்று என்பதைச் சம்பந்தர் வாக்கால் அறியலாம்.[60]

ஆகவே, இன்று வழங்கும் பெயர் மயில் ஆர்ப்பு ஊர் என்னும் சொற்கள் புணர்ந்து மயிலாப்பூர் என்று ஆகிப் பின்னர் நாளடைவில் மயிலாப்பூர் என வழங்கப்பட்டது என்பதே பொருத்தமுடையதாகும்.

இருப்பிடம்

மிகப் பழங்காலத்தில் தொண்டை மண்டலத்து அருவா வட தலை நாட்டில் புலியூர்க்கோட்டத்துள் ஓர் ஊராகத் திருமயிலை குறிப்பிடப்படுகின்றது.[61] 13°.02° வடக்கு நிலநேர்க்கோட்டிலும், 80°.61. கிழக்கு நிரைக்கோடிலும் இவ்வூர் உள்ளது.[62] தமிழ் நாட்டில் சென்னை மாநகரின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில், வடக்குக் கரையிலுள்ள திருவொற்றியூருக்கும், தெற்குக் கரையி லுள்ள திருவான்மியூருக்கும் இடையில் உள்ளது.

எல்லைகள்

முற்காலத்தில் மயிலைக்குக் கிழக்கு எல்லை வங்கக் கடல்; மேற்கு எல்லை நுங்கம்பாக்கம்; தெற்கு எல்லை அடையாறு; வடக்கில் திருவல்லிக்கேணியை உள்ளடக்கியிருந்தது.[63] இக் காலத்தில் மயிலையின் எல்லைகளாக வடக்கில் எட்வர்டு எலியட்சு சாலையும், தெற்கில் அடையாறும், கிழக்கில் கடலும், மேற்கில் மௌபரீசு சாலையும் அமைந்துள்ளன.

தொண்டை நாடு

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குமுன்னர் மயிலாப்பூரைப்பற்றிய வரலாற்றை அறிந்துகொள்வதற்குத் தாலமியின் குறிப்புகள், திருவள்ளுவர், செயின்ட் தாமஸ் பற்றிய மரபு வழிச்செய்திகள், ஐயடிகள் காடவர்கோனின் சிவத்தளி வெண்பா, திருமழிசை யாழ்வாரின் பாசுரங்கள் தவிர வேறெதுவும் இதுவரை கிடைக்கப்

பெறவில்லை. ஆகவே, தொண்டை மண்டலத்தைப் பற்றிக் கிடைக்கும் பழைய சான்றுகளைக் கொண்டே மயிலையின் வரலாற்றைக் கூறவேண்டியிருக்கிறது.

தொண்டைநாடு வரலாற்றுக்கு முற்பட்ட பழங்காலத்திலேயே இருந்தது என்பது அகழ்வாராய்ச்சிகளால் புலப்படுகிறது.[64] புதுக்கற்காலம், இரும்புக்காலம் ஆகியவற்றுக்கான சான்றுகளும் கிடைக்கின்றன.[65] வரலாற்றுக்கு உட்பட்ட காலத்தின் முதற்பகுதியில் தற்போதுள்ள தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்கள் அருவா நாடு, அருவா வடதலை நாடு என்னும் இருபிரிவுகளாக இருந்தன.[66] இந்த இரு பிரிவுகளையும் குறும்பர் என்னும் இனத்தார் 24 கோட்டங்களாகப் பிரித்துக் கோட்டைகள் கட்டி வாழ்ந்து வந்தனர். குறும்ப பூமி என்றும் அப்பகுதி வழங்கப்பட்டது.[67] குறும்பர்கள் போரில் விருப்பமுள்ளவர்கள் என்பதும், அக்காலத்திலிருந்த அரசர்கள்கூட அவர்களைக் கண்டு அஞ்சினர் என்பதும் புறநானூற்றால் தெரியவருகிறது.[68]

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் தொண்டை மண்டலம் அசோகருடைய ஆட்சியின்கீழ் இருந்தது.[69] ஆகவே, அசோகருடைய ஆட்சிக்கு முன்பும் பின்பும் தொண்டை மண்டலம் குறும்பர் என்னும் இனத்தவருடைய ஆட்சியின்கீழ் இருந்ததென்பதை அறியலாம். பின்னர், ஆதொண்டசக்கரவர்த்தி குறும்பரை வென்று தொண்டை மண்டலம் எனப் பெயரிட்டனர் என்று மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன.[70] கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கரிகாற் சோழன் காலத்தில் தொண்டைமான் இளந்திரையன் என்பவன் சோழர் சார்பாக நின்று தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்தான்.[71] தொண்டைமான் இளந்திரையனுக்குப் பிறகு சோழ இளவரசன் இளங்கிள்ளி தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்தான்.[72] சாதவாகனர் பேரரசில் தென்மாநிலத் தலைவராக இருந்தவரும் அவர் மரபினரும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அருவா வடதலை நாட்டை முதலில் கைப்பற்றினர். பிறகு சோழரின் வலியற்ற நிலையைக் கண்டதும் அருவா நாட்டையும் கைப்பற்றினர். இவர்களே பல்லவர்களாவர்.[73] கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்லவர், தொண்டை மண்டலத்தைக் கைப்பற்ற முனைகையில் அவர்களால் தாக்குண்ட களப்பிரர் பின்வாங்கினர். அவர்களை வென்று பல்லவர் தொண்டை நாட்டினைக் கைப்பற்றினர். தொண்டை நாட்டிற்குக் காஞ்சி மாநகர் தலைநகரமாயிருந்தது.

புழல் கோட்டம்

குறும்பர்கள் தொண்டை மண்டலத்தை ஆண்டபோது 24 கோட்டங்களாகப் பிரித்தனர். அவற்றுள் ஒன்று புழல் கோட்டமாகும். அது குறும்பர்களின் தலைநகரமாக விளங்கியது.[74]

புலியூர்க் கோட்டம்

தொண்டைமண்டலத்து 24 கோட்டங்களுள் ஒன்று புலியூர். திருமயிலை இக்கோட்டத்துள் அடங்கும்.[75]

திருமயிலையின் தொன்மை

ஏசுநாதரின் சீடர் செயின்ட் தாமஸ் வாழ்ந்து மறைந்த இடம் என்று கூறப்படுவதாலும், திருவள்ளுவர் வாழ்ந்த இடம் என்று கூறப்படுவதாலும், முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வார் பிறந்த தலம் என்று குறிக்கப்படுவதாலும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மேலை நாட்டுப் புவியியல் அறிஞர் தாலமி எழுதி வைத்துள்ள நிலவியல் குறிப்புகளில் 'மலியார்பா' என்று மயிலை குறிக்கப்படுவதாலும் திருமயிலையின் தொன்மை நன்கு விளங்கும்.

திருமயிலை பற்றித் தமிழ், வடமொழி ஆகியவற்றில் எழுந்த தலபுராணங்களினாலும், மரபுவழிச் செய்திகளாலும் இலக்கியங்களினாலும், வெளிநாட்டவர் மயிலையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள செய்திகளாலும், மயிலைப் பகுதியில் தோண்டி எடுக்கப்பட்ட தொல்பொருள்களினாலும், கல்வெட்டுகளினாலும் திருமயிலையின் தொன்மை மேலும் விளங்கும்.

புராணங்கள்

திருவண்ணாமலை ஆதீனம் திரு அமுர்தலிங்கத் தம்பிரான் மயிலையின் புராணப் பெருமைகளை மயிலைமூதூர்ப்புராணம்[76] என்னும் நூலில் கூறுகிறார். சிவபெருமானுடைய புராணம் பத்துள் ஸ்ரீசைவ புராணத்திலும், ஸ்காந்த புராணத்திலும் தனித்தனியே சொல்லப்படுகின்ற திருமயிலை என்னும் தலப் பெருமையை வடமொழியினின்றும் தமிழிலே மொழிபெயர்த்துப் பாடியிருக்கிறார்.[77]

இத்தலத்தின் பெருமையைக் கூறுவது மிகவும் அரிது. உமா தேவியார் மயில் வடிவில் இறைவனைப் பூசித்துச் சாபம் நீங்கப்

பெற்றார். சோமுகாசுரன் கையிலகப்பட்ட வேதங்கள் திருமாலால் மச்சாவதாரத்தில் மீட்கப்பட்ட பின்னர்த் திரு மயிலையில் வழிபாடு செய்து தம்முடைய பழைய பெருமையையும் நிலைமையையும் பெற்றன. முருகப் பெருமான் இத்தலத்தில்பூசை செய்து, சூரபதுமனை வெல்லதற்காகச் சிங்காரவேல் ஒன்றைப் பெற்றார். ஆகையால், இத் தலத்து முருகப் பெருமானுக்குச் சிங்காரவேலர் என்று பெயர். கபாலீசுவரர் முருகப்பெருமானுக்கு விநாயகரையும் வழிபடுமாறு கட்டளையிட முருகர் அவரையும் வழிபட்டனர். விநாயகருக்கு மகிழ்ச்சி உண்டாக்கியதால் அவர் கூத்தாடினார். ஆகையால் இத்தலத்து விநாயகர் கூத்தாடும் விநாயகராகவுள்ளார். இதன்றியும் பிரமதேவர் தமது ஐந்தாவது தலை கிள்ளப்பட்ட பிறகு திருமயிலையில் வந்து வழிபாடு செய்து பல வரங்களைப்பெற்றார். சுக்கிரன் மாவலியின் ஈகைக்குத் தடையாயிருந்து கண்ணிழந்தவுடன் இத் தலத்துக்கு வந்து பூசித்து அக்கண்ணைப்பெற்றான். இராமன் அரக்கரைக் கொன்ற பிரமகத்தி தீரக் கபாலீசரை வணங்கித் திருவிழா எடுத்தான். இன்னும் பற்பல தேவர்கள் மயிலையில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வணங்கினர். இவை திருமயிலைத் தலபுராணத்தால் அறியப்படும் மயிலையைப் பற்றிய செய்திகளாகும்.[78]

வடமொழியிலுள்ள ஸ்ரீ கருட புராணத்தில் பிருந்தாரண்ய க்ஷேத்திர மகாத்மியத்தில் 'மயூரபுரி மகாத்மியம்' என்னும் பெயரில் மயிலையின் பெருமை கூறப் பெறுகிறது.[79] இது வைணவர்களுடைய புராணமாகும்.

மது என்னும் அரக்கன் வாழ்ந்ததால் மதுபுரி, மயனால் கட்டப்பட்டதால் 'மாயாபுரி' என்னும் பெயர்கள் உண்டு. ருத்ரன் தன் பிரம்மகத்தி தோஷம் நீங்க இங்குத் திருமாலைக் குறித்துத் தவமிருந்து தன்தோஷம் நீங்கப் பெற்றதினால் இதற்கு 'ருத்ரபுரி' என்று பெயர். முருகனுடைய வாகனமான மயில் கர்வம் கொண்டது. முருகன் அதைத் துரத்தி விட்டான். அந்த மயில் இந்த இடத்தில் பிரம்மாவைக் குறித்துத் தவமிருந்து தன் பதவியை மீண்டும் பெற்றதனால் 'மயூரபுரி' 'மயூரநகரி, என்றும் பெயர் பெற்றது.

மயூரபுரி கைரவிணி தீர்த்தத்தின் பெருமையினால் பிருகு முதலிய மகரிஷிகள் இங்கே தவம் செய்தார்கள். முனிவர்களுக்கு ஆதிகேசவன் காட்சியளித்தார். மயூரவல்லித்தாயார் கைரவிணி

தீர்த்தத்தில் ஆம்பல் மலரில் தோன்றினார். அதற்கு முன்னரே பேயாழ்வார் கைரவிணி தீர்த்தத்தில் செவ்வாம்பல் மலரில் அவதரித்தார். இராமர் சீதையை மீட்டுக் கொண்டு அயோத்திக்குப் போகும் வழியில் மயூரபுரியில் சிலகாலம் தங்கி யிருந்தார் என்னும் செயதிகள் ஸ்ரீ கருடபுராணத்தில் கூறப் படுகின்றன [80]

ஸ்காந்த புராணம், காயத்ரி காண்டத்தில் உள்ள மயூர க்ஷேத்திர வர்ணனம் என்னும் வடமொழி நூலின் படி (நகல்) கபாலீசுவரர் கோயில் குருக்களிடமும், பிரம்மாண்ட புராணம் க்ஷேத்திர காண்டத்தில் உள்ள மயூரஸ்தல மகாத்மியம் என்னும் வடமொழி நூலின் படி மாதவப் பெருமாள் கோயில் பட்டாச் சாரியாரிடத்திலும் உள்ளன.[81]

வட மொழியில் சைவ மகா புராணத்து, கோடிருத்ர சம்ஹிதையில், உத்க்ருஷ்ட சிவ க்ஷேத்ர ப்ரகரணத்தில் 11 அத்தியாயம் கொண்ட கபாலீச ஸ்தல மகாத்மியம் கலி 5022இல் (கி. பி. 1919) அச்சிடப்பட்டது[82].

மேற்கூறப்பட்ட வடமொழிப் புராணங்களால் மயிலையி னுடைய தொன்மை அறியப்படுகிறது.

மரபுவழிச் செய்திகள்

மயிலையில் வாழ்ந்த சைவ, வைணவ, சமண, கிறிஸ்தவப் பெரியார்களைப் பற்றிய மரபுவழிச் செய்திகள் பல வழங்கி வருகின்றன. செயின்ட் தாமஸினுடைய வரலாறு இரண்டு வகை யாக வழங்கி வருகின்றது. மயிலாப்பூரில் கந்தப்பராசா ஆண்டு வந்தார். இவர் சிவபக்தர். அந்தணர்களைப் போற்றினார். பய்யனூரில் குறும்பர்களோடு போரிட்டு வென்றார். செயின்ட் தாமஸ் மயிலைக்கு வந்தார். அரண்மனையில் தங்கினார். அதிகாரி ஒருவன் அவரை அயலவர் என்று எண்ணிக் கன்னத்தில் அறைந்தான். அவனைப் புலி அடித்துக் கையைக் கடித்து வாயில் வைத்துக் கொண்டு அரண்மனை வந்தது. அரசன் அவருக்குச் சிறப்புச் செய்தான். செயின்ட் தாமஸ் அந்தணர்களோடு வாதம் செய்து வென்றார். அவருடைய உபதேசத்தை அரசன் ஏற்றுக்கொண்டான். முதலில் நூறு பேர் மதம் மாறினர். பின்னர் எழு நூறு பேரை மதம் மாற்றினார். அந்தணர்களைக் கிறிஸ்தவர்களாக்கினார். மயிலாப்பூரில் உள்ள தேவாலயத்தில்

தங்கி அற்புதங்கள் நிகழ்த்தினார். அந்தணர் அவரை விரட்ட முயன்றனர். அந்தணர் தலைவன் கோயிலின் உள்ளே தன் மகனைத் தானே கொன்று விட்டுச் செயின்ட் தாமஸ் மீது பழி சுமத்துகிறான். இறந்த பிள்ளை உயிர் பெற்றெழுந்து தன்னைச் செயின்ட் தாமஸ் கொல்லவில்லை; தன் தகப்பனே கொன்றான் என்று கூறினான்.

கந்தப்பராசன் செயின்ட் தாமஸை மதித்துக் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பரப்பக் கட்டளையிட்டார். அவரும் அப்படியே செய்தார்.[83] இவ்வாறு செயின்ட் தாமஸ் வரலாறு தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது.

செயின்ட் தாமஸ் வரலாறு பற்றிய ஒரு மரபு தமிழ் இதழ் சுமித்திரனில் 1906இல் வெளிவந்தது. ஒருகோட்டையைப் பற்றிப் பேசுவதால் இம் மரபு கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும்.

விக்கிரமாதித்தன் இந்தியாவை ஆண்ட காலத்தில் திரு மயிலை கந்தப்ப ராசாவால் ஆளப்பட்டு வந்தது. பறங்கியர் வாணிகம் புரிய வந்தனர். பறங்கியரில் ஒருவரான செயின்ட் தாமஸ் மலையில் தங்கி வாழ்ந்தார். தாழ்குடி மக்கள் பலர் அவரால் மதம் மாறினர். உயர்குலத்தோர் அவரை வெறுத்தனர்.

கந்தப்பராசா ஒரு நாள் கடலில் பெரிய மரக்கட்டை மிதந்து வந்ததைப் பார்த்தார். கந்தப்பராசா அதைக் கொண்டு வருமாறு மீனவரை ஏவினார். மீனவர் முயற்சிகள் வீணாயின. கிறிஸ்தவர் இதனைச் செயின்ட் தாமஸிடம் கூறினர். அவர் அரசர் விரும்பினால் மிதக்கும் கட்டையை அவருக்கு உரிமை யாக்குவேன் என்று கூறினார். அரசர் வேண்ட, தாமஸ் ஒரு படகில் ஏறி, கட்டை மிதக்கும் இடம் வந்து அதைச் சுற்றி வந்து தம் கையால் தொட்டார். கரைக்கு வந்து சேர்ந்தார். அவர் இழுக்காமலேயே கட்டை தானே பின்தொடர்ந்து வந்தது. அரசன் மகிழ்ந்து தன் மகனுக்குப் பாடங் கற்பிக்குமாறு செயின்ட் தாமஸை வேண்டினான். தாமஸ் பல கிறிஸ்தவக் கோயில்களைக் கட்டினார்.

அமைச்சர்கள் செயின்ட் தாமஸை விரட்ட முயன்றனர். ஒரு நாள் பாடங் கேட்டுத் திரும்பி வந்த இளவரசனை அடித்துக் கொன்றனர். பழியைச் செயின்ட் தாமஸ் மீது சுமத்தினர்.

அரசன் அவரைத் திட்டினான். அவர் 'உன் மகனுக்கு உயிர் தருகிறேன். கொலையாளியைப் பற்றி அவனிடம் கேளுங்கள்' என்றார். இறந்தமகன் உயிர்பெற்றெழுந்து கொலையாளிகளைக் காட்டினான். அரசன் கொலையாளிகளைக் கொன்று தானும் தன் மகனுமாகக் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்தான். இந்துக்கள் அரசன் இல்லாத நேரத்தில் செயின்ட் தாமஸைத் தாக்கினர். அவர் தப்பிச் சென்று சின்னமலைக் காடுகளில் பதுங்கினார். முனி பரத்வாஜா புகலிடம் தந்தார். கந்தப்பராசா மீண்டும் அவரைக் கோட்டைக்குக் கொணர்ந்தார். மீண்டும் இந்துக்கள் செயின்ட் தாமஸைத் தாக்க முயன்றனர். அவர் ஓடித் திரு மயிலையில் மேற்கே தான் கட்டிய கோயிலில் புகலடைந்தார். முதுமை காரணமாகக் களைத்து வீழ்ந்தார். எதிரிகள் நெருங்க மீண்டும் வடக்கே கடலருகே ஓடிக் காட்டையடைந்து உயிர் துறந்தார்.

சில காலம் கழித்துப் பறங்கியர் கப்பல், இரவில் காற்றால் அலைக்கழிக்கப்பட்டது. கரையை அடைய முடியவில்லை. மாலுமி விழித்தான். கடற்கரைப் பகுதியில் வர்னோக்கி ஒரு சுடர் கண்டான். இந்த விந்தையை உணரக் கரை சேர்ந்தான். ஒளியின் இடம்நோக்கி ஊரார் சிலருடன் சென்றான். தூயரின் எலும்புகளைக் கண்டான். சிறுகோயில் ஒன்று இங்குக் கட்டுக. பறங்கியர் நாட்டுக்குத் தூயரின் புனிதப் பொருள்களை எடுத்துச் செல்க என்னும் ஒலி வானில் எழும்பியது.

எலும்புகளைக் கண்ட இடத்தில் மாலுமி கோயில் கட்டி னான். அதற்குக் கானக அன்னை கோயில் என்று பெயர்,[84]

இம்மரபு வழிக் கதையும் செயின்ட் தர்மஸுக்குத் திருமயிலை யோடு உள்ள தொடர்பை விளக்குகிறது.

திருவள்ளுவர் வரலாறு

ஆதி என்ற புலைச்சிக்கும் பகவன் என்ற பார்ப்பனருக்கும் பிறந்த பிள்ளை. அவர் பிறந்த குடிசை திருமயிலை முண்டகக் கண்ணியம்மன் கோயில் தெருவில் வடகோடியில் இப்போது உள்ள திருவள்ளுவர் கோயிலில் இருக்கும் ஏகாம்பரர் சந்நிதி. அவர் விளையாடிய இடம் இலுப்பை மரம். அவருடைய மனைவி பெயர் வாசுகி அம்மையார். திருவள்ளுவர் நெசவுத்தொழில் செய்து வந்தார். ஏலேலசிங்கர் என்னும் கப்பல் வணிகர் அவருடைய சீடர் என்று திருவள்ளுவரைப் பற்றிய கதை

வழங்குகிறது. காலத்தால் மிகவும் பிற்பட்ட நூலான கபிலரகவல், திருவள்ளுவ மாலை ஆகிய நூல்களில் இக்கதை காணப்படுகிறது.[85]

பேயாழ்வார் வரலாறு

மயிலாப்பூரில் ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான பூந்தோட்டத்திலே 'மணி கைரவிணி' என்கிற கிணற்றில் ஒரு செவ்வல்லிப் பூவில், த்வாபரயுகம் 866922 ஆம் ஆண்டு, சித்தார்த்தி வருஷம், ஐப்பசி மாதம், சுக்கில பட்சம், தசமி திதி கூடிய வியாழக்கிழமை சதய நட்சத்திரத்தில் அவதரித்தார். இவர் திருமாலின் நந்தகம் என்னும் வாள் படையின் அமிசமாவார். இவர் ஆதிகேசவனையும் மயூரவல்லித் தாயாரையும் வணங்கி வந்தார். திருமழிசையாழ்வாரைத் திருத்தி வைணவ சமயத்தில் ஈடுபடச் செய்தார். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் ஓர் இரவு மழை நாளில் ஒரே இடத்தில் தங்கினர் என்ற கதையும் உண்டு.[86]

அங்கம்பூம்பாவை வரலாறு

திருமயிலையில் சிவநேசச்செட்டியார் என்னும் செல்வ வணிகர் வாழ்ந்து வந்தார். அவருடைய மகள் பெயர் பூம்பாவை. அவள் ஒருநாள் பூக்கொய்யும் போது பூநாகம் கடித்து இறந்தாள். பூம்பாவையைச் சுட்டு அவளுடைய எலும்பையும் சாம்பலையும் திரட்டி ஒரு குடத்தில் அடைத்து அதனைக் கன்னி மாடத்தில் வைத்திருந்தார். சம்பந்தர் திருவொற்றியூர் வந்திருந் தார். சிவநேசர் அங்குச் சென்று நடந்தது உரைத்தார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்கச் சம்பந்தர் மயிலை வந்தார். எலும்புக் குடத்தைக் கபாலிப்பெருமான் முன்னிலையில் வைத்துத் திருவருளை நினைந்து பதிகம் பாடினார். பாடி முடித்தவுடன் பூம்பாவை உயிர் பெற்றெழுந்தாள். சிவநேசர் தன்மகளை மணந்து கொள்ளுமாறு சம்பந்தரை வேண்டினார். ஆனால், சம்பந்தர் தான் அவளுக்கு மறுபிறவி தந்தமையால் தந்தை முறை எனக் கூறி மறுத்தார். சிவநேசர் அவளை வேறொருவருக்குத் திருமணம் செய்வதில்லையெனக் கன்னி மாடத்தே இருத்தி வைத்தார். பூம்பாவை சிவத்தியானத்திலிருந்து முத்தி அடைந்தார் என்ற கதை வழங்கி வருகிறது.[87]

வாயிலார் நாயனார் வரலாறு

திருமயிலைப் பதியில் வேளாளர் குலத்தில் பிறந்து இல்லறத்து இருந்து சிவமூர்த்திக்குத் தன் மனத்தில் திருக்கோயில் முதலியன சமைத்துத் திருமஞ்சன தூப தீப நிவேதனம் செய்து, பேரானந்தம் அடைந்து நெடுநாள் வாழ்ந்திருந்து மார்கழி மாதம் இரேவதி நாள் இறைவன் திருவடி அடைந்தார். இவ்வாறு வாயிலார் பற்றிய வரலாறு வழங்குகிறது.[88]

அவிரோதியாழ்வார் வரலாறு

மயிலையில் வாழ்ந்தவர்; இவர் முதலில் வைணவராக இருந்தார். மயிலை நேமிநாதர் கோயிலில் ஒரு சமண ஆசாரியார் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்வதைக் கேட்டார். தானும் பாடங் கேட்க விரும்பினார். ஆசாரியார் சமணர்களுக்கு மட்டுமே பாடங் கூறுவேன் என்றார். உடனே, தான் சமண சமயத்திற்கு மாறிப் பாடங் கேட்டார். நேமிநாதர் கோயிலைச் சுற்றி வருவதற்குள் திருநூற்றந்தாதியைப் பாடி முடித்தார் என்ற கதை வழங்கி வருகிறது.[89]

வாமநாதபுரம் அல்லது
பழைய மயிலாப்பூரினுடைய வரலாறு

ஆதிகாலத்திலே தண்டகாருண்யத்திலே கடற்கரை ஓரமாகத் திருவாமனாதபுரம் என்று ஒரு பட்டினமிருந்தது. அதில் சமணர்கள் வாழ்ந்து வந்தார்கள். அங்கு இருந்த புகழ்பெற்ற சமணக் கோயிலில் நேமிநாத சுவாமியாகிய இருபத்திரண்டாம் தீர்த்தங்கரர் உருவச் சிலை இருந்தது. அபிடேக ஆராதனைகள் நடந்து வந்தன. அங்கு ஒரு சமணத் துறவி இருந்தார். ஒருநாள் அவருடைய கனவில், வாமனாதபுரம் இன்னும் மூன்று நாட்களுக்குள் கடலால் அழிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. அதை அவர் அப்போதிருந்த அரசன் மயிலைமான் என்பவனுக்குத் தெரிவித்தார். அவன் மக்களுடன் வாமனாதபுரத்தை விட்டு அதற்குமேல் புறத்திலே போயிருந்தான். சமணத்துறவி நேமிநாத சுவாமியினுடைய சிலையை எடுத்துக்கொண்டு அரசன் இருந்த இடத்திற்கு வந்தார். அப்படி வந்த பிறகு மூன்றாம் நாளிலே வாமனாதபுரம் முழுவதும் கடலில் மூழ்கியது. மயிலைமான் தன் பட்டினம் முழுகிப்போனதும் மேற்புறத்திலே பட்டினம் கட்டித் தன்னுடைய பேர் விளங்கும்படி அதற்கு மயிலைமான் நகரம் என்று பெயரிட்டான். மயிலையிலிருந்த சிலையைச் சித்தாமூருக்குக்

கொண்டு சென்றார்கள் என்று சமணர்களிடையே ஒரு வரலாறு பேசப்படுகிறது. [90]

இலக்கியங்களால் அறியப்பெறும் தொன்மை

சங்க இலக்கியங்களில் மயிலையைப் பற்றிய குறிப்புகள் இல்லை. பல்லவர் காலத்துப் பக்தி இலக்கியங்களிலேதான் முதன் முதலாக மயிலையைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. பல்லவர் காலத்துக்கு முன்னர்க் கி. பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வராகக் கருதப்பெறும் திருமழிசையாழ்வார் பூவிருந்தவல்லிக்கு அருகிலுள்ள திருமழிசையில் தோன்றியவர். இவர் தாம் இயற்றிய நான்முகன் திருவந்தாதியில் திருவல்லிக்கேணியில் உள்ள திருமாலைப் புகழ்ந்து பாடும்போது,

> .... நீளோதம்
> வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான்[91]

என்று குறிப்பிடுவதால் அவர் காலத்தில் மயிலையின் ஒரு பகுதி யாகத் திருவல்லிக்கேணி இருந்தது அறியப்படுகிறது.

கி பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐயடிகள் காடவர் கோன் என்னும் பல்லவ அரசர் தாம் பாடிய சிவத்தளி வெண்பாவில்,

> மயிலைத்
> திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
> இருப்பின்னை யங்காந் திளைத்து

என்று மயிலைக் கபாலீசுவரர் கோயிலைக் குறிப்பிடுகின்றார். இவரே மூன்றாம் சிம்மவர்மன் என்று ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர். [92]

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர் தாம் பாடிய பூம்பாவைப் பதிகத்தில், மயிலை, மாமயிலை என்று குறிப்பிடுகின்றார். [93] சம்பந்தர் காலத்தில் வாழ்ந்த அப்பரும் தாம் பாடிய பாடல்களில் மயிலாப்பு என்னும் பெயரால் மயிலையைக் குறிப்பிடுகின்றார். [94] கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் தொன்மயிலை என்று கூறுகின்றார். [95] கி. பி எட்டாம் நூற்

றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் மாமயிலை,[96] நன் மயிலை[97] என்ற பெயர்களால் குறிப்பிடுகின்றார். கி. பி ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நந்திக்கலம்பகத்தில் மயிலை,[98] மயிலாபுரி[99] என்னும்பெயர்களால் மயிலைகுறிப்பிடப் படுகின்றது. கி. பி. பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந் தாதியில் மயிலையைக் குறிப்பிட்டுள்ளார்.[100] இதே காலத்தில் வாழ்ந்த திருவிசைப்பாப் பதிகம் பாடிய திருவாலியமுதனாரும் மயிலை என்று குறிப்பிட்டுள்ளார்.[101] கலிங்கத்துப்பரணி பாடிய ஜெயங்கொண்டாரும் மயிலை என்று பாடியுள்ளார்.[102]

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில், சேக்கிழார் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில், திருஞான சம்பந்த சுவாமிகளின் புராணத்தைச் சொல்லும்போது பூம்பாவை வரலாறு எண்பத்தேழு பாடல்களில் சொல்லப்படுகிறது. வாயிலார் நாயனார் புராணம் பத்துப் பாடல்களில் சொல்லப் படுகிறது. அவற்றுள் மயிலை, திருமயிலாபுரி,[103] மயிலாபுரி,[104] திருமயிலை,[105] மயிலை[106] என்று குறிக்கப்படுகிறது. வாயிலார் நாயனார் புராணத்தில் திருமயிலாபுரி,[107] மயிலை[108] எனக் குறிக்கப்படுகின்றது.

இதே நூற்றாண்டில் தோன்றிய நேமிநாதம் என்னும் இலக்கண நூலுக்குக் கி பி 14 ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த பாயிர உரையில் தென் மயிலாபுரி என்று மயிலை குறிப்பிடப்படுகிறது.[109] அவிரோதி ஆழ்வாரும் தாம் பாடிய திருநூற்றந்தாதியில் மயிலாபுரி என்று குறிப்பிடுகின்றார்.[110] கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் உதீசித்தேவரால் இயற்றப் பட்ட திருக்கலம்பகம் மயிலாபுரி என்று மயிலையைக் குறிப்பிடு கின்றது.[111] மயிலை நேமிநாதர் பதிகம்,[112] திருமயிலாபுரிப் பத்து[113] என்னும் பதிகங்களினாலும் மயிலையினுடைய பெயராலேயே நூல்கள் இயற்றப்பட்டிருப்பதை அறிந்து கொள்ளலாம். அருணகிரியார் திருப்புகழில் 'மயிலை' என்று [114] குறிப்பிடுகின்றார். இவற்றால் மயிலையின் தொன்மை நன்கு விளங்கும்.

வெளிநாட்டறிஞர் கண்ட மயிலை

கி. பி. 119-161 காலப்பகுதியில் வாழ்ந்த ரோம்நாட்டுப் புவியியல் அறிஞரும் எகிப்தின் ஒரு பகுதியை ஆண்ட அரசரு

மான தாலமி எழுதிய புவியியல் நூலில் புத்தகம் VII அதிகாரம் I இந்தியாவைப் பற்றிய குறிப்புகள் மட்டுமே கொண்டதாகும். அதில் 14ஆம் இயல் அரவரணை நாடு (அருவா நாடு) என்னும் தலைப்பில் 6ஆவது குறிப்பில் மலியார்பா (Maleiarpha) என்று குறிப்பிடுவது மயிலாப்பூரைக் குறிக்கும் என்று வரலாற்றறிஞர் கூறுகின்றனர். மயிலையில் அக்காலத்தில் வாணிகச் சந்தை கூடிற்று. அதற்கு மலியார்பா எம்போரியம் (Maleiarpha Emporium) என்று பெயர்.[115]

வெனிசு நகர வணிகர் மார்க்கோபோலோ பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் எழுதிய பயண நூலில் இந்திய அனுபவங்களைக் குறிப்பிடும்போது செயின்ட் தாமஸ் மறைந்த வரலாற்றைக் கூறுகிறார். தாமஸ் இறை வழிபாட்டில் இருந்தபோது அவரைச் சூழ்ந்து மயில்கள் நின்றன. ஒரு வேட்டைக்காரன் ஒரு மயிலை மாய்க்கும் எண்ணத்தோடு விட்ட அம்பு முனிவர் மீது பாய்ந்தது. அவர் உயிர் துறந்தார் என்று குறிப்பிடுகின்றார். இந்த நிகழ்ச்சி நடந்த இடம் மயிலையாயிருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[116]

கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் 'ஜான் டி மரிக்நோலி' என்னும் வழிப்போக்கர், செயின்ட் தாமஸ் உயிர் துறந்த வரலாற்றைக் கூறும்போது மயிலையை மைராபோலிஸ் (Mirapolis) என்று குறிக்கின்றார்.[117] அதே நூற்றாண்டில் ஃபிரையர் ஒடெரிக் (Friar Oderic), செயின்ட் தாமஸ் கல்லறை பற்றியும் மயிலையில் சில கிறித்தவர்கள் இருந்ததையும் குறிப்பிடு கின்றார்.[118] நிக்கோலா காண்டி (Nicolo Conti) பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் இருந்தார். அவர் மயிலையை மலேபூர் (Malepur) என்று குறிப்பிடுகின்றார். செயின்ட் தாமஸ் புதைக்கப்பட்ட இடத்தில் பெரிய அழகிய ஆலயம் இருந்தது என்று குறிப்பிடுகின்றார்.[119] கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் டூரேட் பார்போஸா (Durate Barbosa) என்பவர் மயிலாப்பூரைக் குறிப்பிடும்போது மைலாபூரா (City of Mailapura) என்று குறிப்பிட்டுள்ளார்.[120] போர்ச்சு கல்லிலிருந்து கி.பி. 1521இல் வந்த காஸ்பர் கொரியா (Casper Correa) செயின்ட் தாமஸ் ஆலயத்தையும் சிலுவைகள் மயில் களோடு அழகு செய்யப்பட்டிருந்தன என்ற செய்தியையும் கூறும் போது மயிலையைப் பற்றிக் கூறுகின்றார்.[121] பிலிப் பால்டியூஸ் (Philip Baldeus) என்னும் டச்சு நாட்டவர் 1649இல் மயிலை

இருந்த நிலையைத் தன்னுடைய நூலில், போர்த்துகீசியருக்குரிய செயின்ட் தாமஸ் நகரம், மலியபூரில் (Maliapour) இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.[122]

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் மறைத்திரு ஆண்ட்ரியா லோபெஸ் சே. ச. (Fr. Andrea Lopez, S. J.) உள்ளூர் மக்களால் சாந்தோம் பகுதி 'மைலாப்பூர்' (Maylapur) எனக் குறிப்பிடப் படுகிறது என்று கூறியுள்ளார்.[123] டொமினிக் நவரெத்தெ (Dominic Navarette) என்னும் ஸ்பெயின் நாட்டுப் பாதிரியார் 1670 இல் மயிலையை மெலியபூர் (Meliapor) என்று குறிப்பிடு கிறார்.[124] சிசர் ஃபிரெடரிக் (Caesar Fredericke) என்பவர் கி.பி. 1567 இல் சாந்தோம் ஆலயத்தைப் பார்த்ததாகக் கூறுகிறார்.[125] காஸ்பரோ பால்பி (Gasporo Balbi) என்னும் வெனிசு நகரத்து வைர வியாபாரி கி. பி. 1582இல் சாந்தோமைப் பற்றிக் குறிப் பிட்டுள்ளார்.

செயின்ட் தாமஸ் நகரத்தில் செயின்ட் தாமஸ் ஆலயத்தைத் தவிர மாதா கோயில் ஒன்று இருந்ததையும் (Mae de Deus Church) குறிப்பிடுகின்றார். லஸ் கிறிஸ்தவ ஆலயத்தையும், சாந்தோமுக்கு வெளியே இருந்த செயின்ட் லாசரஸ் கிறிஸ்தவ ஆலயத்தையும் குறிப்பிட்டுள்ளார். செயின்ட் தாமஸ் நகரம்தவிர மற்றொரு நகரம் இருந்தது என்றும், அது மண் மதில் சுவரை உடையதாக இருந்ததென்றும், அதன் தலைவன் அதிகாரியோ (Adicario) எனப்பட்டான் என்றும் குறிப்பிடுகின்றார். மற்றொரு நகரம் என்பது மயிலையைக் குறிப்பிடும் என்று எச். டி. லோவ் கருதுகின்றார்.[126] ஃபரியா ஒய் செளஸா (Faria y Souza) என்னும் போர்த்துக்கீசியர் கி. பி. 1616 இல் மயிலையை மெலியபூர் (Meliapor) என்று குறிப்பிடுகின்றார்.[127]

கி. பி. 1558 இல் விஜயநகர அரசர் இராமராயர் சாந்தோம் மீது படையெடுத்த நிகழ்ச்சியை மேற்கூறிய போர்ச்சுகீசியரே குறிப்பிடுகின்றார்.

'செயின்ட் தாமஸ் நகரம் அல்லது மெலியபூர் மீது விஜயநகர அரசர் இராமராயர் படையெடுத்ததற்குக் காரணம், ஒருவன் கூறிய தவறான தகவலே யாகும். அவன் சாந்தோமில் இருபது லட்சம் பொன் இருக்கிறது என்று சொல்ல, அதற்காக இராம ராயர் படையெடுத்து வந்தார். சாந்தோமில் இருந்தவர்கள் அவரை எதிர்த்துப் போரிடவில்லை. அவர்கள் அரசரை

வரவேற்று 4,000 பொற்காசுகள் தந்தனர். அரசர் நகரிலுள்ள அனைத்து மக்கள், அவர்களுடைய பொருள்கள் எல்லாவற்றையும் வரவழைத்து மதிப்பிட்டார். 80, 000 பொற்காசுகளுக்கு மேல் மதிப்புப் போகவில்லை. தவறான தகவல் கொடுத்தவனை யானையின் கால்களில் இட்டுக் கொன்றார். மக்களை விடுவித்து எல்லாப் பொருள்களையும் அவரிடமே தந்தார்.[128]

தாமசு ஹெர்பர்ட் என்பவர் கி. பி. 1626-1629இல் இந்தியாவில் பயணம் செய்திருக்கிறார். செயின்ட் தாமஸ் தொடர்பாகக் குறிப்பிடும்போது மெலியபூர் (Meliapore) என்று கூறியுள்ளார்.[129] காப்டன் பீட்ரோ பாரெட்டோ டி ரெசென்டி (Captain Pedro Barretto de Rezende) கி. பி. 1646 இல் மெலியபூர் (Meliapor) என்று குறிப்பிட்டுள்ளார்.[130] எஃப். சி. டான்வெர்சு (F. C. Danvers) என்பவர் கி. பி. 1635 இல் மெலியபூர் (Meliapore) என்று குறிப்பிட்டுள்ளார்.[131] கி.பி. 1637இல் பிரான்சிஸ் டே (Francis Day) என்பவரும் மெலியபூர் (Meliapore) என்று குறிப்பிட்டுள்ளார்.[132] கி. பி. 1630-40இல் இந்தியாவில் பயணம் செய்த ஆல்பர்ட் டி மாண்டல்சோ (Albert de Mandelso) என்பவர் மெலியபூரில் இந்தியர் முகமதியர் வாழ்ந்து வந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.[133] கி. பி. 1662 இல் ஜான் நியுப் (John Neieuhoff) சாந்தோமைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[134] இவ்வாறு கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து வெளிநாட்டவர் குறிப்பிட்டுள்ள குறிப்புகளினால் திருமயிலையின் தொன்மை விளங்குகிறது.

தொல்பொருள்கள்

திருமயிலை, சாந்தோம் ஆகிய பகுதிகளில் பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப் பெற்ற தொல்பொருள்களும் மயிலையின் தொன்மையை உணர்த்துகின்றன. அவை சாந்தோம் பிஷப் இல்லத்து அருங்காட்சியகத்தில் இருக்கின்றன. தலையுடைந்து போன திகம்பரச் சமண உருவச் சிலை ஒன்று பிஷப் இல்லத்தில் கண்டெடுக்கப்பட்டது.[135] மாடத்தில் அமர்ந்த நிலையில் உள்ள திகம்பரச் சமணச் சிலை மாதரசு ஆலயத் (Mae de Deus Church) திலுள்ள திறந்த வெளியில் கண்டெடுக்கப்பட்டது.[136] உடைந்த கல்தூண் செயின்ட் தாமஸ் ஆலயத்துக்குப் பக்கத்திலுள்ள ஆலயத்திற்குச் சொந்தமான தென்னந்தோப்பில் கண்டெடுக்கப்பட்டது. கல்தூணின் ஒரு பகுதியில் மூன்று புறமும் தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. அதன் காலம் முதல் இராஜராஜனுடைய

காலமாகும்.[137] சாந்தோமில் ஒரு தோட்டத்திலிருந்து முருகனோடு மயில், நாகம் கூடிய கற்சிலை கண்டெடுக்கப்பட்டது.[138]

சாந்தோமுக்கு அருகிலுள்ள அப்பு முதலித் தெருவில் புலிக்காட்டுக் கிராமணி தென்னந்தோப்பில் இரண்டு திகம்பரச் சமணச் சிலைகள் இருந்தன. ஒரு சிலையின் மீது ஐந்து தலை நாகம் படமெடுத்தபடி உள்ளது. மற்றொன்றில் பாம்பின் படம் இல்லை.[139] அவற்றுள் ஒன்று பார்சுவநாதர் உருவம்; மற்றொன்று மகாவீரர் உருவம்; இரண்டும் கருங்கல் சிலைகள். இச் சிலைகள் காலஞ் சென்ற மயிலை. சீனி. வேங்கடசாமியின் நண்பர் ஒருவரிடத்தில் இருக்கின்றன.[140]

1923 ஜனவரி 25 முதல் பிப்ரவரி 10 முடிய செயின்ட் தாமஸ் பேராலயத்தைச் சுற்றிலும் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பிறகு அந்த ஆராய்ச்சி நிறுத்தப்பட்டுவிட்டது.[141] செயின்ட் தாமஸ் பேராலயத்தைச் சுற்றி அகழ்வாராய்ச்சி நடந்தபோது, பூமியில் புதைந்திருந்த கிழக்குப் பக்கத்திருச்சுற்றுச்சுவரில்[142] மயிலாப்பூர் ஈச்சரமுடையார் கோயிலில் கூத்தாடுந் தேவர்க்கு ஒரு சந்தி விளக்கு எரிய வைப்பதற்காக இறையிலி நிலம் அளித்ததைக் குறிக்கும் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது.[143] செயின்ட் தாமஸ் பேராலயத்திற்கு அருகில் உள்ள செயின்ட் தாமஸ் கன்னிமாடத்தின் முன்பு ஒரு சமணச் சிலை இருந்தது. அதைப் பக்கத்தில் உள்ள பள்ளத்தில் போட்டுப் புதைத்து விட்டார்கள் என்று கூறப்படுகிறது.[144] கி. பி. 1729 இல் செயின்ட் தாமஸ், கந்தப்பராசா உருவங்கள் கொண்ட கல் ஒன்று பேராலயத்துத் திறந்த வெளியில் இருந்து எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தக் கல்லின் வலப்புறம் உள்ளது செயின்ட் தாமஸின் உருவம். இடப்புறம் உள்ளது கந்தப்பராசாவின் உருவம் ஆகும்.[145]

அண்மைக்காலத்தில் திருமயிலையில் கண்டு எடுக்கப்பெற்ற தொல்பொருள்கள்

1974 ஆம் ஆண்டுச் செப்டம்பர்த் திங்களில் மயிலாப்பூர் கன்னையலால் தெருவில் ஒரு வீட்டிற்கு அடிக்கல் போடுவதற்குத் தோண்டிக் கொண்டிருந்தபோது தலையில்லாத இரண்டு புத்தர் சிலைகள் கிடைத்தன. சென்னை நகரில் புத்தர் சிலை கண்டெடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இந்த இரு சிலைகளும் தியான நிலையில் உள்ளதாலும், சிலையின் சங்கதியிலிருந்தும் (அதாவது மேல் ஆடையிலிருந்தும்) இவை புத்தர்சிலைகள் என்று அடையாளம் கண்டறியப்பட்டது என்று தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் டாக்டர் ஆர். நாகசாமி கூறியுள்ளார்.

சிலைகளுக்குத் தலையில்லாததால் இந்த ஒரு அமிசத்தைக் கொண்டுதான் புத்தர் சிலை என அடையாளங் கண்டு கொள்ள முடிந்தது என்று தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் கூறியுள்ளார். ஒரு சிலையின் உயரம் 6 அடி; மற்றொரு சிலையின் உயரம் 4 அடி. இவை அரசினர் அருங்காட்சியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.[146] மற்றுமொரு சிலையின் மார்பு, கை ஆகிய பகுதிகள் கிடைத்தன. இவையும் புத்தர் சிலையின் உடைந்த பகுதிகளாக இருக்கலாம்.[147] ஆகவே முற்காலத்தில் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் மயிலைப் பகுதியில் இருந்திருக்க வேண்டும் என்று தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் கருதுகிறார்.[148]

1974ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் மயிலையிலுள்ள திருவள்ளுவர் கோயிலைப் புதுப்பிக்கும்போது, அடிக்கல் வைப்பதற்காகத் தோண்டும் போது பூமிக்குக் கீழே நான்கு அடி ஆழத்தில் திருவள்ளுவருடைய கருங்கல் சிலை கிடைத்தது. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்தியதாகக் கருதப்படும் இச்சிலை தலை, இடக்கை உடைந்து தனியாக இருந்த நிலையில் கண்டு எடுக்கப்பட்டது. உடைந்த பகுதிகளைச் சேர்த்துப் பார்க்கும் போது நீண்டதாடி, முறுக்கிய மீசையுடன் அமர்ந்த நிலையில் திருவள்ளுவர் சிலை காணப்பட்டது. வலக்கை சின்முத்திரை யுடன் அக்ஷமாலை (Aksha malai) ஏந்தியவாறு ஒரு பீடத்தின் மீது சிலை உள்ளது. நான்கடி உயரத்துக்கு மேல் உள்ளது. இச்சிலை கி.பி. பதினான்கு அல்லது பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி கருதுகிறார்.[149]

1980ஆம் ஆண்டு மே மாதத்தில் திருமயிலையிலுள்ள அபிராமபுரத்தில் ஒரு வீட்டின் பின்புறத்தில் கடைக்கால் போடுவதற்கு நிலத்தைத் தோண்டும்போது இரண்டு மீட்டர் ஆழத்தில் 4.5 மீட்டர் விட்டமுள்ள சோழர் காலத்துக் கிணறு கண்டுபிடிக்கப்பட்டது. பெரிய அளவு சுட்ட செங்கற்களால் கிணறு கட்டப்பட்டிருந்தது. செங்கல்லின் அளவு 32 × 17.5 × 7

சென்டிமீட்டராகும். எடை 5.75 கிலோ கிராமாகும்.[150] இக் கிணற்றினால் மயிலையின் தொன்மை உணரப்படுகிறது.

17. 9. 1982 அன்று சென்னை சத்தியா படப்பிடிப்பு நிலையத்திற்கு எதிரே உள்ள 'சுடர்' மாளிகை அருகே அடையாறு ஆற்றங்கரையில் தமிழக அமைச்சர்களுக்காகப் புதிய வீடுகள் கட்டுவதற்காகக் கடைக்கால் போடப் பூமியைத் தோண்டிக் கொண்டிருந்தபோது ½ மீட்டர் ஆழத்தில் முதலாம் இராஜராஜ சோழன் காலத்துச் (கி. பி. 1000) செப்பு நாணயங்கள் பதினொன்று கிடைத்தன. தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநரின் ஆணையின்படி மேலும் தோண்டியபோது மேற் கொண்டு ஒரு செப்புக்காசு கிடைத்தது.[151] அந்த நாணயங்கள் நல்ல நிலையில் இருந்தன. நாணயத்தின் ஒரு பக்கம் அரசனின் உருவம் நிற்கும் நிலையிலும், மறுபக்கம் அரசன் அமர்ந்த நிலையிலும் ஸ்ரீராஜராஜ என்று நாகரி எழுத்தில் எழுதப் பட்டும் இருந்தன.[152]

செப்புப் பட்டயங்கள்

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டித் தாலுக்காவி லுள்ள தளவாய்புரம் என்னும் கிராமத்தில் புறவெளியில் 1967க்குச் சில ஆண்டுகளுக்கு முன் பூமிக்கடியிலிருந்து சாசனம் கிடைத்ததென்று கூறப்படுகின்றது. ஏழு செப்பேடுகளைக் கொண்டது இச்சாசனம்.[153] இந்தச் சாசனத்தில் வடமொழி, தமிழ் ஆகிய இரண்டு பகுதிகள் உண்டு.

இந்தச் சாசனத்தில் வீரநாராயணனின் தாயார், தாய்வழிப் பாட்டன் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'தொண்டையர் தலைவனும், நடுக்கமில்லாதவனும், கூர்மையான ஆயுதத்தை உடையவனுமான மானாபரணனுடைய மருகனும். மயிலையில் உள்ளோர்க்குத் தலைவனுமான (மயிலையர் கோன்) பொத்தப்பிக் குலச் சோழன் சிரீகண்டராசனுடைய அழகிய புதல்வி அக்களநிம்மடியினுடைய திருவயிற்றில் தோன்றியவன் ஸ்ரீபராந்தக மகாராசன் என்ற செய்தி பட்டயத்தில் உள்ளது.[154] இவன் தந்தையின் பெயர் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன். வீர நாராயண னின் அண்ணன் வரகுண பாண்டியன் ஆட்சி ஏற்ற காலம் கி.பி. 863 ஆகும். இருவரும் சேர்ந்து 45 ஆண்டுகள் ஆண்டனர். இச் செப்புப் பட்டயத்திலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்ரீ கண்ட சோழன் ஆட்சியில் மயிலை இருந்து

வந்தது தெரிய வருகிறது. இந்தச் சாசனம் வீரநாராயணனின் 45ஆம் ஆட்சியாண்டில் கரவந்தபுரத்தில் (களக்குடி) தங்கி இருந்தபோது வழங்கப்பட்டது. மதுரத நல்லூர், சோமாசிக் குறிச்சி என்னும் ஊர்களை இறையிலி ஊராகச் செய்தமை இந்தச்சாசனத்தில் கூறப்படுகின்றது.[155]

கல்வெட்டுகள்

திருமயிலையில் கிடைக்கும் கல்வெட்டுகளில் பெரும்பாலானவை திருவான்மியூர், திருவிடைச்சுரம் ஆகிய ஊர்களைச் சேர்ந்தவையாகும். சில கல்வெட்டுகள் மயிலை என்னும் ஊர்ப் பெயரைக் குறிப்பிடுகின்றன. இங்குக் கிடைக்கும் கல்வெட்டுகள் மயிலையின் வரலாற்றை அறிவதற்குத் துணை செய்யவில்லை. ஆனால், மயிலையின் தொன்மையை உணர்ந்து கொள்வதற்குப் பயன்படுகின்றன. திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் கோயில் கருப்பக்கிருகத்திற்கு முன்னுள்ள மண்டபத்தின் தரையில் உள்ள கல்லில் காணப்படும் கல்வெட்டு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கம்பவர்மன் ஆட்சியில் மயிலை இருந்ததை உணர்த்துகிறது.

கம்பவர்மனுடைய 7 ஆம் ஆட்சியாண்டில் திருவொற்றியூர் மகாதேவர் கோயிலுக்கு விளக்கெரிக்க மயிலார்ப்பில் இறையான் சேரி வெம்பன் குணுங்கனம்மன் பதினைந்து கழஞ்சு பொன் அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது.[156] இதனால் கி. பி. 855-896 ஆம் ஆண்டுகளில் கம்பவர்மனுடைய ஆட்சியின் கீழ் மயிலை இருந்து வந்ததை அறியலாம். பல்லவர் ஆட்சியின் இறுதியிலே, தொண்டை மண்டலத்தை நிருபதுங்கவர்மன் (கி. பி. 855- 896), அபராஜிதவர்மன் ஆகியோருடன் சேர்ந்து கம்பவர்மன் என்னும் அரசனும் ஆண்டு வந்ததாகத் தெரிகின்றது. பொன்னேரிக்கு அருகில் உள்ள காட்டூரில் கிடைத்த கல்வெட்டில் மயிலார்ப்பில் என்னும் ஊரில் நானாதேசிகள் என்னும் கடல் வாணிகர்கள் ஒன்று கூடி முடிவெடுத்த செய்தி தெரியவருகிறது. இக் கல்வெட்டின் காலம் கி. பி. 11 ஆம் நூற்றாண்டாகும்.[157]

முதலாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டு, சாந்தோம் பேராலயத்துத் தென்னந்தோப்பிலிருந்து கண்டெடுக்கப் பெற்ற ஒரு தூணில் காணப்படுகின்றது. இராசராசன் மெய்க்கீர்த்தியில் ஒரு பகுதியே உள்ளது. காலம் கி. பி. 10- 11 ஆம் நூற்றாண்டாகும்[158] செயின்ட் தாமஸ் மலையிலுள்ள தூய அப்பாஸ்ல்ஸ் கன்னிமாடத்தின் உணவருந்தும். அறையின் பக்கத்தில் உள்ள

மாடிப் படியில் ஒரு கல்லில் காணப்படும் கல்வெட்டு, மயிலாப்பூரிலுள்ள திருப்பூம்பாவைக்குச் சில வரிகளிலிருந்து கிடைக்கப் பெறும் வருமானத்தைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. இதன் காலம் தெரியவில்லை.[159]

மாதவப் பெருமாள் கோயில் சேனை முதலியார் ஆலயத்தின் தரையில் உள்ள கல்வெட்டு, முதல் இராசாதிராஜன் காலமான கி. பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இக் கல்வெட்டு திருவாலீச்வரமுடைய நாயானாருக்குப் பட்டினத்து வியாபாரிகள் அளித்த கொடையைக் குறிக்கிறது.[160] இக் கல் வெட்டு இப்போதுள்ள வாலீசுவரர் கோயிலைக் குறிப்பதாகும்.

சாந்தோம் பேராலயத்தில் கிழக்குப் பக்கத் திருச்சுற்றில் உள்ள கல்வெட்டில் முதலாம் இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதி உள்ளது. இக் கல்வெட்டின் காலம் கி. பி. 11ஆம் நூற்றாண்டாகும்.[161] மேற்படி இடத்திலேயே வீக்கிரம சோழனின் மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி கல்வெட்டில் காணப்படுகிறது. இது கி. பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.[162] இவ்விடத்தில் வடமொழிக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இதன் காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டாகும். இக்கல் வெட்டில் கருப்பக் கிருகம் உட்பட எல்லாக் கட்டிடங்களும் மயிலாப்பூரில் உள்ள புகழ் பெற்ற சிவனுக்கும் பார்வதிக்கும் உரியவையாகும்.[163] என்னும் செய்தி உள்ளது. மேற்படி இடத்திலுள்ள மற்றொரு கல்வெட்டில் மயிலாப்பூரிலுள்ள நேமிநாத சுவாமிக்குக் கொடை அளித்ததையும் பழந்தீபராயன் என்பார் கையெழுத்திட்டதையும் குறிக்கிறது. இக்கல்வெட்டு கி. பி. 12 - 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.[164] பிறிதொரு கல்வெட்டு மயிலாப்பூர் ஈச்சரமுடையார் கோயிலில் கூத்தாடுந் தேவர்க்கு ஒரு சந்தி விளக்கு எரிய வைப்பதற்காக இறையிலி நிலம் அளித்ததைக் குறிக்கிறது.[165]

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலின் முன் உள்ள குளத்தின் படிக்கட்டுகளில் ஒரு கல்லில் திருப்பூம்பாவை என்று குறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் சிறுபகுதியே கிடைத்துள்ளது.[166] மேற்படி கோயில் இரண்டாம் சுற்றுச் சுவரில் மேற்குக் கோபுரத்தின் வலப்பக்கத்தில் உள்ள கல்வெட்டு மயிலாப்பூர் ஊரவரைப் பற்றிக் குறிக்கிறது.[167] வடக்குச் சுவரில் உள்ள குலசேகர பாண்டியனின் கல்வெட்டில் திருமயிலாப்பூர்

ஊரவர்க்கு நிலம் விற்றுக் கொடுத்தது குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காலம் கி. பி. 1309 ஆகும்.[168] உண்ணாழியின் வடக்குப் பக்கச் சுவரில் உள்ள ஸ்ரீவீரவேங்கடபதி தேவ மகாராயரின் கல்வெட்டில் திருமயிலாப்பூரில் இருக்கும் ஒரு குடும்பத்தைப் பற்றிய செய்தி காணப்படுகிறது. காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டாகும்.[169]

திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் கற்பகாம்பாள் ஆலயத் திருச்சுற்றின் வடபுறச் சுவரில் உள்ள சுந்தர பாண்டிய தேவர் காலத்துக் கல்வெட்டு, கபாலீசுவரர் கோயிலுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இதன் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டாகும்.[170] கற்பகாம்பாள் ஆலயத்தின் மேற்குச் சுவரின் உட்புறத்தில் உள்ள கல்வெட்டு மயிலாப்பூரைச் சேர்ந்த தண்டிபிடிக்கோன் என்பானிடமிருந்து இருபத்திரண்டு ஆடு பெற்றுத் திருவான்மியூர் உலகாளுடைய நாயனார்க்கு இரண்டு விளக்கு எரிய வைத்ததைக் குறிக்கிறது. காலம் சுமார் கி. பி. 13ஆம் நூற்றாண்டாகும்.[171] திருமயிலை விருபாட்சீசுவரர் கோயில் கருவறையின் தென்புறச் சுவரில் உள்ள கி. பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, திருப்பூம்பாவை நாயனாரையும் ஐஞ்சு வண்ண வணிகர்களையும் குறிப்பிடுகின்றது.[172]

திருமயிலை வாலீசுவரர் கோயில் கருவறையின் முன் உள்ள தரையில் இருக்கும் கி. பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் 'திருமயிலாப்...' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[173] கோயில் கருவறையின் முன் உள்ள மண்டபத் தரைமீதுள்ள கல்வெட்டில் முதலாம் இராசாதி ராசனின் மெய்க்கீர்த்திப் பகுதி உள்ளது. இதன் காலம் கி. பி. 11ஆம் நூற்றாண்டாகும்.[174]. இக் கல்வெட்டுகளினால் மயிலையின் தொன்மை நன்கு விளங்குகிறது.

பல்லவர் காலத்திய மயிலை

கி. பி. 250 - 340 வரை ஆண்ட பல்லவர்களை முற்காலப் பல்லவர் அல்லது பிராகிருத மொழிப்பட்டயங்களை வெளியிட்ட பல்லவர் என்று கூறுவர், பப்பதேவன். சிவஸ்கந்த வர்மன், வீசய ஸ்கந்த வர்மன், இளவரசன் புத்தவர்மன், புத்யங்குரன் முதலான மன்னர்கள் இக்காலப் பகுதியில் தொண்டை நாட்டை ஆண்ட மன்னர்களாவர்.[175]

கி.பி. 340 முதல் 575 முடிய ஆண்ட மன்னர்களை இடைக் காலப்பல்லவர் அல்லது வடமொழிப் பட்டயங்களை வெளியிட்ட பல்லவர் என்று கூறுவர்.

முதலாம் குமாரவிஷ்ணு (கி.பி. 340-350)முதலாக, மூன்றாம் சிம்மவர்மன் (கி, பி. 550-575) ஈறாக உள்ள மன்னர்கள் காலத் திலும் தொண்டைநாடு பல்லவர் ஆட்சியில் இருந்து வந்தது. இந்த மூன்றாம் சிம்மவர்மனே ஐயடிகள் காடவர்கோன் என ஆராய்ச்சியாளர் கூறுவர்.[176]. இவன் சிவத்தளி வெண்பா என்னும் நூலைப் பாடியிருக்கிறான். அதில் மயிலைக் கோயிலைப் பற்றிய பாடல் உள்ளது.[177] கிரந்த-தமிழ் மொழியில் பட்டயங் களை வெளியிட்ட பல்லவர்களைப் பிற்காலப் பல்லவர் என்று கூறுவர், சிம்ம விஷ்ணு முதலாக (கி. பி. 575 - 615) அபராஜித வர்மன் (கி.பி.890) ஈறாக மன்னர் பலர் ஆண்டனர்.[178]

மகேந்திரவர்மன் (கி. பி. 615 - 630) காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் மயிலையைப் பாடி யிருப்பதால் பல்லவர் காலத்தில் மயிலை சிறப்புப்பெற்றிருந்ததை அறியலாம்.[179]. மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் (கி. பி. 825-850) மயிலை பல்லவர்களின் சிறப்புமிக்க நகரமாக விளங்கியதை நந்திக் கலம்பகத்தால் அறியலாம்.[180]. பெரியபுராணத்தில் காடவர்கோன் கழற்சிங்கன் என்று கூறப்படுபவன் இவனே என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[181]. பல்லவர் ஆட்சியின் இறுதியிலே, தொண்டை மண்டலத்தை நிருபதுங்க வர்மன் (கி.பி. 855-896) ஆகியோருடன் சேர்ந்து கம்ப வர்மன் என்னும் அரசனும் ஆண்டு வந்ததாகத் தெரிய வருகிறது. அபராஜித வர்மன் கல்வெட்டு திருவொற்றியூர்க் கோயிலில் உள்ளது. அதே காலத்தில் ஆண்ட கம்பவர்மனின் 7ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டும் அக்கோயிலில் உள்ளது.[182]. இதனால் அக்காலத்தில் மயிலை கம்பவர்மன் ஆட்சியில் இருந்தது தெரிய வருகிறது.

சடையவர்மன் வரகுண பாண்டியனின் (கி. பி. 863) தம்பி வீரநாராயணனின் 45ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட தளவாய்புரம் செப்பேடுகளில், பொத்தப்பிச் சோழர் குலத்தைச் சேர்ந்த ஸ்ரீகண்டன் மகளான அக்களநிம்மடி,வீரநாராயணனின் தாய் எனக்குறிக்கப்பட்டுள்ளது. இதனால் 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்ரீகண்ட சோழன் மயிலையை ஆண்டு வந்தது தெரிய வருகிறது.[183]

தந்தி வர்ம பல்லவனின் ஆட்சிக் காலத்தில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கல்வெட்டுகள் எதுவும் தொண்டை மண்டலத்தில் காணப் பெறாததால், கி.பி. 9ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஸ்ரீ கண்டன் தொண்டை நாட்டை ஆண்டிருக்க வேண்டும். வீர நாராயணன் தந்தையாகிய ஸ்ரீமாறன் சீவல்லபன் கி. பி. 835இல் முடிசூடினான். ஏறத்தாழ கி. பி. 850இல் குடமூக்குப் போரில் (கும்பகோணம்) தெள்ளா றெறிந்த நந்திவர்மனை வென்றான். அப்பொழுது, பல்லவன் மயிலைப் பகுதியை விட்டுச் சென்றிருக்க வேண்டும். அதனை ஸ்ரீகண்ட சோழன் ஆளத் தொடங்கினான் என்று ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர்.[184]

சோழப் பேரரசர் காலத்திய மயிலை

பல்லவர் வீழ்ச்சிக்குப் பின் தொண்டை மண்டலம் சோழர் ஆட்சியின் கீழ் வந்தது. முதலாம் ஆதித்த சோழன் (கி. பி. 871-907) அபராஜிதவர்மனை வென்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டான் என்று திருவாலங் காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.[185] கி. பி. 947இல் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ண தேவன் (கி. பி. 936-966) கங்க அரசனாகிய இரண்டாம் பூதுகனோடு சேர்ந்து சோழராட்சிக்கு உட்பட்டிருந்த தொண்டை நாட்டைத் தாக்கினான். அந்தப் போரில் கிருஷ்ண தேவன் வெற்றியடைந் தான். திருவொற்றியூர்க் கோயிலில் இராட்டிரகூட மன்னனின் கல்வெட்டுகள் காணப்படுவதால் அக்காலத்தில் தொண்டை நாடு இராட்டிரகூடர் ஆட்சியிலிருந்தது புலப்படும்.[186] இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன் (கி. பி. 957-970) ஆட்சிக்கு வந்தபொழுது இராட்டிரகூடர்களுடன் போரிட்டுத் தொண்டை நாட்டை வென்றான். கி. பி 963ஆம் ஆண்டிலேயே தொண்டை நாட்டுப் பகுதிகள் இவன் ஆட்சிக்கு உட்பட்டு விட்டன என்று ஐயமின்றிக் கூறலாம்.

முதல் இராசராசன் (கி.பி. 985-1014) காலத்தில் தொண்டை மண்டலம் ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்றழைக்கப் பட்டது, இவன் காலத்துக் கல்வெட்டு சாந்தோமிலும்,[187] செப்புக்காசுகள் அடையாற்றங்கரை ஓரத்திலும்,[188] கண்டெடுக் கப்பட்டுள்ளன. முதல் இராசேந்திரன் (கி. பி. 1012 - 1044) கல்வெட்டு சாந்தோமில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.[189] முதல் இராசாதிராசன் (1018-1054), இரண்டாம் இராசேந்திரன்

(1051-1063), வீர ராசேந்திரன் (1063-1070), அதிராசேந்திரன் (கி. பி. 1070) ஆகியோருடைய ஆட்சியிலும் தொண்டை மண்டலம் இருந்தது. முதற்குலோத்துங்கன் (கி. பி. 1070-1120) காஞ்சி அரண்மனையில் சித்திர மண்டபத்தில் வீற்றிருந்து பல்லவர்கோன் கருணாகரத் தொண்டைமானுடனும் மற்றவருடனும் வட கலிங்கத்தின் மேல் படையெடுக்க ஆலோசனை செய்தான் என்னும் செய்தியால், தொண்டை மண்டலம் அவன் ஆட்சியின்கீழ் இருந்தது புலப்படும்.[190]

கலிங்கத்துப் பரணியில் மயிலையைப் பற்றிய குறிப்பு உள்ளது.[191] ஆகவே, சோழராட்சியில் மயிலை இருந்தது புலப்படும்.

விக்கிரமசோழன் (கி. பி. 1118-1136), இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133-1150), இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146-1163), இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1163-1178) மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218) ஆகியோருடைய ஆட்சியிலும் தொண்டைநாடு இருந்தது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் இருந்த சேக்கிழார் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் மயிலையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[192] குணவீர பண்டிதர் இயற்றிய நேமிநாதம் என்னும் நூலாலும், சோழராட்சிக் காலத்தில் மயிலையில் நேமிநாதர் கோயில் இருந்ததை அறியலாம்.[193]

மூன்றாம் இராசராசன் (கி. பி. 1216-1256) ஆட்சியில் சிலகாலம் தொண்டை மண்டலம் இருந்தது. சில காலம் பல்லவர் குறுநிலமன்னன் கோப்பெருஞ்சிங்கனிடம் இருந்தது. மூன்றாம் இராசேந்திரன் (கி. பி. 1246-1279) காலத்தில் தொண்டை மண்டலத்தைக் காகதீய அரசன் கணபதியின் கட்டுப்பாட்டின் கீழ், தெலுங்கச்சோழ அரசன் முதலாம் திக்கன் ஆண்டுவந்தான். அவனுக்குப் பிறகு விஜயகண்ட கோபாலன். வீரகண்ட கோபாலன் ஆகியோர் தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்தனர். விஜயகண்ட கோபாலனின் கல்வெட்டு மயிலை வாலீஸ்வரர் கோயிலில் காணப்படுகிறது.[194]

பழைய பல்லவர் பரம்பரையைச்சேர்ந்தவர்கள் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் காடவர் அல்லது காடவராயர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றுக் குறுநில மன்னர்களாக இருந்து வந்தனர். கோப்பெருஞ்சிங்கன் என்னும் காடவர் குல மன்னன், காகதீயரு

டனும் விஜயகண்ட கோபாலனுடனும் கி. பி. 1255-1262 உட்பட்ட காலத்தில் போரிட்டபோது அவன் மகன் காடவன் கொமரன் உதவி புரிந்துள்ளான். காடவன் கொமரன் தன்னை மல்லை, மயிலை, காஞ்சி, தொண்டை மண்டலம் ஆகியவற்றிற்குத் தலைவன் என்று கூறிக்கொள்கிறான்.[195]

பிற்காலப் பாண்டியர் காலத்திய மயிலை

முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் கி. பி. 1251இல் முடிசூடினான். தெலுங்கச் சோழன் விசய கண்ட கோபாலனைப் போரில் கொன்று, காஞ்சியைக் கைப்பற்றினான். காகதீய மன்னன் கணபதி என்பவனையும் வென்று, நெல்லூரைக் கைப்பற்றி வீராபிடேகம் செய்து கொண்டான்.[196] விசயகண்ட கோபாலன் தம்பியர் வந்து வணங்கவே, அவர்கட்கு நாட்டை யளித்து ஆண்டுதோறும் கப்பம் செலுத்தி வருமாறு செய்தான்.[197] சடையவர்மன் விக்கிரம பாண்டியன் என்பவனும் சடையவர்மன் வீரபாண்டியன் என்பவனும் தொண்டை நாட்டில் பாண்டியனின் அரசப் பிரதிநிதிகளாயிருந்து ஆண்டு வந்தனர்.

முதல் மாறவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி, 1268-1311) ஆட்சியில்தொண்டைநாடுஇருந்தது. இவனுடையகல்வெட்டுகள் தொண்டை நாட்டில் கிடைக்கின்றன. 'எம் மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீ குலசேகர பாண்டியன்' என்று இவன் புகழப் படுகின்றான்.[198] மாறவர்மன் விக்கிரம பாண்டியன் இதே காலத்தில் தொண்டை மண்டலத்தின் அரசப் பிரதிநிதியாக இருந்தான். சடையவர்மன் வீரபாண்டியன் (கி. பி. 1296-1342) என்பவனும், சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1303-1319) என்பவனும் ஒரே நேரத்தில் பாண்டிய நாட்டின் வெவ்வேறு பகுதிகளை ஆண்டு கொண்டிருந்தனர். இக்காலப் பகுதியில் (கி. பி. 1312-1313) சேரன் இரவிவர்மன் குலசேகரனுடைய கல்வெட்டுகள் காஞ்சி, பூவிருந்தவல்லி ஆகிய இடங்களில் கிடைக்கின்றன.[199]

காகதீய அரசன் பிரதாபருத்திரனின் படைத்தலைவன் முப்பிடி என்பான் சேரநாட்டு இரவிவர்மனை விரட்டித் தெலுங்கச் சோழவமிசத்தைச் சார்ந்தமானவீரன் என்பவனிடம் ஒப்படைத்தான். இது நடந்த ஆண்டு கி. பி. 1316 ஆகும்.[200] சகலலோக சக்கரவர்த்திகள் ராஜநாராயண சம்புவராயன்

(1337 - 1360) காலத்துத் திருவொற்றியூர்க் கல்வெட்டு இசுலாமியர் தொண்டை மண்டலத்தில் கி. பி. 1327இல் ஊடுருவியதைக் குறிப்பிடுகின்றது.[201] போசள மன்னன் மூன்றாம் வல்லாளன் இசுலாமியரைத் தடுத்துச் சம்புவராயர் களிடம் தொண்டை மண்டல ஆட்சியை ஒப்புவித்தான்.

மூன்றாம் வல்லாள தேவனின் வீழ்ச்சிக்குப் பிறகு அவருக்குக் கீழிருந்தவர்கள் விஜய நகர அரசை நிறுவினர். ஏறத்தாழக் கி. பி. 1361இல் இரண்டாம் குமார கம்பண்ணன் என்னும் விஜய நகர அரசன் தொண்டை மண்டலத்தைச் சம்புவராயர்களிட மிருந்து கைப்பற்றினான்.[202]

விஜயநகர அரசர் காலத்திய மயிலை

கி. பி. 1485 வரை விரூபாட்சர் விஜயநகர அரசை ஆண்டு வந்தார். அவருடைய ஆட்சிக் காலத்தில் விஜயநகர அரசின் பிரதிநிதியாகத் தொண்டை நாட்டைச் சாளுவ நரசிம்மன் என்பவர் ஆண்டு வந்தார். அவரே கி. பி. 1486இல் விஜயநகர அரசனானார். அப்போது அவருடைய பிரதிநிதியாக ஈசுவர நாயக்கர் தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்தார். கி. பி. 1491 இல் சாளுவ நரசிம்மன் இறந்த பிறகு அவருடைய படைத் தலைவன் நரச நாயக்கன் அரசனானான். இவனுக்குப் பிறகு இவன் மகன் வீரநரசிம்மன் (கி. பி, 1501-1509) ஆட்சிக்கு வந்தான். இவனுக்குப் பிறகு இவன் தம்பி கிருட்டின தேவராயர் (கி. பி. 1509-1529) ஆட்சிக்கு வந்தார்.[203]

கிருட்டின தேவராயர் ஆட்சிக் காலத்தில் காஸ்பர் கொரியா (Gosper Correa) கி. பி. 1512-1561 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியா வந்திருந்தார். - இவர் போர்த்துக்கீசியர் செயின்ட் தாமஸின் நினைவுச் சின்னங்கள் தொடர்பான செய்திகளைக் கூறியுள்ளார்.

கிருட்டின தேவராயரின் படைத்தலைவர்களில் ஒருவரான வீரநரசிங்க நாயக்கர், தமிழ்நாட்டைக் கிருட்டின தேவராயர், அச்சுதராயர் காலங்களில் (1530-1542) நிருவகித்து வந்தார். இவருடைய மறுபெயர் செல்லப்பா என்பதாகும்.[204] அச்சுத ராயர் இறந்தபிறகு கி பி. 1541இல் முதலாம் வெங்கடராயர் சில திங்கள் ஆட்சியில்இருந்தார். அவரைக் கொலை செய்துவிட்டு சாளுவராஜு திருமலை ஆட்சிக்கு வந்தார். அவரை அகற்றி விட்டுச் சதாசிவராயர் (கி. பி. 1542-1576) ஆட்சிக்கு வந்தார்.

இவருடைய கல்வெட்டு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் காணப்படுகிறது.[205] இவருடைய ஆட்சியின்கீழ் திருவல்லிக்கேணி, மயிலை இருந்து வந்தன. சதாசிவராயர் பெயருக்கு அரசராக இருந்தார். இவருடைய அமைச்சர் இராம ராயரே அரசர் போல ஆண்டு வந்தார். இவர்கள் காலத்தில் சாந்தோமில் போர்த்துக்கீசியர் வலுப்பெற்றனர்.[206] கி. பி. 1522 சமயத்தில் போர்த்துக்கீசியர் சாந்தோமில் குடியேறத் தொடங்கினர்.[207]

போர்த்துக்கீசியர் காலத்திய மயிலை

கி.பி. 1558இல் சாந்தோமில் இருந்த போர்த்துக்கீசிய பாதிரி மார்கள் பல இந்துக் கோயில்களை அழித்தனர். இதனால் பொதுவாக இந்துக்கள் கொதித்தெழுந்தனர். அந்தணர்கள் இந்த நிலையை விஜயநகர அரசர் இராமராயருக்குத் தெரிவித்து உதவி செய்யுமாறு வேண்டினர். அதுமட்டுமல்லாமல் சாந்தோமி லுள்ள போர்த்துக்கீசியரிடம் பெரும் செல்வம் இருப்பதையும் தெரிவித்தனர். இதைக்கேட்டு இராமராயர் பெரும்படையுடன் சாந்தோம் மீது படையெடுத்தார். அங்கிருந்த கிறித்தவர்களிடம் ஒரு லட்சம் பொற்காசுகள் கேட்டார். அதில் பாதித் தொகையையே போர்த்துக்கீசியர் இராமராயரிடம் தந்தனர். இராமராயர் ஐந்து சாந்தோம் தலைவர்களைப் பிணையக் கைதி களாகப் பிடித்துச் சென்றார். தான் விஜயநகருக்குத் திரும்பிய வுடன் அவர்களை விடுவித்து விட்டார்.[208]

இரண்டாம் வெங்கடராயர் காலத்தில், அவருடைய பிரதி நிதியாகத் தஞ்சையிலுள்ள நாயக்கர்கள் சாந்தோமையும் மயிலாப்பூரையும் ஆண்டு வந்தனர். தஞ்சை நாயக்கர் தன் னுடைய பிரதிநிதியாக 'அதிகாரி' ஒருவரை நியமித்திருந்தார். விஜயநகர அரசுக்குப் போர்த்துக்கீசியர்கள் கப்பம் கட்டி வந்தனர். சீசர் ஃபிரெடரிக் (Ceasar Frederick) என்பவர், கி. பி. 1567இல் சாந்தோம் முக்கியத் துறைமுகமாக விளங்கியது என்று குறிப்பிடுகின்றார்.[209] இந்தக் காலத்தில் சாந்தோமைச் சுற்றிலும் பல கிறித்தவ ஆலயங்கள் கட்டப்பட்டன. சாந்தோம் போர்த்துக்கீசியரின் வலுவான இடமாக அமைந்தது.[210]

கி. பி. 1606இல் போர்த்துக்கீசியர், மயிலாப்பூரைத் தாக்கி, அதன் அதிகாரி தங்கியிருந்த இடத்திற்குத் தீ வைத்தனர். பல

இந்துக்களைக் கொன்றனர். இதனை மயிலாப்பூர் அதிகாரி, விஜயநகர அரசர் இரண்டாம் வெங்கடராயருக்குத் தெரிவித்தார். அதனால் அரசர், போர்த்துக்கீசியர் மீது மிகவும் கோபமடைந்தார். ஆனால், போர்த்துக்கீசியர் சாந்தோம் கல்லூரி முதல்வரை விஜயநகர அரசரிடம் தூதாக அனுப்பினர். அவர் அரசரை அமைதிப்படுத்தி, அந்த அதிகாரியை மாற்றவும் செய்தார். ஆனால் கி. பி. 1611இல் சாந்தோமை முற்றுகையிட ஒரு பெரும்படையை வெங்கடராயர் அனுப்பினார். அப்போது தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்கர் தன்னுடைய அரசருக்கு எதிராகப் போர்த்துக்கீசியருக்கு உதவினார். அப்போரில் உடன்பாடு ஏற்பட்டது. போர்த்துக்கீசியர் 401 பொற்காசுகள் (Pagoda) அளிப்பதாக வாக்குறுதி அளித்தனர். இரண்டாம் வெங்கடராயர் மறைவுக்குப் பிறகு போர்த்துக்கீசியர் சாந்தோமில் பாதுகாப்புக்காகக் கோட்டை கட்டினர்.[211]

கி. பி. 1614 இல் மயிலையிலுள்ளவர்கள் சாந்தோமை முற்றுகையிட்டு அரண் எழுப்பினர். அதைப் போர்த்துக்கீசியர் மீண்டும் முற்றுகையிட்டுக் கைப்பற்றினர்.[212] கி. பி. 1614இல் இரண்டாம் வெங்கடர் மறைவுக்குப்பிறகு அவருடைய வாரிசான ஸ்ரீரங்கர் புரட்சிக்காரர்களால் கொல்லப்பட்டார். ஸ்ரீரங்கர் மகன் இராமதேவன் ஆட்சிக்கு வந்து கி. பி. 1630இல் தான் இறக்கும்வரை விஜயநகர அரசை ஆண்டு வந்தார்.[213] இதை அடுத்த காலப்பகுதியில் சென்னப்ப நாயக்கர் சென்னைப் பகுதியை ஆண்டு வந்தார். அவருடைய மகன் தமர்ல வெங்கடப்பர் அவருக்குப் பிறகு ஆளத் தொடங்கினார்.[214] கி. பி. 1642இல் மூன்றாம் வெங்கடர் இறந்தார். பிறகு மூன்றாம் ஸ்ரீரங்கர் (கி. பி. 1642-1649) விஜயநகர அரசரானார். இவரது ஆட்சியைத் தமர்ல வெங்கடப்பர் ஏற்க மறுத்தார். அதுமட்டுமல்லாமல் கோல்கொண்டா சுல்தானுடன் மறைமுகமாகச் சேர்ந்து அரசருக்கு எதிராகச் சதிசெய்தார்.[215] இவ்வாறிருக்கும் நாளில் கி. பி. 1662இல் மீர்ஜும்லா தலைமையில் கோல்கொண்டா படை சென்னையைத் தாக்கிச் சாந்தோமைக் கைப்பற்றியது.[216] கி. பி. 1672 வரை ஏறக்குறைய பதினோரு ஆண்டுகள் கோல்கொண்டா சுல்தானின் ஆட்சியின் கீழ் சாந்தோம் இருந்து வந்தது. அதன் பிறகு பிரெஞ்சுப்படைகள் சாந்தோமைக் கைப்பற்றின.[217]

கி.பி. 1672இல் அட்மிரல் டி லா ஹேய் (Admiral de la Haye) என்னும் பிரெஞ்சுக் கப்பற்படைத் தளபதி நூறு வீரர்களுடன்

மயிலாப்பூர்க் கடற்கரையில் இறங்கினார்.[218] அப்போது அங்கு இருந்த முசுலிம்படை, பிரெஞ்சுப் படையைத் தடுக்குமளவுக்கு இல்லை. பிரெஞ்சுப் படைகள் சாந்தோமைக் கைப்பற்றின. பாபா சாகிப் என்னும் முசுலிம் படைத்தளபதியால் சாந்தோமை மீட்க இயலவில்லை.[219] ரிக்லாஃப் வான் கொயென்சு (Riykloff Van Goens) டச்சுக் கடற்படையுடன் வந்து பிரெஞ்சுக் காரர்களை அகற்றிச் சாந்தோமைத் திரும்பக்கைப்பற்ற முயற்சி செய்தார். அதில் அவர் வெற்றி பெறவில்லை.[220]

இரண்டாண்டுகளுக்குப் பிறகு நடந்த போரில் அதாவது கி. பி. 1764இல், இரண்டு நிபந்தனைகளோடு பிரெஞ்சுப் படைகள் டச்சுப்படைகளிடம் சரணடைந்தன. பிரெஞ்சுக் கோட்டைக்காவற்படையை ஐரோப்பாவிற்குத் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது முதல் நிபந்தனை. சாந்தோமை முசுலிம் ஆட்சியாளரிடமே ஒப்படைக்க வேண்டும் என்பது இரண்டாவது நிபந்தனையாகும்.[221]

ஆங்கிலேயர் காலத்திய மயிலை

கோல்கொண்டா சுல்தான், பிரெஞ்சுக்காரர்கள் மீண்டும் சாந்தோமைக் கைப்பற்ற முயலுவர் என்று எண்ணி அஞ்சிச் சாந்தோம் கோட்டையை இடிக்க முனைந்தார். ஆங்கிலக் கவர்னர் லாங்ஹாரனும் (Langhorn) கோட்டையை இடிக்குமாறு வற்புறுத்தினார். டச்சுக்காரர்களும் கோட்டையை இடிக்குமாறு வற்புறுத்தினர். ஆகவே கி. பி. 1675 இல் கோட்டையை இடிக்கும் வேலை தொடங்கியது. கி பி. 1697இன் இறுதியில் அந்த வேலை முடிந்தது.[222]

போர்த்துக்கீசியர்கள் சென்னைக்கு அகற்றப்பட்டனர். கி.பி. 1686 வரை சென்னையில் இருந்தனர். சாந்தோமில் இருந்த இசுலாமிய ஆட்சியாளர் அனுமதி கொடுத்த பிறகு மீண்டும் சாந்தோம் சென்று வசிக்கத் தொடங்கினர்.[223]

கோல்கொண்டா நவாபுகள் வீழ்ந்தபிறகு மயிலாப்பூர் டெல்லியிலுள்ள முகலாயர் ஆட்சிக்கு உட்பட்டது. முகலாயப் பேரரசர் ஔரங்கசீப், சுல்பிகார்கான் (Zulficar khan) என்பவரைக் கர்நாடக நவாபாக ஆக்கினார். கர்நாடக நவாப் ஆட்சியின் கீழ் மயிலை வந்தது. கி. பி. 1700இல் தாவூத்கான் கர்நாடக நவாப் ஆனார். கி. பி. 1699இல் தாவூதகான், நவாப்

சுல்பிகர்கானின் தளபதியாக இருந்தபோது சாந்தோம் வந்து ஒருவாரம் தங்கியிருந்தார்.

கி. பி. 1701 இல் தாவூத்கான், 10,000 குதிரைப்படை, காலாட்படை வீரர்களுடன் சாந்தோம் வந்தார். சென்னையை முற்றுகையிட்டார். ஆங்கிலேயர்களிடம் ரூ25,000/- பெற்றுக் கொண்டு, மேலும் கொள்ளையடித்த பொருள்களையும் எடுத்துக் கொண்டு திரும்பிச் சென்றார். கி. பி. 1706இலும் தாவூத்கான் சாந்தோமில் வந்து தங்கியிருந்தார்.[224] கி. பி. 1710 இல் சததுல்லாகான், முகலாய அரசால் கர்நாடக நவாபாக நியமிககப் பெற்றார். கி. பி. 1732இல் தான் இறக்கும்வரை நவாபாக இருந்தார்.[225] நிஜாமின் தலைமையின் கீழ்க் கர்நாடக நவாபுகள் மயிலையை ஆட்சி செய்தனர். சததுல்லா கானிற்குப் பிறகு அவர் மகன் தோஸ்த் அலி நவாபாக ஆனார். அவர் மராட்டியர் களுடன் செய்த போரில் மரணமடைந்தார். அவர் மகன் சுப்தர் அலி, அவருடைய மைத்துனரால் வேலூரில் கொலை செய்யப் பட்டார்.

கி. பி. 1743-44இல் நிஜாம் அவர்கள் கோஜா அப்துல்லா கானை நவாப்பாக்கினார், அவரில்லாத காலங்களில் அவர் மகன் கோஜா நாமா ஃபுட்டா கான் கர்நாடக நவாப் பொறுப்பில் இருந்தார். பிறகு கி. பி. 1744 இல் அன்வருத்தீன் கர்நாடக நவாப் ஆனார். மயிலாப்பூர் அவில்தார் என்னும் முகமதிய அதிகாரியின் நேரடிப் பொறுப்பில் இருந்தது. மாவட்ட அதிகாரி ஃபௌஞ்தார் எனப்பட்டார். அவில்தாராக ஹாஜி முகமதலி என்பவர் இருந்தார்.

கி. பி. 1697 இல் போர்த்துக்கீசியர்களுடைய சாந்தோம் கோட்டையை இடித்த பொருள்களைக் கொண்டு அவில் தாருக்குப் புதிய வீடு கட்டப்பட்டது. கி. பி. 1712இல் ஃபௌஞ் தாராகயிருந்த பீர்ஜூத்தா செய்த கொடுமையால் போர்த்துக் கீசியர் சாந்தோமை விட்டு வெளியேறிச் சென்னை சென்று வசிக்கத் தொடங்கினர்.[226] முகலாயர் ஆட்சியின் கீழ் மயிலை வந்த பிறகு பல முக்கிய அதிகாரிகள் மயிலைக்கு வந்திருக்கின் றனர். கி. பி. 1697 இல் திவானும் பக்சியும் வந்தனர். தாவூத் கான் மயிலையில் மூன்று மாதங்கள் தங்கியிருந்தார்.[227] கி. பி. 1719இல் சததுல்லாகானின் அமைச்சரான துக்கணாராய் மயி லைக்குவந்து சூரிய கிரகணத்தின் போது கடலில் குளித்தார்.[228] கி. பி. 1735இல் நவாப் குடும்பத்தைச் சேர்ந்த பலர் மயிலையில்

இருந்தனர். சுப்தர் அலி நவாப் அடிக்கடி மயிலை வந்திருக்கிறார். கி. பி. 1743இல் கோஜா அப்துல்லாகான் மயிலைக்கு வருகை தந்தார். நவாப் அன்வருத்தீன் கி. பி. 1745இல் தன்னுடைய திவான் சம்பத்ராவுடன் மயிலை வந்திருந்தார்.[229]

கி. பி. 1746 இல் சென்னையைப் பிரெஞ்சுப் படைகள் முற்றுகையிட்டுக் கைப்பற்றின.[230] மஃப்யூஸ்கான் தலைமையில் நவாப்படை, பிரெஞ்சுப் படைக்குப் பாண்டிச்சேரியிலிருந்து மேலும் உதவிப்படை வருவதைத் தடுப்பதற்காக அடையாற்றின் வடக்குக் கரையில் பீரங்கிகளை நிறுவி எதிர்த்தது. பிரெஞ்சுப் படைகள் அதை மீறி ஆற்றைக் கடந்தன. நவாப் படைகள் பின்வாங்கி ஆற்காடுசென்றது. மஃப்யூஸ்கான் தப்பியோடினார். இந்தப்போரில் பெரிய முகமதியப்படை ஒரு சிறு ஐரோப்பியப் படையால் தோற்கடிக்கப்பட்டது.[231]

பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில், மயிலாப்பூரும் ஆங்கிலேயர் வசம் வந்தது. 15 - 8 - 1749 இல் பாஸ்காவென் (Boscawen) மயிலாப்பூர் பொறுப்பை ஏற்றார்.[232]

முதலில் ஆங்கிலேயர் மயிலாப்பூரைப் பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து பெற்றனர். பிறகு கி. பி. 1758இல் நவாப் முகமது அலி மயிலாப்பூரில் தங்கியிருந்த போது அதை முறையான கொடையாகப் (Formal Grant) பெற்றனர்.[233] சென்னையைக் கி. பி. 1758 இல் லாலி என்னும் பிரெஞ்சுப் படைத் தளபதி முற்றுகையிட்ட போது சாந்தோமையும் கைப்பற்றினார். கி. பி. 1759இல் பிரெஞ்சுப் படைகள் முற்றுகையைக் கைவிட்டன.[234] ஆங்கிலேயருக்கு முறையான கொடையாக மயிலாப்பூர் வழங்கப் பட்டதை முகலாய அரசு 12-8-1765 இல் உறுதி செய்தது.[235] மைசூரிலிருந்து ஹைதர் அலி இரண்டுமுறை சென்னை மீது படையெடுத்த போது மயிலாப்பூரையும் தாக்கினான். ஹைதர் அலியின் 17வயது நிரம்பிய மகன் திப்பு கி. பி. 1767இல் சாந்தோமையும் சுற்றியுள்ளகிராமங்களையும் தாக்கிக்கொள்ளையடித்தான்.[236] கி பி 1769இல் ஹைதர்அலி இரண்டாம் முறை சென்னை மீது படையெடுத்தபோது சாந்தோமையும் சுற்றியுள்ள கிராமங்களையும் தாக்கிக் கொள்ளையடித்துச் சென்றான்.[237] கி. பி, 1780 ஆம் ஆண்டிலும், கி. பி. 1782 ஆம் ஆண்டிலும் மீண்டும் ஹைதர் அலி சாந்தோமின் மீது படையெடுத்துக் கொள்ளையடித்துவிட்டுச் சென்றான்,[238]

இவ்வாறு மயிலாப்பூர் கி. பி. 1749 இல் பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் வந்தது. கி.பி. 1758இல் கர்நாடக நவாப்பிடமிருந்து தானமாகப் பெறப்பட்டது. அந்தத் தானத்தை முகலாய அரசு 12-8-1765 அன்று உறுதி செய்தது. இருந்தபோதிலும்19-7-1819இல் அஜிம்-உத்-தௌலா, ஆங்கில அரசிடம் மயிலையை ஒப்படைக்கும் வரை 'ஜாகிராக' அவரால் அனுபவிக்கப்பட்டு வந்தது. இவ்வாறாகக் கி.பி.1819 இல் முழுமையாக நேரடியாகத் திருமயிலை ஆங்கில அரசின் கீழ் வந்தது,

ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பிறகு அரசியல் மாற்றங்கள் இல்லாததாலும், கி. பி. 1947 இல் இந்தியா விடுதலை பெற்றதாலும் திருமயிலையில் அரசியல் வரலாறு ஆங்கில அரசின் கீழ் வந்ததோடு நிறைவு பெறுகின்றது,

இங்ஙனம் மிகப் பழங்காலந் தொட்டே மயிலாப்பூர் வரலாற்றுச் செய்திகளோடு பெரிதும் தொடர்புடைய நகரமாகவே விளங்கி வந்துள்ளது. பிற்காலத்திலும் பல்வேறு சமயங்களைக் கொண்டு விளங்குகின்ற நகரமாய் அமைந்தது,

சமுதாயநிலை

ஒருநாட்டின் அரசியல் வரலாறு இலக்கியவரலாறு ஆகியவை அங்குள்ள சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒரு நாட்டிலுள்ள மக்களின் சாதிப் பிரிவுகள், தொழில், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், பொருளாதார நிலைமை, கடவுள் நம்பிக்கை, கல்வி, வாணிகம், அறப்பணி, பெண்கள், ஆடை, அணிகள், கலைகள், விழாக்களின் மூலமாகச் சமுதாய நிலையை அறியலாம். பல்லவர் காலத்திலிருந்து இக்காலம் வரையிலான திருமயிலையின் சமுதாய நிலையை அரசியல் வரலாற்றைக் கூறும் நூல்களினாலும், இலக்கியங்களினாலும் அறிய முடிகின்றது.

சாதிப் பிரிவுகள்

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருமயிலையில் வாழ்ந்த மக்களில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் பிரிவினர் இருந்து வந்ததை அறியலாம். சிவநேசர் போன்ற பெருஞ்செல்வர்கள் வணிக சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

பழக்க வழக்கங்கள்

பெரியவர்கள் ஓர் ஊருக்கு வருகை தரும்போது நடைப் பந்தலிடும் வழக்கம் இருந்து வந்ததை, திருவொற்றியூரிலிருந்து திருமயிலை வரை திருஞான சம்பந்தருக்காகச் சிவநேசர் நடைப் பந்தலிட்டதால் அறியலாம்.[239]

நம்பிக்கை

அங்கம் பூம்பாவை வரலாற்றால், அக்கால மக்களுக்கு அற்புதச் செயல்களை நம்பும் பழக்கம் இருந்து வந்ததை அறிய முடிகின்றது.

திருவிழாக்கள்

கபாலீசுவரர் கோயிலில் பெருஞ்சோற்று விழா, ஐப்பசி ஓண விழா, கார்த்திகை விளக்கீடு நாள், ஆதிரை நாள், தைப்பூசம், கடலாட்டு விழா, பங்குனி உத்திரநாள் விழா, அட்டமி நாள் விழா, பொற்றாப்பு விழா, பெருஞ்சாந்தி விழா ஆகிய விழாக்கள் நடைபெற்றன.[240]

சமயநிலை

திருமயிலையில் சமண சமயத்தினர் இருந்தனர்; சைவ சமயம் தழைத்தோங்கியது; வைணவ சமயம் சிறப்புற்றிருந்தது என்னும் செய்திகளைச் சம்பந்தர், அப்பர், பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரின் பாடல்கள் உணர்த்துகின்றன.

நகர் அமைப்பு

திருமயிலையில் பெரிய மாளிகைகள் இருந்தன. திருமயிலை அழகிய மாடவீதிகளை உடையதாக இருந்தது.[241] அக்காலத்தில் துறைமுகப் பட்டினமாகவும் விளங்கியது.[242]

மகளிர் நிலை

திருமயிலையிலுள்ள மகளிர் அழகு நிறைந்தவர்களாக இருந்தனர் என்பதைச் சம்பந்தர், அப்பர், திருமங்கையாழ்வார் ஆகியோர் பாடல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன.[243] திருமணத் திற்கு முன் மகளிரைக் கன்னிமாடத்தில் இருத்தும் பழக்கம் இருந்து வந்தது.[244]

அறப்பணி

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் திருமயிலையில் வாழ்ந்த மக்கள் அறப்பணி செய்யும் உள்ளம் கொண்டவர்களாக இருந்தார்கள். திருமயிலார்ப்பில் இறையான்சேரி வெம்பன் குணுங்கனம்மன், திருவொற்றியூர் மகாதேவர் கோயிலுக்குத் திருவிளக்கு வைக்கப் பதினைந்து கழஞ்சு பொன் கொடுத்தார் என்னும் கல்வெட்டுச் செய்தி இதனை உணர்த்துகிறது.[245]

உழவுத்தொழில்

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் நீர்ப்பாசனத்திற்காகப்பெருங் கிணறுகள் வெட்டப்பட்டதால், உழவுத்தொழில் ஏற்றம் பெற்றிருந்தது என்பதைச் சோழர் காலத்துக் கிணறு உணர்த்து கிறது.[246]

கி. பி. பத்தாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலான சமய நிலை

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் திருமயிலையில் இருந்த மக்களில் ஒரு சாரார் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் என்பது திருமயிலையில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தர் சிலைகளால் தெரியவருகிறது.[247] கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் திருமயிலையில் சமண சமயம் நிலவியது என்பதை நேமிநாதம், திருநூற்றந்தாதி ஆகிய நூல்களால் அறியலாம். கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டிலும் திருமயிலையில் சமண சமயம் இருந்ததைத் திருக்கலம்பகம் என்னும் சமண இலக்கியமும், நேமிநாதர் கோயில் கல்வெட்டும் உணர்த்துகின்றன.[248]

இக்காலப் பகுதியில் போர்த்துக்கீசியர் வருகைக்குப் பின்னர்ச் சமய மாற்றம் செய்யப்பட்டதால் இந்துக்களில் பலர் கிறித்தவ சமயத்தைத் தழுவினர்.[249]

கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் சமுதாயநிலை

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் திருமயிலையில் இசுலாமியர்கள் இருந்திருக்கின்றனர்.[250] இக்காலப் பகுதியில் போர்த்துக்கீசியர் கொடுமை தாங்காமல் சமணர் மயிலையை விட்டு நீங்கிச் சென்றனர்.[251] இந்நூற்றாண்டின் இறுதியில் திருமயிலையில் காபாலிகர், அந்தணர், சைவசமயத்தவர், புலவர்,

யோகியர், தேவாரம் ஓதுவார், சிவனடியார், அறிஞர், சுடர்த் தீபம் நிறைப்போர், சைவ வேளாளர், கொம்பு ஊதுவோர், கண் காணியோர், தேவரடியார், கைக்கோளர் முதலியோர் கபாலீசுவரர் திருவீதி உலா வரும்போது சூழவந்தனர் என்று திருமயிலை உலா குறிப்பிடுகின்றது.[252] இதனால் அக்காலத்துச் சைவ சமயத்தைச் சார்ந்த சாதிப்பிரிவுகளைப் பற்றி அறியலாம். இக்காலப்பகுதியில் கபாலீசுவரர் மீது பல சிற்றிலக்கியங்கள் பாடப்பட்டன. திருமயிலையில் இருந்த மக்கள் நெசவுத் தொழிலை மேற்கொண்டிருந்தனர். கி. பி. 1647இல் பஞ்சம் ஏற்பட்டுச் சாந்தோமில் பலர் மாண்டனர்.[253] போர்த்துக் கீசியர்கள் சாந்தோமில் இருந்த இந்துக்கோயில்கள், சமணர் கோயில்கள் ஆகியவற்றை இடித்துத் தள்ளினர்.[254]

பதினேழாம் நூற்றாண்டுச் சமுதாயநிலை

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுலாமியர் கொடுமை யால்போர்த்துக்கீசியர் சாந்தோமை விட்டு நீங்கிச் சென்னைப் பட்டினம் சேர்ந்தனர்.[255] சாந்தோமில் ஆங்கிலேயர்களும் இசுலாமியரும்,திருமயிலையில் இந்துக்களும் வாழ்ந்து வந்தனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கி. பி. பதினாறாம் நூற் றாண்டின் இறுதியில் இப்போதுள்ள கபாலீசுவரர் கோயிலை நாட்டு முத்தியப்ப முதலியார் கட்டினார்.[256] புதிதாகக் கட்டப் பட்ட கபாலீசுவரர் கோயில் கி. பி. 1672இல் புகலிடமாகவும், தற்காப்பு அரணாகவும் பிரெஞ்சுப் படைகளால் பயன்படுத்தப் பட்டது.[257]

இக்காலப்பகுதியில் கபாலீசுவரர் கோயில் குளம் வெட்டப் பட்டது. இது தொடர்பான மரபுவழிச் செய்தியால், முசுலிம் மன்னர்களுக்கு இந்து முதலியார் துபாஷாக இருந்த செய்தியும், இந்துக்களும் இசுலாமியர்களும் மன்னர் முயற்சியால் ஒற்றுமைப் படுத்தப்பட்டு, குளத்தில் முகரம் பண்டிகைக்கு முதலிடம் கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டதும் தெரியவருகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டுச் சமுதாயநிலை

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் இருமுறையும், பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருமுறையுமாக மொத்தம் நான்கு முறைகள் ஹைதர்அலி திருமயிலையின் மீது

படையெடுத்து வந்து கொள்ளையடித்துத் தீக்கிரையாக்கிச் சென்றான். இதனால் மக்கள் வறுமையால் வாடினார்கள்.[258]

பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து விஜயநகர அரசர், போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், இசுலாமியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோரின் ஆதிக்கத்தில் மாறிமாறி இருந்ததாலும் அடிக்கடி போர்கள் நடந்து வந்ததாலும் திருமயிலையில் ஒழுங்கின்மை, குழப்பம், கலவரம் ஆகியவை நிறைந்து நீதி, நேர்மை ஆகியவை இல்லாத குழப்பமான சூழ்நிலை இருந்தது, மக்கள் பெரும்பாலும் இடர்ப்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஆங்கிலேயரின் முழு ஆதிக்கத்தின் கீழ் வந்த பிறகு திரு மயிலையில் அமைதி நிலவத் தொடங்கியது.

சென்னையிலிருந்த மௌப்ரே, கிரீன்வே, பிராடி, சல்லிவன், எட்வர்டு எலியட்சு முதலான பல ஆங்கிலேய அதிகாரிகள், திருமயிலைப் பகுதியைத் தாங்கள் வசிப்பதற்கு உரிய இடமாகத் தேர்ந்தெடுத்து மாளிகைகள் கட்டி மகிழ்வோடு வாழ்ந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமுதாயநிலை

இக்காலப்பகுதியில் அந்தணர்கள், வைசியர்கள், சைவ வேளாளர்கள், கைக்கோளர்கள் ஆகிய சமூகப் பிரிவினர் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தனர். அந்தணர்கள் திரு மயிலையின் மாடவீதிகளிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் பெருமளவில் குடியேறினர். அவர்கள் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டு பெரும்பொருள் ஈட்டினர்.

இக்காலச் சமுதாயநிலை

இக்காலத்தில் சாந்தோம் பகுதியில் கிறித்தவர் வாழ் கின்றனர். கச்சேரி சாலையிலுள்ள மசூதி அருகிலும் மந்தைவெளி அருகிலுள்ள மசூதி அருகிலும், செயின்ட் மேரி சாலையிலுள்ள மசூதி அருகிலும் இசுலாமியர் வாழ்கின்றனர். தெற்கூர் செல்வ விநாயகர் தெரு, ஆடம் தெரு, அடைஞ்சான் முதலி தெரு ஆகிய தெருப்பகுதிகளில் செங்குந்த மரபினரும், கபாலீசுவரர் கோயில் மாடவீதிகள், மாதவப் பெருமாள் கோயில் தெரு, கேசவப் பெருமாள் கோயில் தெரு, வெங்கடேச அக்கிரகாரம், பசுபதி

அக்கிரகாரம் ஆகிய பகுதிகளில் அந்தணர்களும் வசிக்கின்றனர். வைசியர்கள் மாடவீதிகள், மந்தைவெளி, கச்சேரி சாலைப் பகுதிகளில் உள்ளனர்.

சாலியர் மாரிசெட்டித்தெரு, மந்தைவெளிப் பகுதிகளிலும், குயவர் குயப்பேட்டையிலும், வன்னியர் சிங்காரி நாயக்கன் தெருவிலும் வசிக்கின்றன்ர். சோழிய வேளாளர் மரபைச் சேர்ந்தவர்களும் மயிலையில் பரவலாக வசிக்கின்றனர். குஜராத்திகள் மாடவீதிகள், பெரியகடை, மந்தைவெளிப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கபாலீசுவரர் கோயிலைச் சுற்றியிருந்த தெருக்களில் தேவதாசியினர் இருந்து வந்தனர். அரசு தடைச்சட்டம் கொணர்ந்த பின்னர்த் தேவதாசி முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது.

வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுள்ள அந்தணர்களும், கலைத்துறைகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு பிரிவினரான மக்களும் திருமயிலையில் நிறைந்த அளவில் வசிக்கின்றனர், திருமயிலையில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் அரசு அலுவலகங்களில் பணி புரிகின்றவர்களாக இருக்கின்றனர். சாலியரில் ஒருசிலர் கைத்தறித் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

எல்லோரும் விரும்பிக் குடியேறும் ஊராகத் திருமயிலை இப்பொழுது விளங்குகிறது.[259]

இட விவரம்

திருமயிலை, பழங்காலத்தில் வடக்கூர், தெற்கூர் என்னும் இரு பிரிவுகளாக இருந்து வந்தது. கச்சேரி சாலையின் வடக்கில் இருப்பது வடக்கூர், தெற்கில் இருப்பது தெற்கூர். இதனை வடக்கூர் செல்வவிநாயகர் கோயில், தெற்கூர் செல்வவிநாயகர்க்கோயில் என்னும் பெயரில் கோயில்கள் இருப்பதனால் அறியலாம்.

தெற்கூருக்குத் தெற்கே உள்ள பகுதி மந்தைவெளி என்றழைக்கப்படுகின்றது. பழங்காலத்தில் மாடுகள் மேய்வதற்குரிய இடமாக இருந்த காரணத்தினால் இப்பெயர் பெற்றது என்று கூறுதல் பொருத்தமுடையதாகும். மந்தைவெளிக்குத்

தென்மேற்கே உள்ள பகுதி தற்போது இராஜாஅண்ணாமலை புரம் என்றழைக்கப்படுகிறது. செட்டிநாட்டரசர் இராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் பெயரை இப்பகுதி பெற்றுள்ளது. தென்கிழக்கே உள்ள பகுதி இராபர்ட்சன் பேட்டை என்றழைக் கப்படுகிறது. கிழக்கே உள்ள பகுதி மந்தைவெளிப்பாக்கம் என்றழைக்கப்படுகிறது.

திருமயிலையின் கிழக்கேயுள்ள கடற்கரைப் பகுதியில் வடபகுதி சாந்தோம் என்றும் பெயர் பெற்று விளங்குகிறது. செயின்ட் தாமஸ் பேராலயம் உள்ளதால் இப்பகுதி இப்பெயர் பெற்றுள்ளது. கடற்கரையின் தெற்குப்பகுதி தற்போது பட்டினப் பாக்கம் என்றழைக்கப்படுகின்றது. பழந்தமிழ்ச் சொல்லான பாக்கம் என்பதற்குக் கடற்கரையோரமாகவுள்ள ஊர் என்று பொருள்படும்.

திருமயிலையின் மேற்குப்பகுதி ஆழ்வார்ப்பேட்டை என்று வழங்குகிறது. பேயாழ்வார் கோயிலுக்குரிய நிலங்கள் இருந்ததால் இப்பெயர் பெற்றது என்று கூறுகின்றனர். திருமயிலைக்கும் ஆழ்வார்ப்பேட்டைக்கும் இடையேயுள்ள குடியிருப்புப் பகுதி அபிராமபுரம் என்றழைக்கப்படுகிறது.

திருமயிலையின் வடக்குப்பகுதி குயப்பேட்டை என்று வழங்குகிறது. குயவர்கள் பெரும்பாலோர் அப்பகுதியில் வாழ்ந்து வந்ததால் இப்பெயர் பெற்றது.

மற்றும் மாதவப் பெருமாள்புரம், காரணீசுவரர்புரம், கற்ப காம்பாள் நகர்; கபாலீசுவரர் நகர் போன்ற பல குடியிருப்புப் பகுதிகள் மயிலையில் உள்ளன. சென்னை மாவட்டத்தில் மயிலாப்பூர் ஒரு தாலுக்காவாகும். சென்னை மாநகராட்சியில் திருமயிலை 126 முதல் 135 ஈறாகப் பத்து வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.[260]

திருமயிலையில் பல பெரிய சாலைகள் உள்ளன. அவற்றின் பெயர்களுக்கான காரணங்கள் வருமாறு:

கிரீன்வேஸ் சாலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாவட்ட ஆணையராக இருந்த எட்வர்ட் கிராப்ட் கிரீன்வே பெயரால்

இச்சாலை அழைக்கப்படுகிறது.[261] இப்பொழுது விவரமறியாதவரால் பச்சைவழிச் சாலை என்று தவறாக மொழி பெயர்க்கப் பட்டுத் தமிழில் சாலையின் பெயர் எழுதப்பட்டுள்ளது. இச் சாலையில் தமிழக அமைச்சர்கள், உயர் அதிகாரிகளின் இல்லங்கள் உள்ளன.

சாந்தோம் நெடுஞ்சாலை

செயின்ட் தாமஸின் பெயரால் இச்சாலை அழைக்கப்படுகிறது.

கச்சேரி சாலை

முற்காலத்தில் காவல்துறை அலுவலகம் இருந்ததால் இப் பெயரைப் பெற்றுள்ளது.

லஸ் சர்ச் சாலை

லஸ்ஸில் உள்ள கிறித்தவ ஆலயத்தின் பெயரால் அமைந் துள்ளது.

இராயப்பேட்டை நெடுஞ்சாலை

மயிலையிலிருந்து இராயப்பேட்டையை நோக்கிச் செல்லும் சாலை இராயப்பேட்டை நெடுஞ்சாலையாகும்.

இராமகிருட்டின மடத்துச்சாலை

இச்சாலையின் தெற்கு முனையில் 'ஜேம்ஸ் பிராடி' என்ற ஆங்கில அதிகாரியின் மாளிகை இருப்பதால் முன்னர் இச்சாலை பிராடிஸ் சாலை என்றழைக்கப்பட்டது.[262] வடக்கு முனையில் இராமகிருட்டின மடம் இருப்பதால் இப்போது இப்பெயர் பெற்றுள்ளது.

எட்வர்ட் எலியட்ஸ் சாலை

இப்போது இச்சாலை டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை என்று வழங்குகிறது. இவர் இந்தியநாட்டின் மக்கள் தலைவராக பொறுப்பேற்றிருந்தவராவார்.

மவுபரீசு சாலை

முதல் அக்கவுண்ட்டண்ட் ஜெனரல் மவுப்ரே பிரபுவின் தோட்டம் அடையாற்றங்கரையில் இருக்கிறது.[263] அங்கிருந்து

செல்லும் சாலை அவர் பெயரால் மவுபரீசு சாலை என்று முன்னர் அழைக்கப்பட்டது. இப்போது டிடிகே சாலை என்று அழைக்கப்படுகிறது. டிடிகே என்பது முன்னாள் இந்திய நிதியமைச்சராக இருந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியைக் குறிப்பதாகும்.

செயின்ட் மேரி சாலை

செயின்ட் மேரி கிறித்தவ தேவாலயம் உள்ள சாலை இப்பெயரைப் பெற்றுள்ளது.

சல்லிவன் தோட்டம்

முதல் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் சர். பெஞ்சமின் சல்லிவன் என்பவரின் மாளிகை இருந்த இடம் சல்லிவன் தோட்டம் என்றழைக்கப்படுகிறது.[264] டிசில்வா சாலை, ஆலிவர் சாலை ஆகிய சாலைகளும் உள்ளன.

திருமயிலைக்கு ஆறும் அணி செய்கின்றது

அடையாறு, திருமயிலையின் தெற்கெல்லையாக உள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வரும் அதிகப்படியான நீரே இந்த ஆறாக மாறுகிறது. பழங்காலந்தொட்டு இருந்து வருகிற ஆறு என்று கூறுகின்றனர். அடை ஆறு என்று பிரித்து, எல்லோரும் தஞ்சமடையும் ஆறு அடையாறு என்றும், கடலை அடையும் ஆறு அடையாறு என்றும், அடை - சேறு, சேறு நிறைந்த ஆறு அடையாறு என்றும் பெயர் பெற்றதாகக்கூறுவர்.

மயிலை நகரின் இடையே பக்கிங்காம் கால்வாய் செல்லுகிறது. இந்தக் கால்வாயின் மீது பல பாலங்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தகுந்தது அம்பேத்கார் பாலமாகும். இதன் பழைய பெயர் ஹாமில்டன் பாலம் என்பதாகும். இதனை அம்பட்டன் வாராவதி என்று தமிழில் அழைத்துப் பின்னர் மீண்டும் ஆங்கிலத்தில் பார்பர்ஸ் பிரிட்ஜ் என்றும் அழைத்த வரலாறு உண்டு.

சைவ சமயத்தை வளர்க்கும் திருமடங்களும் மயிலையில் உள்ளன. தெற்கு மாட வீதியில் குமார தேவர் மடம், குன்றக்குடி மடம்ஆகியவை உள்ளன. தாச்சி அருணாசல முதலி தெருவில் தோப்பாசாமி மடம் உள்ளது.

கலைச் சின்னங்களான சிலைகளும் மயிலையில் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. வடமொழிக் கல்லூரி அருகே உள்ள திருவள்ளுவர் சிலையும். கடற்கரைச் சாலையில் உள்ள காந்தி சிலையும் குறிப்பி டத்தக்கவையாகும்.

மாளிகைகள் நிறைந்த ஊர் மயிலை

இராமகிருட்டின மடத்துச் சாலையின் இறுதியிலுள்ள பிராடியின் மாளிகை, சாந்தோம் நெடுஞ்சாலையிலுள்ள லீத் மாளிகை,[265] செட்டிநாடு இல்லம் ஆகியவை சிறப்புடையவையாகும்.

பாரதீய வித்யா பவன், ரசிக ரஞ்சனி சபா, மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப் ஆகிய கலையரங்குகளும் மயிலையில் உள்ளன.

அறிவுப்பசிதீர உதவும் நூலகங்கள் மயிலையில் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தகுந்தவை சீனிவாச சாஸ்திரி நூலகம், விவேகானந்தர் நூலகம் ஆகியவையாகும்.

சிறந்த கல்வி நிறுவனங்களும் மயிலையில் உள்ளன. ஆண்களுக்காக விவேகானந்தா கல்லூரியும், பெண்களுக்காக இராணி மேரி கல்லூரியும் உள்ளன.

பி. எஸ். மேல்நிலைப்பள்ளி, கேசரி மேல்நிலைப்பள்ளி, சாந்தோம் மேல்நிலைப்பள்ளி, இராணி மெய்யம்மை மேல்நிலைப் பள்ளி, லேடி சிவசாமிஅய்யர் மேல்நிலைப்பள்ளி, ரோசரி சர்ச் கான்வென்ட், ஊமை செவிடர் பள்ளி, செயின்ட் பீட்ஸ் மேல் நிலைப்பள்ளி முதலான பள்ளிகள் உள்ளன.

உடற்பிணி தீர்க்கும் மருத்துவமும் மயிலையில் உண்டு. கல்யாணி மருத்துவமனை, இசபெல்லா மருத்துவமனை, தேவகி மருத்துவமனை முதலான பல மருத்துவ மனைகள் மயிலையில் உள்ளன.

குழந்தைகளுக்கு வரும் ஈரல் குலை கட்டி நோய்களைத் தீர்க்கும் மருந்துகளை வைத்தியர் அண்ணாமலை முதலியார்,

ஜம்மி வெங்கடரமணய்யா, பிள்ளா பாப்பய்யா ஆகியோருடைய குடும்பத்தினர் அளித்து வருகின்றனர்.

வெங்கடரமணா ஆயுர்வேதக் கல்லூரியும், அமிருதாஞ்சனம் தைலம் செய்யும் தொழிற்சாலையும் மயிலையில் உள்ளன.

கலங்கரை விளக்கம், அகில இந்திய வானொலி நிலையம், இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகம் ஆகியவை அமைந்திருக்கின்ற பெருமையும் மயிலைக்குண்டு.[266]

குறிப்புகள்

1. ம. பாலசுப்பிரமணிய முதலியார், **திருமயிலாப்பூர் தல புராணம்**, ப. 2.
2. செ. வேங்கடராமச் செட்டியார், 'மயிலாப்பூர்', **கலைக் களஞ்சியம்**, தொகுதி 8, 1961, ப. 105.
3. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 164.
4. மொழியியலறிஞர், பொன். கோதண்டராமனாருடன் உரையாடியபோது பெற்ற கருத்து.
5. வி. எஸ். வி. இராகவன், **தாலமி**, 1978, ப. 88.
6. Henry Davison Love, **Vestiges of Old Madras**, London, 1913, Vol. I, p,286.
7. கி. வேங்கடசாமி ரெட்டியார் (பதிப்பு), **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**, சென்னை, 1973, பா. 3518.
8. திருநாவுக்கரசர், **தேவாரப் பதிகங்கள்,** கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1973, 6-216-பா. 1.
9. ,, 6-259-பா. 6.
10. திருஞானசம்பந்தர், **தேவாரப் பதிகங்கள்,** கழக வெளியீடு, சென்னை, 1927, 2-183-பா. 1.
11. **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**, பா-ள். 1069, 1067, 1077.
12. சுந்தரமூர்த்தி நாயனார், **தேவாரப் பதிகங்கள்,** கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1973, 7-39-பா. 8.
13. சோ. அருணாசல தேசிகர் (பதிப்பு), **நந்திக் கலம்பகம்** நான்காம் பதிப்பு, சென்னை, 1977, பா. 1.
14. ,, பா. 69.
15. C. R. Krishnamacharlu (General Editor), **South Indian Inscriptions,** Archaeological Survey of India, Madras, 1943, Vol. XII, A. R. No. 189 of 1912.
16. கே. சுப்பிரமணியம் (பதிப்பு) **பதினோராந்திருமுறை,** நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி, திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து வெளியீடு, ஸ்ரீவைகுண்டம், 1972, பா. 61.
17. **கலிங்கத்துப்பரணி**, கழக வெளியீடு, சென்னை, 1950, கண்ணி 534.
18. இரா. நாகசாமி (பதிப்பு), **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்,** தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1970, தொடர் எண் 1967/249, 1967/155.

19. தி. பட்டுச்சாமி ஓதுவார் (பதிப்பு). **திருத்தொண்டர் புராணம்**, திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு திருச்சி, *1950*, பா. *1033*.
20. " பா. *1119*.
21. கா. ர. கோவிந்தராச முதலியார் (பதிப்பு), **நேமிநாதம்**, கழக வெளியீடு, நான்காம் பதிப்பு, சென்னை *1973*, ப.2.
22. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்**, தொடர் எண் *1967*, *244*.
23. வி. எஸ். வி. இராகவன், **மார்க்கோ போலோ**, ஆறாம் பதிப்பு, சென்னை, ப. *37*.
24. **சென்னை மாநகர்க் கல்வெட்டுக்கள்**, தொடர் எண். *1967/63*, *1967/81b* *1967/81e* *1967/113*.
25. **தொல்காப்பியம்**, எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, சென்னை, *1950*. ப. *234*.
26. K. V. Raman, **The Early History of the Madras Region,** 21.
27. த. சுப்பிரமணிய பிள்ளை, (பதிப்பு), **திருப்புகழ்** (இரண்டாம் பாகம்) சென்னை, *1923*, பா-ள். *692-701*.
28. காஞ்சி திருவேங்கட முதலியார் (பதிப்பு), **திருக்கலம்பகம்** சென்னை, சுபானு, (*1883*), பா. *74*.
29. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. I, p.294.
30. ,, ,, Vol. II, p 399.
31. ,, ,, Vol I, p. 295.
32. ,, ,, Vol. I, p. 302.
33. சி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார், **மயிலாப்பூர் ஸ்ரீ ஆதி கேசவப் பெருமாள், பேயாழ்வார் கோயில் ஸ்தல புராணம்** மயிலாப்பூர், *1973*, ப. *14*.
34. மு. கோ. ராமன் (பதிப்பு). **திருமயிலை உலா**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *1983*, கண்ணி *37*.
35. ,, கண்ணி *48*.
36. ,, கண்ணி *51*.
37. ,, கண்ணி *395*.
38. ,, கண்ணி *396*.
39. ,, கண்ணி *396*.
40. ,, கண்ணி *564*.
41. ஏ. ஏகாம்பரநாதன், **கல்வெட்டில் சமணம்**, ஜைன இளைஞர் மன்றம், சென்னை, ப. *125*.
42. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol.I, p.286.

43. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்,** காஞ்சீபுரம் சபாபதி முதலியார் உரை, சென்னை, 1892, சருக்கங்கள் 6-7.
44. ,, நகரச் சருக்கம், பா. 2.
45. சி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார், **பேயாழ்வார் கோயில் ஸ்தல புராணம்,** ப. 14.
46. A. M. Paramasivanandam, 'Madras Mylapore or Thiru mayilai' ,**சமயக்கலைமலர்,** திருமயிலைக் கபாலீச்சுரம், சென்னை, 1965, ப. 103.
47. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** The Law Printing House, Mount Road, Madras 1913, p2.
48. A. M. Paramasivanandam, 'Madras Mylapore or Thirumayilai' **சமயக்கலை மலர்**, ப. 103.
49. பாலூர் கண்ணப்ப முதலியார், 'மயிலையின் மாண்பு', **சமயக்கலை மலர்,** ப. 121.
50. மொழியியலறிஞர் பொன். கோதண்டராமனாருடன் உரையாடியபோது பெற்ற கருத்து.
51. **The Hindu,** February 10, 1980.
52. வி. எஸ். வி. இராகவன், **தாலமி,** ப. 88.
53. சி. ஆர். சீனிவாஸய்யங்கார், **பேயாழ்வார் கோயில் ஸ்தல புராணம்,** ப. 32.
54. நேமிநாதம், ப. 2.
55. H. D. Love, **Vestiges of Old Madras,** Vol. II, p. 101.
56. S. Kalyanasundaram, **A Short History Of Mylapore,** p. 2.
57. ரா. பி. சேதுப்பிள்ளை, **தமிழகம் ஊரும் பேரும்,** பழனியப்பா பிரதர்ஸ், ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1976, ப. 56.
58. **தேவாரம்,** 6—216—2; **தேவாரம்** 6—259—6.
59. S. I. I. , Vol. XII, A. R. No. 139 of 1912.
60. ,,
61. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்,** தொ.எ.1967/81d
62. வி. எஸ். வி. இராகவன், **தாலமி,** ப. 88.
63. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 4.
64. Rebert Bruce Foote, **The Foote Collection of Indian Prehistoric and Protohistoric Antiquities,** Madras, 1914.

65. C. S. Srinivasachari, **History of the City of Madras**, P. Varadachary & Co., Madras, 1939, Introductory, p, XVIII.
66. மா. இராசமாணிக்கம் பிள்ளை, **பல்லவர் வரலாறு**, கழக வெளியீடு, ஒன்பதாம் பதிப்பு, சென்னை, 1977, ப. 30.
67. **தொண்டைமான் சக்கிரவர்த்தி வரலாறு**, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, எண் D 3822.
68. **புறநானூறு**, கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1952, பாடல். 97, 177.
69. K. V. Raman, **The Early History of the Madras Region**, p 9.
70. **ஆதொண்ட சக்கிரவர்த்தி வரலாறு**, அ.கீ.சு. நூ. எண். 3827.
71. மா. இராசமாணிக்கம் பிள்ளை, **பல்லவர் வரலாறு**. ப. 12.
72. **மணிமேகலை**, கழக வெளியீடு, சென்னை, 1971, வரி 172.
73. மா. இராசமாணிக்கம் பிள்ளை, **பல்லவர் வரலாறு**, ப. 31.
74. **ஆதொண்ட சக்கிரவர்த்தி வரலாறு**, அ.கீ.சு. நூ. எண். 3827.
75. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்**, தொ. எ. 1967/81b.
76. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்**, அவையடக்கம், பா. 14.
77. ,, ,, பா. 11.
78. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்**.
79. ஸ்ரீ கருட புராணம், அ. கீ. சு. நூ. நெ. D15298.
80. சி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார், **பேயாழ்வார் கோயில் ஸ்தல புராணம்**.
81. S. Kalyanasundaram, **A Short History of Mylapore**, p. 3; Fn. 3.
82. **திருத்தொண்டர் புராணம்**, சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரை, கோவைத் தமிழ்ச் சங்கம், ஐந்தாம் பகுதி, ப. 1388.
83. ஞானப்பிரகாசப் பிள்ளை, **மைலாப்பூர் கந்தப்பராசன் சரித்திரம்**, அ. கீ. சு. நூ. எண் D 2858

84. Rev. H. Hosten, S. J., **Antiquities from Santhome and Mylapore,** The Diocese of Mylapore, Madras, 1936, pp. 267-271.
85. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 120.
86. சி. ஆர். சீனிவாஸய்யங்கார், **பேயாழ்வார் கோயில் ஸ்தல புராணம்**, ப—ள். 36—43.
87. ஆ. சிங்காரவேலு முதலியார், **அபிதான சிந்தாமணி**, ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி, மறுபதிப்பு, 1982, ப. 835.
88. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, **சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**, அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசாங்கம், சென்னை, 1964, ப—ள். 103—105.
89. S. Kalyanasundaram, **A Short History of Mylapore**, pp. 15—16.
90. **வாமனாதபுரம் அல்லது பழைய மயிலாப்பூரினுடைய மகா விசேசஷித்த கைபீது**, அ. கீ. சு. நூ. எண் D 3415.
91. **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**, பா. 3518.
92. மா. இராசமாணிக்கம் பிள்ளை, **பல்லவர் வரலாறு**, ப. 318.
93. தேவாரம், 2—183—பா—ள். 1, 2, 3, 4, 5, 7, 8.
94. ,, 6—216—பா. 1. 6—259—பா. 6.
95. ,, 7—39—பா. 8.
96. **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**, பா—ள்.1069, 1076.
97. ,, பா. 1077.
98. **நந்திக் கலம்பகம்**, பா-ள். 1, 51.
99. ,, பா. 69.
100. நம்பியாண்டார் நம்பி, **திருத்தொண்டர் திருவந்தாதி** பா. 61.
101. கா. சுப்பிரமணிய பிள்ளை, **இலக்கிய வரலாறு**, இரண்டாம் பாகம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், மூன்றாம் பதிப்பு, சென்னை, 1949. ப. 331.
102. ஜெயங்கொண்டார், **கலிங்கத்துப்பரணி**, தாழிசை 521,
103. **திருத்தொண்டர் புராணம்**, திருஞானசம்பந்தர் புராணம், பா. 1033.
104. ,, ,, பா—ள்.1073, 1075.
105. ,, ,, பா. 1084.
106. ,, ,, பா. 1119.

107. **திருத்தொண்டர் புராணம்** வாயிலார் நாயனார் புராணம், பா. 1.
108. ,, ,, பா. 6.
109, **நேமிநாதம்**, பாயிர உரை, ப. 2.
110. ரா. இராகவையங்கார் (பதிப்பு), **திருநூற்றந்தாதி**, (மூலமும் உரையும்), மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை, மதுரை, 1935, பா. 1.
111. **திருக்கலம்பகம்**, பா. 74.
112. **மயிலை நேமிநாதர் பதிகம்**, நல்லறிவு மன்றம், ஆரணி, 1955.
113. **முக்குடை**, செப்டம்பர் 1979.
114. அருணகிரிநாதர், **திருப்புகழ்**, பா—ள், 692, 693, 694.
115. வி. எஸ். வி, இராகவன், **தாலமி**, ப. 88.
116. வி. எஸ். வி. இராகவன், **மார்க்கோபோலா**, ப-ள். 40—41.
117. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 20.
118. ,, p. 20.
119. ,, p. 21.
120. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. I, pp.294-295.
121. ,, ,, p. 288.
122. ,, ,, p. 302.
123. ,, ,, p 278.
124. ,, ,, pp. 278, 279.
125. ,, ,, p. 291.
126. ,, ,, pp. 292-293.
127. ,, ,, p. 293.
128. ,, ,, pp. 294, 295.
129. ,, ,, p. 297.
130. ,, ,, p. 297.
131. ,, ,, p. 303.
132. ,, ,, p. 303.
133. ,, ,, pp. 303-304.
134. ,, ,, p. 306.
135. Fr. H. Hosten, **Antiquities from Santhome and Mylapore**, p. 2.
136. ,, p. 19.
137. ,, p. 19.
138. ,, p. 19.
139. ,, p. 27.

140. **மயிலை நேமிநாதர் பதிகம்**, நல்லறிவு மன்றம், ப. 15.
141. Fr. H. Hosten, **Antiquities from Santhome and Mylapore,** p. 160.
142. ,, p 54.
143. ,, p. 175.
144. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்**, தொ. எ. 1967/241.
145. Fr. H. Hosten, **Antiquities from Santhome and Mylapore**, p. 2.
146. **தினமணி**, செப்டம்பர் 21, 1974.
147. **The Hindu**, September 27, 1974.
148. **Indian Express,** September 21, 1974.
149. **The Hindu**, December 4, 1974.
150. **The Hindu**, May 22, 1950; May 30, 1980.
151. **தினத்தந்தி**, செப்டம்பர் 24, 1982.
152. **The Hindu,** September 24, 1982.
153. **பாண்டியர் செப்பேடுகள் பத்து**, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, 1967, ப. 83.
154. ,, ப. 133.
155. ,, ப. 136.
156. **S. I. I.**, Vol. XII, A. R. No. 189 of 1912.
157. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 164.
158. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்**, தொ. எ. 1967/246.
159. ,, தொ. எ. 1967/249.
160. ,, தொ. எ. 1967/110.
161. ,, தொ. எ. 1967/242.
162. ,, தொ. எ. 1967/243.
163. ,, தொ. எ. 1967/244.
164. ,, தொ. எ. 1967/245.
165. ,, தொ. எ. 1967/241.
166. ,, தொ. எ. 1967/61.
167. ,, தொ. எ. 1967/63.
168. ,, தொ. எ. 1967/ 81b
169. ,, தொ. எ. 1967/81 e
170. ,, தொ. எ. 1967/82
171. ,, தொ. எ. 1967/113.
172. ,, தொ. எ. 1967/120.

173. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்** தொ.எ. 1967/155.
174. ,, தொ. எ. 1967/156.
175. மா. இராசமாணிக்கம் பிள்ளை, **பல்லவர் வரலாறு**, ப. 51.
176. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்** ப. 293.
177. ,, ப. 319.
178. ,, ப. 80.
179. **தேவாரம்**, 6—216—பா. 1
தேவாரம், 6—259—பா. 6.
தேவாரம், 2—183—பா. 1.
180. **நந்திக் கலம்பகம்**, பா—ள். 1, 69.
181. மா. இராசமாணிக்கம் பிள்ளை, **பல்லவர் வரலாறு**, ப. 198.
182. **S. I. I.**, Vol. XII, A. R. No. 189 of 1912.
183. **பாண்டியர் செப்பேடுகள் பத்து**, பக். 83, 133, 136.
184. **பாண்டியர் செப்பேடுகள் பத்து**, கழகம் p. xi.
185. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், **பிற்காலச் சோழர் வரலாறு** (மூன்று பாகங்கள்), அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, அண்ணாமலை நகர், 1974, ப. 25.
186. **S. I. I.**, Vol. XII, 177, 178, 179 & 181 of 1912.
187. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்**, தொ.எ. 1967/246,
188. **தினத்தந்தி**, செப்டம்பர் 24, 1982.
189. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்**, தொ. எ. 1967/242.
190. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், **பிற்காலச் சோழர் வரலாறு**, ப. 292.
191. **கலிங்கத்துப் பரணி**, தாழிசை 521.
192. திருத்தொண்டர் புராணம், சம்பந்தர் புராணம், பா—ள். 1033, 1073, 1075, 1084, 1119.

திருத்தொண்டர் புராணம், வாயிலார் புராணம், பா—ள். 1, 6.
193. **நேமிநாதம்**, பாயிர உரை, ப. 2.
194. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்**, தொ. எ. 1967/153.
195. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 88.

196. டி. வி. சதாசிவ பண்டாரத்தார், **பாண்டியர் வரலாறு.** கழக வெளியீடு, ஏழாவது பதிப்பு, சென்னை, 1969 ப. 131.
197. ,, ப. 131.
198. ,, ப. 142.
199. ,, ப. 150.
200. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 11,
201. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 96.
202. ,, p. 97.
203. ,, pp. 102—103.
204. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 14.
205. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள், தொ. எ. 1967/81 d
206. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 14.
207. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. I. p. 289.
208. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 107.
209. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. I, p. 291.
210. ,, ,, Chapter IV, Section 1.
211. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 112.
212. H. D. Love, **Vestiges of Old Madras,** Vol. I, p. 296.
213. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 114.
214. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 120.
215. ,, pp. 121—122.
216. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. I. pp. 75 & 304.
217. ,, ,, p. 306.
218. ,, ,, pp. 313—314.
219. ,, ,, p. 232.
220. ,, ,, p. 327.
221. ,, ,, p. 333.
222. ,, ,, pp. 335—337.
223. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 16.

224. C. S. Srinivasachariar, **History of the City of Madras**, pp. 120—122.
225. S. Kalyanasundaram, **A Short History of Mylapore**, p. 16.
226. ,, pp. 16—17.
227. ,, p. 17.
228. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. II, p. 179.
229. S. Kalyanasundaram, **A Short History of Mylapore**, p. 17.
230. C.S. Srinivasachariar, **History of the City of Madras**, p. 162.
231. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. II, p. 374.
232. ,, ,, p. 399.
233. ,, ,, p. 291.
234. S. Kalyanasundaram, **A Short History of Mylapore**, p. 18.
235. ,, p. 18.
236. C. S. Srinivasachariar, **History of the City of Madras**, p. 178.
237. ,, pp. 178—179.
238. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. II, pp. 200, 240 & 323.
239. **திருத்தொண்டர் புராணம்**, திருஞானசம்பந்தர் புராணம், பா. 1070.
240. **தேவாரம்**, 2—183 – பா. 1.
241. **தேவாரம்**, 6—216——பா. 1.
தேவாரம், 5—259—பா. 6.
242. **திருத்தொண்டர் புராணம்**, சம்பந்தர் புராணம், பா. 1073.
243. குறிப்புகள் 8, 9, 10, 11 காண்க.
244. **திருத்தொண்டர் புராணம்**, சம்பந்தர் புராணம், பா. 1055.
245. **S. I. I.** Vol. XII, A. R. No. 189 of 1912.
246. **The Hindu**, May 22, May 30, 1980.
247. **தினமணி**, செப்டம்பர் 21, 1974.
248. **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்**, தொ. எ. 1967/245,
249. S. Kalyanasundaram, **A Short History of Mylapore**, p. 14.
250. ,, p. 13.

251. **மயிலை நேமிநாதர் பதிகம்**, நல்லறிவு மன்றம் ப. 8.
252. மு. கோ. ராமன் (பதிப்பு), **திருமயிலை உலா**, கண்ணிகள் *189—201.*
253. **Madras Trecentenary Commemoration Volume**, p. 105.
254. S. Kalyanasundaram, **A Short History of Mylapore**, p. 14.
255. ,, p. 17.
256. மு, கோ. ராமன் (பதிப்பு), **திருமயிலை உலா**, கண்ணிகள் *116—120.*
257. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. I, p. 318.
258. C.S. Srinivasachariar, **History of the City of Madras**, pp. 178—179.
259. கள ஆய்வின் மூலம் பெறப்பட்டது.
260. ,,
261. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. III, p. 565.
262. ,, ,, p. 562.
263. H. D. Love, **Vestiges of Old Madras**, Vol. III p. 568.
264. ,, ,, p. 572.
265. ,, ,, p. 566.
266. கள ஆய்வின் மூலம் பெறப்பட்டது.

இயல் 2

இலக்கியம் போற்றும் திருமயிலை

இலக்கியம் போற்றும் திருமயிலை

சங்க இலக்கியங்களில் அரசர், கொடை வள்ளல்கள் ஆகியோரின் சிறப்புகளைக் கூறவந்த புலவர் பெருமக்கள் அவர்கடைய ஊர்களைக் குறித்தும் பாடியுள்ளனர். இந்தப் போக்குப் பல்லவர் காலத்தில் மாறியது. பல்லவர் காலம் சமய மறுமலர்ச்சிக் காலமாக இருந்ததால் பக்தி இலக்கியங்கள் தோன்றலாயின. அப்பரும், சம்பந்தரும் தமிழகத்திலுள்ள சிவத் தலங்களுக்குச் சென்று அங்குள்ள இறைவனைப் புகழ்ந்து பாடினர். அப்படிப் பாடுங்கால் அவ்வூர்களின் சிறப்புகளையும் பாடலாயினர். பிற்காலத்தில் அவ்வூர்கள் பாடல்பெற்ற தலங்கள் என்னும் பெருமையைப் பெற்றன. இதே காலத்தில் ஆழ்வார்களும் திருமால் திருப்பதிகளைப் பாடத் தொடங்கினர். இவ்வாறாகத் தமிழ் இலக்கியத்தில் ஊர்கள் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றன. இந்த ஊர்களின் பெருமை ஐயடிகள் காடவர்கோன் பாடிய சிவத்தளி வெண்பாவினாலும், சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணத்தினாலும் மேலும் பெருகியது. ஐயடிகள் காடவர்கோன் பாடிய சிவத்தளி வெண்பா பிற்காலத்தில் ஊர் வெண்பாவாக வளர்ச்சியடைந்தது. ஊர் வெண்பா வளர்ந்து தல புராணமாக மாறியது எனலாம்.

தமிழ் இலக்கியங்களில் திருமயிலை பெறுமிடத்தையும், அவை திருமயிலையின் பெருமைகளைப் பற்றிக் கூறுவதையும் இவ்வியல் விளக்குகிறது.

இதுவரை கிடைத்துள்ள சங்க இலக்கியங்களில் திரு மயிலையைப் பற்றிய குறிப்புகள் இல்லை. பல்லவர் காலத்துப் பக்தி இலக்கியங்களிலேதாம் முதன் முதலாகத் திருமயிலையைப் பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டையொட்டித் தமிழ் நாட்டில் சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றின. இசுலாமியருடைய ஊடுருவல், படை எடுப்பின் கொடுமை இவற்றின் விளைவாக இந்து சமயத்தில்

மறுமலர்ச்சி ஏற்பட்டது. இந்நிலையில் தாங்கள் வாழுகின்ற ஊரிலுள்ள கோயிலை மையமாக வைத்து இந்துக்கள் சமயப் பாதுகாப்புக்கும் ஒற்றுமை வளர்ச்சிக்கும் முயற்சி செய்தனர். புலவர்கள் தங்கள் வட்டாரங்களிலுள்ள கோயில்களின் சிறப்பை மக்களிடத்துப் பரப்புவதை ஒரு பணியாகக் கொண்டனர். இதனால் தல புராணங்களும் சிற்றிலக்கியங்களும் வட்டாரச் சார்புடையனவாகவே இயற்றப்பட்டன.

தல புராணங்கள் உண்மையில் நாடோடி (கிராமிய) க் கதைகளின் தொகுப்பாகும். சமயத் தொடர்பின் காரணமாக அவற்றின் உண்மையான மதிப்பு இன்னும் அறியப்படாமல் இருக்கிறது. ஒவ்வொரு கோயிலும் தமக்கென்று ஒரு தல புராணம் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற கருத்து காலப் போக்கில் வளர்ந்தது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பொதுமக்கள் தங்கள் தங்கள் ஊர்களைப் பற்றிப் பாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு ஏற்பப் பல தல புராணங்களைப் பாடினார் என்று டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுவது மயிலையைப் பற்றிய சிற்றிலக்கியங்களுக்கும் பொருந்தும்.[2]

திருமயிலையில் கோயில் கொண்டுள்ள கூத்தாடும் விநாயகர், கபாலீசுவரர், கற்பகாம்பாள், சிங்காரவேலர் முதலான இந்துக் கடவுளர் மீதும், நேமிநாதர் என்னும் சமண தீர்த்தங்கரர்மீதும் நூல்கள் பாடப்பட்டுள்ளன. திருமயிலையிலுள்ள ஏழு சிவன் கோயில்கள், ஏழு தீர்த்தங்கள், தல விசேடம், புராணக் கதைகள், பூம்பாவை வரலாறு, திருவள்ளுவர், திருமயிலையில் நடைபெறும் திருவிழாக்கள் முதலான செய்திகளைத் திருமயிலை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மயிலையைப் பற்றி எழுந்த இலக்கியங்கள் பெரும்பாலும் இசைப் பாடல்களாகவும், தத்துவப்பாடல்களாகவும், முன்னோர் சொன்ன கருத்துக்களையே திரும்பச் சொல்பவையாகவும் அமைந்துள்ளன. வியாசர்பாடி விநாயக முதலியார் தரும சத்திரத்தின்மீது இரண்டு மாலை நூல்கள் பாடப்பட்டுள்ளன.

தொடக்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் கபாலீசுவரர் பெருமையைக் கூறுபவையாகவும், இடைக்காலத்தில் தோன்றிய புகழ்பெற்ற இலக்கியங்கள் சிங்காரவேலர் பெருமையைக் கூறுபவையாகவும், அதற்குப் பிற்பட்ட இலக்கியங்கள் கற்பகாம்பிகை புகழ் பாடுபவையாகவும் அமைந்துள்ளன. இப்போது கற்பகாம்பிகையைப் பாடுவதே மரபாகக் காணப்படுகின்றது.

திருமயிலைத் திருத்தலத்தைக் குறிக்கும் வகையில், திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் பாசுரங்கள் உள்ளன. ஐயடிகள் காடவர் கோன், அப்பர், சுந்தரர், சேக்கிழார் ஆகியோரும் மயிலையைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளனர். சம்பந்தர் ஒரு பதிகமே பாடியுள்ளார். அருணகிரிநாதர் பத்துப் பாடல்களால் சிங்காரவேலனைப் புகழ்கிறார். உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், கோவை, அந்தாதி, மாலை, தலபுராணம், குறவஞ்சி முதலான சிற்றிலக்கிய வகைகளும், வெண்பாப் பாடல்களும், கீர்த்தனைகளும் மற்றும் பல்வேறு பதிகங்களும் திருமயிலைத் திருத்தலத்தையொட்டி எழுந்துள்ளன. திரு மயிலைச் சிற்றிலக்கியங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் அடிப்படையில் அமைந்துள்ளன.

மூர்த்தி தலம் தீர்த்தம்

மூர்த்தியே திருத்தலத்திற்குப் பெருமை தருவதாகும். திரு மயிலையில் எல்லாச் சமயத்தினருக்குமுரிய கோயில்கள் இருந்த போதிலும், இது சிவத்தலமாகவே கருதப்படுகின்றது. கபாலீசு வரர் கோயில் கொண்டுள்ள இடத்தைக் கபாலீச்சரம் என்று சம்பந்தர் கூறுகிறார்.[3] இங்குக் கோயில் கொண்டுள்ள விநாயகர் நர்த்தன விநாயகர். இறைவன் பெயர் கபாலீசுவரர்; பூம்பாவையீசர் என்னும் பெயரும் உண்டு. இறைவி பெயர் கற்பகாம்பிகை. முருகன் பெயர் சிங்காரவேலர் என்பதாகும். இத்திருக்கோயிலிலேயே இன்னும் பல்வேறு மூர்த்திகள் எழுந் தருளப் பெற்றிருந்தபோதிலும் இவையே முக்கியமானவையாகக் கருதப் பெறுகின்றன.

கபாலீசுவரர் கோயிலும், கோயிலைச் சுற்றியுள்ள ஊரும் திருமயிலை என அழைக்கப்படுகின்றது. இத்தலப்பெருமை, தல புராணங்களில் கூறப்படுகிறது. உமையம்மை மயில் வடிவில் கபாலீசுவரரைப் பூசித்து நன்மையடைந்தார். வேதங்கள் கபாலீசுவரரை வழிபட்டன. முருகப்பெருமான் சிங்காரவேல் பெற்றார். பிரமன் வழிபட்ட தலம்; சுக்கிரன் வழிபட்டுக் கண் பெற்ற தலம்; வாலி வழிபட்ட இடம்; எலும்புப் பெண்ணுருவான இடம்; திருவள்ளுவர் வாழ்ந்த இடம்; வாயிலார் நாயனார் முத்தியடைந்த தலம் என்னும் பெருமைகளைத் திருமயிலை பெற்றுள்ளது. இவ்வூரினை வேதநகர், சுக்கிரபுரி, கபாலிநகர், புன்னைவனம் என்னும் வேறு பெயர்களால் சிற்றிலக்கியங்களும்

தல புராணங்களும் குறிப்பிடுகின்றன.[4] இத்தலத்திற்குரிய விருட்சம் புன்னை மரமாகும். 'புன்னையங் கானல்' என்று சம்பந்தர் குறிப்பிடுகின்றார்.[5] திருமயிலை உலாவும், புன்னை வனம் என்று திருமயிலையைக் கூறுகின்றது.[6] சக்தி கங்கை (கபாலி தீர்த்தம்), வேத தீர்த்தம், சுக்கிர தீர்த்தம், இராம தீர்த்தம், வாலி தீர்த்தம், திரைக்கடல் தீர்த்தம், கந்த தீர்த்தம் என்னும் ஏழு தீர்த்தங்கள் திருமயிலையில் உள்ளன. இவற்றின் சிறப்பைத் திருமயிலைத் தலபுராணம் குறிப்பிடுகின்றது.[7] திருமயிலை உலாவும் இத்தீர்த்தங்களைக் குறித்துக் கூறுகின்றது.[8]

திருமயிலைக் குறிப்புகள்

சிவத்தளி வெண்பா

ஐயடிகள் காடவர்கோன் என்னும் பல்லவ அரசர் 'சிவத்தளி வெண்பா' பாடினார் என்று பெரிய புராணம் குறிக்கிறது. இவர் காலம் கி. பி. 550-575 ஆகும். இவரே மூன்றாம் சிம்ம வர்மன்[9]. சிவத்தளி வெண்பா சிதைந்த நிலையில் இன்று 11ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. இறக்கும் தருவாயில் நேரும் துன்பங்கள் அடையாமுன், இன்னின்ன தளிவாழ் இறைவனை நினை' என்று மனத்திற்கு அறிவுறுத்துவதாக அமைந்த வெண் பாக்களின் தொகுதியே 'சிவத்தளி வெண்பா' ஆகும். இப்பொழு துள்ள பாடல்கள் இருபத்து நான்கு ஆகும். அவற்றுள் ஒன்று திருமயிலையைப் பற்றியதாகும். அப்பாடலில் 'மனமே! நான் சொல்வதைக் கேள். குயில்போல் கரிய இருண்ட தலை முடியானது கொக்கைப் போல் வெளுத்து நரையாகி, இருமல் மிகுந்து புகா முன்னம், தெய்வத்தன்மை வாய்ந்த புன்னை மரத்தைக் கொண்ட திருமயிலையிலுள்ள திருப்புன்னையங் கானலில் எழுந்தருளியிருக்கும் இறைவனைச் சிந்திக்காமல் இருப்பாயானால், நீ இளைத்துச் செயலற்று இருக்க வேண்டி வரும்; ஆகவே, முதுமைக்காலம் வருமுன்னரே மயிலைத் தலத் தைச் சிந்தனை செய் என்று அறிவுறுத்தும் வகையில் அமைந் துள்ளது.

கபாலீசுவரர் இருக்குமிடத்தைத் திருப்புன்னையங்கானல் என்று இவர் குறிப்பிடுவதும், இவருக்குப் பின் வாழ்ந்த சம்பந்தர் 'மட்டிட்ட புன்னையங்கானல்' என்று குறிப்பிடுவதும் ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

இப்பாடலில் மூர்த்தி, தலம் குறிக்கப் பெறுகின்றது.

குயிலொத் திருள்குஞ்சி கொக் கொத்திருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே – மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை யங்காந் திளைத்து.[10]

நான்முகன் திருவந்தாதி

திருமழிசையாழ்வார் காஞ்சிக்கு அருகிலுள்ள திருமழிசை என்னும் திருப்பதியில் தோன்றியவர். இவர் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் தாம் இயற்றிய நான்முகன் திருவந்தாதியில், திருவல்லிக்கேணியிலுள்ள திருமாலைப் புகழ்ந்து பாடும் போது,

... ... 'நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்'

என்று குறிப்பிடுகின்றார். இவர் காலத்தில் மயிலையின் ஒரு பகுதியாகத் திருவல்லிக்கேணி இருந்தது.[11]

தேவாரம்

கி. பி. ஏழாம் நூற்றாண்டினராகிய சம்பந்தர் பாடிய 'மட்டிட்ட புன்னையங்கானல்' எனத் தொடங்கும் பதிகம், தனியாகப் பின்னர் ஆராயப்படுகிறது. சம்பந்தரின் சம காலத்தவரான திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பாடல்கள் மூன்றில் திருமயிலையைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. மற்றொரு பாடலில், காபாலி என்னும் பெயர் வருவதால் அதுவும் மயிலையைக் குறிக்கும் பாடலாகும்.[12] தேவாரம் ஆறாம் திருமுறையில் புக்க திருத்தாண்டகத்தில் முதற் பாடலில் சிவ பெருமான் சிற்றம்பலத்தில் புகுந்ததைக் கூறும்போது அப்பர் மயிலையைக் குறிப்பிடுகின்றார். 'மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பிலுள்ளார், திருமருகல், கொங்குநாட்டுக் கொடுமுடி, திருக்குற்றாலம், திருக்குடமூக்கு ஆகிய தலங்களில் உள்ள வருமான சிவபெருமான்' என்று அப்பர் குறிப்பிட்டுள்ளார்.[13] திருவதிகை வீரட்டானத்தைப் பாடும் காப்புத் திருத்தாண்டகத்தில் பன்னிரண்டு பாடல்கள் உள்ளன. சிவபெருமான் உறைந்து காவல் புரியும் தலங்களையெல்லாம் சொல்லி வரும் போது பன்னிரண்டாம் பாடலில் 'வருநீர் வளம்பெருகு

மாநிருபமும் மயிலாப்பில் மன்னினார் மன்னியேத்தும்' என்று குறிப்பிடுகின்றார்.[14] இப்பாடலினால் மயிலையின் பெயர் 'மயிலாப்பில்' என்பதும் சிவத்தலம் என்பதும் விளங்கும். திருவொற்றியூர்த் திருத்தாண்டகத்தில் ஆறாம் பாடல் அகப் பொருள் துறையில் கண்டோர் கூற்றுக் கொண்டு தலைவி கூறல் என்ற முறையில் அமைந்துள்ளது.

வடிவுடைய மங்கையுந் தாமு மெல்லாம்
வருவாரை எதிர்கண்டோம் மயிலாப்புள்ளே
செடிபடு வெண் தலையொன்றேந்தி வந்து
திருவொற்றியூர் புக்கார் தீயவாறே

என்னும் பகுதியினால், மயிலையின் பெயர் 'மயிலாப்பு' என்பதும், அங்குள்ள இறைவன் பிரம கபாலத்தை ஏந்திய கபாலீசன் என்பதும் புலப்படும்.[15]

திருக்கழுக்குன்றத் திருத்தாண்டகம் எனக் கூறப்படும் பதிகத்தில் இரண்டு செய்யுட்களே கிடைத்துள்ளன. அவைகளில் ஒன்றில் திருக்கழுக்குன்றம் பற்றிக் குறிப்பு உள்ளது. மற்றொரு பாடலில் அக்குறிப்பு இல்லை. அப்பாடலில்,

கல்லாடை புனைந்தருளுங் காபாலியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே

என முடிகின்றது. இதில் காபாலி என்று குறிப்பு வருவதால் இப் பாடல் மயிலையிலுள்ள கபாலீசுவரருக்கு உரியதாகும்.[16]

தேவாரம் பாடிய மூவரில் ஒருவரான சுந்தரர் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இவர் தாம் பாடி யுள்ள திருத்தொண்டத் தொகையில்,

துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்

என்று வாயிலார் நாயினாரைக் குறிப்பிடுகின்றார். இவர் திரு மயிலையைத் தொன்மயிலை என்று கூறுகின்றார்.[17]

பெரிய திருமொழி

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கையாழ்வாரின் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டாகும். இவர் தாம் பாடிய

பெரிய திருமொழியில் திருவல்லிக்கேணியைக் குறிக்கும் போது மூன்று பாடல்களில், திருவல்லிக்கேணி என்னும் பெயருக்கு முன்னர் மயிலை என்பதைச் சேர்த்துச் சொல்லுகிறார்.

ஒப்பவரில்லா
மாதர்கள் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே[18]
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக்கேணி கண்டேனே[19]
தென்னன் தொண்டையர் கோன்செய்த நன்மயிலைத்
திருவல்லிக்கேணி நின்றானை[20]

என்று பாடியுள்ளார். இவற்றால் அழகிய மகளிரும், மாட மாளிகைகளும் நிறைந்த ஊர் மயிலை என்பதும், தொண்டைமான் உருவாக்கிய நகர் மயிலை என்பதும் புலப்படும்.

நந்திக்கலம்பகம்

மூன்றாம் நந்திவர்ம பல்லவனின்மீது பாடப்பட்ட நூல் நந்திக்கலம்பகமாகும். இவன் வாழ்ந்த காலம் கி. பி. 847 முதல் கி. பி. 872 வரையில் என்பர். தெள்ளாறெறிந்தனும் இவனே.[21] நந்திக்கலம்பகத்தை இயற்றியவர் இன்னார் என்று தெரியவில்லை. மயிலைக்கு அரசன் நந்திவர்மன் என்பது,

ஒரு பெருங் கடவுணிற் பரவுது மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி[22]

னாகிடறு கானல் வளமயிலை யாளி[23]

என்னும் தொடர்களில் குறிக்கப்படுகின்றது. நந்திவர்மனுக்குரிய ஊர் மயிலை என்பது, 'நரபதி யெனுநந்தி நன்மயிலாபுரியில்' என்னும் தொடரால் புலப்படும்.[24]

திருவிசைப்பா

ஒன்பது சைவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு திருவிசைப்பாவாகும். இவர்களுள் ஒருவர் திருவாலியமுதனார்.

இவர் தாம் பாடிய பாடலிலே தம்மை 'அணி ஆலைகள் சூழ் மயிலை மறைவலவாலி'[25] எனச் சொல்லிக் கொள்வதால் இவருடைய ஊர் திருமயிலையாகும்.[26]

திருத்தொண்டர் திருவந்தாதி

நம்பியாண்டார் நம்பி கி. பி. 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றான திருத்தொண்டர் திருவந்தாதியில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான வாயிலார் நாயனாரைக் குறிக்கும்போது திருமயிலையில் இருக்கின்ற வாயிலார் நாயனார் என்று குறிப்பிடுகின்றார்.[27]

கலிங்கத்துப்பரணி

கலிங்கத்துப் பரணியை இயற்றிய ஜெயங்கொண்டார் கி. பி. 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவார். கூழடுதல் என்னும் பகுதியில் தொண்டைநாட்டு நகரங்களைக் குறிப்பிடும்போது மயிலையையும் ஜெயங்கொண்டார் குறிப்பிடுகின்றார்,

வண்டை வளம்பதி பாடீரே
மல்லையும் கச்சியும் பாடீரே
பண்டை மயிலையும் பாடீரே
பல்லவர் தோன்றலைப் பாடீரே[28]

என்னும் பகுதியினால் மயிலை தொன்மையான நகரம் என்பது விளங்கும்.

திருத்தொண்டர் புராணம்

சேக்கிழார் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பெரிய புராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணத்தை இவர் இயற்றினார். இந்நூலில் திருஞான சம்பந்த சுவாமிகளின் புராணத்தைச் சொல்லும்போது பூம்பாவை வரலாறு எண்பத்தெட்டுப் பாடல்களில் சொல்லப்படுகிறது.[29] மயிலையில் வாழ்ந்த வாயிலார் வரலாறு, வாயிலார் நாயனார் புராணம் என்னும் தலைப்பில் பத்துப் பாடல்களில் சொல்லப்படுகிறது.[30] மயிலையைப்பற்றிய குறிப்புகள் இவற்றில் உள்ளன.

நேமிநாதம்

எழுத்திற்கும் சொல்லிற்கும் சுருக்கமாக இலக்கணம் கூறும் நூல் நேமிநாதமாகும். இதனை இயற்றியவர் குணவீரபண்டிதர். இவர் வாழ்ந்த காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டாகும். சமணர்களுடைய இருபத்திரண்டாவது தீர்த்தங்கரராகிய நேமிநாதருடைய கோயில் மயிலையில் இருந்தது. தாம் இயற்றிய நூலுக்கு அவர் நேமிநாதம் என்னும் பெயரை வைத்திருக்கிறார். இந்நூலின் பாயிரத்துக்கு உரை எழுதிய உரையாசிரியர், 'இந்நூல் என்ன பெயர்த்தோ எனின், இந்நூல் எய்திய சிறப்பின் எழுத்தையும், சொல்லையும் மெய்தெரி வகையில் விளங்க நாடித், தேனிமிர் பைம்பொழிற் றென்மயிலாபுரி நீனிறக் கடவுள் நேமிநாதர், தம் திருப்பெயராற் செய்தமையான் நேமிநாதம் என்னும் பெயர்த்து, என்று குறிப்பிடுவர்.[31]

திருநூற்றந்தாதி

இந்நூல் மயிலை நேமிநாதர்மீது அவிரோதியாழ்வார் என்னும் சமணரால் பாடப்பெற்றதாகும். இந்நூலின் முதற் பாடல், மயிலையில் நேமிநாதர் கோயில்கொண்டிருந்தார் என்பதைக் கூறுகிறது.[32]

இந்நூல் நூறு செய்யுட்களை உடையது. இதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. இந்நூலாசிரியர் மயிலையில் வாழ்ந்தவர்.

திருக்கலம்பகம்

சமண நூலாகிய இதனை இயற்றியவர் உதீசித் தேவர் என்பவராவார். இத்திருக்கலம்பகமானது ஒரு தலம் குறித்துப் பாடப் பெறாமல் பொதுவாக அருகனைத் துதிக்கின்ற காரணத்தினால், தலப்பெயர் பெறாமல் திருக்கலம்பகம் என்னும் பெயர் பெற்றது. இந்நூலில் 110 பாடல்கள் உள்ளன. இவர் 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அருகக் கடவுளை 'மயிலாபுரி நின்றவர்' என்று கூறுகின்றார்.

மயிலாபுரி நின்றவர் அரியாசன வும்பரின்
மலர்போதி லிருந்தவர் அலர்பூவில் நடந்தவர்

என்று பாடுகின்றார்.[33]

மயிலை நேமிநாதர் பதிகம்

மயிலை நேமிநாதர் பதிகம் என்னும் நூலில் மயிலாப்பூர் பதிகம், திருமயிலாப்பூர் பத்தும் பதிகம், திருமயிலாப்பூர் ஸ்ரீ நேமி நாத ஸ்வாமி பதிகம் என்னும் மூன்று பதிகங்கள் உள்ளன.[34] இவற்றுள் மயிலை பற்றிய குறிப்புகள் உள்ளன.

திருமயிலாபுரிப்பத்து

முக்குடை என்னும் சமண இளைஞர் மன்றத்திங்கள் இதழில் 'திருமயிலாபுரிப் பத்து' என்னும் தலைப்பில் பத்துப் பாடல்கள் வெளியாகியுள்ளன.[35] இப்பாடல்களும் மயிலையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

திருப்புகழ்

கி. பி. 15ஆம் நூற்றாண்டில் சந்தப்பாடல்களால் முருகன் புகழைப் பாடியவர் அருணகிரிநாதர். சைவ சமயாசாரியார் தல யாத்திரை செய்தது போலத் தாமும் முருகனுக்குரிய தலங்களுக்குச் சென்று வணங்கும் நோக்கத்தோடு பயணம் தொடங்கினார். தொண்டை நாட்டிற்கு வந்தபோது கபாலீச்சரத்தமர்ந்த கந்தவேளாம் சிங்கார வேலனை வணங்கிப் போற்றிப் பத்துப் பாடல்கள் பாடியிருக்கிறார்.[36] அப்பாடல்களும் மயிலையைக் குறிப்பிடுகின்றன.

தொண்டைமண்டல சதகம்

கி. பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொண்டை நாட்டில் வாழ்ந்தவர் படிக்காசுப் புலவர். இவர் வரலாற்றுக் குறிப்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் தொண்டை மண்டல சதகம் என்னும் நூலைப் பாடியிருக்கிறார். மயிலையு மீசன் மகிழ்ந்த தன்றோ தொண்ட மண்டலமே என்று கபாலீசரைப் பற்றியும்,[37] மயிலைப் பதியும் சிவனேசரும் தொண்ட மண்டலமே என்று பூம்பாவை வரலாற்றையும்,[38] பிணிக்கோர் மருந்தனையார் வாயிலார் என்று வாயிலார் நாயனார் வரலாற்றையும் தம் நூலில் குறிப்பிடுகின்றார்.[39]

வைசிய புராணம்

சூடாமணிப் புலவர் அருளிச் செய்த வைசிய புராணத்தில் தொண்ணூற்றெட்டு நகரச் சருக்கத்தின் முதற் பாடலில் மயிலை

நல்லூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆயிரங் கோத்திரத் திருநாமச் சருக்கத்தின் 37 ஆம் பாடலில் 'மயிலை கிழான்' என்று குறிக்கப் பெறுகிறது. பூம்பாவை கயிலாச பதவி அடைந்த நிகழ்ச்சி, 'இப்புராணத்திற்கு மேற்கோள் — பெரிய புராணத்திற் பேறடைந்தவர் விபரங் காண்க' என்னும் தலைப்பில் ஆறாவதாக உள்ளது.[40]

சேஷத்திரக் கோவை பிள்ளைத்தமிழ்

காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் இத்தோத்திர நூலைப் பாடியுள்ளார். இவர் சிவஞான போத மாபாடியம் செய்த சிவஞான சுவாமிகளின் மாணவர் ஆவார். முருகன் மீது பிள்ளைத்தமிழ் இயற்றி அதில் ஒவ்வொரு பாடலிலும் ஒரு தலத்தையும் அதன் சிறப்பையும் கூறிச் செல்கிறார். இப்பிள்ளைத்தமிழின் 87 ஆம் பாடல் திருமயிலைக்குரியதாகும். இப்பாடல் சிறுபறைப் பருவத்தின் ஏழாவது பாடலாக அமைந்துள்ளது. 'வேதத் தமிழ் செய்த ஞான வள்ளுவர் வாழ்பதி தென் மயிலையம்பதி' என்று மயிலையைப் பற்றிய குறிப்பையும் கூறியுள்ளார்.[41]

கபாலீசுவரரைப் போற்றும் இலக்கியங்கள்

திருமயிலையை ஒட்டி எழுந்த சிற்றிலக்கியங்களை, விநாயகக் கடவுள் மீது பாடப்பட்டவை; கபாலீசுவரர் மீது பாடப்பட்டவை; கற்பகவல்லி மீது பாடப்பட்டவை; சிங்கார வேலர் மீது பாடப்பட்டவை; பூம்பாவை மீது பாடப்பட்டவை; அறுபத்துமூவர் திருவிழா மீது பாடப்பட்டது; கோலவிழியம்மன் மீது பாடப்பட்டவை; முண்டகக் கண்ணி அம்மன் மீது பாடப்பட்டவை; திருவள்ளுவர் மீது பாடப்பட்டவை; நேமிநாதர் மீது பாடப்பட்டவை; திருமயிலைத் தலத்தின் மீது பாடப்பட்டவை; சித்திரச் சத்திரத்தின் மீது பாடப்பட்டவை என்று பாகுபாடு செய்யலாம்.

இவற்றுள் கபாலீசுவரர் மீது பாடப்பட்ட சிற்றிலக்கியங்கள் பற்றி முதலில் ஆய்வு செய்யப்படுகின்றது.

திருமயிலையைப் பற்றியும் கபாலீசுவரரைப் பற்றியும் எழுந்த முதல் இலக்கியம் திருஞானசம்பந்தர் பாடிய 'மட்டிட்ட புன்னையங்கானல்' என்று தொடங்கும் பதிகமேயாகும். இப் பதிகத்தைப் பூம்பாவைப் பதிகம் என்றும் கூறுவர்.

பூம்பாவை

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சந்தித்து இறை பணியில் நின்றனர் என்று வரலாறு கூறுகிறது.[42] திருநாவுக்கரசர் மகேந்திரவர்மன் காலத்திலும், அவன் மகன் நரசிம்ம வர்மன் காலத்திலும் இருந்தவராவார். மகேந்திரவர்மன் காலம் கி. பி. 615-630 ஆகும். நரசிம்ம வர்மனின் காலம் கி.பி 630-688 ஆகும்.[43] ஆதலால், திருஞானசம்பந்தர் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்தவர் என்று கூறப் பெறுகிறது.[44]

திருஞானசம்பந்தர் சோழநாட்டினில் சீகாழிப் பதியினில் அந்தணர் மரபில், கௌணியர் கோத்திரத்தில் சிவபாத விருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் ஓர் ஆதிரை நாளில் மகனாகப் பிறந்தவர். இறைவியிடம் ஞானப்பால் உண்டு அருட் பாடல் பாடத் தொடங்கினார்.

தல யாத்திரை செய்யத் தொடங்கித் தலந்தோறும் சிவனைப் புகழ்ந்து பாடியவாறு தொண்டைநாட்டிலுள்ள திருவொற்றியூர் வந்தடைந்தார். அப்போது திருமயிலையில் சிவநேசர் என்னும் வணிகர் இறந்த தன் மகளின் எலும்புகளைக் குடத்தில் இட்டுக் காத்து வந்தவர், சம்பந்தர் வரவு அறிந்து, திருமயிலையிலிருந்து திருவொற்றியூர் அளவும் நடைப்பந்தர் துணியால் அமைத்தார். அதே நேரத்தில் திருஞானசம்பந்தரும் திருமயிலையை நோக்கிப் புறப்பட்டார். திருமயிலை வந்து சேர்ந்ததும், கபாலீச் சரத்திற்குச் சென்று கோபுரம் தொழுது உள் சென்று இறை வனை வலம் வந்து வணங்கிப் பிறகு கோயிலுக்கு வெளியே வந்தார்.

'பூம்பாவையின் எலும்புகள் அடங்கிய குடத்தைக் கோயில் திருமதிற் புறவாய் அருகே கொணர்க' என்று சம்பந்தர் கூறினார். கன்னி மாடத்திலிருந்து எலும்புக் குடத்தைச் சிவிகையுள் வைத்துக் கபாலீச்சரம் அணைந்து கோபுரத்து எதிரே, பல்லக்கிலிருந்து எடுத்து வெளியே வைத்து வணங்கினார் சிவநேசர். மயிலை நகருளார், மற்றப் பகுதியில் உள்ளவர்கள், புற சமயத்தவர், தேவர், ஏனையோர் இக்காட்சியைக் காண வந்தனர். சம்பந்தரும் பூம்பாவை பேர் செப்பி, 'மக்கள் பிறப்பினாலாய பயன் சிவனடியாருக்கு அமுது செய்வித்தலும், சிவபெருமானுடைய திருவிழாவைக் கண்டு வணங்குதலும்

என்பது உண்மையாயின் இவ்வுலகத்தார் காண எழுந்து வருவாயாக' என்னும் கருத்தமைந்த 'மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி யருளினார். அப்போது செந்தாமரையில் இலங்கும் திருமகள் போலக் குடத்தினின்று பூம்பாவை பன்னிரண்டு ஆண்டு அகவையளாக எழுந்து இலங்கினாள் என்று பெரியபுராணம் கூறுகிறது.[45]

பூம்பாவைப் பதிகம்

திருஞானசம்பந்தர் பாடிய இப்பதிகத்தில் பதினோரு பாடல் கள் உள்ளன. முதல் பத்துப் பாடல்கள் பூம்பாவையை அழைக்கும் முறையில் அமைந்துள்ளன. பதினோராம் பாடல் பதிகத்தின் பயனைக் கூறுகிறது.[46] இப்பதிகத்தில் மயிலைத் திருத்தலத் திலுள்ள மூர்த்தி பற்றியும், மயிலைத்தலம் பற்றியும், மயிலையில் நடைபெறும் விழாக்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

மூர்த்தி

திருஞானசம்பந்தர், கபாலீசுவரர் கோயிலை முதல் பத்துப் பாடல்களில் கபாலீச்சரம் என்றும், அக்கோயிலில் குடிகொண் டுள்ள இறைவனைக் கபாலீச்சரம் அமர்ந்தான் என்றும் கூறு கின்றார். கபாலீசுவரரைக் குறிப்பிடும்போது 'கைப்பயந்த நீற்றான்'[47] என்றும், 'கைப்பூசு நீற்றான்[48], என்றும், 'கடலாட்டுக் கண்டான்'[49] என்றும், 'கலிவிழாக் கண்டான்'[50] என்றும், 'தண்ணா அரக்கன் தோள் சாய்த்துகந்த தாளினான்'[51] என்றும், நற்றாமரைமேல் நான்முகனும் நாரணனும் உற்றாங்குணர்கிலா மூர்த்தி'[52] என்றும் போற்றுகின்றார்.

தலம்

திருமயிலையை 'மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை, என்றும்,[53] 'மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலை. என்றும்,[54] வளைக்கை மடநல்லார் மாமயிலை' என்றும்[55]' 'ஊர்திரை வேலையுலாவும் உயர்மயிலை' என்றும்,[56] 'மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலை' என்றும்[57], 'மடலார்ந்த தெங்கின் மயிலை' என்றும்,[58] மலிவிழாவீதி மடநல்லார் மாமயிலை' என்றும்,[59] 'கண்ணார் மயிலை' என்றும்[60] போற்று கின்றார். இவற்றால் திருமயிலை புன்னையங்கானலை உடையது என்பதும், அங்குள்ள மகளிர் அழகிய கண்களை உடையவர்

என்பதும், கடற்கரையோரமாக உள்ள ஊர் என்பதும், தென்னை மரங்கள் நிறைந்த ஊர் என்பதும், விழாக்கள் நிறைந்த ஊர் என்பதும் தெளிவாகும்.

திருவிழாக்கள்

ஆண்டு முழுக்க மயிலையில் திருவிழாக்கள் நடைபெற்று வந்தன என்பது இப்பதிகத்தால் புலனாகின்றது. பத்துப் பாடல்களில் பத்துத் திருவிழாக்களைப்பற்றிச் சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

பெருஞ்சோற்று விழா,[61] ஐப்பசி ஓண விழா.[62] கார்த்திகை நாள் விளக்கீட்டு விழா,[63] ஆதிரைநாள் விழா,[64] தைப்பூசம்,[65] மாசிக் கடலாட்டு,[66] பங்குனி உத்திர நாள்,[67] அட்டமி நாள்,[68] பொற்றாப்பு,[69] பெருஞ்சாந்தி,[70] என்னும் பத்து விழாக்கள் இப்பதிகத்தில் கூறப்பட்டுள்ளன.

இவற்றுள் கார்த்திகை விளக்கீடு, ஆதிரை நாள், தைப்பூசம், மாசிக்கடலாட்டு. பங்குனி உத்திரம் ஆகிய ஐந்தும் தமிழ் நாடெங்கும் கொண்டாடப் பெறுவதால், மயிலையிலும் சிறப்பாக நடைபெற்றன எனலாம். 'ஐப்பசி ஓண விழா ஸ்ரீ ராமபிரானால் கொண்டாடப்பட்ட செய்தி வடமொழிப் புராணம் 9ஆம் அத்தியாயத்தில் 32, 33, 34ஆம் சுலோகங்களில் கூறப்படுகிறது. ஐப்பசி ஓணத்தில் கொடியேற்றிக்கிருத்திகையில் தீர்த்தம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப் புராணத்தில் ஐப்பசி ஓணத்தைப் பத்தாவது நாள் தீர்த்தமாகக் கொண்டு விழா ஸ்ரீ இராமரால் நடத்தப்பட்ட செய்தி கூறப்படுகிறது.'[71] வைகாசித் திங்கள் சுக்கில பட்சம் அட்டமி நாளையே 'பதினெண் கணங்கள்தம் அட்டமிநாள்' என்று சம்பந்தர் குறிப்பதாகக் கொள்வதே சிறப்பாகும்.[72]

பொற்றாப்பு என்பது பொன்னூஞ்சல் என்றுபொருள்படும். மார்கழித் திங்களில் சிவன் கோயில்களில் பெருமானையும் பிராட்டியையும் ஊசலில் வைத்துப் பொன்னூசல், திருவெம்பாவை முதலியன ஓதுவதுண்டு. இதனை இக்காலத்தில் 'டோலோத்ஸவம்' என்கின்றனர். பெருஞ்சோற்று விழா அடியவர்களுக்கு உணவிடுதலைக் குறிக்கிறது. பெருஞ்சாந்தி என்பது பவித்ரோத்ஸவமாகிய சம்வத்ஸர பிராயச் சித்தம் என்று சிலரும், கும்பாபிடேகம் அல்லது குடமுழுக்கு என்று சிலரும்

கூறுகின்றனர். அக்காலத்தில், திருமயிலையில் சமணர்களும், பௌத்தர்களும் இருந்தனர் என்பது,

> உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
> இருஞ்சாக் கியர்கள்[73]

என்னும் தொடரால் புலனாகிறது.

இவ்வாறு கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருமயிலை கபாலீசுவரர் கோயிலில் நடைபெற்று வந்த திருவிழாக்களைத் தெரிந்து கொள்ள இப்பதிகம் உதவுகின்றது.

திருமயிலை உலா

உலா தனி இலக்கியமாக உருப்பெறுவதற்கு முன்னரே தனித் தனிப் பாடல்களாக இருந்திருக்கலாம் என்ற கருத்திற்கு முத்தொள்ளாயிரப் பாடல்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. சான்றாக,

> கண்டன உண்கண் கலந்தன நல்நெஞ்சம்
> தண்டப் படுவ தடமென்தோள்; கண்டாய்
> உலாஅ மறுகில் உறையூர் வளவற்கு
> எலாஅ இறை கிடந்த வாறு[74]

எனச் சேர சோழ பாண்டிய மன்னர் உலாவினையும் அவர் தமைக்கண்டு மகளிர் வேட்புற்றதையும் முத்தொள்ளாயிர நூல் காட்டுகிறது.

தொல்காப்பியர் பாடாண் திணையில்,

> ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
> வழக்கொடு சிவணிய வகைமை யான[75]

என விளக்கும் பகுதியால் உலா இலக்கியம் உருப் பெற்றது என்பர். சங்க இலக்கியங்களில் ஓரிடத்தும் 'உலா' என்ற சொல்லே காணப்படவில்லை. உலாக் காட்சியும் இல்லை.

கி. பி. 700க்குப் பின்னர்தான் சேரமான் பெருமாள் பாடிய 'திருக்கயிலாய ஞான உலா' தோன்றியது. முதன்முதலாகத் தோன்றிய உலாச் சிற்றிலக்கியம் ஆதலால் ஆதியுலா என்றும்

பெயர் பெற்றது. இவ்வுலா சைவத் திருமுறைகளுள் பதினோராம் திருமுறையுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. இதனைச் சேக்கிழார் தம் பெரிய புராணத்தில், 'திரு உலாப்புறம்' என்றழைக்கிறார்.

'ஆதிஉலா' வினை அடிப்படையாகக் கொண்டே இலக்கணம் அமைத்தனர். இறைவர்க்கெழுந்த உலாப்பிரபந்தம் பிறகு இறைவனோடொத்த அரசர்க்கும் ஆயிற்று; அடியார்க்கும் ஆயிற்று. இம்மூவகை இலக்கியங்களிலிருந்தே உலா இலக்கணம் எழுந்தது.

கபாலீசுவரர் மீது பாடப்பெற்ற நூல்களுள் சிறப்பிடம் பெறத்தகுந்தது திருமயிலை உலா என்னும் நூலாகும். இதன் ஆசிரியர் பெயரும் காலமும் தெரியவில்லை. சோபகிருது ஆண்டில், புரசை—அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கர், திருமயிலை வித்வான், சண்முகம் பிள்ளையவர் களால் பரிசோதிக்கப்பட்டு, மேற்படியூர் சு. சொக்கலிங்கம் பிள்ளையவர்களால் எம்பார் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பட்டது என்று பழைய பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமயிலை சு. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் தந்த பிரதியோடு வேறு சிலரிடத்துப் பெற்ற பிரதிகளையும் ஒப்பு நோக்கிப் பதிப் பித்ததாகத் திரு சண்முகம் பிள்ளையவர்கள் 'அறிவித்தல்' என்ற தலைப்பில் கூறுகிறார். இப்பதிப்பில்,

காசிப் பதியான் மாவேனுங் காய்ந்தா லுய்யுங்
காசிப் பதியான் கறைக்கண்டன் — பேசுபுல

என்னும் 111ஆம் கண்ணிக்குப் பிறகு 112ஆம் கண்ணியிலிருந்து 221ஆம் கண்ணி முடிய அச்சிடப்படவில்லை. அவர்களுக்குக் கிடைத்த பிரதியில் விடுபட்டுப் போயிருந்தபடியால் கிடைத்த படியே அச்சிட்டிருக்கின்றனர்.[76]

இந்தப் பதிப்பு வெளிவந்தது அறியாமல் அண்மையில் 1983 இல் விருத்தாசலம் ஸ்ரீ குமாரதேவர் வீர சைவ மடத்தைச் சார்ந்த ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ கல்யாணசுந்தர சிவப்பிரகாச தேசிக சுவாமிகளிடமிருந்து பெற்ற ஓலைச்சுவடியைக் கொண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் திருமயிலை உலாவை வெளி யிட்டுள்ளது. திரு. மு. கோ. ராமன் இதனைப் பதிப்பித் துள்ளார்.[77]

இந்தப் பதிப்பில், சண்முகம்பிள்ளைப் பதிப்பில் விடுபட்டுப் போன (112-221 கண்ணிகள்) பகுதி வெளியாகியிருப்பது

குறிப்பிடத் தகுந்ததும், போற்றத் தகுந்ததுமாகும். இப்பதிப்பில் சண்முகம் பிள்ளைப் பதிப்பில் உள்ள,

காசிப் பதியான் மாவேனுங் காய்ந்தா லுய்யுங்
காசிப் பதியான் கறைக்கண்டன் — பேசுபுல

என்னும் 111ஆவது கண்ணி காணப் பெறவில்லை.

இருந்தபோதிலும் பழைய பதிப்பில் காணப் பெறாது இப்போதைய பதிப்பில் வெளியாகியிருக்கும் கண்ணிகள் சிறப்பு வாய்ந்தவையாகும், திருமயிலையில் இப்போதுள்ள கபாலீசுவரர் கோயில் திருப்பணி வரலாறு, காபாலிகர் பற்றிய செய்திகளை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுகிறது.

உலா இலக்கணங்கள் முற்றும் அமைந்த இந்நூல் கலிவெண் பாவால் 605 கண்ணிகளைக் கொண்டு அமைந்ததாகும். உலா நூல்களில் அறுநூறு கண்ணிகட்கு மேற்பட்ட சிற்றிலக்கியம் இஃதொன்றாகும்.

நூலாசிரியர்

இவ்வுலா நூலாசிரியர் சிறந்த சிவபக்தியும் சைவ சமய நூற் புலமையும், பரந்த தமிழறிவும் வரலாற்றுணர்வும் நிரம்பியவர் என்பது நன்கு தெரிகிறது. இவர் இந்த ஒரு நூலையன்றி வேறு நூல்களும் செய்திருக்கக் கூடும் என்று எண்ணும்படி செம்மை யான தொடர்களும், எதுகைத் தொடையும், மோனைத் தொடையும், சொல் நயம் பொருள் நயம் பொலியும் சிலேடை அணிகளும் நன்கு எடுத்துக்காட்டப் பெறுகின்றன. முருகனையே பரமாகப் பாடிய தாண்டவராயர் (திருமயிலைப் பிள்ளைத் தமிழ்), அம்பலவாணக் கவிராயர் (திருமயிலைக் கோவை) ஆகிய இருவருக்கும் முன்னவராக இந்நூலாசிரியர் இருக்க வேண்டும்.

திருமயிலைக் கபாலீசுவரர் திருக்கோயில் திருப்பணி செய்யப் பெற்றவுடன் இந்நூல் பாடப் பெற்றிருக்கிறது என்பதும் இந் நூலாசிரியரை ஆதரித்த வள்ளல் நயினிப்பன் புதல்வர் முத்தியப்பன் என்பதும், இவனே 300 ஆண்டுகட்கு முன் புதிதாக மயிலைக் கோயிலைக் கட்டினான் என்பதும் தெரிய வருகிறது.[78] ஆகவே நூலாசிரியர் காலம் 16ஆம் நூற்றாண் டாகும்.

பிரெஞ்சுப் படைவீரர்கள் சாந்தோமைக் கைப்பற்றிய போது 1672இல் நடைபெற்ற போரில் அவ்வீரர்கள் இப்போதுள்ள கோயிலில் பதுங்கியிருந்தனர் என்று தெரிய வருவதால், கி. பி. 1672க்கு முன்னர், கபாலீசுவரர் கோயில் இப்போதுள்ள இடத்தில் கட்டப்பெற்றிருக்க வேண்டும்.[79] கட்டி முடித்தவுடன் திருமயிலை உலா பாடப்பெற்றிருக்க வேண்டும். ஆகவே, அருணகிரிநாதருக்குப் பிறகு மயிலையைப்பற்றிய பழைய இலக்கியமாகக் கிடைப்பது திருமயிலை உலாவேயாகும். கபாலீசுவரர் பால் கட்டற்ற பக்தியும் ஈடுபாடும் கொண்டவர் இந்நூலாசிரியர் என்பதனைத் தன்மையில் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார்.

தன்னைப் புரப்பவனே 'தரணியைப் புறப்பான்: தன்னை உயர்த்துபவனே தழைக்கும் உயிர்களையெல்லாம் உயர்த்துவான் என்ற பெரு நம்பிக்கையில் கடவுளைச் சிரத்தையுடனும் அவன் உள்ளளவும் தொழுவது சிறப்பு என்பது உலாவாசிரியர் முடிபாகும். 'என்னை இறவாமற் காக்கும் இறைவன், [80] 'என்னை உகந்தான்',[81] 'என்னை எழுபிறப்பும் ஆட்கொள்ளும் எம்பிரான்',[82] 'என்னைத்தான் ஆக்கினான்',[83] 'எனையாண்ட தோன்றல்,'[84] 'வன்சொற் படித்து மனப்பேதமை வைத்த நாயடியேன் புன்சொல் தனையும் பொறுத்தளித்தோன்',[85] 'குருவடிவாம் வந்து தமியேன் மனத்திருளை நீக்கி,[86] 'பற்பலவாம் போதப் பிறப்பிற் பிறந்துழன்ற நாயேற்குப் போதித்தருள் வழங்கும் புங்கவர்கோன்[87] என வரும் கண்ணிகளால் இதனை உணரலாம்.

தலப்பெயர்கள்

திருமயிலைத் திருத்தலத்துக்குரிய பிறபெயர்களை அமுர்த லிங்கத் தம்பிரான் போல் இவரும் வேதங்கள் பூசித்தமையால் வேதநகர், வேதபுரி என்றும்,[88] சுக்கிரன் தொழுது வழிபட்டதால் சுக்கிரபுரி என்றும்,[89] தானே முருகனாக வந்து தன்னையே பூசித்து வேல் பெற்றமையால் கந்தபுரி என்றும்,[90] பிரம கபாலத்தைக் கொண்டிருந்தமையால் கபாலீச்சரம் என்றும்',[91] புன்னை வனத்தில் கோயில் அமைந்திருப்பதால் புன்னைவனம் என்றும்[92] வழங்கும் மயிலையின் காரணப் பெயர்களை அறிய முடிகிறது.

மூர்த்தியின் கீர்த்தி

நூலின் தொடக்கத்தே ஆசிரியரே தற்கூற்றாக, இறைவனின் அரும் பெயர்களையும், எழுபருவப் பெண்டிரின் கூற்றாக மூர்த்தியின் பெரும் பெயர்களையும் சிறப்பித்துக் கூறுகிறார்.[93]

பக்திநெறி நின்ற எழுபருவப் பாவையரும் உள்ள உணர்ச்சியோடு உறவாடுகின்ற உணர்வின் மொழியில் பரம்பொருளின் திருப்பெயர்களையெல்லாம் மனமார வாய் மணக்கக் கூறி வழிபாடு செய்கிறார்கள்.

அடுத்து மடந்தை பதினெட்டாண்டுடையாள்; சற்றே இன்பந் துய்த்தவள்; உலகை உற்றறியும் ஓர்மையள்; தன்னெழிலைத் தலை முதல் தாள் வரை உணர்ந்தவள். அவள் கூற்றாகச் சிவபெருமானின் தோற்றத்தையும் இயல்பையும் நூலாசிரியர் விளக்குகிறார்.[94]

அடுத்து அரிவை இருபத்து நான்கு வயதுடையாள்; இன்பத்தில் முழுதும் திளைத்தவள்; இறைவனின் இயல்புகளை அறியும் ஏற்றத்தினள். அவள் கூற்றாகச் சிவபெருமானின் பெருமைகளும் திருவிளையாடல்களும் அருட்செயல்களும் விளக்கப்பட்டுள்ளன.[95]

இறுதியாக, மெய்யின்பத்தை விழையும் நிலையை ஓரளவு கடந்த பேரிளம் பெண்; நாற்பது வயதினள்; மெய்ப்பொருளை நாடும் மேன்மை கைவரப் பெற்றவள். அவள் கூற்றாகச் சிவ பெருமானின் சிறப்புகள் கூறப்படுகின்றன.[96]

இவ்வாறு எழு பருவப் பெண்டிரின் வாய்மொழி, ஈசனின் பேசுதற்கரிய இயல்புகளையும் சிவனின் திருப்பெயர்களையும் கூறி மகிழ்கிறார் ஆசிரியர்.

தீர்த்தச் சிறப்பு

ஐம்பூதப் படைப்பான உலகம் நீரின்றமையாது. நீர் இறைவனைப் போல் நிறமற்றது; வடிவற்றது; உலகைச் சூழ்ந்திருப்பது.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.[97]

என்னும் குறளில் வாய்மையும் நீரே என்று குறிப்பாக உணர்த்தப் படுகின்றது. ஆறும் வாவியும் வாழ்வின் மாசுதீர்த்துத் தேசுண் டாக்கும் ஆற்றலினைச் சமய நூல்கள் 'தீர்த்தம்' என்ற பெயரால் ஆர்த்தொலிக்கின்றன. திருமயிலை உலாவிலும், 'புகழ் சக்தி கங்கை எனும் காபாலி தீர்த்தக்கரை'[98], 'ஆதிமறை நாலும் அருச்சனை செய்து அன்று அமைத்த வேத தீர்த்தம்',[99] 'மீனேசன் வெள்ளி வியந்து அமைத்த தீர்த்தம்',[100] 'புகழும் இராமன் பூந்தடம்',[101] 'திகழ்வாலி தீர்த்தம்',[102] 'திரைக்கடல் தீர்த்தம்',[103] 'வந்தவினை மாற்ற வடிவேலால் அன்று அமைத்த கந்த தீர்த்தம்',[104] என்று திருமயிலையிலுள்ள ஏழு தீர்த்தங் களும் கூறப் பெறுகின்றன.

மேலும் 'செய்ய திருக் காபாலி தீர்த்தம்',[105] 'நம்பிப் படிந் தோர்க்கு நன்மை அருளே வழங்கும் உம்பர்க்கு எழும் தீர்த்தம் ஓர் எழும்',[106] 'விண் தடவும் காபாலி மெய்யத்தடம்',[107] 'வேத தீர்த்தம்,[108] கபாலித்தடம்[109] என்றும் தீர்த்தச் சிறப்பு நூலாசிரி யரால் மேலாகக் கூறப்படுகின்றது.

தமிழில் ஈடுபாடு

நூலாசிரியர் தாய் மொழியாகிய தமிழில் ஈடுபாடுடையவர். திருஞானசம்பந்தர் பாடிய தேவார அடிகளினை நாவாரக் கூறுகையில் 'மட்டிட்ட புன்னை என வாழ்த்தும் திருப்பதி கத்து-எட்டும் தமிழில் எழிற்குடத்தில் கட்டும் என்பு'[110] என்றும் ஞானசம்பந்தரைக் குறிக்கையில் 'சந்தத் தமிழ்ப் புகலித் தம்பிரான்',[111] என்றும் அருச்சுனன் வில்லால் அடிபட்ட தலை யில் முடிசூடித் திருச்செவியால் அடியார் தம் இசை முழக் கத்தைக் கேட்டதைக் கூறுகையில் 'நம்பும் அடியார் தமிழ்ச்சுவை கேட்டும்',[112] என்றும் பாடுகிறார்.

தேவார முதலிகளின் மூவர் பாடல்களைக் கேட்டமையைக் குறிக்கத் 'தேன் அனைய சொல்லால் ஒருமூவர் சொற்றிடும் தெய்வத் தமிழும்',[113] 'தேன் அமுதமாரி எனப் பெய்த திருவாசக மும் ஆரவே கேட்டருளி', என்றும்[114] 'தேர்ந்த சுவை தெள்ளித் தரும் மூவர் தேவாரம்,[115] சைவப் புலமைத் தவத்தோர் ஒரு மூவர் தெய்வத்தமிழ்',[116] என்றும் நூலெங்கும் கூறுவதால் மூவர்

தேவாரத் தமிழிலும் திருவாசகத் தமிழிலும் இவர் மூழ்கித் திளைத்தவர் என்பது நன்கு தெரிகிறது.

கவிதைச்சுவை

கவிஞனைப் பொதுவாகப் படைப்புக் கடவுளோடு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. முடிவில்லாத கவிதையுலகில் கவிஞனே படைப்பாளி என்ற கூற்றின் அடிப்படையில் இவ்வொப்புமை கூறப்படுகிறது. கடவுள் ஐம்பூதங்களைக்கொண்டு இவ்வுலகைப் படைத்தான்: கவிஞனும் வருணனை, பாத்திரப் படைப்பு, உணர்ச்சிகள், கருத்துகள், சொற்கள் ஆகிய ஐந்து கூறுகளைக் கொண்டு கவிதையுலகைப் படைக்கிறான் என்று கூறுவர். இக்கருத்து, பெயர் தெரியாத உலாவாசிரியருக்கும் பொருந்தும்.

ஆழ்ந்த உணர்ச்சியும், இனிய ஆற்றொழுக்கும் கருத்துக்கேற்ற கவியார்ந்த சொல்லமைப்புகளும் கண்ணிகள் தோறும் பின்னிப் பிணைந்துள்ளன.

நறைஇதழித்
தாமத்தான், ஆய்ச்சியர்கைத் தாமத்தால் மோதஅங்கைத்
தாமத்தான் ஓர்முறைக்கும் தாமத்தான்-நேம
மலைவில்லான் என்றும் மலைவு இல்லான் வீறும்
அலைவுஇல் ஆன்ஏற்று மலையான்,[117]

பெரிதுலகில்
பூம்பாவை தன்னைப் பொலிவுடன் உள்கொண்டமையால்
பூம்பாவை ஈசனெனும் பொற்புடையான்[118]

போன்ற ஒரு சொல் இருபொருள் சிலேடை அணிகளும், ஒன்று முதல் ஏழுவரை மகளிர் கழங்காடலைக் கூறுகையில் எண் பெயர்களை இயல்பாகக் கையாள்வதும்[119] புலவரின் சொல் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

புளிமாச்சீர்களே பொலிந்து இசையும் யாப்பும் திசை தவறாது காட்டுவதிலும்,[120]

செழுந்தவத்தோர்
சிந்திக்கும் இன்பம், தியானிக்கும் பேருருவம்
வந்திக்கும் தெய்வ மடப்பாவை

என்று அரிவைப் பருவத்தாளைச் சிறப்பிப்பதிலும் நூலாசிரியர் கருத்து நயமும், சொல்லாட்சிச் சிறப்பும் புலப்படுகின்றன.[121]

பேரிளம் பெண் வழுத்தலாக வரும் கண்ணிகளில்[122] உருவகங்கள் மூலம் இறைவனின்பால் ஆசிரியருக்கிருக்கும் பற்றும், சொல்லோட்டமும் காணக்கிடக்கின்றன.

சமூக நிலை

நூலாசிரியர் இறைப்பற்றுடன் சமுதாய நிலையையும் காட்டும் காலக் கண்ணாடியாகவும் விளங்குகிறார்.

இறைவன் திருவீதி உலா வருகையில் குழாம்களும்-எழுபருவ மங்கையரும் தொடரும் முன், ஆனித்திருவிழாக் கோலம் பூண்டு வருகையில் வீதியில் இருக்கும் பிறப்பால் வேறுபட்டிருக்கவில்லை என்றாலும் செய்தொழிலால் வேறுபட்டிருக்கும் மக்களைக் காட்டுகிறார் நூலாசிரியர். மகாவிரத வேதியர் (காபாலிகர்),[123] நான்கு வேதமுணர்ந்த அந்தணர்,[124] சைவத்திருவடியார்,[125] முத்தமிழ் கற்ற நாற்கவி வாணர்,[126] யோகியர்,[127] தேவாரம் ஓதுவோர்,[128] நேர்த்திசெய்து கொண்டவர்,[129] ஒளிவிளக்கு ஏற்றிடும் ஒண்டொடியார்,[130] ஆன்றவிந்தடங்கிய சான்றோர்,[131] இறைவன் திருமுன் கொம்பூதிச் செல்வோர்,[132] அனைத்தையும் மேற்பார்வையிடும் சைவ வேளாளர்,[133] திருக்கோயிற் சென்று ஆடும் தேவர் அடியார்,[134] செங்குந்த மரபினர்,[135] சைவ சமயத்தைச் சார்ந்தோர்,[136] என்று பல்வேறு வகுப்பினர்களைத் தொகுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர். இதனால் அக்காலத்தில் வாழ்ந்த பல்வேறு சமுதாயத்தையும் இவ்வுலா நூல் மூலம் அறிய ஏதுவாகின்றது.

மேற்கூறியவற்றால் திருமயிலையைப் பற்றி எழுந்த சிற்றிலக்கியங்களுள் தொன்மையானது திருமயிலை உலா என்பதும் இந்நூல் செறிவு மிகுந்தது என்பதும், வரலாற்றுச் செய்திகள், உள் அடங்கப்பெற்றது என்பதும் நன்கு விளங்கும்.

திருமயிலைக் கலம்பகம்

"தொல்காப்பியர் காலத்தில் இடப்பெற்ற சிற்றிலக்கிய வித்து, சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் கோவையாகச் செடியாகி, எட்டாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து, பதினோராம் நூற்றாண்டில் சதகமாகவும் பரணியாகவும் அரும்பி, பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழாக

மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் தூதாகப் பூத்துப் பதினாறாம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்துப் பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது''[137] என்னும் கூற்று இலக்கிய வகைமை வளர்ச்சியைக் காட்டும். அவ்வக் கால வளர்ச்சிக்கேற்ப இலக்கியங்களைப் படிப்படியாகப் பெற்று விளங்கிய மயிலை, திருமயிலைக் கலம்பகம் என்னும் இலக்கிய வகையையும் பெற்று விளங்கியது.

ஒ23:38.2111.M
N89

கலம்பக நூல்கள்

முதற்கலம்பகம்என்றுகருதப்படுவது நந்திக்கலம்பகமாகும். இந்நூல் எட்டாம் நூற்றாண்டில் பல்லவ மரபில் வாழ்ந்த மூன்றாம் நந்திவர்மன் மீது (கி. பி. 825—850) பாடப்பட்ட தாகும். இந்நூலை எழுதிய நூலாசிரியர் யார் என்று அறியக் கூடவில்லை. மன்னர்க்குப் பாடிய கலம்பகம் நூறு பாடல்களுக்கு மேலும் உள்ளது. அதன்பின்னர் எழுந்த கலம்பகங்கள் எவையும் மன்னர் மீதோ அமைச்சர் மீதோ பாடப்பட்டவை கிடைக்க வில்லை; கிடைக்கின்ற நூல்கள் கடவுளர் கலம்பகங்களே.

பின்னர் வந்த கலம்பக நூல்கள் அனைத்தும் கடவுளர் கோயில் கொண்ட திருப்பதிகளின் பெயர்கள் கொண்டன வாகவே உள்ளன. அவை 'திருவாமாத்தூர்க் கலம்பகம் தில்லைக் கலம்பகம், திருவரங்கக், கலம்பகம், அருணைக் கலம் பகம், திருக்கண்ணபுரக் கலம்பகம், காசிக் கலம்பகம், மதுரைக் கலம்பகம் ஆகியவை ஆகும். சமணர்களுக்குரியது திருக்கலம் பகம். நம்பியாண்டார் நம்பி பாடியது ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் என்பதாகும்.

128207

திருமயிலைக் கலம்பகம்

திருமயிலை உலாவை அடுத்து இந்த நூல் தோன்றியிருக்க வேண்டும். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதனைத் திருமயிலை வித்வான் சண்முகம் பிள்ளையவர்கள் இற்றைக்கு எண்பது ஆண்டுகட்கு முன்னர்ப் பதிப்பித்துள்ளார்.[138]

இந்நூல் மயிலைக் கபாலீசுவரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. இந்நூற் பாடல்கள் பலவும் கைக்கிளைத் துறைகளும், அன்பின் ஐந்திணையாகிய முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலைத் திணைகளின் துறைகள்

கொண்ட அகப்பொருளனவும், தேவபாணி, வெட்சி, கரந்தை வாகை முதலிய திணைகளின் துறை கொண்ட புறப்பொருளன வாகவும் அமைந்து பாட்டுடைத் தலைவரை விளக்குவது பேரின்பம் ஊட்டுவதாக இருக்கிறது.

கலம்பகத்தின் இலக்கணப்படி இறைவன் மேல் பாடப் பட்டதால் நூறுபாடல்கள் அந்தாதி அமைப்பில் படைக்கப் பட்டுள்ளது. நூலின் முழுக்கட்டமைப்பும் உற்று நோக்குகையில் சமயத்தின் நான்கு நெறிகளாகிய சரியை கிரியை யோகம் ஞானத்தின், அடிமை நெறி (தாசமார்க்கம்), நன்மகநெறி (சற்புத்திர மார்க்கம்), தோழமை நெறி (சக மார்க்கம்), நன்னெறி (சன்மார்க்கம்) ஆகியவற்றை நிலைக்களமாகக் கொண்டு இக்கலம்பகம் அமைந்துள்ளது என்றும் கூறவேண்டும்.

திருமயிலைக் கலம்பக ஆசிரியர் துறைகளை மிகுத்துப் பாடுவதும், ஒருசில துறைகளை அடுக்கிப் பாடுவதும், சந்த விருத்தத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதும் கடைமடக்கு இடைமடக்கு எனத் தம் புலமைத் திறங்களைக் காட்டுவதும் நூலாசிரியருக்கு இறைவன் பால் உள்ள பற்றினைக் காட்டு கின்றது.

மனிதருடைய உயிர் எல்லையற்ற மெய்ப் பொருளிடமிருந்து பிரிக்கப்பட முடியாதது அவ்வுயிர் எல்லையற்ற தன்மைக்குக் குறைந்த எதனையும் கொண்டு நிறைவு கொள்ளமாட்டாது. அழிவில் பொருள்கள் அடங்கிய கனவுலகில் அலைந்து திரிதலை விட்டுவிட்டு என்றும் அழியா மெய்ப்பொருளின் திருமுன்பாகிய தன் இருப்பிடத்திற்குத் திரும்புகிற வரையிலும், துன்பச்சுமை மனிதருடைய உள்ளத்தை அழுத்திக் கொண்டுதானிருக்கும்; வருத்த நிழல்கள் மக்களின் வழியை இருளடையச் செய்து கொண்டுதானிருக்கும். தன்னலப் பற்றிலிருந்து மன்னலப் பற்றுக் குரிய அனைத்து நெறிகளையே நூலாசிரியர் பல்வேறு துறை யிலும் நின்று பாடுகின்றார்.

கலம்பகத்தில் முறையே 1. ஒருபோகு, 2. புயவகுப்பு, 3. மடக்கு, 4. தவம், 5. வண்டுவிடு தூது, 6. அம்மானை, 7. மதங்கி, 8. வலைச்சியர், 9. ஆய்ச்சியர், 10. கொற்றியர், 11. பிச்சியார், 12. சித்து, 13. ஊசல், 14. குறம், 15. களி, 16. ஊர், 17. மறம், 18. காலம் (மூன்று), 19. தழை, 20. சம்பி ரதம், 21. தூது எனப் பழைய உறுப்புகளும் பாடும் புலவர் திறனுக்கேற்பப் புதிய உறுப்புகளும் சேர்த்துள்ளார்.

ஒவ்வொரு கலம்பக உறுப்பும் இறையன்பின் வேட்கையின் இறைவனிடம் கொள்ளும் உண்மையான பக்தியின் வெளிப் பாட்டின் ஒளிக்கீற்றெனலாம்.

ஆசிரியர் நூலின் காப்பாகக் கூத்தாடும் பிள்ளையாரை, அவர்வழி சிங்கார வேலவரைப் பணிந்து நூலின் முதற் பாடலிலே வண்ணக ஒத்தாழிசைக் கொச்சகக் கலிப்பாவின் எண்பத்தோர் அடிகளில் கபாலீசுவரரின் அருமை பெருமைகளை மிகவும் வித்தாரமாகப் பாடிப் பரவுகின்றார்.

யாப்பு

நூல் யாப்பிலே 1. வண்ணக ஒத்தாழிசைக் கொச்சகக் கலிப்பா, 2. வெண்பா, 3. கட்டளைக் கலித்துறை, 4. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், 5. எழுசீர்விருத்தம், 6. பதினான்கு சீர் விருத்தம், 7. எண்சீர் சந்த விருத்தம், 8. பன்னிருசீர் விருத்தம், 9. கட்டளைக் கலிப்பா, 10. ஆசிரிய வண்ண விருத்தம் (புய வகுப்பு), 11. வஞ்சி விருத்தம், 12. வேற்றொலி வெண்டுறை, 13. கலிநிலைத்துறை, 14. பதின்மூன்றுசீர் விருத்தம், 15. கலித் தாழிசை, 16. சந்தத் தாழிசை, 17. சந்த விருத்தம், 18. நேரிசை ஆசிரியப்பா, 19. நிலைமண்டில ஆசிரியப்பா என யாப்பு வகை களில் பாவும் பாவினமும் கலந்து உறுப்புக்கேற்ற வண்ணம் கையாண்டு கலம்பக உறுப்பினர் மனநிலைக்கேற்ப அமைத் துள்ளார் ஆசிரியர். கா வனம் ஒன்றாயினும் பல மலர்களும் தம் தம் மணங்களைத் தருவதைப் போல, ஒளி ஒன்றாயினும் முப்பட்டை ஆடியில் எழுவண்ணமாலை தோன்றுவது போலக் கலம்பகத்தும் பல்வேறு யாப்பினையும் பல்வேறு பாங்கில் பல்வேறு உறுப்பினர் கூற்றாகத் தருவதில் ஆசிரியர் மெய்ப் பொருளான இறைவனைப் பல்வேறு பாங்கில் பண்ணுற்ற வீணை நரம்புகளை இசைப்பது போல இசைக்கின்றார்.

கபாலீசர் பெயர்க் காரணம்

இந்நூல் கபாலீசுவரருக்கு உரியது என்பதைக் 'கயிலைக் கிறைவர் கபாலீசர் தஞ்சொற் கலம்பகம்' என்று காப்புச் செய்யுளில் நூலாசிரியரே கூறுவதால் அறியலாம்.

படைப்புக் கடவுள் பிரமனுக்குரிய ஐந்து தலைகளில் ஒன் றினை நீக்கி அதனால் கபாலீசன் என நாமந் தரித்தான் என்று

கபாலீசுவரருக்கு அப்பெயர் வந்ததற்கான காரணத்தைக் கூறு கிறார்.[139]

பெருமைகள்

சிவபெருமான் பெருமைகளைக் கூறும் முறையில், 'வேதங் கடந்து நின்றான் மேவுமயிலாபுரியான்' என்றும்,[140] 'தானவருந் தொழ மேவியிருந்த தயாநிதி நண்பர் கபாலீசர்' என்றும்,[141] 'புயங்கள் தரித்த புனிதன்' என்றும்,[142] 'போதரிக்கும் கங்கைகீழ் மயிலேசன்' என்றும்,[143] 'வாதை தீர்த்திடு மயிலை மாநகர்ப் பெருவாழ்வு' என்றும்,[144] 'அலைகடல் வருவிட முண்ட நாயகர்' 'மயிலேசர்' என்றும்,[145] 'துய்யதென்மயிலாபுரிஜயன்' என்றும்,[146] 'திருமயிலாபுரி அண்ணல்' என்றும்,[147] 'சிறந்த புன்னைவனம் விளங்கும் ஈசனார்' என்றும்,[148] 'தூய நீறணிந்த நிருமலன் என்றும்,[149] 'முரச திரு நெடுவீதிவளர் மயிலாபுரிவேதமுதல்வன்' என்றும்,[150] 'ஒளியுருவந்தனைப் படைத்த மயிலைநாதர்' என்றும்,[151] 'கால கபாலீசர்' என்றும் போற்றுகின்றார்.[152]

கற்பகவல்லியின் கணவன்

கற்பகவல்லியின் கணவன் கபாலீசுவரன் என்பதை 'கயலார் விழிக் கற்பகக் கொடி சூழ்காவே' என்றும்,[153] வாராருங் கொங்கை யுமைக்கொரு பாகம் வகுத்தளித்தார்' என்றும்,[154] 'காமரெழிற் கற்பகப்பூங்கொடியினாடுங்கபாலீசர்' என்றும்,[155] 'ஏலவார் குழல்கண் மங்கை நேசர்' என்றும்,[156] 'வாரிருக்கு முலை மலை மடந்தை மணவாள சுந்தரர்' என்றும்,[157] 'ஏவலரும் விழி யுமையாளிடப் பாகர் மயிலேசர்' என்றும் கூறிப் போற்று கின்றார்.[158]

எல்லாமாகிய பரம்பொருள் கபாலியாய், கற்பகவல்லியின் கணவனாய், கருத்தினைக் கவர்ந்திடும் நீலகண்டனாய், மலராய் அதன் மணமாய்க் கண்டுணர்த்துகிறார் ஆசிரியர்.

கலம்பக ஆசிரியர் தாம் வழிபடும் கபாலீசுவரர் வீற்றிருக்கும் இடத்தினை—அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கொண்டும் அங்கு இறைவன் திருவாட்சிச் சிறப்புகளைக் கொண்டு அழகுக்கு அழகு சேர்ப்பது போலச் சிறப்புக்கு மேலும் இறை யருள் சிறப்பைச்சேர்க்கின்றார். இறையோடும், இறைவியோடும், இறைத் தொண்டர்களோடும், இறைத் திருவிளையாடலோடும் திருமயிலை, மயிலாப்பூர், மயிலாபுரி, மயிலை மூதூர் என்றும்

புகழ்கிறார். திருமயிலையை 'மரகதப் பாசடைப் புன்னை வளர் மயிலை' என்றும்,[159] 'கயிலையிற் கவின்செய் மயிலை' என்றும்,[160] தேங்கமழு மலர்ச்சோலைத் தென் மயிலாபுரி' என்றும்,[161] 'ஆர்ந்திசை யேழுஞ் சூழ்மயிலாபுரியில்' என்றும்,[162] 'தெள்ளம் புனற் கங்கைசேர் மயிலை' என்றும்[163] 'எழில்வளம் கொள் மயிலை' என்றும்,[164] 'பொய் கலந்த மொழி சொலாத நிறைமனத்தர் மயிலை' என்றும்,[165] 'வைத்ததோர் நேசத்தார்க்கு வரும் பிறப்பதனை மாற்று நித்தன் வாழ் மயிலை மூதூர்' என்றும்[167] 'வாய்ந்த பரஞ்சுடர் தோன்றும்பொழுதுகூட வந்து தோன்றியது திருமயிலை மூதூர்' என்றும் போற்றி மகிழ்கிறார் கலம்பக ஆசிரியர்.[168]

தீர்த்தம்

'ஊர் வளத்திற்கெல்லாம் நீர்வளம் காரணம்' என்பது நாட்டுப்புற மொழி. உலகில் உயிரினம் வாழ மிகவும் தேவைப் படுவது நீராகும். நீரில்லை எனில் உலகில் உயிரினம் தலை காட்டாது. நீரே நிலவுலகைப் புரக்கும் கருவியாக அமைகிறது.

நீராடுதலால் உயிரினங்களின் புறமாசு நீங்கும். இறைவ னிருப்பிடங்களிலும் நீராடத் திருக்குளங்கள் தொட்டனர் முன்னோர். அதன் பெருமையும் புனிதமுடையதாகக் கருதப் பட்டது; கதைக்கும் உட்பட்டது. ஆகையினால்தான் கலம்பக ஆசிரியர்,

ஏராருங் கற்பகப் பூங்கொடி வாழ்த்தி
விடங்கொடு நன்குயர்ந்து வளர்ந்திட நண்பூர்ந்த
காராருங் கண்ட ருயரண்டர் போற்றுங்
கபாலீசர் சந்நிதியிற் கவினுந் தீர்த்த
நீரார வொருபோது மூழ்கித் தூய
நீறணிந்தந் நிருமலனை நினைக்கின் றோர்க
டீராத பெரும்பிறவிக் கடலின் மூழ்கித்
திளையார் களினையார்கள் சிந்தைதானே[169]

என்று தீர்த்தச் சிறப்பினை எடுத்து விளக்குகிறார்.

தனிச்சிறப்புகள்

கலம்பகங்கள் புலவர்களின் கற்பனையை இறையோடும் இயற்கையோடும் இணைத்துப் பாடுதற்குக் கிடைத்த களமாகும்.

முல்லைத்திணைக்குரிய கார்காலம் எல்லாக் கலம்பகத்திலும் எடுத்தாளப்பட்டுள்ளது. ஆனால் இக்கலம்பக ஆசிரியர் கார் காலத்திற்கு இருபாடல்கள் பாடியதோடில்லாமல் வெண்பனிக் காலத்தையும்,[170] வெயிற் காலத்தையும் பாடுகின்றார்.[171] களியில் கள்ளுண்டாடலைத்தான் பிற கலம்பகங்கள் கூறும். இந்நூலாசிரியர் 16ஆம் நூற்றாண்டிறுதி அல்லது 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தினர் என்பதால் ‘சாராயம் தீண்டி டாரோ’ என்று ஒரு பாட்டில் தெலுங்குச் சொல் பயின்று வருகின்றது.[172]

கடைமடக்கு இடைமடக்குகளைப் பாடுவதில் புலவர்க்கு மிகுந்த ஈடுபாடுள்ளதைப் பல பாடல்களில் காணமுடிகின்றது. ‘பிள்ளைச் சுரும்பார் கழுநீரே, பெருகுமிவளுக்கழுநீரே’[173] என்னும் தொடரில் முன்னதிற்குப் பொருள் வண்டுகள் மொய்க்கும் செங்கழுநீர்மலர்; பின்னதற்குப் பொருள் தாய் அல்லது செவிலி கூற்றாக, பிரிந்த தலைவிக்கு அழும்நீர் பெருகும் என்பதாகும்.

மனம் வாக்குக் காயத்தால் இறைவனை வழிபடுதலே தலை சிறந்த பக்தியாகும். இதனை ஒரு வெண்பாவில் மனம் மயிலை நாதனையே நினைக்க வேண்டும்; வாய் அவனை வாழ்த்த வேண்டும்; தன் கை அவனையே வணங்க வேண்டும்; கண் அந்த முக்கண்ணனையே காண வேண்டும் என்று சித்திரிக்கிறார் கலம்பக ஆசிரியர். அந்த வெண்பா வருமாறு :

தெள்ளம்புனற் கங்கைசேர் மயிலை நாயகனை
உள்ளம் நினைந்திடுக; ஓதுக வாய் — கள்ளவிழும்
வண்ணனையே கொண்டு வணங்குக என்கை வளர்முக்
கண்ணனையே காணுகவென் கண்[174]

இவையே திருமயிலைக் கலம்பகத்தின் தனிச்சிறப்புகளாகும்.

திருமயிலை யமக அந்தாதி

தமிழில் அந்தாதியமைப்பில் இரட்டை மணிமாலை, இணை மணிமாலை, மும்மணி மாலை, மும்மணிக் கோவை, நான்மணி மாலை, பல்சந்த மாலை, கலம்பகம் முதலிய சிற்றிலக்கிய வகைகள் காணப்படுகின்றன. அந்தாதியைச் சிறப்பியல்பாகப் பெற்றுவரும் இலக்கியத்தைச் செய்யுளந்தாதி என்பர். ஒன்றன் அந்தம் அடுத்ததன் ஆதியாக வருதலினால் அந்தாதி எனப்பெயர்

பெற்றது. செய்யுள் அந்தாதி ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும் சொல்லேனும் அடியேனும் அடுத்த செய்யுளின் முதலில் வருவதாகும். நூலினது ஈற்றுச் செய்யுளின் இறுதி முதற் செய்யுளின் முதலோடு ஒன்றி வரும்.

தமிழிலக்கியத்தில் அந்தாதி அமைப்பு

அந்தாதி அமைப்பு பதிற்றுப்பத்திலும், பெருங்கதையிலும் காணப்படுகின்றது. திருவாசகத்திலுள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலியவற்றிலும் திருவிசைப்பாவிலுள்ள சில பதிகங்களிலும் இம்முறை அமைந்திருக்கிறது. பதினோராந் திருமுறையிலும், நாலாயிரத் திவ்வியபிரபந்தத்திலும் அந்தாதி முறையில் அமைந்த நூல்கள் உள்ளன. சமணருடைய திருநூற்றந் தாதி, கம்பருடைய சரசுவதியந்தாதி, சடகோபரந்தாதி ஆகிய நூல்களும் அந்தாதி அமைப்பு உடையனவேயாகும்.

அந்தாதி இலக்கணம்

வெண்பாவாலேனும், விருத்தத்தாலேனும், கட்டளைக்கலித் துறையாலேனும் இவ்வந்தாதிகள் இயற்றப்படும்.

வெண்பாப் பத்துக் கலித்துறை பத்துப்
பண்புற மொழிதல் பதிற்றந்தாதி

என்று இலக்கணவிளக்கம் இலக்கணம் கூறுகிறது.[175]

பதிற்றுப்பத்தந்தாதி

பத்துப் பத்துப் பாட்டுக்கு ஓர் யாப்பாகப் பத்துவகைச் செய்யுட்களால் இயற்றப்படுவது பதிற்றுப்பத்தந்தாதியாகும்.

நூறு சார்ந்து பப்பத்து ஓர் இசையாம் பதின்பத்து
அந்தாதி[176]

நூறு வெண்பா நூறு கலித்துறை
கூறுதல் நூற்றந்தாதிக் கோளே[177]

என்று பாட்டியல் நூல்கள் கூறுகின்றன.

திரிபந்தாதி

நான்கடிகளிலும் முதலில் முதலெழுத்தை ஒழித்த ஏனைய எழுத்துகள் பல ஒன்றி வரின் அது திரிபந்தாதியாகும்.

யமக அந்தாதி

அம்முதல் எழுத்தும் ஒன்றிவரின் யமக அந்தாதி ஆகும். இப்படி வரும் யமகம், சொல்லணிகளுள், இடையிட்டு வந்த ஆதி மடக்கின் பாற்படும்.

திருமயிலை யமக அந்தாதி

கபாலீசுவரர் மீது தாண்டவராய கவிராயரால் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டதாகும். மயிலை பூம்பாவை வேலப்ப முதலியார் வேண்டுகோட்கு இணங்கிப் பாடிய நூலே திருமயிலை யமக அந்தாதியாகும். யமகம் என்பது வந்த எழுத்துக்களே பொருள் வேறுபடச் செய்யுளின் சீர் அல்லது அடிகளில் பின்னும் வருவதாகிய மடக்கணியாகும். இவ்யமக அந்தாதிப் பொருளை அறிவது அரிதாகும். ஆகையால் ஆசிரியரே இதற்கு உரையும் எழுதியுள்ளார். இந்நூல் காப்புச் செய்யுள் ஒன்றும் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் உட்பட நூற்றிரண்டு செய்யுட்களை உடையது.

நூலாசிரியர்

திருமயிலை யமக அந்தாதியை இயற்றியவர் தாண்டவராய கவிராயர் என்பவர். இவர் இந்நூலையும், சிங்காரவேலர் பிள்ளைத் தமிழையும், சிங்கார வேலர் வெண்பாவையும் பூம்பாவை வேலப்ப முதலியார் ஆதரவினால் அரங்கேற்றினார் என்பது தெரியவருகிறது. இவற்றுள் சிங்காரவேலர் வெண்பா கிடைக்கவில்லை. அம்பலவாண கவிராயர் இவரைத் 'தாண்டவ ராய கவிராசர்' என்று பாராட்டியுள்ளார். 'தாண்டவராய தமிழ்ச்சிங்கம்' என்று பிறர் புகழ்ந்துள்ளனர்.[178]

மூர்த்தி

இந்நூலின் காப்புச் செய்யுளில் கூத்தாடும் பிள்ளையாரை, 'கூத்தாடும் ஐங்கரன் காப்பாகும்' என்று வேண்டுகின்றார்.

'மயிலைப்பதி வளர் கபாலி' என்றும்,[179] 'மயிலை இடத்து உறும் ஆரியற்கு உம்பர் அச்சன் என்று ஏத்தும் கபாலி' என்றும்,[180] கற்றவரை ஆதரிக்குங் கபாலி'[181] என்றும் கபாலீசுவரரைப் போற்றுகின்றார். பிரம கபாலத்தை ஏந்திய தால் சிவபெருமான் கபாலீசுவரர் எனப்பட்டார். அவர்

கபாலத்தை ஏந்திய செய்தியை, 'அரவிந்தனார் சிரம் ஏந்து அரர்' என்றும்,[182] 'ஆரணனார் அருந்தலை இந்திரன் போற்றக் கொண்டோய்' என்றும்,[183] 'நான்மறை வேதன் சிரம் கரத்தான்' என்றும்,[184] கபாலம் தரித்த கரத்தார் மயிலைக் கருத்தர் என்றும் கூறுகின்றார்.[185] திருமயிலைக் கலம்பக ஆசிரியர் குறிப்பிடுவது போன்று இவரும் கபாலீசுவரரை 'மயிலேசன்' என்று குறிப்பிடுகின்றார்.[186]

திருமயிலைக் கபாலீசுவரத்தில் உறையும் இறைவியைக் கற்பகவல்லி என்றும்,[187] 'கண்டு இக்குபால் அன்ன சொல் கற்பகவல்லி' என்றும் புகழ்ந்துள்ளார்.[188]

திருமயிலைத் தலம்

இந்நூலில் இத்தலத்தின் பெயர் மயிலையென்றே பெரும்பாலும் ஆளப்படுகின்றது. 'மாமயிலைப் புரி' என்றும்,[189] 'புகழ்மயிலைப்புரி' என்றும் பாடியுள்ளார்.[190] 'கேகை' என்றும் குறித்துள்ளார்.[191]

தீர்த்தம்

கபாலீசுவரர் கோயில் திருக்குளத்தை 'நவிர் ஆவீமாசத்தி கங்கை' என்றும்,[192] 'உந்திக் கபாலித் தடாகம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.[193] 'வானர வாலி தடக்கரை' என்று வாலி தீர்த்தத்தைப் பற்றிப் பாடியுள்ளார்.[194]

தலபுராணச் செய்திகள்

மற்றைய மயிலைச் சிற்றிலக்கியங்கள் கூறுவது போன்றே இந்நூலும் அம்பிகை தவம் செய்தது,[195] மயிலாயது,[196] அம்பிகை மயில் வடிவில் பூசித்தது,[197] முருகர் பூசித்தது,[198] சிங்கார வேல் பெற்றது,[199] திருஞான சம்பந்தர் போற்றியது,[200] எலும்பைப்பெண்ணாக்கியது,[201] இராமர் பூசித்தது,[202] வேதம் வழிபட்டது,[203] வாயிலார் வழிபட்டது,[204] ஏலேலசிங்கர் வழிபட்டது,[205] இத்தலம் யுக முடிவிலும் அழிவில்லாதது,[206] பாலியாற்றுக்கு வடக்கே உள்ளது,[207] கடற்கரையில் உள்ளது என்பது முதலான செய்திகளைக் கூறுகின்றது.[208] இத்தலத்திற்குரிய மரம் புன்னைமரம் என்று கூறப்பட்டுள்ளது.[209]

பிற செய்திகள்

இத்தல வரலாறுகளையன்றி, வேறு தல வரலாறுகள், மதுரைச் சொக்கலிங்கப் பெருமான் திருவிளையாடல்கள், நாயன்மார் வரலாறுகள் பற்றிய குறிப்புகளும் இந்நூலிற் காணப்படுகின்றன. இந்நூலாசிரியர் கயிலையை 'வடகயிலை மலை' என்றும்,[210] கிரண வெள்ளிக் கிரி என்றும்,[211] தடக்கயிலாயம், என்றும் குறிப்பிட்டுள்ளார்.[212] தில்லைமன்றையும்,[213] அம்மன்றில் சிவபெருமான் நடனஞ் செய்தலையும் பாராட்டுகின்றார்.[214]

திருவானைக்காவிலுள்ள சம்புகேசுவரரைச் சம்பத்தர் (சம்பு அத்தர்) என்று கூறுகின்றார்.[215] திருக்கழுக்குன்றத்தைக் கக்குக்கோ (கங்குக்கோ: கங்கு — கழுகு: கோ — மலை) என்றும்,[216] அங்கே கோயில் கொண்டெழுந்தருளிய கள்ளம் வல்லானென்னும் திருநாமமுடைய சிவபெருமானைக் கரவா என்றும் வழங்குகிறார்.[217] வேயீன்ற முத்தராகிய திருநெல்வேலிப்பெருமானைக் கிளைச்சேய் (கிளை — மூங்கில்) என்று புகழ்கிறார்.[218] திருவாலங்காட்டிற் சிவபிரான் ஊர்த்துவ தாண்டவம் புரிந்ததையும்,[219] மதுரைப் பெருமான் திருநாமம் சொக்கரென்பதையும் உணர்த்துகின்றார்.[220] அம்மதுரையில் சிவபெருமான் சங்கத்தில் வீற்றிருந்தது,[221] தருமிக்குப் பொற்கிழி அளித்தது,[222] நக்கீரரோடு வாது செய்தது,[223] மாணிக்க வாசகருக்கு அருள் செய்தது,[224] நரி பரியாக்கியது,[225] வலைஞரானது ஆகிய திருவிளையாடல்களைப் பற்றிய செய்திகள் இதன் கண் உள்ளன.[226] மேலும் மூவர், சோமாசிமாறர், சிறுத்தொண்டர், அரிவாட்டாயர், நமிநந்தி, இயற்பகையார், கண்ணப்பர், மூர்க்கர், காரைக்காலம்மையார் என்னும் நாயன்மார்களைப் பற்றிய செய்திகள் இடையிடையே வருகின்றன.

முப்பிரிவுகள்

இந்நூலின் நூறு பாடல்களை முப்பிரிவாகப் பிரிக்கலாம். 'ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்'[227] என்ற முறையில் கபாலீசுவரரைக் கிளவித் தலைவராகக் கொண்டு கடவுள்மாட்டு மானிடர் நயந்த பக்கமாகிய புறத்துறை இலக்கணம் அமைந்த செய்யுட்கள் பதினொன்றும்,[228] அகப்பொருள் கிளவிகளாக அமைந்த செய்யுட்கள் பதினேழும்,[229] வழிபாட்டு நிலையில் மற்ற எழுபத்திரண்டு பாடல்களும் அமைந்துள்ளன.

பாடல்கள் மடக்கணியின் பாற்பட்டதால், இனிமையும் சுவையும் அருமையும் காட்டாது நூலாசிரியர் சொற்பொருள் திறமையை மட்டுமே காட்டுகிறார். இதனைப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர் தம் பதிப்புரையில் ''யமக அந்தாதி யாதலின் இந்நூலின் நடை கடினமாகவே அமைந்துள்ளது. 'செறிவுந் தெளிவும் இன்பமும் இலாதவாறு ஓர்ந்துணர்க' (1 உரை) என்று இதன் உரையிற் கூறப்படுதல் காண்க'' என்கிறார்.[230] மேலும், 'இந்நூலுக்கு உள்ள உரை இந்நூலாசிரியராலேயே இயற்றப்பட்டதென்று தோன்றுகிறது' இவ்வுரை இல்லையேல் நூற்பொருள் விளங்குவது அருமையிலும் அருமை என்பதில் ஐயமில்லை' என்கிறார்.[231]

கபாலீசர் பதிகங்கள்

ஆலந்தூர் முத்துசாமி முதலியார் என்பவர் 'திருமயிலைக் கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம்' என்னும் பெயரில் இருபதிகங்களைப் பாடியுள்ளார். இந்நூல் 1855இல் அமெரிக்கன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. பதிகத்திற்குப் பத்துப் பாடல்கள் உள்ளன. எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளன. இந்நூல் ஆவணக் காப்பகத்தில் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது. நூல் முதலில் கூத்தாடும் விநாயகர் காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவிலும் சமயக் குரவர் முதலியோர் துதி கட்டளைக் கலித்துறையிலும் அமைந்துள்ளது. இவை போற்றிப் பாடல்களாகத்தான் அமைந்துள்ளன. 'பூவளர் வேதன் புரந்தரன் முதலோர் போற்றிடு பொற்பதா' என்று முதற் பாடல் தொடங்குகிறது. எல்லாப் பாடல்களும் திருமயிலை வாழ் கபாலீச மாதேவே' என்று முடிகின்றன.[232]

திருமயிலையில் வாழ்ந்த தாச்சி அருணாசல முதலியார் கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம், சிங்காரவேலர் மாலை ஆகியவற்றைப் பாடியுள்ளார். இப்பாடல் தொகுப்பு 1872இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் அஷ்டகமாயிருந்த 'கபாலீசர் பதிகம்' பஞ்சரத்தினமாகச் சுருங்கி, பிறகு ஏழு பாடல்களாக ஆகி, மீண்டும் பத்துப் பாடல் கொண்ட பதிகமாக மாறிய வரலாறு குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

கபாலீசர் பதிகத்தின் ஐந்து பாடல்கள் அடங்கிய எட்டுப் பிரதியொன்றைப் புரசப்பாக்கம் இ. எம். எல். எப். உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த, ச. கு. கணபதி ஐயர் என்பவர் சேலம் மாவட்டம் வேலூரில் இருந்த போது ஓர் ஆண்டு, பதினெட்டாம் பெருக்கில் காவிரியில் நீராடுகையில் அவ்வாற்றில் மிதந்து வந்த ஒற்றையேடுகளிலிருந்து எடுத்து வந்ததாகச் சொல்லி அவற்றை உ. வே. சாமிநாதையரிடம் சேர்ப்பித்தார். இச்செய்தியை உ. வே. சாமிநாதையர் அவர்களே குறிப்பிட்டு, சுவடியின் பழமையை நோக்கும்போது அது நூறு ஆண்டிற்கு மேற்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை என்றும் கூறி திருமயிலைக் கபாலீசர் பஞ்ச ரத்தினம் என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார்.[233]

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தமக்குக் கிடைத்த கபாலீசர் தோத்திரம் இரண்டையும் கலைமகள் 1932 ஜூன் இதழில் வெளியிட்டார். இதனைப் பிற துதிகள் என்ற பெயரில் பஞ்சரத்தினத்தோடு சேர்த்து திருமயிலைத் தோத்திரங்கள் என்னும் பெயரில் அமுத நிலையத்தினர் 1960இல் வெளியிட்டனர். அவ்வாறு வெளியிடும் போது அந்த ஏழு பாடல்களோடு திரு. கி. வா. ஜ. அவர்களை மூன்று பாடல்கள் பாடச் சொல்லி அதையும் சேர்த்துப் பத்துப் பாடல்களாக வெளியிட்டனர்.[234]

இவ்வாறு தாச்சி அருணாசல முதலியார் இயற்றிய எட்டுப் பாடல்கள் அடங்கிய கபாலீசர் பதிகம் 1872இல் ஊ. புஷ்பரத செட்டியாரால் கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டிருந்தும், அப்பாடல்களில் முதல் ஐந்து ஆசிரியர் பெயர் தெரியாமல் டாக்டர் உ. வே. சாமிநாதையரால் திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம் என்னும் பெயரால் வெளியிடப் பட்டதும், அதைத் தொடர்ந்த இரு பாடல்களும் ஆசிரியர் பெயர் தெரியாமல் பிற துதிகள் என்னும் பெயரில் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டதும், வியப்பிற்குரியதே யாகும்.

திருமயிலைக் கபாலீசர் பதிகம் பன்னிரு சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளது. ''இச்செய்யுட்களின் நடை எளியதாக இருத்தலின் ஸ்ரீகபாலீசரைத் துதிக்கும் அன்பர் களுக்குப் பயன்படுமென்றெண்ணுகிறேன்'[235] என்று உ. வே. சாமிநாதையர் குறிப்பிடுவது இப்பதிகத்தின் சிறப்பை விளக்கும்.

இப்பதிகத்திலுள்ள பாடல்கள் 'திருமயிலை யூர்வாச வருள்புரி கபாலீசனே' என்று முடிகின்றன. கபாலீசனை 'மலர்புன்னை வனவுலாசா' என்று குறிப்பிடுகின்றார்.[236] இவர் பாடல்களில் முதற்பாடலில் சிவபெருமானின் கேசாதிபாத வருணனையும், காமம், மாயை ஆகியவற்றில் சிக்கித் தவிக்கும் தன்னை யாட் கொள்ள வேண்டும் என்றும்,[237] பொன்னாசை, மண்ணாசை பெண்ணாசை நீக்கி அருள் தர வேண்டும் என்றும்,[238] 'அத்தனே நீ கடைக்கண்பார்க்கி லித்தனையு மழல்படும் பஞ்சல்லவோ'[239] என்றும், சிங்கார வேலனை வியந்தளித் தருள் தெய்வம்[240] என்றும் பாடிப் பரவுகின்றார். இவருடைய பாடல்கள் எளிமையும் இனிமையும் ஒருங்கே கொண்டவை என்பது இவற்றால் விளங்கும்.

திருமயிலைக் கபாலீசர் பதிகம்

தில்லையம்பூர் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் திருமயிலைக் கபாலீசர் பதிகம் என்னும் பதிகத்தைப் பாடியுள்ளார். 1876இல் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.[241] காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவில் விநாயகர் மீது பாடப்பட்டுள்ளது. பதினோரு ஆசிரிய விருத்தங்களையும் நான்கு கட்டளைக் கலித்துறைப் பாடல்களையும் கொண்டுள்ளது. 'சகலமலமாபாச மகலவடைவோர் நேச சக மகிழ் கபாலீசனே' என்று ஆசிரிய விருத்தங்கள் முடிகின்றன. இப்பாடல்கள் சிவபிரான் பெருமைகளைக் கூறி அருள் வேண்டும் முறையிலேயே அமைந்துள்ளன. சிவ பெருமானின் உருவ வருணனை,[242] மதுரையில் புரிந்த திருவிளையாடல்கள்,[243] சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகருக்கு அருள்புரிந்த நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கூறுகிறார்.[244]

திருமயிலாபுரிப் பதிகங்கள்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மயிலைக் கபாலீசன் மீது மூன்று பதிகங்களும், சிங்காரவேலர்மீது இரண்டு பதிகங்களும் திருவள்ளுவ நாயனார் மீது ஒரு பதிகமும் பாடியுள்ளார். இவற்றுள் கபாலீசர் மீது பாடிய ஒரு பதிகம் தவிர மற்றவை அச்சில் வெளிவந்துள்ளன.[245]

திருமயிலாபுரிப் பதிகம்-1

கபாலீசர் மீது பாடிய பதிகங்களைத் திருமயிலாபுரிப் பதிகம் என்று பெயரிட்டுள்ளார். அவற்றுள் அச்சில் வெளிவராத

பதிகத்தின் காப்புச் செய்யுள் கபாலீசர் மீதே பாடப் பெற்றுள் ளது. இப்பதிகத்தில் பதினோரு பாடல்கள் உள்ளன. செய்யுள்கள் எண்சீர் விருத்தத்தில் அமைந்துள்ளன. இப்பாடல்கள் 'திருமயிலாபுரி புரக்கும் சிவ பிரானே' என்று முடிகின்றன. இப் பதிகத்தின் முதல் பாடலில், சிவபிரானின் சடை, விழி, வாய், தோள், செவி ஆகியவற்றை வருணித்து இறைவன் இடபத்தின் மீது வந்து ஆள்பவன் என்று கூறுகிறார். கொன்றை, அருக்கத்தி, வில்வம் கொண்டு பூசை புரிவார் தம் குறை தீர்ப்பவன் சிவபிரான் என்றும் கூறுகிறார்.

திருமயிலைத் தலத்தை, 'சிட்டர் குழாம் நெருங்கு மணி மாட வீதித் திருமயிலாபுரி[246] என்று போற்றுகின்றார். திருமயிலை யிலுள்ள மூர்த்தி கபாலீசுவரர் என்பதை,

மூர்த்தம் அளப் பரிய பலகோடி காட்டும்
முதல்வனே அயன் தலையினை முடையோ டேந்திச்
சீர்த்த பலிக் கேகிவரும் விளையாட் டுள்ளாய்[247]

என்று குறிப்பிடுகின்றார். சிவபெருமானின் சிறப்பான நிலையை,

முந்துபர மாயபெருந் தகையே! தானா
முளைத்த முதற்பொருளே! எண்மூர்த்தமானாய்[248]

என்று போற்றுகின்றார். பூம்பாவை வரலாற்றை,

என்பு மடப் பாவையுருக் கொள்ளல் ஆதி
இனிய புகழ் நால் வருக்கன் றீந்த நீ[249]

என்று குறிப்பிடுகின்றார். பதிகத்தின் இறுதிப் பாடலான பதினோராம் பாடலில் நூற்பயன் கூறும் நிலையில் 'செம்பு நதிக் கரையிலுறும் நெல்லை யூரான் செப்புமிவை கற்பவரைத் திருத்து மன்றே' என்று தன்னையும் வெளிப்படுத்திக் கொள்கிறார்.

திருமயிலாபுரிப் பதிகம்-2

இப்பதிகம் ஈஸ்வர (1878) ஆண்டில் வெளிவந்த தண்டபாணி சுவாமிகளின் பதிகங்கள் அடங்கிய தொகுப்பு நூலில் காணப் படுகின்றது.[250] இப்பதிகத்தின்காப்புப் பாடல் நேரிசை வெண் பாவில் சிவபெருமான் மீதே பாடப்பட்டுள்ளது இப்பதிகத்தில் பதினொரு பாடல்கள் உள்ளன. நூல் அறுசீர்த் தாழிசைகளால்

ஆனது. பாடல்கள் அனைத்தும் 'திருமயிலா புரியானே' என்று முடிவடைகின்றன.

காப்புப் பாடலிலேயே பூம்பாவைக் கதையை, 'நீற்றும் எலும்பொருநன் நேரிழையா கும்பெருமை போற்றும் மயிலா புரியானே' என்று குறிப்பிடுகின்றார். இப்பதிகத்திலுள்ள பாடல்கள் சிவபெருமானின் பெருமைகளைக் கூறி அருள் வேண்டும் முறையிலேயே அமைந்துள்ளன.

திருமயிலாபுரிப் பதிகம்-3

இப்பதிகம் 1880ஆம் ஆண்டில் கலாரத்நாகரம் அச்சுக் கூடத்தில் புஷ்பரத செட்டியாரால் பதிப்பிக்கப்பட்ட 'சென்னைக் கந்தரிதழகலந்தாதி' என்னும் தண்டபாணி சுவாமிகளின் பதிகங்கள் அடங்கிய தொகுப்பு நூலில் காணப்படுகின்றது.[251]

காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவில் செவ்வேளும் விநாயகரும் காக்க வேண்டும் என்று வேண்டும் வகையில் அமைந்துள்ளது. 11 பாடல்கள் உள்ளன. எண்சீர் விருத்தத்தில் அமைந்துள்ளது. பாடல்கள் அனைத்தும் 'மயிலை யூரில் வாழ் பிரானே' என்று முடிவடைகின்றன. இப்பாடல்களும் சிவன் பெருமைகளைக் கூறி அருள் வேண்டும் முறையிலேயே அமைந்துள்ளன. அங்கம் பூம்பாவையான வரலாற்றையும் தண்டபாணிசுவாமிகள் இப்பதிகத்தில் குறிப்பிடுகின்றார்.[252] இவர் பாடல்களில் 'இன்னமும் இறைவன் அருளவில்லையே' என்னும் ஏக்கம் எதிரொலிக்கின்றது.

திருமயிலைக் கபாலீசர் இரட்டை மணிமாலை

தேனாம்பேட்டை சுப்பராய முதலியார் திருமயிலைக் கபாலீசர் இரட்டை மணிமாலை என்னும் நூலைப் பாடியுள்ளார். கி. பி. 1883இல் சென்னை கலாரத்நாகர அச்சுக் கூடத்தில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.[253]

இந்நூல் அந்தாதியில் உள்ளது. காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவில் விநாயகர் மீது பாடப்பட்டுள்ளது. வெண்பா, கலித்துறை என்று மாறி மாறி 20 பாடல்கள் உள்ளன. இறைவன் பெருமைகளைக் கூறித் துன்பமகற்றி அருள வேண்டும் என்று வேண்டுகின்ற முறையில் பாடல்கள் அமைந்துள்ளன.

நன்மயிலைக் கோமான்,[254] மயிலையருமருந்து,[255] மயிலை யானந்த வாழ்வு,[256] மயிலை நிகழ் தெய்வம்,[257] தென்மயிலைத் தேவு[258] என்று இப்பாடல்களில் கபாலீசர் மயிலையில் வாழும் தேவன் என்று சிறப்பித்துப் பேசப் பெறுகிறார். கபாலீசன் என்பதை, 'பூண்டிடு நாகத் தொடுசிர மாலை புரிந்திலகு மாண்டவன்[259] என்னும் தொடரில் குறிப்பிடுகின்றார். பதி, பசு, பாசத்தின் உண்மையையும்[260] அத்துவித இன்பத்தையும் முத்திநிலையையும் பெற இறைவனை வேண்டுகிறார். இவ்வாறு இவருடைய பாடல்கள் இறைவனிடம் அருள் வேண்டுபவையாக அமைந்துள்ளன.

திருமயிலைப் பதிற்றுப் பத்தந்தாதி

இந்நூலை இயற்றியவர் காஞ்சிபுரம் பு. கனகசபை நாயகர். இந்நூல் கி. பி. *1883*இல் அச்சிடப்பட்டது.[261] கலித்துறை யாப்பில் நூறு செய்யுட்கள் உள்ளன. அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. வீநாயகர் மீது காப்புச் செய்யுள் பாடப் பட்டுள்ளது. இந்நூல் நூறு பாடல்களைக் கொண்டுள்ளது.

பொதுவாகச் சிவன் பெருமைகளைக் கூறி அருள் வேண்டும் முறையிலேயே பாடப்பட்டுள்ளன. கபாலீசுவரர் மீது பாடப் பட்டதாகும் இந்நூல். மயிலைச் சிவக்கொழுந்து,[262] மயிலைக் கொற்றவன்,[263] மயிலைப் பிஞ்ஞகன்,[264] திருமயிலை வேந்து,[265] திருமயிலை உண்மைப்பொருள்,[266] திருமயிலைக்கோ,[267] மயிலா புரியான்[268] என்றெல்லாம் சிவபெருமானை மயிலை நகரோடு தொடர்பு படுத்திக் கூறுகிறார்.

உமை மயிலாய்ப் பூசை செய்ததை, 'மான் போலும் விழியுடையாள் மயிலா யேத்தும் மயிலை'[269] என்று பாடு கின்றார். சம்பந்தர் அங்கம் பூம்பாவை ஆக்கிய செயலையும்,[270] நாவுக்கரசர் மயிலை இறைவனைப் பாடியதையும்,[271] சுந்தரர் பாடியதையும்[272] குறிப்பிடுகின்றார். நல்ல எண்ணங்களை நல்க வேண்டுமென்று இறைவனை வேண்டும் முறையில் இவர் பாடல் கள் அமைந்துள்ளன.

திருமயிலாப்பூர்ப் பதிகங்கள்

திருக்குருகூர் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள் திருமயிலாப்பூர்ப் பதிகம் என்னும் பெயரில் கபாலீசர் மீது இரு பதிகங்களும், திருமயிலைக் கற்பகவல்லி மீது பதிகம் ஒன்றும், திருவள்ளுவ

நாயனார் மீது பதிகம் ஒன்றும் ஆக நான்கு பதிகங்கள் பாடியுள்ளார். இவை 'திருமயிலை, திருவான்மியூர், சாமள வல்லியார் பதிகங்கள்' என்னும் நூலில் காணப் பெறுகின்றன.[273] கி. பி. 1893இல் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நான்கு பதிகங்களும் திருமயிலைப் பதிகங்கள் எனப்பெயரிடப்பட்டு, ஒரே ஒரு காப்புச் செய்யுளோடு உள்ளன.

திருமயிலாப்பூர்ப் பதிகம்-1

முதல் பதிகத்தின் காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவில் அமைந்துள்ளது. பதிகம் கலி விருத்தத்தால் அமைந்திருக்கிறது. இப்பதிகத்தில், 'காவல் செய்யும் கபாலீச்சுரத்துள்ளான்',[274] 'இலையெனா தருளெங் கபாலீச்சுரத் தலைவன்',[275] 'போதனத் தெழும் பூங் கபாலீச்சுரன் ',[276] 'மயிலை வாழ் ஒருத்தன்',[277] 'மயிலைக் கொரு முதல்',[278] மிடியைத் தீர்க்கு மிகு கபாலீச்சுரன் [279] என்று சிவபெருமானைப் போற்றுகின்றார்.

பொதுவாக இப்பதிகப் பாடல்கள் 'தன்னடி அடைந்தவர் துயர் தீர்த்து அருளுபவன் கபாலீசன்' என்பதை உணர்த்துகின்றன.

திருமயிலாப்பூர்ப் பதிகம்-2

இப்பதிகம் எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளது. இப்பத்துப் பாடல்களிலும் சிவனைத் 'திருமயிலாப்பூர் வாழ் தேவன்' என்று சிறப்பித்துப் பாடுகின்றார். இப்பாடல்கள், மும்மலம், ஐம்புல உணர்வுக்குள் சிக்கித் தவிக்கும் தன் இழி நிலையைக் கூறி ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டும் முறையில் அமைந்துள்ளன. அருணகிரியார் போன்று மங்கையர் மயலில் சிக்கியிருந்ததையும் சொல்லிப் பாடுகின்றார்.[280] ஞானசித்த சுவாமிகள் இறைவனை எண்ணாமலிருந்த தன்னுடைய நிலைக்கு இரங்கி ஏங்குவதைத் தன்னுடைய பாடல்களில் வெளிப்படுத்துகிறார்.

கங்காதர நாவலர் இலக்கியங்கள்

கங்காதர நாவலர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் சென்னை சேத்துப்பேடு (சேத்துப்பட்டு) என்ற பகுதியில் வாழ்ந்த பெரும் புலவராவார். இவர் அப்பகுதியில் ஸ்ரீ ஜெய விநாயக சிவப்பிரகாச மடத்தின் அருட்கவியாக விளங்கியுள்ளார்.

இவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் ஏதும் தெரியவில்லை. ஆயினும் இவர் எழுதிப் பதிப்பித்த நூலின் முதல் பக்கத்தில் 'ஸ்ரீ சிவ சமயத்திற்குத் தொண்டு பூண்டொழுகும் அடியார்களில் ஒருவரும் வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச சமயப் பிரசங்க கோளரியுமாக'' விளங்கினார் என்று தெரிகிறது. இவரின் மடாதீனப் பெயர் சிவப்பிரகாச தேசிக சாமிகள். இவரின் சம காலத்தவரான சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகரைப் பற்றித் தமிழ்ப் பேரறிஞர் மறைமலை யடிகள் வரலாறெழுதியதைப் போல இவரடியார், மாணவர் எவரும் இவர் வரலாற்றினை எழுதவில்லை போலும்.

கங்காதர நாவலர் இருமொழிவாணர் என்பதும் வேதாந்தத் திலும் சித்தாந்தத்திலும் பயிற்சி மிக்கவர் என்பதும், புராணங் களில் நல்ல தேர்ச்சியுடையவர் என்பதும் அவரின் நூல்களால் அறிகிறோம். தாயுமானவரின் பாடல்களில் திளைத்தவர் என்பதனை அவர்தம் பாடல்கள் கூறாமற் கூறுகின்றன. தாயு மானவரைப் போல இசையறிவும் பாடற்பண்ணும் உணர்ந்தவர் என்பதையும் அவரின் பாடல்கள் பல உணர்த்துகின்றன.

விநாயகருக்கும் சிவனுக்கும் மேலாக ஒரு கடவுளை ஏற்க வில்லை என்பதும் கணபதியே கூட இவர்க்குக் கபாலீசுவரரின் மாற்றுருவம் என்பதும் இவர் நூல்களால் விளங்குகின்றன. 1927 இல் எழுதிப் பதிப்பித்த நூலுள்,

அடியவர்கட் கடிமைசெய் தவரன்பிற் கருகனா
யாசித்துப் பூசை செயடிமை சிவப் பிரகாசன்
மிடியகன்று நலம்பெறவே நாற்பத்தே ழாண்டதுவாய்
விளம்பித் தொழுந் துதி சரண மாலையணிந்துதவி[18]

என்னும் பாடலில் இவருடைய வயது புலனாகின்றது. 1927இல் இவருக்கு அகவை நாற்பத்தேழு எனில் இவர் பிறந்தது, 1880 என்று தெரிகிறது. 1927க்குப் பின் இவர் வரலாறு அறிதல் அரிதாயுள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் வைகறைப்போதில் சென்னையில் அச்சிடப்பட்ட எந்த ஒரு நூலும் நீண்ட பாயிரமும், சாற்றுக் கவிகளும் பெற்றே வெளியாயிருக்க, கங்காதர நாவலரின் எந்த ஒரு நூலிலும் இவ்விரண்டையும் காணவில்லை. இவருடைய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்திய கையொப்பக்காரர்கள்

பெரும்பாலும் 'பிள்ளை'களாக இருப்பதால் இவர் சைவப் பிள்ளைமார் வகுப்பைச் சார்ந்தவராக இருக்கக் கூடும்.

சைவத்தின் மேற் சமயமில்லை என்ற அடிப்படையில் தாம் சார்ந்த 'ஸ்ரீ ஜெய விநாயகரையும் மயிலைக் கபாலீசுவரரையும் வழிபடு கடவுளாகவும் முழுமுதற் பொருளாகவும் கொண்டு மறந்தும் புறந்தொழா மாண்புடையவராக வாழ்ந்துள்ளார். இதுவரை கிடைத்துள்ள அவருடைய நூல்கள் 1. சிவஞான த்ரயம் (1915), 2. சிவஞான ஸத்வாம்ருதம் (1919), 3. சிவஞான ரமணியம் (1917), 4. சிவபரத்திருநெறி (1907), 5. சிவஞானப் பூரணம் (1911), 6. சிவஞானச் சிந்தாமணி(1912), 7. சிவஞானத் திவாகரம் (1913), 8. சிவஞான பாஸிய வியூகம் (1916), 9. சிவஞானப் பௌதிகம். 10. சிவஞான மஹத்துவ சுகத்வம் (1927), 11. தோத்திர பூஷணம் (1920) என்பனவாம். முதல் நூல் 1903இல் வெளியிடப்பட்டுள்ளது; இறுதி நூல் 1927இல் வெளியிடப்பட்டுள்ளது.

சிவபெருமானின் பெரும் பேராற்றலை அருவாய், உருவாய், அருவுருவாய் இருந்து செய்யும் அனைத்துத் திருவிளையாடல் களையும் மற்ற மயிலைப் பிரபந்தங்களைக் காட்டிலும் விரிவாகவும் செறிவாகவும் நிறைவாகவும் தருகிறார். இவர் தாயுமானவர் வள்ளலார் வழியில் இறை உண்மையை, சிவசக்தி மகிமையை விளக்கிச் சைவ சமய நெறியைப் புலப்படுத்து கின்றார்.

கங்காதர நாவலர் ஸ்ரீஜெய விநாயகர் சிவப்ரகாச மடத்து அருட்கவி ஆதலினால் ஒவ்வொரு நூலிலும் விநாயகருக்கு முதலில் வணக்கம் செலுத்துகிறார். பஞ்சரத்னமாலையாகவும், பதினாறுசீர் கொண்ட கழி நெடில் ஆசிரிய விருத்தமாகவும் நட்டராகப் பண்ணில் ஐந்து பாடலும் ஒரு நாமாவளியும் சிவஞான ஸத்வாம்ருதம் என்னும் நூலில் உள்ளன.[182]

'சிவஞான ரமணியம்' என்ற நூலில் நெடிய நிலைமண்டில ஆசிரியப்பாவில் முந்நூற்றெண்பது அடிகளில் விநாயகர் கதை களையும் சிவபெருமானின் திருவிளையாடல்களையும் கூறி வணங்குகிறார்.[183]

'சிவபரத்திரு நெறி'யிலும் பன்னிருசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தத்தில், பஞ்சமப் பண்ணில் பதினாறு பாடல்கள் பாடு

கின்றார். ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் 'சிவபரத்திருநெறி புகலவருள் ஜெயஜெய விநாயக மணியே' என்று முடிக்கின்றார். சிவபரம் பொருட்கும் விநாயகர்கட்கும் வேறுபாடு காணாது 'சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்' என்பதற்கு ஏற்பக் கணபதியமே சைவமாகின்றது.

சிவஞானப்பூரணம் என்னும் நூலிலும் நட்டராகப் பண்ணில் இருபஃது நான்சீர்க் கழி நெடிலாசிரிய விருத்தத்தில் பாடல்கள் உள்ளன.

'சிவஞான சிந்தாமணி' எழுசீர் இரட்டை ஆசிரிய விருத்தத்தில் பதினாறு பாடல்களும் தாயுமானவரின் பரிபூரணானந்த மாலைபோல ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும்,

> செப்பரும் சுடரே மயிலைக் கபாலீசன்
> சிவஞானச் சிந்தா மணிச் சொலத்
> திருவருள் தந்தருள் சிவகணேச நம
> ஜெய விநாயக மெய்க் கடவுளே [184]

என்று பாடிப் பிறவா யாக்கைப் பெரியோனின் பெருமைகளையே இணைத்துப் பிணைக்கிறார்.

சிவஞானத் திவாகரம் என்னும் நூலிலும் நட்டராகப் பண் பதினாறு சீர்க் கழி நெடிலாசிரிய விருத்தங்களில், 'அருள் மணக்கும் பதமே அருள்வாய்' என்றும், 'சருவ சொரூப லட்சணம் நினதுடைய'தென்றும், 'திருக்கருணை தந்த தெய்வீகம் நீ' என்றும், 'அவதாரங் கொண்ட அமலன் நீ' என்றும், 'புகலரு நாமப்பூசுரன் நீ' என்றும், 'விக்கினம் தீர்க்கும் விமலன் நீ' என்றும், 'பிழை பொறுத்தாள் பெருமாள் நீ' என்றும், 'அடிமையின் புன்செயலை அணிந்தருள் புரியென்றும் வணங்கிப் பரவுகின்றார்.[185] 'சிவஞான பாஸியவியூகம்' என்ற நூலில் கணேசர் துதியாகப் பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பஞ்சரத்தினம் பாடுகின்றார். 'சிவஞான பௌதிகம்' என்னும் நூலில் பன்னிரண்டு அறுசீர் விருத்தங்கள் சிவ மகனையே சிவமாகச் சிந்திக்கின்றன. 'சிவஞான மஹத்வ சுகத்வம்' என்ற இறுதி நூலிலும் விநாயக வணக்கம் பதினாறு எண்சீர் விருத்தத்தில் நட்டராகப் பண்ணில் பாடுபொருளாய், சங்கரனா! சங்கரன் மைந்தனா! என்று மருட்கை ஏற்படும் வகையில் உள்ளன.

மயிலையில் எழுந்தருளியுள்ள ஐங்கரனை உலா நூல் முதல் திருமயிலை வெண்பா பாடியவர் வரை அனைவரும் கூத்தாடும் விநாயகர் என்று குறித்துள்ளனர். ஆனால் கங்காதர நாவலர் 124 பாடல்களுள் ஓரிடத்தும் கூத்தாடலைக் குறித்துக் காட்டாதது வியப்பாக உள்ளது.

திருமயிலைத் தலத்துக்குரிய இறைவர் பெயர் கபாலீசுவரர் என்பதையும், இறைவியார் கற்பகவல்லி என்பதையும் குறிக்கின்றவர் சிங்கார வேலரை ஓரிடத்தும் தனிப்பாடலிலோ தனி வாழ்த்தாகவோ கூறாததும் வியப்பைத் தருகிறது.

இவருடைய 'சிவஞான ஸத்வாம்ருதம்' என்னும் நூலில் கபாலீசுவரரின் மீது அருள் வேண்டும் சோடசமாலை என்னும் தலைப்பில் பதினாறு பாடல்களும், சீவ மாணிக்கச் செழுமணி மாலை என்னும் தலைப்பில் இருபத்தைந்து பாடல்களும், கபாலீசர் மீது மிகப் பெரிய கீர்த்தனை ஒன்றும், பசுபதீச்சுர மாலை என்னும் தலைப்பில் பதினோரு பாடல்களும், சிவஞானானந்த செழுந்தவக் கீர்த்தனையும், கன்மதன் கதியாஸ்ரயம், ஞானாதிக்ய ஆனந்தக் களிப்பு, ஆகியவையும் அடங்கியுள்ளன.

சிவஞான ரமணியம் என்னும் நூலில், கபாலீசர் மீது சிவஞானத் தெய்வ மணிமாலை எட்டுப் பாடல்களும், சிவசிவ மாலை முப்பத்திரண்டு பாடல்களும், நமசிவாய மாலை முப்பத்தாறு பாடல்களும் தயைமய நியம வுயர்வுரைமாலை, பஞ்சரத்தினம், அருட்சுரந்தாளவர்ச்சிக்கு மாலை முப்பத்திரண்டு பாடல்களும், சினோபதேச மாலை நூற்று ஐம்பத்தொன்பது பாடல்களும் அடங்கியுள்ளன.

சிவபரத் திருநெறி என்னும் நூலில் தேவதேவ மாலை என்னும் தலைப்பில் இருபத்தெட்டுப் பாடல்களும், கிருபை வேண்டுமாலை என்னும் தலைப்பில் இருபத்து நான்கு பாடல்களும், ஆண்டருள்மாலையில் ஆறு பாடல்களும், மஹேச மும்மணி மாலையில் மூன்று பாடல்களும் அடங்கியுள்ளன.

சிவஞானப்பூரணம் என்னும் நூலில் சேவிதாநுசார தெய்வீக மாலையில் எட்டுப் பாடல்களும், பஞ்சகுணித மாணிக்க மாலையில் பதினைந்துபாடல்களும், துதிப்பதிகத்தில்பதினோரு பாடல்களும், அருள்வேண்டல் நவமணி மாலையும், சிவஞானப் பூரண தெய்வமாலையில் பன்னிரண்டு பாடல்களும், பாடிப் பணியும்

பரமார்த்த நிலையில் எட்டுப் பாடல்களும், நமஸ்கார மாலையில் மூன்று பாடல்களும் அடங்கியுள்ளன.

சிவஞானச் சிந்தாமணி என்னும் நூலில் கபாலீசர் மீது சிந்தாமணி சோடசமாலை பதினாறு பாடல்களும், கருணை தயை வேண்டு மாலையில் ஐந்து பாடல்களும் உள்ளன.

சிவஞானத் திவாகரம் என்னும் நூலில் கபாலீசன் மீது பாடப்பட்ட திருவருள் வேண்டிச் சேவை செய்தேத்தும் சோடசப் பாமாலையில் பதினாறு பாடல்களும், தஞ்சம் வேண்டும் பஞ்ச ரத்தினமும், பிச்சாடனப் பெருந்தகைப்பத்தும், ஏழைப் பரதேசிக் கிதங்கெனுஞ் சோடசத்தில் பதினாறு பாடல்களும், மயிலேச நவமணிமாலையும், உகந்தருட் புரியென வுளங்கனி மாலையில் பதினைந்து பாடல்களும், தயை வேண்டும் சரணப் பண்மணியில் இருபத்தைந்து பாடல்களும், வரம் வேண்டும் வணக்க சத்த மணி மாலையும் அடங்கியுள்ளன.

சிவஞான பாஷிய வியூகத்தில் பதமுணருச்சித பரமார்த்தப் பதிகமும், விண்ணப்பமான விருப்புயர் மாலையும், நவமணிக் கவசமும், திருநெறி மறை அருமைதனையுரைத்து அண்ணலை வருந்துதலும், இறைவனே குறைகளைத் திரங்குமென்றிரைஞ்சுதலும், பார்வையின் பயனைப் பயன்படு மொழிவுரையும், சனை வேட்கையின் சலிப்பெடுத்துவப் புறலும், கடைத்தேற வேண்டுங் கழனினைப் பதிகமும், வரந்தரும் பரமனே பரதேசிக்கிரங்குமெனலும், சந்தசரண இந்தளமும் அடங்கியுள்ளன.

சிவஞான பௌதிகத்தில் கபாலீசன் மீது பாடப்பட்ட மாமஹேஸ்வர ஹரவோம் மணிமாலை, கயிலாச மயிலேச மாலை, திருவிழி சாய்க்க சிந்தை செய் மாலை, சித்தர் பெத்தர் முத்தரும் பத்தருஞ் சேவைசெய் சிவபிரான் நீயென சிந்தித் தேத்துதல், மனோபதேச மாண்புயர் மாலை ஆகியவை அடங்கியுள்ளன.

சிவஞான மஹத்வ சுகத்வம் என்னும் நூலில் சுகானந்த துவாதசமாலை, காருண்ய மாலை, வணக்க மாலை, புண்ணியமுணர்த்தும் புனித மாலை, அரஹர சிவசிவ மாலை, வேண்டல் மாலை, மஹத்துவ மஹேஸ்வர மணிமாலை ஆகியவை அடங்கியுள்ளன.

தோத்திர பூஷணத்தில் கபாலீசர் மீது பாடப்பட்ட பஞ்ச ரத்தினம், நவமணி மாலை, அறிவுணர்த்து மாலை, கருணாகர மாலை, சரணப் பஞ்ச ரத்தினம் ஆகியவை உள்ளன.

சிவஞானத்ரயத்தில் கபாலீசர் மீது பாடப்பட்ட சிவசிவ சிற்பர துவாதச மணிமாலை, சிவசிவ சங்கர சிவமாலை, மறை புகழ் மாணிக்க மாலை ஆகியவை உள்ளன.

கங்காதர நாவலர் தென்மொழியும் வடமொழியும் நன்கு கற்றவர் என்பதை அவர்தம் நூல்கள் ஒவ்வொன்றும் காட்டு கின்றது. ஒரு சில இடங்கள் மணிப்பிரவாள நடையிலிருந்தாலும் எல்லா மக்களுக்கும் பிடித்தமாகவும், எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றன. சமயக் கருத்துகள், நிலையாமை பற்றிய கருத்துகள், எளிய முறையிலும் நேரிடை யாக விளங்குவனவாயும் உள்ளன.

ஸ்ரீ கபாலீச்சுரர் தோத்திரம்

மோசூர் முனுசாமி முதலியார் பாடிய ஸ்ரீ கபாலீச்சுரர் தோத்திரம் கலித்துறையில் பத்துப்பாடல்கள், நேரிசை வெண் பாவில் பத்துப் பாடல்கள், வாழி விருத்தம் ஒன்று, ஸ்ரீகபாலீச் சுரர் மாலையில் அறுசீர்க் கழி நெடிலடியாசிரிய விருத்தத்தில் பத்துப் பாடல்கள் ஆகிய இவை மேற்படி முனுசாமி முதலியார் எழுதி 1910இல் வெளியான திருமயிலைப் புராண வசனம் என்னும் நூலின் இறுதியில் இணைப்பாக உள்ளன.[286] இப் பாடல்கள் அனைத்தும் கபாலீசரின் பெருமைகளைக் கூறி அருள் வேண்டும் முறையில் போற்றிப் பாடல்களாக அமைந்துள்ளன. 'தானாய் வளருங் கபாலீச்சுரத் தம்பிரான்'[287] என்று பாடு கின்றார். 'மாமயிலைக் கற்பகப் பூ மாதுடனே மன்னிவண் தூ மணியைக் கண்டு தொழு',[288] 'காவார்ந் திடுநற் திருமயிலைக் கற்பகாம்பாள் காதலன்'[289] என்றும் கபாலீசுவரரையும் கற்பக வல்லியையும் போற்றுகின்றார்.

சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரர் துதிப்பாமாலை

திரு வீ. முனுசாமி பிள்ளை, அவிநாசி ஸ்ரீமத் ஆ. சுந்தர மூர்த்தி நாயனாரின் மாணாக்கரிலொருவராகிய திருமயிலை இராபர்ட்சன்பேட்டையில் வசிக்கும் வீ. முனுசாமி பிள்ளை

என்று, அவரியற்றிய நூலான சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரர் துதிப்பா மாலையில் குறிப்பிடப்படுகின்றது.

விநாயகர் வணக்கம் நான்கு பாடல்களாக அமைந்துள்ளது. இவற்றிற்குப் பண்சீகாமரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தத்தில், 6 பாடல்கள் பாடியுள்ளார். இவற்றிற்குப் பண் நட்டராகம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பாடல்கள் மயிலை தேவே என்று முடிகின்றன. சிவபிரானுடைய பெருமைகளைக் கூறி, இடுக்கண் நீக்கி ஆட்கொள வேண்டுமென்று வேண்டுதலாக இருக்கின்றன. எண்சீர் விருத்தத்தில், கொல்லிக் கௌவாணப் பண்ணில் நான்கு பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் 'மயிலை ஸ்ரீ கபாலீச காருண்ணியனே கருணை புரிந்தருளே' என்று முடிவடைகின்றன. நூலிறுதியில் இரண்டு கீர்த்தனங்களும் உள்ளன. இராகம் தர்பார், தாளம் ரூபகம் என்று குறிப்பிடப்பட்டுள்ள கீர்த்தனத்தின் பல்லவி 'கண்ணருட் செய் கபாலீசனே' என்பதாகும். மற்றொரு கீர்த்தனம் கன்னடா இராகம், ஆதி தாளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பல்லவி 'சித்தமிரங்காதா திருமயிலையீசா' என்பதாகும். இறுதியில் வாழி விருத்தம் உள்ளது. கையொப்ப நேயர்களின் ஆதரவினால் இந்நூல் வெளியிடப்பட்டதாக இறுதிப் பக்க அட்டையில் குறிப்பிடப்படுகின்றது. இதனை நூலாசிரியரே பதிப்பித்து, சாதாரண ஆண்டு மாசி மாதம் 29ஆம் தேதி ஆதிவாரம் [1911) அறுபான் நாயன்மாரின் உற்சவத்தன்று மேற்படியாரால் சுவாமி சந்நிதானத்தில் பாடி விநியோகிக்கப்பட்டது என்பது நூலின் முகப்புப் பக்கத்தில் உள்ள குறிப்பால் தெரிய வருகின்றது.[290]

சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரர் அருள்வளர் மல்லிகைப் பா

புதுவை கு. ஆ. குமாரதேசிகர் இயற்றிய 'சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீச்சுரர் அருள்வளர் மல்லிகைப்பா (1911) சாதாரண ஆண்டு மாசி மாதம் 29ஆம் நாள் ஆதிவாரம் அறுபான் நாயன்மாரின் உற்சவத்தன்று மேற்படியாரால் சுவாமி சந்நிதானத்தில் பாடி விநியோகிக்கப்பட்டது என்றும் நூலின் முகப்புப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[291]

இந்நூலில் விநாயகர் வணக்கம் நேரிசை வெண்பாவில் அமைந்துள்ளது. சண்முகர் துதி, கபாலீச்சுரர் துதி, பன்னிருசீர்

விருத்தத்தில் மூன்று பாடல்களும், கலி விருத்தத்தில் ஐந்து பாடல்களும் உள்ளன. கற்பகவல்லி துதி கீர்த்தனமாக அமைந்துள்ளது. திருச்சங்குத் தொனி என்று நான்கு பாடல்கள் பாடியுள்ளார். இவை போற்றிப் பாடல்களாக அமைந்துள்ளன.

சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் துதிப்பா மாலை

பாலகவி ந. முருகேசம் பிள்ளையவர்கள் சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் துதிப்பா மாலை என்னும் நூலைப் பாடியுள்ளார். இவர் சென்னை புதுப்பேட்டை நிவாசரும், பிருங்கா ஸைலம் ஸ்ரீ சமரச ஞான சன்மார்க்க பஜனையின் போதனாசிரியருமாகிய அங்கம்பாக்கம் பாலகவி ந. முருகேஸம் பிள்ளை என்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளார். இந்நூல் பரிதாபி ஆண்டுப் பங்குனிமாதம் 7 ஆம் தேதி குருவாரம் (1913) அறுபத்து மூவர் நாயன்மானார் உற்சவத்தன்று மேற்படி சந்நிதானத்தில் அரங்கேற்றஞ்செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[292]

விநாயகர் துதி எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளது. அறுசீர் விருத்தத்தில் பத்துப் பாடல்கள் உள்ளன. பண் காந்தார பஞ்சமம் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடல்கள் அனைத்தும் கபாலீஸ்வர குருவே என்று முடிவடைகின்றன. இப்பாடல்கள் பொதுவாகக் கபாலீசர் பெருமைகளைக் கூறி அருள் வேண்டல் முறையிலே அமைந்துள்ளன. நட்டராகப் பண் குறிக்கப்பெற்று எழுசீர் விருத்தம் எட்டுப் பாடல்கள் உள்ளன. இதைத் தொடர்ந்து பண்-வியாழக் குறிஞ்சி என்று குறிப்பிடப்பெற்று அறுசீர் விருத்தம் பத்துப் பாடல்கள் உள்ளன. நூலிறுதியில் வாழி விருத்தம் உள்ளது.

கபாலீசர் குறுங்கழிநெடில்

அப்பாசாமி முதலியார் இயற்றிய கபாலீசர் குறுங்கழிநெடில் என்பது பதினோரு பாடல்களாலானது. ஏட்டுச் சுவடியாக சாமிநாதையர் நூலகத்தில் உள்ளது.[293] முதற் பாடலும் பதினோராம் பாடலும் மட்டும் சுவடிகள் விளக்கத்தில் குறிக்கப் பட்டுள்ளன. அவையும் சிதைந்து காணப்படுகின்றன. ஏட்டின் இறுதியில் "இதை அச்சிற் பதிப்பிக்கப்பட்டால் திருமயிலை கபாலீசர் சந்நிதிவீதியில் உபாத்தியாயர் அப்பாசாமி முதலியார் இயற்றிய தென்று அச்சிற் பதிப்பிக்கவும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கூத்தாடும் விநாயகர் வணக்கப்பாடல் முதலில் உள்ளது. முதற் பாடல் கபாலீசனைப் போற்றுவதாக அமைந்துள்ளது.

திருமயிலை நான்மணி மாலை

நான்மணி மாலை 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும் இது நால் வகை மணிகொண்டு நிரல்படக் கோத்த மாலை போன்று, நால்வகைப் பாக்களை நிரல்பட வைத்து யாத்த நூலிற்கு ஆகு பெயரால் பெயராயிற்று. இதன் இலக்கணம்,

வெண்பா கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தா தியினாற் பதுபெறின்
நான்மணி மாலை ஆமென நவில்வர்[294]

என்று இலக்கண விளக்கம் கூறுகின்றது.

திருமயிலை நகரிடத்தே சிவபிரான், விநாயகர், திருமால், பிடாரி இவர்களுக்கு எவ்வேழு கோயில்கள் தனித்தனி உள்ளன, அன்றியும் கொல்லை, குளம், குட்டை முதலியனவும் ஏழாக உள்ளன. இதற்குக் காரணம் கேட்போமாயின், சத்தபுரி என்று சொல்லப்படும் காசி, காஞ்சி, அயோத்தி, அவந்திகை, மதுரை, மாயை, துவாரகை என்னும் தலத்தில் நாம் யாத்திரை சென்று எய்தும் பேறெல்லாம் இம்மயிலைப் பதி ஒன்றிலே ஒருங்கே எய்தும்படி அமைக்கப்பட்டுள்ளன என்பர் ஆன்றோர்; "இவர் காசியினும் வீசம் அதிகம்" என்று மயிலைச் சிறப்பினைச் சுருக்கமாகச் சொல்லிப் புகழ்வர்.

இத்தகைய புகழ்பெற்ற திருமயிலையின்மீது மயிலை சீனி. கோவிந்தராசன் என்பவர் திருமயிலை நான்மணி மாலை என்னும் நூலைஇயற்றியுள்ளார்.[295] இந் நான்'மணிமாலை, ஒரு விகற்க, இரு விகற்ப, நேரிசை இன்னிசை வெண்பாக்களும், திலதமும், திலதப் போலிகளும், கழிநெடில்அடி விருத்தங்களும், நேரிசை, நிலை மண்டிலம், அடிமறி மண்டலம், இணைக் குறள் ஆசிரியப் பாக்களும் விரவி வரத் தொடுக்கப் பட்டதுமன்றி, சித்தாந்த சாத்திரத்திற் சிறிதும் முரணாகா மலும், அகப்பொருள் துறைகள் அமைந்தும், இலக்கண வரம்பு கடவாமல் இயன்றுமுளதாகலின், முற்றக் கற்ற மூதறிவாள ருக்கு இச்சிறு நூலை என் சிறு விருந்தாக அளிக்கின்றனன்; அவர் இதன்கண் உளவாகும் குணங்கொண்டு, குற்றங்கள் நீக்கி, அடியேனைக் கோதாட்டுவீர்[296] என்கிறார் நூலாசிரியர்.

இந்நூல் வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்னும் வரிசையில் நாற்பது பாடல்கள் உள்ளன. காப்புச்

செய்யுள் தல விநாயகரான கூத்தாடும் விநாயகர்மீது பாடப் பட்டுள்ளது.

சிவபிரான் மாமயிலைத் தேவன்[297], மயிலைத்தேவன்[298] திருமயிலை மேவும் சிவன்[299], என்றெல்லாம் போற்றப்படு கின்றான். வண்மயிலை நாயகர்[300], புன்னைமயிலைப்பிரான்[301] என்றும் போற்றுகின்றார். திருமயிலையின் சிறப்பை,

'ஊர்திரை
தவழ்ந்து பவளமும் தரளமும் சொரியும்
நிவந்தமாமயிலை'

என்று போற்றுகின்றார்.[302]

"தாம்பெற்ற மயில் வடிவம் நீங்கும்படி பூசித்த உமா தேவியார், வேலாயுதம் பெறும்படி வேண்டிய சிங்காரவேலர், அங்கம் பெண் ஆக்கியருளும்படி தேவாரம் ஓதிய ஆளுடை பிள்ளையார், இவர் மூவருள் யாவர் பொருட்டுத் தேவரீர் மேற்கு நோக்கி வீற்றிருக்கின்றீர்" என்னும் முறையில் ஒரு பாடல் பாடியுள்ளார்.[303]

இத்தகைய சிறந்த பாடல்கள் செறிந்த நூல் திருமயிலை நான்மணி மாலையாகும்.

பாபநாசம் சிவன் கீர்த்தனைகள்

பாபநாசம் சிவன் அவர்களின் இயற்பெயர் இராமசாமி என்பதாகும். இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். பாபநாசத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்ததாலும், 'சிவன்' என்று எல்லோராலும் பக்தியோடு அழைக்கப்பட்டதாலும் 'பாபநாசம் சிவன்' என்ற பெயர் ஏற்பட்டது. 1920ஆம் ஆண்டு, சென்னை வந்து திருமயிலைப் பகுதியில் குடியேறியதிலிருந்து கபாலீசுவரர், கற்பகாம்பாள், சிங்காரவேலர் முதலான மூர்த்திகளை ஐம்பது ஆண்டுகளுக்குமேல் வழிபட்டுள்ளார்.

இவர் கபாலீசுவரர், கற்பகாம்பாள் பேரில் பல கீர்த்தனை கள் பாடியுள்ளார். மோகன ராகத்தில் ஆதி தாளத்தில், 'காபாலி கருணை நிலவு பொழி வதன மதிய னொரு' என்னும் பல்லவி யோடு கூடிய கீர்த்தனை, கபாலீசுவரரின் பெருமைகளைக் கூறு கிறது. 'காணக் கண்கோடி வேண்டும் கபாலியின் பவனி' என்று

தொடங்கும் கீர்த்தனை புகழ் பெற்றதாகும். இக்கிர்த்தனை காம்போதி ராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.

பாபநாசம் சிவன் ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் மயிலை மாடவீதிகளில் பஜனை பாடிக் கபாலீசுவரர் புகழை எண்பத்து மூன்று வயது வரை பரப்பியவராவார். இவர் 1890 இல் பிறந்து 1973ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.[304]

திருமயிலைக் குறவஞ்சி

'இம்மயிலைக்குப் பிரபந்த வகைகளுள் ஒன்றான 'குறவஞ்சி' எனும் பிரபந்தம் ஒன்று மட்டும் குறைவாயிருந்தது. அந்தக் குறையை நிறைவாக்குகிறார் அன்பர் ஸ்ரீ வீரமணி அவர்கள், தமது திருமயிலைக் குறவஞ்சி எனும் இப்பிரபந்தத்தால்' என்று இந்நூலின் அணிந்துரை புகழ் பாடுகிறது.[305]

நூலாசிரியர்

இந்நூலை இயற்றியவர் யாழ்ப்பாணம் வீரமணி என்பவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அடையாறு கலாக்ஷேத் திரத்தில் இசை பயின்றவர்.

இந்நூல் திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் முன்னிலை யில், திருமயிலைக் கபாலீச்சர விடாய் ஆற்றி விழாவில் 24.3.1957 இல் வெளியிடப் பெற்றது. நூலாசிரியர் இதனை இசை நாடகம் என்றே குறித்துள்ளார்.

நூல் அமைப்பு

முதலில் விநாயகர் மீது காப்புச் செய்யுளும் தொடர்ந்து கபாலீச்சுரர் துதி, கலைமகள் துதி, நூற்பயன் கூறப் பெறுகிறது.

நூல், கபாலீச்சுரன் பவனி வருதலைக் கட்டியங்காரன் கூறுதல், பெண்கள் வருதலைக் கட்டியங்காரன் தெரிவித்தல், பெண்கள் கபாலியைப் புகழ்தல், கற்பகவல்லி பந்தாடுவதைக் கட்டியங்காரன் கூறுதல், கற்பகவல்லி அம்மானை ஆடுதல், கற்பகவல்லி பந்தாடுதல், கபாலீச்சுரனைக் கற்பகவல்லி காணுதல், கற்பகவல்லி கபாலீச்வரன் மேல் காதல் கொள்ளுதல், கபாலீச்வரனை எனத் தோழி, கற்பகவல்லியிடம் கூறுதல், கற்பக வல்லி இரங்கல், மதியையும் தென்றலையும் மன்மதனையும்

கற்பகவல்லி பழித்து இரங்குவதைக் கட்டியக்காரன் தெரிவித்தல், கற்பகவல்லி தென்றலைப் பழித்தல், கற்பகவல்லி சந்திரனைப் பழித்தல், மன்மதனைப் பழித்தல், தோழி கூறுவதைக் கட்டியக்காரன் தெரிவித்தல்,தோழி தலைவனைப் பழித்தல், தூதுசொல்லி வரும்படி தோழியிடம் கூறுதல், கற்பகவல்லி தோழியிடம் கூறுதல், கற்பகவல்லி தோழியிடம் கபாலீச்வரன் என்ன சொன்னாரென்று கேட்டல், தோழி ஒரு குறத்தியைக் கூட்டி வந்தேனெனல், குறத்தியின் வருகையைக் கட்டியக்காரன் அறிவித்தல், குறத்தி தோன்றல், மலைவளம் கூறுதல், நாட்டு வளஞ் சொல்லல், குறிசொல்ல ஆரம்பித்தல், குறி சொல்லல், கற்பகவல்லி மறுத்து வினாவுதல், குறத்தியின் பதில், கற்பக வல்லி பின்னும் வினாவுதல், குறத்தியின் பதில், கற்பகவல்லி மீண்டும் அதட்டிக் கேட்டல், குறத்தி கபாலீச்சுரன் பெயரைக் கூறுதல், கட்டியக்காரன் கூறுதல், கற்பகவல்லி நாணுவதைக் கண்டு குறத்தி கூறுதல், கட்டியக்காரன் கூறுதல், கடவுள் வணக்கம் என்னும் தலைப்புகளில் பாடல்கள் அமைந்துள்ளன.

அகவல், விருத்தப் பாக்களில் பாடல்கள் அமைந்துள்ளன, சிந்துப் பாடல்களும், கீர்த்தனைகளும் உள்ளன. எல்லாப் பாடல் களுக்கும் இராக தாளங்கள் குறிக்கப்பட்டுள்ளன. கபாலீசுவரர் பெருமையும், மயிலையின் சிறப்பும் இப்பாடல்களில் காணக் கிடக்கின்றன. இந்நூல் ஓர் இனிய இசை நாடகமாகத் திகழ்கிறது.[306]

திருமயிலைக் கபாலீசன் திருமாலை

இந்நூல் ஸ்ரீ பரம்பொருள் பிரபந்தமாலைத் தொடர் என்னும் தொகுப்பு நூலில் காணப் பெறுகின்றது. இந்நூல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் கையெழுத்துப் படியாக உள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் கோட்டையூரைச் சேர்ந்த ஸ்ரீராம நகரத்தில் வசிக்கும் ரா. கனகராஜையர் என்பவர் இந்நூலை 23-3-70 அன்று எழுதி முடித்துள்ளார். இந்நூலில் விநாயகர் மீது காப்புச் செய்யுள் உள்ளது. கலிப்பா வகையில் இயன்ற அறுபத்தைந்து செய்யுட்கள் உள்ளன. கபாலீசுவரர் பெருமைகளை இந்நூல் கூறுகிறது. போற்றிப் பாடல்களாகவும் அருள் வேண்டும் பாடல்களாகவும் இவை அமைந்துள்ளன.[307]

திருமயிலை வெண்பா அந்தாதி

இந்நூல், 'திருமயிலை வெண்பா அந்தாதியும் திருப்போரூர் முருகன் புகழ் மாலையும் சீகாவித் தண்டலம் படை வீட்டம்மன் பதிகமும்' என்னும் நூலிற் காணப் பெறுகிறது. இதனைத் திருமயிலை சே. கோவிந்தராசன் என்பவர் இயற்றியுள்ளார். இந்நூலில் நூறு பாடல்கள் உள்ளன. காப்புச் செய்யுள் விநாயகர் மீது பாடப்பட்டுள்ளது. நேரிசை வெண்பாக்களால் அந்தாதி முறையில் இந்நூல் அமைந்துள்ளது. நூலாசிரியரே அருஞ்சொற் பொருளும் எழுதியுள்ளார். இப்பாடல்கள் நெஞ்சை விளித்து நவில்வதாக அமைந்துள்ளன. அறிவுரைகளும் அறவுரைகளும் கொண்டதாக இந்நூல் விளங்குகிறது. கபாலீசர் மீது பாடப்பட்ட போற்றி நூல்களில் இதுவும் ஒன்றாகும்.[308]

திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் துதி

திரு. என். கோடீச்வர ஐயர் என்பவர் திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் துதி என்னும் பெயரில் கீர்த்தனம் ஒன்று இயற்றியுள்ளார்.[309]

அருட்புகழ்

அருட்கவி சேதுராமன் கபாலீசுவரர் திருமுன்னர் 18-6-62இல் பதிமூன்று பாடல்கள் கொண்ட பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார்.[310]

இவ்வாறு பல்வகைச் சிற்றிலக்கிய நூல்கள் கபாலீசுவரர் மீது பாடப்பட்டுள்ளன. இவற்றால் திருமயிலைத் தலம் பற்றியும் கபாலீசுவரர் பெருமை பற்றியும் அன்பர்களின் பக்தி உணர்வு பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

கற்பகவல்லி மீது பாடப்பட்ட இலக்கியங்கள்

கி.பி.ஏழாம் நூற்றாண்டிலிருந்து கபாலீசுவரருக்கு முதன்மை கொடுத்து அவர் பெயரிலேயே இலக்கியம் படைக்கும் வழக்கம் இருந்து வந்தது. கற்பகவல்லி மீது தனியாக இலக்கியங்கள் படைக்கப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சக்தி வழிபாடு மிகுந்ததாலும் மகளிரே அதிக அளவில் கோயிலுக்குச் செல்லும் பழக்கம் ஏற்பட்டதாலும் இந்நூற்றாண்டிலிருந்து கற்பகவல்லி மீது தனியாகப் பாடல்கள் புனையும் பழக்கம்

ஏற்பட்டது. இந்நூற்றாண்டில் கற்பகவல்லி மீதே அதிக அளவு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. பதிகங்களும் அந்தாதி நூல் களும் பிள்ளைத் தமிழும் கற்பகவல்லி மீது பாடப்பட்டன.

கற்பகவல்லியம்மை பதிகம்

ஆலந்தூர் முத்துசாமி முதலியார் என்பவர் கற்பகவல்லி யம்மை பதிகம் என்று ஒரு பதிகம் பாடியுள்ளார். இப்பதிகத்தில் பத்துப் பாடல்கள் உள்ளன. இவை எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளன. இப்பதிகம் 'திருமயிலைக் கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம்' என்னும் நூலில் காணப் படுகின்றது. 1855ஆம் ஆண்டு இந்நூல் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலின், அச்சுப்படி சிதைந்த நிலையில் தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில் உள்ளது. இப்பாடல்கள் திருமயிலைக் கற்பகவல்லியம்பிகையே என்று முடிகின்றன. இறைவியின் பெருமைகளைக் கூறிப் போற்றி அருள் வழங்குமாறு வேண்டும் பாடல்களாக இவை அமைந்துள்ளன.[311]

கற்பகவல்லியம்மை பதிகம்

தாச்சி அருணாசல முதலியார் கற்பகவல்லியம்மை பதிகம் ஒன்று பாடியுள்ளார். இப் பதிகம் திருமயிலை அருணாசல முதலியாரவர்கள் செய்த 'கபாலீசர் பதிகம் கற்பகவல்லியம்மை பதிகம் சிங்காரவேலர் மாலை' என்னும் நூலில் காணப் படுகின்றது. இந்நூல் 1872இல் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிகம் பன்னிருசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தத்தில் பத்துப் பாடல் களாக அமைந்திருக்கிறது. இப்பாடல்கள் அனைத்தும் 'வீரிபொழில் திருமயிலை வாழ் விரைமலர்க் குழல்வல்லி மரை மலர்ப் பதவல்லி விமலிகற் பகவல்லியே' என்று முடிகின்றன. இப்பாடல்கள் இறைவியின் பொதுவான பெருமைகளைக் கூறி, மூவகை ஆசையிலிருந்து விடுபட வேண்டும், கடைக்கண் பார்த்து வினைதீர்த்து உன் இணை மலர்ப்பதம் அருள் செய்வாய் என்று வேண்டுகின்ற முறையில் அமைந்துள்ளன.[312]

திருமயிலைக் கற்பகவல்லி மீது பதிகம்

இப்பதிகத்தைத் திருக்குருகூர் ஞான சித்த சுவாமிகள் பாடி யுள்ளார். இப்பதிகம் 'திருமயிலை, திருமணவூர், திருவான்மியூர், சாமளவல்லியார் பதிகங்கள்' என்னும் நூலில் காணப் படுகின்றது. இப்பதிகத்தில் எண்சீர்க் கழி நெடில் ஆசிரிய விருத்

த்திலான பத்துப் பாடல்கள் உள்ளன. எல்லாப் பாடல்களிலும் மயிலைக் கற்பகவல்லி என்று இறைவியைக் குறிப்பிட்டும் தன்னை மைந்தனாகக் குறிப்பிட்டும் பாடியுள்ளார். எல்லாப் பாடல்களிலும் தன் தவறுகளை நினைந்து அழவோ! அழவோ! என்று அழுதழுது பாடிக் கற்பகவல்லியிடம் அருள் வேண்டு கிறார்.[313]

திருமயிலைக் கற்பகவல்லி அஷ்டகம்

இந்நூல் கடவுள் வாழ்த்து, நூற்பயன் நீங்கலாக எட்டுப் பாடல்களால் அமைக்கப்பட்டுள்ளது. கலி விருத்தத்தால் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இதனை இற்றைக்குச் சற்றேறக் குறைய எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தெய்வசிகாமணி நாயனார் என்பவர் இயற்றிப் பதிப்பித்துள்ளார். உரை தேவையின்றி மிக எளிமையாகப் புரிந்து கொள்ளத்தக்க சொற்களால் ஆக்கப் பெற்றுள்ளது. இது ஒரு சிறந்த தோத்திர நூல்.[314]

கற்பகவல்லி மாலை

இந்நூல் கற்பகவல்லி மீது பாடப்பட்டதாகும். எண்சீர் விருத்தத்தாலான 105 செய்யுட்களைக் கொண்டுள்ளது. உரையோடு உள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத்தில் இந்தச் சுவடி உள்ளது. இதன் காப்புப் பாடல் கூத்தாடும் விநாயகர் மீது பாடப் பட்டுள்ளது. இறுதிப் பாடலில் இந்நூலைக் கற்பவர், படிப்பவர் பெறும் பயன் கூறப்பட்டுள்ளது.[315]

கற்பகவல்லியம்மையார் பஞ்ச ரத்தினம்

மதுரகவி மாணிக்க முதலியார், கற்பகவல்லியம்மையார் பஞ்சரத்தினம் என்னும் பெயரில் ஏழு சீர் விருத்தத்தில் ஐந்து பாடல்கள் கற்பகவல்லி மீது பாடியுள்ளார். இப்பாடல்கள் மயிலை வாழுங் கற்பகவல்லித் திருவே கருணை வாழ்வே என்று முடிகின்றன. போற்றிப் பாடல்களாகவே அமைந்துள்ளன.

சிங்காரவேலர் பதிகம் என்னும் தலைப்பில் கொச்சகக் கலிப் பாவில் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் சிங்கார வேலரசே என்று முடிகின்றன; முருகன் பற்றிய புராணக் கதை களோடு அருள் வேண்டும் முறையில் அமைந்துள்ளன. இவர் மதுரகவி என்னும் பட்டத்தைப் பெற்றவராவார். இவர்

பாடல்கள் 1905இல் அறுபத்து மூவர் விழாவில் வெளியிடப் பட்ட நூலில் அடங்கியுள்ளன.[316]

ஸ்ரீ கற்பகாம்பாள் பாடல்கள்

இப்பாடல்கள் கையெழுத்துப்படியாக மயிலைக்கபாலீசுவரர் கோயில் நூலகத்தில் உள்ளது. இதில் பத்தொன்பது பாடல்கள் உள்ளன. 1964ஆம் ஆண்டு அம்பிகையின் அருள்வாக்கினால் நெல்லையைச் சேர்ந்த யு. எஸ். நடராஜ சர்மா என்பவர் கற்பக வல்லியின் சந்நிதியில் இப்பாடல்களைப் பாடினார். இக்கீர்த் தனைகள் இராக தாளங்களோடு அமைந்துள்ளன. முதல் கீர்த் தனை, தல விநாயகரான நர்த்தன விநாயகர் மீது பாடப் பட்டுள்ளது. இரண்டாம் கீர்த்தனை முருகன் மீதும், மூன்றாம் கீர்த்தனை கபாலீசுவரர் மீதும் துதிப் பாடல்களாகப் பாடப் பட்டுள்ளன. நான்காம் கீர்த்தனையிலிருந்து பத்தொன்பதாம் கீர்த்தனை முடிய கற்பகவல்லியின் மீது பாடப்பட்டுள்ளது. வட மொழிச் சொற்கள் மிகுந்துள்ள போதிலும் பாமர மக்கள் படித் துணர்வதற்கேற்றவாறு எளிய நடையில் இயற்றப்பட்டுள்ளன. இப்பாடல்கள் அருள்வேண்டும் முறையில் அமைந்துள்ளன.[317]

கற்பகாம்பிகை அந்தாதிப் பதிகம்

சுவாமி சரவண பவானந்தர் என்பவர் கற்பகவல்லியின் மீது அறுசீர் விருத்தத்தில் பத்துப் பாடல்களைக் கொண்ட கற்பகாம்பிகை அந்தாதிப் பதிகம் என்னும் பதிகத்தைப் பாடி யுள்ளார். இவை எளிய நடையில் கற்பகவல்லியை வேண்டுகின்ற முறையில் அமைந்துள்ளன. இப்பாடல்கள் அந்தாதி முறையில் அமைந்துள்ளன.[318]

அருட்புகழ்

அருட்கவி சேதுராமன் கற்பகாம்பிகையம்மை திருமுன் 1962இல் ஒருபா ஒருபஃது கட்டளைக்கலித்துறையில் ஒரு பதிகம் பாடியுள்ளார். இதில் பன்னிரண்டு பாடல்கள் உள்ளன. முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றுபவர் நூலர்சிரியர் என்பது அவருடைய பாடல்களால் புலனாகின்றது. இப்பாடல்கள் அருள் வேண்டும் முறையில் அமைந்துள்ளன.[319]

கற்பகவல்லி மாலை

இந்நூல், பராசக்தி பிரபந்த மாலை என்னும் தொகுப்பு நூலில் காணப்படுகின்றது. இது கையெழுத்துப்படி வடிவில்

உள்ளது. காப்புச் செய்யுள் நீங்கலாக நூற்றெட்டுப் பாடல்கள் உள்ளன. இதனை இயற்றியவர் நா. கனகராஜையர் என்பவரா வார். இந்நூல் கலித்துறைச் செய்யுட்களால் அமைந்துள்ளது. 1969இல் இந்நூலாசிரியர் சென்னையில் இருக்கும்போது இப் பாடல்களைப் பாடினார் என்பது தெரிய வருகிறது. இப்பாடல் கள் அனைத்தும் மயிலையிற் கற்பகமே என்று முடிகின்றன. மயிலையின் சிறப்பு, புராணக் கதைகள், கற்பகவல்லியின் பெருமை ஆகியவை இப்பாடல்களில் கூறப்படுகின்றன. இப் பாடல்கள் போற்றிப் பாடல்களாகவும், அருள் வேண்டும் பாடல்களாகவும் அமைந்துள்ளன.[320]

ஸ்ரீ கற்பகாம்பாள் அந்தாதி

சுத்த சத்வானந்தா என்னும் புனை பெயருடைய என். எஸ். சிதம்பரம் இந்நூலைப் பாடியுள்ளார். அந்தாதி ஐந்து என்னும் தொகுப்பு நூலில் இந்த நூல் காணப்பெறுகிறது. விநாயகர் துதி, நூற்பயன் நீங்கலாக நூறு பாடல்கள் உள்ளன. இப் பாடல்கள் கலித்துறையில் அமைந்திருக்கின்றன. இசைப் பாடல் களாக இவை அமைந்துள்ளன. இதையடுத்து, கற்பகாம்பாள் மீது பாடியுள்ள ஐந்து கீர்த்தனங்கள் காணப்படுகின்றன.[321]

திருமயிலாபுரிக் கற்பகாம்பிகை மாலை

இந்நூலை, கி.வா.ஜகந்நாதன் இயற்றியுள்ளார். கட்டளைக் கலித்துறையால் இயன்ற முப்பது செய்யுட்களை இந்நூல் கொண்டுள்ளது. இப்பாடல்கள் அருள் வேண்டும் முறையில் அமைந்துள்ளன.[322]

திருமயிலை ஸ்ரீ கற்பகாம்பாள் அஷ்டகம்

இந்நூல் பன்னிரு சீர் விருத்தத்தில் எட்டுப் பாடல்களைக் கொண்டுள்ளது. காமாட்சி தாசர் ஆர். சோமசுந்தரம் ஐயர் என்பவர் இதனை இயற்றியுள்ளார்.[323]

திருமயிலைக் கற்பகாம்பிகை பிள்ளைத் தமிழ்

திருப்புகழ்க் கவிராயர் ஈ. வே. வேங்கடசுப்பிரமணியன் என்பவர் காப்புச் செய்யுள் இரண்டு நீங்கலாகப் பருவத்திற்கு ஒரு பாடல் விதம் பத்துப் பர்டல்களைப் பாடியுள்ளார்.[324]

திருமயிலைக் கற்பகவல்லி திருப்பதிகம்

இந்திரபீடம் பாலகவி ரா. அருளானந்தம் என்பவர் திருமயிலைக் கற்பகவல்லி திருப்பதிகம் என்னும் பெயரில் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் எழுசீர் விருத்தத்தில் அமைந்துள்ளன.[325]

இப்பகுதியில் கூறப்பட்ட இலக்கியங்களினால் இக்காலத்தில் கற்பகவல்லி மீதே கவிஞர்கள் அதிகமாகப் பாப்புனைகின்றனர் என்பதை அறியலாம்.

சிங்காரவேலர் மீது பாடப்பட்ட இலக்கியங்கள்

திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் குடிகொண்டிருக்கும் சிங்காரவேலனை அருணகிரியார் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் புகழ்ந்து பாடியுள்ளார். அவருக்கு முன்னர், சிங்காரவேலர்மீது பாடல் பாடிய புலவர் எவரும் இலர். அவருக்குப் பிறகு கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் சிங்காரவேலர்மீது சிற்றிலக்கியங்கள் பாடப்பெற்றன. அதைத் தொடர்ந்து புலவர் பலரும் பதிகங்கள் பாடியிருக்கின்றனர்.

திருமயிலையும் அருணகிரிநாதரும்

சிவ வழிபாட்டுப் பெருமையைப்போலச் செவ்வேளாகிய முருகன் வழிபாடும் பழமையானதே. எனினும், பரிபாடற்கும் திருமுருகாற்றுப்படைக்கும் பின்னர்க் குறிஞ்சிக் கிழவனாகிய குமரவேட்கு வழிபாட்டுப் பாடல் நூல்கள் பதிமூன்றாம் நூற்றாண்டு வரை தோன்றவில்லை எனலாம்.

திருவண்ணாமலையில், பிரபுட தேவராயர் ஆட்சிக் காலத்தில் கி. பி. 15ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் தோன்றினார்.[326] இவரைப் பற்றிய வரலாறுகள் தெளிவாக இல்லை. ஒன்றுக்கொன்று முரணாகவும் நம்புதற்கு அரிதாகவும் உள்ளன.

இளமையில் கட்டுக்கடங்காமல் இன்பத்துறையில் ஈடுபட்டு, நோய்வாய்ப்பட்டுப் பிறகு முருகனை முழுமுதற் பொருளாக நினைந்து பாடிய சந்தப் பாடல்களே இவர் வண்ணப் பாடல்கள். பிறவா யாக்கைப் பெரியோன் சிவனை வழிபட்டுச் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் பாடியதுபோல ஆறுபடை வீடுகளையும் குன்றுதோறும் அமர்ந்த குமரனையும்

சிவத்தலங்களிலிருந்த வடிவேலனையும் வழிபட்டுப் பாடினார். 'முத்தைத் தருபத்தித் திருநகை' என்று முருகப்பெருமானால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு, இவர் பாடிய அனைத்துப் பாடல்களும் வண்ண இலக்கியத்தைச் சேர்ந்தவை; சந்த இனிமை சார்ந்தவை. துள்ளலும் துடிப்பும் மிகுந்த அருவி வெள்ளம் போன்றவை. திருப்புகழ் என்று அவை தொகுக்கப்பட்டுள்ளன. இன்று நமக்குக் கிடைத்துள்ளவை 1307 பாடல்கள். 1008 மேள கர்த்தா எனப்படும் பண்ணடைவுடன் விளங்குகின்றன. இவர் தமிழ்-வடமொழி ஆகிய இருமொழிப் புலமையுடையவர். ஆகையால்தான் சந்தத்திற்கியைய மிகப் பல வட சொற்களைக் கலந்துள்ளார். சிவத்தலங்கட்கு அருணகிரிநாதர் சென்று பாடினும் அங்குள்ள சேந்தனைப் பாடுவதையே சிந்தையிற் கொண்டுள்ளார். கௌமாரக் கொள்கையாகிய 'முருகனே முழுமுதல்' என்ற முறையில் திருமயிலைப் பதியைப் பத்துப் பாடல்களில் பாடியுள்ளார். முதற்பாடலில் அசுரர்களுடன் பொருது அவர்கள் சாக வேலெறிந்தவன் என்றும், அருமையான இசைக்கேற்ற நடனமிடும் மயில் மீதமர்ந்து வரும் இமையவன் குமரன் என்றும், ஆகமங்கள் போற்றுகின்ற இனிய மயிலையில் உறைபவன் என்றும் போற்றுகிறார்.[327] இரண்டாம் பாடலில் கயிலைப் பெருமானின் திருமகன் என்றும், அலை கடற்கரையில் உள்ள மயிலைப் பதியில் உறைந்து அடியவர்க்கு மகிமை செய்பவன் என்றும் செப்புகிறார்.[328] மூன்றாவது பாடலில் மயிலை மாநகர் மேவிய கந்தப்பெருமாளே என்று போற்றுகின்றார்.[329]

நான்காம் பாடலில் உலகின் பிறவிப் பிணியைப் போக்கவும், இருவினை தீரவும், மாதொரு பாகன் ஈன்றவன் என்றும், வள்ளியை மணந்தவன் என்றும், பெரும் பெயர் பல பெற்றவன் என்றும், அசுரர்கள் வாழ்வு கெட அயில்வேல் எறிந்தவன் என்றும், பேரழகும் பேரறிஞர்களும் பெரும் புகழும் பெரு வளமும் மிகுந்த மயிலையில் தேவர்களும், சிவனடியார்களும் துதிக்கும் வண்ணம் வீற்றிருப்பவன் என்றும் விளம்புகிறார்.[330] ஐந்தாம் பாடலில், காலில் ஒலி பொருந்திய தண்டையுடன், கலாப மயிலூர்ந்த குமரேசன் என்றும், சினங்கொண்டு வந்த சூரனை அங்கம் பிளக்க அவன் கதறிவிழச் செய்த முருகன் என்றும், சடாமுடியில் கங்கையையும் கொன்றையையும் அணிந்து பிறையணிந்து மலையரையன் மாதை மணந்து பெற்றெடுத்த மயிலை வாழ் பெருமான் என்றும் பேசுகிறார்.[331] ஆறாம்

பாடலில் துளப மணி மார்பனும் சங்கு சக்ரதாரியுமான திரு மாலின் மருகோன் என்றும், நான்மறை வேதியர் மிக்க மயிலை யில் பச்சை மயில் மீதமர்ந்தவன் என்றும், எலும்பைப் பெண் ணுருவாக்கிய பாடலைச் சொன்ன குமரேசன் என்றும், அசுரர் களைக் கொன்று தேவர்களை வாழ வைத்தவன் என்றும் வாழ்த்துகின்றார்.[332] ஏழாம் பாடலில் கோலமயில் மீது ஆறு முகங்களுடனும் ஈராறு வேலுடனும் ஈராறு குவளைக்கண் களுடனும் வருகின்றவன் என்றும், மாமேருவும் ஆதிசேடனும் நடுநடுங்கக் கடலைக்கலக்கி, அசுரனை வென்றாண்டவன் என்றும், விண்ணைத்தொடும் பலாவும் வேறுபல மரங்களடர்ந்த சோலையும் வாவியும் நீரோடையும் உடைய மாட மாளிகைகள் நிறைந்த மயிலை வாழும் தேவர் பெருமாள் என்றும் துதிக் கின்றார்.[333] எட்டாம் பாடலில், தேவர்கள் வேண்ட சூரபன் மனைக் கொன்று, வலிமையோடு அழகிய மயிலையில் வீற்றிருப் பவன் என்றும் ஏத்துகின்றார்.[334] ஒன்பதாம் பாடலில் பற்பல பெயர்களை உடைய உமையவன் மகன் என்றும், அசுரரை வேலொடும் அழித்து, மயில்மீது வரும் முருகன் என்றும் தேன் சொரியும் மலர்வனம் சூழ்ந்த மயிலையில் வாழும் சேந்தன் முதலிய பல பெயர்கள் உடையவன் என்றும் உரைக்கின்றார்.[335] பத்தாம் பாடலில், உமையவளின் பற்பல பெயர்களைக் கூறி அவள் சேய் என்றும், உயர் வரங்களைப் பெற்ற மன்னன் என்றும், வேத முடிவினன் என்றும், தேவர்கட்குக் காரணன் என்றும் மயிலைப் பதியில் வாழும் தேவர்தம் தலைவன் என்றும் பாடுகின்றார்.[336]

இந்தப் பத்துப் பாடல்களிலும் மிகுதியும் பாதிப் பாடல்கள் பரத்தையரிடம் பாழ்படாமல் வாழ வேண்டும் என்பதும், பிற பாதியில் சிவன், உமை, திருமால் அசுரருடன் போராடி வென் றமை ஆகியவையுமே குறிக்கப்படுகின்றன. மயிலையின் சிறப்பை மற்ற மயிலைப் பிரபந்தங்களைப் போலவே பாடுகிறார். தல விருட்சமாக மற்றவர்கள் புன்னையைப் பாடுகையில் அருணகிரி நாதர் மட்டும் திருப்புகழ் 702ஆம் பாடலில் பலா மரங்கள் நிறைந்த சோலை என்கிறார்.

மற்றும் அருணகிரிநாதர் மயிலையில் வீற்றிருக்கும் முருகனை, இலக்கியங்களும் மக்களும் வழங்கும் சிங்காரவேலர் என்னும் பெயரால் ஒரு பாடலிலும் குறிக்கவில்லை. பல சந்தக் குறிப்பில் சிங்காரவேலர் என்ற பெயரை இணைத்திருக்க முடியும். அருண கிரி நாதர் அப்பெயரைக் கையாளாததால் அவர் காலத்தில் மயிலைச் சிங்காரவேலர்க்கு அப்பெயர் வழங்கவில்லை என்று தெரிகிறது.

திருமயிலைச் சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ்

பண்டைத் தமிழர் நானிலங்கட்குத் தெய்வம் வகுக்கையில் குறிஞ்சிக்கு முருகனைக் குறித்தனர். இச்சேயோன் சங்க இலக்கியங்களில் முருகன் என்றும், செவ்வேள் என்றும் வெல்வேள் என்றும் குறிக்கப்படுகிறான். முருகக் கடவுட்குரிய கதைகள் - கற்பனைகள் பரிபாடலிலும் திருமுருகாற்றுப் படையிலும் மிகுந்துள்ளன. கந்தபுராணத்தில் வடக்கும் தெற்கும் கலப்புற்றது. தேவாரப் பதிகங்களில் சிவபெருமான் முன்னிலை பெறவும், முருகக்கடவுள் அப்பதிகளில் இருந்ததாகவும் காண அரிதாக உள்ளது. சங்க இலக்கியங்களில் முருகன் மிகுதியும் சிவபெருமான் அங்குமிங்குமாகவே பேசப்படுகின்றார். கி. பி. 15ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் முருகனின் பெரும் புகழைத் திருப்புகழாகப் பாடினார். அருணகிரியாரைப் பின்பற்றிப்பெரும் பெயர் முருகனின் திருநலம் பாடும் பாவலர் கூட்டம் பல்கிப் பெருகின. பேரிலக்கியம் முதல் சிற்றிலக்கியம் வரை முருகன் புகழ் பாடுவோர் பல்கிப் பெருகினர்.

பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியம் பெரியாழ்வாரில் தொடங்கி எல்லாச் சமயத்துள்ளும் தமிழில் தழைத்தது. இறைவழிபாடு அன்பின் அடிப்படையில் அடியார்கள் தம்மை ஆள்பவனுக்கு மக்களாகவும், உற்ற நண்பராகவும், தொண்டராகவும், உடன் உழைப்பவருமாக நால்வகை நெறியிலே வழிபடுவர். ஆனால், அனைத்துயிர்க்கும் தாய் தந்தையாக விளங்கும் கடவுளையே குழந்தையாக்கிப் பாடும் மரபும் மாண்பும் தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டெனில் இஃதொரு தனிச் சிறப்பே. அன்பும் அருளும் ஆர்வமும் பொருந்திய சமய நெறியிலே இப் பிள்ளைத் தமிழ்நெறி இறையருளின் பொதுவுடமையாகவே தமிழகத்தில் செழித்ததெனில் மிகையன்று. பேரன்பினால்தான் எல்லாப் பொருள்களுக்குள்ளும் மறைவில் அடங்கியிருக்கும், அழகை, அன்பை, அருளை, ஆற்றலை உணர முடியும் என்பதற்கும் பிள்ளைத்தமிழ் நூல்கள் சான்று. இவ்வகையில் தாண்டவராயர் இயற்றிய திருமயிலைச் சிங்காரவேலரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டியற்றப்பட்ட திருமயிலைப் பிள்ளைத் தமிழும் அமைந்துள்ளது.

'பிள்ளைப்பாட்டு' எனப்படும் பிள்ளைத் தமிழ் தாம் வழிபடும் இறையைக் குழந்தையாகப் பாவித்து, காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில்,

சிறுதேர் ஆகிய பத்துப் பருவங்களில் வைத்துப் போற்றப்படுவது இப்பாட்டின் பொருண்மை.

தோற்றம் முதல் யாண்டு ஈரெட்டு அளவும்
ஆற்றல் சான்ற ஆண்பாற்கு உரிய[337]
காப்பொடு செங்கீரை, தால் சப்பாணி
யாப்புறு முத்தம், வருக என்றல் முதல்
அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்
நம்பிய மற்றவை சுற்றத்து அளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்,[338]

என்னும் இவ்விலக்கணத்திற்குற்ற இலக்கியமாக மரபின் வழா தமைந்தது 'திருமயிலைப் பிள்ளைத்தமிழ்'. இந்நூலாசிரியர் 18ஆம் நூற்றாண்டினர் ஆதலின் இவர்க்கு முன் பாடிய பல பிள்ளைத் தமிழ்ச் செய்திகள் குறிப்பாக முருகனைப் பற்றிய பாடுபொருள் கள் அப்படியே வந்துள்ளன. ஒவ்வொரு பருவத்திற்கும் பப் பத்துப் பாடல்களே பாடியுள்ளார். பாடல்கள் தொடை நலமும் நடை நலமும் கொண்டிலங்குகின்றன. கடவுள் வாழ்த்துப் பாடல் உள்பட 101 பாடல்களைக் கொண்டது இந்நூல். ஆசிரியரின் தமிழ்ப்பற்றும் கற்பனைத் திறனும் சமயச் சால்பும் நூலெங்கும் ஊடும் பாவுமாக அமைந்துள்ளன.

தாண்டவராயக் கவிராயர்

இவர் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர். இவருடைய ஊர் இன்னதென்று தெரியவில்லை.[339] சக ஆண்டு 1678இல் பவ வருஷம் ஆவணி மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் இந் நூலை அரங்கேற்றினார் என்பது சிறுதேர்ப் பருவத்துப் பத்தாம் பாடலால் தெரிய வருகிறது. அதாவது கி. பி. 1756இல் ஆகும். மயிலையிலுள்ள வைசிய வள்ளல்கள், சிங்கார வேலர் மேல் பிள்ளைத் தமிழ் பாடச் சொன்னதை முருகன் வாக்காகவே கொண்டு கட்டளையிட்டதாக எண்ணிப் பாடினார். 'புயலை நிகர் செங்கையினர் பூம்பாவை யூரவர், நின்புகழ் மருவு பிள்ளைத் தமிழால் புகல் எனத் தம் அமுத வாக்கினால் ஒருசீர் புகன்றது உன் வாக்கதாக'[340] என்று பாடியுள்ளார்.

தாண்டவராயர், மயிலாப்பூரில் வாழ்ந்து வந்த பூம்பாவை வேலப்ப முதலியாரென்னும் செல்வரின் ஆதரவினால் இந் நூலையும், 'திருமயிலை யமக அந்தாதி', 'சிங்காரவேலர்

வெண்பா' என்னும் நூல்களையும் இயற்றி அரங்கேற்றினார் என்பதைத் திருமயிலை யமக அந்தாதியால் அறியலாம்.[341] தாண்டவராயக் கவிராசர் என்று அம்பலவாணக் கவிராயர் இவரைப் பாராட்டியிருக்கிறார். தாண்டவராயத் தமிழ்ச் சிங்கம் என்றும் பாராட்டப்பட்டுள்ளார்.[342] தாண்டவராயக்கவிராயர் சிவபக்திச் செல்வமும், தமிழன்பும், நன்றியறிவும், கடினமான அமைப்புடைய செய்யுட்களையும் பாடும் திறமையும், உரையெழுதும் ஆற்றலும், சிவத்தலங்களையும் நாயன்மார்களையும் நினைந்து பாராட்டும் இயல்புமுடையவர். திருமயிலைப் பிள்ளைத்தமிழ், அரசினர்கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தார் 1953இல் வெளியிட்ட திருமயிலைப் பிரபந்தங்கள் என்னும் தொகுப்பில் முதல் நூலாக உள்ளது.[343]

தமிழ்ப் பற்று

மொழியைப் பற்றிச் சிறப்பித்துப் பாடுவதென்பது தமிழிலக்கியத்தில் திருவள்ளுவரைத் தவிர ஏனைய புலவர்கட்குச் சங்க காலம் முதல் இன்றுவரை பேருணர்ச்சியாக உள்ளது. அவ்வகையில்தான் தாண்டவராயப் புலவரும்,

'வீரனைச் சிங்கார வேலனைப் பரவுமென் மெய்ப்புகழ் தமிழ் தழைகவே',[344] 'தென் தமிழ்க் கடல்',[345] 'மதுரத் தமிழோர்',[346] 'தண்டமிழ் மொழிகள் பயின்றிடு மழலைகள் தங்கிய கனி வாயும்',[347] 'தமிழ் முனி சற்குரு நாதா',[348] 'தண்டமிழ் மயிலே',[349] 'பைந்தமிழ் உரையே',[350] 'மிக்க செந்தமிழ் விளங்கும்',[351] 'தமிழ் கொடுன் னடியினைத் துதிசெய் குலத்தை வளர்ப் போனே',[352] 'மதுரத் தமிழாம் தேவாரம் மொழியும் மழலைத் திருவாயான்',[353] 'முதிர் முத்தமிழைப் புகழ் வாயான்',[354] 'தேறு தலைச் சங்கத் தமிழ்ச் சொல் சேயே',[355] பாவேந்தர்கள்நின் அருணகிரி பாடுந்தமிழைப் பழித்தோமோ[356] எனப் பல்வேறிடங்களில் தமிழ்மொழியை அடைமொழியாகவும் அகப்பொருள் உரையாகவும் வாய்மொழியான தாய் மொழியாகவும் சிறப்பிக்கின்றார்.

எங்கும் பொதுவாக அமைந்த காரண காரிய விதிப்படி எந்தப் பொருளுக்கும் ஒன்றோடு ஒன்று இடைவிடாத தொடர்பு இயற்கையில் இருப்பதைப் போல மனித உணர்வுகட்கு மொழி அடிப்படை என்பதை அறிந்தே தம் தாய்மொழியைப் புலவர்கள் தாம் வழிபடும் பரம்பொருளோடும் இயைபுபடுத்தினர் போலும்.

அருணகிரிநாதரைப் பாராட்டல்

முருகன் மீது திருப்புகழ் பாடிய அருணகிரியாரைத் தாண்டவராயர் தன்னுடைய பாடல்களில் குறிப்பிடுகின்றார். 'பண்டிங்க ளப்பரிய தமிழ் பாடு மருணகிரி பாமாலை',[357] 'அலகில் மெய்யடி அருணகிரி',[358] 'கடிகி யண்ணா மலையி னருணகிரி முன்றொழுது காணுமா வோடி வந்தான்'[359] 'பாவேந்தர்கள் நின் அருணகிரிப் பாடுந் தமிழைப் பழித் தோமோ',[360] 'ஆசில் விரை வாசுகவி யரிய சந் தத்தமிழ்க் கருணகிரி நாதர்'[361] என்றெல்லாம் அருணகிரியாரைப் பாராட்டு கின்றார். இவற்றால் தாண்டவராயரின் தமிழ்ப் பற்றும் விளங்கும்.

திருஞான சம்பந்தர் புகழ்

முருகனே சம்பந்தராக அவதரித்தார் என்பது சைவ மரபு. இதனைத் தாண்டவராயர் காப்புப் பருவத்தில் கற்பகவல்லி அம்மைமீது பாடிய பாடலில், சம்பந்தர் சமணரை அனல், புனல் வாதங்களில் வென்றதை முருகன் செயலாகவே பாடுகிறார்.[362] சம்பந்தர் அங்கம் பூம்பாவை ஆக்கிய செயலை, முருகன் செய லாகப் பாடுகிறார்.[363]

சம்பந்தர் ஞானப் பாலுண்ட செய்தியை ஒரு பாடலில் கூறு கின்றார்.[364] முருகனே பிரம கவுணியர் குலத்தில் பிறந்தவன் என்றும்,[365] அவனே முத்தமிழ் ஞான சம்பந்தன் என்றும்,[366] கூன் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்ததும், அங்கம் பூம் பாவையாக்கியதும் முருகன் செயலே என்றும்,[367] சமணரைக் கழுவேற்றியதும் அவன் செயலே என்றும்,[368] பிரமபுரத்து வேதியன் பிள்ளை,[369] என்றும் கூறிச் சம்பந்தர் செயல்களை எல்லாம் முருகன் செயலாகவே பாடுகின்றார்.

இராமாயணக் கதை முழுவதையும் ஒரே பாட்டில் வருமாறு செய்திருப்பது தாண்டவராயக் கவிராயரின் புலமையைக் காட்டு கிறது.[370] புலவரின் தமிழிலக்கணப் புலமை ஒரு பாட்டில் புலப் படுகின்றது. ஐந்திலக்கண விளக்கத்தைக் காட்டும் வகையில் அப்பாடல் அமைந்துள்ளது.[371] முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளான பரங்கிரி, செந்தூர், ஏரகம், திருவாவினன்குடி, பழ முதிர்சோலை, குன்றுதோறாடல் ஆகிய தலங்களை ஒரு பாடலில் தொகுத்துச் சொல்கிறார்.[372]

கற்பனைத் திறன்

கற்பனைத் திறன் மனிதர்க்கே அமைந்த ஒரு பேராற்றல், பேரின்பத்தையும் பெருமகிழ்வையும் தர வல்லது. நல்லுணர்ச்சிகளையும் நல்லெண்ணங்களையும் அழகுபடுத்தும் ஒன்றாகும். கற்பனை என ஒன்றில்லையேல் மனிதன் சிந்திக்கத் தெரிந்தவனாக வாழ முடியாது. வாழ்விற்கும் கலைக்கும் இரு கண்கள் எனவும் கற்பனையை அழைக்கலாம்.

தாண்டவராயப் புலவர் வழிவழிக் கற்பனைகளை எடுத்தாண்டாலும் தமக்கெனச் சில கற்பனைகளைக் காட்டுகிறார். சப்பாணிப் பருவத்தில் மூன்றாம் நான்காம் பாடல்களிலும், வருகைப் பருவத்தில் எட்டாம் பாடலிலும், அம்புலிப் பருவத்தில் ஆறாம் பாடலிலும், சிறுதேர்ப் பருவத்தில் நான்காம் பாடலிலும், மனம் புனைந்தியற்றும் கற்பனைகளைக் காணலாம்.

தல புராணக் கதைக் குறிப்புகள்

சிவனருளால் அங்கம் பூம்பாவையானதும், உமை மயில் வடிவில் இறைவனைப் பூசித்த செயலும்,[373] சுக்கிரன் இழந்த கண் பார்வையை மீளப் பெற்றதும்,[374] கபாலீசுவரரை இராமபிரான் வழிபட்டதும்,[375] இராமபிரான் முருகப்பெருமானுக்குத் தேர் செய்து கொடுத்ததும்.[376] ஆகிய கதைகள் இப்பிள்ளைத் தமிழ்ப் பாடல்களில் காணக்கிடக்கின்றன. வாயிலார் நாயனார் வரலாறும்,[377] கந்தபுராணக் கதையும்,[378] இந்நூலில் கூறப் படுகின்றன.

மூர்த்தி

தல விநாயகராம் கூடுத்தாடும் பிள்ளையாரைக் கூத்தாடும் ஐங்கரன் என்று காப்புச் செய்யுளில் குறிப்பிடுகின்றார். கபாலீஸ்வரரைக் குறிப்பிடும்போது 'திருக்கபாலீச ரென்னப் பேர் கொண்ட வேணிப்பிதா' என்றும்,[379] 'விமலக் கபாலீசர் என்றும்',[380] 'மெய்ய கபாலீசுவரன் என்றும்',[381] 'மிளிர் புன்னாகத்தீசர் என்றும்',[382] பூம்பாவையீசர் என்றும்,[383] அற்புதக் கபாலீசர் என்றும்,[384] போற்றிப் புகழுகின்றார். கற்பக வல்லியைக் குறிப்பிடும்போது, 'மெய்ப்பாதி குடிகொண்ட கற்பக மின்னாள்' என்றும்,[385] 'பணிமொழிக் கற்பகவல்லி' என்றும்,[386] 'கொத்தலர் கற்பவல்லி' என்றும்,[387] ஆசிடை அடங்கு கற்பக வல்லி என்றும்,[388] பாடிப் பரவுகின்றார். சிங்கார வேலரை

ஆறுமுகச் சுதன் என்றும்,[389] காலாயுதக் கடவுள் என்றும்,[390] முருகேசன் என்றும்,[391] வடிவேலன் என்றும்,[392] போற்று கின்றார்.

தலம்

திருமயிலையைத் தென்மயிலை என்றும்,[393] திருமயிலை என்றும்,[394] அணிமயிலைப்பதி என்றும்,[395] வேதபுரி என்றும்[396] சுக்கிரபுரி என்றும்,[397] ஆதிமயிலைப் பதி என்றும்[398] மயிலா புரி என்றும்,[399] பூம்பாவையூர் என்றும்[400] பல பெயர்களால் குறிப்பிடுகின்றார்.

தீர்த்தம்

கபாலீசுவரர் கோயில் திருக்குளத்தைச் சிவசத்தி தீர்த்தம் என்றும்,[401] கபாலி தீர்த்தம் என்றும்,[402] குறிப்பிடுகின்றார்.

புலவரின் பாடல்களில் இனிய கவிதைப் பாங்கும் இதயங் களை ஈர்க்கின்ற உணர்ச்சி ஆற்றலும் கற்பவர்களைப் பெரிதும் கவர்கின்றன. 'திருமயிலைச் சிங்காரவேலர் பிள்ளைத் தமிழ் வருணனைத்திறம் மிகுந்தது; தத்துவக் கருத்துகள் அடங்கியது; முன்னோர்மொழி பொருளைப் பொன்னே போல் போற்றுவது, ஓசைநயம் சந்தம் ஆகியவை நிறைந்தது' என்று பேராசிரியர் சி. ஜகந்நாதாசாரியார் கூறுவது[403] இந்நூலின் சிறப்பை நன்கு உணர்த்தும்.

திருமயிலைக்கோவை

தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங் களில் கோவை என்பது பழமையான ஒன்று. பாட்டியல் நூல்கள் இதற்கு இலக்கணம் கூறுகின்றன.

ஆய்ந்த கலித்துறைதான் நானூறு அகப்பொருள்
மேல் வாய்ந்த நற்கோவையாம்[404]

கோவை என்பது கூறும் காலை
மேவிய கற்பு களவெனும் கிளவி
ஐந்திணை திரிய அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூறு என்ப[405]

களவினும் கற்பினும் கிளவி வகையால்
திணைநிலை திரியா செம்மைத் தாகி
நாட்டிய கலித்துறை நானூறு உரைப்பது
கோட்டம் இல்லாக் கோவையாகும்[406]

என்றியம்பும் பன்னிரு பாட்டியல்.

திருமயிலைக் கபாலீச்சரத்தின்கண் எழுந்தருளியுள்ள சிங்காரவேலராகிய முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு திருமயிலைக் கோவை அம்பலவாணக் கவிராயரால் பாடப்பெற்றது. இவர் சிறந்த தமிழ்ப் புலவர். தருமபுர மடத்து ஆதீனவித்துவானாக இருந்தவர். திருமயிலைக் கோவையில் உள்ள மொத்தப் பாடல்கள் நானூற்று அறுபத்து மூன்றாகும். கோவை நானூறும், அறுபத்துமூவர் நினைவாக மேற்கொண்டு அறுபத்துமூன்றும் இணைத்துப் பாடினாரோ என்று எண்ணும்படி தோன்றுகிறது.

நூல், வாழ்த்தும் அவையடக்கமும் பெற்றுக் களவியலில் கைக்கிளை 5; தலைவிப் புணர்ச்சி 17; வன்புறை 9; தெளிதல் 2; பிரிந்துழி மகிழ்தல் 2; பிரிந்துழிக் கலங்கல் 5; இடந்தலைப் பாடு 5; பாங்கற்கூட்டம் 25; மதியுடம்பாடு 22; பாங்கியிற் கூட்டம் 63; பகற்குறி 14; பகற்குறி இடையீடு 7; இரவுக்குறி 27; இரவுக்குறி இடையீடு 20; வரைதல் வேட்கை 19; வரைவு கடாதல் 20; ஒரு வழித் தணத்தல் 12; வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் 21; வரைவியலில் வரைவு மலிதல் 7; அறத்தொடு நிலை 17; உடன்போக்கு 19; கற்பொடு புணர்ந்த கௌவை 25; மீட்சி 6; தன்மனை வரைதல் 5; உடன்போக் கிடையீடு 6; பாடல்களைக் கொண்டுள்ளது.

கற்பியலில் இல்வாழ்க்கை 13; பரத்தையிற் பிரிவில் இளைய கலாம் 14; முதிய கலாம் 26; கல்விப் பிரிவு 7; காவற்பிரிவு 4; தூதிற்பிரிவு 4; துணைவயிற் பிரிவு 4 ; பொருள்வயிற் பிரிவு 11 ஆக 463 பாடல்களைக்கொண்டுள்ளது.

சிங்கார வேலனின் அழகில் ஈடுபடும் உணர்ச்சி நலம், அவ்வழகினைக் காதற் கருத்தினால் புதுமையும் தெளிவும் கொண்டு காட்டும் மொழிநலம் ஆகிய இரண்டும் சிறப்பாக உள்ளன. கவிச்சுவை துளும்பும் நல்ல கலையுணர்ச்சி இறைப் பற்றோடு கலந்துள்ளது.

திருக்குறள் கருத்துகள்

முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றுதல் என்ற முறையில் நூலாசிரியர் திருக்குறளையும் மக்கள் இலக்கிய மான பழமொழிகளையும் நூலில் தேவையான இடத்தில் தேவை யறிந்து தெரிந்தாளுகிறார்.

உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந் தையொடு எம்மிடை நட்பு[407]

என்ற பாடலின் கருத்து, செல்லும் கிழத்தி செலவு கண்டு உளத் தொடு சொல்லல் என்னும் கிளவியில்,

ஓராவி போ லுமென் னீராவி மாத ருருமருவிச்
சீராகச் செல் லுத னோக்குனெஞ் சேகன்ன சிறந்திடவே[408]

என்ற வரிகளில் செறிந்து சிறந்துள்ளது.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்[409]

என்ற குறளடியின் குரல் மாறாமல், இடந்தலைப்பாட்டில் தந்த தெய்வம் தருமெனச் சேறல் கிளவிப் பாட்டாக,

ஊழிற் பெருவலி யாவுள வென்னுமுன் னோருரையைச்
சூழிற் றருந்தெய்வ நெஞ்சே வருந்தலச் சூழல்செல்வாம்
காழிக் கவுணிய ரங்கம் பெண்ணாக்குங் கவின்மயிலைக்
கோழிக் கொடியினன் சிங்கார வேலன் குல வரைக்கே[410]

என்று முன்னிற்கின்றது.

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல்[411]

என்ற குறட் கருத்து, பாங்கன் கழறல் கிளவியில்,

பேதைப் பொருட்டிழப் பாரோ வறிவு பெரியவரே[412]

என்று பெய்யப்படுவதுடன் தொனிப்பொருளாகப் பேதை என்ற சொல்-பெண்ணைக் குறித்தது.

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள[413]

என்ற பாட்டின் விரிவுரையாக ஐம்புல இன்பம் ஆரத் துய்க்கும் பெற்றியைப் புணர்ச்சியில் மகிழ்ந்து புகழ்தல் கிளவியில், ஒவ்வொரு புலனும் பெறும் பேற்றினை விளக்குகின்றது இச் செய்யுள்,

கண்ணுக்குச் சித்திரம் மேனிக்குச் சந்தனம் காதினுக்கு
வண்ணப் பண் யாழொலி நாசிக்கு மல்லிகை வாய்க்கமுதம்
தண்ணுற்ற போலைம் பொறிக்குமின் பாயின டண்மயிலை
அண்ணற் சரவணச் சிங்கார வேலன்வெற் பாரணங்கே.[414]

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்[415]

என்ற குறள் கருத்தினை மனத்துள் கொண்டு,

தோமேழ் பிறவி தொடக்கறு மாதவத் தொண்டருள்ளப்
பூமே லினிதுறை சிங்கார வேலவர்[416]

என்று பொதுவாக உள்ளக் கமலத்தே உறையும் இறையை இங்கே சிறப்பாகச் சிங்காரவேலர்க்கே சேர்ப்பிக்கின்றார்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து[417]

என்ற குறளின் கருத்தினைக் கல்விப் பிரிவில் மிகப்பொருத்தமாக,

ஒருபிறப் போதிய கல்வி யெழுமையு முற்றுதவுந்
தருபிறப் பூதிய மென்றுலென் செய்வது தக்கமறை
இருபிறப் பாளர் பயில்பெரு வேள்வி யியன்மயிலை
வருபிறப் பார்க்கருள் சிங்காரவேலர் வரையண்ணலே[418]

என்ற பாடலில் கையாள்கிறார் நூலாசிரியர். செவிலி நற்றாய்க்குத் தலைவி தலைவன் பேரன்பினை - அறாத தொடர்பைப் புலப்படுத்தும் இடத்தே,

முப்பாலின் முன்னிரு பாலியல் யாவு முடிவு கண்டார்
அப்பாலின் மேலுறு மின்பமெப் பாலு மளவுபடா
இப்பா லமைந்தனர் நம்மிரு வோரு மெழின்மயிலை
வைப்பாம் பெருநிதிச் சிங்காரவேலன் வரையன்னையே[419]

என்று பாடியுள்ளார். எந்த நூலுக்கும் மூல ஊற்று, பொன்னூலாகிய திருக்குறளே என்பதைக் கோவைக்கு முன்னோட்டமான முப்பாலைக் கொண்டு விளக்கும் ஆற்றல் வேறு கோவை நூல்களில் காணாத ஒன்றாம்.

பழமொழிகள்

ஒரு சமுதாயத்தின் வாழ்க்கையையும் மனப்போக்கையும் பழமொழிகளை விட வேறு எதுவும் எடுத்துக்காட்டுவதில்லை. பழமொழிகள் சிந்தனையின் திறவுகோல்கள்; பட்டறிவுப் பழனத்தின் விளைமணிகள். 'பழமொழிகள் உண்மையின் குழந்தைகள்' என்று வழங்குவர். 'தோட்டங்களுக்குப் பூக்கள்; உணவுக்குத் தானியம்; உடைகளுக்கு மணிகள்; வானத்திற்குத் தாரகைகள் ஆகியவை எப்படியோ அப்படியே பேச்சுக்குப் பழமொழிகள்' என்பர். தமிழகத்துப் பழமொழிகள் சங்ககால முதல் இந்நாள் வரை இலக்கியங்களில் குடிபுகுந்து இலக்கியத்தின் நறுஞ்சுவையை அருஞ்சுவையாகவும் பெருஞ்சுவையாகவும் ஆக்கியுள்ளன.

திருமயிலைக்கோவையிலும் அம்பலவாணக் கவிராயர், 'நீராலான சேற்றை நீர்தான் கழுவும்' என்ற பழமொழியை நோய் தந்தவளே நோய்க்கு மருந்தெனும் கருத்தமைய, தலைவிப் புணர்ச்சியில் இரந்து பின்னிற்றற்கு என்ணல் கிளவியில்,

> நீர்தந்த சேற்றினை, நீரே கழுவுமந் நீர்மையைப் போல்
> நீர்தந்த காமக் கனலைத் தவிர்ப்பவர் நீரெனவே
> வார்தந்த பூண்முலைக் கோதநெஞ் சேசெல்வ மாமயிலைத்
> தார்தந்த மார்பினர் சிங்காரவேலர் தடங்கிரிக்கே[420]

என்று பாடுகின்றார். முதலில் நீர் என்பது தண்ணீரையும், அடுத்துள்ள நீர் என்பது முன்னிலை ஒருமையையும் ஒரு சொல் இருபொருட்குப் பயன் படுத்துகின்றார். 'வேலியற்ற பயிர் விளையாது' என்ற பழமொழியையும்

> வேலி பிரிந்த பயிர்போ லுயிரு மெலிந்திடவென்
> பாலி னிருந்த பெருநா ணுருகிப் படர்கின்றதே[421]

என்ற பாடலில் பிணைக்கிறார். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது என்பது பழமொழி; இதனை,

சிந்தித்த தெய்வம் விழியெதிர் தோன்றத்தன் சீரடியார்
வந்தித்தல் போல[422]

என்ற பாடலில் நயமுறக் கையாளுகிறார். 'பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்'; 'பெருந்தனம் என்றும் இருந்தனம்' என்ற இரு பழமொழிகளும் கவிராயர் கூற்றிலே ''பெருந்தனங் கண்டவர் யார் மயங்கார் இப்பெரு நிலத்தே''[423] என்று தலைவன் வினாவாக இரு பொருளில் கையாள்கிறார்.

'கல்லுக்கு மழுங்காத கத்தி புல்லுக்கு மழுங்கிச்சாம்' என்பது நாட்டுப்புறப் பழமொழி. இதனைப் பாங்கன் தலைவனைப் பழித்தற் கிளவியில்,

கல்லுக்கு வாய் மடங் காத பெரிய கணிச்சிபசும்
புல்லுக்கு நேரிய தன்வாய் மடங்குதல் போன்றதுவே[424]

என்று கோடரி மேல் ஏற்றிக் கூறுகிறார். 'பருந்தும் நிழலும் போல' என்ற பழமொழியும் புத்துருவில்,

உருவந் தன் னிழலு மேவுதல் போலிவ ணுற்றனரிப்
பருவந் தனிசென்று நங்காத லோதும் பருவமதே[425]

என்னும் செய்யுளில் இருவரும் உள்வழி ஒருமையிற் போதற் கிளவியில் அமைக்கிறார். 'வாடும் பயிர்க்கு வான்மழை போல' என்ற வழக்கு மொழி,

பயிரைப் புரக்க மழைமின் னொடுவரு பான்மையினென்
உயிரைப் புரக்க வரினுயிர்ப் பாங்கியோ டுற்றருளே[426]

வாடும் பயிர்க்கு மழைபோ லன்னான் வருத்தமெல்லாம்
வீடும் படிக்கரு ணோக்களித் தான்முன்னர் மெல்லியலாள்[427]

என்னும் பாடல்களில் மழைத் தமிழாய்ப் பொழிந்து நிற்கிறது.

தப்பனை யின்றி யடைக்கலப் பிள்ளைக டாய்வருந்த
அப்பனை மாய்த்து மருமானைச் சேர்த லருளல்லவே[428]

என்ற பாடலுள் வழங்கும் பழமொழி எவ்வடிவத்தில் வழங்குகிறது என்பது தெரியவில்லை. 'முட்டை கொண்டு திட்டையேறின் கிட்ட மழை பொழியும்', என்ற பழமொழி

> வெம்புறு முட்டை கொண் டேறுங்கொல் லோதெற்றி
> மேலெறும்பே[429]

என்ற தொடரில் நேராகவே வந்துள்ளது. 'பெண்ணென்றால் பேயும் இரங்கும்' என்ற பழமொழி சற்றும் வேறுபடாமல் பாங்கி இயற்பழித்து உரைத்தலில்,

> பெண்ணெணிற் பேயும் இரங்கும்[430]

என்று பண்ணோடு இசையாய் யாப்புறவாடுகின்றது. 'இரும் பாட்டம் உடம்பு வெண்ணெயாட்டம் உள்ளம்' என்ற நாட்டுப் புற மொழி 'இரும்புக்கு நேர் மனம் வெண்ணெயைப் போல' என்று வந்துள்ளது.[431] 'பசும்பாலைப் பன்றிக்கு வைத்தாற் போல்' என்ற பழமொழியை மேலும் சிறப்புறப் பரத்தையர் பிரிவில் இறைமகன் புறத்தொழுக்கு இறைவி பாங்கிக்கு உணர்த்தல்கிளவியில் 'அன்னம் பருகுஞ் செழும்பாலைப்பன்றிக் கருத்துதல் போல்[432] என்று சிறப்பிக்கிறார். இவ்வாறு உயர்ந்த சிந்தனைச் செல்வமான பழமொழிகளை, எவ்வெவ்விடத்தே அமைத்தால் சிறப்பாய் இருக்குமோ அவ்வவ்விடத்தேஅமைத்துக் காட்டியுள்ள அம்பலவாணக் கவிராயரின் மொழியாட்சியும் மாட்சியும் போற்றத் தக்கவையாகும்.

தமிழ்-தமிசை

உலகத்தில் வேறெங்குமில்லாத ஒரு தனிச்சிறப்பு தமிழ் மொழிக்குண்டு. ஒரு தாய்மொழியை மொழியாக மட்டுமல்லாது அதனையே உயிராகவும்உணர்வாகவும் மேன்மைக்கும்இனிமைக் கும் அடை மொழியாகவும் ஆகும் சிறப்பு தமிழிலக்கியத்திற்கு மட்டுமே உரியதென்றால் மிகையன்று. அதைப்போலவே தமிழிசையைப் பண்களின் பெயரை இரு பொருளிலும் குறிப்புப் பொருளிலும் கையாளும் திறமும் தமிழ் மொழி வாணர்க்கு மட்டும் தனித்த ஒன்றெனின் மிகையில்லை.

> ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
> ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்-ஆங்கவற்றுள்
> மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று; ஏனையது
> தன்னேர் இலாத தமிழ்[433]

என்று சிறப்பிக்கப்படும் தமிழும் தமிழ்சையும் திருவள்ளுவர் ஒருவர் தவிரத் தொல்காப்பியர் முதல் இன்றைய பாவலர்கள் வரை அனைவரும் எந்த ஓர் இடத்திலேனும் மொழியை இசையைச் சிறப்பிக்காமல் இருந்ததில்லை. சமயவாணர்கள்

எவராயிருப்பினும் இறையொடு சார்த்தியே தமிழை உயர்த்திப் பேசினர், பாடினர். அவ்வழியில்வந்த அம்பலவாணக்கவிராயரும் தன் கோவையில் முருகனை 'அருந்தமிழாகரர்'[434] என்றும், 'தமிழ்க்கிரி'[435] என்றும், 'திரிசங்க முத்தமிழ்'[436] என்றும், மலையிற் சிறையுண்ட நக்கீரர், நக்கீரர் மீளத் திருமுருகாற்றுப் படை பாடியதைப் 'பாட்டால் உயர் தமிழ் நக்கீரர் ஆற்றுப் படைக்கு உவந்து தாட்டாமரை தரு சிங்காரவேலவர்'[437] என்றும், அருணகிரி நாதரின் திருப்புகழ் பெற்றதை, 'வளமைத் திருப்புகழ்ச் சிங்கார வேலர் என்றும்[438] ஏத்துகின்றார். அருணகிரிநாதரைக் 'கவின் முத்தருணகிரி',[439] என்றும் பாடுகின்றார்.

மேலும் இசையறிவு மிக்கவர் நூலாசிரியர் என்பதனைப் பாங்கி தன் நாட்டணியியல் சாற்றுமிடத்து 'ஆடலுங்காமரம் பாடலும்',[440] என்றும்காமரம் என்னும் இசையினைக் குறிப்பிடுகின்றார். பரத்தையர் ஒழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவன், 'யாழ்பயில் பாணனை வாயில் விடுக்கையில், தலைவி கூற்றாக,

> நலியாத யாழ்பயில் பாணவீங் கென்முன் னவிலுகின்ற
> கலியாணி தான்சங்க ராபர ணக்குணம் காட்டியதே[441]

என்ற அடிகளில் கல்யாணி, சங்கராபரணம் ஆகிய ஈரிசைகளைக் குறிப்பிட்டு அவ்விசைச் சொற்களையே இரு பொருளில் மணமகிழ்ச்சி (கலியாணி), பரத்தையொழுக்கத் தலைவனால் இன்று நஞ்சாகிவிட்டது (சங்கராபரணம்-பாம்பு) என்று குறிப்பிடுகின்றார்.

அரும்பெயர் முருகன்

பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய நிகண்டுகளில் ஒன்றாகிய திருவேங்கட பாரதி இயற்றிய 'பாரதி தீபம்' தெய்வப் பெயர்த் தொகுதியில் முருகன் பெயர்களாக :

> முருகன் கடம்பன் குமரன் சுவாமி முதலவன் சேய்
> குருகின் பெயரிய குன்றெறிந்தோன் கொடிச் சேவலன் வேற்
> கரன் கந்தன் ஆறுமுகன் வள்ளிநாயகன் கார்த்திகையன்
> சுரர்தம் பதியளித் தோன் செட்டி வேலன் தொழுபவனே
> சூத குலாரி நகாரி சரவணத் தோன்றுமீன்
> காதலன் சூர்ப்பகை சேந்தன் செவ்வேள் பொழிகார்க்குறிஞ்சி
> நாதன் சிகாவள வாகனன் சேய்வெட்சி நாண் மலரோன்
> தாதவிழ் காந்தளந் தாரோன் விசாகன் சொற் சண்முகனே[442]

என்பவை கூறப்பெறுகின்றன.

முருகனின் அனைத்துப் பெயர்களும் காரணப் பெயர்களாகவே விளங்குவதால் பாடும் புலவர்தம் கற்பனைக்கும் சொல்லாக்கத் திறனுக்கும் ஏற்பப் பழம் பெயர்களே புதிய புதிய அடை மொழிகளுடன் பொலிகின்றன. சிவன் மைந்தன் என்றும், மால்மருகன் என்றும், மலைமகள் பயந்த மலைமகன் என்றும், வள்ளி மணாளன் என்றும், குஞ்சரி துணைவன் என்றும், அழகு, இளமை, மணம் என்றெல்லாம் பொருள்படும் முருகன் என்றும், கார்த்திகை மைந்தன் என்றும், செவ்வேள், சேந்தன், சேயோன் என்றும் வழங்கும் அனைத்துப் பெயர்களையும் அம்பலவாணக் கவிராயர் தம் கோவையில் பல்வேறு பாங்கினில் குறிப்பிடுகின்றார்.

பூரணி மாமகன்,[443] துடியேற்ற செங்கைக் கபாலீசர் மைந்தன்,[444] விமலையன் பால்பெற்ற திருமகன்,[445] வாவிச் சரவணன்,[446] குசலர்க்கதிபதி,[447] சங்கரன் பாலகன்,[448] மீனேறுயரிய காமர்க்கு மைத்துனன்,[449] விடையர் திருமகன்,[450] கார்த்திகைப்பால் முலை மாரியுண்டருள் சிங்காரவேலவர்,[451] கார்த்திகையார் மைந்தன்,[452] கந்தன், சேந்தன்,[453] முடுகிய மஞ்ஞையை யூர்ந்தருள் ஆறுமுகன்,[454] ஆறுமாமுகன்,[455] என்றெல்லாம் அம்பலவாணக் கவிராயர் சிங்காரவேலனைக் குறிக்கின்றார்.

வள்ளி தெய்வயானை

திருமயிலைக் கோவையைப் பாடிய அம்பலவாணக் கவிராயர் அன்பின் ஐந்திணை அறிந்தவர்; தெரிந்தவர்; புரிந்து கையாள வல்லவர் என்பதனை இக் கோவையில் காட்டுகிறார். நிலத்தை ஐந்தாகப் பிரித்தாலும் பாலையைக் (பாழ் நிலம்) கணக்கில் சேர்க்காமல் நானிலம் என்று வழங்குவதுபோலவே, களவியல்-கற்பியல் இல்வாழ்க்கை வரை (பாடல் 393 அளவும்) ஓரிடத்தும் தெய்வயானையைக் குறிக்காமல் வள்ளியையே குறித்துச் செல்கிறார். குறவள்ளி,[456] வள்ளியம்மை,[457] கானுறை வள்ளி,[458] வள்ளி நாயகன்,[459], பாணுற்ற சொல் வள்ளி,[460] மலைவள்ளி,[461] மலைவஞ்சி,[462] என்று ஏழிடங்களில் வள்ளியைப் புகழ்ந்தவர் வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூற்றாகத் தலைவன் காதற் பரத்தையுடன் வாழ்தலை இழிவாக எண்ணவேண்டா என்ற கருத்துணர்த்த,

திசையார் புகழ்த்தெய்வ யானையும் கானவர் சீர்மயிலும்
நசையார் மயிலைமன் சிங்கார வேல னளிர்வரை மேல்
வசையாரை நோதல் வழக்கா முலகின் மகிழ்ச்சி தரும்
இசையாரை நோத விசையோ விசையு மியலணங்கே[463]

என்ற ஒரு பாடலில்தான் தெய்வயானையைக்கொண்டு மிகவும் சமத்காரமாகச் சேர்த்துத் தலைவன் ஒழுக்கத்திற்குப் பின்னணி ஓவியமாகச் சிங்காரவேலரின் திருமண வாழ்வைக் குறிக்கிறார். மேலும், வரையே இல்லாத நெய்தல் நிலப்பகுதி திருமயிலை. கோவையில் களவு முதற்பகுதி; அது குறிஞ்சியில் நடைபெற வேண்டும். ஆகவே, கவிராயர் நெய்தல் திணையைக் களவுக் குரிய குறிஞ்சித் திணையாக்கிக் கோவையைப் பாடுகிறார். குறிஞ்சிக் கிழவனுக்குக் குறிஞ்சிக் கிழத்தியாகிய வள்ளியையே காட்டிப் பின்னர் உடன்போக்கிற்குப் பின் கற்பியலில் பரத்தையர் பிரிவில் மட்டுமே தெய்வயானையைக் கொணர்வது ஒரு நல்ல நாடகத்திறன் என்றே கூறலாம்.

தலபுராணக் கதைகள்

கவிராயர் மயிலைத் தல புராணக் கதைகளையும் தம்முடைய கோவையில் குறிப்பிடுகின்றார். இரந்து பின்னிற்றலில், உமை மயில் வடிவில் சிவனைப் பூசித்த செய்தியை, கான்மயி லாகி யுமைபூசை செய்த கவின் மயிலை[464] என்று பாடுகின்றார். கோழி குரல் காட்டலில், சுக்கிரன் சிவனை வழிபட்டுக் கண் பெற்ற செய்தியை, ‘வெள்ளிக் கொளிர் கண்ணருளு மயிலை விமலன்[465] என்று குறிப்பிடுகின்றார். தலைவி தன் செலவு ஈன்றாட்கு உணர்த்தலில் முருகன் சிங்கார வேல் பெற்ற செய்தியை, ‘வளமை மயிலைப் பரன் பூசை செய்து மணி நெடுவேல் இளமையின் வாங்கிய சிங்காரவேலன்’[466] என்று கூறுகின்றார்.

பூம்பாவை வரலாறு

திருஞான சம்பந்தர் பூம்பாவைப் பதிகம் பாடி அங்கம் பெண்ணாகிய விந்தையைத் தந்த தெய்வம் தருமெனச் சேறலில், ‘காழிக் கவுணிய ரங்கம் பெண்ணாக்கும் கவின் மயிலை’[467] என்றும், பொருள்வயிற் பிரிவு பாங்கி மறுத்தலில், ‘முட்டிட்ட குண்டரை வென்றருள் சம்பந்த மூர்த்தி சொன்ன மட்டிட்ட புன்னைத் தமிழ்’[468] என்றும் பாடியுள்ளார்.

ஔவையார்

பொருள் வயிற்பிரிவு பாங்கி தலைவிக் குணர்த்தலில்,

திரை கட லோடியுந் தேடுதிரவியந் செல் விதென்ற
புரை தவீர் அவ்வைசொல் ஆய்ந்தேகினார்
நம்புரவலரே[469]

என்று ஔவையாரைக் குறிப்பிடுகின்றார்.

'இதயத்திலிருந்து இதயங்களுக்கு உணர்ச்சியைப் பெயர்ப்பதே கவிஞனின் பெரும்பணி'[470] என்ற அறிஞர் கூற்றை மெய்ப்பிக்கும் நிலையினைக் கோவையின் ஒவ்வொரு பாடலிலும் காணலாம். ''உணர்ச்சியைக் குறைவின்றி வெளிக்கொணரப் பாத்திரக் கூற்றாகவே சொல்லப்பட வேண்டும் என்பது அடிப்படையான கருத்து. அப்படிச் சொல்லுவதற்கு எந்தப் பாத்திரம் ஏற்றது என்று கவிஞன் தீர ஆராய்ந்து முடிவு செய்தே பாடலை இயற்றத் தொடங்குகிறான். ஏதோ ஒரு பாத்திரத்தின் வாயிலாகச் சொன்னால் போதும் என்று யாரும் நினைக்கவில்லை. உணர்ச்சிச் சித்திரத்தை இயற்கையாகப் பொருத்தமாக வெளியிடற்கு எப்பாத்திரம் என்று தீர்மானிக்கக் கவிஞனின் இதயம் தேவைப்படுகிறது;[471] என்ற மொழிப்படி கிளவிகள் ஒவ்வொன்றும் தலைவன், தலைவி, பாங்கி, பாங்கன் என்று பல்வேறு பாத்திரங்கள் கோவையில் கோப்புண்டு குறிக்கோளை நிறைவேற்றுகின்றன.

அன்பின் ஐந்திணையையும் ஒரே பாட்டில் அடக்கும் ஆற்றல் பெற்றவர் அம்பலவாணக் கவிராயர் ஒருவரே. கோவையில் அவ்வாறு ஒரு பாடலை இணைத்துள்ளார் எனலாம். தலைவி தலைவனுடன் உடன்போக்குச் சென்றாலொழியத் திருமணம் நடவாத நிலை. அந்தச் சூழலில் தோழி தலைவிக்கு உடன் போக்கின் இன்றியமையாமையை உணர்த்துகின்றாள். 'நின் தாய்க்கோ நின் போக்கின்பின் வரவெதிர் பார்த்திருக்கும் நிலை (நெய்தல்), உன் வெட்கத்திற்கோ ஊடல் நிலை (மருதம்), நீங்கள் திரும்புவதை எதிர்நோக்குதல் (முல்லை), எங்கட்கோ பிரிவு நிலை (பாலை), இருந்தாலும் உங்கள் இருவருக்கும் மனமகிழ்ச்சி (குறிஞ்சி) உறவு என்று மகிழ்கின்றோம் என்பதனைச் சொல் லின்பம் தோன்ற,

நெய்தல் மெய்த் தாய்க்குமருத நின்னாணுக்கு நேருமுல்லை
எய்து மெமக்குங் கடும்பாலை நீவி ரிருவருக்கும்
செய்து குறிஞ்சி யுறவெண்ணி னாரன்பர் தேவர் புகழ்
மெய்யன் மயிலையிற் சிங்கார வேலவன் வெற்பணங்கே[472]

என்று பாடியுள்ளார்.

தலப்பெருமை

திருமயிலைக் கோவையில் திருமயிலை, சிங்காரவேலர் திருமயிலை,[473] கவின் மயிலை,[474] செல்வமாமயிலை,[475] பொன் மயிலாபுரி,[476] தமிழ் என்றும் வளர்தண்ணார் மயிலை,[477] நவ மயிலை,[478] நல்ல மயிலை[479] என்றெல்லாம் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

தீர்த்தப் பெருமை

கபாலீசுவரர் கோயில் திருக்குளம் 'பொறைவாண்ர் போற்று மயிலைத்தடம்'[480] என்று திருமயிலைக் கோவை போற்றுகின்றது.

சிங்காரவேலர் மாலை

இதில் காப்புச் செய்யுள் கூத்தாடும் விநாயகர்மீது நேரிசை வெண்பாவில் பாடப்பட்டுள்ளது. முப்பது பாடல்கள் கொச்சகக் கலிப்பாவில் அமைந்துள்ளன.[481]

தாச்சி அருணாசல முதலியார் இயற்றிய இம்முப்பது பாடல்களுள் இருபது பாடல்கள் மயிலைச் சிங்காரவேலர் கொச்சகம் என்னும் பெயரில் சுவடி வடிவில் உ. வே. சாமிநாதையர் நூலகத்தில் உள்ளது. உ.வே. சாமிநாதையர் நூலகம் வெளியிட்டுள்ள நூல் நிலையச் சுவடிகளின் விளக்கத்தில் எண் 893 ஆக இது குறிக்கப்பட்டுள்ளது.[482] ஆசிரியர் பெயர் முதலியன தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள். முதற் பாடலாக அவர்கள் வெளியிட்டிருப்பது தாச்சி அருணாசல முதலியாருடைய சிங்கார வேலர் மாலையின் முதல் பாடலாகும். இறுதிப் பாடலாக வெளியிட்டிருப்பது முதலியாருடைய முப்பதாம் பாடலாகும்.

இவ்வாறு தாச்சி அருணாசல முதலியாருடைய சிங்கார வேலர் மாலையும் சிங்கார வேலர் கொச்சகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆசிரியர் பெயர் குறிப்பிடாமல் விட்டிருப்பதும் வேதனைக்குரியதாகும்.

இவரும் அருணகிரியார் போன்று,

வல்லைப்பொரு முலையார் மையலுக் காளாகி வெகு
தொல்லைக்கும் பாழ்ங் கலிக்குஞ் சூழ் பிணிக்கு மாளானேன்

என்று பாடுகிறார்.[483]

திருமயிலைக் குகன் பதிகங்கள்

கி. பி. 1878இல் வெளியான தண்டபாணி சுவாமிகளின் பதிகத் தொகுப்பில் இப்பதிகங்கள் காணப்பெறுகின்றன.[484]

முதற்பதிகத்தின் காப்புப் பாடல் நேரிசை வெண்பாவில் முருகன் மீதே பாடப்பட்டுள்ளது. இப்பதிகத்தில் பன்னிரண்டு பாடல்கள் உள்ளன. இவை கலி விருத்தத்தில் அமைந்துள்ளன. முருகனுடைய பெருமைகளையும் அவனிடம் அருள் வேண்டு தலையும் கூறும் முறையில் பாடல்கள் அமைந்துள்ளன. இப் பாடல்கள் அனைத்தும் மயிலைக் குகனே என்று முடிகின்றன.

திருமயிலைக் குகன் பதிகம்-2

இப்பதிகத்தின் காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவிலும், மற்றச் செய்யுட்கள் அறுசீர் விருத்தத்திலும் அமைந்துள்ளன. காப்புச் செய்யுள் சிங்கார வேலனை வழிபடும் வகையில் அமைந் துள்ளது. இப்பதிகத்தில் 12 பாடல்கள் உள்ளன. இவை தவிர, விநாயகர் வெண்பா ஒன்றும், அம்பிகை வெண்பா ஒன்றும் உள்ளன. திருமயிலைத் தலத்தின் பெருமையினை, 'மன்னு புகழ்த் திருமயிலாபுரி',[485] 'வானளக்கு மணிமாட நெடுவீதித் திரு மயிலை',[486] 'மயிலை மாநகர்',[487] என்னும் தொடர்களால் அறியலாம். இப்பதிகத்திலுள்ள பாடல்கள் அருள்வேண்டும் முறையில் அமைந்துள்ளன.

மயிலைச் சண்முகப் பஞ்சரத்தினமாலை

இந்நூலாசிரியர் என். கோடீஸ்வரய்யர் என்பவராவார். இந்நூல் 1915இல் வெளியிடப்பட்டது. இவர் பாடல்கள் தோத் திரத்திரட்டு என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. மயிலைச் சண்முகப் பஞ்சரத்தினமாலை என்பது 50 பாடல்களாக உள்ளது. இவை 14 சீர் விருத்தங்களாக உள்ளன. இவை துதிப்பாடல் களாக அமைந்துள்ளன.[488]

அருட்புகழ்

அருட்கவி சேதுராமன் 1962ஆம் ஆண்டு, கபாலீசுவரர் கோயிலில், சிங்காரவேலர் சந்நிதி முன்னிலையில் ஆறு சந்தப் பாடல்கள் பாடியுள்ளார்.[489] இறைவன் தன்னைக் கைவிடாதிருக்கவும் இயமன் வருங்கால் மயில் மேல் காட்சி பெறவும், பரகதி அடையவும், திருவடித் தாமரை பெறவும், அருளை உணரவும், அன்பைப் பெறவும், அப்பரைப் போல் பாடவும் அருள் வேண்டி, இப்பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்களுக்கு இராக தாளங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

மயிலைச் சிங்காரவேலன் இரட்டை மணிமாலை

கி. வா. ஜகந்நாதன் சிங்காரவேலர் மீது காப்புச் செய்யுள் நீங்கலாக இருபது பாடல்கள் பாடியுள்ளார்.[490] முதலில் நேரிசை வெண்பா அடுத்துக் கலித்துறை என்று அந்தாதி முறையில் பாடப்பட்டுள்ளது. சிங்கார வேலனைப் போற்றி அருள் வேண்டும் முறையில் பாடல்கள் அமைந்துள்ளன.

திருமயிலைச் சிங்காரவேலர் பதிகம்

கி. வா. ஜகந்நாதன் சிங்காரவேலர் மீது அறுசீர் ஆசிரிய விருத்தத்தால் இயன்ற பத்துப் பாடல்களைப் பாடியுள்ளார்.[491] நூல் முதலில் விநாயகர் மீது பாடப்பட்ட காப்புச்செய்யுள் ஒன்றுள்ளது. இப்பதிகத்தில் உள்ள பாடல்கள் போற்றிப் பாடல்களாக அமைந்துள்ளன.

விநாயகர் மீது பாடப்பட்ட இலக்கியங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் திருமயிலையிலுள்ள விநாயகர் மீது பதிகம் பாடும் மரபு ஏற்பட்டது. தாண்டவராயச் செட்டியார் திருமயிலைச் செங்கழுநீர் விநாயகர் பதிகத்தையும், மயில் வாகனம் என்பவர் மயிலை மும்மணிமாலை என்னும் நூலையும் பாடியுள்ளார். மயிலை ஞான சுந்தர விநாயகர் விருத்தம் என்னும் நூலும் சுவடி வடிவில் உள்ளது. இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் மயிலைச் சித்தி விநாயகர் பதிகம் என்னும் நூலும் தோன்றியது.

திருமயிலைச் செங்கழுநீர் விநாயகர் பதிகம்

திருமயிலைத் தாண்டவராயச் செட்டியார் திருமயிலையிலுள்ள செங்கழுநீர் விநாயகர் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார்.

அவர் தமிழாசிரியர் என்று தெரிகிறது. அவரைப் பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை. இந்நூல் கி.பி. 1885இல் பதிப்பிக்கப் பட்டுள்ளது.[492]

இப்பதிகத்தின் காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவில் செங்கழுநீர் விநாயகர் மீதே பாடப்பட்டுள்ளது. பதிகம் எழுசீர் ஆசிரிய விருத்தத்தில் பத்துப் பாடல்களாக உள்ளது. வாழ்த்து விருத்தம் ஒன்றும் உள்ளது. நூலின் இறுதியில் திருமயிலை ஸ்ரீ சற்குருசுவாமி கீர்த்தனை ஒன்றும் உள்ளது. அதற்கு இராகம் கமாஸ், தாளம் ஆதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பதிகத்தில் மயிலையிலுள்ள செங்கழுநீர் விநாயகரே சிறப்பாகக் குறிக்கப் பெறுகிறார். பொதுவாகப் பாடல்கள் விநாயகர் பற்றிய கதைக் குறிப்புகளைக் கொண்டதாகவும், இருவினையகற்றி இணையிலா மலரடி தர வேண்டும் என்று வேண்டுபவையாகவும் அமைந்துள்ளன.

தார்நிறை சண்பைத் தலைவராம் ஞான
சம்பந்த ரண்ணலா ரென்பைப்
பார்புகழ் பெண்ணாக்கிய நகர்[493]

என்னும் தொடரில் அங்கம்பூம்பாவை ஆகிய நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

ஆசிலா வுல கிலறம் பொருளின்ப
மருங் குறட் பாவினா லருளிப்
பேசரு மனையாளுட னில்லறத்தைப்
பெட் புடனியற்று வள்ளுவர்தாம்
வாசமாயுறை கபாலீச் சரம்[494]

என்று வள்ளுவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

திருமயிலை மும்மணி மாலை

மயில்வாகனம் என்னும் புலவர் மயிலை மும்மணி மாலை என்னும் நூலை எழுதியுள்ளார். இந்த நூல் கி. பி. 1897இல் வெளியிடப்பட்டுள்ளது. திரு. அ. குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கருள் ஒருவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நூல் வெளியான இடம் அச்சுவேலி என்பதாகும்.[495]

மும்மணி மாலை இலக்கணம்

மும்மணி மாலையின் இலக்கணத்தை,

> மிகுந்த வெள்ளை கலித்துறை அகவல்
> விருத்தம் மும்மணி விளம்பும் அந்தாதி[496]

என்று பன்னிருபாட்டியல் கூறும்.

இந்நூல் விநாயகர்மீது பாடப் பெற்றதாகும். காப்புச் செய்யுள் கட்டளைக் கலித்துறையில் விநாயகர்மீது பாடப் பட்டுள்ளது. இந்நூலில் பாடப்படும் கணபதி மயிலைக் கணபதி என்று குறிக்கப் பெறுகின்றார். மயிலையில் இருக்கும் பல விநாயகர்களுள் எந்த விநாயகரை இந்நூல் குறிக்கிறது என்பது புலனாகவில்லை. வெண்பா, கலித்துறை, அகவல் என்னும் வரிசையில் முப்பது பாடல்களுடன் நூல் நிறைவுபெறுகின்றது. தனியாக விநாயகர் பேரிற் பின்முடுகு வெண்பா ஒன்றும் உள்ளது. இந்நூலில் விநாயகர், திருவாழ் மயிலைநகர்த்தேவு,[497] பீடார் மயிலைக் குணமலை,[498] மயிலைப்பதியமர் முக்கணான்,[499] தண்மயிலைத்தேவன்,[500] மயிலையிற் பண்ணவன்,[501] திருமயிலை யென்னுங் கணேசர்,[502] மயிலை விநாயகன்,[503] மயிலைப் பராபரன்,[504] வண்மயிலைப் பண்ணவன்,[505] மயிலைக் கரி,[506] என்று குறிக்கப்படுகின்றார். இப்பாடல்கள் அனைத்தும் அருள் வேண்டும் முறையிலேயே அமைந்துள்ளன.

மயிலை ஞானசுந்தர விநாயகர் விருத்தம்

இந்நூல் மயிலை ஞானசுந்தர விநாயகர் மீது பாடப்பட்டதாகும். சுவடி வடிவில் உள்ளது. பத்துப்பாடல்கள் உள்ளன. பிற விவரங்கள் அறியக் கூடவில்லை என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகச் சுவடி விளக்கக் குறிப்பு கூறுகிறது.[507] முதற் பாடலும் பத்தாம் பாடலும் அந்தக் குறிப்பில் உள்ளன. இராமகிருட்டின மடத்துச் சாலையும் செயின்ட் மேரி சாலையும் சந்திக்கும் இடத்தில் உள்ள ஆயத்துறை ஞானசுந்தர விநாயகர் மீது இந்நூல் பாடப்பெற்றது என்பதை உய்த்து உணரலாம்.

மயிலைச் சித்தி விநாயகர் பதிகம்

என். கோடீஸ்வரய்யர் என்பவர் இயற்றிய தோத்திரத் திரட்டு என்னும் நூலில் இப்பதிகம் காணப்படுகிறது.[508]

நேரிசை வெண்பாவில் இயன்ற பத்துப் பாடல்கள் இப்பதிகத்தில் உள்ளன. இவை போற்றிப் பாடல்களாகும்.

திருவள்ளுவர் மீது பாடப்பட்ட பதிகங்கள்

திருமயிலையில் திருவள்ளுவர் கோயில் இருப்பதாலும், அவர் அங்கு வாழ்ந்தவர் என்று நம்பப்படுவதாலும் இரு சைவத் துறவியர் அவர்மீது பதிகங்கள் பாடியுள்ளனர். வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளும், திருக்குருகூர் ஞான சித்த சுவாமிகளும் திருமயிலைத் திருவள்ளுவரைப் புகழ்ந்து பாடுகின்றனர்.

திருவள்ளுவ நாயனார் பதிகம்

இப்பதிகத்தை வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார். இப்பதிகத்தின் காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவில் திருவள்ளுவர் மீதே பாடப்பட்டுள்ளது. கலி விருத்தத்தில் ஆன 11 பாடல்கள் உள்ளன.[509] **11**ஆம் பாடல் நூற்பயன், ஆசிரியர் பற்றிக் கூறுவதாகும். எல்லாப் பாடல்களும் 'மயிலாபுரித் திருவள்ளுவனாரே' என்று முடிவடைகின்றன. திருவள்ளுவருடைய பெருமைகளை,

> வெஞ்சொற் புலை நூலோர்பலர் வெருளும்படி முன்னாள்
> அஞ்சொற் றமிழ் வேதம்பகர் அறிவிற் சிறி தருள்வீர்
> நஞ்சொற்பன மதனூ டொரு நல்வாய்மை நவின்றீர்[510]
>
> அறிவின்பயன் ஈதென்றுல கறியும்படி சொன்னீர்[511]
>
> வேதத் தலை யினையல்லது வேறுள்ளன மதியார்
> போதத்திலும் நீர் எய்திய புகழே ஒளிர்வது[512]

என்று புகழ்ந்து பாடுகின்றார்.

திருவள்ளுவ நாயனார் பதிகம்

இப்பதிகத்தைத் திருக்குருகூர் ஞானசித்த சுவாமிகள் பாடியுள்ளார்.[513] அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பத்துப் பாடல்கள் உள்ளன. முறை வேண்டுகின்ற வகையில் 'முறையோ முறையேயோ' என்று எல்லாப் பாடல்களும் முடிகின்றன.

தேவர் புகழும் திருமயிலைத் தேவன்,[514] புத்தியுடையார் புகழ்ந்தேத்தும் புனிதன்,[515] அல்லற் சழக்கி லமராதோர்க் கமுது,[516] வேதமருளு மயனார் முன் விரித்த விரிவைச்

சுருக்கியதிற்பேதம் புரியுங் கொலை யகற்றப் பேசும் பெருமான்,[517] திருமயிலைக் காதிப் பொருள்,[518] மதியிற் பெரியோருளத் தமர் வள்ளுவன்,[519] சோக மகற்றும் வள்ளுவன்,[520] மயிலாப்பூரதனில் உவக்கும் பெருமான் வள்ளுவன்,[521] தவத்தோர் புகழும் தவக்கவி,[522] மறவா தடிக் கீழ்த் தொண்டுசெயு மன்னன் ஏலேலச் சிங்கர்க் குறவே,[523] இவ்விடத்துஞ் சுகத்திலமர்ந்து வாசுகி செய்தொண்டிற் கிரங்குந்துரை மயிலைப் பதிவளர் வள்ளுவர்[524] என்று திருவள்ளுவரைச் சிறப்பித்துப் பாடுகின்றார்.

பூம்பாவை தவச்சிறப்பு மாலை

இந்நூலை நா. கனகராஜய்யர் எழுதியுள்ளார். இந்நூல் கையெழுத்துப் படியாக உள்ளது[525] காப்புச் செய்யுள், வாழ்த்துச் செய்யுள் நீங்கலாக இந்நூல் கலித்துறையிலான நூறு செய்யுட்களைக் கொண்டுள்ளது. பூம்பாவை வரலாறும் தவச் சிறப்பும் இப்பாடல்களில் விளக்கப்படுகிறது.

திருமயிலை அறுபத்து மூவர் வழிநடைச் சிந்து

இப்பாடல் தமிழ்நாடு என்னும் தொகுப்பு நூலிற் காணப் படுகிறது.[526] இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. எளிய நடையில் பாடல் அமைந்துள்ளது. சென்னைச் செங்காங் கடையிலிருந்து அறுபத்து மூவர் விழா வினைக்காண மயிலைக்குச் செல்லும் வழி விளக்கப்படுகிறது. மனைவியைப் பார்த்துச் சொல்லுகிற முறையில் பாடல் அமைந்துள்ளது. முல்லா சாகிபு தெரு, அருணாசலேஸ்வரர் ஆலயம், தர்மராஜா கோயில் தண்ணி தொட்டி, ஆனை கெவுனி, மண் ஜெயில், சிந்தாதிரிப் பேட்டைப் பாலம், கடைத் தெரு, முருகப்ப முதலியார் சித்திரப் பங்களா, சாமி நாய்க்கன் ரோடு, கிளாஸ்காரன் தண்ணீர்ப் பந்தல், டைலர் தச்சவாடி, பாட்டர்ஸ் தோட்டம், கிளப்பவுசு, மந்தைவெளி டாணா மாதா கோயில், இராயப்பேட்டை, செல்லப்பன் மிட்டாய்க் கடை, தாண்டவராயன் தண்ணீர்ப் பந்தல், பிரசன்ன விநாயகர் சந்நிதி, அப்பர் மடம், குசப்பேட்டை ஆகிய இடங்கள் குறிக்கப்படுகின்றன.

அறுபத்து மூவரையும், அங்கம்பூம்பாவையையும், கபாலீசர் வருகிற காட்சியையும் காணலாம் என்று இப் பாடல் கூறுகிறது.

கோலவிழியம்மன் போற்றிப் பாடல்கள்

திருக்கோலவிழி அம்மன் போற்றி, இசை மாலை

சுத்த சத்வானந்தா கோலவிழி அம்மன்மீது நூற்றெட்டுப் போற்றிப் பாடல்கள் பாடியுள்ளார்.[527] அருள் விழித் தேவி என்னும் தலைப்பிலும் பாடல்கள் உள்ளன. கீர்த்தனம் ஒன்றும் உள்ளது.

பத்ரகாளி அம்மன் பக்திப் பாடல்கள்

இந்நூலை மு. கிருஷ்ணமூர்த்தி என்பவர் பாடியுள்ளார். எட்டுப் பாடல்கள் இந்நூலில் உள்ளன. போற்றிப் பாடல்களாக அமைந்துள்ளன.[528]

அதர்வண பத்ர கோலவிழி அம்மன் பிரதியங்கராதேவி

இத்தலைப்பில் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் எண்சீர் விருத்தத்தில் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்.[529]

முண்டகக் கண்ணி அம்மன் போற்றிப் பாடல்கள்

முண்டகக் கண்ணி அம்மன் பஞ்சகம் என்னும் பெயரில் கிருஷ்ணராவ் என்பவர் ஐந்து பாடல்கள் பாடியுள்ளார்.[530] முண்டகக் கண்ணி முப்பது என்னும் தலைப்பில் முப்பது பாடல் களைச் செம்பொற் செவ்வேள் என்பவர் பாடியுள்ளார்.[531] முண்டகக் கண்ணியம்மன் பாமாலை என்னும் நூலைக் கணேசன் என்பவர் இயற்றியுள்ளார்.[532]

சமணத் தீர்த்தங்கரர்மீது பாடப்பட்டவை

மயிலை நேமிநாதர் பதிகங்கள்

திருமயிலையிலிருந்த நேமிநாத சுவாமியின் மீது பல பதிகங்கள் பாடப்பட்டுள்ளன. இப்பதிகங்கள் இயற்றப்பட்ட காலம் பதினாறாம் நூற்றாண்டாகும். இவற்றை எழுதியவர்கள் பெயர் தெரியவில்லை.

மயிலாப்பூர் பதிகம்

இப்பதிகத்தில் இப்போது ஒன்பது பாடல்களே கிடைத்துள்ளன.[533] அறுசீர் அடி ஆசிரிய விருத்தத்தில் இப்பாடல்கள்

அமைந்துள்ளன. அக்காலத்தில் திருமயிலையில் சமணர்கள் நிறைந்திருந்தனர் என்பது 'மெதளிதரு சாவகர் செழுமனையே மலி திருமயிலாபுரி' என்னும் தொடரால் புலனாகின்றது.[534] இப் பாடல்களில் அரிகுல நாயகர் என்று நேமிநாதர் போற்றப் படுகின்றார். இப்பாடல்கள் அனைத்தும் திருமயிலாபுரியே என்று முடிவடைகின்றன.

திருமயிலாப்பூர் பத்தும் பதிகம்

இப்பதிகத்தில் பத்துப் பாடல்கள் அறுசீர் விருத்தத்தில் அமைந்துள்ளன.[535] இப்பாடல்களில் நேமிநாதரை வணங்காது தீய நெறியிற் சென்று அல்லல் பட்டதை எல்லாம் விளங்க உரைக் கின்றார் பதிக ஆசிரியர்.

திருமயிலாப்பூர் ஸ்ரீநேமிநாதஸ்வாமி பதிகம்

இப்பதிகத்தில் பதின்மூன்று பாடல்கள் உள்ளன.[536] இப் பாடல்கள் அனைத்தும் திருமயிலை மேவிய நேமிநாத ஸ்வாமியே என்று முடிகின்றன. இப்பாடல்கள் கலித்துறையில் இயற்றப் பட்டுள்ளன. நேமிநாதரின் பெருமைகளைக் கூறி அருள் வேண்டும் முறையில் அமைந்துள்ளன.

திருமயிலாபுரிப் பத்து

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத்து ஏட்டுச் சுவடி ஒன்றில் இப்பதிகம் காணப்படுகிறது. இப்பதிகம் முக்குடை என்னும் சமணர் திங்கள் இதழில் வெளிவந்துள்ளது.[537] இப் பதிகத்தில் பத்துப் பாடல்கள் உள்ளன.

திருமயிலைத் தலத்தின்மீது பாடப்பட்ட நூல்கள்

சங்க காலத்தில் ஒருசில ஊர்களைச் சிறப்பித்துப் பாடும் மரபு இருந்துள்ளது. சமய வாழ்க்கையும் திருக்கோயில்களும் பெருகியபோது தேவாரம் திருவாசகம் முதலியவற்றின் நூலாசிரியர்களும் வேறு சமய அடியார்களும் திருக்கோயில் விளங்கும் திருத்தலங்களையும் பாடினர். அவற்றுள் ஒன்றுதான் திருமயிலை.

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஊர் இன்னிசை-பெயர் இன்னிசை; ஊர் நேரிசை-பெயர் நேரிசை; ஊர் வெண்பா எனக் குறித்து இலக்கணம் கூறினும் அவை

அனைத்தும் மன்னர்க்கும்-மன்னர்தம் மாநகர்க்கு மட்டுமே பாடப்படுவன எனத் தெரிகின்றன.

இறைவன் பெயர் ஊரினை இன்னிசையால்
முறையில் தொண்ணூறு எழுபான் ஐம்பான்
அறையின் அப்பெயர் ஆகும் என்ப[538]

இன்னிசை போல இறைவன் பெயர் ஊர்
தன்னின் இயல்வது தான் நேரிசையே[539]

பன்னிரு பாட்டியலில் காணாது, வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கம் போன்ற பிற்கால இலக்கண நூல்கள்தாம் இவற்றை எண்ணுடனும் பொருண்மையுடனும் பேசுகின்றன. ஆனால், மேற்குறித்த இலக்கணத்தை மீறித் திருமயிலை உவமை வெண்பாவும், திருமயிலை வெண்பாவும் கபாலீசுவரரைத் தலைவராகவும் பாடல் எண்கள் முறையே நூற்று முப்பதுவும், நூறும் நேரிசை வெண்பாவாக விளங்குகின்றன. உவமை வெண்பா திருநெல்வேலி நடலிங்கக் கவிராயர் பாடியது; மயிலை வெண்பா ஆசிரியர் பெயரும் ஊரும் அறிய இயலவில்லை. இந் நூல் கருத்தமைதியிலும் சொல்லோட்டத்திலும் சிறப்பாக அமைந்துள்ளது. முன்னதில் ஊர்ப் பெயர்களும், இறைவன், இறைவி ஒரிரு அடியார் பெயரும் கொண்டிலங்குவது; பின்னது இறைவர்-இறைவியுடன் இறையடியார் பலர் பெயர்களையும் இணைத்துக் கூட்டி இன்பூட்டுவது.

எல்லா ஊரும் மயிலையே

திருமயிலை உவமை வெண்பாவின் ஆசிரியர் மயிலாப்பூருக் குரிய எலும்பைப் பெண்ணாக்கிய கதையினும், பிற சைவத் தலங் களோடு பிணைத்துப் பாடுவதால் சிவனோடு இயைந்த வேறு செய்திகளையே மிகுதியாகக் கையாள்கிறார். சைவத் தலங்கள் நூற்றிருபதையும்,'இறுதியில் விண்ணுலகம், மாமேரு, பாற்கடல், தாமரைப்பூ ஆகியவற்றுடன் உவமித்துப் பாடுகிறார் திருமயிலை வெண்பா ஆசிரியர்.

செந்தூரே யாமயிலை,[540] புடைமருதூர் மயிலாப்பூர்,[541] பாவநாச கங்கை இட்ட மயிலாபுரி,[542] மயிலைக் கபாலீச்சுரம் மதுரை காண்,[543] பரங்குன்று மயிலையென்று கூறு[544] காசி மன்று மயிலை,[545] விண்ணுலகம் பூவுலகின் மேல் மயிலாப்பூர்[546] என்று மற்றச் சிவத்தலங்களைப் போன்றது மயிலை என்பதை இந்நூற் பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

... ... கைவைத்த
வேலன் மருவும் விருப்பாற் பழமுதிர்
சோலை மயிலையெனச் சொல்[547]

என்று சிங்காரவேலன் இருப்பதனால் மயிலை பழமுதிர் சோலையை ஒக்கும் என்று தெளிவும் எளிமையும்பட பொருத்த மாகக் கவிராயர் கூறுகிறார். வள்ளுவர், வாயிலார் பற்றியும் குறிப்பிடுகின்றார்.[548] பூம்பாவையின் தந்தையைப் பற்றியும்,[549] பூம்பாவையின் உடலை எரித்ததாகக் கூறப்படும் இடமான அத்தி தீர்த்தம்[550] பற்றியும், என்பும் கதி பெறலால் என்பதனால் பூம்பாவை உயிர் பெற்ற செய்தி பற்றியும் இந்நூலிற் கூறப்படு கின்றன.[551]

எல்லாம் கற்பகத்தாயே

மீனாட்சி கற்பகமாமே,[552] காமாட்சி கற்பகத்தாய்,[553] கற்பகத்தாய் நற் சிவகாமிப் பெண்ணென்றே நாடு[554] வேளூர் தையல் நாயகியே கற்பகமானாள்,[555] கற்பகத்தாய் அம்பிகையே காந்திமதியாம்[556] என்று எல்லா ஊர்களிலும் இருக்கும் சக்தியே மயிலையில் கற்பகமாக வீற்றிருக்கிறாள்; மயிலையே எல்லாத் தலங்களிலும் சிறந்தது என்னும் கருத்துகளை நூலாசிரியர் விளக்குகிறார்.

பிரம்மா, இரவி, இந்திரன், விண்ணுலகு, மாமேரு, பாற் கடல் எல்லாமே மயிலை என்று போற்றுகின்றார்.

திருமயிலை வெண்பா

நேரிசை வெண்பாவால் இயன்ற இந்நூல் பின்னிரண்டு அடிகள் யமகத்தில் அமைந்து பொருட்சுவையும் சொற்சுவையும் ஊட்டுகின்றன. முன்னிரண்டடிகள் திருமயிலையின் அரும் பெரும் சிறப்புகளைக் கொண்டொளிர்கின்றன. இந்நூலாசிரியர் பெயரும் ஊரும் அறிய இயலவில்லை.

தலப்பெருமை

திருமயிலையின் அருமையைக் கூறுகையில், கள்ளமில்லா உள்ளத்துக் கற்புருவாம் வாசுகியார் வள்ளுவரோடு வாழும் ஊர்,[557] சினங்காக்கும் செம்மனத்தர் ஊர்,[558] இல்லாதவர்க்கு ஏந்திழையார் பசி தீர்க்கும் ஊர்,[559] முருங்கைக் காய்கள் செங்

கரும்பைப் போல் சுவையூட்டும் ஊர்,[560] வீடுகள்தோறும் முல்லைக் காடுகள் நிறைந்த ஊர்,[561] கடலுப்பைப் பெற்று ஆய்ச்சியர் பால், தயிர், நெய் கொடுக்கும் ஊர்,[562] நெஞ்சையே கோயிலாக்கி வாயிலார் வாழும் ஊர்,[563] காசி, திருக்காளத்தி, காஞ்சி, திருத்தில்லையினும் மாசற்ற ஊர்,[564] ஊழிக்காலத்தில் அனைத்துலகும் அழியினும் அழியாத ஊர்,[565] கூவிளம் (வில்வம்), தேமா (இனியமா), புளிமா (புளிக்கும்மா) கொன்றை ஒளிர் சோலை, மாவிளம் ஓங்கும் ஊர்,[566] (இதில் யாப்பின் அடிப்படை நான்கு சீர்களையும் சிலேடையில் கையாண்டுள்ளார்). பாவ வெயிலுக்குப் புண்ணிய நிழலைத் தருகின்ற வண்டுகள் மொய்க்கும் புன்னை வனத்தூர்,[567] வேளாளர், அந்தணர், வேதியர், தொண்டர்கள், மறவர்கள் வாழும் ஊர்,[568] நெடுந்தூரம் மணம் பரப்பும் காவனம் உள்ள ஊர், ஞானசம்பந்தர் வெள் எலும்பைப் பெண் வடிவமாக்கும் ஊர்,[569] மெய்யன்பே வேலியாக அமைய சிவப்பயிர் செழித்து வளரும் ஊர்,[570] புண்ணியர்க் கெல்லாம் ஓரிடம்; நிலமகளின் நெஞ்சிடம் ஆகையால் அங்கே சிவனே வந்து தங்கிய ஊர்,[571] மையுண்ட கண்ணாளான பரையே மயிலாக வந்து மையுண்ட கண்டபரமனுடன் வாழும் ஊர்,[572] வேத தீர்த்தமும் வெள்ளி தீர்த்தமும் பிறவிநோய் தீர்த்திடும் தீர்த்தங்களும் நிறைந்த ஊர்,[573] சூரனைத்தடிந்து மயிலாக ஊர்தியையும் சேவலைக் கொடியாகவும் கொண்ட சிங்கார வேலனூர்,[574] திருமால் வழிபாடுசெய்து பல வரங்கள் பெற்றுச் சிறந்த ஊர்,[575] இராமன், சாமுண்டி, துர்க்கை, சுக்ரீவன், மன்மதன் ஆகியோர் வழிபட்ட ஊர்,[576] அழகிய வீதிகளிலும், மறையோதுவார் நாவிலும் மந்திரங்கள் மணக்கும் ஊர்,[577] குற்றமற்ற கொடையாளர் புகழும் கோவேந்தரின் நாற்படைகளும் எங்கும் நிறைந்திடும் ஊர்,[578] இனிய தென்றல் விளையாடும் சோலைகளும், மும்மத யானைகளும் காதலூட்டும் ஊர்,[579] நவமணிகளும் நவதானியங்களும் நகரெங்கும் குவிந்து கிடக்கும் ஊர்,[580] பைந்தமிழைப் பெற்றெடுத்த கும்ப முனியின் பொதிகையொத்த ஊர்[581] என்றெல்லாம் பாடி மகிழும் நூலாசிரியர் பின்பகுதி இருபது பாடல்களில் சில சிவத்தலங்களுடன் திருமயிலையை ஒப்பிடுகிறார். இந்த நூலின் தாக்கம் திருமயிலை உவமை வெண்பாவிலும் காணப்படுவதால் இந்நூல் அந்நூலுக்கு முன் படைக்கப்பட்டதாகும்.

அடியார்கள்

சைவ சமயக் குரவர்கட்கும் சிவனடியார்கட்கும் நூலாசிரியர் பேரன்புடையவராய் விளங்குகிறார். வல்லாரை வழிபட்டு

ஒன்று அறிந்தான்போல் நல்லார்கண் தோன்றும் அடக்கம்,[582] அடக்கம் அமரருள் உய்க்கும்,[583] அணிகலன் ஆவது அடக்கம்[584] என்னும் மொழிகளுக்கிணங்க அடியார்களிடத்து அடக்கமும் ஆண்டவனிடத்து அன்பும் காட்டும் பண்பு பாடல்தொறும் பயின்று வருகின்றது. சொல்லரசர் சம்பந்தர் சுந்தரனார் வாசகத்தின் தொல்லரசர் தாள்முடியில் சூடுவேன்'[585] என்று தமிழ்ச் சைவ மூல முதல்களைப் போற்றுகின்றார். பெரிய புராணத்தில் திருத்தொண்டத் தொகையுள் வரும் அடியார் களாகிய 'சடையனார், மெய்ப்பொருளார்,[586] சிவனின் வேறு காரணப் பெயருடன் சுட்டப்படுகின்றனர். மிழலையார் மூர்த்தியாரும்,[587] காரியார், ஆரூரர், கஞ்சாறர்,[588] அப் பூதியார், வெண்காடர்,[589] பரஞ்சோதி, மூலர்,[590] கணநாதன் நீலகண்டன்,[591] புகழ்த்துணையார், சீராளர்,[592] பூசலார்,[593] தண்டியார், தாயனார்,[594] மறைஞான சம்பந்தர்,[595] அரு ணந்தி.[596] உமாபதியார், மெய்கண்டார்,[597] சேரமான், கோட் புலியார்,[598] கண்ணப்பர், அப்பர், கழலர்,[529] மாதரையர், கீர்த்தியினார்,[600] என்று மேற்கண்ட அடியவர் பெயரையும் சிவனாரையும் ஒரு பெயர்க்கும் இருவராகக் கரந்துறைவதை நூலாசிரியர் அருமையாக எடுத்துக் காட்டுகிறார். இஃதன்றி யார் யார் தொழுது ஏற்றம் பெற்றனர் என்று வெண்பாவின் முன்னிரண்டடிகளில் தெரிவிக்கின்றார்.

திருமயிலைத் தல புராணங்கள்

புராணம் என்பதற்குப் பழமை என்பது பொருள். இது அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று. வியாச முனிவரால் இயற்றப்பட்டதும், சருக்கம், பிரதி சருக்கம், வமிசம், மன் வந்தரம், விமிசானு சரிதம் இவற்றைப்பற்றிக் கூறுவதுமான பழைய நூல்வகை என்று தமிழ் லெக்சிகன் கூறுகிறது.[601] புராணங்கள் பழைய வரலாறுகளைக் கூறுவனவாக அமைந் துள்ளன. அப்பழைய வரலாறுகள் பெரும்பாலும் தெய்வ அருள் தொடர்புடைய செய்திகளாக இருப்பது இயல்பு. கிரேக்கர்கள் தெய்வீக வீர மேம்பாடுடைய நூல்களையே புராணம என்று அழைப்பர்.[602] 'புராணங்களுக்குச் சிறப்பு என்பது, மிக நுண்மைத் தன்மை வாய்ந்த கருத்துகளை யாவரும் உணரும்படி நூல் வடிவில் வைத்து விளக்குதலும், கடினமான செய்திகளை விளக்க ஓர் உருவம் கொடுத்து எளிய இனிய கதைகளாகக் கூறுதலும், மனித வாழ்வியல் உண்மைகளையும் சுவைமிக்க அழகிய பாடல்களில் எளிய முறையில் அறிவுறுத்தலும் ஆகும்'[603]

என டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் விளக்கியுள்ளார். வட மொழி நூலார் புராணங்களை மகா புராணம் என்றும், உப புராணம் என்றும், அதி புராணங்கள் என்றும் மூவகைப்படுத் துவர். மகாபுராணங்கள் பதினெட்டையும் இயற்றியவர் வியாசர். உப புராணங்கள் பதினெட்டையும் பல பேர் இயற்றியுள்ளனர். அதிபுராணங்களும் எண்ணிக்கையில் பதினெட்டு என்று கூறுவர்.

தல புராணங்கள் தோன்றுவதற்கான காரணங்கள்

ஆழ்வார் நாயன்மார்கள் இறைவனின் மீதும் அவன் குடி கொண்டிருக்கும் ஊர்களின்மீதும் பக்திப் பதிகங்கள் பாடி வந்தனர். அப் பக்திப் பாடல்களைக் காப்பிய வடிவில் எழுத முயன்ற புலவர்கள் தல புராணமாகத் தந்தார்கள். பக்திப் பாடல்களின் வளர்ச்சி நிலையே தல புராணத் தோற்றத்திற்குக் காரணமாகிறது. மக்கள் விருப்பத்திற்கிணங்கப் புலவர்கள் புராணம் செய்தனர். சைவ வைணவ சமயப்போட்டி காரண மாகவும் பல தல புராணங்கள் தோன்றின. சோழர் காலத் திற்குப் பிறகு தமிழ் நாட்டில் அரசியல் மாற்றங்கள் அடிக்கடி ஏற்பட்டன. அமைதி குலைந்து, அந்நிய மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர் ஆட்சி ஏற்பட்டது. விஜயநகரப் பேரரசுக் காலத்தில் தல புராணங்கள் மிகுதியாகத் தோன்றின. வடமொழிப் புலவர்கள் புராணத்தில் பெருமை பெற்றிருந்தனர். ஆதலால் வடமொழிப் புராணத்தைத் தமிழ்ப்படுத்தும் பழக்கம் ஏற்பட்டது. இதனாலும் பல தல புராணங்கள் தோன்றின. தென்னாட்டில் உள்ள சைவ மடங்களைச் சேர்ந்தவர்கள் புராணங்கள் இயற்றினர். இதற்கு எடுத்துக்காட்டாகத் திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த அமுர்தலிங்கத் தம்பிரான் அவர்கள் திருமயிலைத் தல புராணம் பாடியதைக் கூறலாம்.

திருமயிலைத் தல புராணங்கள்

திருமயிலைமீது பாடப்பட்ட தல புராணங்கள் இரண்டு இப்போது கிடைக்கின்றன. அவற்றுள் முதலாவது தல புராணம் திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த அமுர்தலிங்கத் தம்பிரான் என்பவரால் இயற்றப்பட்டதாகும்.[604]

இரண்டாவது தல புராணம், மயிலை நாதமுனி முதலியார் என்பவரால் இயற்றப்பட்டதாகும்[605] இந்த இரண்டு தல புராணங்களும் இப்போது கிடைக்கப்பெறுகின்றன.

மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், மயிலையில் உள்ள மக்களின் வேண்டுகோளின்படி ஒரு புராணம் பாடினர் என்பர்.[606] அந்நூல் இப்போது கிடைக்கப்பெறவில்லை.

அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தல புராணம் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இயற்றிய பொழிப்புரையுடன் வெளிவந்துள்ளது. இதே நூலுக்கு வசனமொன்று, திருமயிலைப் புராண வசனம் என்னும் பெயரில் மோசூர் முனுசாமி முதலியார் என்பவரால் எழுதப்பட்டுள்ளது.[607]

ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய திருமயிலைத் தல புராணம்

திருமயிலைத் தல புராணம் என்னும் இந்நூல் ஸ்ரீ கைலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான் சுவாமிகளால் இயற்றப்பட்டதாகும். இந்நூலுக்கு உரையாசிரியர் மகாவித்வான காஞ்சீபுரம் சபாபதி முதலியார் அவர்கள் பொழிப்புரை எழுதியுள்ளார். புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் அவர்களால் பார்வையிடப்பட்டு, பையூர்க் கோட்டம் க. இராமசாமி முதலியாரவர்களால் 1892இல் பதிப்பிக்கப்பட்டது.

இந்நூல் பாயிரச் சருக்கம், நாட்டுச் சருக்கம், நகரச்சருக்கம், பொதிய மாமாலைச் சருக்கம், தலவிசிட்டச் சருக்கம், பார்வதியார் சாபச் சருக்கம், பார்வதியார் அருச்சனைச்சருக்கம், வேதம் பூசித்த சருக்கம், குமரவேல் பூசித்த சருக்கம், பிரமன் பூசித்த சருக்கம், சுக்கிரன் பூசித்த சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருவிழாச் சருக்கம் என்னும் பதின்மூன்று சருக்கங்களைக் கொண்டுள்ளது.

பாயிரச் சருக்கத்தில் முதற்பாடல் காப்புப் பாடலாக அமைந்துள்ளது. நல்ல கவிதைபாட விநாயகர் அருள்வேண்டி வாழ்த்துதலாக அமைந்துள்ளது. அடுத்துக் கபாலீசர், கற்பகவல்லித் தாயார், கூத்தாடும் விநாயகர், சிங்காரவேலர், திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், நந்தி தேவர், பைரவ மூர்த்தி, சரசுவதி, காரைக்காலம்மையார், கண்ணப்ப நாயனார், மங்கையர்க்கரசியார் மற்றுமுள்ள திருத்தொண்டர்கள்,

சண்டேசர், ஆதிசைவர் ஆகியோர் மீது பாடப்பெற்ற துதிப் பாடல்கள் மற்றும் அவையடக்கப் பாடல்கள் உள்ளன.

அவையடக்கம்

நூலுக்கு முன்னுரை போல அமைந்துள்ளது. அகத்திய முனிவரிடத்தில் முனிவர்கள் ஆயிரத்தெட்டுச் சிவத்தலங்களில் மூர்த்திச் சிறப்பு, தலச்சிறப்பு, தீர்த்தச் சிறப்பு உள்ள தலத்தின் சிறப்பைச் சொல்லியருள வேண்டும் என்று கேட்க, கயிலை மலையில் சிவபிரான் பார்வதி தேவியாருக்கு அருளிச் செய்த முறைப்படி திருமயிலையென்னும் தலத்தின் பெருமை அவரால் சொல்லப்பட்டது என்று அமுர்தலிங்கத் தம்பிரான் கூறுகின்றார்.[608]

நூலிற் சொல்லப்படும் கதை

இத்தலத்தின் பெருமையை முற்காலத்தில் அருளிய முறையும், இந்தத் தலத்தினுடைய உண்மைத் தன்மையைக் கயிலாயத்தில் ஓரிடத்தில் பார்வதி வணங்கிக் கேட்கப் பரமசிவன் திருவாய் மலர்ந்தருளத் துணிந்த முறைமையும்,[609] ஆதிகாலத்தில் இந்தத் தலத்தினுடைய மேன்மை முழுவதையும்சொல்லிய முறையையும், பிரமன், பார்வதி, செவ்வேள், வேதங்கள், சுக்கிரன், இராமர், முனிவர் சிலர் ஆகியோர் தொழுது அருச்சித்த முறையையும்,[610] கபாலி தீர்த்தம், மற்றுமுள்ள தீர்த்தங்களுடைய பெருமையைச் சொல்லிய முறையும், பெரியார்கள் சிலர் சிவாலயங்கள் கட்டுவித்துப் பேறு பெற்ற முறைமையும்[611] இந்நூலிற் கூறப் படுவதாகப் பாடியுள்ளார்.

பதினெண் புராணங்களுள் சிவனுக்குரிய பத்துப் புராணங்களுள் ஸ்ரீ சைவ புராணத்திலுள்ள காந்த புராணத்திலும் தனித் தனியே சொல்லப்படுகிற திருமயிலை என்னும் தலத்தின் சிறப்பினைச் சிவனருளால் வடமொழியினின்றும் மொழிபெயர்த்துப் பாடியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.[612]

பாயிரத்துடன் நாட்டுச் சருக்கம், நகரச் சருக்கம், பொதிய மாமலைச் சருக்கம், தலவிசிட்டச் சருக்கம், பார்வதியார் சாபச் சருக்கம், பார்வதியார் அருச்சனைச் சருக்கம், வேதம் பூசித்த சருக்கம், குமரவேள் பூசித்த சருக்கம். தீர்த்தச் சருக்கம், திருவிழாச் சருக்கம் என்னும் பதின்மூன்று சருக்கங்களாக இப்

புராணத்தைத் தொகுத்து 600 பாடல்களைப் பாடியதாகச் சொல்கிறார்.[613] அவர், நூலுக்கு 'மயிலை மூதூர்ப் புராணம்' என்னும் பெயரைச் சூட்டியுள்ளார்,[614] விருத்தப்பாவால் பாடிய தாகவும் குறிப்பிடுகின்றார்.[615] இவ்வாறு அவையடக்கம் ஒரு நல்ல முன்னுரையாகவே அமைந்துள்ளது. திருமயிலைத் தல புராணத்தில் பாயிரச் சருக்கம் தவிர்த்து மற்றச் சருக்கங்களில் தலப்பெருமை, மூர்த்திப்பெருமை, தீர்த்தப் பெருமை ஆகியவை சிறப்பித்துப் பேசப்படுகின்றன.

தொண்டை நாட்டுப் பெருமை

திருமயிலை, தொண்டை நாட்டிலுள்ள ஊர்களில் ஒன்றாகும். ஆகவே, நாட்டுச் சருக்கம் என்னும் பகுதியில் தொண்டை நாட்டின் பெருமைகளை 35 பாடல்களில் அமுர்தலிங்கத் தம்பிரான் விரித்துரைக்கின்றார்.

திருத்தலங்கள்

திருத்தலங்கள் நிறைந்த பெருமை தொண்டை நாட்டுக்கு உண்டு. பூமகளும், நாமகளும் பொருந்தி வாழும் இடமான திருவாலங்காடும், கண்ணப்பருக்கு முத்தி வழங்கிய தலமான திருக்காளத்தியும், கந்தவேள் திகழும் திருத்தணிகையும், திருவொற்றியூரும், திருமுல்லைவாயிலும் ஆகிய திருத்தலங்கள் நிறைந்த நாடு தொண்டை நாடாகும்.[616]

பாலாற்றின் பெருமை

தொண்டை நாட்டில் பாயும் புனித நதியான பாலாற்றைப் பாலி நதி என்று குறிப்பிட்டு அதன் புகழ் பாடுகின்றார் தம்பிரான். மகளிர் சொல்லுகின்ற சுவைத் தமிழினைக் கேட்டுக் கிளிகள் அதைப்போலப் பேசுகின்றன. கிளிகளின் குரலைக்கேட்ட வுடன் மயில்கள் நடமாடுகின்றன. மயில்கள் ஆடுவதைக் கண்டு மகிழ்ந்த பாலி நதியானது மணிகளை இரு கரைதோறும் பரிசாக வாரி வீசுகிறது. இந்தக் காட்சியினால் 'பாலி நதியானது, தொண்டைநாட்டில் வருகின்ற இரவலர்க்கு வாரி வழங்கும் வள்ளல்களைப் போலிருக்கிறது என்று பாலாற்றின் புகழினைத் தம்பிரான் பாடுகிறார்.[617]

மருதநில மகளிர்

தொண்டை நாட்டு மருத நிலத்தில் உழத்தியர் பல பணி களைச் செய்துகொண்டிருக்கின்றனர். உழத்தியர் நடந்து

செல்லும் நடையழகைக் கண்டு அன்னங்கள் நடை சோர்ந்தன என்னும் கருத்தமைந்த பாடல் தொண்டை நாட்டு மகளிரின் நடையழகைச் சிறப்பிக்கின்றது.

காவியுண் கடைசியர் செய்தொரு
மேவி மெல்லடி பேர்த்திடு மென்னடைக்
காவி சோர்ந்திவை தோகையர்க் காயதென்
னோவென் றன்னங்க டுண்ணென நோக்குமால்[618]

என்னும் பாடல் மகளிர் நடையழகைப் பாடுகிறது.

நல்லவர் நிறைந்த நாடு

வேத பள்ளிகள், பசுக்கள், துறவியர், சிவத் தலங்கள், வள்ளல்கள், அந்தணர்கள், சைவ சமயத் தலைவர்கள், இல்லறத்தவர்கள் நிறைந்த நாடு தொண்டை நாடு, ஆசாரியர்கள் வாழுகின்ற குகைகளும் மடங்களும் நிறைந்த நாடு, காமன் தேவியும் ஆசைகொள்ளும் அளவிற்கு அழகான ஆடவர், குபேரனைப் போன்ற செல்வர்கள், அகத்தியர் போலக் கல்விப் பயிற்சி மிக்கவர்கள் வாழும் நாடு என்று தொண்டைநாடு சிறப்பித்துக் கூறப்படுகிறது.[619]

திருமயிலைத் திருத்தலம்

நகரச் சருக்கத்து இருபத்தெட்டுப் பாடல்களில் திருமயிலைத் தலத்தின் பெருமைகளைத் தலபுராணம் கூறுகின்றது.

உமை மயிலாய்ப் பூசித்த தலம்

திருமயிலையின் பெயர்க் காரணத்தை அமுர்தலிங்கத் தம்பிரான்,

புன்னாகவனத் தெழில்சேர் கயிலைமலை யுமை மயிலாய்ப் பூசைசெய்யு
நன்னாமத்தான் மயிலையென விளங்குமூதூர்[620]

என்று பாடுகின்றார். இத்தொடர், புன்னைவனங்கள் நிறைந்த இடத்தில் உமை மயில் வடிவில் வந்து சிவபெருமானைப் பூசை செய்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது.

மயிலையின் பெருமை

திருமயிலையைக் கண்டால் தேவேந்திரன், பிரமன், திருமால் ஆகியோர் அமராவதி, மனோவதி, வைகுந்தம் ஆகிய தத்தம் நகரங்களை விரும்ப மாட்டார்கள்.[621] மண்டபங்களும் கோபுரங்களும் உடைய பிரமன் முதலான தேவர்களால் கட்டப் பட்ட கோயில்கள் நிறைந்த ஊர் திருமயிலை. அந்த இடங்களில் மறையோசையும் தமிழோசையும் பரவியிருந்ததை, 'பண்டிகழு மறையொலியு மூவர் தமிழ்ப் பாவொலியும் பரவுமெங்கும்'[622] என்னும் தொடரால் தம்பிரான் குறிப்பிடுகின்றார்.

அடியவர்களுக்கு விருந்தோம்பும் அரும்பண்புடையவர்கள் மயிலை மக்கள் என்றும்,[623] அங்கு இல்லறம் நடத்துவோரில், ஆடவர் சங்கரன்தனைப் போற்றுபவராவார். மகளிர் அருந்ததி போன்ற கற்புடையவர். அவர்கள் பார்வதி பரமேசுவரர் போல் அந்நகரில் வாழ்கிறார்கள் என்றும் கூறுகிறார்.[624]

தலபுராணம் பாடக் காரணம்

திருமயிலைக்கு முதலில் வடமொழியில் மட்டுமே புராணம் இருந்தது என்பதும், மயிலை மக்கள் கட்டளையிட்டதன் காரண மாகத் திருமயிலைத் தல புராணத்தைத் தமிழில் பாடியதாகவும் அமுர்தலிங்கத் தம்பிரான் குறிப்பிடுகின்றார். இச்செய்தியை,

> இன்னசீர் படைத்து மேவுமெழின் மயிலையில்வாழ் சைவ
> மன்னவர் மறையோரெம்மூர் வளர்கதை யதனைத் தேர்ந்தே
> யன்னதைத் தமிழினாலே யறையென வவர்கள் பாதப்
> பொன்னல ரெனதுட் கொண்டே புகலுவான் தொடங்கிப்
> புக்கேன்[625]

என்று பாடியுள்ளார்.

திருமயிலைத் தலபுராணத் தோற்றுவாய்

ஒரு சமயம் முனிவர்கள் எல்லாம் ஒன்றுகூடி நான்முகனிடம் தாங்கள் தங்கித் தவம் இருக்க இடம் வேண்டினர். ஒரு சக்கரத்தை நான்முகன் உண்டாக்கி நிலத்தின் மீது உருட்டி அது சென்று தங்குமிடமே அவர்களுக்குரிய வனம் என்று கூறினான். அந்த இடத்தில் முனிவர்கள் சென்று தங்கித் தவமியற்றி வந்தனர். சக்கரம் தங்கியதன் காரணமாக அவ்விடம் நேமிவனம் எனப் பட்டது. அவ்வனத்திற்குச் சூத முனிவர் எப்பொழுதாவது

வந்தால் முனிவர்கள் அவரை வரவேற்று யாதானும் ஒரு புராணத்தைச் சொல்லுமாறு கேட்பர். இதுவே புராணம் சொல்லும் முறையாக வடநூலார் பின்பற்ற, அதனையே அடியொற்றித் தமிழிலும் தோற்றுவாயாக அமைத்துக் கொண்டனர்.

ஆனால், இம்முறையிலிருந்து திருமயிலைத் தல புராணம் மாறுபட்டுள்ளது. 'பொதிய மாமலையில் அகத்தியர் வீற்றிருந்தார். பெருமை பொருந்திய முனிவர்கள் கூட்டமாய்க் கூடி அகத்தியர் வீற்றிருக்கும் ஆலயத்தை அடைந்து வணங்கினர். பிறகு அவருடைய பெருமைகளைச் சொல்லிப் புகழ்ந்தனர். சிவபிரான் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் தலங்கள் அளவில்லாதவை களாயிருந்தாலும், இவைகளுக்குள், ஆன்மாக்களின் குற்றங் களை நீக்கி அருளாகிய முத்தியை எளிதில் வழங்கும் அற்புதத் தலம் எதுவென்று கூறுங்கள் என்று கேட்டனர். அவர்களிடத்தில் அகத்தியர், முற்காலத்தில் பார்வதியாருக்குச் சிவபெருமான் உப தேசித்தருளிய ஒரு தலம் பூலோகத்திலிருக்கிறது. அத்தலத்தைக் கண்டு போற்றினால் சிவகதியை அப்போதே அருளிச்செய்யும் என்றார். அத்தலம் குறித்து ஆறுமுகக் கடவுள் எனக்கு உபதேசித் துள்ளார். அத்தலம் நிலைபெற்ற சிறந்த சிவத்தலங்கள் பதினாறினும், அதனினும் முக்கிய ஐந்து தலங்களினும் முதன்மையாய் விளங்குகிறது, காஞ்சி, காசி, திருக்காளத்தி, சிதம்பரம், திருமயிலை ஆகிய இந்த ஐந்து தலங்களுக்குள் நன்மை பொருந்திய திருமயிலையானது முத்தியை எளிதாகக் கொடுக்கும்' என்றார்.[626]

இதைக் கேட்டவுடன் முனிவர்கள் மகிழ்ச்சி அடைந்து ''அந்தத் தலத்தை இன்னதென்று வகுத்துச் சொல்ல வேண்டு மென்று வேண்டினர். அகத்தியரும் 'சிவபிரான் கூறிய பதினெட்டுப் புராணங்களுள் ஒன்றும், சிறந்ததுமான சைவ புராணத்தில், உயர்ந்த தலம் இன்னதென்று அதனுடைய சிறப்புகளைக் கோடி உருத்திரர்களுடைய அழகுள்ள பேர்கள் பொருந்திய சங்கிதையானது விவரித்துச் சொல்லுகிறது. அதை உங்களுக்கு இப்போது நான் சொல்லுகிறேன்' என்று கூறத் தொடங்கினார்.[627] இவ்வாறு திருமயிலைத் தல புராணத் தின் தோற்றுவாய் பொதிய மாமலைச் சருக்கத்திலும், தல விசிட்டச் சருக்கத்திலும் காணப்படுகின்றது.

ஒவ்வொரு சருக்கத்தின் ஈற்றிலும் அப்பகுதியில் கூறிய நிகழ்ச்சியும், இனிக் கூற வேண்டிய நிகழ்ச்சியும் பற்றி முனிவர்கள் வாயிலாக உணர்த்தப்பட, அதன்படி அகத்திய முனிவர் கூறிச் செல்வதாக அமைந்துள்ள பாங்கு சேக்கிழாரின் பெரிய புராணத்தை, கம்ப ராமாயணத்தை, திருவிளையாடல் புராணத்தை அடியொற்றி அமைந்தது போல உள்ளது.

அகத்தியர் அருளிய திருமயிலைத் தலப்பெருமை

அகத்தியர், மற்ற முனிவர்களுக்குத் திருமயிலைத் தல விசிட்டம் சொல்லுகிறார். பூமிதேவிக்குத் திலகம்என்று சொல்லத் தகுந்தது மயிலை.[628] தேவர் முதல் இவ்வுலகு வாழ் சராசரம் ஈறாக ஒருகணப்பொழுது மயிலையில் வாழ்ந்தால் பிறவிப் பிணி நீங்கிப் பிரம்மானந்த வெள்ளத்தில் அழுத்தும்.[629] கயிலாயத்தில் பார்வதி தேவியாருக்குச் சிவபிரான் உபதேசித்தருளிய தலம்,[630] கற்பகவல்லியோடு கபாலீசுவரர் திருக்கோயில் கொண்டிருக்கும் தலம்,[631] சுக்கிரன் தன் மெய்ப்பிணி நீங்கத் திருமயிலையைத் தொழுது அருள் பெற்றதால் தேவர்கள் சுக்கிரபுரி என்று வழங்கும் தலம்[632] என்று தலப்பெருமை பேசப்படுகிறது.

தீர்த்தப் பெருமை

திருமயிலையில் ஏழு தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் சக்தி கங்கையில் மூழ்கி எழுவோர் முத்திக் கடலில் முழுகி எழுவர்.[633] மனிதர், முனிவர், தேவர், கடவுளர் பலரும் படியும் தீர்த்தம்.[634] அத்தீர்த்தத்தில் நீர் என்றும் வற்றாது; தவளைகள் பொருந்தாது; இம்மை, மறுமை, முத்தி அளிக்கும் தன்மை உடையது என்று தீர்த்தப் பெருமையினை அகத்தியர் கூறுகிறார்.[635]

மூர்த்திப் பெருமை

மயிலைத் தலத்தைப் பயிரவி என்னும் சக்தி வடதிசையில் காக்கின்றாள்.[636] திருமயிலைக்கு வடதிசையில் பைரவ மூர்த்தி வீற்றிருக்கிறார்.[637]

திருமயிலையில் வீற்றிருக்கும் சிவலிங்கமூர்த்திகளில் ஒரு சிவலிங்க மூர்த்தியைத் துதி செய்தாலும் தங்கள் தங்கள் பிறவிக் கேதுவாய வினைகளையறுத்துச் சிவனருளைப் பெறுவார்கள் என்றால் கபாலீசனை வணங்கினால் பேரின்ப வாழ்வை அடைவர்[638] என்று அகத்தியர் தலவிசிட்டச் சருக்கத்தில் கூறுவதாக அமைந்துள்ளது.

பார்வதி மயில் உருவம் பெற்ற கதை

பார்வதியார் சாபச் சருக்கத்தில், கயிலாய மயிலையில் சிவபெருமான் ஐந்தெழுத்தின் சிறப்பைக் கூறிக் கொண்டிருக்கும் போது, ஒரு மயில் தோகை விரித்தாடியது. பார்வதி சிவன் சொல்வதைக் கேட்காமல் மயிலை விருப்பமாய்ப் பார்த்தாள். பிறகு சிவபெருமானிடம் மீண்டும் உபதேசிக்க வேண்டுமென்று வேண்டினாள். சிவபெருமான் கோபங்கொண்டு 'வனமிசை தழைக்கண் தோகை மயிலென மேவுக'[639] என்று சாபமிட்டார். பார்வதி அஞ்சிச் சாபம் நீங்கும்படி அருள் செய்ய வேண்டுகிறாள். மயிலுருவம் நீங்கி இயல்புருவம் அடைவதற்கு உரிய தலம் மயிலை என்று சிவபெருமான் கூறி, மேலும் மயிலையின் சிறப்புகளையும் எடுத்துரைத்தார். அங்குச் சென்று தவம் செய்தால் சாபம் நீங்கும் என்றார். பார்வதியும் சிவனை நோக்கித் தான் மயிலை செல்லுமுன் சிவபெருமான் அங்கு எழுந்தருள வேண்டும் என்று வேண்டுகிற கதைப் பகுதி இச்சருக்கத்தில் கூறப் படுகின்றது.

பார்வதி பரமசிவனைப் போற்றுதல்

பார்வதி, சிவனை வணங்கிக் கயிலையை விட்டு நீங்கினார். நேரில் வான்வழியாகச் சென்று பல தலங்களை வணங்கி, மயிலைக்குச் சென்றார். கபாலி தீர்த்தத்தில் நீராடி எழுந்து, கபாலீசுவரர் கோயிலுக்குள் சென்று அபிடேக, ஆராதனைகள் செய்து, இறைவனைப் போற்றிப் பாடினார். இவ்வாறு பல காலம் பூசைசெய்த பிறகு சிவபெருமான் வெள்விடை மீது தோன்றிக் காட்சி கொடுத்தருளினார். பார்வதியின் சாபம் நீங்கியது. தன் பழைய உருவைப் பெற்றார். 'நான் மயிலாயிருந்து பூசை செய்தபடியினாலே இத்தலத்தைத் திருமயிலை என்று பெரியோர்கள் சொல்ல வேண்டும்; நம்மைத் தியானிப்பவர்கள் எல்லாரும் எல்லாப் பேறும் பெற்றுப் பின்பு முத்தி அடைய வேண்டும்' என்று சிவபெருமானை வேண்ட, அவரும் அவ்வாறே அருளினார் என்று பார்வதியார் அருச்சனைச் சருக்கத்தில் கூறப் படுகின்றது.

தாமரைக்கு முத்திரை இடுதல்

இச்சருக்கத்தில் மயிலைத் தடத்தில் இயல்பாக நடைபெறும் இயற்கைச் செயலில் கற்பனையைக் கலந்து அற்புதக் கவிதையைப் படைக்கிறார் அமுர்தலிங்கத் தம்பிரான்.

மாலை நேரத்தில் இயல்பாகத் தடாகத்தில் உள்ள தாமரை மலர்கள் குவிகின்றன. அப்படிக் குவிகின்ற இதழ்களினிடையே கரிய வண்டுகள் அகப்பட்டுக் கொண்டன. இரவில் சந்திரன் தாமரை மலரில் உள்ள மணத்தைக் கவரா வண்ணம் முத்திரை யிட்டது போல் வண்டுகள் இருக்கின்றன என்பதை,

முட்டிய தாமரை முகஞ் சுருங்கவே
கட்டிய முகையினி லிருக்கும் காரளி
வட்டவெண் மதியதில் மணங் கொளாததி
னிட்ட முத்திரையென விரவீற் றோன்றுமே[640]

என்னும் பாடல் கற்பனை நயம்படக் காட்டுகிறது.

வேதம் பூசித்த கதை

வேதம் பூசித்த சருக்கத்தில், சோமுகன் என்னும் அசுரன், தேவர்களிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து கொண்டு வந்து பாற்கடலில் ஒளிந்து கொண்டது முதலான கதை நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. வேதங்களைப் பறிகொடுத்த தேவர்கள் சிவ பெருமானிடம் வேண்ட, சிவபெருமான் திருமாலை அழைத்து, பெரிய மீனுருக் கொண்டு அசுரனைக் கொன்று வேதங்களைக் கொண்டு வருக என்று கட்டளையிட்டார். திருமால் மகரமீன் வடிவம் கொண்டு சோமுகனுடன் போர் செய்து அவனைக் கொன்றார். வீடுதலை அடைந்த வேதங்கள் சிவபெருமானை வணங்கி நின்று அருள் வேண்டின. சிவபெருமான் வேதங்களைப் பார்த்து, 'திருமயிலையில் வந்து என்னை வணங்குக' என்று கூறினார். சிவபெருமான் ஆணைப்படி, வேதங்கள் மயிலையை அடைந்து தீர்த்தத்தில் மூழ்கிப் பின் கபாலீசுவரரை வணங்கி அபிடேக ஆராதனைகள் செய்தன. புதிதாக ஒரு சிவலிங்கத்தைக் கபாலீசுவரர் கோயிலுக்கு வடதிசையில் பிரதிட்டை செய்து அதற்குக் கிழக்குத் திசையில் ஒரு தீர்த்தத்தையும் ஏற்படுத்தி வழிபாடுகள் இயற்றின. வேதங்களின் துன்பம் நீங்க இறைவன் காட்சி கொடுத்தருளினான் என்று கூறப்படுகிறது.

மீனேசுவரர்

வேதங்கள் தாங்கள் பிரதிட்டை செய்த சிவலிங்கத்திற்கு மீனேசுவரர் என்று உலகோர் பேர் சொல்ல வேண்டுமென்று வேண்டியதை,

உளங்களித்து மாமறையு நின்றன் புடனுவந்தொருமொழி கூறுங்
களங்க வல்வினைச் சோமுகன் மீனெனக் கவர்தலாற்றொடர்
பாவந்
துளங்கி மாயுறச் செய்தலாற் றாபித்த சோதிலிங்கந்தன்னை
விளங்குநாம மீனேசுரனென மண்ணோர் விளம்பிட மிக
வேண்டும்[641]

என்னும் பாடல் உணர்த்துகிறது.

வேதபுரி

வேதங்கள், தாங்கள் உண்டாக்கிய தீர்த்தத்தில் நீராடுபவர் பிறவிப் பிணி நீங்க வேண்டும். மயிலைக்கு வேதபுரி என்னும் பெயர் வழங்கப்பட வேண்டும் என்றும் வேண்டின[642] என்று வேதம் பூசித்த சருக்கம் கூறுகின்றது.

கந்தபுராணக் கதை

ஆறுமுகக் கடவுளின் பிறப்பு, வளர்ப்பு, வீரச்செயல் ஆகியவை கந்தபுராணத்தில் கூறப்படுகின்றன. அதே கதை, திருமயிலைத் தல புராணத்தில் குமரவேள் அருச்சனைச் சருக்கத்தில் கூறப்படுகின்றது. சூரபன்மாவை அழிக்கப் புறப்படும் ஆறுமுகனுக்குச் சிவபெருமான், தேர், ஆயுதம், பூதகணம் ஆகியவற்றை அளித்ததோடு மட்டுமல்லாமல் முருகனிடம் 'நீ மயிலைக்குச் சென்று அங்கு என்னை வழிபட்டால் ஒரு வேலாயுதம் தருகிறேன்' என்று கூறுகிறார். அவ்வாறே ஆறுமுகக் கடவுள் மயிலை சென்று, தீர்த்தத்தில் நீராடித் திருக்கோயில் சென்று வணங்கி அபிடேக ஆராதனைகள் செய்தார். கபாலீசுவரரும் கற்பகவல்லியும் வெள்ளெருதில் அமர்ந்து தோன்றி அருளினார். சிவபெருமான் ஆறுமுகக் கடவுளுக்கு வேல் கொடுக்க எண்ணியதும், அங்கே ஒரு வேல் தோன்றியது. அந்த வேல் சக்தி வேல், அதனை ஆறுமுகன் கையில் கொடுத்து 'சூரபன்மா முதலானோரைக் கொன்று, தேவர் துன்பம் நீக்கிப் பின்பு மயிலையில் வந்து தங்குக' என்று கூறினார். 'நீ இத்தலத்தில் சக்திவேல் பெற்றதால், வெற்றிபெற்ற சிங்காரவேலன் என்று பெயரும் புகழும் தந்தோம்' என்று மேலும் கூறியருளினார். பின்னர் ஆறுமுகக் கடவுள் சூரபன்மனுடன் போர் செய்து வேலாயுதத்தால் சூரபன்மனை இரண்டு துண்டாகும்படி செய்தார். அவை மயிலும் சேவலுமாய் வரக்கண்டு வாகனமும்

கொடியுமாக்கித் தெய்வயானையை மணம்புரிந்து கொண்டு கயிலையில் சில காலம் தங்கிப் பின்னர் வள்ளியை மணந்து கொண்டு திருமயிலை வந்து சேர்ந்தார். தெய்வயானை வள்ளி யுடனும், பூதப்படை வீரர் இலட்சத்தொருவர் சூழ, மயிலைத் திருக்கோயிலில் சர்வசதா காலமும் வாழ்ந்திருந்தார் என்று இச்சருக்கத்தில் கூறப்படுகின்றது.

இத் தலத்தின் யிலகுசத்திவேற்
பெற்றை யாதலாற் பெயருனக்கு நாம்
வெற்றி பெற்ற சிங்கார வேலனென்
றுற்ற நாமமுயர்ச்சி தந்தனம்

என்று அமுர்தலிங்கத் தம்பிரான் மயிலை முருகனுக்குச் சிங்காரவேலன் என்னும் பெயர் வந்ததற்கான காரணத்தைக் கூறுகிறார்.[643] இச்சருக்கத்தில் இது குறிப்பிடத்தகுந்த செய்தி யாகும்.

பிரம கபால மூர்த்தி

சிவபெருமானுக்குக் கபாலீசுவரர் என்னும் பெயர் ஏற்பட்ட தற்கான காரணம் பிரமன் பூசித்த சருக்கத்தில் கூறப்படு கின்றது.

கயிலையிலுள்ள சிவபெருமான் தன் வலப்பாகத்திடமாகப் பிரமனைப் படைத்தான். உலகைப் படைத்த முறையைப் பிரம்ம னுக்குச் சிவன் அருளுகின்ற நேரத்தில், உமை திருமஞ்சனமாடிச் சிவனுடன் வீற்றிருந்தாள். பிரமன் சிவபெருமானைச் சிவன் என்று உணராமல் தன்னைப்போல் இவனும் ஒருவன் என்று எண்ணினான். பிரமன் தன்னுள்ளத்தில் நினைத்ததை அறிந்தோ, உமையம்மை தெளிவடையும் பொருட்டோ அவனுடைய ஐந்து தலைகளுள் ஆகாயத்தை நோக்கிய வண்ணமிருக்கும் நடுத் தலையை நக நுதியினால் கிள்ளித் தன் திருக்கரத்தில் ஏந்திக் கொண்டான் பிரமன் பயந்து பணிந்து 'நான் உங்கள் மகன். கோபிக்க வேண்டா' என்று வேண்டினான். திருமயிலைத் தலத்தில் தன்னைப் போற்றிப் பணிந்தால் வரந்தருவதாக அருளிச் செய்தார். பிரமன் அன்ன வாகனத்தில் ஏறிப் பறந்து சென்று திருமயிலையை அடைந்தான். கபாலீசுவரரைப் போற்றி வணங்கிப் பூசைகள் செய்தான். கபாலீசுவரர் வெள்ளேற்றின் மீது காட்சியருளிப் பிரமனை நோக்கி, 'உன்னுடைய விருப் பத்தைச் சொல்லுக' என்றார். பிரமன், 'உலகத்தைப் படைக்கும்

தொழிலை எனக்கு அருள வேண்டும். இத்தலம் கபாலி நகர் எனவும், இறைவனுக்குக் கபாலீசர் என்றும், சத்தி கங்கை தீர்த்தத்திற்குக்கபாலி தீர்த்தம் என்றும் பெயர் விளங்கவேண்டும் என்று வேண்டினான். இதனை,

விளங்கு மித் தலந் தனக்கும் விண்ணகத் தமரரேத்தக்
களங் கறுத்திடு நினக்குங் கருதுமித் தீர்த்தத்திற்கும்
வளங் கொளுந் திருக் கபாலி மாநகரென்று மேலோ
ருளங்கொள் கபாலியென்று முலகில் வாழுயிர்கட் கெல்லாம்

கருதியதுதவுஞ் சீர்த்திக் காபாலி தீர்த்த மென்னும்
பரவுசீர் அமரர் யாரும் பகர்ந்திட வேண்டுமென்ன
வுரைசெயு முறைமையாவு முதவினனே கென்றோதித்
திரை தரு கங்கை சூடுஞ் செஞ்சடை முடியோ னுற்றான்

என்று அமுர்தலிங்கத் தம்பிரான், பிரமன் பூசித்த சருக்கத்தில் கூறுகிறார்.[644]

வெள்ளிக்கு அருளிய கபாலீசுவரர்

அசுரகுரு சுக்கிரன் மாபலிச் சக்கரவர்த்தி, வாமனர் உருவில் வந்த திருமாலுக்கு மூன்றடி மண் தானம் கொடுக்க முனைந்த போது, வண்டு உருவெடுத்துக் கரகத்தின் துவாரத்தை அடைத்தான். வாமனர் தருப்பைப் புல் கொண்டு குத்த, சுக்கிரன் கண்ணிழந்தான். மீளவும் பார்வை பெற வேண்டி, திருமயிலை வந்தடைந்தான். கபாலீசுவரரை வணங்கினான். கபாலி தீர்த்தத்தின் அருகில் ஓர் இலிங்கம் தாபித்து ஆராதனை செய்தும், கபாலி தீர்த்தத்திற்கு அக்கினி மூலையில் ஒரு தீர்த்தம் உண்டாக்கி, நாள்தோறும் கபாலீசுவரரைப் பூசை செய்தும் வந்தான். பலநாள் பூசைக்குப் பிறகு ஒரு நாள் கபாலீசுவரர் காட்சி அருளினார். சுக்கிரன் ‘இத்தலத்திற்குச் சுக்கிரபுரி என்று பெயர் விளங்க வேண்டும்; மீண்டும் எனக்குக் கண்ணொளி கிடைக்க வேண்டும் என்று வேண்டினான். அவ்வாறே, சிவ பெருமானும் அருளிச் செய்தார் என்று சுக்கிரன் அருச்சனைப் படலத்தில் கூறப்படுகின்றது.

சுக்கிரன் மயிலையைக் கண்டு மகிழ்ந்ததை,

நெருங்குதண் டலைகளு நீடு வாவியுஞ்
சுரும்பிமிர் குவளைகள் துன்னு மோடையுங்

கரும்பின்வண் சோலையுங் காமர் வீதியு
மொருங் குடன் கண்டுகண் டுவகை பூத்தனன்[645]

என்று தம்பிரான் பாடுகின்றார்.

திருமயிலைத் தீர்த்தங்கள்

சீர்தரு மயிலை யென்னுஞ் செழும் பதிய தனினிற்கு
நீரெலாந் தீர்த்தமென்று நிகழ்த்திடும் புராணம் யாவும்

திருமயிலைத் தலத்திலுள்ள நீர்நிலைகள் எல்லாமே தீர்த்தங்களே என்று புராணங்கள் போற்றுவதை மேலே குறிப்பிட்டுள்ள தொடர் உணர்த்துகின்றது.[646] கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு மேற்றிசையில் இருக்கும் உத்தம கபாலி தீர்த்தம், சக்தி கங்கை என்னும் பெயரையும் பெற்று விளங்குகிறது. கலிங்க அரசன் தருமன் மகன் சாம்பவன் என்னும் பாவி, இத்தீர்த்தத்தில் மூழ்கித் துயர் தீரப் பெற்றான். இதுவே மயிலையிலுள்ள தீர்த்தங்களில் முதன்மையான தீர்த்தம். திருமயிலைக் கடல், கடவுள் தீர்த்தம் என்றழைக்கப்படுகின்றது. வேததீர்த்தம், வாலி தீர்த்தம், கங்கை தீர்த்தம், வெள்ளி தீர்த்தம், இராமதீர்த்தம் என்னும் ஏழு தீர்த் தங்களையும் அவற்றில் நீராடினால் விளையும் பலன்களையும் தீர்த்தச் சருக்கம் கூறுகின்றது.

மேலும் பயிரவி திருக்கோயிலும், எண்ணற்ற சிவலிங்கங் களும் நிறைந்த தலம் மயிலை என்று போற்றப்படுகின்றது.

திருமயிலையின் மூர்த்தி, தல, தீர்த்தப் பெருமையை,

அத்தல மிலிங்க மூர்த்தி யழகுறு தீர்த்தமூன்றி
லுத்தமமா மொவ்வொன்றே யுற்றுகந் திறைஞ் சினோர்க்கே
முத்தியை நல்குந் தொல்சீர் முனிவர் காளறையு மீது
சத்திய மென்றான் வாசச் சந்தனப் பொதியத் தண்ணல்[647]

அகத்தியர் கூறியதாக அமுர்தலிங்கத் தம்பிரான் பாடியுள்ளார்.

இராமன் நடத்திய திருவிழா

திருவிழாச் சருக்கத்தில் இராமாயணக் கதை முழுமையாகக் கூறப்படுகின்றது. மனைவியைத் தேடிச் செல்லும் இராமன் வழியில் திருமயிலையைக் கண்டு கபாலீசுவரரை வணங்கி வரம் பெற்று இலங்கை சென்று இராவணனைக் கொன்று, சீதையை

மீட்டு, அயோத்தி சென்று ஆட்சி புரிந்து மீண்டும் திருமயிலை வந்து சேர்ந்தான். தீர்த்தம் ஒன்று ஏற்படுத்தி, ஐப்பசியில் கபாலீசுவரருக்குப் பிரம்மோற்சவம் நடத்தினான்.[648] கபாலீசுவரர் காட்சி அருளிச் சிங்கார வேலருக்குத் தைத் திங்களில் திருவிழா நடத்துக என்று கூற அவ்வாறே திருவிழா நடத்தினான்.[649] பின்னர் அயோத்தி மாநகர் திரும்பிச் சென்றான் என்று திருவிழாச் சருக்கம் கூறுகிறது.

நூல் நிறைவு

இவ்வாறு மயிலையின் மாண்பினை அகத்தியர் முனிவர்களுக்குக் கூறினார். முனிவர்கள் மயிலையைக் காணும் ஆவல் கொண்டு, மயிலையை நோக்கிப் புறப்பட்டனர். மயிலை வந்தடைந்ததும் கபாலீசுவரர் கோயிலிலுள்ள தெய்வங்களை வணங்கினர். சிங்காரவேலர், முனிவர்களை மயிலையிலேயே எந்நாளும் இருக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். சிவபெருமான் அவர்களுக்குக் காட்சி அருளி இத்தலத்தில் வசித்து வந்தால் முத்தி அடைவீர் என்று கூறினார். அவ்வாறே முனிவர்களும் மயிலைத்தலத்தில் வசித்து நன்மை அடைந்தனர் என்று திருமயிலைத் தல புராணம் மயிலையின் மூர்த்தி, தல, தீர்த்தப் பெருமைகளைக் கூறுகின்றது. நூல் படிப்பவர் பெறும் பயன், வாழ்த்துப்பாடல் ஆகியவற்றோடு நூல் நிறைவு பெறுகின்றது.

கற்பனை நயம்

இந்நூலாசிரியர் கற்பனை நயம்படப் பாடுவதில் வல்லவர் என்று தெரிகிறது. அன்ன நடையைக் காட்டிலும் அழகிய நடை கொண்ட மகளிர் என்பதைக் கூறவந்தபோது, 'உழத்தியர் கழனிகள்தோறும் சென்று மிருதுவாகிய தங்கள் பாதங்களைப் பேர்த்துவைக்கும் மெத்தென்ற நடையைக் குறித்து அன்னங்கள் ஆவி சோர்ந்து இந்த நடைகள் இந்த உழத்தியர்களுக்குண்டாகிய காரணம் யாதோவென்று அச்சத்துடன் நோக்கும்' என்று பாடுகின்றார்.[650]

திருமயிலை சோலைகள் சூழ்ந்த நகரம் என்றும் கதிரவன் ஒளியும், நிலவின் ஒளியும் நுழைய முடியாத அளவுக்கு அச்சோலைகள் விண்ணை மறைத்தன என்றும், அந்நகரில் இருள் சூழவொட்டாமல் ஒளி தருவது அங்குள்ள வீடுகளில் பதிக்கப்

பட்டிருக்கும் மாணிக்கங்களின் ஒளியும் முத்துக்களின் ஒளியுமே யாகும் என்று கற்பனை நயம்படப் பாடியுள்ளார்.[651]

கவிஞர் கயிலை மலையை வருணிக்கும்போது தேவர்கள் பாற்கடலைக் கடைந்த கதையைக் கொண்டு கற்பனையில் மிதக்கிறார். கயிலை மலையை வெள்ளியங்கிரி என்று கூறுவர். வெண்மையான பனி மலையே கயிலைமலை. இங்கே சிவ பெருமான் வீற்றிருக்கிறார் என்பது புராண மரபு. 'பாற்கடலானது சிவபெருமான் நஞ்சையுண்ணும்படியாகக் கொடுத்த குற்றம் நீங்க வேண்டியோ, தேவர்கள் இன்னமும் வந்து கடைவார்கள் என்று அஞ்சியோ சிவபெருமானிடம் வந்து பொருந்தியிருப்போம் என்று கருதித்தானோ திரண்டு அச்சிவ பெருமானுக்கு வெள்ளியாசனமாயுருவங் கொண்டு அங்குச் சென்றிருக்கிறது என்று சொல்லத்தகும்படி கயிலை மலை வெள்ளி மலையாகக் காட்சியளிக்கிறது என்று பாடுகிறார்.[652] இத்தகைய கற்பனை நிறைந்த பாடல்கள் சருக்கங்கள் எங்கும் பரவிக் காணப்படுகின்றன.

புராணக் கதைகள்

இத்தல புராண ஆசிரியர், பழைய புராணக் கதைகளையும் ஆங்காங்கே எடுத்துக் காட்டுகின்றார்.

அகத்தியர் ஏழு கடல் குடித்ததையும்,[653] அகத்தியர் பொதிகை மலைக்கு வந்த கதையையும்,[654] முருகன் பிரமனைச் சிறையில் வைத்த கதையையும்,[655] முருகன் தந்தைக்குப் பிரணவப் பொருள் உரைத்ததையும்,[656] சிங்காரவேலர் என்னும் பெயர் பெற்றதற்கான காரணத்தையும்,[657] சூரபன்மன் இறுதியில் வேலும் மயிலுமாகிய கதையையும்[658] குறிப்பிட்டுள்ளார்.

இறைவனைப் பூசை செய்யும் முறை

பார்வதியார் அருச்சனைச் சருக்கத்தில், மயிலுருவில் இருந்த பார்வதி சிவ பூசை செய்யும் முறையை விளக்கிக் கூறுகிறார்.

'திருக்குளத்தில் மூழ்கிக் குளித்துக் கரையேறி உடல் துடைத்துத் திருநீறு பூசிக் கொள்ளவேண்டும். நல்ல மலர்கள், நல்ல திருமஞ்சனநீர், இனிமையான பழங்களைப் பூசைக்கு

எடுத்துச் செல்ல வேண்டும். இறைவன் சந்நிதியைச் சுத்தம் செய்ய வேண்டும். துவார பூசை, பரிவார பூசை ஆகம முறைப்படி செய்யவேண்டும். பால், தயிர், நெய், தேன் முதலியவற்றால் தனித் தனியாக அபிடேகம் செய்ய வேண்டும். இறைவனின் திருமேனியிற் படிந்திருக்கும் ஈரத்தைத் திருவொத்தாடை கொண்டு ஒற்றி எடுக்க வேண்டும். குங்குமப் பூ சேர்த்த சந்தன மிட வேண்டும். நறுமணமுள்ள செங்கழுநீர் மலர், தாமரைமலர், மருக்கொழுந்து குறுவேர், சண்பக மலர் மற்றும் பலவகை மலர் கொண்டு கட்டப் பெற்ற திருப்பள்ளித் தாமங்களைச் சாத்த வேண்டும்.

வெண்பட்டுத் துணி விரித்துச் சாத்தி, இரத்தினங்கள் பதித்த ஆபரணங்கள் அணிவித்து, வெல்லம், பசுவின் பால், நெய், முப் பழங்கள் என்னும் இவை சேர்த்து அமைக்கப்பட்டிருக்கிற அன்னம், தாம்பூலம், தூய்மையான நீர் என்னும் இவைகளை நிவேதனம் செய்ய வேண்டும். பூசையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று போற்றி, மலர் கொண்டு பூசை செய்ய வேண்டும் என்று பூசை முறையை விளக்கமாகக் கூறுகிறார்.[659]

போற்றிப் பாடல்கள்

இறைவனை மனத்தால் நினைப்பது மட்டுமல்லாமல் அவன் பெருமைகளையும் சொல்லிப் போற்ற வேண்டும். இறைவனின் வீரச் செயலையும் பெருமையையும் குறித்துப் போற்றும் வகை யில் அமைந்த பாடல்கள் வழிபாட்டிற்குரியவை. போற்றிப் பாடல்கள் சிந்தைக்கும் செவிக்கும் இனியவாய், வந்த இரு வினைக்கும் மாமருந்தாய் விளங்குவன. இறைவன் பாட்டில் கடவுளுடன் உயிர் ஒன்றி நுகரும் பேரின்பத் திளைப்புக்கு அடி கோலுவன துதிப்பாடல்களே. தம் தேவாரப் பாடல்களால் போற்றிப் பாடல்களுக்கு முன்னோடியாக விளங்கியவர் திருநாவுக்கரசரே. அவருடைய போற்றித் திருத்தாண்டகங்கள் சிறந்த தமிழ்ப் போற்றிப் பாடல்களாகும். திருநாவுக்கரசரைப் பின்பற்றி மாணிக்கவாசகரும் திருவாசகத்தில் போற்றித் திரு வகவல் பாடியிருக்கிறார். இவற்றைப் பின்பற்றி இத்தல புராணத் திலும் அமுர்தலிங்கத் தம்பிரான் அவர்கள் கபாலீசுவரரைப் போற்றும் போற்றிப் பாடல்களை அமைத்திருக்கிறார்.

பார்வதியின் போற்றிப் பாடல்கள்

மயிலுரு நீங்கிப் பழைய உருப்பெற உமையம்மை, இறை வனைப் பூசித்த போது சிவபெருமானின் வீரச் செயல்களையும்,

அடியவருக்கு அருள் செய்யும் எளிய தன்மையையும் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்.[660]

வேதம் பூசித்தல்

கொடிய சோமுகாசுரன் செய்த மாயையில் அவ்விடத்தில் அகப்பட்டுத் தளர்ந்த வேதங்கள் அருள் வேண்டி, திருமயிலையை அடைந்து கபாலீசுவரரைப் போற்றி வணங்கின.

மெய்ய போற்றி ஐம்முகவனே போற்றிமன்
விமல சங்கர போற்றி
துய்ய போற்றி[661]

என்று வேதங்கள் போற்றி வணங்கின.

சுக்கிரன் போற்றுதல்

வாமனனால் கண்ணிழந்த சுக்கிரன், திருமயிலை அடைந்து கபாலீசுவரரை 'மெய்யனே போற்றி' என்று வணங்கினான். பலநாள் பூசை செய்தபிறகு ஒரு நாள் சிவபெருமான் சுக்கிரனுக்குக் காட்சி கொடுத்து அருளினார். அப்போது சுக்கிரன் சிவபெருமானுடைய பெருமைகளைப் போற்றிப் பாடினான்.[662]

முனிவர்கள் போற்றுதல்

திருமயிலைத் தல வரலாற்றை அகத்தியரிடம் கேட்ட முனிவர்கள், அவர் ஆணைப்படி மயிலை சென்று கபாலீசுவரரை வணங்கி அவருடைய அருமை பெருமைகளைப் பாடிப் போற்றி வணங்கினர்.[663]

திருக்குறள் கருத்து

சுக்கிரன் அருச்சனைப் படலத்தில் மாபலி சக்கரவர்த்தி வாமனருக்கு மூன்றடி மண் தாரை வார்த்துக் கொடுக்க முயன்ற போது சுக்கிராச்சாரியார் வண்டு உருவெடுத்துத் தடுக்க முயன்றார். அந்த நிகழ்ச்சியைத் தலபுராண ஆசிரியர் வருணிக்கும்போது திருக்குறள் கருத்தை எடுத்தாளுகின்றார்.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்[664]

என்னும் குறள் கருத்து,

கொடுப்ப ரருகிருந்து குற்றமே சொலுமன் னோரைக்
கெடுத்திடுந் தெய்வமென்று கிளத்திடும் வசனம் பொய்யோ
வெடுத்த கூராழி யங்கை யிறைவருக் களிக்குந் தானந்
தடுத்தசுக் கிரனு நாட்டந் தானிழந் திட்டா னம்மா[665]

என்று அமுர்தலிங்கத் தம்பிரானின் பாடலில் வெளிப்படுகிறது.

பாவச் செயல்களின் பட்டியல்

கலிங்கதேசத்து அரசன் தருமன் என்பவனின் மகன் சாம்பவன் பெரும் பாவங்கள் செய்தவன். அவன் திருமயிலையில் ஒரு வேதியரைச் சந்தித்தபோது தான் செய்த பாவங்களைக் கூறுகின்றான். அவை, செல்வச் செருக்கால் பிறர் மனைவியைப் புணர்தல், விலைமாதர்களைச் சேருதல், கற்புடை மாதர் தோள் தழுவ நினைத்தல், அந்தணர்களுக்குத் துன்பம் இழைத்தல், அந்தணர் பொருள் கவர்ந்து அவர்களைக் கொன்று அவர் மாதரைத் தழுவுதல், இரவில் பிறர் மனை புகுந்து திருடுதல், கள் குடித்தல், பொய்ச் சொல் கூறுதல், ஊன் உண்ணுதல், வழிப் போக்கர்களை அம்பெய்து கொல்லுதல் என்பவையாகும்.[666]

யம தண்டனை

பாவம் செய்தவர்கள் நரகம் அடைவர். அங்கு அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும். அந்தத் தண்டனை யம தண்டனை என்று கூறப்படும். இவ்வாறு ஒரு மரபு நம் நாட்டில் உள்ளது. இத் தல புராணத்தில் சாம்பவன் என்னும் பாவச்செயல் புரிந்தவனிடத்தில் அந்தணர் ஒருவர் யம தண்டனைகளைப் பற்றிக் கூறுகிறார். யம தூதர்கள் கால பாசத்தாற் கட்டி, நஞ்சையும் இரும்பையும் பாகுபோலக் காய்ச்சி, வாயிலே ஊற்றுவார்கள். நெருப்பில் காய்ந்த சூலத்தினாலும் சூடு போடுவார்கள். அளவிறந்த பதினாயிரம் கற்ப காலம் வரையில் பற்களிலே மலை போல அக்கினியைச் சொரிவார்கள் மார்பிலும், தலையிலும், தோளிலும் இருப்புச் சலாகையைப் பாய்ச்சுவார்கள். சுழன்று கொண்டிருக்கும் செக்கில் வைத்தாட்டுவார்கள். இவ்வாறு யம தண்டனைகள் பற்றிக் கூறப்படுகின்றது.[667]

இராமர் செய்த தேர்

இராமபிரான் திருமயிலை வந்து தங்கிக் கபாலீசுவரரை வணங்கியது மட்டுமல்லாமல் அவருக்குத் திருத்தேர் செய்து

கொடுத்துத் திருவிழா எடுத்தான் என்று திருவிழாச் சருக்கத்தில் கூறப்படுகிறது.[668]

இத்தகைய சிறப்புகள் பொருந்தியதாகத் திருமயிலைத் தல புராணம் விளங்குகிறது.

மயிலை நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தலபுராணம்

திருமயிலைத் தல புராணம் என்னும் மற்றும் ஒரு தல புராணம் மயிலை தணிகாசல முதலியார் மாணவராகிய புராண ரத்னாகரம்-மயிலை நாதமுனி முதலியார் அவர்களால் பாடப் பெற்று கோமளேசுவரன்பேட்டை, வித்வான் ம. இராஜகோபால பிள்ளையவர்களால் பார்வையிடப்பட்டு 1924ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்றது,

இந்நூல் பாயிரம், அகத்தியர் படலம், கூத்தாடும் வீநாயகர் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம், உமாதேவியார் சாபமேற்ற படலம், உமாதேவீயார் சாபம் நீங்கிய படலம், சிங்காரவேலர் சக்தி வேல் பாசுபதாஸ்திரம் பெற்ற படலம், வெள்ளீசர் படலம், வாலீசர் படலம், அங்கம்பூம்பாவை சரித்திரப் படலம், திருவள்ளுவ நாயனார் பிரபாவப் படலம் என்னும் பன்னிரு படலங்களுக்கு 580 செய்யுட்களும், முண்டகக் கண்ணம்மை சரித்திரம், இந்திரன் கரமுகமான் சரித்திரம், மல்லீசர் சரித்திரம், காரணீசுரர் சரித்திரம், விருபாட்சீசர் சரித்திரம், ஸ்ரீராமர் பூஜை செய்தது, தீர்த்த பாலீசர் சரித்திரம், வாயிலார் சரித்திரம் என்னும் எட்டுச் சரித்திரங்களுக்கு 225 பாடல்களும், வாழி வீருத்தம் ஒன்றுமாக 806 திருவிருத்தங்கள் கொண்டதாக அமைந்துள்ளது.

நூலின் முன்னர் உள்ள தற்சிறப்புப் பாயிரம் நூலாசிரியரின் வரலாற்றை உணர்த்துகிறது. கடவுளர் துதி பாடல் பன்னிரண்டும், அவையடக்கப் பாடல் ஒன்றும் உள்ளன.

அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தலபுராணத்திற்கும் இதற்குமுள்ள வேறுபாடுகள்

கூத்தாடும் விநாயகர் படலம், வாலீசர் பாடலம், அங்கம் பூம்பாவை சரித்திரப் படலம், திருவள்ளுவ நாயனார் பிரபாவப்

படலம் என்னும் படலங்களும், முண்டகக் கண்ணம்மை சரித்திரம், இந்திரன் கரமுகமான சரித்திரம், மல்லீசர் சரித்திரம், காரணீசுரர் சரித்திரம், விருபாட்சீசர் சரித்திரம், தீர்த்தபாலீசர் சரித்திரம், வாயிலார் சரீத்திரம் என்னும் சரித்திரங்களும் அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தல புராணத்தில் இல்லாதவையாகும்.

அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தலபுராணத்தில் உள்ள தல விசிட்டச் சருக்கம், வேதம் பூசித்த சருக்கம், பிரமன் பூசித்த சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருவிழாச்சருக்கம் ஆகிய பகுதிகளை நாதமுனிமுதலியார் தம்முடைய தல புராணத்தில் எழுதவில்லை. ஆனால், திருவிழாச் சருக்கத்தில் கூறப்படும் கதையை ஸ்ரீ இராமர் பூஜை செய்தது என்னும் தலைப்பில் கூறுகிறார்.

அமுர்தலிங்கத் தம்பிரானின் தலபுராணம் பழைய காவியங் களுக்கு ஈடாக எழுதப்பட்டதாகும். அந்த அளவுக்குக் கவிதை வளம் நிறைந்ததாக நாதமுனி முதலியார் தலபுராணம் விளங்க வில்லை.

அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தல புராணத்தில் இல்லாத கதைகளின் சுருக்கம் வருமாறு :

கூத்தாடும் விநாயகர் படலம்

இப்படலத்தில் கூத்தாடும் விநாயகர் வரலாறு எட்டுப் பாடல்களில் கூறப்படுகின்றது. திருமால் சிவனை அருச்சித்துச் சக்ராயுதம் பெற்றான். அதனைப் பரிசோதித்துப் பார்க்கச் சிவன் மீதே சக்கரத்தைச் செலுத்தினான். சிவனுடைய தலை மாலையில் இருந்த ஒரு தலை திருமாலின் சக்கரப் படையைக் கவ்விக் கொண்டது. திருமால் சிவனிடம் வேண்ட, அவர், 'நீ கூத்தாடிச் சக்கரப் படையைப் பெற்றுக்கொள்' என்று கூற மாயவனும் கூத்தாடினான். தலைமாலையில் இருந்த தலை, மாயவனைக் கண்டு நகைத்தது. அந்தச் சக்கரம் கீழே விழுந்தது. அதனை விநாயகர் எடுத்து ஒளித்து வைத்துக்கொண்டார். திருமால் புலம்ப, விநாயகர் 'நீ முன் கூத்தாடியதுபோல் ஆடுக!' என்று கட்டளையிட, மீண்டும் திருமால் கூத்தாடினான். திருமாலுக்குச் சக்கரப் படையை விநாயகர் அளித்தார். பின்பு திருமால் ஆடியது போலத்தான் நடித்துக்காட்டினார். அதனால் தேவரெல்லாம் விநாயகரைக் கூத்தாடும் கணேசர் என்றார். இவ்வாறு பெயர்க் காரணம் இப்படலத்தில் கூறப்படுகின்றது.

வாலீசர் பிரபாவம்

இப்பகுதியில் முப்பத்தோரு பாடல்கள் உள்ளன. வாலி என்பவன் சிவனை நினைத்துத் தவம் செய்து வந்தான். அப்போது இந்திரன் அரம்பையை அனுப்பி அவன் தவத்தைக் கலைக்க முயன்றான். வாலி அவனைச் சபித்துத் தொடர்ந்து தவஞ் செய்தான். சிவபெருமான், வாலி வழிபட அவனுக்கு ஒரு சிவலிங்கம் தந்தான். அச்சிவலிங்கத்தைப் பெட்டியில் வைத்துப் பூசித்து வந்தான். மயிலை வந்து ஒரு நாள் சிவலிங்கத்தைக் கீழே வைத்துப் பூசித்தான். பின்னர்ச் சிவலிங்கம் எடுக்க வரவில்லை. வாலால் அசைத்துப் பார்த்தான். வால் அறுந்தது. இறைவன் 'மயிலை எனக்கு உகந்த இடம், இங்கேயே இருப்பேன், நீயும் என்னை வணங்குக' என்றான் இதுவே வாலீசர் கதை.

அங்கம்பூம்பாவை சரித்திரப் படலம் நூற்றிரண்டு பாடல்களிலும், திருவள்ளுவநாயனார் பிரபாவம் ஐம்பத்து நான்கு பாடல்களிலும் கூறப்படுகிறது. நாட்டில் பூம்பாவை பற்றியும், வள்ளுவர் பற்றியும் வழங்கும் கதைகளே இப்பகுதிகளிலும் கூறப் பெறுகின்றது.

முண்டகக் கண்ணம்மை சரித்திரம்

பிருகு முனிவரின் மனைவி நாகவல்லி கற்புக்கரசி யாவாள். அவள் கற்பைச் சோதிக்கும் முறையில் மும்மூர்த்திகள் அவளிடம் சென்று நிர்வாணமாக நின்று பிச்சையிடும்படி வேண்டினர். அவளும் அவ்வாறே கூந்தலால் உடல் மறைத்துப் பிச்சையிட்டாள். மூவரின் ஏவலால் காற்றானது அவளது கூந்தலைக் கலைக்க, அவள் தன் கற்பின் ஆற்றலால் அவர்களைக் குழந்தைகளாக மாற்றிப் பால் கொடுத்தாள். மூவர் தேவியர் அவளைப் பணிந்து வேண்ட, அவள் அவர்களுக்குப் பழைய உருவினைத் தந்தருளினாள். தேவர் அவளைப் பழித்தனர். அவள் பிறகு முனிவரிடம் கூற, அவர் ஆதிபகவனுக்கு முப்பை என்னும் பெயரில் மகளாய்ப் பிறப்பாய். உன்னை வண்ணார் வளர்ப்பர். அவனுடைய உறவினர் உன்னை இகழ்வர். நீமனம் பொறாது மாரியாய் மாறி மயிலை மக்களைக் காப்பாய்' என்று கூறினார். அவ்வாறே அவளும் தெய்வமானாள். அப்போது ஒரு நாள் மன்னவன் மனைவி அக்கோயிலுக்கு வந்து பிள்ளைவரம் வேண்டினாள். மகன் பிறந்தான். அவனுக்கு இருபது வயதானவுடன் திருமணம் செய்து வைத்தனர். அவன் பல பெண்களிடம் மோகம் கொண்டான். ஜன்னிசுரம் வந்தது. தாய் முண்டகக்

கண்ணியிடம் வேண்டினாள். பதினாயிரம் பலி கொடுப்பேன் என்று வேண்டினாள். பின்னர் அரண்மனை திரும்பினாள். மன்னவன் பலி கொடுப்பது தவறு என்று கண்டித்தான். வேறு வழியின்றி அமைச்சரிடம் பலி கொடுக்கப் புதல்வனைத் தா என்றாள். ஒரு பிள்ளை கொடுத்தால் பதினாயிரம் பொன் பெறலாம் என்று தெருவில் பறையறைந்தனர். எவரும் இசைய வில்லை. ஆனால் ஓர் அந்தணர் தன் மகனைத் தருகிறேன் என்று கூறி மனைவியிடம் அழைத்துச் சென்றார். அவள் முதல் மகனைத் தரமாட்டேன். நடுவன்றனைத் தருகிறேன் என்றாள். நடுவன் அழுதான். தூதர் அவனை அழைத்துச் சென்றனர். பலி கொடுக்க முயன்றனர். அவன் முண்டகக் கண்ணம்மையை வேண்டினான். அவள் அவனைக் காப்பாற்றினாள். மன்னவன் சீர் செய்தான்.

மைந்தரைக் காக்க மாரியாய் வந்து மயிலையில் துதிசெயா
நிற்கும் சுந்தரி[669]

என்று முண்டகக் கண்ணம்மை போற்றப்படுகின்றாள்.

இந்திரன் கரமுகமான சரித்திரம்

புகார் நகரில் துருவாசன் மனைவி காந்திமதி என்னும் பெண் குளத்தில் குளித்துவிட்டு வரும்போது அவளிடம் இன்பம் பெற இந்திரன் வேண்டினான். அவள் 'கரமுகம்' அடைவாய் என்று சாபமிட்டாள். அவன் அவ்வுரு பெற்றுக் குகையில் மறைந்து வாழ்ந்தான். மயிலை சென்று கபாலி தீர்த்தம் முழுகினால் அவ்வுரு மாறும் என்று திருமால் கூறினார். அவ்வாறு முழுகிச் சுயவுரு பெற்றான். கபாலியை வணங்கிப் போற்றினான்[670] என்று இந்திரன் கரமுகமான சரித்திரம் கூறப்படுகிறது.

மல்லீசர் சரித்திரம்

அயோத்திநகர் அந்தணன் புதல்வன் 'பிரார்த்தன்' என்று பெயர். அழியாத வுடல் பெறக் கருதித் தலயாத்திரை செய்து மயிலை வந்தடைந்து சிவலிங்கந் தாபித்துத் தவஞ் செய்தான். தேவர் பொறாமை கொண்டு இந்திரனிடம் சொல்ல, அவன் மேனகையை அனுப்பி அவன் தவத்தைக் கலைக்க ஏற்பாடு செய்தான். மல்லிவனத்தில் தவம் புரியும் முனியை மேனகை வற்புறுத்தினாள். அவன் மறுத்தான். அவள் உயிர் துறப்பேன் என்று கூறிக் கீழே விழுந்தாள். முனிவன் எடுத்தான். அவள்

மயக்கம் நீங்கினாள். இருவரும் கூடினர். பிறகு அவன் தவஞ் செய்தலை நீத்தான். கபாலியை வணங்கினான். அவர் நீ தாபித்த இலிங்கம் உன் பெயரில் விளங்கும் என்றார். இதுவே மல்லீசர் கதை.

காரணீசுரர் சரித்திரம்

சிந்து நதியின் தென்பக்கம் உள்ள பத்மபுரி பசுபதியின் மைந்தன் தனஞ்சயன் என்னும் அந்தணன் மதிகாந்தியை மணம் புரிந்தான். அருகிலுள்ள மனையில் வாழ்பவள் அவள் மனத்தைக் கெடுக்க முனைந்தாள். மதிகாந்தி, 'நாதனைவிட நண்ணேன் பிறர் சுகம்' என்றாள். மீண்டும் அவள் மதிகாந்தியை வற் புறுத்தி மனத்தை மாற்றினாள். அவள் பிற ஆடவரைப் பொருளுக்குக் கூடினாள். கணவன் அறிந்து வெறுத்தான். தவஞ்செய மயிலைப்பதி நண்ணினான். சிவலிங்கம் ஒன்றினைத் தாபித்து வணங்கினான்.

அன்பி னோடெனை யர்ச்சித்த வீக்குறி
யென்றுங் காரணி யீசனென் றோங்கவே[671]

என்று இறைவன் அருளினார்.

விருபாட்சீசர் சரித்திரம்

பின்னவர் குலத்தில் பிறந்த பிரியன் என்பவன் அருள் வேண்டி ஒற்றியூர் சேர்ந்து இறைவனை வணங்கினான். இறைவனுக்குப் பூசை செய்து வந்தான். பொதுமகள் ஒருத்தி அவன் மனத்தை மாற்றினாள். அவளை மனைவியாகக் கொண்டான். அவள் சூதில் பொருள் தொலைத்தாள். தடத்தில் வீழ்ந்து உயிர் துறந்தாள். அவள் இறந்தது அறியாது தேடினான். அவளைத் தேடி அவள் உடலைக் கண்டபின் வருந்தினான். அப்போது மயிலைத் தவசி ஒருவர், சிவபிரான் பூசைக்காக தக்க நல் வில்வந் தந்து தமியனோடு உண்டு வாழ்ந்தார். வில்வத்தைப் பறித்து முனிபால் வைத்தான். ஒரு நாள் வில்வம் பறிக்கும்போது கீழே விழுந்து உயிர் துறந்தான். வில்வம் பட்டதால் சிவன் அவனைக் கயிலை சேரக் கட்டளை யிடும்போது, யமதூதர் அவனைக் கொண்டு சென்று துன்புறுத்த முயன்றனர்.

ஆரவே நாட்டமூடா தங்கையின் மலரைச் சிந்தி
சீர்பெறு மொருவன் பூஜைசெய்ததோர் செயலால் முன்னம்
நார்பெறாச் சமணரெல்லாம் நலிந்திடக் கயமுரித்த
வீரனாம் பெருமானுக்கு விருபாட்சி யெனப் பேரிட்டார்[672]

என்று விருபாட்சீசர் சரித்திரம் கூறப்படுகிறது.

தீர்த்தபாலீசர் சரித்திரம்

சிவபெருமான், பாற்கடலில் இருந்து வந்த விடத்தை உண்ட கதை இப்பகுதியில் கூறப்படுகிறது.

சித்திரையில் வீடந்தீர்த்துச் செல்வனா ருதவினதால்
நித்தியராய்த் தீர்த்தப்பாலீ சரெ்ன நிலைபெற்றே
யித்தரையி லிந்நாம மினிதவர்க்கு விளங்கினதால்

என்று தீர்த்தபாலீசர் பெயர்க்காரணம் கூறப்படுகிறது.[673]

வாயிலார் சரித்திரம்

திருமயிலைத் தலத்தில் மனத்தில் பத்தி செய்து முத்தி அடைந்த வாயிலார் நாயனார் வரலாறு இப் பகுதியில் கூறப் படுகிறது. திருமயிலையின்கண்,

மெத்தவும் புகழப்பெற்ற மெய்யுணர் வாயிலார்தாம்
பத்தியாய்த் தவத்தைச் செய்து பண்புறும் பேரானந்த
சித்தியை யடைந்தார் காண்மின் தேவரும் போற்றமாதோ

என்று வாயிலார் முத்தி அடைந்தது கூறப்படுகின்றது.[674]

நாதமுனி முதலியார் இயற்றிய தலபுராணம் கதைகள் நிறைந்ததாகவும் எளிமையானதாகவும் அமைந்துள்ளது.

திருமயிலாப்பூர் தல மகிமைக் கீர்த்தனம்

இக்கீர்த்தனை 65 ஆண்டுகட்கு முன்பு, எட்டையபுர சமஸ் தான வித்துவான் வியாசர்பாடி சுந்தர முதலியார் அவர்களால் பாடப்பட்டது.[675]

இக்கீர்த்தனை சங்கராபரண இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது. இதில் 'திருமயிலாப்பூர்' தலம்தனை மனமே-

நீ தரிசித்தால் வினை தீருமே' என்று பல்லவி அமைந்துள்ளது. அனுபல்லவி 'தரணியில் இந்தத் தலம் செனன மரணம் போக்கும் பரிசுத்தமாய் வந்து, தரிசித்தால் நலம் ஆகும்' என்றுள்ளது. சரணத்தில் கூத்தாடும் விநாயகர், சிங்காரவேலர், கபாலீசர், கற்பகவல்லி குறிக்கப்படுகின்றனர். உமை மயில் வடிவில் தவம் புரிந்த செயல், அங்கம் பூம்பாவையான செயல், பங்குனி உத்திரத் திருவிழா, திருமயிலையிலுள்ள மற்றச் சிவன்கோயில்கள், வாயிலார் சந்நிதி, அறுபத்து மூவர் ஆகிய செய்திகளும் இக் கீர்த்தனையில் கூறப்பெறுகின்றன, எளிமையும், இனிமையும் ஒருங்கு சேரப்பெற்று இக்கீர்த்தனை சிறந்து விளங்குகிறது.

சித்திரச் சத்திரத்தின் மீது பாடப்பட்ட நூல்கள்

முன்னுரை

அன்றும் இன்றும் சமுதாயத்தில் வறுமையும் செம்மையும் ஒரு நாணயத்தின் இருபக்கம் போல என்றும் இருந்து வருகிறது. இரவலர்கள் இருந்ததால் ஈகையும் இருந்தது. சங்க காலத்தில் கொடுப்பவர்கள் அரசர்களாகவும் குறுநில மன்னர்களாகவும் இருக்க, ஏற்பவர்கள் புலவர்களாக இருந்திருக்கின்றனர். புலவர் களுடைய வறுமையையே சங்க இலக்கியத்தில் பார்க்க முடி கின்றது. பசியை நோய் என்றே குறிப்பிட்டு வந்தனர். பசிப்பிணி மருத்துவன் என்று ஒரு மன்னன் அழைக்கப்பட்டான்.

வறியோர்க்கு உணவிடும் மரபு

சங்கம் மருவிய காலத்தில் மணிமேகலை, சமுதாயத்தில் இருந்த வறுமை நிலையைக் காட்டுகிறது. அமுதசுரபி என்னும் கற்பனைப் பாத்திரம் உணவிடும் தருமத்தை வலியுறுத்தியது. பின்னர் வந்த திருமூலரும் 'யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி' என்றார்.

சங்க காலத்தில் இல்லத்தில் விருந்தோம்புகிற முறை இருந்தது. காலப்போக்கில் அதுமாறித் தரும சத்திரங்கள் எனத் தனியாகத் தோன்றின. சமய வளர்ச்சிக் காலத்தில், தல யாத்திரை செய்வோருக்கு உதவுவதை வழக்கமாகக் கொண்ட போது, ஒரு தலத்திலிருந்து இன்னொரு தலத்திற்குச் செல்லும் வழியிலெல்லாம் தரும சத்திரங்கள் கட்டப்பட்டன. இறைவனை வழிபட வரும் அடியவர் தங்கி உணவருந்தும் பொருட்டுக் கோயில்களைச் சுற்றிலும் தரும சத்திரங்கள் கட்டுதலும் அதற்கு

அறக் கட்டளைகள் நிறுவுதலும் தோன்ற ஆரம்பித்தன. இந்தத் தரும சத்திரங்களிலிருந்து விநாயக முதலியார் தரும சத்திரம் மாறுபடுகிறது. இது கண்ணுக்கு விருந்தளிக்கும் கலைக்கூட மாகவும் (Museum) விளங்குகிறது. அதனால் சித்திரச் சத்திரம் என்றே புகழப்பட்டது. இந்தச் சத்திரத்தைப் புகழ்ந்து பல புலவர்கள் பாடியிருக்கின்றனர்.

திருமயிலையிலிருக்கும் வியாசர்பாடி விநாயக முதலியார் தர்ம சத்திர மாலை

பல்சந்தமாலை, இணைமணிமாலை, இரட்டை மணிமாலை, மும்மணி மாலை, நான்மணி மாலை, கலம்பக மாலை, வருக்க மாலை, தாம மாலை, நவமணி மாலை, கைக்கிளை மாலை, தாரகை மாலை, செந்தமிழ் மாலை என்றெல்லாம் பாவும் பாவினங்களையும் கலந்து பத்துப் பத்தாகக் கொண்டு நூறு வரையில் அந்தாதி முறையில் மாலை வகையாகப் பாடப்பட்டு வந்தது. இதுவே, பண்டைய மரபு வழிப்பாடல். காஞ்சிபுரம் சபாபதி முதலியார், வெண்பாப் பாக்களால் வியாசர்பாடி விநாயக முதலியார் தர்ம சத்திர மாலை என்னும் நூலைப் பாடி யிருக்கிறார். நேரிசை வெண்பாவில் வரலாற்றுக்கு உதவும் வகையில் கருத்துகளைக் கொண்டு பாடியிருப்பது போற்றத் தக்கதாகும். திருமயிலை இலக்கியங்களில் வரலாற்றுக் குறிப்பு களைக் கொண்டிருக்கும் இருநூல்களில் இதுவும் ஒன்றாகும். மற்றொன்று முன்னர்க்கண்ட திருமயிலை உலாவாகும். தில்லை வாழந்தணர் முதலிய நாயன்மார்கள் துதியாகவும், கபாலீசர் முதலிய கடவுளர் துதியாகவும், தர்ம சத்திரப் பெருமையாகவும் அமைய வேண்டுமென வியாசர்பாடி விநாயக முதலியார் கேட்டுக் கொண்டபடி காஞ்சிபுரம் சபாபதி முதலியாரால் இயற்றப்பட்டது என்று நூலின் முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நூலாசிரியர், சத்திரப் பெருமை என்றதும் அளவிறந்த கற்பனை களைக் கையாளாமல் உண்மைச் சிறப்புகளைத் தெளிவாகக் கூறி யிருப்பது போற்றத்தக்கதாகும்.

இந்தத் தர்ம சத்திர மாலை, ஒரு நேரிசைவெண்பாக் காப்புச் செய்யுளையும், நூறு நேரிசை வெண்பாப் பாடல்களையும் கொண்டுள்ளது. காப்புச் செய்யுளில் தரும சத்திரப் பாமாலை

புகலத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் உள்ள கூத்தாடும் விநாயக தேவர் கமல மலர்த்தாளிரண்டும் காப்பு என்று வேண்டுகிறார். இந்த நூலின் முதலில் குறிப்பிட்டுள்ளபடி, விநாயக முதலியார் வேண்டுகோளுக்கேற்பச் சத்திரப் பெருமையை விளக்குபவையாகப் பாடல்கள் அனைத்தும் அமைந்துள்ளன. முதல் பாடலில் சத்திரம் அமைந்திருக்கும் இடத்தையும் கட்டியவரையும் பாடுகின்றார். அடுத்த பாடலில் சத்திரத்தை அமைத்தவரின் தந்தை பெயரும் கற்பகவல்லி துதியும் கூறுகிறார். மூன்றாம் பாடலில் சத்திரத்தை அமைத்ததன் நோக்கத்தைக் கூறுகிறார். தில்லை வாழந்தணர் தொடங்கி நாயன்மார் துதி கூறுகின்றார். இந்நூலில் மயிலையின் சிறப்பு, சத்திரச் சிறப்பு, விநாயக முதலியார் சிறப்பு, விநாயக முதலியார் அறக்கட்டளை, பல்வேறு ஊரில் குடிகொண்டுள்ள சிவனைப் பற்றிய துதி, தசாவதாரம் துதி ஆகியவை அமைந்துள்ளன. தனியாக இறுதியில் வாழ்த்துப் பாடல் ஒன்றும் உள்ளது.

சத்திரத்தின் வரலாறு

கர்ணன் போன்ற கொடை வள்ளலாகிய விநாயகமுதலியார் அன்புள்ளத்தோடு அமைத்த சத்திரம் திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் குளத்தின் தெற்குப் பகுதியில் நிலைபெற்றிருக்கிறது என்று குறிப்பிடுகின்றார்.[676] அருச்சுன முதலியார் மகன் விநாயக முதலியார்[677] என்றும், விநாயக முதலியார் வியாசர்பாடியைச் சேர்ந்தவர் என்றும், சத்திரத்தைப் பார்க்க வருபவர்களின் பசியைத் தீர்க்கும் நோக்கத்தோடு இது கட்டப்பட்டது என்றும் கூறுகிறார்.[678] விநாயக முதலியார் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர் என்பதையும் குறிப்பிடுகின்றார்.[679]

நாயன்மார் துதி

ஆண்டவனைக் காட்டிலும் அடியவர் பெருமையே பெரிது என்பதை உணர்த்தும் திருத்தொண்டர் புராணம். இந்நூலாசிரியரும் நாயன்மார் துதியை முதலில் கூறிப் பின்னரே கடவுளர் துதி பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தனியாக ஒரு பாடலில் அங்கம்பூம்பாவையைத் துதிக்கின்றார்.[680]

கபாலீசர் முதலிய கடவுளர் துதி

எங்கள் கபாலீசர்,[681] எங்கள் கற்பகவல்லித்தாய்,[682] கூத்தாடும் ஓர் கோட்டன்,[683] சிங்கார வேலர்,[684] நடராசர்,[685]

ஊர்த்த நடனபத ஒப்பில்லாத் தேவர்,[686] கச்சியேகம்பர்,[687] திருவானைக்கா சம்புலிங்கர்,[688] அருணாசலேசர்,[689] காளத்தி நாதர்,[690] சிதம்பரநாதர்,[691] சீரங்கநாதர்,[692] ஆழ்வார்கள் பன்னிருவர்,[693] மச்சாவதார வரதன்,[694] கூர்மாவதாரம்,[695] ஆதிவராகன்,[696] நரசிங்கன்,[697] வாமனமூர்த்தி,[698] பரசுராமன்,[699] பட்டத்து இராமன்,[700] பலராமன்,[701] கண்ணன்,[702] கல்கி[703] ஆகிய கடவுளர் துதி கூறுகின்றார்.

தலப்பெருமை

திருமயிலைத்தலம், கற்பகவல்லித் தாயார் காதலுறும் மயிலை,[704] பார்வாழக் கூத்தாடும் வேழமகிழ் கோலமயிலை,[705] சிங்காரவேலர் மகிழ் தென்மயிலை,[706] ஞானமருள் நன் மயிலை,[707] வேதா விறைஞ்சும் வியன்மயிலை நன்னகர்,[708] மிக்கோர் புகழும் வியன்மயிலை நன்னகர்,[709] தேசிகர்கள் வாசஞ் செயு மயிலை,[710] வாயிலாரைப் போற்றி வாழும் மயிலை நகர்[711] என்று போற்றப்படுகின்றது.

தீர்த்தம்

திருமயிலைக் காபாலி தீர்த்தம் இந்நூலில் குறிக்கப் பட்டுள்ளது.[712]

திருவிழாக்கள்

கபாலீசுவரர் கோயிலில் நடைபெறும் பங்குனி விழா (பிரம்மோற்சவம்),[713] கவாலி திருநாள்,[714] எங்கள் கபாலீசர் விடையேறி வரு முச்சலநாள்[715] என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விநாயகமுதலியார் பெருமை

சித்திரச் சத்திரம் கட்டிய விநாயக முதலியாரின் நற்குணங் கள், கொடைப் பண்புகள் ஆகியவற்றைக் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இந்நூலில் விளக்கமாகக் குறித்துள்ளார்.

பூவலஞ் செய்வோர் புகழும் விநாயகமால்,[716] காபாலி தாசன் விநாயகமால்,[717] நம்புமவர்க்கு உதவும் நல்ல விநாயக மால்,[718] பத்தரைப் போற்றிப் பணியும் விநாயகனாம் சத்தியன்,[719] பொய்வசனஞ் சொல்லாத பூபன்,[720] உண்மை மொழியே உரைக்கும் விநாயகன்,[721] வஞ்சமொழி அறியா

வள்ளல்,[722] அன்னியர் சொத்தில் அணுவளவும் இச்சியாத் தன்மன்,[723] அன்பே வடிவாய் அமரும் விநாயகமால்[724] என்று வியாசர்பாடி விநாயக முதலியாரைப் போற்றுகின்றார்.

அன்னதானப் பெருமை

சத்திரம் என்றாலே அன்னதானத்தைத்தான் முதலில் குறிக்கும். இச்சத்திரத்தில் துவாதசி நாளில் அந்தணருக்கு அன்னதானம் செய்தலையும் குறிப்பிடுகின்றார்.[725] வந்தோர் தம் பசியினுடன் தாகம் போமாறமைத்த சத்திரம்,[726] வந்தவர்களுக்கு அன்னம் மாறாது அருள் மயிலைச் சந்த விநாயகமால் சத்திரம்,[727] பொருள் நிலையல்ல எனப் புத்தி தெளிந்து தருமம் புரி சத்திரம்,[728] தீர்த்தங்கள் மூழ்கி வரு தேசாந்தரி மகிழ் பதார்த்த நிறை மயிலைச் சத்திரம்,[729] கேடை வெப்பத்தால் வருத்தங் கொண்டு வருவோர்க்கு அதனைச் சாடும் மயிலைநகர்ச் சத்திரம்[730] என்று சத்திரத்தின் பெருமைகளைப் பாடுகின்றார்.

கலைச் சிறப்பு

சித்திரச் சத்திரம் ஒரு சிறிய கலைக்கூடம். இப்பெயருக்கேற்பச் சித்திரப்படங்கள் திகழுவதையும்[731] இச்சத்திரம் பந்தல் அலங்காரத்தோடு விளங்குவதையும்[732] குறிப்பிட்டுள்ளார்.

பார்க்கப் பார்க்கச் சலிப்புப் பண்ணா விநோதத்துத்
தார்க்கிரணம் சூழ் மயிலைச் சத்திரம்[733]

என்றும்,

கண்ணாடிகள் அலங்காரமுடன் கட்டி மிகு
தண்ணார் மயிலை நகர்ச் சத்திரம்[734]

என்றும், பாராளு மன்னரும், பச்சை நிறமாலும் காமர் இலக்குமியும், சோமமுக நாமகளும், குபேரனும் விரும்பும் அளவுக்குக் கலை நலம் வாய்ந்தது என்றும் போற்றிப் பாடுகின்றார்.

அறக்கட்டளை

வியாசர்பாடி விநாயக முதலியார் சித்திரச் சத்திரத்தைக் கட்டி அதன் நிருவாகம் நன்கு நடைபெற அறக்கட்டளை ஏற்படுத்தினார். அதனை உயில் எழுதியும், கல்வெட்டு அமைத்தும் வெளிப்படுத்தினார். இச்செய்திகளை,

தன் சந்ததியாரும் தன்போலவே நாளும்
தன்ம நடத்தவொரு சத்திரம்[735]

என்றும்,

விக்கிரயஞ் செய்யா விதத்தின் விநாயகமால்
தக்க சிலையமைத்த சத்திரம்[736]

என்றும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், திருமயிலையில் வாழ்ந்த வியாசர்பாடி வீநாயக முதலியார் அவர்களுடைய வேண்டுகோளின்படி, சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை என்னும் நூலைப் பாடியிருக்கிறார். இச்சத்திரம் மயிலை மாநகரின் தெற்கு மாடவீதியில் உள்ளது. இந்நூல் 1856இல் முதன்முதலாக அச்சிடப்பட்டுள்ளது.[737] இந்நூலின் காப்புச் செய்யுள் வீநாயகர் மீது பாடப்பட்டுள்ளது. இந்நூல் அறுசீர் விருத்தங்களால் ஆன நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலில் விநாயக முதலியார் பெருமை, சித்திரச் சத்திரத்தின் அழகு, கலைச் சிறப்பு, அன்னதானச் சிறப்பு, கபாலீசுவரர் மாண்பு, தேர்த் திருவிழா, திருமயிலைத் தலம், திருக்குளம் ஆகியவை பற்றிக் கற்பனை நயம்பட மகாவித்துவான் பாடியுள்ளார்.

விநாயக முதலியார் பெருமை

ஓர் அழகிய கலைக்கூடத்தை அன்னதானச் சத்திரத்தில் அமைத்த வியாசர்பாடி விநாயக முதலியாரை, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் 'இருநிதியோ கற்பகமோ எழிலார் சிந்தாமணியோ எழிலியோ வென்றும்,' 'புலவர் பாடும் புகழ் பெற்றவர் விநாயகமால்' என்றும் புகழ்கிறார்.[738] இவருடைய கொடைத் தன்மையை 'வள்ளல் விநாயக மகிபன்[739] என்று சொல்லிப் போற்றுகின்றார். 'புண்ணிய விநாயக வேள்',[740] 'தீராத புகழ் படைத்த மயிலை விநாயக முகில்',[741] 'மெய்மணக்கும் வாய் மயிலை விநாயகமால்',[742] 'நல்லவன் விநாயக மகிபன்',[743] என்று விநாயக முதலியாரின் சிறப்புகளைச் சொல்லி மகிழ்கிறார். இச்சத்திரத்திலிருக்கும் விநாயக முதலியாரின் ஓவியத்தையும் புகழ்ந்து பாடியுள்ளார்.[744]

சத்திரத்தின் சிறப்பு

அந்தணருக்குப் பிறப்பொழுக்கமும், தவமுனிவருக்கு அருளும், இல்லறம் நடத்துவோர்க்கு விருந்தோம்பும் தன்மையும், சிவபூசை செய்வோருக்கு நிறை அன்பும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மயிலை நெடுநகர்க்குச் சித்திரச் சத்திரம் என்று மகாவித்துவான் புகழுகின்றார்.[745]

தீராத புகழ் படைத்த சித்திரச் சத்திரத்தை வந்து பாராத பேருமிலை; பார்த்தவுடன் அதன் சிறப்பைப் பலமுறையும் பாட நினைக்காதவர்கள் இல்லை; அப்படிப் பாடி மகிழ்ச்சி அடையாத பேர்களுமில்லை என்றால் இதன் பெருமையை என்னவென்று கூறுவது என்கிறார்.[746]

சத்திரத்தில் வந்து ஓவியங்களைக் காண்பவர், உணவு உண்பவர், அங்குத் தங்குபவர், அச்சத்திரத்தைப் போற்றுபவர் என்று நூற்றுக்கணக்கில் மக்கள் வருவர். அவர்களை யார் எண்ணுவது என்னும் கருத்தை நயம்பட ஒரு பாடலில் கூறி யுள்ளார்.[747]

கலைச் சிறப்பு

இச்சத்திரம் உணவு படைப்பதோடு மட்டுமல்லாமல் கண்களுக்கும் விருந்தூட்டும் சித்திரச் சத்திரம் என்று புகழு கின்றார்.[748] சத்திரத்திலுள்ள ஓவியங்களில் உள்ள மாலையும், உருவங்களின் கண்ணிமைகளும் ஓவியன் வரைந்தபோது எப்படி யிருந்தனவோ அப்படியே இருக்கும். அந்த உருவங்களின் கால்கள் ஓவியத்திற்குள்ளேயே அடங்கியிருக்கும். தரையைத் தொடு வதற்கு இயலாது. ஓவியங்களுக்கே இயல்பான இத்தன்மையை, 'வாடாமாலை' தரித்தலானும், கூடுவிழி இமையாமையானும், அடிநிலந் தோயாக் குணத்தினானும் இவ்வோவியங்கள் தேவர் களுக்கு ஒப்பாகும் என்று புகழ்ந்து பாடுகின்றார்.[749] கண்ணன் புரிந்த லீலைகள் அச்சத்திரத்தில் ஓவியமாகக் காட்சியளிப் பதையும் தன்னுடைய நூலில் காட்டுகின்றார்.[750]

அன்னதானச் சிறப்பு

இச்சத்திரத்தில் இருவேளை அமுது படைத்தலையும்,[751] நாள்தோறும் உண்ணுவதற்கு அந்தணர் கூடுவதையும், அவர் களை முக மலர்ச்சியோடு விநாயக முதலியார் விருந்தோம்பு

வதையும்,[752] ஆயிரம்பேர் வந்தாலும் இல்லைஎன்று சொல்லாமல் உணவு படைத்தலையும்[753] புகழ்ந்து பாடுகின்றார்.

இச்சத்திரத்தில் வந்து புகுவோருக்குப் பால் வழங்கிய செய்தியை, 'அந்நாளில் விநாயக முதலியார்போல் சுவைப்பால் வழங்குபவர் இருந்திருந்தால் ஆய்ப்பாடிக் கண்ணன், கட்டுண்டும் அடியுண்டும் உழல்வானோ என்று கற்பனை நயம்படப் பாடுகிறார்.[754] துவாதசி விரதம் மேற்கொள்ளுவோருக்கு இச் சத்திரம் உணவு படைக்கும் செயலை, இத்தகைய சிற்றுணவு அன்றிருக்குமாயின் தலையில் வடுப்பட மண் சுமந்து சிறு பிட்டுக்காகச் சிவபெருமான் பாண்டியனிடம் பிரம்படி பெற்றிருக்க மாட்டார் என்று புகழ்கிறார்.[755] திருவிளையாடற் புராணத்தில் கூறப்பெறும் குண்டோதரனைப்போல அளவற்ற பசிகொண்டோர் இச்சத்திரத்தில் புகுந்து உணவுண்டால், திரும்பி வரும்போது கும்போதரனைப் போலக் காட்சியளிப் பார்கள் என்று அன்று நடைபெறும் அன்னதானச் சிறப்பினைப் பாராட்டுகின்றார்.[756]

மூர்த்தியின் கீர்த்தி

திருமயிலையில் கோயில் கொண்டுள்ள கபாலீசுவரரை, கற்பகவல்லி புல்ல மேவு கபாலீசர் என்றும்,[757] எம்மையாளுடைய பிரான் கபாலீசன் என்றும்,[758] கற்பகவல்லிக்கு ஒருபால் அருள் மயிலைக் கபாலீசர் என்றும்,[759] கண்ணிய பச்சிம முகமா யமர் கபாலீசர் என்றும்,[760] தொண்டுபடுவார்க்கு இனிய கபாலீசர் என்றும்,[761] மால்மருவு கரதலத்து எங்கபாலீசர் என்றும்[762] போற்றுகின்றார். தென்பால் நண்ணிய நன்முகத்து அம்மை என்று கற்பக வல்லியைப் போற்றுகின்றார்.[763] சிங்கார வேலரை, 'மருவரிய பெரும்புகழ்சால் சிங்காரவேலர்' என்று பாடுகின்றார்.[764] இவ்வாறு திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலிலுள்ள தெய்வங்களை மகா வித்துவான் போற்றிப் பாடுகின்றார்.

தலப்பெருமை

திருமயிலைத் தலத்தின் சிறப்புகளைப் பலபடப் புகழ்ந்து பேசுகின்றார். பூமேவு திருமயிலை,[765] நாளும் சிங்கார வேலர் மகிழ் திருமயிலை,[766] தடுக்கரிய புகழ் மயிலை,[767] திருமயிலை மூதூர்[768] புண்ணிய நன் மயிலை,[769] புன்னை வனஞ் சூழ்

மயிலைத் திருநகர்,[770] மணிமாடத் திருமயிலைநகர்'[771] ஆர்த்த அறிவினர் புகழும் திருமயிலைப் பெருநகர்,[772] தல உயர்வு பெற்ற மயிலை,[773] ஒளித்தல் கூடாத வளமயிலை,[774] நீற்றருமை அறிபவர் சூழ்மயிலை,[775] என்றெல்லாம் திருமயிலைத் தலத்தைப் புகழ்கின்றார்.

தீர்த்தச் சிறப்பு

கபாலீசுவரர் கோயிலுக்குரிய திருக்குளத்தை, 'கபாலீசர் சந்நிதி நற்றிருக்குளம்,[776] என்றும், கருதரிய புகழ் மயிலைக் கபாலி தீர்த்தம்[777] என்றும், வளமயிலைக் கபாலித் தீர்த்தம்[778] என்றும் குறிப்பிடுகின்றார்.

திருவிழாக்கள்

திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் நடைபெறும் திரு விழாக்கள் பற்றியும் மகாவித்துவான் பாடுகிறார். தேர்த் விழாவினை,

சத்திரமுன் பரந்த பந்தர் மேலோடும் கதிரவன்தேர்
கீழோடும் கபாலீசர் வியன்பொன் தேரே[779]

என்று குறிப்பிடுகின்றார்.

கபாலீசுவரர், திருவிழா நாட்களில் திருவீதி உலா வருதலை, 'எங்கள் கபாலீசர் அருமையொடும் உலாப்புறமாய் அங்கு இலகுசீர்' என்று பாடுகின்றார்.[780] பிரம்மோற்சவத்தை, 'திருந்து கரும் புன்னை வனஞ்சூழ் மயிலைக் கபாலீசர் திருவிழா[781] என்று குறிப்பிடுகின்றார்.

கற்பனை

திருமயிலைத் தல விநாயகரின் பெயர் கூத்தாடும் விநாயகர் என்பதாகும். இந்தப் பெயர் வந்ததற்கான காரணங்களைக் கற்பனை நயம்பட மகாவித்துவான் அவர்கள் பாடியுள்ளார். விநாயக முதலியார் கட்டிய சித்திரச் சத்திரத்தின் சிறப்பு நோக்கி மகிழ்ந்து விநாயகர் ஆடினார். அதனால்தான் கூத்தாடும் விநாயகர் எனப் பெயர்பெற்றாரோ அல்லது அதற்கு முன்னரே அவருக்கு அப்பெயர் இருந்திருந்தால், எதிர்காலத்தில் விநாயக முதலியார் சத்திரம் கட்டப் போகிறார் என்பதை அறிந்து மகிழ்ந்து கூத்தாடியிருக்க வேண்டும் என்கிறார்.[782]

குளக்கரையின் ஏக்கம்

திருமயிலைத் திருக்குளத்திற்கு நான்கு கரைகள் உண்டு. அவற்றுள் கிழக்குக் கரையில் கபாலீசுவரம் இருப்பதால் அக்கரை பெருமிதத்தோடு இருக்கும். தென்கரையில் விநாயக முதலியார் சத்திரம் இருப்பதால் அக்கரையும் இறுமாப்பு கொள்ளும். மேற்கும் வடக்கும் ஆகிய இரு கரைகளும் என் செய்வோம் என்று ஏங்கும் என்று பாடுகின்றார். இப்பாடலால் கபாலீச்சரத்திற்கு நிகர் விநாயக முதலியார் சத்திரம் என்பதும், மேற்கு, வடக்குக் கரைகளுக்குக் குறிப்பிடத்தக்க பெருமை இல்லை என்பதும் புலப்படும்.[783]

அடிசில் எனும் தேன்

திருமயிலையில் விநாயக முதலியார் சத்திரத்தில் உணவு உட்கொண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள் மக்கள். இச்செய்தியை அழகாக உருவகம் செய்து பாடியுள்ளார். திருமயிலை நகரம் என்னும் பெருங்குளத்துள், விநாயக முதலியார் சத்திரம் என்னும் ஒளி பொருந்திய மலரில், நாள்தோறும் உணவு என்னும் தேனை மக்கள் என்னும் வண்டுகள் உண்டு உவக்கும் என்று பாடுகின்றார்.[784]

சித்திரச் சத்திரத்தின்மீது பாடப்பட்ட பாடல்கள்

கா. சபாபதி முதலியார் சித்திரச் சத்திரத்தின் அழகையும் அன்னதானச் சிறப்பையும் விளக்கி ஒரு கீர்த்தனை இயற்றியுள்ளார்.[785] புரசை-அஷ்டாவதானம் சபாபதி முதலியாரும் ஒரு கீர்த்தனை பாடியுள்ளார்.[786] திருமயிலை அப்பாசாமி முதலியார் என்பவர் அகவற்பாவில் 45 அடிகளில் இச்சத்திரத்தின் சிறப்புகளை விளக்கிப் பாடியுள்ளார்.[787]

கிடைக்கப் பெறாத நூல்கள்

திருமயிலையைக் குறித்து எழுந்த நூல்களுள், தாண்டவராயக் கவிராயர் இயற்றிய சிங்காரவேலர் வெண்பா, கருவம்பாக்கம் ஆறுமுக முதலியார் என்பவர் இயற்றிய பூம்பாவையார் விலாசம்,[788] திருமயிலைக் கபாலீச்சுரர் கவி விண்ணப்ப மாலை, திருமயிலை சிங்காரவேலர் கும்மி, தொட்டிக் கலை நாராயணசாமி முதலியார் பாடிய திருமயிலை வெண்பா மாலை,[789] திரிசிரபுரம் ஆ. பெருமாள் பிள்ளை இயற்றிய

சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீசர் சிவநாம சங்கீர்த்தனம், கோவிந்தசாமி உபாத்தியார் பாடிய சிங்காரவேலர் கீர்த்தனம், தா. நெல்லையப்ப பிள்ளை பாடிய திருமயிலை சுப்பிரமணியர் தோத்திரம்,[790] அஷ்டாவதானம் சபாபதி முதலியார் இயற்றிய மயிலை வெண்பாமாலை, திருமயிலை சண்முகம் பிள்ளை பாடிய கபாலீசர் பஞ்சரத்தினம், கற்பகவல்லி மாலை, பண்டித மனோன்மணியம்மையார் பாடிய திருமயிலைக் கற்பகவல்லி அந்தாதி, கருப்பையா பாவலர் பாடிய திருமயிலைக் கற்ப காம்பிகை மாலை, மயிலைச் செந்தில்வேல் முதலியார் ஐந்திணைக்கோவை[791] ஆகிய நூல்கள் இப்போது கிடைக்கப் பெறவில்லை.

திருமயிலைச் சிற்றிலக்கியங்களின் சிறப்பியல்புகள்

திருமயிலை தொடக்க காலத்திலிருந்து சமயத்தோடு தொடர்புடையதாக இருந்து வந்திருக்கிறது. இதனால் அவ்வூரைப் பற்றிப் பல்வேறு சமயத்தவர்களும் பலவகையான நூல்களை இயற்றியுள்ளார்கள். சைவ சமயத்தின் சிறப்புமிகு மையமாக மயிலாப்பூர் சிறப்புற்றுள்ளதைக் காணுகிறோம். இதற்குக் காரணம், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசரால் கபாலீசுவரர் போற்றிப் பாடப்பட்டதாகும். மற்றும் திருஞான சம்பந்தர் வியத்தகு அற்புத நிகழ்ச்சி ஒன்றை இங்கு நடத்தியுள்ளமையும் ஒரு காரணம் ஆகும். இச்சூழலே, சைவ சமயத் தொடர்பான இலக்கியங்கள் இயற்றப்படுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

வைணவ சமயத்தின் முதலாழ்வார்களுள் ஒருவரான பேயாழ்வார் தோன்றிய தலம் இது. இவர் தோன்றியதாகக் கருதப்படும் தொன்மையான கிணறு இன்றுவரை போற்றிக் காக்கப் பட்டு வருகிறது. எனினும், வைணவரிடையே மயிலை சிறப்பிடம் பெறவில்லை. கேசவப் பெருமாள் கோயில், மாதவப் பெருமாள் கோயில் ஆகிய வைணவக் கோயில்கள் இங்கு உள்ளன. ஆனால் மயிலையைப் பற்றிய வைணவ சமயச் சார்பான இலக்கியங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. இதனால் வைணவர்கள் மயிலையைச் சிவத்தலமாகவே கருதினார்கள் எனும் எண்ணமும் எழுகிறது.

சமணர், நேமிநாதரைப் போற்றிப் பாடிய சிறுநூல்கள் கிடைத்துள்ளன. இவை யாவற்றையும் தொகுத்து நோக்குகின்ற போது மயிலை மாநகர் சமயங்களின் வளர்ப்புப் பண்ணையாக

இருந்தமை தெரிகிறது. இதனால் மயிலையைப் பற்றிய இலக்கியங்கள் யாவும் சமயத் தொடர்புடையனவாகவே விளங்குகின்றன.

திருஞான சம்பந்தர் பாடிய பூம்பாவைப் பதிகம் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நடந்துவந்த திருவிழாக்களை விளக்கமாகக் குறிப்பிடுவது தனிச்சிறப்பாகும்.

திருமயிலைச் சிங்கார வேலர் மீது பல சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்கு அருணகிரிநாதர் மயிலை முருகன் மீது பாடிய பாடல்களே காரணமாகும்.

திருமயிலைச் சிற்றிலக்கியங்களில் தொன்மையானது என்று கருதப்படும் திருமயிலை உலா, ஒரு வரலாற்றுக் களஞ்சியமாக உள்ளது. இப்போதுள்ள கபாலீசுவரர் கோயில் கட்டப்பட்ட வரலாறு, காபாலிகர், அக்காலச் சமுதாய நிலை ஆகியவற்றை உணர்த்துகிறது.

திருமயிலைச் சிற்றிலக்கியங்கள் மூர்த்தி, தலத் தீர்த்தப் பெருமையினைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கின்றன.

எல்லாக் கலம்பகங்களிலும் முல்லைக்குரிய கார் காலத்திற்குத் தான் பாடல்கள் பாடப்பெற்றிருக்கும். திருமயிலைக் கலம்பகத்தில் முல்லைக்குரிய கார் காலத்திற்கு இருபாடல்கள் பாடியதோடு வெண்பனிக் காலத்தையும் வெயிற் காலத்தையும் பாடும் பாடல்கள் உள்ளன.

கடினமான யமக அந்தாதி அமைப்பில் திருமயிலை யமக அந்தாதி என்னும் நூலும் பாடப்பட்டுள்ளது.

திருமயிலைச் சிற்றிலக்கிய ஆசிரியர்கள் தமிழ்ப்பற்றும், அருணகிரியார் மீது பெருமதிப்பும் கொண்டவர்கள் என்பது இச் சிற்றிலக்கியங்களினால் புலனாகின்றது.

காலந்தோறும் மயிலைக் கடவுளர் மீது சிற்றிலக்கியம் பாடும் முறை மாறுபடுவது குறிப்பிடத்தகுந்த சிறப்பியல்பாகும். தொடக்க காலத்தில் கபாலீசுவரர் மீது பாடும் மரபு இருந்து

வந்ததைச் சிற்றிலக்கியங்களினால் அறிகிறோம். அருணகிரிநாதர் வருகைக்குப் பின்னர்ச் சிங்கார வேலர் மீது பாப்புனையும் பழக்கம் ஏற்பட்டுப் பல நூல்கள் தோன்றின. சக்தி வழிபாடு மிகுந்துள்ள இக்காலத்தில் கற்பகவல்லியின் பொற்பதம் பாடும் இலக்கியங்களே பெரிதும் முகிழ்க்கின்றன.

திருமயிலைச் சிற்றிலக்கியங்களில் திருக்குறள் கருத்துக்கள், பழமொழிகள், தமிழ்-தமிழிசை பற்றிய குறிப்புகள், சங்கரா பரணம், கல்யாணி இராகங்கள், தல புராணக் கதைகள், பூம்பாவை வரலாறு ஆகியவை சிறப்பாக எடுத்தாளப்படு கின்றன. ஊர் வெண்பாக்களும் தல புராணங்களும் திரு மயிலையின் புகழ் பாடுகின்றன. சித்திரச் சத்திரத்தின்மீது இரு மாலை நூல்கள் எழுந்திருப்பதும் திருமயிலைச் சிற்றிலக்கியங் களின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். திருவள்ளுவர் மீது பதிகங்கள் பாடப்பட்டிருப்பதும் ஒரு தனிச் சிறப்பாகும். கங்காதர நாவலரின் தத்துவப் பாடல்கள் தாயுமானவர் பாடல் களின் அடிச்சுவட்டில் அமைந்திருப்பதும் சிறப்பேயாகும்.

குறிப்புகள்

1. **பாட்டும் தொகையும்**, எஸ். ராஜம் வெளியீடு, 1958 ப. 188.
2. T. P. Meenakshisundaram, **A History of Tamil Literature**, Annamalai University, 1965, pp. 144-145.
3. **தேவாரம்**, 2-183.
4. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தலபுராணம்**, பிரம்மன் பூசித்த சருக்கம், பா. 33, 34.
   சுக்கிரன் ,, பா. 23.
   வேதம் ,, பா. 25.
5. **தேவாரம்**, 2-183-1.
6. **உலா**, கண்ணி 37,
7. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்**, தீர்த்தச் சருக்கம்.
8. **உலா**, கண்ணிகள் 34, 97-101.
9. மா. இராசமாணிக்கம் பிள்ளை, **பல்லவ வரலாறு**, ப.318.
10. **பதினொராந்திருமுறை**, 'ஷேத்திர வெண்பா', பா. 12.
11. **நாலாயிரம்**, பா. 3518.
12. **தேவாரம்**, 6-306-2.
13. ,, 6-216-1.
14. ,, 6-221-12.
15. ,, 6-259-6.
16. ,, 6-306-2.
17. ,, 7-திருத்தொண்டத் தொகை, பா. 400
18. **நாலாயிரம்**, பா. 1069.
19. ,, பா. 1076.
20. ,, பா. 1077.
21. மா. இராசமாணிக்கம் பிள்ளை, **பல்லவர் வரலாறு**, ப 197.
22. **நந்திக் கலம்பகம்**, பா. 1.
23. ,, பா. 51.
24. ,, பா. 69.
25. ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் (பதிப்பு), **திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஒன்பதாந்திருமுறை**, தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1969, பா. 256.
26. கா. சுப்பிரமணிய பிள்ளை, **இலக்கிய வரலாறு**, இரண்டாம் பாகம், ப. 331.

27. **பதினோராந் திருமுறை**, 'திருத்தொண்டர் திருவந்தாதி', பா. 61.
28. **கலிங்கத்துப்பரணி**, கழக வெளியீடு, கண்ணி 534.
29. **திருத்தொண்டர் புராணம்**, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு. 'திருஞானசம்பந்தர் புராணம்', பா-ள், 1023—1119.
30. ,, வாயிலார் நாயனார் புராணம், பா-ள், 1-10.
31. **நேமிநாதம்**, பாயிர உரை, ப. 2.
32. ரா. இராகவையங்கார் (பதிப்பு), **திருநூற்றந்தாதி**, மதுரைத் தமிழ்ச் சங்க முத்திராசாலை, 1935, பா. 1.
33. உதீசித் தேவர், **திருக்கலம்பகம்**, பா. 74.
34. **மயிலை நேமிநாதர் பதிகம்**. நல்லறிவு மன்றம், ஆரணி, 1955.
35. 'திருமயிலாபுரிப் பத்து' **முக்குடை**, செப்டம்பர் 1979.
36. திருமுருக கிருபானந்த வாரியார் (பதிப்பு), **திருப்புகழ்**, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1965, பா-ள். 696-705.
37. சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை (பதிப்பு), **தொண்டை மண்டல சதகம்**, இந்து பிரஸ், 1854, பா.3.
38. ,, பா.43.
39. ,, பா.44.
40. சூடாமணிப் புலவர், **வைசிய புராணம்**, கல்விக்கடல் அச்சுக்கூடம், 1855, பக்.15, 28.
41. சிதம்பர முனிவர், 'க்ஷேத்திரக் கோவை', **திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர்**, 1982.
42. **திருத்தொண்டர் புராணம்**, திருநாவுக்கரசர் புராணம், பா-ள். 232-235.
43. மா. இராசமாணிக்கம் பிள்ளை, **பல்லவர் வரலாறு**, பக். 90, 112.
44. K. V. Raman, **The Early History of the Madras Region**, pp. 199, 200.
45. **திருத்தொண்டர் புராணம்**, திருஞானசம்பந்தர் புராணம்.
46. **தேவாரம்**, 2-183.
47. ,, 2-183-2
48. ,, 2-183-5.
49. ,, 2-183-6.
50. ,, 2-183-7.
51. ,, 2-183-8.
52. ,, 2-183-9.
53. **தேவாரம்**, 2-183-1.
54. ,, 2-183-2.
55. ,, 2-183-3.
56. ,, 2-183-4.
57. ,, 2-183-5.
58. ,, 2-183-6.
59. ,, 2-183-7.

60. **தேவாரம்**, 2-183-8.
61. ,, 2-183-1.
62. ,, 2-183-2.
63. ,, 2-183-3.
64. ,, 2-183-4.
65. ,, 2-183-5.
66. **தேவாரம்**, 2-183-6.
67. ,, 2-183-7.
68. ,, 2-183-8.
69. ,, 2-183-9.
70. ,, 2-183-10.
71. சி. கே. சுப்பிரமணிய முதலியார் (உரை.), **பூம்பாவை**, கோவைத் தமிழ்ச் சங்கம், 1950, ப. 69.
72. ,, ப. 69.
73. **தேவாரம்**, 2-183-10.
74. ரெ. முத்துக் கணேசன் (உரை) **முத்தொள்ளாயிரம்**, பாரி நிலையம், 1957, பா. 33.
75. தி. சு. பாலசுந்தரம் பிள்ளை (பதிப்பு), **தொல்காப்பியம்**, கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1954, நூற்பாக்கள் 1031, 1032.
76. மயிலை சண்முகம் பிள்ளை, (பதிப்பு), **திருமயிலை உலா**, 1903.
77. மு. கோ. ராமன் (பதிப்பு), **திருமயிலை உலா**, 1983.
78. ,, கண்ணிகள் 116-120, 205, 226, 227.
79. சி. கே. சுப்பிரமணிய முதலியார் (உரை.), **பூம்பாவை**, ப. 68.
80. **உலா**, கண்ணி 56.
81. ,, ,, 133.
82. ,, ,, 267.
83. ,, ,, 263.
84 ,, ,, 334.
85. ,, ,, 567.
86. ,, ,, 569.
87. **உலா**, கண்ணி 575.
88. ,, ,, 48, 394.
89. ,, ,, 51, 394.
90. ,, ,, 396.
91. ,, ,, 54, 396.
92. ,, ,, 37.
93. ,, ,, 2-18.
94. **உலா**, கண்ணிகள் 385-396.
95. ,, ,, 464-468, 501-510.
96 , ,, 569-576.
97. **குறள்**. 298.
98. **உலா**, கண்ணி 34.
99. ,, ,, 97.
100. ,, ,, 98.
101. ,, ,, 99.
102. ,, ,, 99.
103. ,, ,, 100.
104. ,, ,, 101.
105. **உலா**, கண்ணி 244.
106. ,, ,, 294.
107. ,, ,, 314.
108. ,, ,, 315.
109. ,, ,, 492.
110. ,, ,, 84.
111. ,, ,, 91.

112. **உலா**, கண்ணி 144.
113. ,, ,, 157.
114. ,, ,, 159.
115. ,, ,, 538.
116. ,, ,, 566.
117. ,, ,, 9-10.
118. ,, ,, 94.
119. ,, ,, 286-294.
120. ,, ,, 320-325.
121. ,, ,, 418-419.
122. ,, ,, 579-586.
123. ,, ,, 189.
124. ,, ,, 190.
125. **உலா**, கண்ணி 190.
126. ,, ,, 191.
127. ,, ,, 192.
128. ,, ,, 193.
129. ,, ,, 194.
130. ,, ,, 195.
131. ,, ,, 196.
132. ,, ,, 197.
133. ,, ,, 198.
134. ,, ,, 199.
135. ,, ,, 200.
136. ,, ,, 201.
137. ந. வீ. செயராமன், **சிற்றிலக்கியச் செல்வம்**, சிதம்பரம், 1979, ப. 37.
138. மயிலை சண்முகம் பிள்ளை (பதிப்பு), **திருமயிலைக் கலம்பகம்**, 1903.
139. **திருமயிலைக் கலம்பகம்**, பா. 1.
140. ,, பா. 2.
141. ,, பா. 5.
142. ,, பா. 17.
143. ,, பா. 22.
144. ,, பா. 34.
145 ,, பா. 37.
146. ,, பா. 38.
147. ,, பா 42.
148. ,, பா. 46.
149. ,, பா. 47.
150. ,, பா. 56.
151. ,, பா. 76.
152. ,, பா. 80.
153. ,, பா. 10.
154. ,, பா. 18.
155. ,, பா. 28.
156. ,, பா. 29.
157. ,, பா. 35.
158. **கலம்பகம்**, 54.
159. ,, 1.
160. ,, 1.
161. **கலம்பகம்**, 4.
162. ,, 11.
163. ,, 23.

164. **கலம்பகம்**, 39.
165. ,, 46.
166. ,, 55.
167. ,, 64.
168. ,, 78.
169. ,, 47.
170. **கலம்பகம்**. 86.
171. ,, 88.
172. ,, 71.
173. ,, 20.
174. ,, 23.
175. **இலக்கண விளக்கம்**, 841.
176. **சுவாமி நாதம்**, 170.
177. இ. வி., 842.
178. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), **திருமயிலை யமக அந்தாதி**, மறுபதிப்பு, சென்னை, 1975, முகவுரை, ப. 10.
179. **திருமயிலை யமக அந்தாதி**, பா. 30.
180. ,, பா. 34.
181. ,, பா. 46.
182. ,, பா. 10.
183. ,, பா. 56.
184. ,, பா. 86.
185. ,, பா. 96.
186. ,, பா. 23.
187. ,, பா. 4.
188. ,, பா. 95.
189. ,, பா. 27.
190. ,, பா. 28.
191. ,, பா. 97.
192. ,, பா. 73.
193. ,, பா. 81.
194. ,, பா. 93.
195. ,, பா. 10.
196. ,, பா. 34, 95
197. ,, பா. 37,57,64,86.
198. ,, பா. 3,4,86,97,
199. ,, பா. 2.
200. ,, பா. 5,37,78,98.
201. ,, பா. 8,38.
202. ,, பா. 39,71.
203. ,, பா. 95.
204. ,, பா. 80.

205. **திருமயிலை யமக அந்தாதி,** பா. 98.
206. ,, பா. 31.
207. ,, பா 30.
208. ,, பா. 42,60.
209. ,, பா. 53.
210. ,, பா. 47.
211. ,, பா. 70.
212. ,, பா. 93.
213. ,, பா. 62.
214. ,, பா. 67.
215. ,, பா. 65.
216. ,, பா. 97.
217. ,, பா. 66.
218. ,, பா. 86.
219. ,, பா. 41.
220. ,, பா 71.
221. ,, பா. 62, 65.
222. ,, பா. 53.
223. ,, பா. 66. 71.
224. ,, பா. 64.
225. ,, பா 82.
226. ,, பா. 90.
227. **தொல்.**, நூற்பா 1029.
228. **யமகம்,** 5, 9, 18, 22, 26, 37, 62, 63, 69, 76, 92.
229. ,, 6, 10, 17, 31, 38, 42, 45, 46, 59, 60, 76, 79, 82, 84, 85, 88, 89.
230. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), **யமகம்,** முகவுரை, ப. 6.
231. ,, ,, ப 7.
232. ஆலந்தூர். முத்துசாமி முதலியார், **திருமயிலைக் கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம்,** சென்னை, 1855.
233. **திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம்,** Reprint from Kalaimagal, May, 1932.
234. **திருமயிலைத் தோத்திரங்கள்,** அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட், சென்னை, 1960.
235. **திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம்,** Reprint from Kalaimagal, உ. வே. சாமிநாதையர் முன்னுரை.
236. திருமயிலை அருணாசல முதலியார், **கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம், சிங்காரவேலர் மாலை**

கலாரத்நாகர அச்சுக்கூடம், 1872, கபாலீசர் பதிகம், பா. 2.

237. **கபாலீசர் பதிகம்** பா 2.
238. ,, பா. 3.
239. ,, பா. 6.
240. ,, பா. 8.
241. தில்லையம்பூர் சந்திரசேகர கவிராஜ பண்டிதர், **திருமயிலைக் கபாலீசர்** பதிகம். இலக்ஷிமி நிவாஸ் அச்சுக்கூடம், சென்னை, 1876.
242. ,, பா. 1.
243. ,, பா. 2.
244. ,, பா. 3.
245. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், **மயிலாபுரிப் பதிகம் 1**, கையெழுத்துப்படி.
246. ,, பா. 7.
247. ,, பா. 8.
248. ,, பா. 9.
249. ,, பா. 10.
250. தண்டபாணி சுவாமிகள், **திருமயிலாபுரிப் பதிகம் 2**, ஸ்ரீநிதி அச்சுக்கூடம், சென்னை, 1878.
251. தண்டபாணி சுவாமிகள், 'மயிலாபுரிப் பதிகம் 3', **சென்னைக் கந்தரிதழகலந்தாதி**, கலாரத்நாகரம், அச்சுக்கூடம், 1880.
252. ,, பா. 11.
253. தேனாம்பேட்டை சுப்பராய முதலியார், **திருமயிலைக் கபாலீசர் இரட்டை மணிமாலை**, கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1883.
254. **திருமயிலைக் கபாலீசர் இரட்டை மணிமாலை** பா. 1.
255. ,, பா. 2.
256. ,, பா. 3.
257. ,, பா. 4.
258. ,, பா. 5.
259. ,, பா. 10.
260. ,, பா. 18.
261: பு. கனகசபை நாயகர், **திருமயிலைப் பதிற்றுப் பத்தந்தாதி**, மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1883.
262. ,, பா. 1.
263. ,, பா. 2.
264. ,, பா. 3.

265. பு. கனகசபை நாயகர், **திருமயிலைப் பதிற்றுப் பத்தந்தாதி,** பா. 4.
266. ,, பா. 6.
267. ,, பா. 9.
268. ,, பா. 11, 12, 14.
269. ,, பா. 72.
270. ,, பா. 81.
271. ,, பா. 82.
272. ,, பா. 83.
273. திருக்குருகூர் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள், **திருமயிலை, திருமணவூர், திருவான்மியூர், சாமள வல்லியார் பதிகங்கள்**, இந்து யூனியன் அச்சியந்திர சாலை, சென்னை, 1893.
274. ,, **திருமயிலாப்பூர் பதிகம் 1**, பா. 1.
275. ,, ,, பா. 2.
276. ,, ,, பா. 3.
277. ,, ,, பா. 4.
278. ,, ,, பா. 5.
279. ,, ,, பா. 6.
280. திருக்குருகூர் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள் **திருமயிலாப்பூர் பதிகம் 2**, பா. 7.
281. கி. ஊ. பா. கங்காதர நாவலர், **சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரரின் சிவஞான மஹத்வ சுகத்வம்**, ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடம், சென்னை, 1927, சோடசமாலை, பா. 16.
282. கி. ஊ. பா. கங்காதர நாவலர், **சிவஞான ஸத்வாம்ருதம்**, 1919.
283. ,, **சிவஞான ரமணியம்**, 1917, விநாயக வணக்கம்.
284. ,, **சிவஞானச் சிந்தாமணி**, 1912, விநாயக வணக்கம்.
285. ,, **சிவஞானத் திவாகரம்**, 1913, விநாயக வணக்கம்.
286. மோசூர் முனிசாமி முதலியார், 'ஸ்ரீ கபாலீச்சுரர் தோத்திரம்', **திருமயிலைப் புராண வசனம்**, கபாலி அச்சுக்கூடம், சென்னை, 1910.
287. ,, பா. 2.
288. ,, பா. 7.
289. ,, 'கபாலீச்வரர் மாலை', பா. 1.

290. வி. முனிசாமி பிள்ளை, **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரர் துதிப்பா மாலை**, ஸ்ரீ ஜீவரத்திந விநாயக சம்பந்தர் அச்சுக்கூடம். சென்னை, 1911.
291. புதுவை கு. ஆ. குமாரதேஸிகர், **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரர் அருள்வளர் மல்லிகைப்பா**, ஸ்ரீஜீவ ரத்திந விநாயக சம்பந்தர் அச்சுக்கூடம், சென்னை, 1911.
292. ந. முருகேஸம் பிள்ளை, **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் துதிப்பா மாலை**, ஸ்ரீ ஜீவரத்தின வீநாயக சம்பந்தர் அச்சுக்கூடம், 1913.
293. **A Descriptive Catalogue of Tamil Manuscripts in Mahamahopadhyaya Dr. V. Swaminathiar Library**, Volume II, Madras, 1961, 'கபாலீசர் குறுங்கழி நெடில்', நெ. 880.
294. இ. வி. 61.
295. மயிலை சீனி. கோவிந்தராசன், **திருமயிலை நான்மணி மாலை**, கணேச அச்சியந்திர சாலை, சென்னை, 1918.
296. ,, முன்னுரை, ப. 3.
297. ,, பா. 1.
298. ,, பா. 3.
299. ,, பா. 2.
300. ,, பா. 5.
301. ,, பா. 6.
302. ,, பா. 4:19-21.
303. ,, பா. 15.
304. டி. எஸ். வாசுதேவன், 'பாபநாசம் சிவன்', **திருமயிலை கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர் 1982**.
305. யாழ்ப்பாணம் வீரமணி, **திருமயிலைக் குறவஞ்சி**, திருமயிலைக் கபாலீச்சரம், 1957, அணிந்துரை.
306. யாழ்ப்பாணம் வீரமணி, **திருமயிலைக் குறவஞ்சி**.
307. நா. கனகராஜையர், '**திருமயிலைக் கபாலீசன் திரு மாலை**', 1970, கையெழுத்துப்படி, அ.கீ.சு.நூ.ஆர். 8589.
308. சே. கோவிந்தராசன், **திருமயிலை வெண்பா அந்தாதியும் திருப்போரூர் முருகன் புகழ் மாலையும், சீகாவித் தண்டலம் படை வீட்டம்மன் பதிகமும்**, சென்னை.
309. என். கோடீச்வர ஐயர், 'திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் துதி', **திருமயிலை கபாலீச்சரம், கும்பாபிஷேக மலர் 1982**.
310. அருட்கவி சேதுராமன், 'அருட்புகழ்', **செந்தமிழ்ச் செல்வி**, தொகுதி 36, சூன் 1962, கழக வெளியீடு.

311. ஆலந்தூர் முத்துசாமி முதலியார், **திருமயிலைக் கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம்,** அமெரிக்கன் அச்சுக்கூடம், 1855.

312. திருமயிலை தாச்சி அருணாசல முதலியார், **கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம், சிங்காரவேலர் மாலை,** கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1872, கற்பகவல்லியம்மை பதிகம், பா. 2.

313. திருக்குருகூர் ஸ்ரீமத்ஞானசித்த சுவாமிகள், **திருமயிலை, திரு மணவூர், திருவான்மியூர், சாமள வல்லியார் பதிகங்கள்,** 'திருமயிலைக் கற்பகவல்லிமீது பதிகம்'.

314. புலவர் கீரன், 'திருமயிலைக் கற்பகவல்லி அஷ்டகம்', **திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர் 1982**

315. **A Descriptive catalogue of Tamil Manuscripts in Mahamohopadhyaya** Dr. V. Swaminathiar Library, V. III, 1962, No. 1651, கற்பகவல்லி மாலை.

316. மதுரகவி மாணிக்க முதலியார், **ஸ்ரீ கபாலீசர் திருப் பதிகம், கற்பகவல்லியம்மை பஞ்சரத்தினம், பூம் பாவையார் சரித்திரம், ஸ்ரீ சிங்காரவேலர் பதிகம், திருத்தொண்டத்தொகை,** மனோன்மணி விலாச அச்சுக் கூடம், 1905.

317. யு. எஸ். நடராஜ சர்மா, **ஸ்ரீ கற்பகாம்பாள் பாடல்கள்** கையெழுத்துப்படி, திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் நூலகம்.

318. சுவாமி சரவண பவானந்தர், **கற்பகாம்பிகை அந்தாதிப் பதிகம்,** அருட்சுடர் வெளியீட்டகம், சென்னை, 1965.

319. அருட்கவி சேதுராமன், 'அருட்புகழ்', **செந்தமிழ்ச் செல்வி,** கழக வெளியீடு, தொகுதி 36, ஜூன் 1962, தொகுதி 37, செப்டம்பர், 1962.

320. நா. கனகராஜையர், **கற்பகவல்லி மாலை,** கையெழுத் துப்படி, அ. கீ. சு. நூ. ஆர். 8384.

321. சுத்த சத்வானந்தா (என். எஸ். சிதம்பரம்), 'ஸ்ரீகற்பகாம் பாள் அந்தாதி', **அந்தாதி ஐந்து,** சென்னை, 1982.

322. கி.வா. ஜகந்நாதன், '**திருமயிலாபுரிக் கற்பகாம்பிகை மாலை**', **திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிடேக மலர், 1982.**

323. ஆர். சோமசுந்தரம் ஐயர், 'மயிலை ஸ்ரீ கற்பகாம்பாள் அஷ்டகம்' **திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிடேக மலர் 1982.**

324. ஈ. வே. வேங்கடசுப்பிரமணியம், 'திருமயிலைக் கற்பகாம்பிகை பிள்ளைத் தமிழ்', **திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிடேக மலர், 1982.**

325. ரா. அருளானந்தம், 'திருமயிலைக் கற்பகவல்லி திருப்பதிகம்' **திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிடேக மலர், 1982.**

326. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு, பதினைந்தாம் நூற்றாண்டு,** காந்தி வித்தியாலயம், தஞ்சை, 1969, ப. 5.

327. திருமுருக கிருபானந்தவாரியார் (பதிப்பு), **திருப்புகழ்,** பா. 696.

328. ,, பா. 697.

329. ,, பா. 698.

330. ,, பா. 699.

331. ,, பா. 700.

332. ,, பா. 701.

333. ,, பா. 702.

334. ,, பா. 703.

335. ,, பா. 704.

336. ,, பா. 705.

337. **இந்திர காளியம்,** 29.

338. **ப. பா.** 18.

339. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), **திருமயிலை யமக அந்தாதி,** முன்னுரை, ப. 9.

340. தி. சந்திரசேகரன் (பதிப்பு), 'திருமயிலைப் பிள்ளைத் தமிழ்', **திருமயிலைப் பிரபந்தங்கள்,** Madras Government Oriental Manuscripts Series-27, Madras, 1953, சிறுதேர்ப் பருவம், பா. 10.

341. **திருமயிலை யமக அந்தாதி,** நூல் இறுதி, அரங்கேற்றியவர்.

342. ,, முன்னுரை, ப. 10.

343 **திருமயிலைப் பிரபந்தங்கள்,** அ கீ. சு. நூ.

344. **திருமயிலைப் பிள்ளைத் தமிழ்,** கூத்தாடும் விநாயகர் வணக்கம்.

345. ,, காப்புப் பருவம், பா. 6.

346. ,, ,, பா. 8.

347. ,, செங்கீரைப் பருவம், பா. 8.

348. ,, ,, பா. 10.

349. ,, தாலப் பருவம், பா. 9.

350. ,, ,, பா. 10.

351. **திருமயிலைப் பிள்ளைத்தமிழ்**, சப்பாணிப் பருவம், பா. 2.
352. ,, ,, பா. 9.
353. ,, முத்தப்பருவம், பா. 1.
354. ,, ,, பா. 3.
355. ,, சிற்றில் பருவம், பா. 9.
356. ,, ,, பா. 10.
357. ,, காப்பு, பா. 5.
358. ,, சப்பாணிப் பருவம், ப. 10.
359. ,, அம்புலிப் பருவம், பா. 8.
360. ,, சிற்றில், பா. 10.
361. ,, சிறுதேர், பா. 8.
362. ,, காப்பு, பா. 3.
363. ,, ,, பா. 6.
364. ,, முத்தம், பா. 1.
365. ,, வருகை. 10.
366. ,, அம்புலி. 1.
367. ,, ,, 7.
368. ,, ,, 10.
369. ,, சிறுதேர். 8.
370. ,, தால். 3.
371. ,, சிறுதேர். 9.
372. ,, சப்பாணி. 7.
373. ,, காப்பு. 2.
374. ,, தால். 2.
375. ,, ,, 3.
376. ,, சிறுதேர். 2.
377. ,, ,, 7.
378. ,, ,, 4.
379. ,, காப்பு. 6.
380. ,, ,, 4.
381. ,, தால். 3.
382. ,, ,, 4.
383. ,, ,, 5.
384. ,, அம்புலி. 3.
385. ,, காப்பு. 4.
386. ,, செங்கீரை. 6.
387. ,, தால். 6.
388. ,, அம்புலி. 2.

389. **திருமயிலைப் பிள்ளைத் தமிழ்**, செங்கீரை. 7.
390. ,, சப்பாணி. 3.
391. ,, அம்புலி. 6
392. ,, சிறுதேர். 2.
393. ,, காப்பு.4.
394. ,, காப்பு. 7.
395. ,, செங்கீரை. 6.
396. ,, தால். 1.
397. ,, தால். 6.
398. ,, அம்புலி. 1.
399. ,, சிறுதேர். 2.
400. ,, ,, 10.
401. ,, செங்கீரை. 3.
402. ,, சிற்றில். 10.
403. சி. ஜகந்நாதாச்சாரியார், 'திருமயிலை சிங்காரவேலர் பிள்ளைத் தமிழ்', **திருமயிலை கபாலீச்சரம் கும்பாபிடேக மலர், 1982**.
404. **வெண்பாப் பாட்டியல்**, 37.
405. **ப. பா**. 339.
406. ,, 340.
407. குறள். 1122.
408. தி. சந்திரசேகரன் (பதிப்பு), 'திருமயிலைக் கோவை', **திருமயிலைப் பிரபந்தங்கள்**, 1953, பா. 34.
409. **குறள்**. 380.
410. **கோவை**. 41.
411. **குறள்**. 831.
412. **கோவை**. 50.
413. **குறள்**. 1101.
414. **கோவை**. 149.
415. **குறள்**. 3.
416. **கோவை**. 189.
417. **குறள்**. 398.
418. **கோவை**. 437.
419. ,, 393.
420. ,, 6.
421. ,, 16.
422. **கோவை** 36.
423. ,, 51.
424. ,, 52.
425. ,, 88.
426. ,, 69.
427. ,, 104.
428. ,, 119.
429. ,, 285.
430. ,, 307.
431. ,, 319.
432. ,, 397.
433. **தண்டியலங்காரம்**, கழக வெளியீடு, மறுபதிப்பு, சென்னை, 1963, ப. 116.

434. **கோவை.** 51.
435. ,, 172.
436. ,, 371.
437. ,, 107.
438. **கோவை** 159.
439. ,, 84.
440. ,, 182.
441. ,, 412.
442. திருவேங்கடபாரதி, **பாரதி தீபம்**, சென்னைப் பல்கலைக் கழகம், 1980, பா-ள், 13, 14.
443. **கோவை.** பா. 3.
444. ,, பா. 13.
445. ,, 224.
446. ,, 229.
447. ,, 262.
448. ,, 292.
449. ,, 284.
450. ,, 331.
451. ,, 378.
452. ,, 448.
453. ,, 448.
454. ,, 451.
455. ,, 54.
456. ,, 3.
457. **கோவை.** 23.
458. ,, 58.
459. ,, 88.
460. ,, 212.
461. ,, 281.
462. ,, 449.
463. ,, 413.
464. ,, 7.
465. ,, 223.
466. ,, 376.
467. ,, 41.
468. ,, 454.
469. ,, 457.
470. ஏ. வி. சுப்பிரமணியன், **புதிய கோணங்களில் சங்க இலக்கியம்**, வானதி பதிப்பகம், சென்னை, 1983, ப. 142.
471. ,, ப. 150.
472. **கோவை.** 324.
473. ,, 1.
474. ,, 2.
475. ,, 6.
476. **கோவை.** 33.
477. ,, 127.
478. ,, 197.
479. ,, 200.
480. ,, 62.
481. திருமயிலை அருணாசல முதலியார், **கபாலீசர் பதிகம், கற்பகவல்லி பதிகம், சிங்காரவேலர் மாலை.**
482. **A Descriptive Catalogue of Tamil Manuscripts in Mahamohopadhyaya Dr. V. Swaminathiar Library,** Volume II, Madras, 1961, No. 893.
483. **சிங்கார வேலர் மாலை**, பா. 14.
484. தண்டபாணி சுவாமிகள், திருமயிலைக் குகன் பதிகம், **சென்னைக் கந்தரிதழகலந்தாதி**, கலாரத்நாகரம் அச்சுக்கூடம், 1878.

485. **திருமயிலைக் குகன் பதிகம் 2**, பா. 1.
486. ,, 2.
487. ,, 3.
488. எஸ். கோடீஸ்வரய்யர், மயிலைச் சண்முகப் பஞ்சரத்தின மாலை, **தோத்திரத் திரட்டு**, சென்னை, 1915.
489. அருட்கவி சேதுராமன், அருட்புகழ், **செந்தமிழ்ச்செல்வி**, தொகுதி 37, செப்டம்பர், 1962.
490. கி. வா. ஜகந்நாதன், **மயிலைச் சிங்காரவேலன் இரட்டை மணிமாலை**, அமுத நிலையம் லிமிடெட், சென்னை, 1966.
491. கி. வா. ஜகந்நாதன், **திருமயிலைச் சிங்காரவேலர் பதிகம்**, அமுத நிலையம் லிமிடெட், சென்னை, 1966.
492. தாண்டவராயச் செட்டியார், **திருமயிலைச் செங்கழுநீர், விநாயகர் பதிகம்**, தயாநிதி அச்சுக்கூடம், சென்னை, 1855.
493. ,, பா. 4.
494. ,, பா. 5.
495. க. மயில்வாகனம், **மும்மணி மாலை**, அச்சுவேலி ஞானப் பிரகாச இயந்திர சாலை, 1897.
496. **ப. பா**. 68.
497. **மும்மணி மாலை**. பா. 1.
498. ,, 2.
499. ,, 3.
500. ,, 4.
501. ,, 5.
502. ,, 7.
503. ,, 8.
504. ,, 9.
505. ,, 10.
506. ,, 11.
507. A Descriptive Catalogue of Tamil Manuscripts in Dr. Swaminathiar Library, Volume III, 1962, எண். 1545, மயிலை ஞான சுந்தர விநாயகர் விருத்தம்.
508. எஸ். கோடீஸ்வரய்யர், 'மயிலைச் சித்தி விநாயகர் பதிகம்', **தோத்திரத் திரட்டு**, 1915.

509. தண்டபாணி சுவாமிகள், **திருவள்ளுவ நாயனார் பதிகம்**, ஸ்ரீநிதி அச்சுக்கூடம், 1878.
510. ,, 2.
511. ,, 5.
512. ,, 3.
513. திருக்குருகூர் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள், **திருமயிலை திருமணவூர். திருவான்மியூர், சாமவனல்லியார் பதிக்ங்கள்**, 1893.
514. **திருவள்ளுவ நாயனார் பதிகம்**, பா. 1.
515. ,, 2.
516. ,, 3.
517. ,, 4.
518. ,, 5.
519. ,, 6.
520. ,, 7.
521. ,, 8.
522. ,, 9.
523. ,, 10.
524. ,, 11.
525. நா. **கனகராஜையர், பூம்பாவை தவச்சிறப்பு மாலை கையெழுத்துப்படி**, அ. கீ. சு. நூ. **எண்**. ஆர். 8608.
526. ஏ. கே. செட்டியார் (தொகுப்பு), 'திருமயிலை அறுபத்து மூவர் வழிநடைச் சிந்து, **தமிழ்நாடு** (பயணக் கட்டுரை கள்), சென்னை, 1968, பக். 97-98.
527. சுத்த சத்வானந்தா, **திரு கோலவிழி அம்மன் போற்றி, இசைமாலை**, ஸ்ரீசத் குருதேவ் அறநிலையம் குழு, சென்னை, 1980.
528. மு. கிருஷ்ணமூர்த்தி, **பத்ரகாளி அம்மன் பதிகப் பாடல் கள்**, சென்னை, 1981.
529. சௌந்தரா **கைலாசம்**, 'அதர்வண பத்ர கோலவிழியம்மன் பிரதியங்கரா தேவி', **திருமயிலை கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர் 1982**.
530. கிருஷ்ணராவ், **முண்டக கண்ணி அம்மன் பஞ்சகம்**, சென்னை, 1969.
531. சி. கணேசன், முண்டகக் **கண்ணி**யம்மன் பாமாலை, சென்னை, 1975.
532. செம்பொற் செவ்வேள், **முண்டகக் கண்ணி முப்பது**, சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1981.

533. **மயிலை நேமிநாதர் பதிகம்**, நல்லறிவு மன்றம், ஆரணி, 1955.
534. **மயிலை நேமிநாதர் பதிகம்**, 'மயிலாப்பூர் பதிகம்', பா.3.
535. ,, 'திருமயிலாப்பூர் பத்தும் பதிகம்'.
536. ,, 'திருமயிலாப்பூர் ஸ்ரீநேமி நாத சுவாமி பதிகம்.
537. 'திருமயிலாபுரிப் பத்து', **முக்குடை**, ஜைன இளைஞர் மன்றத் திங்கள் இருமொழி இதழ், சென்னை, செப்டம்பர் 1979.
538. **இ. வி.**, 825.
539. ,, 830.
540. **திருமயிலை உவமை வெண்பா**, பா. 4.
541. ,, 4.
542. ,, 16.
543. ,, 26.
544. ,, 28.
545. ,, 59.
546. ,, 126.
547. ,, 30.
548. ,, 4.
549. ,, 16.
550. ,, 17.
551. ,, 59.
552. ,, 27.
553. ,, 47.
554. ,, 71.
555. ,, 74.
556. ,, 112.
557. **திருமயிலை வெண்பா**, பா. 2.
558. ,, 3.
559. ,, 4.
560. ,, 5.
561. ,, 6.
562. ,, 7.
563. ,, 9.
564. ,, 10.
565. ,, 15.
566. ,, 16.
567. ,, 20.

568. **திருமயிலை வெண்பா**, பா. 22.
569. ,, 26.
570. ,, 27.
571. ,, 31.
572. ,, 36.
573. ,, 39.
574. ,, 40.
575. ,, 44.
576. ,, 49.
577. ,, 60.
578. ,, 62.
579. ,, 69.
580. ,, 72.
581. ,, 87.
582. **கலித்தொகை**, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை, 1957, பா. 47.
583. **குறள்**, 121.
584. தி. சு. பாலசுந்தரம் பிள்ளை (உரை.), **நாலடியார்**, கழக வெளியீடு, மறுபதிப்பு, சென்னை, 1941, பா. 242
585. **திருமயிலை வெண்பா**, பா. 2.
586. ,, 10.
587. ,, 13.
588. ,, 15.
589. ,, 18.
590. ,, 21.
591. ,, 28.
592. ,, 30.
593. ,, 32.
594. ,, 36.
595. ,, 40.
596. ,, 42.
597. ,, 44.
598. ,, 46.
599. ,, 48.
600. ,, 55.
601. **தமிழ் லெக்சிகன்**, தொகுதி 5, பகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம், மறுபதிப்பு, 1982, ப. 2772.
602. வே. கிருஷ்ணசாமி, **தமிழில் தல புராண இலக்கியம்**, நாகர்கோவில், 1974, ப. 1.

603. S. Radhakrishnan, **Indian Philosophy**, Part I, George Allen & Unwin Ltd., London, 10th Edn , 1977, p.25.

604. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்**.

605. மயிலை நாதமுனி முதலியார், **திருமயிலைத் தலபுராணம்** நோபில் பிரஸ், சென்னை, 1924.

606. உ. வே. சாமிநாதையர், **ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்**, முதற்பாகம், இரண்டாம் பதிப்பு 1938.

607. மோசூர் முனிசாமி முதலியார், **திருமயிலைப் புராண வசனம்**, கபாலி அச்சுக்கூடம், சென்னை, 1910.

608. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்**, பாயிரம், அவையடக்கம், பா-ள். 3, 4.

609. ,, ,, 6.

610. ,, ,, 7.

611. ,, ,, 8.

612. ,, ,, 11.

613. ,, ,, 12, 13.

614. ,, ,, 14.

615. ,, ,, 15.

616. ,, ,, நாட்டுப்., பா-ள். 4-8

617. ,, ,, ,, பா. 14.

618. ,, ,, ,, பா. 21.

619. ,, ,, ,, பா-ள் 32-35.

620. ,, ,, நகரம், பா. 2.

621. ,, ,, 4.

622. ,, ,, 24.

623. ,, ,, 25.

624. ,, ,, 26.

625. ,, ,, 27.

626. ,, ,, பொதிய மாமலைச் சருக்கம், பா.1.

627. ,, ,, தலவிசிட்டம், பா-ள். 1-5.

628. ,, ,, ,, 6.

629. ,, ,, ,, 7.

630. ,, ,, ,, 12.

631. ,, ,, ,, 14.

632. ,, ,, ,, 18.

633. ,, ,, ,, 20.

634. திருமயிலைத் தல புராணம், தலவிசிட்டம், பா. 21.
635. ,, ,, 22.
636. ,, ,, 23.
637. ,, ,, 24.
638. ,, ,, 26.
639. ,, பார்வதி சாபம். பா. 39.
640. ,, பார்வதி அருச்சனை. பா. 18.
641. ,, வேதம். பூசித்., பா. 24.
642. ,, ,, 25.
643. ,, குமரவேள் . , பா. 84.
644. ,, பிரமன் பூசித். , பா-ள். 23, 24.
645. ,, சுக்கிரன்,, பா. 10.
646. ,, தீர்த்தம்., பா. 2.
647. ,, ,, 50.
648. ,, திருவிழா., பா-ள். 62-68.
649. ,, ,, பா. 82.
650. ,, நாட்டு., பா. 21.
651. ,, நகரம்., 17.
652. ,, பார்வதி சாபம். பா. 2.
653. ,, பொதியமாமலை. பா. 26.
654. ,, குமரவேள்., பா. 40.
655. ,, ,, பா. 63.
656. ,, ,, 64.
657. ,, ,, 84.
658. ,, ,, 103.
659. ,, பார்வதி அருச். , பா-ள், 44-50.
660. திருமயிலைத் தல புராணம், பார்வதி அருச்., பா-ள். 51-54, 64.
661. ,, வேதம் பூசித்., பா. 23.
662. ,, சுக்கிரன்., பா-ள். 14, 19-22.
663. ,, திருவிழா. பா-ள். 98-102.
664. **குறள்**. 166.
665. திருமயிலைத் தல புராணம், **சுக்கிரன்**. பா. 8.
666. ,, **தீர்த்தம்**. பா-ள். 12-13.
667. ,, ,, பா-ள். 15-17.
668. ,, திருவிழா., பா-ள். 74-76.
669. மயிலை நாதமுனி முதலியார், **திருமயிலைத் தல புராணம்**, 'முண்டகக் கண்ணம்மை சரித்திரம்', பா. 41.
670. ,, 'இந்திரன் கரமுகமான சரித்திரம்', பா.12

671. மயிலை நாதமுனிமுதலியார், **திருமயிலைத் தலபுராணம்,** 'காரணீசுரர் சரித்திரம்', பா. 35.
672. ,, 'விருபாட்சீசர் சரித்திரம்', பா. 33.
673. ,, 'தீர்த்த பாலீசர் சரித்திரம்', பா. 16.
674. ,, 'வாயிலார் நாயனார் சரித்திரம்', பா. 7.
675. வியாசர்பாடி சுந்தர முதலியார், **திருமயிலாப்பூர்த் தல மகிமைக் கீர்த்தனம்,** 1948.
676. காஞ்சிபுரம் சபாபதி முதலியார், **திருமயிலையிலிருக்கும் வியாசர்பாடி விநாயக முதலியார் தர்ம சத்திர மாலை,** பா. 1.
677. ,, பா. 2.
678. ,, 3.
679. ,, 4.
680. ,, பா. 77.
681. ,, பா. 78.
682. ,, பா. 79.
683. ,, பா. 80.
684. ,, பா. 81.
685. ,, பா. 82.
686. ,, பா. 83.
687. ,, பா. 84.
688. ,, பா. 85.
689. ,, பா. 86.
690. ,, பா. 87.
691. ,, பா. 88.
692. ,, பா. 89.
693. ,, பா. 90
694. ,, பா. 91.
695. ,, பா. 92.
696. ,, பா. 93.
697. ,, பா. 94.
698. ,, பா. 95.
699. ,, பா. 96.
700. ,, பா. 97.
701. ,, பா. 98.
702. ,, பா. 99.
703. ,, பா. 100.
704. ,, பா. 2.

705. திருமயிலையிலிருக்கும் வியாசர்பாடி விநாயக முதலியார் தர்மசத்திர மாலை, முன்னுரை, பா. 3.
706. ,, பா. 7.
707. ,, பா. 22.
708. ,, பா. 28.
709. ,, பா. 29.
710. ,, பா. 34.
711. ,, பா. 55.
712. ,, பா. 1.
713. ,, பா. 21.
714. ,, பா. 55.
715. ,, பா. 73.
716. ,, பா. 31.
717. ,, பா. 34.
718. ,, பா. 38.
719. ,, பா. 39.
720. ,, பா. 52.
721. ,, பா. 78.
722. ,, பா. 79.
723. ,, பா. 80.
724. ,, பா. 88.
725. ,, பா-ள். 14, 60.
726. , பா. 17.
727. ,, பா. 18.
728. ,, பா. 27.
729. ,, பா. 33.
730. ,, பா. 93.
731. ,, பா-ள். 11, 50.
732. ,, பா. 9.
733. ,, பா. 75.
734. ,, பா. 89.
735. ,, பா. 47.
736. ,, பா. 48.
737. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), 'சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை, ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு, சென்னை, 1910.
738. சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை, பா. 3.
739. ,, 9.
740. ,, 7.

741.	சித்திரச் சந்திரப் புகழ்ச்சி மாலை,	10.
742.	,,	11.
743.	,,	31.
744.	,,	63.
745.	,,	2.
746.	,,	10.
747.	,,	99.
748.	,,	பா-ள். 14, 24, 43, 70, 87.
749.	,,	பா. 25.
750.	,,	பா-ள். 78, 99.
751.	,,	பா. 49.
752.	,,	29.
753.	,,	31.
754.	,,	55.
755.	,,	56.
756.	,,	61.
757.	,,	1.
758.	,,	16.
759.	,,	34.
760.	,,	37.
761.	,,	83.
762.	,,	98.
763.	,,	37.
764.	,,	32.
765.	,,	1.
766.	,,	8.
767.	,,	46.
768.	,,	69.
769.	,,	70.
770.	,,	81.
771.	,,	82.
772.	,,	85.
773.	,,	86.
774.	,,	89.
775.	,,	90.
776.	,,	1.
777.	,,	21.
778.	,,	66.
779.	,,	57.

780. **சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை**, 75.
781. ,, 76.
782. ,, 4.
783. ,, 21.
784. ,, 60.
785. கா. சபாபதி முதலியார், 'கீர்த்தனை', **தர்ம சத்திர மாலை**.
786. புரசை. அஷ்டாவதானம் சபாபதி முதலியார், 'கீர்த்தனை', **தர்ம சத்திர மாலை**.
787. திருமயிலை அப்பாசாமி முதலியார், 'அகவல்', **தர்ம சத்திர மாலை**.
788. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), **திருமயிலை யமக அந்தாதி**, முன்னுரை, ப. 4.
789. **திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிடேக மலர்**, 1982.
790. **தமிழ் நூல் விவர அட்டவணை**, அரசு வெளியீடு, முதல் தொகுதி, மூன்றாம் பகுதி, 1963, முதல் தொகுதி, ஐந்தாம் பகுதி, 1964, இரண்டாம் தொகுதி, முதல் பகுதி, 1965.
791. மயிலை சீனி. வேங்கடசாமி, **பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்**.

இயல் 3

திருமயிலைத் திருக்கோயில்கள்

திருமயிலைத் திருக்கோயில்கள்

கடவுளின் தோற்றம்

உலக உயிர்களிலே மனிதன் ஒருவனே ஆறாம் அறிவாகிய மனம் உடையவன். மனிதனையும் மற்ற உயிர்களையும் பிரிப்பது உணர்வும் உணர்ச்சியும்தான். மனிதனைத் தவிர மற்ற உயிர் கட்கு உணர்ச்சி மட்டுமே இயக்கமாக உள்ளது. மனிதனுக்கு மட்டுமே உணர்ச்சியோடு உணர்வும் ஒன்றியுள்ளது. இவ் வுள்ளுணர்வும் பகுத்தறிவும் கொண்ட மனிதர், நாகரிகம் பெறப் பெற உலக இயக்கத்தையும் படைப்பையும் மனித வாழ்வையும் அவனைச் சூழ்ந்த உலக வாழ்வையும் ஒருங்கு சேர்த்து இயக்கும் மேலான பரம்பொருள் உண்டென்பதை உறுதியாக நம்பினர். அதனைப் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்ய முற்பட்டனர். அதன் விளைவாக அம்மேலான மெய்ப்பொருள், அன்பால் ஆட்டு விக்கப்படுகின்றதென்றும், மனிதனுடைய சிந்தனைக்கு அப்பாற் பட்டதென்றும், அப்பரம்பொருளே யாவற்றையும் இயக்கு கின்றது என்பதையும் உய்த்தறிந்தனர். அப்பரம்பொருளையே கடவுள்-இயவுள்-இறை என்ற பொதுப்பெயரிட்டழைத்தனர்.

பழந்தமிழர் வழிபாட்டு முறை

பழந்தமிழருடைய வழிபாட்டிலே 'வெறியாட்டு' முக்கிய இடம் பெற்றிருந்தது. 'இவ்வழிபாடுகளில் பூசாரிகள் இல்லை. வழிபடுவோர் இறைவன் தம்மிலே வந்து வெளிப்படுவான் என்னும் நம்பிக்கையுடன் கூத்தாடினர்'.[1] போரில் இறந்த வீரருக்கு நடுகல் வைத்து வழிபடும் வழக்கம் இருந்து வந்தது. 'நடுகல் அமைத்தல் அக்காலத்தில் பெருவழக்கில் இருந்தமையால் அவற்றை அமைத்தற்குரிய முறைகள் யாவும் ஒழுங்காகப் பின் பற்றப்பட்டன. அம்முறைகளைத் தொல்காப்பியர் ஒழுங்கு படுத்தி இலக்கணமாக வகுத்தார்' என்று நித்தியானந்தம் கூறுகிறார்.[2] நெய்தல் நில மக்கள் சுறாவின் கொம்பைக் கடல் தெய்வத்தின் அடையாளமாக வைத்து வணங்கினர்.[3]

சமய உணர்வு

இறையுணர்வு கைவரப் பெற்றதும் மனிதனிடத்தே ஆன்மா தனித்தொளிர்வது நோக்கப்பட்டது. ஆறாம் அறிவின் தெளிவு முக்கால உணர்வையும் கூட்டிற்று. அவ்வாறமைந்தோரே அறிஞர்-அறிவர் எனப்பட்டனர். இதனை மதுரைக்காஞ்சி உணர்த்துகிறது.[4] மனிதர்,

> வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
> யாண்டும் இடும்பை இல[5]

என்றும்,

> தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது[6]

என்றும் உணரத் தலைப்பட்டனர். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என மெய்ப்பொருள் கண்டார், தனக்கும் தான் சார்ந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஆத்ம சிந்தனையை அளிக்க லாயினர்.

சமய உணர்வே, மனிதனை விலங்கினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. சமயம் என்ற சொல்லே, வாழ்வைச் சமைக்க-பண் படுத்த ஆண்டவனைப் போற்றுவதினின்றும் பிறந்தது. உயர்ந்த ஆற்றலுக்கு ஆட்படுதல் என்ற பொருளைத் தரும் சொல்லின் அடியாகப் பிறந்ததாகவும் பொதுவாகக் கருதலாம். "மனித இனத்தின் வரலாறு, கடவுள் இல்லாமல் மனிதன் வாழ இயலாது என்பதைக் காட்டுகிறது. 'கடவுள் இல்லையென்றால், அவனைக் கண்டு பிடிப்பது மிகவும் இன்றியமையாததாகும்' என்பார் அறிஞர் வால்டேர். கடவுள் நம்பிக்கை எல்லாப் பண்பாடு களுக்கும், அடிப்படையானதாகும்" என்னும் கருத்தும் இங்குக் கருதத்தக்கது.[7]

இறைவன் திருவுருவங்கள்

சமயங்களின் பற்றுக்கோடாக-சின்னங்களாக, மனித மனம் தன்னையொத்த உருவங்களையே கலைப்பாங்கோடு இறையுருக் களைப் படைத்தது. தன் சூழல்-நன்மை தீமையின் பகுப்பு, இன்ப துன்பங்களின் வகுப்பு வகைகளே உருவமற்ற உயிர்ப்பாற்றலுக்கு உருவம் தர முந்திற்று. முதலில் இயற்கைப் பொருள்களுக்கும்

பின்னர் அருவத்திற்கும் உருவங்கள் வழங்கி வணங்கினர். 'தெய்வத்தைத் திடமான உருவம்பெற்ற நிலையில் வழிபடுதல், கடவுளைப் பற்றியும், அண்டப் பகுதிகளைப் பற்றியும், இவை ஒன்றோடொன்று கொள்ளும் தொடர்பைப் பற்றியும் உயர்ந்த சிந்தனைகளிற் கொண்டு சேர்ப்பதாகும். இத்தகைய வழிபாடு கண்ணால் காணக்கூடிய தெய்வ அடையாளம் ஒன்றை உடைய கோயிலில் அல்லது உண்மையான படிமங்களில் அமையலாம்' என்பர் அறிஞர்.[8] இச்சிந்தனைப் போக்கில்தான் பண்டைத் தமிழர் நானிலங்கட்குத் தெய்வம் வகுத்தனர். 'மனிதன் தன்னுடைய தேவைகளின்போது தெய்வத்தை நாடுகின்றான். தெய்வத்தோடு தொடர்பு கொள்வதற்குக் கண்ணால் காணக் கூடிய ஒன்று தேவைப்படுகின்றது. அப்போது அவனுக்கு உதவுவது கடவுள் சின்னங்கள், உருவங்கள், வழிபடுமிடங்கள்' என்று சுவாமி ஹர்ஷானந்தா கூறுகிறார்.[9]

சங்க காலத்தில் அரசர் வாழிடம் கோ இல் கோவில், கோயில் எனப்பட்டது. 'மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்' என்று சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.[10] அரசர் வாழிடத் திலேயே இறைவர் மாடங்களும் அமைக்கப்பட்டுப் பின்னர்க் கால வளர்ச்சியிலும் பல நாகரிகத் தாக்கங்களாலும் வழிபடு தெய்வங்கட்குத் திருக்கோயில், மன்னர்களாலேயே எடுக்கப் பட்டன. பேரரசர், குறுநில மன்னர்கள் மறையவும் நிலக்கிழார் களும் செல்வர்களும் பழம்பெரும் கோயில்களைப் புதுப்பித்துப் பெரிதாக்கினர். 'கோயில் என்பதற்குச் சமயப் பயிற்சி பெறு மிடம், கூட்டுவழிபாடு நடத்துமிடம் என்பதும் பொருளாக அமையும்''.[11]

கோயில்களின் வளர்ச்சி

சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படையில் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும், அவ்விடங்களில் இறைவழிபாடு நிகழ்ந்ததையும்,

> காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
> யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
> சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
> மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்[12]

என்னும் பகுதி விளக்கும்.

சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரமும் அக்காலச் சிவன் கோயில்கள் செங்கற்களால் கட்டப்பட்டதாகக் குறிக்கின்றன.[13] பெரும்பாலான சிவன் கோயில்கள், வனங்களிலும் மலையுச்சி களிலும் ஆற்றங்கரை ஓரங்களிலும் தோன்றி வளர்ந்தன. நாடு வளம் பெற்றபோது கோயில்கள் நகரங்களின் உள்ளே பெரும் வாயில்களோடு கட்டப்பட்டன.

மாடக்கோயில்கள் ஊர்க்கு நடுவே அமைந்தன என்பது,

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும் பொகுட்ட னைத்தே அண்ணல் கோயில்[14]

என்பதால் புலப்படும். கூரை வேயப்பெற்ற கோயில் அம்பலம் எனப்பட்டது. இதனைச் சிதம்பரம் கோயில் 'சிற்றம்பலம்' என்று குறிக்கப்படுவதிலிருந்து அறியலாம். மரங்களின் பெயரால் கோயில்கள் அழைக்கப்பட்டதை, ஞாழல் கோயில், கொகுடிக் கோயில், ஆலக்கோயில் என்னும் சோயில்களால் உணரலாம்.[15] திணைமயக்கம் போல ஓரூரிலேயே வழிபடு கடவுளர் அனை வரையும் ஒருசேர அமைத்தனர் என்று சிலப்பதிகாரத்தால் தெரி கிறது. பூம்புகார் நெய்தல் நிலம். அங்கே,

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
... ...
... ...
வேறு வேறு கடவுளர்[16]

என்று வருவதால் ஊர்கள் தோறும் திருக்கோயில்கள் ஓங்கி நின்று ஒளிர்ந்ததை அறியலாம்.

சேரன் செங்குட்டுவன் காலத்திற்குப்பிறகு சோழநாட்டில் ஆட்சி புரிந்த கோச்செங்கணான் என்னும் சோழ மன்னன் எழுபத்தெட்டுக் கோயில்கள் கட்டினான் என்பதைத் திருமங்கை யாழ்வார் தம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளார்.[17] இவ்வாறு தமிழகம் முழுவதும் முப்பெருந் தெய்வமாகத் திகழும் சிவன்,

திருமால், செவ்வேள் ஆகியோர்க்குத் தனித்தனிக் கோயில்கள் எழுந்தன. தேவார முதலிகள் மூவரும் இத்திருத்தலங்களில் சிவனுக்குரிய அனைத்துத் தலங்களையும் கண்டு வழிப்பட்டுப் பாடல்கள் புனைந்தனர். தமிழகத்தில் தெய்வ வழிபாடுகள் பலவற்றுள்ளும் சிவ வழிபாடு மிகுந்திருப்பதற்குத் தேவார முதலிகளின் பாடல்களும் ஒரு வகையில் காரணமாக அமை கின்றன.

திருநாவுக்கரசர் காலத்தில் 'மாடக்கோயில்' என்ற அமைப் புடைய கோயில்கள் எழுபத்தெட்டு இருந்தன. இப்பெரும் கோயில்களன்றிக் கரக்கோயில், ஞாழல் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என வழங்கும் கோயில்களும் தமிழகமெங்கும் பரவியிருந்தன. இதனைத் திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் உணர்கிறது.[18] பல்லவர் காலத்தில் சிவன் கோயில்கள் ஈச்வரம் என்னும் பெயரால் அழைக்கப்பட்டன். மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் முதன் முதலாகக் குடைவரை கோயில்கள் தோன்றின. இதனை மண்டகப்பட்டுக் கல்வெட்டு உணர்த்து கிறது.[19] முதலில் கருப்பக்கிருகத்தை மட்டுமே கொண்டதாகக் கோயில்கள் விளங்கின. பிற்காலச் சோழர் காலத்தில் கற்றளிகள் பெருகின. கோயிலினுள் கருப்பக் கிருகத்தின்மேல் உயர்ந்த விமானம் கட்டும் வழக்கம் ஏற்பட்டது. மண்டபங்கள், சுற்றுப் பிரகாரங்கள், மற்றக் கடவுளர்க்குச் சந்நிதிகள், திருச்சுற்றுமதில் ஆகியவையும் கோயில்களில் கட்டப்பட்டன. விஜயநகர அரசர் காலத்தில் மதில்சுவரில் வாயில் கோபுரங்கள் கட்டும் முறை தோன்றியது. இவ்வாறு கோயில் ஒரு பெரிய அமைப்பாக வளர்ச்சியடைந்தது. கோயில்கள் கலைக்கூடமாகவும், சமுதாய நிலையமாகவும், கல்விக்கூடமாகவும் வளர்ச்சி அடைந்தன.

கோயில்களைக் கட்டுதலும், திருப்பணி செய்தலும் ஆகிய பணிகளைச் செய்தல், இறைவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதப்பட்டதாலும், பக்தி இயக்கத்தாலும், மூவர் முதலிகளின் பக்திப் பிரச்சாரத்தாலும், திருமூலரின் திருமந்திரத்தாலும், சிவாகமங்களினாலும் தமிழ்நாட்டில் கோயில்கள் பெருகின.

சங்க காலத்தில் கோச்செங்கணானும், பல்லவர் காலத்தில் மகேந்திரவர்மனும் பெருமளவில் கோயில்களைக் கட்டியவர் களாவர். பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும், விஜயநகர அரசர்களும் கோயில்களின் வளர்ச்சிக்குப் பெருந்துணை

புரிந்தனர். பேரரசர், குலநில மன்னர்கள் மறையவும் நிலக் கிழார்களும், செல்வர்களும் பழம்பெரும் கோயில்களைப் புதுப் பித்துப் பெரிதாக்கினர். இக்காலத்தில் கோயில்களைப் பேணிக் காப்பதில் தமிழ்நாடு அரசு அறநிலையத்துறை முன்னணியில் இருக்கிறது. திருமயிலையில் பிள்ளையார் கோயில்கள், சிவன் கோயில்கள், ஆஞ்சநேயர் கோயில்கள், அம்மன் கோயில்கள், திருவள்ளுவர் கோயில், சாயிபாபா கோயில், அய்யப்பன் கோயில்கள், சமணர் கோயில், மசூதிகள், கிறிஸ்தல தேவா லயங்கள் நிறைந்துள்ளன.

பிள்ளையார் கோயில்கள்

தமிழ்நாட்டு மக்கள் விநாயகரைப் பிள்ளையார் என்றே அன்புடன் அழைக்கின்றனர். ஆகவே, இங்கு விநாயகர் கோயில்கள் பிள்ளையார் கோயில்கள் என்று குறிக்கப் படுகின்றன.

பிள்ளையார் - ஒரு விளக்கம்

'தமிழ்நாட்டில் 'பிள்ளை' என்ற பெயருடன் செல்லமாய் அழைக்கப் பெறுகிறார். ஆர் விகுதி சேர்ந்து பிள்ளையார் ஆயிற்று. பெரிய இடத்துப் பிள்ளையானதால் அப்பிள்ளையைப் பிள்ளையார் என்றே தமிழ்நாடு வழங்கி வருகிறது' என்று காஞ்சி ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் பிள்ளையார் என்னும் சொல் லுக்கு விளக்கம் தருகிறார்.[20]

விநாயகன் என்பதற்கு, வி-சிறப்பு; நாயகன்-தலைவன்-சிறந்த தலைவன் என்று ஒரு பொருளையும், வி-இல்லை; நாயகன்-தலைவன்-தனக்கு மேல் தலைவன் இல்லாதவர் என்று மற்றொரு பொருளையும் தவத்திரு திருமுருக கிருபானந்த வாரியார் கூறியுள்ளார்.[21]

விநாயகரைப் பெருமளவில் மக்கள் வழிபடுவதற்குக் காரணம், 'எடுத்த காரியம் எளிதாக-இன்ப மயமாக முடிய வேண்டும் என்ற ஆசை அனைவருக்கும் உண்டு. அந்த ஆசையை நிறைவேற்றி வைக்கும் கடவுள் விநாயகரே என்ற நம்பிக்கை ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலைத்திருப்பதுதான்' என்று கூறுவர்.[22] பிள்ளையாருக்குக் கணபதி, ஏகதந்தர், ஏரம்பர், லம்போதரர், கஜானனர், விநாயகர், விக்னராசர், தூமகேது முதலான பல பெயர்களுண்டு.

தமிழ்நாட்டில் பிள்ளையார் வழிபாடு

இராமநாதபுரம் மாவட்டம் பிள்ளையார்பட்டி கிராமத்தில் ஒரு குகையில் கண்டெடுக்கப்பட்ட இருகை விநாயகர் சிலையின் மூலம், தமிழ்நாட்டில் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே விநாயக வணக்கம் இருந்து வந்திருக்கிறது என்பர்.[23] சங்க இலக்கியங்களில் விநாயகரைப் பற்றிய குறிப்பு இல்லை. கி. பி. ஆறாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் கல்லாடத்தில் கணபதி வணக்கச் செய்யுள் உள்ளது.[24] கி. பி. ஏழாம் நூற்றாண்டினரான திருஞானசம்பந்தர் தன்னுடைய தேவாரப் பதிகங்களில் கணபதியைக் குறிப்பிட்டுள்ளார்.[25] கி. பி. பத்தாம் நூற்றாண்டில் விநாயக வழிபாடு ஒரு மதமாக மாறியது. கணபதியையே முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் மதம் 'காணாபத்ய மதம்' எனப்பட்டது. காணாபத்யம், கௌமாரம், வைஷ்ணவம், சௌரம், சாக்தம், சைவம் என்னும் ஆறு வைதீக மதங்களில் கணபதியை வழிபடும் மதம் ஒன்றாகும். சோழர் கற்றளிகளில் பிள்ளையார், பரிவார கணபதியாக, கோபுரத்துக் கணபதியாக, அர்த்த மண்டபக் கணபதியாகக் காட்சியளிக்கிறார்.

இக்காலத்தில், தமிழ்நாட்டில் பிள்ளையார் பட்டி தொட்டிகள் ஆகிய எல்லா ஊர்களிலும் மூலை முடுக்குகளிலும், சாலை சந்திகளிலும், தெருக்குத்து முனைகளிலும் ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், ஆலமரத்தடிகளிலும், அரசமரத்தடிகளிலும், நடைபாதைகளிலும் எழுந்தருளி விளங்குகிறார்.

பிள்ளையார் திருவுருவம்

திருவடிகள், பெருவயிறு, ஐங்கரங்கள், கொம்புகள், பெரிய செவிகள், மூன்று கண்கள், பிறைமுடி, பாம்பாகிய அணிகலன், யானை முகம் கொண்டவராகப் பிள்ளையார் காட்சியளிக்கிறார். "விநாயகப் பெருமான், பிரணவம் ஆகிய ஓங்கார மந்திர சொரூபமாக விளங்குபவர் என்பதனையே அவர்தம் யானை முகத் திருவுருவம் புலப்படுத்தி நிற்கின்றது' என்பார் ந. ரா. முருகவேள்.[26]

வழிபாட்டு முறை

அறுகு, வன்னியிலை, முதலியன கொண்டு பிள்ளையாரை வழிபடுவர். மண், பசுஞ்சாணி, மஞ்சள், குங்குமம், மாக்கல், கருங்கல், வெள்ளைக்கல், பளிங்கு, செம்பு, சந்தனம், மரவேர்

முதலியவற்றால் பிள்ளையார் உருவம்செய்து வைத்து வழி படுவது வழக்கமாக உள்ளது. பிள்ளையாருக்குப் படைக்கக் கூடியவை தேங்காய், வெல்லம், எள்ளுருண்டை, மோதகம் முதலியனவாகும். வெள்ளிக்கிழமை, விநாயகர் சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி முதலிய நாள்கள் பிள்ளையார் வழி பாட்டுக்குச் சிறந்த நாள்களாகும். பிள்ளையாரை எல்லோரும், எப்பொழுதும், எப்படியும் வழிபடலாம்.

திருமயிலைப் பிள்ளையார் கோயில்கள்

திருமயிலையிலுள்ள முக்கியமான பிள்ளையார் கோயில் களின் இருப்பிடம், அவை தோன்றிய காலம், அங்குள்ள மூர்த்தி, வழிபாடு, நிருவாகம், வருவாய், கோயில் தொடர்பான கதைகள், இலக்கியங்கள் இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

ஆயத்துறை அருள்மிகு ஞானசுந்தர விநாயகர் கோயில்

திருமயிலையிலுள்ள பிள்ளையார் கோயில்களில் இக்கோயில், புகழ்பெற்றதும் பழமையானதுமாகும். செயின்ட்மேரி சாலையும், இராமகிருட்டின மடத்துச் சாலையும் சந்திக்கும் இடத்தில் இக் கோயில் உள்ளது. முற்காலத்தில் ஆயத்துறை இங்கு இருந்ததாகக் கூறுவர்.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முன்னர் இக்கோயில் ஸ்ரீ சிவலிங்க சுவாமிகள் என்பவரால் கட்டப்பட்டது என்று கூறு கின்றனர்.[27] இங்குள்ள பிள்ளையார் தெற்குப் பார்த்த நிலையில் இருக்கிறார். இவர் வலம்புரி விநாயகராக அமைந்துள்ளார். நாள்தோறும் காலையிலும் மாலையிலும் வழிபாடு நடைபெறு கின்றது. விநாயகர் சதுர்த்தி மற்றும் சிறப்பான நாட்களில் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகின்றது. பிரம்மோற்சவம் ஒரு காலத்தில் நடந்து வந்ததாகவும் இப்போது நடைபெறுவதில்லை என்றும் கூறுகிறார்கள். இங்கு வழிபாடு நடத்துபவர் வீர சைவ ராவார். இக்கோயில் தனியாருக்கு உரிமையானதாகும். பரம் பரை உரிமையாகக் கோயில் நிருவாகம் இருந்து வருகிறது. கோயிலைச் சார்ந்த இடத்திலிருக்கும் கடைகளிலிருந்து வரும் வருவாயினாலும், மக்களிடமிருந்து வரும் நன்கொடையினாலும் வழிபாடு நடத்தப்படுகின்றது. இக்கோயிலில் சனீசுவரருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. நாகாத்தம்மன் வேப்ப மரத்தின் கீழ் வீற்றிருக்கிறாள். முனீசுவரர் சந்நிதி, நால்வர் சந்நிதி ஆகியவை யும் உள்ளன. விநாயகர், சுப்பிரமணியர், கைலாசநாதர்,

நடராசர் ஆகியோரின் உற்சவ விக்கிரகங்கள் தனி அறையில் வைக்கப்பட்டுள்ளன.[28]

இப்பிள்ளையார் மீது 'மயிலை ஞான சுந்தர விநாயகர் விருத்தம்' என்னும் பெயரில் பத்துப்பாடல்கள் பாடப்பெற்ற ஏட்டுச் சுவடி உள்ளது. ஆசிரியர் இன்னாரென்று அதில் குறிக்கப் பெறவில்லை.[29] மரத்திலான தேரும், பிற வாகனங்களும் சிதைந்த நிலையில் இக்கோயிலில் உள்ளன. இங்குள்ள பிள்ளையாரின் மூல விக்கிரகம் இராமகிருட்டின மடத்துச் சாலையில் உள்ள தர்க்காவில் கல்லோடு கல்லாக இருந்ததென்றும், ஆற்காடு நவாபு, கோவளம் தர்க்காவிற்குச் செல்லும் வழியில், அந்தக் கல்லில் குதிரையைக் கட்டினாரென்றும், அப்போது குதிரைக்கு வலி வந்ததென்றும் கூறுவர். அக்கல்லிலிருந்து அவிழ்த்து விட்ட வுடன் அதற்கு வலி நின்றது. அக்கல் என்னவென்று புரட்டிப் பார்த்தபோது அது பிள்ளையார் சிலையாக இருந்ததென்றும், அந்தச் சிலையை அடைஞ்சான் முதலி தெருவில் இருக்கும் ஒரு முதலியார் எடுத்துக் கோயில் கட்டினார் என்றும் கூறுவர். பாமர மக்கள் இக்கோயிலை ஆயிரத்தோர் பிள்ளையார் கோயில் என்று வழங்குவர்.[30]

சித்தேரி விநாயகர் கோயில்

இக்கோயில் கேசவப் பெருமாள் சந்நிதித் தெருவில் உள்ளது. முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் இக்கோயில் கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். இங்குள்ள பிள்ளையார் மகா கணபதி யாவார். இவ்விநாயகரைச் சித்திரை விநாயகர் என்று இ.மு. சுப்பிரமணிய பிள்ளை குறிப்பிடுகின்றார்.[31] குருக்கள் நாள் தோறும் இருவேளை பூசை செய்கின்றார். துளுவ வெள்ளாள இனத்தைச் சேர்ந்த அறங்காவலர் இதனை நிருவகித்து வரு கிறார். கோயிலுக்குச் சொந்தமான கடைகளிலிருந்து வரும் வாடகையே வருவாயாக உள்ளது.

வரசித்தி விநாயகர் கோயில்

இக்கோயில் அப்பு முதலி தெருவில் உள்ளது. சுமார் 300 ஆண்டுகட்கு முன்னர் அப்பு முதலியார் என்பவரால் இக்கோயில் கட்டப்பட்டது. மூலவர் அமர்ந்த நிலையில் உள்ளார். உற்சவ விக்கிரகம் இல்லை. நாள்தோறும் வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. அப்பு முதலியாரின் பரம்பரையினர் இக்கோயிலை நிருவகித்து வருகின்றனர்.

தெங்கூர் செல்வ விநாயகர் கோயில்

இக்கோயில் தெற்கு மாடவீதியில் வெள்ளீசுவர் கோயிலில் உள்ளது. முதலில் இக்கோயில் தெருக்குத்து இடத்தில் தோன்றியது. விநாயகருக்கு நேராக இருக்கும் தெரு, தெங்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு என்றே அழைக்கப்படுகின்றது. இக்கோயில் ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர்ச் செங் குந்த இனத்தவரால் கட்டப்பட்டதாகும். வெள்ளீசுவரர் கோயிலின் தலைவாசலுக்கு நேரே உயரே இருப்பவர் சித்தி புத்தி விநாயகர். அவருக்குச் சிறிது கீழே இருப்பவர் தெங்கூர் செல்வ விநாயகர். நாள்தோறும் நான்கு கால பூசை குருக்களால் செய்யப் படுகின்றது. இச்சந்நிதி இப்போது வெள்ளீசுவரர் கோயிலிலேயே அடங்கியுள்ளது. செங்குந்த இனத்தைச் சேர்ந்த அறங்காவலர் குழுவால் நிருவகிக்கப்படுகின்றது. வீடுகள், நிலங்கள் ஆகிய வற்றிலிருந்தும் உண்டியல் மூலமாகவும் வருவாய் வருகின்றது.

செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில்

இக்கோயில் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது. நூறு ஆண்டுகட்கு முன்னர்க் கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். இங்கு அமர்ந்த நிலையில் பிள்ளையார் இருக் கிறார். காலை, மாலை இரு வேளைகளிலும் குருக்களால் பூசை நடத்தப்படுகின்றது. விநாயக சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அறங்காவலர் குழுவால் இக்கோயில் நிருவகிக்கப்படுகின்றது. கோயிலுக்குச் சொந்தமான கடை களிலிருந்தும் உண்டியல் மூலமாகவும் வருவாய் கிடைக்கின்றது. திருமயிலை தமிழ் உபாத்தியாயர் தாண்டவராயச் செட்டியார் என்பவர் ஆசிரிய விருத்தத்தில் பத்துப்பாடல்கள் அடங்கிய ‘திரு மயிலைச் செங்கழுநீர் விநாயகர் பதிகம்’ என்னும் நூலைப் பாடி கி. பி. 1885இல் வெளியிட்டுள்ளார்.[32]

பரிபூரண விநாயகர் கோயில்

பரிபூரண விநாயகர் கோயில் தெருவில் இக்கோயில் உள்ளது. ஏறக்குறைய 130 ஆண்டுகளுக்கு முன்னர், மதுரைமுத்து முதலி யார் என்பவர் இக்கோயிலைக் கட்டினார். மூலவர் அமர்ந்த நிலையில் இருக்கிறார். உற்சவச் சிலை பஞ்சலோகத்தில் இருக் கிறது. ஆனால் வீதிவலம் வருவதில்லை. மதுரைமுத்து முதலி யாரின் சந்ததியினர் நாள்தோறும் காலையில் மட்டும் வழிபாடு நடத்துகின்றனர். இக்கோயில் வீட்டுக் கோயிலாக உள்ளது.

மதுரைமுத்து முதலியார் பரம்பரையில் வந்த திரு. கோதண்ட ராமன் கோயிலை நிருவகித்து வருகிறார். கோயிலுக்குத் தனிப் பட்ட வருவாய் எதுவும் இல்லை. பரம்பரை அறங்காவலரின் சொந்தச் செலவில் வழிபாடு நடத்தப் பெறுகின்றது.[33]

மாவடி விநாயகர் கோயில்

இக் கோயில் மாவடி விநாயகர் கோயில் தெருவில் உள்ளது. நூறாண்டுகளுக்கு முன்னர்க் குயவர் இனத்தினரால் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. மூலவர் அமர்ந்த நிலையில் இருக்கிறார். பண்டார இனத்தைச் சேர்ந்தவர், நாள்தோறும் ஒருவேளை வழி பாடு செய்கிறார். விநாயகர் சதுர்த்தி சிறப்பாக நடைபெறு கிறது. அறங்காவலர் குழுவால் இக் கோயில் நிருவகிக்கப் படுகின்றது. கோயிலுக்குரிய சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வாடகையே வருவாயாகும்.

வினைதீர்த்த கற்பக விநாயகர் கோயில்

இக் கோயில் பிரசன்ன விநாயகர் கோயில் தெருவில் உள்ளது. கி. பி. 1906ல் முருகேச முதலியார் என்பவர் இதனைக் கட்டினார். 1924இல் பக்தர்களால் மேற்கொண்டு திருப்பணிகள் செய்யப் பட்டன. மூலவர் அமர்ந்த நிலையில் உள்ளார். நாள்தோறும் குருக்கள் மூலம் ஒரு வேளை வழிபாடு நடத்தப்படுகின்றது. பரம்பரை அறங்காவலரால் இக் கோயில் நிருவாகம் செய்யப் பட்டுவருகிறது.

ஞானஜோதி நர்த்தன விநாயகர் கோயில்

முண்டகக் கன்னியம்மன் கோயில் தெருவில் இப் பிள்ளை யார் கோயில் உள்ளது. இன்றைக்குச் சுமார் 56 ஆண்டுகளுக்கு முன்னர் அப்பாதுரை நாயக்கர் என்பவரால் இக் கோயில் கட்டப் பட்டது. நடனமாடுகின்ற நிலையில் பிள்ளையார் உருவச் சிலை உள்ளது. பூசாரி ஒருவர் நாள்தோறும் ஒருவேளை பூசை செய் கிறார். விநாயக சதுர்த்தி இங்குச் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. பரம்பரை அறங்காவலரால் இக் கோயில் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது.

வரசித்தி விநாயகர் கோயில்

இக் கோயிலும் முண்டகக் கண்ணியம்மன் கோயில் தெருவில் உள்ளது. ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்னர் இக் கோயில்

கட்டப்பட்டது என்கின்றனர். மூலவர் அமர்ந்த நிலையில் இருக்கிறார். குருக்கள் ஒருவர் நாள்தோறும் ஒருவேளை பூசை செய்து வருகிறார். வெள்ளிக்கிழமை தோறும் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி, கார்த்திகை தீபம் ஆகிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

பொய்யா வரசித்தி விநாயகர்

செயின்ட் மேரி சாலையும் மௌபரீசு சாலையும் சந்திக்குமிடத்தில் இக்கோயில் உள்ளது. ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்னர், பார்த்தசாரதி முதலியார் என்பவரால் இக் கோயில் கட்டப்பட்டது. மக்கள் இப் பிள்ளையாரைக் கஞ்சித் தொட்டிப் பிள்ளையார் என்றழைக்கின்றனர். இக் கோயிலைக் கட்டியவர் அக் காலத்தில் இங்கே ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றித் தானம் செய்ததால் கஞ்சித் தொட்டிப் பிள்ளையார் என்ற பெயர் வந்ததாகக் கூறுகின்றனர். இங்குள்ள பிள்ளையார் வடக்குப் பார்த்த நிலையில் இருக்கிறார். இப் பிள்ளையாருக்கு வெள்ளிக்கவசம் உள்ளது. முருகன் மயிலுக்குப் பக்கத்தில் நின்ற நிலையில் உள்ள கற்சிலையும் இங்கே வழிபடப்படுகின்றது. இச் சிலையைப் 'பாண்டையார் வீட்டினர்' என்பவர்கள் தந்ததாகக் கூறுகின்றனர். நாள்தோறும் காலை ஒரு வேளை மட்டும் பார்த்தசாரதி முதலியார் பரம்பரையில் வந்தவர்கள் பூசை செய்கின்றனர். விநாயகர் சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. மயிலைக் கபாலீசுவரர் கோயில் அறுபத்து மூவர் விழாவின் போது இப்பொழுதும் இங்கே கஞ்சி ஊற்றுகின்றனர். தனியாருக்குரிய இக் கோயிலைப் பார்த்தசாரதி முதலியார் பரம்பரையில் வந்த திரு. லோகநாதன் என்பவர் நிருவகித்து வருகிறார்.[34]

நவசக்தி விநாயகர் கோயில்

இக் கோயில் லஸ் முனையில் உள்ள நடைபாதையில் இருக்கிறது. இக் கோயில் 1967இல் கட்டப்பட்டதாகும். 22.1.1967 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. மூலவர் அமர்ந்த நிலையில் கிழக்கு நோக்கி இருக்கிறார். குருக்கள் மூலம் நான்கு வேளை பூசை நடைபெறுகின்றது. விநாயகர் சதுர்த்தி, தமிழ் ஆண்டுப் பிறப்பு முதலான சிறப்பு நாட்களில் விழா நடத்தப்படுகின்றது. இங்கு மக்கள் பெருமளவில் கூடி வழிபடுகின்றனர். அறங்காவலர் குழுவால் இக் கோயில் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. பக்தர்கள் காணிக்கையும், உண்டியலில் கிடைக்கும் பொருள்களும்

கோயிலுக்குரிய வருவாயாகும்.[35] இவை தவிரப் பிரசன்ன விநாயகர், சுந்தர விநாயகர், செல்வ விநாயகர், வடக்கூர் செல்வ விநாயகர், சித்தி விக்னேசுவார் முதலான பல பிள்ளையார் கோயில்கள் திருமயிலையில் இருக்கின்றன.

கூத்தாடும் பிள்ளையாருக்கு முற்காலத்தில் தனியாகக் கோயில் இருந்தது என்று கூறுகின்றனர். இப்பொழுது இப்பிள்ளையார் கபாலீசுவரர் கோயிலுக்குள் கிழக்குக் கோபுர வாயிலினுள் நுழைந்தவுடன் கிழக்கு நோக்கியவாறு காட்சி அளிக்கிறார். இப் பிள்ளையார் பற்றிய செய்தி, கபாலீசுவரர் கோயில் பற்றிக் கூறும் பகுதியில் விளக்கப்படும்.

திருமயிலைச் சிவன் கோயில்கள்

சிவன்

'சிவம்' என்னும் சொல்லுக்கு நன்மை, மங்களம், முத்தி எனப் பொருள் கூறினாலும். சிவன் என்னும்போது சிறப்பாக ஒலிக்கப்படுவது செம்மை என்ற பொருளேயாகும்.

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனி எம்மான்[36]

என்று அப்பரும்,

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட
திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும் அடியேன்[37]

என்று சுந்தரரும்,

செம்மையே ஆய சிவபதம்[38]

என்று மாணிக்கவாசகரும் கூறுவது இதனைப் புலப்படுத்தும்.

'எல்லாப் பொருள்களையும் கடந்த நிலையிலும், எல்லாப் பொருள்களிலும் ஊடுருவியும் நிற்கும் பரம்பொருளையே 'சிவன்' எனக் கூறினாலும், அப் பரம்பொருள் நம்மோடு தொடர்பு கொள்ள எடுத்துக்கொண்ட திருக்கோலமும் அத் திருக்கோலத்தைக் குறிக்கும் திருநாமமும் இங்குப் பரம்பொருளைச் 'சிவன்' எனக் குறித்ததற்குக் காரணமாகும்' என்பர் அறிஞர்.[39]

சைவம்

சைவம் சிவனுடன் சம்பந்த மாவது என்பர் திருமூலர். சிவனுடைய திருக்கோலத்தின் வாயிலாகவும், சிவநாமத்தின் வாயிலாகவும் இறைவனிடம் பக்தி கொண்டு வாழ்தலே சைவம் என்பர் சிவபெருமானை உயிர்கள் அடைந்து உய்வதற்குரிய தூய்மை, அருள், அறிவு முதலியவற்றை அங்கங்களாகக் கொண்டு பேரின்பத்தைத் தருவதாகிய சமயம் சைவ சமயம் எனப்படும். சைவத்தில பதி-பசு-பாசம் என்னும் முப்பொருள் உண்மை மிகவும் விளக்கமாகப் பேசப்படுகின்றது. இவற்றை இறை, உயிர், தளை எனவும் கூறுவர். இவை மூன்றும வேறு வேறாக என்றும் நிலை பெற்றுள்ளவையென இதில் கூறப் பட்டுள்ளது.

சிவ வழிபாடு

சிவலிங்க வழிபாடு, பழமையும் பெருமையும் வாய்ந்ததாகும். மொகஞ்சதாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில் நிகழ்ந்த அகழ்வு ஆராய்ச்சிகளில், மிகப் பல சிவலிங்கத் திருவுருவங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. அதனால் சற்றேறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிக காலத் திற்கு முன்னரே, சிவலிங்க வழிபாடு பாரத நாட்டில் பரவி இருந் தமை புலனாகின்றது.

சிவலிங்கம்

சிவலிங்கத்தின் அமைப்பைக் கொண்டு இரு பிரிவாக விளக் குவர். அடிப்பகுதி தேவியைக் குறிப்பதென்றும் மேற்பகுதி சிவனைக் குறிப்பதென்றும் கூறுவர்.

இலிங்கம் என்பதற்கு அடையாளம் என்று பொருள். 'இயற்கையின் நுட்பத்தினை இனிது ஆராய்ந்துணர்ந்த அடிப் படையிலேயே, நம் முன்னோர்கள் இறைவனின் திருவடை யாளங்களுள் ஒன்றாகச் சிவலிங்கத்தினைத் தேர்ந்தெடுத்து அமைத்துள்ளனர். நாகலிங்கப் பூ என்பதன் நல்லமைப்பை உற்று நோக்கி உணரும்போது, இவ் வுண்மை செவ்விதிற் புலனாகிறது. மேலும், வடக்கே இமயமலைக்கு அணித்தேயுள்ள அமரநாதம் என்னும் புனிதத் தலத்தில், இயற்கையாகவே பனிக் கட்டியினாலும் சிவலிங்கத் திருவுருவம் அமைந்து விளங்கும்

திறனும், உன்னுந்தோறும் நமக்கு உள்ளத்தில் வியப்பும் விம்மிதமும் விளைவிக்கிறது. இவ்வாற்றால் இறைவனின் இயற்கைத் திருவுருவம் சிவலிங்கமே ஆகும் என்பதனை நாம் தெள்ளிதின் அறிகிறோம்' என்று ந.ரா. முருகவேள் சிவலிங்கம் என்பதற்கு விளக்கம் தருகிறார்.[40]

இறைவனின் திருவுருவை அருவம், அருவுருவம், உருவம் என மூன்றாகப் பாகுபாடு செய்து விளக்குவர். சித்தாந்த நூல்கள் சிவலிங்கவுருவை அருவுருவத் திருமேனியாகக் குறிப்பிடுகின்றன. சிவலிங்கத்திலிருந்தே இறைவனின் ஏனைப் பல திருவுருவங்கள் வளர்ந்தன என்று கூறுவர்.

சங்க காலத்தில் சிவ வழிபாடு

சங்க காலத்தில் சிவன் ஒரு நிலத்திற்குமுரிய தெய்வமாகக் கருதப்படவில்லை என்பதைத் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா உணர்த்துகிறது.[41] சங்க இலக்கியங்களில் சிவனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் 'சிவன்' என்ற பெயர் அந்த இலக்கியங்களில் வழங்கப்படவில்லை. ஆகவே, சங்க காலத்திலே சிவ வழிபாடு அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை எனக் கொள்ளலாம். 'ஏழாம், எட்டாம் நூற்றாண்டில் சைவ நாயன்மாரும் வைணவ ஆழ்வாரும் தொடங்கிய சமய மறுமலர்ச்சியின் பயனாகவே சிவன் சிறப்புற்றுத் திகழ்ந்தான்' என்பது சு. வித்தியானந்தத்தின் கருத்தாகும்.[42]

திருக்கோயில் வழிபாடு

பசுவின் உடம்பெல்லாம் பால் பரவியிருந்தாலும், அது சுரப்பதற்கு உரிய இடத்திலிருந்தே கன்றுக்கும் மக்களுக்கும் கிடைக்கிறது. அதுபோல, இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும் திருக்கோயில்களிலுள்ள திருவுருவங்களின் வழியாகவே அருளைச் சுரக்கிறான் என்பர்.

குறைந்த அளவில் ஒரு திருக்கோயில் கருவறையில் சிவலிங்கப் பிரதிட்டையும் கருவறையின் வெளியில் அதன் முன்பாக நந்தியும் அடுத்துப் பலிபீடமும் அமைந்திருக்க வேண்டும் என்பர். பலிபீடத்தை அடுத்துக் கொடிக் கம்பம் இருக்கும். பிற்காலத்தில் பல பிரகாரங்களோடும் மண்டபங்களோடும் அமைந்த பெருங் கோயில்களையும் சைவர்கள் கட்டியுள்ளனர்.

திருமயிலைச் சிவன் கோயில்கள்

ஏழு சிவன் கோயில்களைக் கொண்டிருப்பதன் காரணமாகச் சைவ வாழ்க்கைக்கு ஏற்ற சைவச் சூழ்நிலையைத் திருமயிலை பெற்றிருக்கிறது. அச் சிவன் கோயில்களைப் பற்றிய செய்திகள் இங்கே விளக்கப்படுகின்றன.

கபாலீசுவரர் கோயில்

திருமயிலையிலுள்ள சிவன் கோயில்களில் புகழ் பெற்றதும், இலக்கியம் பெற்றதுமாகக் கபாலீசுவரர் கோயில் இருப்பதால், அடுத்த இயலில் அதன் சிறப்பும் திருவிழாக்களும் தனியாகக் கூறப் பெறுகின்றன.

வெள்ளீசுவரர் கோயில்

இத் திருக்கோயில் கபாலீசுவரருடைய தெற்கு மாடவீதியில் வடக்குப் பக்கத்தில் தெற்கு நோக்கி இருக்கிறது. இக் கோயில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்ச் செங்குந்த வகுப்பினரால் கட்டப்பெற்றது என்று கூறுகின்றனர்.[43] இங்குள்ள இறைவன், சுக்கிரன் (வெள்ளி) நிலைநிறுத்தி வணங்கியதால் வெள்ளீசுவரன் என்றும் பெயர் பெற்றான் என்று தல புராணங்களும் சிற்றிலக்கியங்களும் கூறுகின்றன. இப் பெயர் மருவி வள்ளீசுவரர் கோயில் என்று வழங்கிறது. இக்கோயிலுக்குத் தெங்கூர் செல்வ விநாயகர் கோயில் என்றும் பெயர். இங்குள்ள அம்மை காமாட்சி என்று போற்றப் பெறுகின்றார். கோயிலில் தலைவாசலுக்கு நேரே உயரே இருப்பவர் சித்திபுத்தி விநாயகர். அவருக்குக் கீழே இருப்பவர் தெங்கூர்ச் செல்வ விநாயகர். மற்றும் முத்துக் குமாரசாமி, சுக்கிரன், சனீசுவரர், நவக்கிரகங்கள் ஆகிய தெய்வங்களும் இக் கோயிலில் உள்ளன. இக் கோயிலுக்குரிய தீர்த்தம், சுக்கிர தீர்த்தம் என்று தலபுராணங்கள் கூறுகின்றன. இது மயிலையிலுள்ள தீர்த்தங்களுள் ஆறாவதாகும். நாள் தோறும் நான்கு வேளை, குருக்கள்மூலம் பூசை நிகழ்த்தப் பெறுகின்றது. வைகாசித் திங்களில் பிரம்மோற்சவம் நடத்தப் பெறுகின்றது. எட்டாம் நாள் திருவிழாவில் சுக்கிரனுக்குக் கண் பார்வை அளிக்கும் திருவிழா நடைபெறுகின்றது. வைகாசித் திங்கள் பௌர்ணமியில் தீர்த்தம் தரும் பெருவிழா இங்கே நடைபெறுகின்றது. வனபோஜனத் திருவிழாவும் குறிப்பிடத் தகுந்ததாகும். செங்குந்தர் குலத்தைச் சேர்ந்த அறங்காவலர் குழுவால் இக் கோயில் நிருவகிக்கப்படுகிறது. கோயிலுக்குச் சொந்தமான

வீடுகள், கடைகள், திருமண மண்டபம், தோட்டங்கள் ஆகியவற்றிலிருந்து வரும் வாடகையும், உண்டியல் வருமானமும் வருவாயாக அமைகின்றன. கோயிலுக்குச் சொந்தமாகத் தேர், பல்லக்குகள், வாகனங்கள் ஆகியவை உள்ளன.

கோயிலைப் பற்றிய கதை

மாபலிச் சக்கரவர்த்தி வாமனராக வந்த திருமாலுக்கு மூன்றடி மண் கொடுக்க முன்வந்தபோது, சுக்கிரனாகிய அசுரகுரு அவனைத் தடுத்தார். அப்படியிருந்தும் மாபலி தாரை வார்த்த கெண்டியைச் சுக்கிரன் வண்டாகித் துவார வாயினுள் சென்று அடைந்தார். வாமனர் தருப்பையால் குத்தச் சுக்கிரன் கண்ணிழந்தான். கொடுப்பதைத் தடுத்தலாகிய பெரும் பாவத்தைத் தொலைத்துக் கண்பெறச் சுக்கிரன் இங்கே குளத்தில் தென்கிழக்கில் சிவபெருமானை நினைந்து பெருந்தவம் புரிந்து கண் பெற்றான் என்று தலபுராணம் கூறுகின்றது.

கதைக் குறிப்புள்ள நூல்கள்

அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய திருமயிலைத் தல புராணத்தில் 'சுக்கிரன் பூசித்த சருக்கம்', நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தல புராணத்தில் 'வெள்ளீசர் படலம்' ஆகியவற்றில் சுக்கிரன் வழிபட்ட வரலாறு விளக்கமாகக் கூறப் பெறுகின்றது. மற்ற மயிலைப் பிரபந்தங்களிலும் இக் கதைக் குறிப்புக் காணப்படுகின்றது.

தீர்த்தபாலீசுவரர் கோயில்

இத் திருக்கோயில் இக் காலத்தில் கிருட்டினாம்பேட்டை என்று வழங்குமிடத்தில் டாக்டர் நடேசன் சாலையில் உள்ளது. இக்கோயில் பல்லவர் காலத்தைச் சேர்ந்தது என்றும், கல்வெட்டு ஒன்று உள்ளது என்றும் கூறப்பெறுகிறது.[44] மாசி மகத்தன்று திருமயிலையிலுள்ள ஏழு கோயில் சுவாமிகளும் கடல் நீராட்டு விழாவிற்குச் செல்லும்போது தீர்த்தபாலீசுவரரே முதலில் நீராடுவதால் அக் கடவுளுக்கு அப்பெயர் வந்தது என்கிறார் அம்பை சங்கரன்.[45] 'இத் திருக்கோயில் கடலிலே தீர்த்தம் கொடுக்கச் செல்லும் கபாலீசர் வந்து தங்குமிடம். அந்த இடத்தில் ஏற்பட்டதொரு கோவிலே தீர்த்த கபாலீசர் கோவில். தீர்த்தம் பாலிக்கும் ஈசுவரர் என்று சொல்லி இப் பெருமானைத் தீர்த்த கபாலீசுவரர் என்றும் கூறுகின்றார்கள்' என்கிறார்

இ.மு.சுப்பிரமணிய பிள்ளை.[46] தீர்த்த பாலீசுவரரை அகத்தியர் வழிபட்டுப் பூசை செய்ததால் அகத்தீசுவரர் என்ற பெயரும் உண்டு. அகத்தியருக்கு நோய் தீர்த்து அருள் பாலித்ததால் தீர்த்த பாலீசுவரர் என்ற பெயரும் வழங்கலாயிற்று என்று செவிவழிச் செய்தி கூறுகிறது.[47] இங்குள்ள சிவலிங்க உருவம் நான்கு பட்டை இலிங்கமாகும். சிவபெருமான் கிழக்கு நோக்கி இருக்கிறார். திரிபுரசுந்தரி அம்மன் தெற்கு நோக்கி இருக்கிறாள். இத் திருக்கோயிலுக்குப் பின்னால் ஒரு திருக்குளம் இருக்கிறது. 1960ஆம் ஆண்டுக்கு முன்னர், இக் கோயிலில் புதர் மண்டிக் கிடந்ததால் வழிபாடு நடக்கவில்லை என்றும், தீர்த்த பாலீசுவரர் சன்மார்க்க சங்கம் ஏற்பட்ட பிறகு முறையான வழிபாடு நடைபெற்று வருகிறது என்றும் கூறப்பெறுகிறது. பரம்பரை குருக்கள் ஒருவர் நாள்தோறும் இருவேளை பூசை செய்கிறார். மார்கழியில ஆருத்ராவும், ஆவணியில் விநாயக சதுர்த்தியும், மாசியில் மகமும் சிறப்பாக நடைபெறுகின்றன. பரம்பரை அறங்காவலர் இதனை நிருவாகம் செய்து வருகிறார். கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்தும் கடைகளிலிருந்தும் வரும் வாடகையும் உண்டியலில் சேருவதும் வருவாயாகும்.

கதைக் குறிப்புள்ள நூல்கள்

நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தல புராணத்தில் தீர்த்த பாலீசர் சரித்திரம் பதினேழு பாடல்களில் கூறப்பெறுகிறது. சிவபெருமான், பாற்கடலில் எழுந்த விடத்தை உண்ட கதையை இப் பகுதி கூறுகிறது.

> சித்திரையில் விடந்தீர்த்துச் செல்வனா ருதவினதால்
> நித்தியராய்த் தீர்த்த பாலீசரென நிறைபெற்றே
> யித்திரையி லிந்நாம மினிதவர்க்கு விளங்கினதால்[48]

என்னும் தொடர்களில் பெயர்க் காரணம் கூறப்பெறுகிறது. இக் காரணமும் இந் நூலில் கூறப்பெறும் கதையும் நாதமுனி முதலியாரே இட்டுக்கட்டிய கதையாக இருக்கலாம், ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தல புராணத்திலும், பல்வேறு புலவர்கள் பாடிய மயிலைச் சிற்றிலக்கியங்களிலும் இக் கதை குறிக்கப்பெறவில்லை. இக் கோயிலுக்கு ஒரு தல புராணம் இருந்ததென்றும், அது இப்பொழுது கிடைக்கப் பெறவில்லை என்றும் கூறுகின்றனர்.[49]

காரணீசுவரர் கோயில்

திருமயிலையில் காரணீசுவர புரத்தில் பஜார் சாலையில் இக் கோயில் உள்ளது. இவ்விறைவன் பெயரால் காரணீசுவரர் கோயில்தெரு ஒன்றும் இக்கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் உள்ளது. இக் கோயில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப் பெற்றது என்று கூறுகின்றனர். 'காரணம் என்ற சொல் கடவுளையும் சிவனையும் உணர்த்தும். காரணம் எல்லாவற்றுக்கும் மூலகாரணனாகிய முதற்கடவுள்' என்று காரணீசுவரர் என்னும் பெயருக்கு விளக்கம் தருவர்.[60] இங்குள்ள சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டதாகும். காரணீசுவரர் கிழக்குப் பார்த்த நிலையில் இருக்கிறார். இறைவனுக்கு இடப்புறம் வட கிழக்குப் பகுதியில் தெற்குப் பார்த்தவாறு பொற்கொடியம்மை வீற்றிருக்கிறாள். இவ் வம்மைக்குரிய வடமொழிப் பெயர் 'சுவர்ணலதாம்பிகை' என்பதாகும். நாள்தோறும் இரு வேளை பூசை குருக்கள் மூலம்செய்யப்பெறுகின்றது. ஆவணியில் விநாயக சதுர்த்தியும், கார்த்திகையில் கார்த்திகைத் தீபமும், ஐப்பசியில் கந்த சஷ்டியும், மார்கழியில் திருவாதிரையும், மாசியில் மாசி மகமும், பங்குனியில் திருக்கல்யாணமும் ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. அறங்காவலர் ஒருவரால் இக் கோயில் நிருவகிக்கப்பட்டு வருகிறது. நிலங்களிலிருந்தும் கடைகளிலிருந்தும் வரும் வருவாயைக் கொண்டு இக் கோயில் நிருவாகம் நடைபெறுகிறது.

கோயிலைப் பற்றிய கதை

சிந்து நதியின் தென்பக்கம் பத்மபுரி என்னும் ஊரிலுள்ள பசுபதி என்னும் அந்தணனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் தனஞ்சயன். அவன் வயது வந்ததும் மதுகாந்தி என்னும் பெண்ணை மணந்து வாழ்ந்து வந்தான். அருகிலுள்ள மனையில் வாழும் பெண்ணொருத்தி, மதுகாந்தியின் மனத்தைக் கெடுக்க முனைந்தாள். மதுகாந்தி 'நாதனைவிட நண்ணேன் பிறர் சுகம்' என்றாள். தீய எண்ணமுடைய அண்டை வீட்டுப் பெண் மெல்ல மெல்லக் கற்புடைப் பெண்ணின் மனத்தை மாற்றினாள். அவள் தூண்டுதலின்பேரில் மதுகாந்தி பொருளுக்காகப் பிற ஆடவரைக் கூடினாள். கணவன் இதை அறிந்து அவளை வெறுத்து நீங்கினான். தவஞ்செய்வதற்காக மயிலைப்பதி நண்ணினான். சிவலிங்கம் ஒன்றைத் தாபித்து வணங்கினான்.

அன்பினோ டெனை யர்ச்சித்த விக்குறி
யென்றுங் காரணி யீசனென் றோங்கவே[51]

என்று இறைவன் அருள் புரிந்தான். இக் கதையும் நாதமுனி முதலியார் இட்டுக் கட்டிய கதையாகவே தோன்றுகிறது.

கதைக் குறிப்புள்ள நூல்

நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தல புராணத்தில் காரணீசுவரர் சரித்திரம் முப்பத்தேழு பாடல்களில் கூறப் பெறுகின்றது.

கல்வெட்டுகள்

இக் கோயிலில் பன்னிரண்டு கல்வெட்டுகள் உள்ளன. ஆனால், அவை கோயிலின் வரலாற்றை அறிவதற்கு உதவி செய்யவில்லை. திருவான்மியூர் கோயிலுக்குரிய ஆறு கல்வெட்டு கள் இங்குக் காணப்பெறுகின்றன.[52] அவை திருவான்மியூர் இறைவனுக்கு நந்தா விளக்கு வைத்த செய்திகளைக் கூறு கின்றன. பல்லர்புரம் என்று பல்லாவரத்தைக் குறிப்பிடும் கல் வெட்டு ஒன்றும் உள்ளது.[53]

மல்லீசுவரர் கோயில்

திருமயிலையில் மல்லீசுவரர் கோயில் தெருவில்இக் கோயில் உள்ளது. இக் கோயில் நூறு ஆண்டுகளுக்கு முன் சிதம்பர முதலியார் என்பவரால் கட்டப் பெற்றது. இதிலுள்ள மகா மண்டபம் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப்பட்ட தாகும்.[54] இக் கோயில் கிழக்குப் பார்த்தவாறு உள்ளது. இங்குள்ள சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டதாகும். மல்லீசு வரருக்கு இடப்புறம் வடகிழக்குப் பகுதியில் தெற்குப் பார்த்தவாறு மரகதவல்லியம்மை இருக்கிறாள். 'மல்' என்பது வளமை; வழிபடும் அடியார்களுக்கு வளமையை அருள்பவன் மல்லீசன்'.[55] மல்லிவனத்து முனிவர் தாபித்த இலிங்கம். ஆகவே மல்லீசுவரர் என்றழைக்கப் படுகிறது என்று நாதமுனி முதலி யாரின் தல புராணம் கூறு கிறது.[56] 'மல்லீசுவரர் உருவம் மிகப் பழமையானதாகக் காணப்படுகிறது. மல்லரால் கட்டப்பெற்ற கோயில் மல்லீசுவரர் கோயில். பிற்காலப் பல்லவர்கள் தங்களை மல்லர் என்று குறித்துக் கொண்டனர். ஆகவே இக் கோயில் பிற்காலப் பல்லவர் ஒருவரால் கட்டப் பெற்றிருக்க வேண்டும்' என்று எஸ். கல்யாண சுந்தரம் கருதுகிறார்.[57] மக்கள் தொகைக்

கணக்கெடுப்பு நிறுவனம் 1965இல் வெளியிட்ட சென்னை மாநிலக் கோயில்கள் என்னும் நூலில், இக் கோயில் கட்டப்பட்டு நூறாண்டுகள் ஆகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எஸ். கல்யாணசுந்தரம் 1913இல் வெளியிட்ட 'மயிலாப்பூரின் சுருக்கமான வரலாறு' என்னும் ஆங்கில நூலில் இக்கோயில் மிகப் பழமையானது என்று கூறியுள்ளார். கோயிலைக் கட்டி முடித்து ஐம்பதாண்டுகள் ஆகியிருந்தால், அக்கோயிலை அவர் பழைய கோயில் என்று கூறியிருக்க மாட்டார். ஆகவே, அரசு வெளியீட்டில் உள்ள குறிப்பு, அக் கோயில் திரும்பவும் கட்டப் பட்டதைக் குறிப்பதாக இருக்கலாம். இவற்றுள் திரு. கல்யாண சுந்தரம் கூறும் கருத்தும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. இக் கோயிலில் கல்வெட்டுகள் எதுவும் கிடைக்கப் பெற வில்லை. ஆகவே, இடைப்பட்ட நிலையில் இக் கோயில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப்பட்டது என்று கொள்வதே ஏற்புடைத்தாகும். குருக்கள் நாள்தோறும் ஒருவேளை பூசை செய்கிறார். கார்த்திகை தீபம் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. அறங்காவலர் ஒருவர் இக் கோயிலை நிருவகித்து வருகிறார். வீடு, தோட்டம் ஆகியவற்றிலிருந்து வரும் வாடகையே வருவாயாகும்.

கோயிலைப் பற்றிய கதை

அயோத்தி நகரைச் சேர்ந்த அந்தணனுடைய புதல்வனுக்குப் 'பிரார்த்தன்' என்று பெயர். அழியா உடல் பெறக் கருதித் தல யாத்திரை செய்து வந்து மயிலையை வந்தடைந்து சிவலிங்கந் தாபித்துத் தவஞ் செய்தான். தேவர் பொறாமை கொண்டு இந்திரனிடம் சொல்ல, அவன் மேனகையை அனுப்பி அவன் தவத்தைக் கலைக்க ஏற்பாடு செய்தான். மல்லிவனத்தில் தவம் புரியும் முனியை மேனகை வற்புறுத்தினாள். அவன் மறுத்தான்; அவள் உயிர் துறப்பதுபோல் நடித்தாள். முனிவன் அஞ்சி அவளை எடுத்தான். அவள் விழித்து அவனைக் கூடினாள். பிறகு அவன் தவஞ் செய்தலை நீத்தான். கபாலீசுவரரை வணங்கி அருள் வேண்டினான். அவர் 'நீ தாபித்த இலிங்கம் உன் பெயரில் விளங்கும்' என்றார். இவ்வாறு மல்லீசுவரர் பற்றிய கதை நாதமுனி முதலியார் இயற்றிய தல புராணத்தில் கூறப் பெறு கிறது.[58] இக் கதை அவரே இட்டுக் கட்டியதாக இருக்கலாம். ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தல புராணத்தில் இக் கோயில் பற்றிக் கூறப்பெறவில்லை. மயிலைச் சிற்றிலக்கியங் களிலும் இக்கோயிலைப் பற்றிய குறிப்புகள் இல்லை.

நூல்

நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தலபுராணத்தில் 'மல்லீசர் சரித்திரம்' என்னும் தலைப்பில் நாற்பது பாடல்கள் உள்ளன.[59]

விருபாட்சீசுவரர் கோயில்

இச்சிவன் கோயில் மயிலையிலுள்ள விருபாட்சீசுவரர் கோயில் தெருவில் உள்ளது. இக் கோயில் மிகவும் பழமையானது. திருஞானசம்பந்தரால் உயிர் பெற்ற பூம்பாவையின் தந்தை சிவநேசச் செட்டியாரால், முற்காலத்தில் இக் கோயில் நிருவாகம் செய்யப் பெற்றது என்று நம்பப்படுவதால், இது கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கக் கூடும்.[60] இக் கோயில் விஜயநகர அரசர் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும் என்று எஸ். கல்யாணசுந்தரம் கருதுகிறார்.[61] விருபாட்சீசுவரர் விஜய நகர அரசர்கள் போற்றி வணங்கிய தெய்வமாகும். இங்குப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள சிவலிங்கத்திற்கு விருபாட்சீசுவரர் என்று பெயர். இவர் கிழக்குப் பார்த்தவாறு இருக்கிறார். இங்குள்ள அம்மை விசாலாட்சி என்று அழைக்கப் பெறுகிறார். இங்கு நடராஜர், சிவகாமி, மாணிக்கவாசகர், உமாமகேசுவரர், முருகர் வள்ளி தெய்வ யானை, சந்திரசேகரர் ஆகியோரின் உற்சவ மூர்த்திகள் உள்ளன. விருபாட்சீசுவரர் என்பதற்குப் பொருள், விருபம் - இயற்கைக்கு மாறானது; அட்சம்-கண்; ஆகவே, நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் என்று பொருள்படும். இக் கோயிலுக்குரிய குளம் 'சிவகங்கை' என்றழைக்கப்படுகின்றது. நாள்தோறும் காலை மாலை ஆகிய இரு வேளைகளில் பரம்பரை குருக்கள் மூலம் பூசை செய்யப் படுகின்றது. கந்த சஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி ஆகிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. அறங்காவலர் ஒருவர் இதனை நிருவகித்து வருகிறார். கோயிலுக்குரிய வீடுகள் கடைகளிலிருந்து வரும் வாடகை வருவாயாகும். இக் கோயிலுக்குள் இரண்டு மர வாகனங்கள் உள்ளன.

கோயிலைப் பற்றிய கதை

பின்னவர் குலத்தில் பிறந்த பிரியன் என்பவன் அருள் வேண்டி, திருவொற்றியூர் சேர்ந்து இறைவனை வணங்கிப் பூசைசெய்து வந்தான். பொது மகள் ஒருத்தி அவன் மனத்தை மாற்றினாள். அவன் அவளை மனைவியாகக் கொண்டு

வாழ்ந்தான். அவள் சூதில் பொருள் தொலைத்துப் பின்னர்த் தடத்தில் விழ்ந்து உயிர் துறந்தாள். அவன், அவள் இறந்தது அறியாது தேடிக் கண்டுபிடித்தவுடன் வருந்தினான். மயிலைத் தவசி ஒருவர், சிவபிரான் பூசைக்காகத் தக்க நல் வில்வம் தந்து தமியனோடு உண்டு வாழ்ந்தார். அவன் வில்வத்தைப் பறித்து முனிவர்பால் வைக்கும் பணியைச்செய்து வந்தான். ஒரு நாள் வில்வம் பறிக்கும்போது கீழே விழுந்து உயிர் துறந்தான். வில்வம் கொண்டு பூசை செய்ததால் சிவன் அவனைக் கயிலை சேரக் கட்டளையிடும்போது, யமதூதர் அவனைக் கொண்டு சென்று துன்புறுத்த முயன்றனர்; சிவபெருமான் அவனைக் காத்தருளினார்.[62] இங்குச் சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயிலே விருபாட்சீசுவரர் கோயில்.

கதைக் குறிப்புள்ள நூல்

நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தல புராணத்தில் 'விருபாட்சீசுவரர் சரித்திரம்' என்னும் பகுதியில் முப்பத்தைந்து பாடல்கள் உள்ளன.

கல்வெட்டுகள்

இக் கோயிலில் இருபது கல்வெட்டுகள் உள்ளன. அவை வேறு கோயில்களுக்கு உரியவை. அவை கோயில் வரலாற்றையோ மயிலை வரலாற்றையோ அறிந்துகொள்ள உதவவில்லை. இங்குள்ள கல்வெட்டுகள் கி. பி. பதினொன்றிலிருந்து பதினாறாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியைச் சேர்ந்தவையாகும். திருவான்மியூர் கோயிலுக்குரிய கல்வெட்டு ஒன்றும்,[63] திருவான்மியூர் வட வீர சாயிதிக்காறன் மடத்திற்குரிய கல்வெட்டு ஒன்றும்,[64] இரண்டாம் இராஜாதிராஜனின் மெய்க் கீர்த்திப் பகுதி அடங்கிய கல் வெட்டு ஒன்றும்,[65] திருப்பூம்பாவை நாயனாரையும் அஞ்சு வண்ண வணிகர்களையும் குறிக்கும் கபாலீசுவரர் கோயிலுக்குரிய கல்வெட்டு ஒன்றும்,[66] இங்குள்ள கல்வெட்டுகளில் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

வாலீசுவரர் கோயில்

திருமயிலையிலுள்ள காரணீசுவரர் கோயில் தெருவின் நடுவில் தெற்குப் பகுதியில் உள்ளது. இக் கோயில் நானூறு ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப்பெற்றதாகும். வாலி பூசித்ததால் வாலீசுவரர் எனப்பட்டார். இங்குள்ள சிவலிங்கம் சுயம்பு

வடிவம் என்று கூறுகின்றனர். வாலீசுவரர் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். இங்குள்ள பெரிய நாயகி அம்மை தெற்கு நோக்கி இருக்கிறாள். இக் கோயிலில் மேலும் பத்து மூல விக்கிரகங்களும் எட்டு உற்சவ மூர்த்திகளும் உள்ளன. இங்கே வாலிக்கும் சிலை எடுக்கப்பட்டுள்ளது. வாலி பெயரால் கபாலீசுவரர் கோயிலுக்கு வடதிசையில் வாலி தீர்த்தம் உள்ளது. இங்குப் பங்குனித்திங்கள் செவ்வாய்க்கிழமை விதிபாதயோகத்தில் வியாழக்கிழமையில், சிறப்பாகிய அமரபட்சத்து அட்டமி திதியில் சனிக்கிழமையில் விதியுடன் நீராடுபவர் பிறவிக்கடலைக் கடப்பர். இது திருமயிலையின் நான்காம் தீர்த்தமாகும் என்று தலபுராணம் கூறுகிறது.[67] இக் கோயிலை ஒட்டி ஒரு குளம் இருந்தது. அது தூர்க்கப்பட்டு அவ்விடத்தில் வீடுகள் தோன்றி உள்ளன[68]. நாள்தோறும் ஒருவேளை பூசை குருக்களால் செய்யப் படுகின்றது. கார்த்திகை தீபம், ஆருத்ரா, விநாயக சதுர்த்தி ஆகிய திருவிழாக்கள் இக் கோயிலில் நடைபெறுகின்றன. இக் கோயில் அறங்காவலர் குழுவால் நிருவகிக்கப்படுகிறது. வீடு, கிடங்கு ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வாடகையே வருவாயாகும். 1922இல் செய்யப்பட்ட பெருச்சாளி வாகனம் ஒன்று கோயிலில் உள்ளது.

கோயில் பற்றிய கதை

வாலியென்பான் திருமயிலைக்கு வந்து பர்ணசாலை கட்டிக் கொண்டு கபாலீசுவரரைப் பூசித்து வந்தான். அவன் பெயரால் இக் கோயில் விளங்குகிறது.

கதைக் குறிப்புள்ள நூல்

நாதமுனி முதலியார் இயற்றிய தல புராணத்தில் வாலீசர் படலம் என்னும் பகுதியில் காப்புச் செய்யுள் ஒன்றோடு சேர்ந்து முப்பத்திரண்டு பாடல்கள் உள்ளன.

கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருபத்தோரு கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் திருவான்மியூர் கோயிலுக்கு உரியவை நான்கும்,[69] முதற் குலோத்துங்க சோழனுடைய மெய்க்கீர்த்திப்பகுதி அடங்கியவை இரண்டும்,[70] முதல் இராசாதிராசனின் மெய்க்கீர்த்திப் பகுதி அடங்கியது ஒன்றும்,[71] தெலுங்கச் சோழர் விஜயகண்ட கோபால தேவரைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்றும் குறிப்பிடத் தக்கவையாகும்.[72]

சப்த விடங்கப் பதிகள், சப்த தானங்கள் என்பன போன்றே திருமயிலையிலுள்ள கபாலீசுவரத்தைத் தலைமையாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட ஏழு கோயில்கள் சிறந்து விளங்கி வருகின்றன.

இவை தவிர அப்பர் சுவாமி கோயில், வீரபத்திர சுவாமி கோயில் என்னும் சைவருக்குரிய கோயில்களும் மயிலையில் உள்ளன.

அப்பர் சுவாமி கோயில்

இக் கோயில் வடக்கு மயிலாப்பூரில் இராயப்பேட்டை நெடுஞ் சாலையில் ஆஞ்சனேயர் கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் உள்ளது. நெடுஞ்சாலையிலிருந்து அப்பர் சுவாமி கோயில் தெரு மேற்கே செல்லுகிறது. இக் கோயில் கி. பி. 1855இல் திரு சிதம்பரசுவாமி களால் கட்டப்பெற்றது என்று கூறுகின்றனர். திருநாவுக்கரசர் இயற்கை எய்தியதைத் தொடர்ந்து அவர் பெயரால் கட்டப் பெற்ற கோயில் என்று கூறுகின்றனர். இதனை அப்பர் மடம் என்றும் அழைப்பர். இங்குள்ள சிவலிங்கம் பிரதிட்டை செய்யப் பெற்றதாகும். இச் சிவலிங்கத்தை அப்பர் சுவாமி என்றும், காசி விசுவநாதர் என்றும் அழைக்கின்றனர். இங்குள்ள அம்மை விசாலாட்சி என்றழைக்கப்படுகிறாள். பிள்ளையார், முருகன், நடராஜர் திருவுருவங்களும் இருக்கின்றன. நாள்தோறும் குருக்கள் மூலம் மூன்று வேளை பூசை செய்யப்படுகின்றது. கார்த்திகை தீபம், அன்னாபிடேகம், ஆருத்ரா, மாணிக்கவாசகர் உற்சவம், குருபூசை ஆகியவை ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள் ஆகும். இவற்றுள் குரு பூசை சிறப்பாகக் கொண் டாடப்படுகின்றது. இக்கோயிலுக்கு இருபத்தைந்து வீடுகளும் நிலங்களும் உள்ளன. இவற்றிலிருந்து வரும் வாடகை வருவா யாக உள்ளது. இக் கோயிலுக்குத் தேர், பல்லக்கு, இரண்டு வாகனங்கள் ஆகியவை உள்ளன. இவை ஐம்பதாண்டுகட்கு முன்னர்ச் செய்யப்பட்டவையாகும்.

கோயிலைப் பற்றிய குறிப்புள்ள நூல்

திருமயிலை அறுபத்து மூவர் வழிநடைச் சிந்து என்னும் நூலில்

அப்பர் மடம் இது அன்புடனே சேவிப்பாய்

என்று குறிப்பிடப்படுகின்றது.[73]

வீரபத்திர சுவாமி கோயில்

திருமயிலை மாதவப் பெருமாள் கோயில் தெருவில் இக் கோயில் உள்ளது. இக் கோயில் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப்பட்டதாகும். மூலவர் நாலரை அடி உயரத்தில் வடக்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். குருக்கள் மூலம் நாள் தோறும் இரண்டு கால பூசை நடைபெறுகின்றது. சிவராத்திரி யன்று அன்னாபிடேகம் சிறப்பாக நடத்தப்பெறுகின்றது. கோயிலுக்கு அசையாச் சொத்துகள் உள்ளன. ஆனால் அவை தனியார் பொறுப்பில் இருக்கின்றன. மிகக் குறைந்த வருவாயே வருகின்றது. அறங்காவலர் குழுவால் இக் கோயில் நிருவகிக்கப் படுகிறது.

பெருமாள் கோயில்கள்

திருமால்

தென்னாட்டுக்குரிய முல்லைநிலத் தெய்வமான மாயோனே திருமாலாவான். மால் என்பதற்குப் பெரியோன் என்றுபொருள், திரு என்னும் அடைமொழியோடு சேர்த்துத் திருமால் என்று மாயோன் வழங்கப்படுகின்றான். இவனே விட்டுணுவாகவும் கண்ணனாகவும் காட்சியளிக்கின்றான். முல்லைப் பாட்டின் மூன்றாம் அடியில் ‘மால்’ என்ற சொல் காணப்படுகிறது.[74] மாயோன் என்பதற்குக் கரியவன் என்றும், விட்டுணு என்ற சொல்லுக்கு எங்கும் நிறைந்தவர், யாவையும் படைத்துக காத்து வருபவர் என்றும் பொருள். திருமால் மும்மூர்த்திகளுள் ஒருவ ராவார்.

வைணவம்

வைணவம் என்பதற்கு விட்டுணுவைக் கடவுளாகக்கொண்டு வழிபடும் சமயம் என்பது பொருளாகும். இச் சமயம் வடகலை, தென்கலை என இருவகைப்படும். வடகலையார் வடமொழியில் உள்ள வேத சாத்திரங்களுக்கு ஏற்றங்கொடுப்பர். தென்கலை யார் தமிழ் மொழியிலுள்ள ஆழ்வாராதிகளின் வாக்குகளுக்குச் சிறப்பிடம் தருவர். வைணவம் கூறும் முக்கியப் பொருள்கள் ஐந்து. அவை அடைபவன் - சீவன், அடையப்படுவது - விட்டுணு. பயன் - முடிவிலா இன்பம், உபாயம் - பக்தி, இடையூறு - சாத்திர விரோதமான செயல்கள் என்பவையாகும்.[75]

திருமால் வழிபாடு

வேதங்கள் எவ்வளவு பழமை வாய்ந்தனவோ அவ்வளவு பழமை வாய்ந்தது திருமால் வழிபாடும். வேதங்களில் திருமால் சூரியனோடு தொடர்புள்ள தெய்வம் என்றும், இந்திரனின் நண்பன் என்றும் கூறுவர். புராண காலத்தில் ஐம்பூதங்களின் சிறப்புக் குறையத் தொடங்கியது. அவற்றின் இடத்தை மும் மூர்த்திகள் பெற்றுக்கொண்டனர். தமிழ் நாட்டில் திருமால், கண்ணனாகவும், இராமனாகவும் மக்கள் மனத்தில் குடிகொண் டிருக்கிறார். திருமால் பல கோயில்களில் சங்கு, சங்கரம், கதை, கட்க, கோதண்டபாணியாய் நின்றும், இருந்தும், கிடந்தும் காட்சி அளிக்கின்றார். இவரது கிடந்த திருக்கோலம் பாலாழி யில் ஆதிசேடன்மீது அறிதுயில் கொண்டிருப்பதாக அமைக்கப் பட்டிருக்கிறது. திருமாலின் பூசனைக்குரிய பொருள்களில் துளசி முதன்மையானதும் பெருமை பெற்றதுமாகும்.

திருமாலின் வாகனம் கருடன், கொடியும் கருடனாகும். திருமாலின் பத்து அவதாரங்கள் மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், கல்கி என்று கூறப்பெறும். திருமாலுக்குக் கங்கை, லட்சுமி, சரசுவதி ஆகிய மூவரும் மனைவியர் என்று கூறுவர்.

சங்க காலத்தில் திருமால் வழிபாடு

சங்க இலக்கியங்களான புறநானூறு, அகநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, முல்லைப்பாட்டு ஆகியவற்றில் திருமாலைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

'நீனிற வுருவி னேமி யோன்' என்று புறநானூறும்,[76] 'மரஞ் செல மிதித்த மாஅல்' என்று அகநானூறும்,[77] 'மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்' என்று நற்றிணையும்,[78] 'கண்பொரு திகிரிக் கமழ் குரற் றுழாஅய் அலங்கற் செல்வன்' என்று பதிற்றுப் பத்தும்,[79] 'பாம்பணைப் பள்ளி யமர்ந்தோன்' என்று பெரும் பாணாற்றுப்படையும்,[80] 'மாயோன் மேயவோண நன்னாள்' என்று மதுரைக்காஞ்சியும்,[81] 'தடக்கை நீர்செலநிமிர்ந்த மாஅல்' என்று முல்லைப் பாட்டும்[82] குறிப்பிடும் செய்திகளால் சங்க காலத்தில் திருமால் வழிபாடு தமிழகத்தில் சிறப்புற்றிருந்ததை

அறியலாம். 'மாயோன் மேய காடுறை உலகம்' என்னும் தொல் காப்பியத் தொடர் திருமாலையே குறிப்பதாகும்.[83] பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களினாலும் வைணவம் பெரிதும் வளர்ச்சியடைந்தது. இராமானுசர் காலத்திற்குப் பிறகு தமிழ் நாட்டில் வைணவம் பெரிதும் வளர்ச்சியடைந்தது.

திருமயிலைப் பெருமாள் கோயில்கள்

ஆதிகேசவப் பெருமாள், பேயாழ்வார் கோயில்

கபாலீசுவரர் கோயில் அருகில் சித்திரக் குளத்தின் தென் கரையில் இக்கோயில் இருக்கிறது. இக் கோயில உள்ள பகுதி தெற்கு ஊரைச் சேர்ந்ததாகும். திருமயிலையிலுள்ளகோயில் களில் பழமையானது ஆதிகேசவப் பெருமாள் கோயில் என்று கூறுகின்றனர். பல்லவர் காலத்தில் கட்டப்பெற்றதாகக் கூறுவர்.[84] இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருப்பெயர் ஆதிகேசவப் பெருமாள் என்பதாகும். இறைவியின் பெயர் மயூர வல்லித் தாயாராகும். இராமர், கிருட்டினன், ஆண்டாள் ஆகியோரும் இங்கே எழுந்தருளியுள்ளனர். பேயாழ்வார் அவ தரித்த தலம் என்று கருதப்படுவதால், அவருடைய சிலையும் வைக்கப்பட்டுள்ளது. 1955இல் திருமழிசையாழ்வாருக்கும் சிலை வைக்கப்பட்டுள்ளது. சர்வ தீர்த்தம், ஹரிஹர தீர்த்தம், சந்திர புஷ்கரணி என்னும் பெயர்கள் இத் தீர்த்தத்துக்கு உண்டு. இக் காலத்தில் சித்திரக்குளம் என்று வழங்கப்பட்டு வருகிறது. நாள் தோறும் ஆறுகால பூசை, தென்கலை பட்டாசாரியரால் செய்யப் படுகின்றது. ஆண்டுதோறும் ஆதிகேசவப் பெருமாளுக்குப் பங்குனியில் பத்து நாள் உற்சவம் நடைபெறுகிறது. ஆண்டு தோறும்பேயாழ்வாருக்கு ஐப்பசித்திங்களில் பத்துநாள் உற்சவம் நடைபெறுகின்றது. பஞ்ச பருவ உற்சவங்களும், பவித் ரோற்சவம், தாயார், ஆண்டாள், நம்மாழ்வார் மற்ற ஆழ்வார் ஆசாரியர்களுக்குரிய உற்சவங்களும் முறையாக நடைபெற்று வருகின்றன. முதலில் நாட்டு நாராயணசாமி முதலியார் குடும்பத்தினர் பரம்பரை அறங்காவலர்களாக இருந்தனர். நாளடைவில் நிருவாகம் சரிவர நடைபெறாததால் உயர்நீதிமன்ற ஆணையின்படி, இப்போது ஐந்துபேர் அடங்கிய அறங்காவலர் குழு ஒன்று கோயிலை நிருவகித்து வருகிறது. அசையாச் சொத்துகளிலிருந்து வரும் வாடகையும், உண்டியலில் சேருவதும் இக் கோயிலுக்குரிய வருவாயாகும். இங்குள்ள எழுநிலைக் கோபுரம் 1955இல் அடிகோலப் பெற்று 1958இல் கட்டி முடிக்கப்

பெற்றது. இக் கோயிலில் பதினோரு வாகனங்களும் இரண்டு பல்லக்குகளும் உள்ளன.

கோயிலைப் பற்றிய கதை

மயூரபுரியில் (மயிலை) கைரவிணி தீரத்தில் தவம் செய்து கொண்டிருந்த முனிவர்கள் மது என்ற ஓர் அரக்கனால் துரத்தப்பட்டார்கள். அந்த முனிவர்கள் பிரம்மாவிடம் முறையிட, அவரும் அவர்களுடன் சேர்ந்து திருமாலை வேண்டினார். எல்லோரும் பலவித யாகங்களைக் கைரவிணி தீரத்தில் மேற்கொண்டனர். பிருகு முனிவர் சயன யாகத்தைச் செய்தார். சில காலம் யாகம் நடந்தவுடன் திருமால் திருமகளுடன் தோன்றியருளினார், அவ்வாறு தோன்றியவரே ஆதிகேசவப் பெருமாள்.[85] பிருகு முனிவரின் தவத்தின் காரணமாக ஓர் ஆம்பல் மலரில் ஒரு பங்குனி உத்திரத் திருநாளில் திருமகள் தோன்றினாள். மயூரபுரியில் தோன்றினமையால் 'மயூரவல்லி' என்றழைத்தனர்.[86] ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான பூந்தோட்டத்திலே 'மணிகைரவிணி என்கிற கிணற்றில் ஒரு செவ்வல்லிப் பூவில், துவாபரயுகம் 866922ஆம் ஆண்டு, சித்தார்த்தி ஆண்டு, ஐப்பசித் திங்கள் சுக்கில பட்சம், தசமி திதி கூடிய வியாழக்கிழமை சதய நட்சத்திரத்தில் அயோநிஜராய் பேயாழ்வார் அவதரித்தார். இவர் பகவானுடைய நந்தகம் என்னும் வாள் படையின் அமிசமாவார்[87]

கதைக் குறிப்புள்ள நூல்

ஸ்ரீ கருடபுராணத்தில் மயூரபுரி மகாத்மியம் ஆதிகேசவப் பெருமாள் கோயிலைப் பற்றிய கதைகளைக் கொண்டுள்ளது.[88]

வேதாந்த தேசிகர் கோயில்

ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது. இது முதலில் வேதாந்த தேசிகர் கோயிலாக இருந்தது. பின் ஐம்பது ஆண்டுகள் திருமடமாக இருந்து அண்மைக் காலத்தில் தான் சீனிவாசப் பெருமாள் கோயிலாக ஆயிற்று என்று கூறுகின்றனர். வைணவர்களால் இக் கோயில் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப் பெற்றது. வேதாந்த தேசிகர் திருவுருவச் சிலை அமர்ந்த நிலையிலும், சீனிவாசப் பெருமாள் நின்ற நிலையிலும் காட்சியளிக்கிறார்கள். அலமேலு மங்கைத் தாயார் இராமர், ஆழ்வார்கள், ஆண்டாள், ஆஞ்சனேயர்

ஆகியோருடைய திருவுருவச் சிலைகளும் வழிபடப்பெறுகின்றன. வடகலை பட்டாசாரியார் நாள்தோறும் ஆறுகால பூசை செய்து வருகிறார். ஆண்டுதோறும் புரட்டாசித் திங்களில் நடைபெறும் தேசிகர் உற்சவம் சிறப்பு மிகுந்ததாகும். பவித்ரோற்சவம், நவராத்திரி உற்சவம் ஆகியவையும் நடைபெறுகின்றன. வீடுகள், நிலம் ஆகியவற்றிலிருந்து வரும் வாடகை, உண்டியலில் கிடைக்கும் தொகை ஆகியவை வருவாயாக அமைந்துள்ளது. இக்கோயிலுக்குத் தேர், பல்லக்கு ஆகியவையும் உள்ளன. 1973ஆம் ஆண்டில் கோயில் திருப்பணி செய்யப்பட்டது.

பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில்

இக் கோயில் மந்தைவெளியிலுள்ள மாரிசெட்டித் தெருவில் உள்ளது. நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இத் திருக்கோயில் கட்டப்பெற்றது என்று கூறுகின்றனர். வெங்கடேசப் பெருமாள், அலமேலு மங்கைத் தாயார், ஆண்டாள், ஆஞ்சனேயர் ஆகியோருடைய சந்நிதிகள் உள்ளன. பஞ்சலோகத்தினாலான உற்சவச் சிலைகளும் உள்ளன. பட்டாசாரியார் நாள்தோறும் இருவேளை பூசை செய்கிறார். ஆண்டுதோறும் பங்குனித் திங்கள் இறுதியில் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. பத்மசாலியர் இனத்தைச் சேர்ந்த அறங்காவலர் குழு இக் கோயிலை நிருவகித்து வருகிறது. கோயிலுக்குரிய வீடுகளிலிருந்து வரும் வாடகையே வருவாயாக உள்ளது. இக் கோயிலில் ஒரு பல்லக்கு, ஏழு வாகனங்கள் உள்ளன. முற்காலத்தில் இக் கோயில் பஜனை கோயில் என்றழைக்கப்பட்டது. 1906, 1981ஆம் ஆண்டிலுமாக இருமுறை புதிதாகக் கொடிமரம் நிலை நாட்டப்பட்டுள்ளது. கடந்த பதின்மூன்று ஆண்டுகளாகப் பிரம்மோற்சவம் நடைபெறாமல் இருந்தது. 1984ஆம் ஆண்டு பங்குனி இறுதியில் பிரம்மோற்சவம் நடைபெற்றது. முற்காலத்தில் பிரம்மோற்சவம் ஆனித் திங்களில் நடைபெற்று வந்ததாகக் கூறுகின்றனர்.[89]

மாதவப் பெருமாள் கோயில்

மாதவப் பெருமாள் கோயில் தெருவின் மேற்குக் கோடியில் இக் கோயில் உள்ளது. இக் கோயில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப்பெற்றது என்று கூறுகின்றனர். மாதவப் பெருமாள் அமர்ந்த நிலையில் பூதேவி, சீதேவியுடன் காட்சியளிக்கிறார். இங்குள்ள தாயார் அமுதவல்லித் தாயார் என்று

அழைக்கப்படுகிறார். இவருக்கும், ஆண்டாள், இராமர், பேயாழ்வார் ஆகியோருக்கும் தனிச் சந்நிதிகள் உள்ளன. சந்தான புஷ்கரணி என்ற திருக்குளம் கோயிலுக்கு அருகில் உள்ளது. நாள்தோறும் பட்டாசாரியார் பூசைகள் செய்து வருகிறார். ஆண்டுதோறும் பிரம்மோற்சவம் சித்திரைத் திங்களில் பத்து நாட்களும், பேயாழ்வார் உற்சவம் ஐப்பசித் திங்களில் பத்து நாட்களும் நடைபெறுகின்றன. அறங்காவலர் குழுவால் இக் கோயில் நிருவகிக்கப்பட்டு வருகிறது. வீடுகள், நிலங்கள் ஆகியவற்றிலிருந்து வரும் வாடகை, உண்டியலில் சேரும் தொகை ஆகியவை கோயிலுக்குரிய வருவாயாகும். இராஜ கோபுரம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பெற்றது. சொர்க்கவாசல் மண்டபம் 1960இல் கட்டப் பெற்றது.

கோயிலைப் பற்றிய கதைகள்

பிருகு முனிவருடைய தவச்சாலை இக் கோயிலுக்கு அருகில் இருந்தது. அவருடைய தவத்தைக் கண்டு திருமகள் மகிழ்ச்சி அடைந்து, 'நான் உம்முடைய தவச்சாலைக்குக் கன்னியாக வருவேன், நீர் என்னை உம்முடைய மகளாகக் கொண்டுவளர்த்து மகிழ்ச்சிஅடைவீர்,' என்று கூறியருளினாள். அவ்வாறே திருமகள் பிருகு முனிவரின் தவச்சாலையில் வளர்ந்து வந்தாள். மாதவப் பெருமாள் நித்திரையிலிருந்து நீங்கிப் பிருகு முனிவருடைய தவச் சாலையை அடைந்தார். பின்னர் முனிவர் மாதவப் பெரு மாளை வணங்கி அமுதவல்லித் தாயாரைத் திருமணம்செய்து கொடுத்தார். அதுமுதல் மாதவப் பெருமாள் இங்கே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறார் என்று ஒரு கதை கூறுகிறது.

மற்றொரு கதை, தருமசேனன் என்ற மன்னவன் இந்தச் சந்தான புஷ்கரணிக் கரையில் கடுந்தவம் புரிந்தான். பலவித சோதனைகளினாலும் அவன் மனம் கலங்கவில்லை. அம்மை அவனுக்குக் காட்சியருளி அவனுடைய வேண்டுதலினால் இங்கே எழுந்தருளியிருக்கிறாள் என்று கூறுகிறது.[90]

கல்வெட்டுகள்

இக் கோயிலில் மூன்று கல்வெட்டுகள் காணப்பெறுகின்றன. அவை சிவன் கோவில்களுக்கு அளிக்கப்பட்ட தானங்களைக் குறிக்கிறது. இக் கோயில் வரலாற்றையோ, மயிலை வர லாற்றையோ அறிவதற்கு இவை பயன்படவில்லை.

ஆஞ்சனேயர் கோயில்

இக் கோயில் வடக்கு மயிலாப்பூரில் இராயப்பேட்டை நெடுஞ்சாலையில் அப்பர் சுவாமி கோயிலுக்கு எதிரில் இருக்கிறது. இக் கோயில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர், குயவர் இனத்தவரால் கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். ஆஞ்சனேயர் விக்கிரகம் நின்ற நிலையில் இருக்கிறது. இராமர், சீதை, இலக்குவன் விக்கிரகங்களும் உள்ளன.

நாள்தோறும் இருவேளை பூசையினைப் பட்டாசாரியர் செய்து வருகின்றனர். மார்கழித் திங்களில் வைகுண்ட ஏகாதசி சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றது. அறங்காவலர் குழு இக் கோயிலின் நிருவாகத்தை நடத்தி வருகிறது. வீடுகள், கடைகள், கொட்டகைகள், நிலம் ஆகியவற்றிலிருந்து வரும் வாடகை, உண்டியலில் சேரும் தொகை, பூசைக் கட்டணங்கள் ஆகியவை கோயிலுக்குரிய வருவாயாகும். இக் கோயில் நிருவாகத்துடன் சுந்தர விநாயகர், செல்வ விநாயகர் கோயில்களும் இணைந்துள்ளன.

லஸ் சர்ச் சாலை அருள்மிகு ஆஞ்சனேயர் ஆலயம்

இத் திருக்கோயில், திருமயிலை லஸ் சர்ச் சாலையின் மேற்கு முனையில் தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி எல்லைக்குள் ஒட்டியுள்ள வங்கிக்குரிய நிலப்பரப்பில் இருக்கிறது, இக் கோயில் மேற்படி வங்கியைச் சார்ந்ததாக விளங்குகின்றது.

இங்கு ஆஞ்சனேயர் கோயில் எழுந்த வரலாறு சுவை மிகுந்ததாகும். இந்திய விடுதலைக்கு முன்னர் ஏறத்தாழ 1929இல் இவ்விடத்தில் ஆந்திரா, சென்னைக் கூட்டுறவு வங்கி சுண்ணாம்பால் கட்டபபட்ட பழைய கட்டிடத்தில் இயங்கி வந்தது. அந்தக் கட்டிடத்தின் விதானப் பகுதிக்கு மேலே மாடியில் ஆஞ்சனேயர் உருவச்சிலை சுண்ணாம்புக் காரையிலான புடைப்புச் சிற்பமாக இருந்தது. அலுவலக ஊழியர்கள் வணங்கி வந்தனர். 1969இல் தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி,பழைய கட்டிடத்தை இடித்துவிட்டுப் புதிய கட்டிடத்தைக் கட்ட முனைந்தபோது ஆஞ்சனேயர் சிற்பம் சிதிலமடைந்து விட்டது. பூசை செய்வதையும் நிறுத்திவிட்டனர். வங்கி இயக்குநர்களின் கனவில் ஆஞ்சனேயர் தோன்றி 'என்னை இந்த இடத்திலிருந்து அகற்ற முயற்சி செய்யாதீர்கள்' என்று அருளினார். இயக்குநர்கள், முதலில் இப்போதுள்ள இடத்தில் கூரைவேய்ந்த

கட்டிடத்தில் ஆஞ்சனேயர் கோயிலை நிறுவினார்கள். 1972ஆம் ஆண்டு,வங்கிப் பொதுநல நிதியிலிருந்து இப்போதுள்ள கோயில் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இராகவ பட்டாசாரியாரால் பஞ்சமுக ஆஞ்சனேயர் சக்கரம் ஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது.

ஆஞ்சனேயர் ஒரே அறையாகவுள்ள கருப்பக்கிருகத்தில் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் அருள்பாலிக்கின்றார். மூன்றடி உயரமுள்ள பக்த ஆஞ்சனேயர் கைகூப்பிய நிலையில் பக்தர்களுக்கு அருள் வழங்குகின்றார். சந்நிதிக்கு இரு புறமும், பக்கத்திற்கு ஒன்றாக இரு வேப்ப மரங்கள் உள்ளன. உண்டியல் வருமானமும் அலுவலர் காணிக்கையும் கோயிலுக்கு வருவாயாகும். காலையில் திருமஞ்சன பூசையும், மாலையில் பூசையும் பட்டாசாரியர் மூவரால் நாள்தோறும் செய்யப் படுகிறது. இப் பூசைகளை செய்வதற்குப் பதினைந்து பேர் அடங்கிய பட்டாச்சாரியர் குழு உள்ளது. வெண்ணெய்க்காப்பு, சந்தனக்காப்பு, வடைமாலை சாத்துதல் இங்குச்சிறப்பாக நடை பெறுகின்றன. வெண்ணெய்க் காப்பினால் ஆஞ்சனேயருக்கு இராஜ அலங்காரம் செய்யப்படுகின்றது.

சனிக்கிழமை, வியாழக் கிழமைகளில் மக்கள் கூட்டம் கூட்ட மாக வருகின்றனர். ஸ்ரீராம நவமி, அனுமந்த ஜயந்தி, புரட்டாசித் திங்கள் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படு கின்றன. அப்போது இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. எல்லாச் சனிக் கிழமைகளிலும் மக்களுக்குப் பிரசாதம் வழங்கப் படுகின்றது 'பஞ்ச பருவ நாட்கள், சனி கிழமைகளில் வடை மாலை சாத்துதல் மட்டுமே நடைபெறுகின்றது.

இக் கோயில் இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது. அரசு உயர் அலுவலர்கள், நடிகர்கள், செல்வர்கள், தொழிலதிபர்கள், ஏழைகள், பாமரர்கள் அனைவரும் இக் கோயிலுக்கு வருகின்ற னர். இலண்டன், அமெரிக்கா, மலேசியா முதலிய வெளி நாடு களிலும் இந்த ஆஞ்சனேயருக்குப் பக்தர்கள் இருக்கிறார்கள்.

வங்கியின் அலுவலர்களில் பத்துப் பேர் இக் கோயிலின் காப் பாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். ஓர் ஊமைக் குழந் தையின் பெற்றோர் இக் கோயிலுக்கு வந்து ஆஞ்சனேயருக்கு நைவேத்தியம் செய்த உணவின் பருக்கைச் சோறுகளைக் குழந்தைக்குக் கொடுத்து வரச் சில நாள்களில் அக் குழந்தைக்குப்

பேச்சு வந்தது என்று பக்தர்கள் கூறுகிறார்கள். வேண்டுகின்ற பக்தர்களுக்கு வேண்டுபவை யாவும் கிடைப்பதால், மக்கள் பெருமளவில் ஆஞ்சனேயரைத் தொழ வருகிறார்கள். பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்தல், திருமணமாகாத பெண்கள் அடி வைத்து நடத்தல் ஆகிய வேண்டுதல்களும் நடைபெறுகின்றன.

இக் கோயில் காப்பாளர்கள், ஆஞ்சனேயரின் அருட்செயல்கள், ஆஞ்சனேயர் துதி ஆகிய சிறு நூல்களை வெளியிட்டுள்ளனர். இவை இலவசமாக வழங்கப்படுகின்றன. வாகீசன் என்பவர் எழுதியுள்ள ஆஞ்சனேய சரணம் கையெழுத்துப் படியாக உள்ளது. கலைமாமணி K. வீரமணி, ஸ்ரீராமர் ஸ்ரீ ஆஞ்சனேயர் புகழ் மாலை என்னும் தலைப்பில் பாடல்கள் பாடி ஒலிப் பதிவு நாடாவாக வெளியிட்டுள்ளார்.[91]

தருமராசர் கோயில்

முதலில் இக் கோயில் சல்லிவன் தோட்டத்தில் இருந்தது என்று கூறுகின்றனர். இப்போது, முண்டகக் கண்ணியம்மன் கோயில் தெருவில் இக் கோயில் உள்ளது. சல்லிவன் என்னும் ஆங்கிலேயர் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இக் கோயிலைக் கட்டினார் என்று கூறுகிறார்கள். தருமராசர் திருவுருவச் சிலை அமர்ந்த நிலையில் உள்ளது. திரௌபதியம்மன், அர்ச்சுனன், பீமன், நகுலன், சகாதேவன், கிருட்டினன், குந்திதேவி, சுபத்திரை விக்கினேசுவரர் ஆகியோருடைய விக்கிரகங்களும் உள்ளன. நாள்தோறும் காலையில் இலிங்காய இனத்தைச் சேர்ந்தவரால் பூசை செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் இக் கோயிலின் முன் பூக்குழி (தீயில் இறங்கி நடத்தல்) விழா முன்பு நடைபெற்று வந்தது என்றும், கடந்த ஐம்பது ஆண்டுகளாக எந்தத் திரு விழாவும் நடைபெறுவதில்லை என்றும் கூறுகின்றனர். அறங் காவலர் ஒருவர் கோயிலை நிருவாகம் செய்து வருகிறார். கடைகள், தோட்டம், நிலம் ஆகியவற்றிலிருந்து வரும் வாடகையே வருவாயாகும்.

கோயில் பற்றிய கதை

இக் கோயில் சல்லிவன் தோட்டத்தில் இருந்தபோது சல்லிவன் என்றும் ஆங்கிலேயர் இங்கு நடைபெற்ற தீமிதி விழாவைப் பைனாகுலரில் பார்த்த போது கண் பார்வையை இழந்தார் என்று கூறுகின்றனர். இப்போதுள்ள தருமராசர் கோயிலை இவர் கட்டிய பிறகு கண் பார்வையைத் திரும்பப் பெற்றார் என்றும் கூறுகின்றனர்.[92]

அம்மன் வழிபாடு

உலக வரலாற்றில் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து அடுத்த காலப்பகுதிக்குச் சமுதாயம் மாறும் போது பெண் ஆதிக்கச் சமுதாயம் தோன்றியது. பெண்கள் தலைவியராக இருந்தனர். அக்கால மனிதன் சத்திகளைப் பெண்ணாகவே உருவகம் செய்தான். அதனால் பெண் தெய்வங்கள் தோற்றம் பெற்றன.

தமிழகத்தில் அம்மன் வழிபாடு

தமிழர்கள் வெற்றித் தெய்வமாகக் கொற்றவையை வணங்கி வந்தனர். கொற்றவை வழிபாடு வெறியாட்டுடன் நடை பெற்றது. கொற்றவைக்குப் பலி கொடுத்து வாழ்த்துதலைக் கொற்றவை நிலையெனக் குறிக்கின்றது தொல்காப்பியம்.[93] கண்ணகியின் தோற்றத்தை வாயிலோன் பாண்டிய மன்னனிடம் வருணிக்கும்போது பல்வேறு அம்மன்களின் பெயர்கள் சிலப்பதி காரத்தில் குறிப்பிடப்படுகிறது.[94] காஞ்சிபுரம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள பல்வேறு சிற்பங்கள் காளிக்குத் தலையை அறுத்துக் காணிக்கையாகத் தருதலையே குறிக்கின்றன. எனவே, பல்லவர் காலத்தில் வீர வழிபாடாக அம்மன் வழிபாடு அமைந்துள்ளது.[95] கி.பி. பதினோராம் நூற்றாண்டிற்குப் பிறகே அம்மனுக்குத் தனிக்கோயில்கள் எடுக்கப்பட்டன. காளி. பிடாரி, சப்த மாதர்கள், துர்க்கை ஆகிய தெய்வங்களின் வழிபாடு சோழர் காலத்தில் பெருகியது.

இக்காலத்தில் அம்மன் வழிபாடு

இல்லுறை தெய்வம்

தமிழகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இல்லுறை தெய்வமாக அம்மன் கருதப்பெறுகிறாள். அவளுக்குப் பூவாடைக்காரி என்று பெயரிட்டு நடுவீட்டில் (வீட்டின் நடுப்பகுதி) அருவமாகப் போற்றி வழிபடுகின்றனர்.

ஊர்த் தெய்வம்

ஊருக்கு உரிய எல்லைத்தெய்வமாக அம்மன் விளங்குகிறாள். மக்கள் தங்கள் ஊருக்குரிய கிராம தேவதையாக. எல்லையம் மனாக அம்மனை வழிபடுகின்றனர்.

குல தெய்வம்

மக்கள் தங்கள் சமுதாயச் சூழலுக்கு ஏற்பப் பல்வேறு பெண் தெய்வங்களைக் குல தெய்வங்களாகக் கொண்டு வழிபடுகின்றனர்.

ஆதிபராசக்தி

மேல்மருவத்தூரிலுள்ள சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி கோயில் இக் காலத்தில் அம்மன் வழிபாடு மிகுந்திருப்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

திருமயிலை அம்மன் கோயில்கள்

கோலவிழியம்மன் கோயில்

இக் கோயில், கோபதி நாராயணசாமி செட்டித் தெருவில் உள்ளது. இக் கோயிலில் உள்ள உற்சவ விக்கிரகத்தைக் கொண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப் பெற்றது என்று கூறுகின்றனர். கோலவிழியம்மன் அமர்ந்த நிலையில் வடக்கே பார்க்க எழுந்தருளியிருக்கிறாள். உற்சவ மூர்த்தியும் அமர்ந்த நிலையிலேயே உள்ளது. இக் கடவுள் திருமயிலையின் கிராம தேவதையாவார். இவ்வம்மனைப் பிடாரி என்றும், ஊர்க்காளி என்றும், பத்திரகாளியம்மன் என்று கூறுகின்றனர். பண்டார இனத்தைச் சேர்ந்தவர்கள் முன்பு பூசை செய்து வந்தனர். இப்பொழுது அர்ச்சகர்கள் பூசை செய்கின்றனர். ஆண்டுதோறும் பால்குடப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. மயிலை மாமுனிவர் குருஜி சுந்தரராம சுவாமிகளின் முயற்சியால் வழிபாடுகள் தடையின்றிச் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன. இங்கே வந்து பூசனை புரிந்து விழாச் செய்த பின்தான் கபாலீசுவரர் கோயிலில் திருவிழா தொடங்கப் பெறும். அறங்காவலர் குழு ஒன்றுள்ளது. இக் கோயில் கபாலீசுவரர் கோயில் தேவஸ்தானத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. கோயிலுக்குரிய நிலங்களிலிருந்து கிடைக்கும் வாடகையும், பக்தர்களின் காணிக்கையும் வருவாயாகும்.

கோயிலைப் பற்றிய கதை

ஓர் ஆங்கிலேயர் இங்கு நடந்த தீமிதி விழாவினை ஒளிப் படமாக எடுத்ததால் கண்ணிழந்தார். அறங்காவலரின் அறிவுரையின்படி அந்த ஆங்கிலேயர் அம்மையை வழிபட்டதால்

மீண்டும் பார்வைபெற்றார். இந் நிகழ்ச்சியின் நினைவாக, கோல விழியம்மனின் உற்சவச்சிலையைச் செயின்ட் ஜார்ஜ்கோட்டைக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று கூரைப்புடவை, பட்டுப்புடவை. தாலி ஆகியவற்றை அந்த ஆங்கிலேயர் காணிக்கையாக அளித் தார் என்று கூறுகின்றனர்.[96]

பிற செய்திகள்

திரு. கோபால நாயக்கர் என்பவர் முப்பத்தைந்து ஆண்டு களுக்கு முன்னர் இக் கோயிலுக்குக் கும்பாபிடேகம் செய்தார். மயிலை மாமுனிவர் குருஜி சுந்தரராம சுவாமிகளின் முயற்சியால் அண்மையில் ஆலயத் திருப்பணி செய்யப்பெற்று குடமுழுக்கும் நடந்தேறியது. ஐப்பசி 14ஆம் நாள் முதல் தைத் திங்கள்முடிய மூன்று மாத காலத்திற்கு சூரிய ஒளி அம்மனின்மேல் நேரடியாகப் படுமாறு ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. கோல விழியம்மன் போற்றி இசைமாலை என்னும் துதி நூல் ஒன்று அம்மனின் மீது பாடப்பட்டுள்ளது.

முண்டகக் கண்ணியம்மன் கோயில்

இக் கோயில் முண்டகக் கண்ணியம்மன் கோயில் தெருவில் உள்ளது. இக் கோயில் கருவறை மட்டும் ஓலைகளினாலேயே அமைந்திருக்கிறது. மிகப் பழைய கோயில் என்று கூறுகின் றனர். எக்காலத்தில் கட்டப்பெற்றது என்பது தெரியவில்லை. முண்டகக்கண்ணி அம்மையின் தலைமட்டும் உள்ளது என்று சிலரும், சிறு கல்தூண் ஒன்றுதான் முண்டகக் கண்ணியம்மன் என்று வழிபடப்படுகிறது என்று சிலரும் கூறுகின்றனர். இவ் வம்மையின் பெயரை முண்டக் கண்ணியம்மன் என்று அறியாதார் கூறுகின்றனர். மந்தாகினி அம்மன் என்னும் பெயர் முண்டகக் கண்ணி அம்மன் எனத் திரிந்து வழங்குகிறது என்றும் கூறுவர். இங்குள்ள மக்கள் இவ் வம்மை மாரியம்மை என்பர். இங்குள்ள உருவம் ரேணுகா தேவியின் அமிசம். முண்டம் வேறு தலை வேறு ஆகத் தன்பிள்ளை பரசுராமன துண்டித்ததை நினைவுபடுத்து வதற்கு இந்த முண்டத்தோடு அம்மன் அமர்ந்திருக்கிறாள் என்றும் கூறுகின்றனர். முண்டகம் என்பதற்குத் தாமரை என்பது பொருள். தாமரைபோன்ற அழகிய கண்களை உடையவள் இக் கோயிலில் வீற்றிருக்கும் அம்மன் என்பதே பொருந்தும். வன்னிய இனத்தைச் சேர்ந்த பரம்பரைப் பூசாரி ஒருவர் பூசைகளைச் செய்கிறார். ஆடி, தை வெள்ளிக்கிழமைகளில் விழாக்கள் நடை பெறுகின்றன. இந்து அறநிலையத் துறையைச் சேர்ந்த

அதிகாரியால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. உண்டியலில் சேரும் தொகையும், பூசைக் கட்டணங்களும் இக் கோயிலுக்கு வருவாயாக அமைந்துள்ளன.

கோயிலைப் பற்றிய கதை

பிருகு முனிவரின் மனைவி நாகவல்லி. அவள் எழில்நலம் காண மும்மூர்த்திகள் விரும்பினர். அவளிடத்தில் பிச்சை வேண்டினர். பிச்சை கொண்டு வந்த அவளை 'நிர்வாண நிலையில் இருந்து பிச்சை தருக' என்று கேட்டனர். அவள் தனது கூந்தலினால் உடல் மறைத்துப் பிச்சையிட்டாள். மும்மூர்த்திகள் அவள் கூந்தல் அகலும் வகையில் காற்றை ஏவினர். அவள் தன் கற்பின் திறனால் மூவரையும் குழந்தைகளாக மாற்றினாள். மும்மூர்த்திகளின் தேவிமார் வந்து வேண்டவும், அவர்களுக்குப் பழைய வடிவைத் திரும்பத் தந்தாள். அவளைத் தேவர் இழித்துப் பேசினர். அவள் கவலையோடு பிருகு முனிவரிடம் செய்திகளைக் கூறினாள். அவர் 'ஆதி பகவன் இவ் வழியாக வருவர். நீ அவர்கள் மகளாக 'முப்பை' என்னும் பெயரோடு பிறப்பாய். உன்னை வண்ணான் ஒருவன் கொண்டு சென்று வளர்ப்பான். வண்ணானின் உறவினர் உன்னை இகழ்வர். நீ அது பொறாது மயிலையில் நற்றவம் செய்து 'மாரியாய்' மாறி உலக உயிர்களைக் காப்பாய்' என்று கூறினார். அவர் சொற்படி அவள் மயிலை வாழும் தெய்வமானாள். இவ்வாறு முண்டகக் கண்ணி அம்மையின் வரலாறு கூறப்பெறுகிறது.[97]

கதைக் குறிப்புள்ள நூல்

நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தலபுராணத்தில் 'முண்டகக் கண்ணம்மை சரித்திரம்' என்னும் பகுதியில் நாற்பத்து ஆறு பாடல்கள் உள்ளன. இக் காலத்தில் 'முண்டகக் கண்ணியம்மை பாமாலை' என்னும் போற்றி நூலும் வெளிவந்துள்ளது.

எல்லையம்மன், பேயாண்டியம்மன் கோயில்கள்

இவ்விரு கோயில்களும் நொச்சிக் குப்பத்தில் உள்ளன. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மீனவ இனத்தவரால் இக் கோயில்கள் கட்டப்பெற்றன என்று கூறுகின்றனர். இக் கோயில்களில் மூல விக்கிரகங்கள் உள்ளன. வீர சைவர் ஒருவர் நாள்தோறும் இருவேளைகள் இக் கோயில்களில் பூசை செய்கின்றார்.

ஆடித்திங்களில் சிறப்பாக விழா நடைபெறுகின்றது. அறங்காவலர் குழு ஒன்று கோயில் நிருவாகத்தை நடத்தி வருகிறது. இக் கோயில்களுக்குரிய நிலம், வீடு, கடைகள் ஆகியவற்றிலிருந்து வரும் வாடகையால் கோயில் பணிகள் நடைபெறுகின்றன.

திருவீதி அம்மன் கோயில்

இக் கோயில் வெங்கடாசல முதலித் தெருவில் உள்ளது. இக் கோயில் நூறாண்டுகளுக்கு முன்னர் அரிசன இனத்தவரால் கட்டப்பெற்றது. இங்கு அம்மனின் தலைமட்டும் வழிபடப் பெறுகின்றது. பரம்பரையாகப் பூசாரி ஒருவர் நாள்தோறும் இரு வேளை பூசை செய்கின்றார். ஆண்டு விழா ஆடியில் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. அறங்காவலர் குழு இக் கோயில் நிருவாகத்தைக் கவனித்துக்கொள்கிறது. அசையாச் சொத்துகளிலிருந்து வரும் வாடகை, உண்டியலில் சேரும் தொகை ஆகியவையே இக் கோயிலுக்குரிய வருவாயாகும்.

திருவள்ளுவர் கோயில்

முண்டகக் கண்ணியம்மன் கோவில் தெருவின் வட கோடியில் இருக்கிறது. இக் கோயில் காசி அரசரால் கட்டப் பெற்றது என்று கூறுகின்றனர். கோயிலில் இருக்கும் திருவள்ளுவர் சிலை, கோயில் அமைப்பு ஆகியவற்றைப் பார்க்கும் போது இக் கோயில் கி. பி. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பெற்றதாக இருக்கலாம். திருவள்ளுவர் உருவச் சிலையும் தனிச் சந்நிதியில் உள்ளது. வள்ளுவர் வழிபட்ட ஏகாம்பரேசுவரர், மற்றும் காமாட்சிஅம்மை, நின்றநிலையில் சண்டிகேசுவரர் விநாயகர், முருகர், நவக்கிரகங்கள் ஆகிய தெய்வங்களின் விக்கிரகங்களும் உள்ளன. இங்கு இரு திருவடிகள் அடங்கிய பீடம் முன்பு வழிபாட்டில் இருந்தது. இப்பொழுது அவை வழிபடப் பெறவில்லை. அத் திருவடிகள் திருவள்ளுவரின் திருவடிகள் என்று கூறுகின்றனர். இப்பொழுது நாள்தோறும் காலை ஒரு வேளை மட்டும் பரம்பரையாக வீர சைவரால் பூசை நடத்தப் பெறுகிறது. ஆண்டுதோறும் சனவரி 15ஆம் நாள் வள்ளுவர் பிறந்த நாள் விழாவும், வைகாசிப் பௌர்ணமி அன்று திருவள்ளுவர் குரு பூசையும், தமிழ் ஆண்டுப் பிறப்பும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. இக் கோயிலுக்குரிய தல விருட்சம் அத்தி மரமாகும். அறங்காவலர் குழு இக் கோயிலை நிருவகித்து வருகிறது. இக் கோயில் முண்டகக் கண்ணியம்மன் கோயில் தேவத்தானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. வீடுகள், நிலம், கடைகள், திருமண மண்டபம் ஆகியவற்றிலிருந்து வரும் வாடகை வருவாயாக உள்ளது.

பிற செய்திகள்

திருவள்ளுவர் வாழ்க்கையை விளக்கும் உருவச்சிலைகள் உள்ளன. திருவள்ளுவர் பிறந்த இடத்திற்கு அருகிலுள்ள இலுப்பை மரத்தின் அடிப்பகுதி செப்பு வேயப் பெற்றுள்ளது. 1974இல் இக்கோயிலில் திருப்பணி தொடங்கப் பெற்று 1976 இல் முடிவடைந்தது.[98]

இக் கோயிலைக் குறிப்பிடும் நூல்

நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தலபுராணத்தில் பன்னிரண்டாம் படலம் திருவள்ளுவ நாயனார் பிரபாவப் படலம் என்னும் பெயரில் ஐம்பத்து நான்கு பாடல்கள் உள்ளன.

சாயிபாபா கோயில்

வெங்கடேச அக்கிரகாரத்தில் கபாலீசுவரர் கோயில் கல்யாண மண்டபத்திற்கு எதிரில் சாயிபாபா கோயில் உள்ளது. பி. வி. நரசிம்ம சுவாமிகள் என்பவர் 1942இல் திருவல்லிக்கேணி வெங்கடாசல முதலி தெருவில் ஒரு வீட்டில் சாயிபாபா திருவுருவப் படத்தை வைத்து வழிபாடு செய்யத் தொடங்கினார். இரண்டு திங்களுக்குப் பிறகு தெங்கூர் செல்வ விநாயகர் கோயில் தெருவிலுள்ள ஒரு வீட்டிற்கு அத் திருவுருவம் கொண்டு வரப்பட்டு 1944 வரை அங்கே வழிபாடு நடந்தது. 1944இலிருந்து 1951 வரை இராமகிருட்டின மடத்துச் சாலையில் டாக்டர் நஞ்சுண்ட ராவ் வீட்டில் சாயிபாபா எழுந்தருளியிருந்தார். 1951-1952 வரை வெங்கடேச அக்கிரகாரம் தியாகராசய்யர் வீட்டில் வழிபாடு நடந்து கொண்டிருந்தது. 1952ஆம் ஆண்டு இப்போதுள்ள இடத்தில் கோயில் கட்டப் பெற்று குடமுழக்கும் நடந்தது. சாயிபாபாவின் திருவுருவப் படம், சாயிபாபாவின் திருவடிகள், பளிங்கிலான திருவுருச்சிலை, நரசிம்ம சுவாமியின் திருவுருவப்படம் ஆகியவை மக்களால் வணங்கப் பெறுகின்றன. நாள்தோறும் நான்கு வேளை அர்ச்சகரால் பூசை செய்யப்படுகிறது. வியாழக்கிழமை தோறும் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. சாயி ஜயந்தி, குரு பூர்ணிமா, மகாசமாதி, மகா சிவராத்திரி, தீபாவளி, பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, தெலுங்குப் புத்தாண்டு, கிறித்துமஸ் ஆகிய விழாக்களும் கொண்டாடப் பெறுகின்றன. அகில இந்திய சாயி சமாஜம் என்னும் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் இக் கோயில் நிருவாகத்தை நடத்துகிறது. நூல் வெளியீட்டின் மூலம் கிடைக்கும்

தொகை, உண்டியல் மூலம் கிடைக்கும் தொகை, பக்தர்களின் காணிக்கை ஆகியவையே வருவாயாகும்.[99]

சமணர் கோயில்

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் சாந்தோமில் நேமிநாதர் கோயில் இருந்தது என்றும். கடல்கோளால் அக் கோயில் அழிந்தது என்றும் கூறுகின்றனர். அக் கோயிலிலிருந்த நேமி நாதரின் கற்சிலை தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மேல் சித்தாமூரிலும், நேமிநாதரின் வெண்கலச் சிலை வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள இளங்காடு என்னுமிடத்திலுள்ள சமணர் கோயிலிலும் உள்ளது என்று கூறுகின்றனர்.[100] இப்பொழுது தமிழ்ச் சமணர்களுக்குரிய கோயில் எதுவும் மயிலையில் இல்லை. திருவள்ளுவர் கோயிலைச் சமணர் கோயில் என்று சிலர் கூறுகின்றனர் ஆனால் அக் கோயில் இப்போது சைவர்கள் வழிபடும் கோயிலாக இருக்கிறது. வட நாட்டுச் சமணருக்கு உரிய கோயில் ஒன்று மயிலையில் உள்ளது.

ஸ்ரீவாசு பூஜ்ய தீர்த்தங்கரர் கோயில்

திருமயிலையிலுள்ள மத்தல நாராயணன் தெருவில் ஒரு வீட்டில் இக் கோயில் அமைந்துள்ளது. இவர் பன்னிரண்டாம் தீர்த்தங்கரர் ஆவார். இக் கோயில் வடநாட்டுச் சுவேதம்பரச் சமணருக்கு உரிமையானதாகும். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இக் கோயில் கட்டப்பெற்றது என்று கூறுகின்றனர். வாசு பூஜ்ய தீர்த்தங்கரர், சுமதி பூஜ்ய தீர்த்தங்கரர் ஆகியோரின் பளிங்குச் சிலைகள் வழிபடப் பெறுகின்றன. நாள்தோறும் இரு வேளை பூசை செய்யப்படுகின்றது. திருமயிலையிலுள்ள சமணர் சங்க அறக்கட்டளையைச் சேர்ந்த அறங் காவலர் கோயிலை நிருவகித்து வருகின்றனர்.[101]

மணிகண்டன் கோயில்

மந்தைவெளி அங்காடி எதிரில் நடைபாதையில் இக் கோயில் இருக்கிறது. 1976ஆம் ஆண்டில் இக் கோயில் கட்டப்பெற்றது. மணிகண்டனின் பஞ்சலோகச் சிலை வழிபடப் பெறுகின்றது. விநாயகர், முருகர் வள்ளி தெய்வயானை. நவக்கிரகங்கள், நாகராஜர் ஆகிய திருவுருவங்களும் வணங்கப் பெறுகின்றன. நாள்தோறும் இரு வேளை பூசை செய்யப்படுகிறது. ஐப்பசி, கார்த்திகை, மார்கழி தைத் திங்கள்களில் சிறப்பாக விழாக்கள் நடைபெறுகின்றன. இக் கோயில் தனியார் கோயிலாகும்.

திரு. ஏ. நடராசன் என்பவர் அறங்காவலராக இருந்து வருகிறார். உண்டியல் மூலம் கிடைக்கும் தொகையே வருவாயாக அமைந்துள்ளது.[102]

ஐயப்பன் கோயில்

இராஜா அண்ணாமலைபுரத்தில் சாந்தோம் நெடுஞ்சாலையில் இக் கோயில் உள்ளது. இக் கோயில் கட்டிட வேலைகள் முடிந்து குடமுழுக்கு விழா நடைபெற்றது. ஐயப்பனின் பஞ்சலோகச் சிலை வழிபடப் பெறுகின்றது. பதினெட்டுப் படிகள் விநாயகர், நாகராஜா, மாகாளிபுரத்து அம்மன் ஆகிய வழிபடுமிடங்களும் விக்கிரகங்களும் உள்ளன. நாள்தோறும் பூசைகள் செய்யப்படுகின்றன. தமிழ்த் திங்கள்களின் தொடக்க நாள், தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பு, பதினெட்டாம் படி உற்சவம், ஆகியவை கொண்டாடப்பெறுகின்றன. ஐயப்ப சுவாமி கோயில் அறக்கட்டளை நிறுவப்பட்டு அறங்காவலர் குழுவொன்று நியமிக்கப்பட்டுக் கோயில் நிருவாகம் நடைபெறுகிறது. அறக்கட்டளையில் உள்ள சொத்துக்களிலிருந்து வரும் வாடகை, பூசைக் கட்டணங்கள் ஆகியவை வருவாயாகும்.[103]

மசூதிகள்

திருமயிலை, கோல்கொண்டா நவாபுகள், ஆற்காடு நவாபுகள், முகலாய அரசர் ஆகியோர் ஆட்சியின்கீழ் இருந்தால் இங்கு இசுலாமிய சமயத்தைச் சேர்ந்த மக்களும் வசித்து வருகிறார்கள். அவர்கள் வழிபடும் இடங்களான மசூதிகளும், தர்காக்களும் மயிலையில் உள்ளன. கச்சேரி சாலையிலுள்ள மசூதி, இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப் பெற்றது என்று கூறுகின்றனர். இம் மசூதி இசுலாமிய வணிகர் ஒருவரால் ஹிஜிரா ஆண்டு 1111இல் கட்டப்பெற்றது என்பது கூறுகின்றனர். செயின்ட் மேரி சாலையில் ஒரு மசூதி உள்ளது. கேசவப்பெருமாள் கோயிலுக்கு நேர் வடக்கில் உள்ள மசூதித் தெருவில் ஒரு மசூதி உள்ளது. இராமகிருட்டின மடத்துச் சாலையில் ஒரு தர்க்கா உள்ளது.[104]

கிறித்தவத் தேவாலயங்கள்

போர்த்துக்கீசியர் நீண்ட காலம் சாந்தோமில் இருந்ததாலும், பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சிக் கீழ் அப் பகுதி இருந்ததாலும் கிறித்தவச் சமயம் அங்கு வளர்ச்சியுற்றது. பல கிறித்தவத் தேவாலயங்கள் கட்டப் பெற்றன.

சாந்தோம் நெடுஞ்சாலையிலுள்ள செயின்ட் தாமஸ் பேராலயம் பழமையும் சிறப்பும் பெற்றதாகும். இப்போதுள்ள ஆலயம் கி பி. 1896இல் கட்டப் பெற்றதாகும். பழைய ஆலயம் கி. பி. 1522க்கு முன்னர்க் கட்டப்பெற்றதாகும்.[105] இவ்வாலயம் செயின்ட் தாமஸின் கல்லறையின் மீது கட்டப்பெற்றுள்ளது. செயின்ட் தாமஸின் பத்தொன்பதாம் நூற்றாண்டு விழா 1972 ஆம் ஆண்டு கொண்டாடப் பெற்றது. கோதிக் கட்டிடக் கலைப்படி இவ் வாலயம் கட்டப்பட்டுள்ளது. இவ் வாலயம் கத்தோலிக்கர்களுடையதாகும்.

லஸ் சர்ச் சாலையில் உள்ளது லஸ் தேவாலயமாகும். இதனைக் காட்டுக் கோயில் என்றும் கூறுவர். கி. பி. 1516இல் இவ் வாலயம் கட்டப்பெற்றது என்று அங்குள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஆனால், ஆய்வாளர் அதனை ஏற்றுக் கொள்ளாமல் கி. பி. 1547க்குப் பிறகு கட்டப்பெற்றது என்று கூறுகின்றனர். போர்த்துக்கீசியர் முதன் முதலில் மயிலைக் கடற்கரைப் பகுதிக்கு வந்தபோது ஓர் ஒளி தோன்றி அவர்களுக்கு வழிகாட்டியது என்றும், அவ்வொளி தோன்றிய இடத்தில் ஆலயம் கட்டினர் என்றும் கூறுவர். லஸ் என்றும் போர்த்துக்கீசியச் சொல்லிற்கு ஒளி என்று பொருள் கூறுகின்றனர்.[106]

பட்டினப்பாக்கம் எதிரில் செயின்ட்லாசரஸ் ஆலயம் உள்ளது. காஸ்பரோ பால்பி என்னும் வெனிசு வணிகர் 1582இல் செயின்ட் லாசரஸ் ஆலயம் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[107] செயின்ட் மேரி சாலையில் செயின்ட் மேரி தேவாலயம் உள்ளது. இளைப்பாத்தா மாதா கோயில் என்றும் கூறுவர். மாதா சர்ச் சாலையில் 'மா தே தேயுஸ்' என்னும் பழைய தேவாலயம் ஒன்றுள்ளது.[108] இப்பொழுது அது தியான ஆசிரமமாக உள்ளது. செயின்ட் லூக் தேவாலயம் இராமகிருட்டின மடத்துச் சாலையில் உள்ளது. மேலும், பல தேவாலயங்கள் இப் பகுதியில் கிறித்தவர் வழிபாட்டுக்குரிய இடங்களாக இருக்கின்றன.

குறிப்புகள்

1. சு. வித்தியானந்தன், **தமிழர் சால்பு** (சங்க காலம்), பாரி புத்தகப்பண்ணை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1971, ப. 119.
2. ,, ,, ப. 125.
3. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), **பத்துப்பாட்டு மூலமும் உரையும்**, 'பட்டினப்பாலை', ஐந்தாம் பதிபபு, சென்னை, 1956, 86-93.
4. ,, 'மதுரைக் காஞ்சி', 477-481.
5. **திருக்குறள்**, திருக்குறள் அறநிலைய வெளியீடு, சென்னை, 1954, அதிகாரம் 1, பா. 4.
6. திருக்குறள், அதி. 1, பா. 7.
7. Swami Harshananda, **All About Hindu Temples**, Sri Ramakrishna Ashramam, Second Edition, Mysore, 1981, p. 1.
8. **டால்ஸ்டாய் கட்டுரைகள்**, 'வாழ்வும் மதமும்', வானதி பதிப்பகம், சென்னை, 1960, பக். 13-14.
9. Swami Harshananda, **All About Hindu Temples**, p.1.
10. **சிலப்பதிகாரம்**, கழக வெளியீடு, சென்னை, இந்திர விழவூரெடுத்த காதை, 169-178.
11. Swami Harshananda, **All About Hindu Temples**, p.2.
12. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), **பத்துப்பாட்டு மூலமும் உரையும்**, 'திருமுருகாற்றுப்படை', 223-226.
13. M. A. Dorai Rangaswamy, **The Religion and Philosophy of Tevaram**, Book I, University of Madras, 1958, p. 5.
14. **பரிபாடல்**, மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1957, பரிபாடல் திரட்டு, பா. 8 : 1-4.
15. M. A. Dorai Rangaswamy, **The Religion and Philosophy of Tevaram**, Book I, p. 8.
16. **சிலப்பதிகாரம்**, இந்திர விழவூரெடுத்த காதை', 586-589.
17. M. A. Dorai Rangaswamy, **The Religion and Philosophy of Tevaram**, Book I, P. 9.
18. **தேவாரம்**, 6-71-8.
19. மா. இராசமாணிக்கம் பிள்ளை. **பல்லவர் வரலாறு**, ப. 299.

20. ப. கோ. நாதமுனி (தொகுத்தவர்), **ஸ்ரீ கணபதி**, தெய்வீக வாழ்க்கைச் சங்கம், காஞ்சிபுரம், 1973, ப. 132.
21. திருமுருக கிருபானந்த வாரியார், 'விநாயகர்', **சிவகளை அருள்மிகு சோரநாத விநாயகர் குட முழுக்கு விழா நினைவு மலர்**, சிவகளை, 1976, ப. 34.
22. ச. தண்டபாணி தேசிகர், **கணபதி**, எடுத்தணி வயல் ஸ்ரீபஞ்சாக்ஷர விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக மலர், திருவாவடுதுறை ஆதீனம், 1956, ப. 4.
23. ப. கோ. நாதமுனி (தொகுத்தவர்) **ஸ்ரீகணபதி**, ப. 141.
24. ,, ப. 33.
25. திருஞானசம்பந்தர், **தேவாரம்** (தலமுறை), திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் வெளியீடு, ஸ்ரீவைகுண்டம், 1980, திரு இராமனதீச்சரப்பதிகம், பா. 2.
26. ந. ரா. முருகவேள், **தெய்வத் திருவுருவங்கள்**, தணிகைப் பதிப்பகம், சென்னை, 1974, ப. 12.
27. Census of India 1961, Volume IX, Madras, Part XI-D, **Temples of Madras State, 1, Chingleput District and Madras City**, Madras, 1965, p. 205.
28. பரம்பரையாக வழிபாடு செய்யும் செந்திருவை நேரில் கண்டு உரையாடியபோது பெறப்பட்ட செய்திகள்.
29. **A Descriptive Catalogue of Tamil Manuscripts in Dr. U.V Swaminathiyar Library**, Volume III, Madras, 1962, No 1545
30 திருமயிலை எஸ். காளத்தி முதலியார் கூறிய கதை.
31. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, **சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**, அறநிலையத்துறை, தமிழ்நாடு அரசாங்கம், 1964, ப. 131.
32. தாண்டவராய செட்டியார், **திருமயிலை செங்கழுநீர் விநாயகர் பதிகம்**, ஸ்ரீ தயாநிதி அச்சுக்கூடம், சென்னை, பார்திவ சித்திரை (1885).
33. பரம்பரை அறங்காவலர் திரு. கோதண்டராமன் அவர்கள் தெரிவித்த செய்திகள்.
34. பரம்பரை உரிமையாளர் திரு. லோகநாதன் அவர்கள் தெரிவித்த செய்திகள்
35. கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட செய்தி.
36. திருநாவுக்கரசர், **தேவாரம்** (தலமுறை), திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் வெளியீடு, ஸ்ரீ வைகுண்டம், 1976 தனித்திருவிருத்தம், பா. 9.

37. சுந்தரர். **தேவாரம்** (தலமுறை), திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் வெளியீடு, ஸ்ரீ வைகுண்டம், 1965, திருத் தொண்டத்தொகை, பா. 4.
38. திருமுருககிருபானந்த வாரியார் (பதிப்பு), **திருவாசகம்**, காஞ்சிபுரம், பிடித்த பத்து, பா. 3.
39. ப. அருணாசலம், **சைவ சமயம்** (ஓர் அறிமுகம்) நாகர்கோயில், 1979, ப. 1.
40. ந. ரா. முருகவேள். **தெய்வத்திருவுருவங்கள்**, ப. 57,
41. **தொல்காப்பியம்**, பொருளதிகாரம், இளம்பூரணம், கழக வெளியீடு, மறுபதிப்பு, சென்னை, 1982, நூற்பா 5.
42. சு. வித்தியானந்தன், **தமிழர் சால்பு**, ப. 140.
43. Census of India 1961, **Temples of Madras State, 1. Chingleput District and Madras City**, p. 203.
44. ,, p. 199.
45. அம்பை சங்கரன், 'தீர்த்த பாலீச்சுரர்', **சித்தாந்தம்**, சென்னை, ஏப்பிரல் 1963.
46. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, **சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**, ப. 131.
47. தீர்த்தபாலீசுவரர் கோயிலில் உள்ள ஓவிய விளக்கம்.
48. மயிலை நாதமுனி முதலியார், **திருமயிலைத் தல புராணம்**, தீர்த்தபாலீசர் சரித்திரம், சென்னை. 1924, பா. 16.
49. அம்பை சங்கரன், 'தீர்த்தபாலீச்சுரர்', **சித்தாந்தம்**.
50. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, **சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**. ப. 132.
51. மயிலை நாதமுனி முதலியார், **திருமயிலைத் தல புராணம்**, காரணீசுவரர் சரித்திரம், பா. 35.
52. இரா. நாகசாமி (பதிப்பு), **சென்னை மாநகர்க் கல் வெட்டுகள்**, தொ. எ. 1967/159, 161, 162, 164, 165, 167.
53. ,, தொ. எ. 1967/168.
54. Census of India 1961, **Temples of Madras State 1. Chingleput District and Madras City**, p. 200
55. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, **சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**, ப. 133
56. மயிலை நாதமுனி முதலியார், **திருமயிலைத் தல புராணம்**, மல்லீசர் சரித்திரம்.
57. S. Kalyanasundaram, **A Short History of Mylapore, p. 27**.

58. மயிலை நாதமுனி முதலியார், **திருமயிலைத் தல புராணம்**, மல்லீசர் சரித்திரம்.
59. " "
60. Census of India 1961, **Temples of Madras State, 1, Chingleput District and Madras City**, p. 204.
61. S. Kalyanasundaram, **A Short History of Mylapore, p. 27**.
62. மயிலை நாதமுனி முதலியார், **திருமயிலைத் தல புராணம்**, விருபாட்சீசர் சரித்திரம்.
63. இரா. நாகசாமி (பதிப்பு), **சென்னை மாநகர்க் கல் வெட்டுகள்**, தொ. எ. 1967/117
64. ,, 1967/125.
65. ,, 1967/121.
66. ,, 1967/120.
67. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்**, காஞ்சிபுரம் சபாபதி முதலியார் பொழிப் புரை, ஆதி கலாநிதி அச்சுக்கூடம், சென்னை, நந்தன மீன ரவி (1892), தீர்த்தச் சருக்கம், பா. 22.
68. இ. மு சுப்பிரமணிய பிள்ளை, **சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**, ப. 134.
69. இரா. நாகசாமி (பதிப்பு), **சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்**, தொ. எ. 1967/137, 138, 146, 149.
70. ,, 1967/143, 148.
71. ', 1967/156.
72. ,, 1967/153.
73. ஏ.கே. செட்டியார் (தொகுத்தவர்), **தமிழ்நாடு**(பயணக் கட்டுரைகள்), வடபழனி பிரஸ், 1968, ப. 98.
74. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), **பத்துப்பாட்டு மூலமும் உரையும்**; முல்லைப்பாட்டு, 3.
75. கே.ஆறுமுக நாவலர், **இந்துமத இணைப்பு விளக்கம்**, தொண்டன் காரியாலய வெளியீடு, மூன்றாம் பதிப்பு, நாகர்கோவில், 1975, ப. 24.
76. **புறநானூறு**, 58:15
77. சு. வித்தியானந்தன், **தமிழர் சால்பு**, ப. 144, அடிக் குறிப்பு 58.
78. **நற்றிணை**, மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1957, பா. 32:1.

79. பதிற்றுப்பத்து மூலமும் உரையும், கழக வெளியீடு, மறுபதிப்பு, சென்னை, 1958, பா. 31:8-9.
80. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), **பத்துப் பாட்டு மூலமும் உரையும்**, 'பெரும்பாணாற்றுப்படை', 373.
81. ,, 'மதுரைக் காஞ்சி', 591.
82. ,, 'முல்லைப் பாட்டு', 2-3.
83. **தொல்காப்பியம்**, பொருளதிகாரம், இளம்பூரணம், கழக வெளியீடு, மறுபதிப்பு, சென்னை, 1982, நூற்பா 5.
84. Census of India 1961, **Temples of Madras State, 1. Chingleput District and Madras City**, p. 201.
85. சி. ஆர். சீனிவாசய்யங்கார், **மயிலாப்பூர் ஸ்ரீ ஆதி கேசவப் பெருமாள், பேயாழ்வார் கோயில் ஸ்தல புராணம்**, பக். 21-22.
86. ,, பக். 32.
87. ,, ப. 36.
88. ,,
89. கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட செய்தி.
90. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, **சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**, பக் 137-138.
91. தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி ஊழியர்கள் வ. கோவிந்தன், இர. திருஞானசம்பந்தன், பா மதன கோபால் (ஆஞ்சனேயர் கோயில் காப்பாளர்கள்) தெரிவித்த செய்திகள்.
92. Census of India 1961, **Temples of Madras State, 1. Chingleput District and Madras City**, p. 203.
93. சு. வித்தியானந்தம், **தமிழர் சால்பு**, ப. 140, அடிக் குறிப்பு 41.
94. **சிலப்பதிகாரம்**, 'வழக்குரை காதை'.
95. இரா. சீனிவாசன், **சக்தி வழிபாடு**, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1975, ப. 32.
96. Census of India 1961, **Temples of Madras State, 1. Chingleput District and Madras City**, p. 201.
97. மயிலை நாதமுனி முதலியார், **திருமயிலைத் தல புராணம்**, முண்டகக் கண்ணம்மை சரித்திரம்.
98. பரம்பரையாகப் பூசை செய்யும் வீரசைவர் திரு. கே. ஆறுமுகம் அவர்கள் கூறிய செய்திகள்.
99. அகில இந்திய சாயி சமாசத் தலைவர் திரு. டி. கேசவ ராவ் அவர்கள் கூறிய செய்திகள்.

100. S. Thanya Kumar, 'Lord Neminatha Temples in Tamil Nadu', **Jain Journal**, Vol. XII, Calcutta, April, 1978, p. 124.
101. கள ஆய்வின் மூலம் பெறப்பட்டது.
102. திரு.மணிகண்ட குருக்கள் தெரிவித்த செய்திகள்.
103. கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட செய்தி.
104. ,,
105. H. D. Love, Vestiges of Old Madras, Vol. I, p 288.
106. ,, p. 289.
107. ,, pp. 292-293.
108. ,, p. 301.



திருமயிலைக் கபாலீசுவரர் திருக்கோயில்
இராஜகோபுரம்



கபாலீசுவரர் திருத்தேரில் உலாவரும் காட்சி



அதிகார நந்தி வாகனத்தில் கபாலீசுவரர்

இயல் 4

அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிற் சிறப்பும் திருவிழாக்களும்

அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிற் சிறப்பும் திருவிழாக்களும்

தமிழ்நாட்டில் பல வகையிலும் சிறந்த பகுதி தொண்டை நாடாகும். தொண்டை நன்னாடு சான்றோருடைத்து என்னும் பழமொழியைப் பெற்று விளங்குகின்றது. தொண்டை நாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் முப்பத்திரண்டு உள்ளன. இவற்றுள் சென்னை மாநகரிலுள்ள திருமயிலாபபூரும் ஒன்றாகும். மயிலையிலுள்ள கச்சேரி சாலைக்குத் தெற்கில் உள்ளது தெற்கு மயிலாபபூர் ஆகும். இக் கச்சேரி சாலைக்குத் தெற்குப் பக்கத்தில், மாட வீதிகளுக்கு நடுவில், திருக்குளத்திற்குக் கிழக்கில் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் காட்சியளிக் கிறது. இக் கோயில் உள்ள பகுதியைக் கபாலீச்சரம் என்றழைக் கின்றனர்.

பெயர்க் காரணம்

சிவபெருமானுடைய திருவுருவங்களில் பிரம சிரச்சேத மூர்த் தியும் ஒன்றாகும்.[1] இந்தத் திருவுருவம் ஏற்பட்டதற்கான கதை களைக் கூர்மபுராணம், வராக புராணம், கந்த புராணம் ஆகிய புராணங்கள் கூறுகின்றன.[2] பிரமன் சிவமூர்த்தியைப் போலத் தானும் ஐந்து சிரம் உடையவனென்று செருக்கடைந்த காலத்தில் அவன் நடுச் சிரத்தைக் கிள்ளிப் பலியேற்ற இச் சிவ உருவத்தைக் கபால மூர்த்தி என்பர்.[3] கபாலம் என்பதற்கு மண்டையோடு என்பது பொருளாகும். கபாலத்தை ஏந்தியவன் கபாலி எனப் பட்டான். சிவபெருமானை ஈசுவரன் என்றழைப்பார். கபாலம் ஏந்திய ஈசுவரன் கபாலீசுவரன் ஆனான். ஈசுவரன் இருக்குமிடம் ஈசுவரம். பல்லவர் காலத்தில் சிவன் திருக்கோயில்களை ஈசுவரம் என்று அழைக்கும் மரபு ஏற்பட்டது. கபாலீசுவரன் இருக்குமிடம் கபாலீசுவரம் என்றழைக்கப்படுகிறது என்று காரணம் கூறுவர். திருஞானசம்பந்தரும் பூம்பாவைப் பதிகத்தின் எல்லாப் பாடல் களிலும் கபாலீச்சரம் என்று திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலைக் குறிப்பிட்டுள்ளார்.[4]

சைவ சமயத்தின் கிளைப் பிரிவுகளில் ஒன்றான காபாலிக மதத்தைச் சார்ந்தவர்களுக்குரியது இக் கோயில். ஆகவே இக் கோயில் காபாலீசுவரம் என்னும் பெயர் பெற்றது என்று மற்றொரு காரணம் கூறுவர். காபாலிகர்கள் அக்காலத்தில் இருந்ததால் திருமயிலைச் சிவன் கோயில் 'காபாலீச்சரம்' என்றழைக்கப்பட்டது என்று மொ. அ. துரையரங்கனார் கூறுகிறார்.[5] அக்காலத்தில் திருவொற்றியூர்ச் சிவன் கோயிலில் காபாலிகர் நிறைந்திருந்ததைப் போலத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலிலும் காபாலிகர்கள் இருந்தது கபாலீசுவரன் என்னும் பெயரினால் புலப்படும்.[6] காபாலிகர்கள் திருவொற்றியூரிலிருந்ததைப் போலத் திருமயிலையிலும் இருந்திருக்க வேண்டும் என்பர்.[7]

திருமயிலையிலுள்ள இறைவன் பெயர் கபாலீசுவரர் அன்று; கபாலீசுவரர் என்றால் கபாலங்களுக்குத் தலைவர் என்று பொருள்படும். ஆகவே இப் பெயர் பொருந்தாது. காபாலிகர்களின் கடவுள் ஆனதால் 'காபாலீசுவரர்' என்பதே அங்குள்ள இறைவனின் பெயர் என்று டேவிட் என். லோரென்சன் கூறுகிறார். மேலும் மகாவீரதியர் என்பவர் காபாலிகரே என்று அவர் கூறுகிறார்.[8] மகாவிரதம் என்பது காபாலி விரதத்தைக் குறிப்பிடும் என்று ஆர். என். நந்தி கூறுகிறார்.[9] பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய திருமயிலை உலா, கபாலீசுவரர் திருவீதி உலாவரும் போது அவரைச் சூழ்ந்தவர்களைக் குறிப்பிடும் போது முதலில்,

> ஆலாலம் உண்டோனை அர்ச்சிக்கும் ஐந்நூற்று
> மேலாம் மகா விரத வேதியர்

என்று மகாவிரத வேதியரைக் குறிப்பிடுகின்றது.[10]

இவற்றால் காபாலிகர்களுக்கு உரியது இக் கோயில். இக் கோயிலிலுள்ள இறைவன் பெயர் காபாலீசுவரர்; இப் பெயரே மருவிக் கபாலீசுவரர் என்று வழங்குகிறது என்று கொள்ளுதலே பொருத்தமுடையதாகும்.

பழைய கோயில் இருந்ததாகக் கூறப்படும் இடம்

கபாலீசுவரர் திருக்கோயில் இப்போதுள்ள இடத்தில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு புதிதாகக் கட்டப்பட்டதென்றும்,

பழைய கோயில் சாந்தோம் கடற்கரையில் இருந்ததென்றும் ஆராய்ச்சி அறிஞருள் ஒரு சாரார் உரைக்கின்றார்கள்; மற்றொரு சாரார் இக் கருத்தை மறுத்து, பழைய கோயில் இப்பொழுது உள்ள இடத்திலேயே இருந்ததென்றும், அது இடிக்கப்பட்டவுடன் அவ்விடத்திலேயே புதிய கோயில் திரும்பக் கட்டப்பட்டதென்றும் கூறுகிறார்கள் இரு சாராரும் தங்கள் ஆராய்ச்சிக்குரிய பொருத்தமான கருத்துகளைத் திருத்தமாகக் கூறுகிறார்கள்.

சாந்தோம் கடற்கரையோரக் கபாலீசுவரர் கோயில்

திரு. எஸ். கல்யாணசுந்தரம் கருத்துகள்

இப்போதுள்ள கபாலீச்சரம் திருஞான சம்பந்தரால் பாடப் பட்டதன்று. பழைய கோயில் கடலுக்கு அடியில் உள்ளது என்று எஸ். கல்யாணசுந்தரம் தன்னுடைய நூலில் கூறுகிறார்.[11] மேலும், திருமயிலாப்பூரைக் கடல் கொண்டதற்கான மரபுவழிச் செய்தி உள்ளது. மாரீஸ் பிலிப்ஸ் (Maurice ·hilips) என்பவர், நில நடுக்கம் ஒன்று ஏற்பட்டதால் மயிலையின் கடற்கரை தாழ்ந்து, கடல் ஊருக்குள் பரவியது என்று கூறுகிறார். கி.பி. 1651 இல் மீனவர் ஒருவரின் தூண்டில் கடலின் அடிப்பகுதியில் சிக்கியது என்றும், அது என்னவென்று பார்த்தபோது நங்கூரமாக இருந்தது என்றும் நங்கூரத்தின் குத்துக் கம்பில் களிமண் படிந்து இருந்தது என்றும் இதனைக் கொண்டு அப் பகுதி முற்காலத்தில் நிலப்பகுதியாக இருக்க வேண்டும் என்று மானுக்கி (Mannucci) குறிப்பிட்டுள்ளார். கடற்கரையோரமாகவே நன்னீர் பூமியில் கிடைப்பதாலும், கடற்கரை அருகிலேயே களிமண் நிலம் காணப் படுவதாலும், முற்காலத்தில் கடல் இப்போதுள்ள இடத்திலிருந்து மிகத் தொலைவில் இருந்திருக்க வேண்டும் என்று கூறிப் பழைய கோயில் கடலால் கொள்ளப்பட்டது என்ற முடிவுக்கு எஸ். கல்யாண சுந்தரம் வருகிறார்.[12]

திரு. பம்மல் சம்பந்த முதலியார் கருத்துகள்

இப்போதுள்ள கபாலீசுவரர் கோயில் பழைய கோயில் அன்று என்றும், சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப் பட்ட புதிய கோயில் என்றும், பழைய கோயில் கடற்கரையோரம் இருந்ததாகவும் அது போர்த்துகீசியர்களால் அழிக்கப்பட்டதாகவும் வரலாற்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர் என்று தன்னுடைய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இப்போதுள்ள கோயிலிலுள்ள சிற்பங்கள் விஜயநகர அரசர் காலத்துக்குப் பிற்பட்டவை என்பதாலும், கோயில் வரலாற்றை உணர்த்தும் பழைய கல்வெட்டுகள் எதுவும் இல்லாததினாலும் சுவாமி சந்நிதி மேற்குப் பார்த்திருப்பதாலும் இக்கோயில் புதிய கோயில் என்று கொள்ளலாம். மேலும், எல்லாப் பெரிய கோயில்களிலும் முற்காலத்தில் கோயில் குளமானது சுவாமியைத் தரிசிக்க வரும் அடியார்கள் சுத்தம் செய்து கொள்வதற்காகக் கோயில்களின் முன்புறமே அமைக்கப்பட்டிருக்கிறது. மயிலாப்பூர் பெரிய குளம் கோயிலுக்குப் பின்புறம் வெட்டப்பட்டிருப்பதும் இக்கோயில் அண்மைக்காலத்தில் கட்டப்பட்டது என்பதற்கு ஆதாரமாகும்.

பழைய கோயில் இப்போதிருக்கும் சாந்தோம் மாதா கோயில் உள்ள இடத்திலோ அல்லது அதன் அருகிலோ இருந்திருத்தல் வேண்டும். நாகப்பட்டினம் முதல் சென்னை வரையில் இருந்த கோயில்களை எல்லாம் அழித்த போர்த்துக்கீசியர்கள் சாந்தோமில் தங்களுடைய முக்கியமான இடமான செயின்ட் தாமஸின் ஆலயத்துக்கு அருகில் ஓர் இந்து ஆலயத்தை இருக்க விட்டிருக்க மாட்டார்கள்.

மேலும், மேற்குறித்த இடத்தில் ஒரு பழைய ஆலயம் இருந்ததென்பதற்கு ஒரு முக்கியமான ஆதாரம் உண்டு. அறுபது ஆண்டுகளுக்கு முன்பு,[13] மயிலைக்கு எதிரில் இருக்கும் கடற்கரை சற்றே உள்நோக்கி வந்தபோது அலைகள் மோதுதலினால் உடைபட்டு மணற்கரை கரைந்தபோது அங்குச் சிவாலயத்திற்குரிய கற்றூண்கள் முதலியன கண்டெடுக்கப்பட்டன. ஆயினும் இது இன்னும் ஆராயத்தக்க செய்தி. ஆகவே, பழைய கோயில் எங்கு இருந்தது என்பதை நிச்சயமாகக் கூறுவதற்கில்லை' என்று பம்மல் சம்பந்த முதலியார் கூறுகிறார்.[14]

இவரே, 'சிவாலயங்கள்—இந்தியாவிலும் அப்பாலும்' என்னும் நூலில் 'பழைய கோயில் சமுத்திரக் கரையோரம் இருந்தது; போர்த்துக்கீசியரால் இடிக்கப்பட்டதென்று எண்ணுவதற்கிடமுண்டு' என்று குறிப்பிட்டுள்ளார்.[15]

திரு. சி. எம். ராமசந்திர செட்டியார் கருத்துகள்

தற்போது இருக்கும் கோயில் 300 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. பழைய கோயில் கடற்கரையில் இருந்ததாம்.

பறங்கியர்கள் அதனை இடித்துத் தமது பள்ளிகளைக் கட்டிச் சுற்றிலும் கோட்டையையும் எழுப்பிக் கொண்டார்கள். ஒரு பள்ளியைப் பழுது பார்ப்பதற்காக 40 ஆண்டுகளுக்கு முன் நிலத்தைத் தோண்டிப் பார்த்ததில் பல உருவச் சிலைகளும் கற்களும் கிடைத்தன.[16] அவைகளைக் கொண்டு அந்த இடத்தில் பழைய கோயில் இருந்ததாக ஊகிக்கலாம். இடித்த பழைய கோயிலின் கற்களைக் கொண்டு புதுக் கோயில் தற்போது இருக்கும் இடத்தில் கட்டப்பட்டது. அப்போது கல்வெட்டுகளின் அருமையை அறியாது அவைகளைத் தாறுமாறாக இணைத்து விட்டார்கள் ஈழ நாட்டுத் திருக்கோணமலை, துளுவ நாட்டுக் கோவை (Gova) முதலிய இடங்களில் பறங்கியர் 400 ஆண்டுகளுக்கு முன் செய்தவண்ணமே இம் மயிலையிலும் பறங்கியர்கள் கோயிலையும் மனைகளையும் இடித்துப் பள்ளியும் கோட்டையும் கட்டியிருக்கக்கூடும். அதற்குச் சான்றுகள் மேல் கூறிய புதைந்த கல்வெட்டுகளேயன்றிக் கோட்டைத்தெரு என்ற வழக்கப் பெயரும், கொடிமரம் முதலிய சின்னங்களுமேயாம் என்று சி. எம். இராமச்சந்திர செட்டியார் கருதுகிறார்.[17]

திரு. ம பாலசுப்பிரமணிய முதலியார் கருத்துக்கள்

பழைய ஆலயம் இப்போது சாந்தோம் கதீட்ரல் உள்ள இடத்திலிருந்தது. அருணகிரிநாதர் காலம் வரையில் (கி.பி 1540) கடற்கரையிலிருந்து ; 'கடலக்கரை திரையருகே சூழ் மயிலைப் பதிதனில் உறைவோனே' என்ற திருப்புகழ்ப் பகுதியால் துலங்கும். கி. பி 1516இல் மயிலாப்பூர் போர்த்துக்கீசியர் கையில் சிக்கியது. சில ஆண்டுகளுக்குள் அவர்கள் ஆலயத்தைத் தகர்த்துக் கோட்டையும், தங்கள் தொழுகைக்கு இடமும் கட்டினார்கள். கி. பி. 1672க்கு முன்பு இப்போதுள்ள இடத்தில் ஆலயம் கட்டப்பட்டிருக்க வேண்டும். அவ்வாண்டில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் மூர் துருக்கருக்கும் நடந்த போரில் பிரெஞ்சுச் சேனையின் ஒரு பகுதி இப்போதுள்ள ஆலயத்தில் பதுங்கியிருந்தது. சாந்தோம் கதீட்ரல் நாற்பது ஆண்டுகளுக்கு முன் பழுது பார்க்கப்பட்டது.[18] நிலத்தை அகழ்ந்தபோது பழைய சிவாலயத்தின் கற்களும் கல்வெட்டுகளும் கிடைத்தன. அவை அரசாங்கத்தினரால் 215-223/1923 என்று குறிக்கப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டில் கூத்தாடு தேவர்க்கு விளக்கு வைத்த செய்தியும், மற்றொன்றில் முதல் இராஜராஜன் மெய்க்கீர்த்தியும், மற்றொன்றில் பூம்பாவை பற்றிய குறிப்பும் உள்ளன. ஆகவே, பழைய கோயில் கடற்கரையருகில் இருந்தது என்றும், போர்த்துக்கீசியரால் அழிக்கப்பட்டது என்றும் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் கருதுகின்றார்.[19]

திரு கே. வி இராமன் கருத்துகள்

இப்போதுள்ள கபாலீசுவரர் கோயில், நாயன்மார்களால் பாடப் பெற்ற பழைய கபாலீசுவரர் கோயில் என்ற பொதுவான நம்பிக்கை மக்களிடையே நிலவி வருகிறது. ஆனால், தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் சாந்தோமில் கண்டெடுத்த புதை பொருள்களிலிருந்து பழைய கோயில் வேறு இடத்தில் இருந் திருக்க வேண்டும் என்றும், பெரும்பாலும் சாந்தோம் கடற் கரையாக இருக்கலாம் என்றும் எண்ணவேண்டியிருக்கிறது. சி. எம். இராமச்சந்திர செட்டியார் கருத்துகளின்படி பார்த்தால் இப்போதுள்ள கபாலீசுவரர் கோயில் பழைய கோயில் இருந்த இடத்திலேயே முற்றிலும் புதிதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும் அல்லது பழைய கோயில் இருந்த இடத்தைக் கைவிட்டு விட்டு, வேறு இடத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் கருத வேண்டியிருக்கிறது. இவற்றுள் இரண் டாவது கருத்தே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. பழைய கபாலீசுவார் கோயிலின் இடிபாடுகள் இப்போதுள்ள கோயி லுக்குச் சிறிது தொலைவில் கிழக்குத் திசையில் சாந்தோம் கடற்கரையருகே கண்டு எடுக்கப்பட்டதே இதற்குக் காரண மாகும்.

1923இல் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் சாந்தோம் கதீட்ரலில் நிகழ்த்திய :அகழ்வாராய்ச்சிசளால் கல்வெட்டுகளும், தூண்களும், சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன. கல்வெட்டுகள் சிவன் கோயிலைக் குறிக்கின்றன. கற்றூண்களிலும் கல் வெட்டுகள் காணப்பெறுகின்றன. மயிலோடு கூடிய ழுருகர் சிலையும் கண்டெடுக்கப்பட்டது 1921இல் மறைத்திரு ஹோஸ் டன், சாந்தோம் கதீட்ரலில் கண்டெடுத்த வடமொழிக் கல் வெட்டு 'கருவறை உட்பட எல்லாக் கட்டிடங்களும் மயிலாப்பூரி லுள்ள புகழ்பெற்ற சிவனுக்கும் பார்வதிக்கும் உரியவையாகும்' என்று குறிப்பிடுகிறது. மற்றொரு தானக் கல்வெட்டில், 'திருமயிலாப்பில் பூம்பாவை' என்று குறிப்பிடப்படுவசாலும், பழைய கபாலீசுவரர் கோயில் கடற்கரையருகே இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

திரு. சி.எஸ். சீனிவாசாசாரியார் அவர்களும் பழைய கோயில் கடற்கரையருகே இருந்திருக்க வேண்டும். கடல்கோளால் அக் கோயில் கைவிடப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார். சமணர் மரபுவழிச் செய்தியும் கடல்கோளைப்பற்றிக் கூறுகிறது.

பழைய கோயில் எப்போது கைவிடப்பட்டது. புதிய கோயில் எப்போது கட்டப்பட்டது என்பதும் தெரியவில்லை. அருணகிரி நாதர், திருப்புகழில் கபாலீசுவரர் கோயில் கடற்கரை அருகே இருந்தது என்று குறிப்பிடுவதால், பழைய கோயில் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டுவரை கடற்கரையருகே இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம் என்று கே. வி. இராமன் கருதுகிறார்.[20]

இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்புத்துறை வெளியிட்ட சென்னை மாநிலக் கோயில்கள் (Temples of Madras State) என்னும் நூலில் காணப்படும் கருத்துகள்

கி. பி. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சாந்தோம் கடற்கரையிலிருந்த கோயில் போர்த்துக்கீசியர்களால் அழிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்நூல் கூறும் புதிய செய்தி, இப்போதுள்ள கபாலீசுவரர் கோயிலும், குளமும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன், மயிலை நாட்டு முத்தையப்ப முதலியாராலும் அவருடைய வாரிசுகளினாலும் கட்டப்பட்டது என்பதேயாகும். இச் செய்திக்கான ஆதாரத்தை இந் நூல் குறிப்பிடவில்லை.[21]

என். எஸ். இராமசாமியின் கருத்துகள்

1. மு. கோ. ராமன் பதிப்பித்த திருமயிலை உலா என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு இப்போதுள்ள கபாலீசுவரர் கோயிலை நயினியப்பன் புதல்வன் முத்தியப்பன் கட்டினான்.

2. பழைய கோயிலின் இடிபாடுகளிலிருந்து இக் கோயில் கட்டப்பட்டதன்று.

3. கி.பி. 1697இல் சாந்தோம் கோட்டை இடிக்கப்பட்டது. அக் கோட்டையின் இடிபாடுகளைக் கொண்டு இக் கோயிலை முத்தியப்பன் கட்டினான். பழைய கோயில் திரும்பக் கட்டப் பெற்றது என்பது பொருந்தாததாகும் என்பவையேயாகும்.[22]

இச் செய்தி, திருமயிலை உலா வெளியான பிறகு கிடைத்த புதிய செய்தி என்று குறிப்பிடுகின்றார். ஆனால், இச் செய்தி,

இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்புத்துறை, 1965இல் வெளியிட்ட 'Temples of Madras State', Chingleput District and Madras City என்னும் நூலில் முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, இது புதிய செய்தியன்று.[23]

இப்போதுள்ள கோயிலே பழைய கோயில் என்பார் கருத்துகள்

இ. மு. சுப்பிரமணிய பிள்ளையின் கருத்துகள்

'கோவில் மேற்கே பார்த்த கோவில். இது கிழக்கே பார்த்து இருந்தது என்பதற்கு ஏற்ற காரணங்கள் இல்லை. இப்போதுள்ள கோவில் 'கடற்கரையில் இல்லையே' என்று கூறுகின்றார்கள். இப்போதும் கடற்கரையில்தான் இருக்கிறது என்பதில் என்ன தடை? ஐம்பதாண்டுகளுக்கு முன் இங்கே வந்து குடியேறியுள்ள பெரியார்கள் சிலர் இன்றும் இருக்கிறார்கள்.[24] அவர் இங்கே வந்த காலத்தில் கடல் சாந்தோம் மாதா கோயில் அருகே இருந்தது எனவும் இந்த நாற்பது ஐம்பது ஆண்டுகளில் மிகுதூரம் கிழக்கே கடல் தள்ளிப் போய் விட்டது என்றும் கூறுகிறார். ஆராய்ச்சி அறிஞர், 'இப் பகுதிக்குக் கடல் கிழக்கேதான் தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறது. இராயபுரம் பகுதியில் கடல் உள்ளே வந்து கொண்டேயிருக்கிறபடியால் இப்போதுள்ள இராயபுரத்தார் அதனைத் தடுக்கத் தக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள்' என்று கூறுவது மறுக்க முடியாத உண்மை. ஆதலின் பண்டைக் காலத்தில் கடல் மேற்கே மிகவும் தள்ளி இப்போதுள்ள கோவிலுக்கு நெருங்கி இருந்திருத்தலும் கூடும். ஆதலின் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கடல் மேற்கே ஏறி மணலை அரித்ததென்பதும் அப்போது சிவன் கோயிலுக்குரிய தூண்கள் வெளிப் போந்தன என்பதும் நிகழ்ந்திருத்தல் முடியாது'.[25]

பழைய கபாலீசுவரர் கோயிலைப் போர்த்துக்கீசியர்கள் இடித்ததும் மயிலை மக்கள் இக் கோயிலைப் பெரும்பாலும் அக் கற்களைக் கொண்டே திரும்பக் கட்டினார்கள்.

ஆழ்வார்கள், அப்பர், ஞானசம்பந்தர் காலத்திலேயும் திருக் கோயிலைச் சூழ மாட வீதிகள் இருந்தமை அவர்தம் பாடல்களால் புலப்படுகிறது. இப்பொழுதும் அழகிய மாடவீதிகள் உள்ளன.

கபாலிப் பெருமான் மேற்கே பார்த்திருப்பது இப்போதுள்ள கோயில் புதுக் கோயில் என்பதற்குக் காரணம் ஆகாது. திருவான்மியூரிலும், திருநெல்வேலி மாவட்டம் அம்பா சமுத்திரம் வட்டத்தைச் சேர்ந்த சிவசயிலம் திருக்கோயிலிலும் இறைவன் மேற்கே பார்க்கவே இருக்கின்றான்.

கபாலி நாயகன் திருக்கோயிலில் கல்வெட்டு இல்லாமைக்குக் காரணம் சூழ உள்ள சுவர் கற்கட்டில்லாமல் செங்கற்கட்டாக இருப்பதும், சூழக் கூத்தப் பெருமான், அறுபத்து மூவர் ஆகிய இவர்கள் எழுந்தருளியிருத்தலுமே ஆகும் பண்டைக் கோயில்கள் செங்கற் கோயில்களாகவே எழுந்தன என்பது ஆராய்ச்சி அறிஞர் கண்ட உண்மை.

கடற்கரை அருகே இருந்தது சமணர் கோயில்; அதுதான் இடிக்கப்பட்டது. அஸ்திக் குட்டை (எலும்பு) என்று ஒன்று கோயிலின் தென் மேற்கில் இப்போதுள்ள இராமக்கிருட்டினர் திருமடத்தின் அருகே இருப்பதும், அங்கே உள்ள மடத்து மருத்துவச்சாலை இன்றும் அஸ்திக் குட்டை ஆசுப்பத்திரி என்று வழங்கி வருவதும், அப் பகுதிதான், மயிலாப்பூரின் சுடுகாடாக இருந்தது, அதிலேதான் பூம்பாவையை எரித்து அவளுடைய அஸ்தியை எடுத்து வைத்தார்கள் என்பதும் ஆகியவை, உண்மைகளை ஆராய்ச்சியாளருக்குப் புலப்படுத்துவனவாகும் என்று இ. மு. சுப்பிரமணிய பிள்ளை கூறி, இப்போதுள்ள கோயில் இருந்த இடத்திலேயே திரும்பக் கட்டப்பட்டது என்று விளக்குகின்றார்.[26]

முடிபு

கபாலீசுவரர் கோயில் இருக்குமிடம் பற்றிய கருத்துகள் இரண்டாகும். முதல் கருத்து, பழைய கபாலீசுவரர் கோயில், சாந்தோம் கடற்கரையருகே இருந்தது; இரண்டாவது கருத்து இப்போது கோயில் இருக்குமிடத்திலேயே பழைய கோயில் இருந்தது என்பதுமேயாகும்.

முதல் கருத்தைச் சான்றுகள் காட்டி வலியுறுத்துகிறவர்கள் எஸ். கல்யாண சுந்தரம், பம்மல் சம்பந்த முதலியார், சி. எம். இராமச்சந்திர செட்டியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், கே. வி இராமன், என். எஸ். இராமசாமி ஆகியோர் ஆவர். இவர்கள் காட்டும் சான்றுகள் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் உள்ளன.

இரண்டாவது கருத்தைச் சான்றுகள் காட்டி வலியுறுத்துகிறவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை., அவர் இப்போதுள்ள கோயிலுக்கு அருகே முற்காலத்தில் கடல் இருந்தது என்று கூறுகிறார். இவர் கருத்துக்கு எஸ். கல்யாண சுந்தரம் கூறும் கருத்து மறுப்பாக அமையும். அவர் இப்போதுள்ள கடல் பகுதியிலேயே நிலப்பகுதி இருந்திருக்க வேண்டுமென்பதைத் தக்க ஆதாரங்களோடு காட்டுகிறார். எனவே, கடற்கரை அருகே பழைய கோயில் இருந்ததென்பதே பொருந்துவதாகும்.[27]

இரண்டாவது முக்கிய காரணமாக, பழைய கபாலீசுவரர் கோயிலைப் போர்த்துக்கீசியர் இடித்ததும் மயிலை மக்கள் இக் கோயிலைப்பழைய கற்களைக் கொண்டு அதே இடத்தில் திரும்பக் கட்டினார்கள் என்று கூறுகின்றார். இக் கருத்தை மறுப்பதற்குத் திருமயிலை உலா பெரிதும்உதவுகிறது. இந் நூலில் இப்போதுள்ள கபாலீசுவரர் கோயிலும், குளமும், மண்டபங்களும், மாடவீதிகளும், நந்தவனங்களும் மற்று உளவும் நேசமுடனே முத்தியப்பன் அமைத்தான் என்று கூறப்பெறுவதால்,[28] இக் கோயில் பழைய கோயில் இருந்த இடத்தில் திரும்பக் கட்டப்பட்ட (rebuilt) கோயிலன்று; புதிதாக வேறு இடத்தில் கட்டப்பட்ட கோயில் என்பது நன்கு விளங்கும்.

மூன்றாவது காரணம், அழகிய மாடவீதிகளை உடையது மயிலை என்று ஆழ்வார்கள், அப்பர், சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்கள். இப்பொழுதும் அழகிய மாடவீதிகள் உள்ளன. ஆகவே இது பழைய கோயில் என்று கூறுகிறார்.

இப்போதுள்ள கோயில், குளம், மாடவீதி ஆகியவைகள் இருக்குமிடம் மயிலையின் தெற்குப் பகுதி. இப் பகுதி புதிதாக ஏற்பட்ட பகுதி என்பது எஸ். கல்யாணசுந்தரம் அவர்கள் ‘ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் மாடவீதிகளில் ஒரு சில வீடுகளே இருந்தன’ என்று கூறுவதால் புலப்படும்.[29]

நூறாண்டுகளுக்கு முன் மாடவீதிகளைச் சுற்றிச் சத்திரங்களும், மடங்களுமே இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. குன்றக்குடி ஆதீனம், குமார தேவர் மடம் ஆகியவையும், சித்திரச் சத்திரம் முதலிய சத்திரங்களும் இன்றும் உள்ளன. சத்திரங்கள்தான் வீடுகளாக மாறின என்பதை அவ் வீடுகளைச் சென்று பார்த்தாலே புலப்படும். அது மட்டுமல்லாமல் ‘முத்தியப்பன் மாடவீதிகள் அமைத்தான்’ என்று தெளிவாகத்

திருமயிலை உலா கூறுவதாலும் இப்போதுள்ள கோயில் பழைய கபாலீச்சரம் அன்று என்பது புலப்படும்.[30]

நான்காவது முக்கியக் காரணமாக 'அஸ்திக்குட்டை' என்ற குட்டையைப் பூம்பாவை வரலாற்றோடு தொடர்புபடுத்திப் பழையகோயில் என்று கூறுகின்றார். இது அஸ்திக்குட்டையன்று; அத்திக்குட்டையாகும். இங்கு முன்பு அத்தி மரங்கள் நிறைந் திருந்தன. நடுவில் குட்டையொன்று இருந்தது. ஆகவே, அத்திக்குட்டை என்று வழங்கப்பட்டது. இதற்கும் பூம்பாவை வரலாற்றுக்கும் தொடர்பு கிடையாது என்பர்.

ஆகவே, இக் காரணங்களால் இப்போதுள்ள கோயில் கி.பி. 16ஆம் நூற்றுண்டில் மயிலை நாட்டு நயினியப்ப முதலியார் குமாரன் முத்தியப்ப முதலியாரால் கட்டப்பெற்ற புதிய கோயில் என்பது தெளிவாகப் புலனாகும்.

கடற்கரை அருகே இருந்த பழைய கோயில் அழிந்ததற்கான காரணங்களாக இரண்டினைக் கூறுகின்றனர். அவை, 1. கடல் கோளால் அழிந்தது; 2. போர்த்துக்கீசியரால் அழிக்கப்பட்டது என்பவையாகும். கடல்கோளால் அழிந்ததற்கு நேமிநாதர் கோயில் தொடர்பான, சமணர் மரபுவழிச் செய்திகளைக் கூறு கின்றனர். இக் கருத்தை மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் மறுத்து, காலப் போக்கில் கடல் பின் சென்றது; கடலால் கோயில் அழியவில்லை. போர்த்துக்கீசியர்களால் நேமிநாதர் கோயிலும் கபாலீசுவரர் கோயிலும் அழிக்கப்பட்டது' என்று கூறுவ தாலும்,[31] போர்த்துக்கீசியர்கள் இந்துக் கோயில்களை அழித்த செய்தியைக் கேள்விப்பட்டு இராமராயர் கி. பி. 1558 இல் சாந்தோம் மீது படை எடுத்துப் போர்த்துக்கீசியரைப் பணிய வைத்துப் பின்னர்ப் பழுதுபட்ட கோயில்களைப் பழுதுபார்க்க ஆணையிட்ட செய்தியாலும்[32] பழைய கபாலீசுவரர் கோயில் போர்த்துக்கீசியர்களால் அழிக்கப்பட்டது என்ற முடிவுக்கு வரலாம்.

ஆகவே, முடிபாக, பழைய கபாலீசுவரர் கோயில், கடற் கரை அருகே இருந்ததென்பதையும் கி. பி. பதினைந்தாம் நூற் றாண்டின் இறுதியில் போர்த்துக்கீசியரால் அழிக்கப்பட்ட தென்பதையும் கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் இப்போதுள்ள இடத்தில் புதிய கோயில், மயிலை நாட்டு நயினியப்ப முதலியார் மகன் முத்தியப்ப முதலியாரால் கட்டப் பெற்றது என்பதையும் தெற்றென உணரலாம்.

கோயில் அமைப்பு

கோயில்கள் மனிதர் உடம்பின் வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனை 'க்ஷேத்திரம் சரீரப் பிரஸ்தாரம்' என்பர். கோயில் மனிதர் உடம்பு போல அமைக்கப்பட்டிருக்கிறது என்பது இதன் பொருள். இதனை வேறொரு முறையிலும் உடம்போடு ஒப்பிட்டுக் கூறுவர். மனித உடம்பில் உள்ள பாதங்கள் கோபுரம் ; முழங்கால் ஆஸ்தான மண்டபம்; துடை நிருத்த மண்டபம், தொப்புள் பலிபீடம், மார்பு மகா மண்டபம், கழுத்து அர்த்த மண்டபம், சிரம் கருப்பக்கிருகம், சிரத்தில் உள்ள இரு செவிகளில் வலச் செவி தக்ஷிணாமூர்த்தி, இடச்செவி சண்டிகேசுவரர். மார்பில் நடராஜர், கழுத்தில் நந்தி, வாய் ஸ்நபந மண்டப வாசல், மூக்கு ஸ்நபந மண்டபம், புருவ மத்தி லிங்கம், தலையின் உச்சி விமானமாகும்.[33]

கோயிலில் மூல விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்துள்ள கருவறை மிகச் சிறியதாக, அருச்சகர் மட்டும் நின்று தொண்டு செய்யும் இடமாக அமையும். அதனையடுத்து அர்த்த மண்டபம், கருவறையை விடச் சிறிது பெரிதாக இருக்கும். இங்கு நின்றபடி அருச்சகர் தீபாராதனை செய்வர். இதனையடுத்து மேலும் அகலமாக அமைக்கப்படுவதே மகா மண்டபம். இவை தவிரச் சுற்றுப் பிரகாரங்களும், நடன அரங்குகளும், திருச்சுற்று மதில்கள், கோபுரங்கள், கருவறையின் மீது விமானம் ஆகியவையும் கட்டப் பெறும் வழக்கம் உண்டு.

சைவத் திருக்கோயில்களில் முதன்மைத்தெய்வம் சிவலிங்கமேயாகும். பரிவார தெய்வங்கள் என்ற நிலையில் விநாயகர் முருகர் ஆகியோரையும் பிரதிட்டை செய்வர். கருவறை வாயிலில் துவார பாலகர் இருவர் நிற்பர். கருபபக் கிருகத்தில் வெளிப்புறம் தெற்குச் சுவரில் தட்சிணா மூர்த்தியினையும் மேற்குச்சுவரில் லிங்கோத்பவ மூர்த்தியினையும் வடக்குச் சுவரில் துர்க்கையினையும் தாபிப்பர். துர்க்கைக்கு எதிரே எதிர் முகமாகத் தனியே சண்டேசுரரைத் தாபிப்பர். அவர் தெற்கு நோக்கி இருப்பார். சோமாஸ்கந்தர், சபாபதி, பைரவர் போன்ற சிவன் திருக்கோலங்களும் சுற்றுத் தெய்வங்களாகப் பிரதிட்டிக்கப்படுதல் உண்டு. அறுபத்து மூன்று நாயன்மார்கள் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். வெளிப்பிரகாரத்தில் வாயிலுக்கு நேரே பலிபீடம், பெரிய நந்தி, கொடிமரம் ஆகியவை இடம் பெறும். நவக்கிரகங்களைப் பிரதிட்டை செய்யும் வழக்கம் பிற்காலத்தில்

ஏற்பட்டது. நாளடைவில் சிவன் தவிர விநாயகர், முருகன் போன்ற தெய்வத் திருக்கோலங்களும் முதன்மைத் திருக்கோலங்களாகக் கோயில்களில் பிரதிட்டிக்கப்படலாயின.[34] இதுவே சிவன் கோயிலின் பொதுவான அமைப்பு முறையாகும். இத்தகைய முறையிலேயே கபாலீசுவரர் கோயில் அமைப்பும் உள்ளது.

கபாலீசுவரர் கோயில் அமைப்பு

கோயில் எல்லை

கிழக்கில் பொன்னம்பல வாத்தியார் தெரு, மேற்கில் கிழக்குக் குளக்கரைத் தெரு, தெற்கில் குமரகுருநாத முதலி தெரு, வடக்கில் வடக்கு மாடவீதி ஆகியவைகளை எல்லையாகக் கொண்டு திருச்சுற்று மதிலோடு கபாலீசுவரர் திருக்கோயில் ஏறத்தாழ இரண்டு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.[35]

இராஜகோபுரம்

கோயிலின் கிழக்குப் பகுதியில் இராஜகோபுரம் உள்ளது. இது எழுநிலை மாடங்களோடு உள்ளது. இக்கோபுரம் ஏறத்தாழ கி. பி. 1902ஆம் ஆண்டு வாக்கில் கட்டப் பெற்றதென்று கூறுகின்றனர்.[36] இக்கோபுரத்தின் உயரம் சற்றேறக்குறைய 125 அடிகளாகும். இந்த இராஜகோபுரம், கபாலீசுவரர் கோயில் அறங்காவலர் அரசூர் பார்த்தசாரதி முதலியார் அவர்களால் 1947ஆம் ஆண்டு, சீர்திருத்தம் செய்யப்பெற்றது.[37] 1948ஆம் ஆண்டு, கும்பாபிடேகம் நடந்தது. 1982ஆம் ஆண்டில் கும்பாபிடேகம் நடைபெற்றபோது மீண்டும் இக் கோபுரம் சீர்திருத்தம் செய்யப் பெற்றது.[38]

கூத்தாடும் பிள்ளையார்

இராஜகோபுரம் வழியாக உள்ளே நுழைந்தவுடன் கூத்தாடும் பிள்ளையார் சந்நிதி உள்ளது. அதை அடுத்த சந்நிதியில் அண்ணாமலையாரும். உண்ணாமுலையம்மையும் கோயில் கொண்டுள்ளனர். எதிர்ப்புறத்தில் பசுமடம், வாகன அறைகள், மடைப்பள்ளி ஆகியவை தென்கிழக்கு மதில் சுவரை ஒட்டி அமைந்துள்ளன.

சிங்காரவேலர்

தெற்குப் பிரகாரத்தில் சிங்காரவேலர் சந்நிதி உள்ளது. இங்கு ஆறுமுகன், வள்ளி தெய்வானையோடு காட்சி தருகிறார். தெற்குப்பிரகார மதில் சுவரை ஒட்டி நீர் இறைக்கும் அறையும், சந்தனக்கிடங்கும், சற்றுத் தள்ளிக் கிணறும் உள்ளன.

திருமுறை மண்டபம்

தெற்குப் பிரகாரத்தின் இறுதியில் பழனி ஆண்டவர், வாயிலார் நாயனார் சந்நிதிகள், வில்வ மரம் ஆகியவை உள்ளன. வாயிலார் நாயனார் சந்நிதிக்கு எதிரில் வேத மண்டபம் உள்ளது. வாயிலார் சந்நிதிக்குப் பககத்தில் நூலகம் உள்ளது. நூலகத்தை அடுத்துத் துவஜாரோஹண மண்டபம் பன்னிரு கால்களோடு காட்சியளிக்கிறது. இந்த மண்டபத்தில் நவராத்திரியில் கற்பக வல்லி கொலு வீற்றிருப்பாள். இம் மண்டபதைத் திருமுறை மண்டபம் என்றும் அழைப்பர். மேற்குப் பிரகாரத்தில் அருணகிரி நாதர் சந்நிதி கி.பி. 1980இல் சிங்காரவேலர் சந்நிதியின் எதிர்ப் புறத்தில் கட்டப்பட்டுள்ளது.

மேலைக்கோபுரம்

சிறிய மேலைக் கோபுரம் அமைந்துள்ளது. இந்தக் கோபுரத்தின் வெளிப்புறத்தில் வடக்குப் பக்கத்தில் கற்பக விநாயகரும் தெற்குப் பக்கத்தில் பாலமுருகனும் காட்சியளிக்கின்றனர். மேலைக் கோபுர வாயிலுக்கு எதிரில் கொடி மரம், பலிபீடம், நந்தி ஆகியவை உள்ளன. அடுத்து மகா மண்டபம் உள்ளது. விநாயகர், முருகர் ஆகியோருடைய திருவுருவங்கள் கபாலீசுவரர் சந்நிதிக்கு முன்னால் காணப்பெறுகின்றன. இதன் அருகில் சிங்காரவேலரின் உற்சவர் சிலை உள்ளது.

கபாலீசுவரர் சந்நிதி

கபாலீசுவரர் திருச்சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. சந்நிதி முன் துவார பாலகர்களும், அலங்காரப் பிரபைத் தீபமும், கருவறையினுள் சூரிய சந்திரப் பிரபை அலங்கார விளக்கும் உள்ளன. இச் சந்நிதி உட்பிரகாரத்தில் முருகன், வள்ளி, தெய்வயானை உற்சவ மூர்த்திகள் சந்நிதி, நடராஜர், சிவகாமசுந்தரி, பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர், மாணிக்க வாசகர் சந்நிதிகளும் உள்ளன.

இவற்றையடுத்துச் சந்திரசேகரர், பார்வதி, பிச்சாடனார், ஆறுமுகப் பெருமான், கூத்தாடும் கணபதி, சண்டிகேசுவரர் ஆகியோரும், அறுபத்து மூன்று நாயன்மார்களின் உற்சவச் சிலைகளும் காட்சியளிக்கின்றன. இவற்றை அடுத்துத் துர்க்கா பரமேஸ்வரி கருவறையின வடக்குச் சுவரில் காட்சியளிக்கிறார். அடுத்துக் கோமுகம், அதற்கு மேலே பிரம தேவன், கீழே சண்டி கேசுவரர், எதிரில் சரசுவதி, துர்க்கை, இலட்சுமி, விசுவநாதர், விசாலாட்சி அம்மன், நாகலிங்கங்கள், பைரவமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.

அடுத்துச் சங்கரலிங்கம், அகோர வீரபத்திரர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகரும் உள்ளனர். அடுத்து நந்தியும், பொல்லாப் பிள்ளையாரும் உள்ளனர். அதற்கு எதிரே கருவறையின் பின்புறம் இலிங்கோத்பவர் காட்சி அளிக்கிறார். பொல்லாப் பிள்ளையார் அருகில் வரிசையாக அறுபத்து மூவரின் மூலவர்கள் உள்ளனர். தென்கிழக்குத் திசையில் அறுபத்து மூவருக்கு நடுவே சூரிய பகவான் சிலை உள்ளது.

தெற்குப் பிரகாரத்தில் கருவறைச் சுவரில் தட்சிணாமூர்த்தி சிலை உள்ளது. பிள்ளையார் திருவுருவச்சிலையும் பக்கத்தில் உள்ளது. அடுத்து, கற்பவல்லி சோமசுந்தரர் உற்சவ மூர்த்திகள் உள்ளன.

கற்பகவல்லி சந்நிதி

அடுத்து, கற்பகவல்லியம்மையின் சந்நிதி உள்ளது. சந்நிதியின் உள்ளே இடப்புறம் இறைவனின் பள்ளியறை உள்ளது.

மகா மண்டபத்தின் தெற்குப்புறத் தூணில் இராமர், இலட்சுமணர், சீதை, அனுமன் ஆகியோர் திருவுருவம் உள்ள தூண் உள்ளது.

அங்கம்பூம்பாவை

மேற்குக் கோபுர வாயிலின் உள்புறத்தில் வடக்குப் பக்கத்தில் அங்கம்பூம்பாவை சந்நிதி உள்ளது. அதற்கு எதிரில் பெரிய கோயில் மணி உள்ளது. பூம்பாவை சந்நிதியை அடுத்து வாகனக் கிடங்குகள் உள்ளன.

வாகனக் கிடங்குகள்

வடக்குப் பிரகாரத்திலும் வரிசையாக வாகனங்களை வைக்கும் அறைகள் உள்ளன. அந்த வரிசையில் கிழக்குப் பகுதியில் ஆலய அலுவலகம், யாக சாலை, கல்யாண மண்டபம், வாகனக் கிடங்கு ஆகியவை உள்ளன. இப்பகுதியில் மகிழ மரம் ஒன்றுள்ளது.

மயில் செய்யும் பூசை

வடக்குப் பிரகாரத்தில் வலப்புறத்தில் கற்பகவல்லி மயிலுருவில் பூசை செய்யும் சிலையுள்ள சந்நிதியும், அதன் அருகில் தல விருட்சமாகிய புன்னை மரமும் அதனை அடுத்து மயில்களுக்கான கூண்டும் உள்ளன. இதற்குப் பக்கத்திலும் வாகனக் கிடங்குகள், கருவூல அறை ஆகியவை உள்ளன.

சனீசுவரர் சந்நிதி

கிழக்குப் பிரகாரத்தின் வடக்குப் பகுதியில் சனீசுவரர் சந்நிதி உள்ளது. சனீசுவரருக்கு எதிரில் சுந்தரேசுவரர் சந்நிதியும், அதையடுத்து நவக்கிரக மண்டபமும், அதையடுத்து ஜகதீசுவரர் சந்நிதியும் உள்ளன.

கடைகள்

கிழக்கு மதில் சுவரின் வெளிப்புற வடக்குப் பகுதியில் கிணறு ஒன்றும கடைகளும் உள்ளன. வடக்கு மதில் சுவரின் வெளிப்புறத்தில் இருபுறமும் கடைகளும், இடையில் ஆலய அலுவலகமும் உள்ளன.

இராஜ கோபுரத்திற்கு எதிரே சந்நிதித் தெருவில் ஒரு பெரிய பதினாறுகால் மண்டபம் உள்ளது.

தேரும் குளமும்

சந்நிதித் தெருவும் கிழக்கு மாடவீதியும் சேரும் முனையில் வடக்குப் பக்கத்தில் கோயில் தேர் தகரக் கூரை வேயப்பட்ட இடத்தில் உள்ளது. திருக்குளம் கோயிலின் மேற்குப் புறத்தில் உள்ளது.

இவ்வாறு கோயிலின் முதலில் கூத்தாடும் பிள்ளையார் விளங்க, நடுப்பகுதியில் கபாலீசுவரரும், கற்பகவல்லியும் திகழ, சிங்காரவேலர் தெற்குப் பகுதியில் தனிச்சந்நிதியில் பொலிய, ஏனைய பரிவார தெய்வங்கள் பிரகாரத்தைச் சுற்றிலும் இருக்க, கபாலீசுவரர் கோயில் அமைந்துள்ளது.[39]

மூர்த்திகள்

திருமயிலைக் கபாலீசுவரத்தில் முதன்மைத் தெய்வங்களாகக் கூத்தாடும் பிள்ளையார், கபாலீசுவரர், கற்பகவல்லி, சிங்கார வேலர் ஆகியோரைக் குறிப்பிடுவர்.

கூத்தாடும் பிள்ளையார்

இவர் தல விநாயகராவார். கிழக்குக் கோபுர வாயிலில் திருக்கோயில் கொண்டு கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இவர் நர்த்தன விநாயகர், நிருத்த விநாயகர், நடன விநாயகர் என்று வடமொழியில் குறிக்கப் பெறுகிறார். இங்குள்ள மூலவர் பிரதிட்டை செய்யப்பட்டவர் அல்லர்; சுயம்பு என்று கூறுகின்றனர். ஆனால், இப் பிள்ளையார் நடனமாடுகின்ற நிலையில் புடைப்புச் சிற்பமாகக் கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளார். கந்தவேள் சக்திவேல் பெற்றுக் கபாலீசுவரர் கட்டளைப்படி வழிபட்டு வரம் பெற்ற மூர்த்தியாவார்.[40] இப் பிள்ளையார் வலக்காலை ஊன்றி நடனமாடும் நிலையில் காட்சி அளிக்கிறார்.

பெயர்க்காரணம்

'படைப்புயிர்கள் பெறும் ஆனந்தம் அளவிடற்கரியது இங்கே யெனச் சொல்லுமாறு போல ஆனந்தக் கூத்தாடுவதால் மூத்த பிள்ளை 'கூத்தாடும் பிள்ளையார்' எனப்பட்டார்' என்று கோயில் விளக்கக் கையேடு கூறுகின்றது.[41] இப்போது கபாலீசுவரர் கோயில் உள்ள இடத்தில் முற்காலத்தில் கூத்தாடும் பிள்ளையார் சந்நிதி மட்டுமே இருந்தது என்று கூறுகின்றனர்.[42] திருமயிலைச் சிற்றிலக்கியங்களில் பெரும்பாலானவற்றின் கடவுள் வணக்கச் செய்யுள்கள் கூத்தாடும் பிள்ளையாரைப் பற்றியவை.

திருமயிலை உலா,

பேர்கொண்ட
கூத்தாடும் கற்பகமே கூறும் மயிலாபுரியில்
காத்தாளும் கற்பகமே காப்பு

என்றும், திருமயிலைக் கலம்பகம்,

'கூத்தாடும் பிள்ளை திருவடி மலரை முடி சூட்டிக் கொள்ளுவோமே'

என்றும், திருமயிலைப் பிள்ளைத் தமிழ்,

பேரின்ப வீடுதவு கூத்தாடு மைங்கரப்
பிள்ளைசர ணந்துதிப்பாம்

என்றும், திருமயிலைக்கோவை,

மயிலைநற் கோவை படர்வதற்கு
முருகா ரொருகொம்பிற் கூத்தாடும் பேரத்தி
முன்னிற்குமே

என்றும், திருமயிலை உவமை வெண்பா,

கூத்த விநாயகனுங் கும்பமுலை யாரிருவர்
காத்த விநாயகனுங் காப்பு

என்றும், திருமயிலை வெண்பா,

கார்முகத் தானைக் கனிக்குவலஞ் செய்நடனக்
கார்முகத் தானை கழல்

என்றும் கூத்தாடும் பிள்ளையாரைக் குறிப்பிடுகின்றன. திருமயிலைத் தலபுராணங்களும் தலவிநாயகர் துதி பாடுகின்றன. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் கூத்தாடும் விநாயகர் கூத்தாடுவதற்கான காரணத்தைக்கற்பனை நயம்படப் பாடியுள்ளார்.[43] அன்பர்கள் தாங்கள் நேர்ந்து கொண்ட முறைப்படி சிதறு தேங்காய்களைக் கூத்தாடும் பிள்ளையார் முன்புள்ள தொட்டியில் உடைப்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

கபாலீசுவரர்

இங்குள்ள இறைவன் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். இவரைப் புன்னைவனத்து ஈசன், வேத நகரினான், சுக்கிர புரியான், கபாலீச்சரத்தினான், என்றும் அழைக்கின்றனர்.[44] கபாலீசுவரரைப் பூம்பாவை ஈசன்,[45] புன்னைவன மயூர நாதன்,[46] காபாலி மாநகரான்[47] என்றும் போற்றுகின்றனர். இச் சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்ட இலிங்கமாகும். இப் பெரிய சிவலிங்கத் திருமேனியோடு மேற்கே பார்த்தவாறு எழுந்தருளியிருக்கிறான் கபாலீசுவரன். கபாலீசுவரருக்கு உற்சவமூர்த்தி உள்ளது.

இத் தலத்தில் இறைவன் மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறான். சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் உண்டு. அவற்றுள் மேற்கு நோக்கிய திருமுகம் **சத்தியோஜாதம்** எனப்படும். இம் மூர்த்தி வழிபடுவோர்க்கு உடனே காட்சி தந்து அருள் வழங்கும் என்று கூறுகின்றனர்.[48] இவ் விறைவனை, 'நற்றாமரை மலர்மேல் நான்முகனும் நாரணனும் உற்றாங் குணர்கிலா மூர்த்தி' என்று திருஞானசம்பந்தர் சிறப்பித்துப் பாடியுள்ளார்.[49] மயிலுருவான அம்மையார் வழிபட மயில் உருவத்தை நீக்கியருளியது இச் சிவலிங்கமேயாகும். வள்ளி மணாளன் வழிபட வடிவேல் தந்தருளியதும் இச் சிவலிங்கமேயாகும். பரமன், மறை, வெள்ளி, இராமர், முதலியோர் வழிபட்ட பெருமை உடையதாகும். பல்வேறு சிற்றிலக்கியங்கள் கபாலீசுவரன்மீது பாடப்பட்டுள்ளன.

கற்பகவல்லி

வேண்டுவார்க்கு வேண்டியனவெல்லாம் தரும் விண்ணுலகத்துக் கற்பகத் தருவைப் போல மண்ணுலகத்துக் கற்பகமாய்க் காட்சிளிக்கும் இறைவனுடைய சக்தியே 'கற்பகவல்லி' என்னும் திருப்பெயரில் இங்கே விளங்குகிறாள் ; அருளை வழங்குகிறாள்.[50] கபாலீசுவரத்தில் கற்பகவல்லி தெற்கு நோக்கிக் கோயில் கொண்டிருக்கிறாள். அம்மை நின்ற நிலையில் காட்சி அளிக்கிறாள். அம்மையின் உற்சவத் திருவுருவமும் உள்ளது. இவளைக் கற்பகாம்பிகை என்றும் அழைப்பர். வாயிலார் நாயன்மார் சிவபெருமான் நிழற் கீழ்ப்புக வாயிலாய் நின்றருள் செய்த அம்பிகை என்று போற்றப்படுகின்றாள். கற்பகவல்லியின் பொற்பதம் புகழ்ந்து பலர் பாடியுள்ளனர். இக் காலத்தில் கபாலீசுவரர் கோயிலில் கற்பகவல்லியின் வழிபாடு மிகுந்துள்ளது. இது சக்தி வழிபாடு பெருகியுள்ளதைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஒ23;38.2111.M
N89

சிங்கார வேலர்

கபாலீசுவரரை வழிபட்டுச் சக்தி வேலைப் பெறுகிறான் முருகன். சிங்காரமான வேலைப் பெற்றதால் சிங்காரவேலன் ஆயினான் என்று கூறுகிறார்கள். சிக்கல் சிங்காரவேலன் புகழ் கண்டு இங்குள்ள வேலனையும் சிங்காரவேலன் என்று அழைத்திருக்கக்கூடும். இப் பெயர் வழக்கு கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் இல்லையென்பது அருணகிரிநாதரின் திருப்புகழால் தெரியவருகின்றது. அருணகிரிநாதர் மயிலையிலுள்ள

முருகனைப் புகழ்ந்து பாடியுள்ள பத்துப் பாடல்களில் ஒரு பாடலில் கூடச் சிங்கார வேலன் என்று குறிப்பிடவில்லை. அக் காலத்தில் சிங்காரவேலன் என்னும் பெயர் வழக்கில் இருந் திருந்தால், அருணகிரிநாதர் அப் பெயரைப் பயன்படுத்தி யிருப்பார். ஆகவே, சிங்காரவேலன் என்னும் பெயர் வழக்கு புதிய கபாலீசுவரர் கோயில் கட்டப்பட்ட காலத்திலே ஏற்பட்ட ஒன்று என்று கொள்ளுதலே பொருத்தமுடையதாகும்.

சிங்காரவேலர் மூல விக்கிரகம் மிக அழகிய திருவுருவம். ஆறுமுகங்கள், பன்னிரு கைகளுடன் மயில் மீது அமர்ந்த கோலம். மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். வள்ளியம்மையும் தெய்வ யானையும் யானை மீது அமர்ந்த கோலத்தில் முருகனின் இரு புறமும் உள்ளனர். இது இத் தலத்தில் தனிச்சிறப்பாகும். சிங்கார வேலருக்குத் தனிக்கொடிமரமும் உள்ளது. சிங்கார வேலருக்கு இரண்டு உற்சவர் சிலைகள் உள்ளன. வழிபாடுகள் முறையாக நடக்கின்றன. சிங்காரவேலர் பெயரில் பல நூல்கள் எழுந்துள்ளன. திருமயிலைச் சிங்காரவேலர் திருப்புகழ்ச்சபை 1970 முதல் இயங்கி வருகிறது [51]

தீர்த்தம்

கபாலீசுவரர் கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் நீராழி மண்டபத்தோடு கூடிய பெரிய திருக்குளம் ஒன்று இருக்கிறது. இது கபாலி தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இதனை மயிலை நாட்டு முத்தையப்ப முதலியார் கட்டினர் என்பர்.[52]

திருமயிலை உலாவிலும்,

> பொன்கோவிலும் மதிலும் புண்டரிகப் பூந்தடமும்
>
> ....
>
> நேசமுடனே அமைத்து நித்தம் நித்தம்—பேசும் அன்பின்
> போற்றி செய்யும் முத்தியப்பன்

என்று திருக்குளத்தைத் தோண்டுவித்தவன் முத்தியப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[53] இந் நூலில் இக் குளம் புண்டரிகப் பூந்தடம்—தாமரைத் தடாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போதும் இக் குளத்தில் தாமரைக் கொடி நிறைந்து உள்ளது. ஆகவே, இக் குளம் பதினாறாம் நூற்றாண்டில் தோண்டப் பட்டிருக்க வேண்டும். இக் குளத்துக்குப் படிக்கட்டுகள் அமைக் கும் திருப்பணி 1810ஆம் ஆண்டுத் தொடங்கி 1925ஆம் ஆண்டு

நிறைவடைந்தது.[54] இத் திருக்குளம், கபாலீசுவரர் கோயிலை விடப் பழமையானது போல் காட்சியளிக்கின்றது என்று எஸ். கல்யாணசுந்தரம் கூறுகிறார்.[55] 1798இல் எழுதப்பட்ட சென்னை நகரப் படத்தில் (Map of Madras) மயிலைத் திருக் குளம் காட்டப்பட்டிருக்கிறது.[56]

இதற்குச் சத்தி கங்கை.[57] முத்தி தீர்த்தம்[58] என்னும் வேறு பெயர்களுமுண்டு. கலிங்க தேசத்து அரசன் தருமன் என்பவன் மகன் சாம்பவன் பஞ்சமா பாதகங்களைச் செய்து கடைசியாகப் பங்குனி உத்திரத்தில் இத் தீர்த்தத்தில் மூழ்கி உள்ளங் கசிந்து தான் செய்த பாவங்களுக்காக வருந்தி மெய்யன்போடு கபாலீ சுவரரைக் கண்டு தொழுதான்; பிறகு முத்தி அடைந்தான் என்று தலபுராணம் கூறுகிறது.[59] பவுர்ணமியன்றும், விதிபாத யோகத்தினன்றும், ஆதி வாரத்திலும், ஐப்பசித் திங்களில் வரும் திருவோண நட்சத்திரத்திலும், மன உருக்கத்தோடு இத் தீர்த் தத்தில் நீராடித் தொழுகின்றவர்கள் முத்தி அடைவார்கள் என்று கூறப்படுகின்றது.[60]

இக் குளத்தின் மேற்குக் கரையில் எட்டுக்கால் மண்ட பத்திற்கு அருகில் ஜ்யேஷ்டா தேவியின் உருவச்சிலை உள்ளது. இதனை மூதேவி என்றும் குறிப்பிடுவர். இச் சிலை பழைய கபாலீச்சரத்தைச் சேர்ந்தது என்று கூறலாம் என்றும், இச்சிலை கி. பி. ஏழாம் நூற்றாண்டில் செய்யப்பட்டதென்றும் மா. இராசமாணிக்கனார் கருதுகிறார்.[61] குளத்தின் வடமேற்கு மூலையில் மூன்றுகால் மண்டபம் ஒன்று உள்ளது. அம் மண்டபம் இசுலாமியருக்கு உரியது போல் தோன்றுகிறது. தெற்குக் கரையில் உள்ளது ஞானப்பால் மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. மேற்குக் கரையிலுள்ள இரு சிறு மண்ட பங்களில் அறுபத்து மூவர் அன்று சம்பந்தருக்கும் சிவநேசச் செட்டியாருக்கும் அபிடேகம் நடைபெறும். வடக்கில் உள்ளது சிவலிங்க மண்டபமாகும். கிழக்கில் உள்ளது மாட்டுப் பொங்கல் அன்று அம்மன் நீராடும் இடமாகும்.

இக் காலத்தில் குளத்தின் கிழக்குக் கரை வெளிப் பகுதியில் புரோகிதம் செய்யும் அந்தணர்கள் குழுமி நிற்பர். மேற்குக் கரையில் பேருந்துகளும், தெற்குக் கரையில் காய்கறிக் கடை களும், வடக்குக் கரையில் சிறுவர் விளையாட்டுப் பொருள்கள் விற்கும் கடைகளும் நிறைந்துள்ளன.

இக் குளம் தோண்டப்பட்ட வரலாறு பற்றிய மரபுவழிச் செய்திகள்

1. எம். கல்யாணசுந்தரம் குறிப்பிடும் கதை

'இக் குளம் இருக்கும் இடம் முகமதிய பக்கீர்களுக்கு உரியது. அவர்கள் வெளியூருக்குச் சென்றிருந்த நேரத்தில், அக் காலத்தில் நவாப்பிடம் அமைச்சராக இருந்த அந்தணர் ஒருவரின் கட்டளையால் பெரிய குளம் தோண்டப்பட்டது. ஊருக்குத் திரும்பிய பக்கீர்கள் இதைக் கண்டு பெரிதும் கோபமடைந்தனர். இதை அறிந்த அமைச்சர், நவாப்பிடம் சென்று இக் குளம் கோயிலுக்காகத் தோண்டப்பட்டதன்று. நம்பிக்கையுடையவர்கள் பயன்படுத்துவதற்காகத் தோண்டப்பட்டது. இக் குளத்தை முகமதியர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறி நவாப் மற்றும் முகமதிய பக்கீர்களுடைய கோபத்தைத் தணித்தார். ஆனால், நாளடைவில் மொகரம் திருவிழாவின் போது ஆண்டில் ஒரு நாள் மட்டும் பயன்படுத்தும் உரிமை முகமதியர்களுக்குத் தரப்பட்டது' என்று எஸ். கல்யாணசுந்தரம் கூறுகிறார்.[62]

2. பம்மல் சம்பந்தமுதலியார் குறிப்பிடும் கதை

'சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் தற்காலக் 'கலச மஹால்' என்னும் இடத்தில் இருந்து அக் காலம் ஆண்டு கொண்டிருந்த நவாப் ஒருவரிடம் மயிலை நாட்டாராகிய முதலியார் ஒருவர் துபாஷி (துவிபாஷி) யாக இருந்தார். அவர் தற்காலக் கோயிலைக் கட்டினாராம். பிறகு அதற்குக் குளம் வேண்டியிருந்தபடியால் இக் கோயிலின் மேற்குப் புறத்தில் மகம்மதியர்களுடைய சமாதிகளாக இருந்த ஸ்தலம் பாழடைந்திருப்பதைக் கண்டு நவாபிடம் இரகசியமாக உத்தரவு பெற்று இரண்டு மூன்று நாட்கள் இரவில் அநேக ஆட்களைக் கொண்டு சமாதிகளை எல்லாம் எடுத்துவிட்டுக் குளமாக வெட்டிவிட்டார். இதைக் கண்ட திருவல்லிக்கேணியில் வசித்திருந்த முகமதியர்கள் நவாபிடம் போய் முறையிட, நவாப், 'ஆனது ஆய்விட்டது. இப்போது என்ன செய்வது, ஆயினும் மகம்மதியர்களாகிய நம்முடைய உரிமை போகாதபடி வருடந்தோறும் மொகரம் பண்டிகையில் 10ஆவது நாள் அல்லாப்பீலிகளை அக் குளத்தில் தோய்க்கும்படியான பாத்யதை உண்டு என்று உத்தரவு செய்து அவர்களைச் சமாதானப்படுத்தினாராம்.

இதற்குச் சான்றாகத் தற்காலமும் மகம்மதியர் பண்டிகையாகிய மொகரம் பண்டிகை 10ஆவது நாள் அக்கம்பக்கத்

திலுள்ள எல்லாப் பீலிகளையும் மயிலாப்பூர் கோயில் பெரிய குளத்தில் தோய்க்கும் வழக்கம் நடந்து வருகிறது. அன்றியும் மயிலாப்பூரில் சாதாரணமாக வருடந்தோறும் நடக்கும் கபாலீசு வரர் கோயில் பிரம்மோற்சவம், வருடந்தோறும், மாறிமாறி வரும் மொகரம் பண்டிகை காலத்தில் சேர்ந்து வந்தால் கபாலீசு வரர் பிரம்மோற்சவம் மறுமாதத்திற்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும் என்னும் நிர்ணயமும் இருக்கிறது' என்று பம்மல் சம்பந்த முதலியார் குளம் வெட்டப்பட்ட கதையைக் கூறி யுள்ளார்.[68]

நஜன் (எஸ். நடராஜன்) குறிப்பிடும் கதை

'சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு ஆற்காடு நவாபிடம் துபாஷாக இருந்த முதலியார் ஒருவர் இக் கோயிலுக்குத் தக்க குளம் ஒன்றைக் கட்ட முயன்று வந்தார். இந்த இடம் முகம்மதியர்களின் புதைகாடாக உபயோகிக்கப்பட்டு வந்தது முதலியார் நவாபிடம் இந்த இடத்தைக் குளம் வெட்ட உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் நவாபும் ஒரு நிபந்தனை யோடு இதற்கு இணங்கினார்.

பல்லாவரத்தில் ஒரு முஸ்லீம் பண்டிகை (உருஸ்) மூன்று நாட்கள் நடத்தப் போவதாகவும், சென்னையிலிருக்கும் ஒவ்வொரு முஸ்லீம் குடும்பமும் அங்குச் செல்லவேண்டும்என்றும், அவர்களுக்கு இலவச உணவு அளிக்கப்படும் என்றும் நவாப் தண்டோரா மூலம் அறிவித்தார். முதலியாரை இரகசியமாக அழைத்து ஆட்களைச் சித்தமாக வைத்துக் கொண்டு அந்த மூன்று நாட்களுக்குள்ளேயே குளத்தை வெட்டி முடிக்க வேண்டும் என்றும், பிறகு ஒரு வருட காலத்திற்கு முதலியார் நவாபின் அரண்மனையிலேயே தலைமறைவாக ஒளிந்து இருக்க வேண்டும் என்றும் எச்சரித்தார். அவ்வாறே யாவும் நடந்தன.

அக் காலத்தில் வாகன வசதிகள் அதிகம் இல்லாமையினால் பல்லாவரம் சென்றவர்கள் நிதானமாகவே திரும்பி வந்தார்கள். திரும்பி வந்து பார்த்த போது தமது முன்னோர்களின் சமாதிகள் அகற்றப்பட்டு, அவ்விடத்தில் ஒரு குளம் உருவாகி இருப்பதைக் கண்டார்கள். அவர்கள் உடனே நவாபிடம் போய் முறை யிட்டனர். நவாப் கோபத்தில் சீறி எழுபவர் போல் பாசாங்கு

செய்து, இத் துணிகரமான காரியத்தைச் செய்த துபாஷி முதலியாரை ஒரு வருடத்திற்குள் பிடித்துத் தருபவருக்கு நிறைய வெகுமதி அளிப்பதாகவும், பிடிபட்டால் முதலியாரை உடனே சிரச்சேதம் செய்வதாகவும் கூறியனுப்பினார்.

ஓர் ஆண்டு கழிந்து முதலியாரை வெளியில் கண்டவர்கள் நவாபிடம் சொல்ல, அவர் தாம் வைத்த தவணைக்காலம் தீர்ந்துவிட்டது என்று சொல்லிவிட்டார். ஆயினும், முகம்மதியரைத் திருப்தி செய்ய, குளம் இந்துக்களுடையது ஆயினும், நிலம் முகம்மதியர்களுடையதாக இருந்த காரணத்தால், வருடந் தோறும் முகரம் பண்டிகையில் கடைசி நாள் முகம்மதியர் தம் 'பஞ்சாக்களை' இக் குளத்தில் தோய்க்கலாம் என்றும், பிறகு குளத்தைச் சாஸ்திரப்படி சுத்தம் செய்யலாம் என்றும், அன்று கபாலீசுவரர் ஆலயக் கதவுகள் மூடியிருக்க வேண்டும் என்றும், சில ஆண்டுகளுக்கு ஒருமுறை கோயில் பிரம்மோற்சவமும் முகரம் பண்டிகையும் ஒரே காலத்தில் வருமாயின் இந்துக்கள் பிரம்மோற்சவத்தை அடுத்த மாதம் ஒத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் தீர்ப்புச் செய்து, இரு கட்சிகளையும் சமாதானப்படுத்தினார். இவ் வழக்கம் இப்போதும் அனுசரித்து வரப்படுகிறது என்று எஸ். நடராஜன் கூறுகிறார்.[64] இந்தக் குளம் தொடர்பாக நவாபு அளித்த தீர்ப்பு அடங்கிய செப்புப் பட்டயங்கள் இருப்பதாகப் பம்மல் சம்பந்த முதலியார் தன்னிடம் கூறியதாக அவருடைய மகன் வரதராஜ முதலியார் கூறுகிறார்.[65] சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி, முகரமும் பிரம்மோற்சவமும் சேர்ந்து வந்தால், முகரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று கூறுகின்றனர்.[66]

திருக்குளத்தில் நடைபெறும் திருவிழாக்கள்

தைத் திங்களில் பூசத்தில் தெப்போற்சவம் நடைபெறுகின்றது. பங்குனித் திங்களில் பிரம்மோற்சவம் நடைபெறும் போது மேற்குக் கரையில் திருஞான சம்பந்தர் அங்கம் பூம்பாவை ஆக்கிய அற்புதச் செயலும், பத்தாம் நாள் காலையில் கபாலீசுவரர் பஞ்ச மூர்த்திகளுடன் தீர்த்தவாரி உற்சவமும் நடைபெறுகின்றது.

தல விருட்சம்

இத் தலத்திற்குரிய மரம் புன்னை மரம். முற்காலத்தில் மயிலை புன்னைவனமாக இருந்தது என்று தலபுராணங்கள் கூறு

கின்றன. திருஞானசம்பந்தரும் பூம்பாவைப் பதிகத்தின் முதற் பாடலில் 'மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை' என்று பாடியுள்ளதும் இதனை உறுதிப்படுத்துகிறது. 'புன்னை வனத்து ஈசன்' என்று திருமயிலை உலாவும் குறிப்பிடுவதனால் மயிலை புன்னைமரங்கள் நிறைந்த இடமாயிருந்தது என்பது புலப்படும்.[67] இத் தல விருட்சம் வடக்குப் பிரகாரத்தின் வலப் புறத்தில் உள்ளது. இம் மரத்தருகே தெற்கு நோக்கிச் சிவபெருமானும், முன்னால் மயிலுருவுடன் பூசித்து நிற்கும் உமாதேவியாரும் தலப்பெருமை காட்டி எழுந்தருளியிருக்கிறார்கள்.

கோயிற் சிறப்புகள்

புராணச் சிறப்புகள்

உமையம்மையார் மயிலுருக் கொண்டு கபாலீசுவரரைப் பூசித்தது; முருகப் பெருமான் மயிலைநாதனை வழிபட்டுச் சக்திவேல் பெற்றது; நான்முகன் பூசை செய்து தனது பாவத்தைப் போக்கிக் கொண்டது ஆகிய சிறப்புகளையுடையது கபாலீசுவரம். மேலும், கண்ணிழந்த சுக்கிரன் கபாலீசுவரரை வழிபட்டு மீண்டும் கண்பார்வை பெற்ற பெருமையுடையது. இராமபிரான் தங்கி வணங்கித் திருவிழா நடத்திய சிறப்புப் பெற்றது.[68] வாயிலார் நாயனார் வழிபாடு செய்த இடம், சம்பந்தர், அப்பருடைய தேவாரப் பாடல்கள் பெற்ற திருக் கோயில், அங்கம் பூம்பாவையான அற்புதச் செயல் நிகழ்ந்த இடம் என்னும் சிறப்புகளையும் உடையது கபாலீசுவரமாகும்.

மேற்கு நோக்கிய சிவலிங்கம்

பெரும்பாலான கோயில்களில் இறைவன் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்க, இங்கு மேற்கு நோக்கி எழுந்தருளியிருப்பது கபாலீசுவரர் கோயிலுக்குரிய தனிச்சிறப்பாகும். இதனைச் 'சத்தியோஜாத மூர்த்தம்' என்பர். இம் மூர்த்தத்தை வழிபடுவார்க்கு இறைவன் உடனே காட்சி தந்து அருள் வழங்குவான் என்று கூறுகின்றனர்.

பூம்பாவை சந்நிதி

சிவநேசரின் மகள் பூம்பாவை மலர்பறிக்கும்போது பாம்பு தீண்டி மாண்டாள். அவளைத் தகனம் செய்து எலும்பையும் சாம்பலையும் குடத்தில் இட்டுக் கன்னி மாடத்தில் வைத்தனர். திருஞானசம்பந்தர் திருமயிலை வந்த போது, அக்குடத்தைக்

கபாலீசுவரர் கோயிலில் கொண்டு வந்து வைத்து, 'மட்டிட்ட புன்னை' என்று தொடங்கும் பதிகத்தைப் பாட உயிர் பெற்றெழுந்தாள். சிவநேசர் அவளை மணந்து கொள்ளுமாறு சம்பந்தரிடம் கூறினார். அவர் பூம்பாவைக்கு உயிர் கொடுத்ததால், தான் தந்தை முறை என்று கூறி மறுத்தார். பூம்பாவை சிவத் தொண்டு செய்து சிவபதவி அடைந்தார்.[69] இந் நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் பூம்பாவையாருக்குக் கபாலீசுவரர் கோயில் மேற்குக் கோபுர வாயிலின் வடக்கு உட்புறத்தில் கொடி மரத்துச்கு எதிரில் தனிச் சந்நிதி உள்ளது.

அங்குள்ள பூம்பாவை உருவம், குடத்திலிருந்து வருவது போல் அமைக்கப்பட்டுள்ளது. பூம்பாவை உயிர் பெற்றெழுந்த செயல் காரணமாகக் கபாலீசுவரருக்குப் பூம்பாவை ஈசன் என்னும் பெயர் வழங்கப் பெற்றது. இவைகளைக் கல்வெட்டுகள் மூலமாகவும்[70] திருமயிலை உலா மூலமாகவும் அறியலாம்.[71] எலும்பும் சாம்பலும் கபாலீசுவரர் அருளால் பூம்பாவையாக உயிர் பெற்றெழுந்த அற்புதச் செயல் இக் கோயிலின் சிறப்புகளில் தலையாயது ஆகும்.

வாயிலார் சந்நிதி

திருமயிலையில் வேளாளர் குலத்தில் பிறந்து, நெடுங்காலம் அகப்பூசை செய்து சிவபெருமானுடைய திருவடி நிழலடைந்து சீவன்முத்தி பெற்றவர் வாயிலார் நாயனார். திருத்தொண்டத் தொகையில் சுந்தரர், 'துறைக் கொண்ட செம்பவளம் இருள கற்றும் சோதித் தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்' என்றும்,[72] சேக்கிழார் பெரிய புராணத்தில்,

> வீறார் மயிலையுள் வாயிலான்

என்றும் போற்றுகின்றனர்.[73] இத்தகைய சிறப்புடைய வாயிலார் நாயிலாருக்குக் கற்பகவல்லியின் சந்நிதி எதிரில் தெற்குப் பிரகாரத்தில் 1911இல் தனிச் சந்நிதி கட்டப்பெற்றது. இங்கு யோக நிலையில் அமர்ந்திருக்கும் வாயிலார் திருவுருவச் சிலை உள்ளது.

அருணகிரிநாதர் சந்நிதி

அருணகிரிநாதர் இத் திருத்தலத்தே எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைத் தரிசித்துப் பத்துத் திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளார்.

சிங்காரவேலர் சந்நிதிக்கு எதிரில் மேற்குக் கோபுர வாயிலின் தென்பகுதியின் உட்புறத்தில் மேற்குப் பிரகாரத்தில் அருணகிரிநாதருக்குத் தனிச் சந்நிதி அமைத்து 26-6-80 அன்று கும்பாபிடேகமும் செய்யப பெற்றது. கோயிற் சிறப்புகளில் அருணகிரிநாதர் சந்நிதியும் ஒன்றாகும்.

அழகிய மாடவீதிகள்

வைத்தீசுவரன் கோயில் விளக்கழகு
மாயூரம் கோபுர அழகு
திருவாரூர் தேர் அழகு
மயிலாப்பூரில் மாடவீதிகள் பேரழகு

என்று மயிலை மாடவீதிகள் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. திருநாவுக்கரசர் 'மங்குல் மதி தவழும் மாடவீதி மயிலாப்பில்' என்று பாடியுள்ளார்.[74] 'நீளும் மணிமாடவீதிகள்', 'வானளக்கும் பொன் மாடவீதி' என்னும் தொடர்களில் திருமயிலை உலா, மயிலை மாடவீதிகளைச் சிறப்பித்துக் கூறுகிறது.[75]

புராணம், இலக்கியங்கள் பெற்ற பெருமை

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிரிநாதர் ஆகியோரால் பாடப்பெற்ற பெருமையுடையது, கபாலீசுவரர் கோயில் மீது இரண்டு தலபுராணங்கள் பாடப்பட்டுள்ளன. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான் அவர்களும் மயிலை நாதமுனி முதலியார் அவர்களும் திருமயிலைத் தலபுராணம் என்னும் பெயரில் தனித்தனியே புராணம் பாடியிருக்கிறார்கள். இச் செய்தி முன்னமே இரண்டாம் இயலில் விளக்கப்பட்டுள்ளது.

திருமயிலை உலா, திருமயிலைக் கலம்பகம், திருமயிலைப் பிள்ளைத் தமிழ், திருமயிலைக் கோவை, திருமயிலை உவமை வெண்பா, திருமயிலை வெண்பா, திருமயிலை யமக அந்தாதி, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பதிகங்கள், திருக் குருகூர் ஞானசித்த சுவாமிகளின் பதிகங்கள், தாச்சி அருணாசல முதலியார் பதிகங்கள், திருமயிலைப் பதிற்றுப்பத்தந்தாதி, திரு மயிலை நான்மணி மாலை, கி. ஊ. பா. கங்காதர நாவலரின் நூல்கள், கீர்த்தனைகள், தோத்திரங்கள், பதிகங்கள், மாலைகள்

முதலான பல்வகையிலும் இலக்கியங்கள் கபாலீசுவரர் கோயிலில் உள்ள தெய்வங்களின் மீது பாடப் பெற்றுள்ளன. இவையும் இரண்டாம் இயலில் விளக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு

கி. பி. 1672 இல் பிரெஞ்சுக்காரர்களுக்கும் மூர் துருக்கருக்கும் நடந்த போரில் பிரெஞ்சுப்படையின் ஒருபகுதி இப்போதுள்ள கோயிலில் பதுங்கியிருந்த செய்தியால் வரலாற்றுச் சிறப்புப் பெறுகிறது.[76]

கோயில் ஒரு சமுதாய நிலையம்

கோயில்கள், சாதி வேறுபாடற்ற நிலையில் மக்கள் கூடிப் பழகும் பொது இடமாக அமைந்துள்ளது. நீதி மன்றமாகவும், நிதி உதவி செய்யும் வங்கிகளாகவும், நிவாரணப் பணி நிலையமாகவும் கல்விக் கூடமாகவும், இலக்கிய வளர்ச்சி மையமாகவும், கலைகளின் வளர்ப்புப் பண்ணையாகவும் விளங்குகின்றன. உணவிடும் அறச்சாலையாகவும் விளங்குகிறது. சுற்றுப்புறச்சூழல் தூய்மையாக இருக்கக் கோயில்களும் குளங்களும் உதவுகின்றன. நிலத்தடிநீர் சமநிலையில் இருக்க குளங்கள் உதவுகின்றன. மன நிலை சாந்தியடையும் இடமாகக் கோயில் உள்ளது. திருவிழாக் களின் காரணமாகச் சமுதாயத்தில் பலருக்கு வேலை வாய்ப்பளிக்கும் நிறுவனமாக உள்ளது. கோயில்கள் தானியக் கிடங்குகளாகவும், வெள்ளம் ஏற்படும்போது புகலிடமாகவும், போர்க் காலத்தில் அரணாகவும் விளங்கியிருக்கின்றன. தல விருட்சங்கள், நந்தவனங்கள் இயற்கையைப் போற்ற வேண்டும் என்ற எண்ணத்தை மக்களுக்கு ஊட்டும் வகையில் கோயில்களில் அமைந்துள்ளன. கோயில்களில் விலையுயர்ந்த பொன், வெள்ளி நகைகள் முதலானவற்றைக் கொண்டுள்ளதால் கருவூலமாகவும் விளங்குகின்றன. தேவாரப் பாடசாலை, கருணை இல்லம், வழிப் போக்கர் தங்கும் விடுதி, நூல்நிலையம், முதலியவை உள்ளதாலும், கலைநிகழ்ச்சிகள் நடப்பதாலும் கபாலீசுவரர் கோயில் ஒரு சமுதாய நிலையமாக விளங்குகிறது.

வழிபாடு

நாள்தோறும் ஐந்துவேளை பூசையும் இரு கோத்திரங்களைச் சேர்ந்த குருக்கள்களால் பரம்பரையாகச் செய்யப்பட்டு வருகிறது. வார விழாக்கள், திங்கள் விழாக்கள், ஆண்டு விழா ஆகியவை பின்னர் விளக்கப்படும்.

வருவாயும் நிருவாகமும்

அசையாச் சொத்துகளிலிருந்து ஆண்டுதோறும் இலட்ச ரூபாய் வருவாய் வருகிறது. உண்டியலில் சேரும் தொகை, அருச்சனை, அபிடேகக் கட்டளை மூலமாகவும் முப்பத்து மூன்றாயிரம் ரூபாய் வருவாய் வருகிறது என்று 1961ஆம் ஆண்டுக்கணக்கு கூறுகிறது.[77] அறங்காவலர் குழு ஒன்றுள்ளது. கோயில் அலுவலகம், அறநிலையத் துறையைச் சேர்ந்த செயல் அலுவலர் தலைமையில் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

இப் பகுதியில் கபாலீசுவரர் கோயிலின் சிறப்புகள் விளக்கப் பட்டன. அடுத்த பகுதியில் கபாலீசுவரர் கோயிலில் நடைபெறும் திருவிழாக்கள் விளக்கப்பெறும்.

திருவிழாக்கள்

திருவிழாக்கள் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருவனவாகும். தமிழ்நாட்டில் விழாக்கள் வீடுகளிலும் கோயில்களிலும் சிறப் பாக நடைபெறுகின்றன. கோயில்களில் நடைபெறும் விழாக் களைத் திருவிழாக்கள் என்பர். நாள்தோறும் இறைவனுக்குச் செய்யப் பெறும் வழிபாடுகளோடு சிறப்பாகச் செய்யக்கூடிய வழிபாடுகளைத் திருவிழா என்பர். திங்கள் விழா, ஆண்டு விழா, பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் விழா என்று திருக்கோயில் விழாக்கள் மூவகைப்படும்.

விழா

விழா என்னும் சொல்லுக்கு மகிழ்ச்சியைத் தருவது என்பதே பொருளாகும்.[78] விழா என்னும் சொல்லுக்கு அடிச்சொல் விழை என்பதாகும். இதற்கு விரும்பு, அன்பு செலுத்து என்பவையே பொருள்களாகும். விழாவைக் கொண்டாட்டம் என்றும் கூறுகின்றனர்.[79] திருவிழாக்களில் சடங்குகள் மட்டுமே உள்ளன என்று எண்ணக்கூடாது. தத்துவ விளக்கங்களும் அடங்கியுள்ளன.

திருவிழாவில் இறைவன் திருவீதி உலா

கோயில் திருவிழாக்களில் இறைவன் கோயிலைச் சுற்றியுள்ள மாடவீதிகளில் உலா வருதல் குறிப்பிடத்தகுந்த சடங்காகும். உலாவரும் நிகழ்ச்சி, சமுதாயத்தில் உள்ளோர் அனைவருக்கும்

இறைவன் பொதுவானவன் என்பதை உணர்த்துகிறது. தொலை தூரங்களிலிருந்து வருவோரும், கோயிலுக்கு வர முடியாத நிலையில் உள்ளவர்களும், ஒரு காலத்தில் கோயிலுக்குள்ளே நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டவர்களும் இறைக் காட்சியைக் காண்பதற்காக ஏற்பட்ட சடங்கே திருவீதி உலாவாகும். இத் திருவிழாக்களினால் சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரிவினரும், குறிப்பாகக் கலை வல்லுநர்கள், தொழிலாளர்கள், ஏழைகள் பயன்பெறுகின்றனர்.[80] தேர்த் திருவிழா சமுதாய ஒறறுமையை உணர்த்தும் வகையில் உள்ளது. வாணிகம் வளர்ச்சியடைகிறது. கோயில் உள்ள ஊர் பொருளியல் நிலையில் உயர்நிலை அடைகிறது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருமயிலையில் திங்கள்தோறும் கபாலீசுவரர் கோயிலில் நடந்து வந்த திருவிழாக்களைப் பூம்பாவைப் பதிகத்தின் பத்துப் பாடல்களில் திருஞான சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்திலேயே விழாக்கள் நிறைந்த நகரமாகத் திருமயிலை விளங்கியிருக்கிறது.

இறைவனும் திருவிழாக்களும்

இறைவனை நம்முடைய நலன் கருதி வழிபடுகிறோம். கோயில்களில் நாள் வழிபாடுகளை அருச்சகர்கள் செய்கின்றனர். அப்பொழுது மக்கள் பார்வையாளராக மட்டுமே இருக்க முடிகின்றது ஆனால், திருவிழாக்கள் நடைபெறும் போது மக்கள் அனைவரும் இறைவனுடைய திருத்தொண்டில் நேரடியாகக் கலந்து கொள்ள முடிகின்றது.

கபாலீசுவரர் கோயில் வழிபாடுகளும் திருவிழாக்களும்

முதலில் திருஞான சம்பந்தர் கூறும் கபாலீசுவரர் கோயில் திருவிழாக்கள். அதைத் தொடர்ந்து நடைபெறும் நாள் வழிபாடு, வார விழா. நாயன்மார்களின் திருநட்சத்திரத் திருவிழா, நாயன்மார்களின் அற்புதச் செயல்களைப் போற்றும் திரு விழாக்கள், திங்கள் திருவிழாக்கள், பிரதோஷம், தைப்பூசம், மாசிமகம், நவராத்திரி கொலு, பிரம்மோற்சவம், கும்பாபி ஷேகம் முதலாய செய்திகள் குறித்துக் கூறப் பெறும்.

திருஞான சம்பந்தர் கூறும் விழாக்களும் விரதங்களும்

பெருஞ்சோற்று விழா,[81] ஐப்பசித் திங்களில் ஓண நட்சத் திரத்தில் நடைபெறும் விழா,[82] கார்த்திகைத் திங்கள் கார்த்

திகை நட்சத்திரத்தில் தொன்று தொட்டுக் கொண்டாடும் விளக்கீட்டு விழா,[83] மார்கழித் திங்கள் ஆதிரை நாளில் நடைபெறும் திருவிழா,[84] தைத்திங்கள் பூச நாளில்கொண்டாடும் திருவிழா,[85] மாசித்திங்கள் மக நாளில் நடத்தும் கடலாட்டு விழா,[86] பங்குனி உத்திரத் திருவிழா,[87] அட்டமி நாள் விழா,[88] பொற்றாப்பு விழா,[89] பெருஞ்சாந்தி[90] ஆகிய விழாக்கள் கபாலீசுவரர் கோயிலில் கொண்டாடப்பட்ட செய்தியினைத் திருஞான சம்பந்தர் பூம்பாவைப் பதிகத்தில் பத்துப் பாடல்களில் கூறு கின்றார். இவற்றுள் முதல்பாடலில் 'சிவபக்தர்களுக்கு உண விடும் விழாவைக் கூறுகிறார். இதற்கு அடுத்த பாடலில் ஐப்பசித் திங்களில் நடைபெறும் ஓணவிழா கூறப் பெறுவதால் இது புரட்டாசித் திங்களில் நடைபெற்றிருக்கக் கூடும்.

ஐப்பசி ஓணவிழாவிலும், சிவபக்தர்கள் உண்டுகளித்தல் கூறப் பெறுகின்றது. "ஐப்பசி ஓணவிழா ஸ்ரீராமனால் கொண்டாடப்பட்ட செய்தியினை வடமொழிப் புராணம் கூறு கிறது. ஐப்பசி ஓணத்தில் கொடியேற்றிக் கிருத்திகையில் தீர்த்தம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப் புரா ணத்தில் ஐப்பசி ஓணத்தைப் பத்தாவது நாள் தீர்த்தமாகக் கொண்டு விழா ஸ்ரீராமரால் நடத்தப்பட்ட செய்தி கூறப்படு கிறது" என்று ம. பாலசுப்பிரமணிய முதலியார் குறிப்பிட்டுள் ளார்.[91] காரத்திகை விளக்கீடு, ஆதிரை நாள், தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத்திரம் ஆகிய ஐந்தும் இன்றும் தமிழ் நாடெங்கிலும் கொண்டாடப்படுகின்றன. மயிலையில் சிறப்பாகக் கொண்டாடபபடுகின்றன. அட்டமி நாள் என்பது சிவ விரதங்கள் எட்டனுள் ஒனறு; வைகாசித் திங்கள் சுக்கில பட்சம அட்டமி நாளைய 'பதினெண் கணங்கள் தம் அட்டமி நாள்' என்று சம்பந்தர் குறிப்பதாகக் கொள்வதே சிறந்த தாகும்.[92]

பொற்றாப்பு என்பது, மார்கழித் திங்களில் சிவன் கோயில் களில் மூன்று, ஏழு, அலலது பத்துநாட்கள் நடக்கும் ஊஞ்சல் உற்சவத்தைக் குறிக்கும் என்கிறார்.[93]

பெருஞ் சாந்தி என்பது ஆவணி அவிட்டம் ஈறாக மூன்று, ஐந்து அல்லது ஏழு நாட்களில் சிவயாகம் முதலிய சிறப்புடன் நடக்கும் 'பவித்ரோத்ஸவமாகிய ஸம்வத்ஸரபிராயச் சித்தம்' என்பர். குட முழுக்கு என்றும் சிலர் இதைக் கருதுவதுண்டு. இவையே திருஞான சம்பந்தர் கூறும் திருவிழாக்களாகும்.

நாள்விழா

நாள்தோறும் கபாலீசுவரர் கோயிலில் காலை ஐந்துமணிக்குத் திருவனந்தல் பூசையும், பிறகு காலை சந்தி பூசையும், உச்சி கால பூசையும், சாயங்கால பூசையும், அர்த்தசாம பூசையும் ஆக ஐந்துகால பூசைகள் நடைபெறுகின்றன. இவற்றுள் சாயங்கால பூசை குறிப்பிடத் தகுந்ததாகும். அபிடேக ஆரம்பம், பிறகு நைவேத்தியம் நடக்கும். தீபாராதனை சுவாமியிடமிருந்து மாலை 5-30க்குத் தொடங்கும். வேதபாராயணம், தேவாரப் பதிகம் பாடுதல், நாதசுரத்தோடு ஒவ்வொரு சுவாமி சந்நிதியிலும் தீபாராதனைகள் நடைபெறும். அர்த்தசாம பூசை பள்ளியறை உற்சவமாகும்.

வார விழா

வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்தி கடவுளுக்குச் சிறப்பாக அபிடேக ஆராதனைகள் நடைபெறும். வெள்ளிக் கிழமைதோறும் கற்பகவல்லியின் கோயில் பிரகார உற்சவம் நடைபெறும். உள்பிரகாரத்தில் அம்மனை அலங்கரித்து விமானத்தில் வைத்து வேத பாராயணம், தேவார ஓதுவார் மற்றும் மேளங்களுடன் மூன்று முறை சுற்றுவார்கள். ஒவ்வொரு திங்களின் இறுதி வெள்ளிக்கிழமையிலும் கற்பகவல்லியின் கோயில் பிரகார உற்சவத்துடன் ஊஞ்சல் உற்சவமும் சிறப்பாக நடைபெறும்.

திங்கள் விழாக்கள்

தமிழ்த் திங்கள் தோறும் முதல் நாளில் கோயில் முழுவதும் உள்ள தெய்வத் திருவுருவங்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தப் படுகிறது. இலிங்கசுத்தியும், அம்மனுக்கு அபிடேகமும் நடைபெறுகின்றன. திங்கள் தோறும் திரயோதசி திதியில் சுக்கில பட்சம், கிருட்டினபட்சத்தில் பிரதோஷ உற்சவம் நடைபெறும். பிரதோஷ நாளின் சிறப்பு பின்னர் விரிவாகக் கூறப்பெறும். மூலவருக்குப் பௌர்ணமிதோறும் பூசை நடப்பதுண்டு. ஒவ்வொரு பௌர்ணமியிலும் சந்திரசேகர சுவாமி திருவீதி உற்சவம் நடைபெறும். சித்திரா பௌர்ணமி, கார்த்திகைப் பௌர்ணமி தீபம், மார்கழிப் பௌர்ணமி அரைக்கட்டு, பங்குனி உத்திரம் திருக்கல்யாணம் ஆகிய நான்கு பௌர்ணமி நாட்களில் சோமாஸ் கந்தர் பஞ்ச மூர்த்திகளுடன் வீதி உற்சவம் நடைபெறும். அமாவாசைகளில் மூலவர் சோமாஸ்கந்தருக்கு அபிடேகம் நடை

பெறும். பன்னிரண்டு கிருத்திகைகளிலும் சிங்காரவேலர் திரு வீதி உற்சவமும், ஆடிக் கிருத்திகையில் மயில்வாகனத் திருவீதி உற்சவமும் நடைபெறும். ஒவ்வொரு திங்களிலும் இந் நாளில் சிங்காரவேலர், மூலவர், உற்சவர், சண்முகர் ஆகியோருக்கு அபிடேக ஆராதனைகள் நடைபெறும். வைகாசி விசாகத்தில் சண்முகர் திருவீதி உற்சவம் நடைபெறும். திங்கள்தோறும் இரேவதிநாளில் வாயிலார் நாயனாருக்குக்கோயில்பரிகார உற்சவம் நடைபெறும். மார்கழி இரேவதியில் வாயிலாரின் ஆண்டு நட்சத்திர நாளில் பூப்பல்லக்கில் திருவீதி உற்சவம் நடைபெறும். கபாலீசுவரருடைய திருநட்சத்திரம் திருவாதிரையாகும். திங்கள் தோறும் திருவாதிரையில் சோமாஸ்கந்தருக்கு அபிடேகம் நடைபெறும். மாசித் திங்கள் திருவாதிரையில் அபிடேகம் சிறப்பாக நடத்துவர். நூற்றெட்டுக் கலசங்களுடன் மண்டபத்தில் அபிடேகமும் கோயில் பிரகார உற்சவமும் நடைபெறும். சூரிய சந்திர கிரகண புண்ணிய காலங்களில் தீர்த்தவாரி அபிடேக ஆராதனைகள் நடைபெறும்.

நாயன்மார்களின் திருநட்சத்திரத் திருவிழா

திருத்தொண்டத் தொகையில் அறுபத்து மூன்று சைவ நாயன்மார்களைச் சுந்தரர் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இவர்களுடைய வரலாற்றைச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்னும் பெயரில் விரிவாக எழுதினார். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இப் புராணம் எழுதப்பட்ட பிறகு, சோழர் காலத்தில் சிவன் கோயில்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் கருங்கல்லிலும், பஞ்சலோகத்திலும் சிலைகள் வடிக்கப்பட்டு நாள்தோறும் பூசை செய்யும் மரபு ஏற்பட்டது. இந்த நாயன்மார்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சுந்தரர் காலம் வரையில்தோன்றியவர்களாவர். அரிசனங்களிலிருந்து அந்தணர் வரை சமுதாயத்தின் எல்லாப் பிரிவைச் சேர்ந்தவர்களும் நாயன்மார்களில் அடங்கியுள்ளார்கள்.[94] இந்த நாயன்மார்களின் திருவுருவச் சிலைகள், சிவன் கோயில்களில், சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. நாயன்மார்களுக்குரிய திருநட்சத்திர நாள்களைக் குறித்து வழிபடும் வழக்கம் இருந்து வருகிறது.

இவ் வழக்கம் கபாலீசுவரர் கோயிலிலும் பின்பற்றப்படுகிறது. பிரம்மோற்சவத்தின் எட்டாம் நாள் அறுபத்து மூவர்

விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கபாலீசுவரர் கோயிலில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருநட்சத்திர நாட்களில் அபிடேக ஆராதனைகள் அந்த நாயன்மார்களுக்குச் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன. அதிபத்தருக்கு ஆவணி ஆயிலியமும், அப்பூதியடிகளுக்குத் தைச் சதயமும், அமர்நீதியாருக்கு ஆனிப்பூரமும், அரிவாட்டாயருக்குத் தைத் திருவாதிரையும், ஆனாயருக்குக் கார்த்திகை அத்தமும், இசைஞானியாருக்குச் சித்திரைச் சித்திரையும், இடங்கழியாருக்கு ஐப்பசிக் கார்த்திகையும், இயற்பகையாருக்கு மார்கழி உத்திரமும், இளையான்குடி மாறனாருக்கு ஆவணி மகமும், உருத்திர பசுபதியாருக்குப் புரட்டாசி அசுவதியும், எறிபத்தருக்கு மாசி அத்தமும், ஏயர்கோன் கலிக்காமருக்கு ஆனி இரேவதியும், ஏனாதிநாதருக்குப் புரட்டாசி உத்தராடமும், ஐயடிகள் காடவர்கோனுக்கு ஐப்பசி மூலமும், கணநாதருக்குப் பங்குனித் திருவாதிரையும், கணம்புல்லருக்குக் கார்த்திகைக் கார்த்திகையும், கண்ணப்பருக்குத் தை மிருகசீரிடமும், கலிக்கம்பருக்குத் தை இரேவதியும், கலியருக்கு ஆடிக் கேட்டையும், கழறிற்றறிவாருக்கு ஆடிச் சுவாதியும், கழற்சிங்கருக்கு வைகாசிப் பரணியும், காரியாருக்கு மாசிப் பூராடமும, காரைக்காலம்மையாருக்குப் பங்குனிச் சுவாதியும், குங்குலியக் கலயருக்கு ஆவணி மூலமும், குலச் சிறையாருக்கு ஆவணி அனுடமும், கூற்றுவருக்கு ஆடித் திருவாதிரையும், கோச்செங்கட் சோழருக்கு மாசிச் சதயமும், கோட்புலியாருக்கு ஆடிக் கேட்டையும், சடையனாருக்கு மார்கழித் திருவாதிரையும், சண்டேசுவரருக்குத் தை உத்திரமும், சத்தியாருக்கு ஐப்பசிப் பூசமும், சாக்கியருக்கு மார்கழிப் பூராடமும், சிறப்புலியாருக்குக் கார்த்திகைப் பூராடமும், சிறுத்தொண்டருக்குச் சித்திரைப் பரணியும், சுந்தரருக்கு ஆடிச் சுவாதியும், செருத்துணையாருக்கு ஆவணிப் பூசமும், சோமாசி மாறருக்கு வைகாசி ஆயிலியமும், தண்டியடிகளுக்குப் பங்குனிச் சதயமும், திருக்குறிப்புத் தொண்டருக்குச் சித்திரைச் சுவாதியும், திருஞானசம்பந்தருக்கு வைகாசி மூலமும், திருநாவுக்கரசருக்குச் சித்திரைச் சதயமும், திருநாளைப் போவாருக்குப் புரட்டாசி உரோகிணியும், திருநீலகண்டருக்குத் தை விசாகமும், திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு வைகாசி மூலமும், திருநீலநக்கருக்கு வைகாசி மூலமும், திருமூலருக்கு ஐப்பசி அசுவதியும், நமிநந்தியடிகளுக்கு வைகாசிப் பூசமும், நரசிங்க முனையரையருக்கு புரட்டாசிச் சதயமும், நின்றசீர் நெடுமாறனுக்கு ஐப்பசிப் பரணியும், நேசருக்குப் பங்குனி உரோகிணியும், புகழ்ச் சோழருக்கு ஆடிக் கார்த்திகையும், புகழ்த்துணையாருக்கு

ஆவணி ஆயிலியமும், பூசலாருக்கு ஐப்பசி அனுடமும், பெருமிழலைக் குறும்பருக்கு ஆடிச்சித்திரையும், மங்கையர்க்கரசியாருக்குச் சித்திரை உரோகிணியும், மானக்கஞ்சாறருக்கு மார்கழிச் சுவாதியும், முருகருக்கு வைகாசி மூலமும், முனையடுவாருக்குப் பங்குனிப் பூசமும், மூர்க்கருக்குக் கார்த்திகைமூலமும், மூர்த்தியாருக்குக் கார்த்திகை உத்திரமும் வாயிலாருக்கு மார்கழி இரேவதியும், விறல்மிண்டருக்குச் சித்திரைத் திருவாதிரையும் திருநட்சத்திரங்களாகும்.[95]

மேற்குறிப்பிட்ட நாள்களில் நாயன்மார்களுக்கு அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

நாயன்மார்களின் அற்புதச் செயல்களைப் போற்றும் திருவிழாக்கள்

திருநாவுக்கரசருக்குக் கட்டமுது உற்சவம்

சித்திரைத் திங்கள் சதய நட்சத்திரத்தில் அப்பருக்குக் காலை கட்டமுது உற்சவம் நடைபெறுகிறது. மாலையில் பூப்பல்லக்கில் திருவீதி உற்சவம் நடைபெறுகிறது. இரவில் ஜோதியில் கலத்தல் என்னும் ஐதிகம் நடைபெறுகிறது,

திருநாவுக்கரசர் திருவானைக்காவல்விட்டுத் திருப்பைஞ்ஞீலியை நோக்கி வர, பசியினாலும் தாகத்தினாலும் வருந்தி இளைத்தார். சிவபெருமான் அதைக் கண்டு வழியில் சோலையும் குளமும் உண்டாக்கி ஒரு பிராமண வடிவம் கொண்டு பாதையில் கட்டமுது வைத்துக் கொண்டிருந்தார். அப்பர் அங்கு நெருங்க அக்கட்டமுதை அவருக்குக் கொடுத்தார். அவ்வமுது உண்டு இளைப்பாறித் திருப்பைஞ்ஞீலிக்குப் புறப்பட, அப்பிராமணரும் கூடச் சென்றார். அக்கோயில் செல்லுமுன் சிவபெருமான் மறைந்தார். அப்பர் இது ஓர் அற்புதம் என்று எண்ணிக் கோயிலுக்குள் சென்று பதிகம் பாடினார்.[96] இச் செயலை நினைவுகூறும் வகையில் இத் திருவிழா நடத்தப் பெறுகின்றது. இந்த ஆண்டில் (1984) சித்திரைத் திங்கள் 13ஆம் நாள் இவ் விழா கொண்டாடப்பட்டது.

திருஞான சம்பந்தர் திருவிழா

ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் பத்து நாளைக்குத் திருஞான சம்பந்தருக்குத் திருவிழா நடைபெறுகிறது. அந் நாட்

களில் திருஞானசம்பந்தரின் பிறப்பு, வளர்ப்பு, அற்புதச் செயல் கள், ஜோதியில் கலத்தல் ஆகிய ஐதீகங்கள் நடைபெறுகின்றன. முதல் ஒன்பது நாட்களுக்கு இரவில் திருஞான சம்பந்தரின் கோயில் பிரகார உற்சவமும், பத்தாம் நாள் காலையில் பல்லக்கில் மணக்கோலத்தில் வீதிவலம் வருதல், இரவில் பூப்பல்லக்கில் வீதி வலம் வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன. இத் திருவிழா இந்த ஆண்டு (1984) வைகாசித் திங்களில் 23ஆம் நாள் முதல் 32ஆம் நாள் முடிய கபாலீசுவரர் கோயிலில் நடைபெற்றது.[97]

முதல் நாளில் தாலாட்டு உற்சவமும், இரண்டாம் நாளில் வளர்பருவ ஐதீகமும், மூன்றாம் நாளில் ஞானப்பால் உண்ணுதல் பொற்றாளம் பெறுதல் ஆகிய ஐதீகங்களும், நான்காம் நாளில் முத்துச் சிவிகை பெறுதல், முயலகன் என்னும் நோய் தீர்க்கல் ஆகிய ஐதீகங்களும், ஐந்தாம் நாளில் அடியார் சுரப்பிணி தீர்த் தல், முத்துப்பந்தல் பெறுதல் ஆகிய ஐதீகங்களும், ஆறாம் நாளில் அரவந்தீண்டப் பெற்ற மகனை உயிர்ப்பித்தல், திருவீழி மிழலையில் படிக்காசு பெறுதல் ஆகிய ஐதீகங்களும், ஏழாம் நாளில் பாண்டியன் சுரந் தீர்த்தல், வைகையில் ஏடெதிர் செல்லல், அனல்வாதம் ஆகிய ஐதீகங்களும், எட்டாம் நாளில் ஓடம் விடுதல், ஆண் பனையைப் பெண்பனை ஆக்குதல் ஆகிய ஐதீகங்களும், ஒன்பதாம் நாளில் திருமயிலையில் அங்கம் பூம்பாவையாக்கிய ஐதீகமும், பத்தாம் நாளில் திருமணக்கோலம், திருமணம், திருக்கல்யாண ஜோதியில் கலத்தல் ஆகிய ஐதீகங் களும் நடைபெற்றன.[98] திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் செய்த அற்புதச் செயல்களையும் ஒருங்கே நினைவுகூரும் வகையில் இவ் விழா நடைபெறுகிறது. திருஞான சம்பந்தர் மயிலைத் தலத்தின் மீது பதிகம் பாடியதாலும், அங்கம் பூம்பாவையாக்கிய அற்புதச் செயலைச் செய்ததாலும் அவரைப் போற்றும் வகையில் பத்துநாட்கள் இவ் விழா எடுப்பது பாராட்டற்குரியதாகும்.

சுந்தரர் திருநட்சத்திர உற்சவம்

ஆண்டுதோறும் ஆடித் திங்களில் சுவாதி நட்சத்திரத்தில் சுந்தரருக்கு உற்சவம் நடைபெறுகின்றது. மாலையில் பூப்பல்லக் கில் சேரமான் பெருமாள் நாயனாருடனும் கழறிற்றறிவாருட னும் திருவீதி உற்சவம் நடைபெறும். சுந்தரர் யானை வாகனத் தின்மீதும் சேரமான் பெருமாள் நாயனார் குதிரை வாகனத்தின் மீதும் அமர்ந்து திருவீதி உலா வருவர்.[99] இந்த ஆண்டு (1984) ஆடித்திங்கள் 19ஆம் நாள் இவ் விழா நடைபெற்றது.

ஆண்டு முழுவதும் நிகழும் விழாக்கள்

விழாக்கள் மலிந்த திருக்கோயில் கபாலீசுவரமாகும். இங்குத் திங்கள்தோறும் நடைபெறும் திருவிழாக்கள் இப்பகுதியில் கூறப் பெறுகின்றன.

சித்திரை

சித்திரைத் திங்கள் முதல்நாள் ஆண்டுப்பிறப்புச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கோயில் முழுவதும் எல்லா மூர்த்திகளுக்கும் அபிடேகம் நடைபெறும். கபாலீசுவரருடைய மூலவருக்குச் சிறப்பு அபிடேகம் நடைபெறும். அன்று மாலையில் சோமாஸ்கந்தர் மண்டபத்தில் பஞ்சாங்கம் படிக்கும் நிகழ்ச்சி நடைபெறும். கபாலீசுவரர் வசந்தவிழாவின் இறுதி நாட்கள் இத் திங்களின் முதற் பகுதியில் நடக்கும். திருவோண நட்சத்திரத்தில் நடராஜப் பெருமானுக்கு உச்சிக் காலத்தில் மகா அபிடேகம் நடைபெறும். சிங்கார வேலருக்கு வசந்த விழா பதினேழு நாட்கள் நடைபெறும். சித்திரைத் திங்கள் இறுதியில் கபாலீசுவரருக்குக் கத்திரி உற்சவம் தொடங்கி வைகாசித் திங்களின் முற்பகுதியில் முடியும்.

வைகாசி

இத் திங்களில் திருஞான சம்பந்தருக்குப் பத்து நாட்கள் சிறப்பாக விழா நடத்துதல் பற்றி முன்னர்க் கூறப்பட்டது. புனர்பூச நட்சத்திரத்தில் சேக்கிழார் சுவாமிகள் யானை வாகனத் திருவீதி விழா நடைபெறுகிறது. நடராஜர் சந்நிதியில் ஐக்கியம் ஆகும் ஐதீகமும் நடைபெறுகிறது.[100]

ஆனி

மாணிக்கவாசகருடைய திருநட்சத்திரம் மகமாகும். அன்று இரவில் பூப்பல்லக்கில் திருவீதி உற்சவம் நடைபெறுகிறது. நடராஜரிடம் ஐக்கியமாகும் ஐதீகமும் நடைபெறுகிறது. உத்திர நட்சத்திரத்தில் ஆனித் திருமஞ்சனம், நடராஜர் பிரதோஷ கால அபிடேகம் ஆகியவை நடைபெறுகின்றது. மூல நட்சத்திரத்தில் அருணகிரிநாதருக்கு அபிடேகம் நடைபெறுகின்றது. ஆனிச் சதயத்தில் சங்காபிடேகம் நடைபெறுகின்றது.[101]

ஆடி

ஆடி வெள்ளிக்கிழமைகளில் கற்பகவல்லிக்குச் சிறப்பாகப் பூசைகள் நடத்தப்படுகின்றன. ஆடிப்பூரத்தில் கற்பகாம் பாளுக்குச் சந்தனக் காப்பு சாத்தப்படுகிறது. இரவில் அம்பிகை கந்தர்வ வாகனத்தின் மீதமர்ந்து திருவீதி உலா வருதல் நடை பெறுகின்றது. பன்னிரு திருமுறை விழா இத் திங்களின் இறுதியில் தொடங்கி ஆவணித் திங்களின் தொடக்கத்தில் முடியும் வகையில் பதின்மூன்று நாட்கள் நடைபெறுகின்றது. பன்னிரு திருமுறை களைக் கோயில் பிரகாரத்தில் உலாவரச் செய்து நடராஜர் சந்நிதியில் எழுந்தருளச் செய்தல், திருமுறைகளை அலங்காரங் களுடன் திருமுறை விமானத்தில் யானை மீது வைத்துத் திருவீதி உற்சவம் நடத்துதல் ஆகியவை நடைபெறுகின்றன. இத் திங்களில் பவித்ரோற்சவமும் நடைபெறுகின்றது.

ஆவணி

விநாயகர் சதுர்த்தி

விநாயகர் சதுர்த்தியன்று மாலையில் கூத்தாடும் பிள்ளை யாருக்குச் சிறப்பு அபிடேக அலங்கார ஆராதனைகள் நடை பெறும். இரவில் மூஷிக வாகனத்தில் திருவீதி உற்சவம் நடைபெறும்.

ஆவணி மூலம் பிட்டுத் திருவிழா

மதுரையில் மாணிக்கவாசகருக்காக வைகை ஆற்று வெள் ளத்தைத் தடுக்க வந்திக் கிழவியின் பாகத்தை அடைக்கச் சொக்கலிங்கப் பெருமான் கூலி ஆளாக வந்து, வந்திக் கிழவி யிடம் பிட்டு வாங்கித் தின்ற ஐதீக உற்சவம் ஆவணி மூல நட்சத் திரத்தன்று நடைபெறுகின்றது. சந்திரசேகர சுவாமி இடப வாக னத்திலும், அவர் எதிரில் மாணிக்க வாசக சுவாமிகளும் எழுந்தருளத் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறு கின்றது.

ஆவணி சதுர்த்தசி

நடராஜப் பெருமானுக்கு இந் நாளில் அபிடேகம் மாலை நேரத்தில் கோயிலுக்குள்ளே நடைபெறும்.

புரட்டாசி

சதுர்த்தசி அன்று நடராஜருக்கு அபிடேகம் அர்த்தசாம வேளையில் நடைபெறுகின்றது

நவராத்திரி கொலு

இவ் விழா அமாவாசையன்று தொடங்கி ஒன்பது நாட்கள் நடைபெறும். கொலு மண்டபத்தில் கற்பகாம்பிகை சிறப்பு அலங்காரத்துடன் கொலுவீற்றிருப்பாள். பத்தாம் நாள் சந்திர சேகர சுவாமி குதிரை வாகனத்தில் பரிவேட்டை போதல், மேலண்டை வீதியில் அம்பு போடுதல், பரிவேட்டை மண்டபத்தில் ஆராதனை ஆகியவை நடைபெறும். பௌர்ணமி அன்று நிரை மணிக் காட்சியும் நடைபெறுகிறது. மகா மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். எல்லாவிதத் தானியங்களும், காய்கனிகளும் கிழங்குகளும் சேகரித்து மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சந்திரசேகர சுவாமியின் திருவீதி உற்சவமும் நடைபெறும்.

ஐப்பசி

தீபாவளி அன்று அதிகாலை நரக சதுர்த்தசி நீராடல், சிறப்பு அபிடேகம் ஆகியவை நடைபெறும். எல்லாத் தெய்வங்களுக்கும் எண்ணெய்க்காப்பு அபிடேகம் நடைபெறும். சிங்காரவேலர் கந்தர் சஷ்டி விழா ஆறு நாட்கள் கொண்டாடப்படுகிறது. முதல்நாள் கொடி ஏற்று உற்சவம் நடைபெறும். ஆறுநாட்களும் காலை மாலை யாகசாலை பூசை நடைபெறும். திருவீதி உற்சவமும் நடைபெறும். ஆறாம் நாள் சிங்கார வேலர் தேரில் எழுந்தருளுவார். மாலையில் சூர சம்காரம் வடக்கு மாடவீதியில் நடைபெறும். யானை, சிம்மம், புலி, ஆடு தலைகளை வெட்டிய பிறகு சூரன் மாமரமாகித் தடுக்க, அதைப் பிளந்த பின்பு கோழியாகவும், மயிலாகவும் வடிவம் கொண்டு வேலனை வலம் வருதல், முருகர் மயில் வாகனத்தில் ஏறுதல், தேரிலிருந்து முருகர் இறங்கி மயில் மீதமர்ந்து மற்ற வீதி வலம் வருதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். கோயிலுக்குள் வந்த பிறகு பிராயச்சித்தம் அபிடேகம் நடந்து, சுவாமி மறுபடியும் மாடவீதி வலம் வந்து திருவிழா நிறைவடையும். மறுநாள் திருக்கல்யாணம் நடைபெறும். உற்சவ யானை வாகனத்தில்

திருவீதி மகா உற்சவம் நடைபெறும். மறுநாள் முதல், ஆறு நாள் விடாய் ஆற்றி உற்சவம் நடைபெறும். இந்த ஆறு நாளும் மண்டபத்தில் அபிடேகமும் ஆராதனைகளும் நடைபெறும். பௌர்ணமியன்று அன்ன அபிடேகம் நடைபெறும். சந்திர சேகர சுவாமி திருவீதி உற்சவமும் நடைபெறும்.

கார்த்திகை

நான்கு அல்லது ஐந்து சோம வாரங்கள் (திங்கட்கிழமை) சிறப்பாகப் பூசைகள் நடைபெறும். நான்காம் சோம வாரத்தில் சிறப்பு அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெறும். கார்த்திகைக் கிருத்திகையில் அண்ணாமலையார் அபிடேக ஆராதனை, சொக்கப்பனை, சிங்கார வேலர் திருவீதி உற்சவம் ஆகியவை நடைபெறும். கபாலீசுவரருக்கு நான்கு சோம வாரங்களிலும் நூற்றெட்டுச் சங்கு அபிடேகம் நடைபெறும்.

மார்கழி

இத் திங்களில் முப்பது நாளும் உற்சவகாலபூசை நடைபெறும். அதாவது 4-30 மணிக்கு மேல் 6 மணிக்குள் தனுர்மாதம் உற்சவ கால பூசையாகும். கார்த்திகை ஐந்தாம் சோமவாரம் கபாலீ சுவரருக்கு ஆயிரத்தெட்டுச் சங்காபிடேகம் நடைபெறும். மாணிக்க வாசகர் திருவெம்பாவை விழா, பத்துநாள் நடை பெறும். முதல் நாள் முதல் பத்து நாள் வரையில் காலை வேளை மாணிக்கவாசகர் புறப்பாடு, கொடிமரம் முதல் மாடவீதி நவ சந்திகள் வரை திருவெம்பாவை ஓதுதல்; ஒரு சந்திக்கு இரண்டு இரண்டு திருவெம்பாவை பாட்டுப் பாடுதல் ஆகியவை நடை பெறும். மாணிக்கவாசகர் உற்சவத்தின் எட்டாம் நாள் மாலையில் கற்பகாம்பாள் கபாலீசுவரர் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். இந்த ஊஞ்சல் உற்சவம் மூன்று நாள் நடை பெறும். மூன்றாம் நாள் மாணிக்கவாசகர் முன்னிலையில் ஊஞ்சல் விழா நடைபெறும், பொன்னூசலும் திருவெம் பாவையும் ஓதிய பின்பு பஞ்ச மூர்த்திகள் திருவீதி ஊர்வலம் வருதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

திருவாதிரை உற்சவத்தன்று அதிகாலையில் நடராஜப் பெருமானுக்கு அலங்கார தீபாராதனை, சாந்து சேர்வை, சுவாமி புறப்பட்டுத் தேரடி போய்த் திரும்புதல்; கோயிலுக்குள் தெற்கு நோக்கி வெள்ளை மல் துணியினால் சுவாமியைப் போர்த்துதல், உடனே சுவாமி பதினாறுகால் மண்டபம் எழுந்

தருளி பத்தி உலாவுதல் ஆகியவை நடைபெறும். இதற்குச் சப்தபத உற்சவம் என்று பெயர்; சுவாமி பதினாறு கால் மண்டபத்தை ஏழு தடவை சுற்றி வருவார். இதில் ஒவ்வொரு சுற்றுக்கும் தனித்தனி இசைக்கருவிகள் வாசிக்கப்படும். சுவாமி மறுபடியும் கோயிலுக்குள் எழுந்தருளுவார். பிறகு காலை ஒன்பது மணிக்கு ஆருத்திரா காட்சியும், திருவீதி உற்சவமும் நடைபெறும். வாயிலார் நாயனார் ஆண்டுத் திருநட்சத்திர உற்சவம் மார்கழி இரேவதி நட்சத்திரத்தில் நடைபெறும். பூப் பல்லக்கில் வாயிலார் திருவீதி ஊர்வலம் வருவார்.

தை

தைத்திங்கள் முதல் நாள் மகரசங்கராந்தி உத்தராயண புண்ணிய காலத்தில் சந்திரசேகர சுவாமி திருவீதி உற்சவம் நடைபெறும். இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலன்று கற்ப காம்பாள் கன்னி உற்சவமும், காலையில் அம்மனுக்குக் குளக் கரையில் அபிடேக அலங்காரமும் ஆராதனையும் திருவீதி உற்ச வமும் நடைபெறும். மாலையில் சந்திரசேகர சுவாமி சங்க ராந்தி பரிவேட்டை, திருவீதி உற்சவம் நடைபெறும்.

இரத சப்தமி அன்று சந்திரசேகர சுவாமி இரதத்தில் எழுந் தருளி மேலண்டைக் குளக்கரையில் தீர்த்தவாரி நடைபெறும். திருவீதி உற்சவமும் நடைபெறும். மாலையில் ஜகதீசுவர சுவாமிக்குச் சிறப்பு அபிடேகம் நடைபெறும். தைத்திங்களில் நான்கு வெள்ளிக் கிழமைகளிலும் கற்பகாம்பாள் கோயிலுக்குள் பிரகாரவிழா நடைபெறும். சிங்காரவேலர் வனபோஜன விழாவும் நடைபெறும். அடையாறு அரங்கசாமி முதலியார் வனபோஜனத் தோட்டத்தில் சிங்காரவேலர் எழுந்தருளி, சிறப்பு அபிடேகம், ஆராதனை, சமாராதனை நடைபெற்று மாலையில் சிறப்பான அலங்காரத்தோடு வீதிவலம் வந்து கோயிலுக்குத் திரும்புவார். தைப்பூசத்தில் மூன்று நாள் தெப்போற்சவம் மயிலாப்பூர் குளத்தில் நிகழும்

மாசி

மகா சிவராத்திரி விழாவன்று கபாலீசுவரரின் மூலவருக்கு நான்கு காலம் சிறப்பு அபிடேகம் நடைபெறும் அன்று பிர தோஷ விழாவும் சிறப்பாக நடைபெறும். மாசி மகம் பௌர் ணமியன்று சிறப்பாக நடைபெறும் திங்கள்தோறும் திருவா

திரையில் சோமாஸ்கந்தர் மூர்த்திக்கு நடந்தேறிய அபிடேகத்தின் சாந்தியாக நூற்றெட்டுக் கலசம் பூசை யாகங்களுடன் மூன்றுவேளை நடைபெற்றுச் சுவாமிக்கு மகாமண்டத்தில் மகா அபிடேகம் நடைபெற்றுக் கோயில் பிரகார உற்சவம் நடைபெறும். பங்குனிப் பெருவிழா இலக்கினப் பத்திரிகை வாசித்தல் நடைபெறும்.

பங்குனி

பிரம்மோற்சவம் பதினோரு நாள் நடைபெறும். அதைத் தொடர்ந்து பத்துநாள் விடாய் ஆற்றி உற்சவம் நடைபெறும்.

இவையே திங்கள்தோறும் கபாலீசுவரர் கோயிலில் நடைபெறும் திருவிழாக்களாகும். அவற்றுள் சிறப்பு மிகுந்த திருவிழாக்கள் சில விளக்கமாகக் கூறப்பெறும்.

பிரதோஷ வழிபாடு

திங்கள் இருமுறை திரயோதசி திதியில் சுக்கில பட்சம், கிருட்டின பட்சம் பிரதோஷ உற்சவம் நடைபெறும். சனிப் பிரதோஷம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.[102] சிவன் கோயில்களில் தேய்பிறையின்போது பதின்மூன்றாம் நாள் திரயோதசி திதியின்போது சிறப்பாகச் செய்யப்படும் வழிபாடு 'பிரதோஷ வழிபாடு' என்று கூறப்பெறுகிறது. சூரியன் மறைவதற்கு முன்பு ஒன்றரை மணி நேரமும், சூரியன் மறைந்த பின்பு ஒன்றரை மணி நேரமும் ஆக மூன்று மணி நேரம் பிரதோஷ காலம் எனப்படும். சூரியன் மறைவதற்கு முன் உள்ள நேரம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது[103] சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகைத் திங்கள்களில் வரும் பிரதோஷம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. பிரதோஷத்திற்கும் ஏகாதசி, துவாதசி ஆகிய இரு விரதங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அது புராண வரலாறாகும்.

துர்வாச முனிவர் சிவபூசை செய்து கிடைத்த மலரை இந்திரனிடம் கொடுத்தார். அவன் அதை அலட்சியமாக ஐராவதத்தின் தலையில் வைத்தான். அந்த யானை அதைத் துதிக்கையால் எடுத்துக் கீழே எறிந்தது. துர்வாசர், 'எல்லாச்

செல்வங்களும் உன்னை விட்டு நீங்குக' என்று சபித்தார். தேவர்கள் செல்வம் அனைதனதயும் இழந்தனர். தேவர்கள் திருமாலின் அறிவுரைப்படி அசுரர்களுடன் சேர்ந்து பாற் கடலைக் கடைந்தனர். ஆலகால நஞ்சு தோன்றியது. சிவ னிடம் தேவர் அடைக்கலம் புகுந்தனர். சிவபிரான் நஞ்சை உண்டார். அது அவருடைய கண்டத்தில் தங்கியது. அவர் கண்டம் நீல நிறம் பொருந்தியதாக மாறியது. அன்றைய நாள் தேவர்கள் உண்ணாநோன்பு இருந்தனர். அதுவே ஏகாதசி யாகும். உண்ணாநோன்பு முடித்த நாள் துவாதசி திதியாகும். அதற்கு மறுநாள் மாலை ஏழரை நாழி நேரம் சிவபெருமான் ஆனந்த தாண்டவம் செய்தருளினார். அவ் வேளையே பிரதோஷம் எனப்படுகிறது.[104]

பிரதோஷத்தன்று மாலையில் மூலலிங்க மூர்த்திக்கும் நந்திக்கும் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நடத்தி, பிரதோஷ நாயகரை இடபவாகனத்தில் ஏற்றிக் கோயில் பிரகாரத்தில் எழுந்தருளச் செய்வர்.

கபாலீசுவரர் கோயில் பிரதோஷ வழிபாடு சிறப்பாகச் செய்யப்படுகின்றது. இடப வாகனத்தில் பிரதோஷ நாயகர் எழுந்தருளிக் கோயில் பிரகாரத்தில் மும்முறை வலம் வந்து அம்பாள் எதிரிலுள்ள மண்டபத்தில் தீபாராதனை செய்யப்படு கிறது. வேதபாராயண தேவாரக் கூட்டங்கள் உற்சவ மூர்த்தி யோடு வலம் வருதல் உண்டு. சனிப் பிரதோஷம் மிக முக்கிய மானதால் அன்று மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்.

நவராத்திரி கொலு

நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவுகள் என்பது பொருள். புரட்டாசித் திங்களில் அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்கள் இரவில் பராசக்தியைப் பல வடிவாகப் பூசித்து விழா நடத்தி வருகின்றனர். முதல் மூன்று நாட்களில் பார்வதியையும், அடுத்த மூன்று நாட்களில் திருமகளையும், இறுதி மூன்று நாட் களில் கலைமகளையும் பூசித்து, பத்தாம் நாள் விஜயதசமி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். தசராத்திரி அல்லது பத்து இரவுகள் விழா நடந்து வருவதால் இதனைத் தசரா எனச் சிலர் கூறுகின்றனர்.[105] அம்மை, அமைச்சர், படை வீரர் மற்றும் பலரோடு அரச மண்டபத்தில் கொலு வீற்றி ருக்கும் நிகழ்ச்சியையே கொலு என்று கூறுகின்றனர். இல்லங்

களில் அழகிய பொம்மைகளை வைத்து நடுவில் பராசக்தியைக் கொலு வீற்றிருக்கச் செய்து பார்த்து மகிழ்வர். இந்தக் கொலு கோயில்களிலும் மேற்கொள்ளப்படுகிறது. கபாலீசுவரர் கோயிலில் நவராத்திரி கொலு சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. நவராத்திரி ஒன்பது நாளும் காலை மாலையாக இருவேளைகளிலும் கற்பகாம்பாளுக்குப் பூசை நடைபெறும். கொலு மண்டபத்தில் சிறப்பான அலங்காரத்துடன் கற்ப காம்பாள் ஒன்பது நாட்களும் கொலு வீற்றிருப்பாள்.

முதல் நாள் கற்பகாம்பாள் அன்ன வாகனத்தில் கொலு மண்டபத்திற்கு எழுந்தருளுவாள். இரண்டாம் நாள் காமதேனு வாகனத்தில் கௌரி அலங்காரத்தோடும், மூன்றாம் நாள் சரசுவதி அலங்காரத்தோடும், நான்காம் நாள் நாக வாகனத் தில் பத்மாசினி அலங்காரத்தோடும், ஐந்தாம் நாள் இடப வாகனத்தில் மகேசுவரி அலங்காரத்தோடும், ஆறாம் நாள் இராஜ ராஜேஸ்வரி அலங்காரத்தோடும், ஏழாம் நாள் குதிரை வாகனத்தில் மீனாட்சி அலங்காரத்தோடும், எட்டாம் நாள் மகிஷாசுரமர்த்தனி அலங்காரத்தோடும், ஒன்பதாம் நாள் கம்பாநதி தீரத்தில் காமாட்சி சிவபூசை அலங்காரத்தோடும் கற்பகாம்பாள் கோயில் பிரகாரம் சுற்றி வந்து யதாஸ்தானத் திற்கு எழுந்துருளுவாள்.[106] இந்த ஒன்பது நாள் கொலுவிலும் மேளக் கச்சேரி, பாட்டுக் கச்சேரி, இலக்கியச் சொற்பொழிவுகள். வேத பாராயணம், தேவார பாராயணங்கள் நடைபெறும்.

தைப்பூசம்

தைத்திங்கள் பௌர்ணமியில் வரும் பூச நட்சத்திரம் சிறப்பு மிகுந்ததாகும். தேவ குருவான பிரகஸ்பதி இந் நட்சத்திரத்திற்கு உரியவராவார். அறிவுக் கடவுள் என்று அவர் போற்றப் படுகின்றார். புண்ணிய தீர்த்தங்களில் இந் நாளில் நீராடினால் அறிவு வளரும் என்று எண்ணுகின்றனர். இத் திருநாள் திரு விடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயிலில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.[107] திருஞான சம்பந்தரும், 'தைப் பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்' என்று பாடியுள்ள தால் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே திருமயிலையில் 'தைப் பூச உற்சவம்' சிறப்பாக நடைபெற்று வந்ததை அறியலாம்.[108] இந் நாளில் முருகனுக்கும் சிறப்பாக விழா எடுக்கின்றனர். இராமலிங்க வள்ளலாரும் தைப்பூச நாளிலே மறைந்தார். சோதி வழிபாட்டுக்குரிய நாளாக இந் நாள் இக் காலத்தில் கருதப்படுகிறது.

கபாலீசுவரர் கோயில் திருக்குளத்தில் தைப்பூசம் பௌர்ணமியன்று முதல் நாள் சந்திரசேகர சுவாமி தெப்போற்சவமும் இரண்டாவது மூன்றாவது நாள்கள் சிங்காரவேலர் தெப்போற்சவமும் நடைபெறும். இத் தெப்பம் முதல் நாள் ஐந்துதரம், இரண்டாம் நாள் ஏழுதரம், மூன்றாம் நாள் ஒன்பது தரம் என்று மூனறு நாளைக்குக் குளத்தில் நீராழி மண்டபத்தைச் சுற்றிவரும். மூன்று நாட்களிலும் மக்கள் பெருந்திரளாக வந்து இறைவனை வணங்குவர், வெற்றிலைகளில் கற்பூரத்தைக் கொளுததி நீரில் மிதக்க விடுவது கண்கொள்ளாக காடசியாக இருக்கும். சுவாமி இம் மூன்று நாளும் மாலை சுமார் ஐந்து மணிக்குக் கோயிலை விட்டு மற்ற வீதி வலம் வந்து மேலண்டைப் பந்தலில் இருந்து தெப்பததில் சேர்ந்து சுற்றி வருவார். தெபபோற்சவம் முடிந்தபின் சுவாமி மிகுதியாயுள்ள வீதி வலம் வந்து கோயிலைச் சேருவார்.

மாசிமகம்

மாசித் திங்கள் பௌர்ணமியன்று மக நட்சத்திரத்தில் இவ் விழா கொண்டாடப்பெறும். சில இடங்களில் இறைவன் சமுத்திரக் கரைக்குச் சென்று வருவதுண்டு. இந்த நாளில் எல்லோரும் கடலில் மூழ்கி எழுவர். அருகிலுள்ள கோயில்களிலிருந்து உற்சவ மூர்த்திகளும் கடற்கரைக்கு எழுந்தருளுவர்.

கபாலீசுவரர் கோயிலிலிருந்து சந்திரசேகர சுவாமி அஸ்திர தேவருடன் கடற்கரைக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்துத் திரும்புவார். திருமயிலையில் நடந்த இவ் விழாவினைத் திருஞான சம்பந்தர்,

> மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
> கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்
> அடலானேறூரும் அடிகள்

என்று பாடியுள்ளார்.[109]

பிரம்மோற்சவம்

பொதுத் தத்துவம்

இத் திருவிழா பத்து நாட்கள் கொண்டாடப்பெறும். இறுதி நாள் பங்குனி உத்திரமாக அமையும். பிரம்மோற்சவ நாட்

களில் உற்சவச் சிலைகள் மாடவீதிகளில் திருவீதி உலாச் சென்று வரும். இந்த உலா ஒளி விளக்குகளோடும், நாதசுரத்தோடும், வேத முழக்கம், தேவாரப் பாடல்களோடு நடைபெறும்.

முதல் திருவிழா அன்று எல்லாக் கோயில்களிலும் கொடியேறுகின்றது. சிவன் கோயில்களில் ஏற்றும் கொடியில் சிவனின் வாகனமான இடபத்தின் உருவம் இருக்கும். இடபம் தரும உருவமாகவும் ஆன்மாவின் உருவமாகவும் மதிக்கப்படுகிறது. பொது வகையில் உயிர் வருக்கங்களுக்கு அருள் புரியும் இறைவன் சிறப்பு வகையில் அருள்புரிய இப் பத்து நாளும் ஆயத்தமாக இருக்கிறான் என்பதை இக் கொடி உணர்த்துகிறது. இக் கொடி மரம் பதியையும், மேலே ஏற்றபபடும் இடபக் கொடி ஆன்மாவையும் அதனை ஏற்றும் கயிறு பாசத்தையும் குறிக்கும் என்றும் ஆன்றோர் கூறுவர்.[110] கொடியேற்றம் முதல் தீர்த்தவாரி வரை யாகசாலையில் யாகம் நடைபெறும்.

முதல்நாள் இரவு மரத்தடியில் சிவபெருமான் வீற்றிருப்பதாக விளக்கும் விருட்ச வாகனம் எழுந்தருளும். இதை விருததிக்கிரம சிருஷ்டிக் கோலம் என்பர். படைப்புக்கெல்லாம் இறைவனே ஆதிமூலம் என்பதை இது உணர்த்துகிறது. இரண்டாவது நாள் காலை சூரியப்பிரபை; மாலை சந்திரப்பிரபை. இது விருத்திக்கிரமஸ்திதிக் கோலம். இறைவன் உலகத்தைக் காப்பாற்றி உயிர்களுக்கு இன்பம் அளித்தலை இது குறிக்கிறது. மூனறாம் நாள் காலையில் அதிகார நந்தி, மாலையில் பூத வாகனம். இவை விருத்திக்கிரம சங்காரக் கோலங்கள் என்பர். நான்காம் நாள் நாகவாகனம். இது மறைத்தல் தொழிலாகிய திரோபவத்தைக் குறிக்கிறது எனலாம். ஐந்தாம் நாள் இடப வாகனம். இது மாசற்ற அறவடிவான ஆன்மாவைக் குறிக்கிறது. ஆறாம் நாள் யானை வாகனம். இது லயக்கிரம சிருஷ்டிக் கோலமாகும். உலகப் பொருள்கள் அனைத்தும் இறைவனிடம் ஒடுங்கிக் கிடத்தலை இது குறிக்கிறது. ஏழாம் நாள் இராவணன் மேலுள்ள கயிலாய மலை. இறைவனுக்குத் தீங்கு செய்தவர்களும் அடங்கி நின்று வழிபடுவராயின் அவனுக்கும் இறைவன் அருள்புரிவான் என்பதை இது உணர்த்துகிறது. சில இடங்களில் ஏழாம் நாள் தேர்த்திருவிழா நடைபெறும். எட்டாம் நாள் மாலையில் பிட்சாடனத் திருக்கோலத் திருவிழா நடைபெறும். சில இடங்களில் அலங்கார விமானத்தில் இறைவன் எழுந்தருளுவான். ஒன்பதாம் நாள் பல இடங்களில் தேர்த் திருவிழாவாக நடைபெறுகிறது. பத்தாம் நாள் தீர்த்தவாரி உற்சவம். காலையில் நடராஜர் திருவீதியில் உலா வருவார்.[111]

கபாலீசுவரர் கோயில் பிரம்மோற்சவம்

ஆண்டுதோறும் பங்குனித் திங்களில் கிருத்திகை நட்சத்திரத்தில் திருவிழாவிற்கான முன் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பிரம்மோற்சவம் தொடங்குவதற்கு முதல் நாள் கோயில் முழுதும் மகா அபிடேகமும், மணவிருந்தும் நடைபெறும்.

இரு கிராம தேவதைகளுக்கும் தேருக்கும் வேண்டிய பூசை செய்து அதற்குரிய பலியும் நடத்துவதுண்டு. அன்று விநாயகர் பூசை ஆரம்பித்து அங்குரார்ப்பணத்தை முன்னிட்டுச் சண்டேசுவரர் அங்காரகத் தேவருடன் நிருதி மூலைக்கு (பி. எஸ். மேல் நிலைப்பள்ளி உள்ள இடம்) எழுந்தருளி மிருத்சங்கிரகணம் நடத்திக் கொண்டு (புற்றுமண் எடுத்துக் கொண்டு) மாடவீதி வலம் வரும். கூத்தாடும் பிள்ளையார் இரவில் மூஷிக வாகனத்தில் உலா வருவார்.

முதல் நாள் திருவிழா

காலையில் கபாலீசுவரர் பஞ்சமூர்த்தியுடன் துவஜாரோகண மண்டபத்தில் எழுந்தருளி, கொடியேற்றம் நடந்தவுடன், பஞ்சமூர்த்தி அஸ்திர தேவர்களுடன் நவசக்தி பந்தனம் செய்து கொண்டு உற்சவம் கொண்டருளி கல்யாண மண்டபத்தில் எழுந்தருளுவார்கள். இரவில் இறைவன் புன்னை மரத்தடியில் உமையம்மை மயில் உருவத்தோடு பூசிக்கும் அலங்காரத்துடன் இருக்கையில் புன்னை மரத்தில் எழுந்தருளுவார். அம்பாள் கற்பக விருட்ச விமானத்திலும், சிங்காரவேலர் வேங்கை விருட்ச விமானத்திலும் எழுந்தருளுவார். முதல் பத்து நாட்களில் காலை மாலையில் யாக சாலைக்கு இறைவன் எழுந்தருளும் போது தீபாராதனை நடைபெறும்.

இரண்டாம் நாள் திருவிழா

காலையில் இறைவன் சூரிய விருத்தத்திலும், அம்பாளும் முருகரும் விமானங்களிலும் எழுந்தருளி, ஈசானிய மூலையில் மண்டகப்படி பெற்றுக் கொண்டு கோயில் திரும்புவார். இரவில் இறைவன் சந்திர விருத்தத்திலும, அம்பாள் கிளி வாகனத்திலும், முருகர் அன்ன வாகனத்திலும் எழுந்தருளுவர்.

மூன்றாம் நாள் திருவிழா

காலை ஆறுமணிக்கு இறைவன் வெள்ளி அதிகார நந்தியின் மீதும், அம்பாள் கந்தர்வி வாகனத்திலும், முருகர் புருஷ கந்தர்வ

வாகனத்திலும், விநாயகர், சண்டிகேசுவரர் முறையே வெள்ளி மூஷிக, வெள்ளி இடப வாகனங்களில் எழுந்தருளுவர். இந்த உற்சவத்தின்போது தெற்கு மாடவீதிக் குளக்கரையில் திருஞான சம்பந்தருக்குத் திருமுலைப்பால் தந்தருளிய ஐதீகம் நடைபெறும். மேற்கு மாடவீதிப் பரிவேட்டை அலங்கார மண்டபத்தில் மண்டகப்படிக்கு எழுந்தருளி ஆராதனை நடைபெற்றவுடன் மாடவீதி வலம் வரும். அன்றிரவு இறைவன் பூத வாகனத்திலும், முருகர் தாரகாசுரவாகனத்திலும், அம்பாள் பூதகி வாகனத்திலும் எழுந்தருளுவர்.

நான்காம் நாள் திருவிழா

காலையில் கபாலீசுவரர் புருஷா மிருக வாகனத்திலும், அம்பாள் சிம்ம வாகனத்திலும். முருகர் யாளி வாகனத்திலும் எழுந்தருளுவர். இரவில் கபாலீசுவரர் நாக வாகனத்தில் திருவீதி உலா வருவார். அம்பாள் காமதேனு வாகனத்திலும், முருகர் ஆட்டுக்கிடாவின் மீதும் வீதிவலம் வருவர்.

ஐந்தாம் நாள் திருவிழா

காலையில் கபாலீசுவரர், கற்பகாம்பிகை, சிங்காரவேலர் விமானங்களில் எழுந்தருளி மாடவீதி வலம் வந்து கிழக்குக் கோபுரத்திற்கு எதிரேயுள்ள வணிக வைசிய மண்டபத்தில் மண்டகப்படிக்கு எழுந்தருளி உச்சிகாலமானபின் கோயில் சேருவர். இரவில் கபாலீசுவரர் வெள்ளி இடப வாகனத்திலும், அம்பாள் தங்க இடபவாகனத்திலும், முருகர் தங்க மயிலிலும், விநாயகர், சண்டீசுவரர் வெள்ளி மூஷிக, வெள்ளி இடப வாகனங்களில் எழுந்தருளுவது கண்கொள்ளாக் காட்சியாகும். ஆயிரக் கணக்கில் மக்கள் கூடுவர். நாதசுர முழக்கம், வேத பாராயணம், தேவார இன்னொலி இரவு முழுதும் கேட்கும்.

ஆறாம் நாள் திருவிழா

காலையில் ஐந்து பல்லக்குகளில் பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளுவர். மாலையில் கபாலீசுவரர், கற்பகாம்பாள், யானை வாகனங்களிலும், சிங்கார வேலர் பச்சை மயில் வாகனத்திலும் எழுந்தருளுவார்.

ஏழாம் நாள் திருவிழா

காலையில் ஐந்து தேர்களில் பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளுவர். மாலையில் கபாலீசுவரர் தேரடியிலிருந்து சிறப்பான மலர்

அலங்காரங்களுடன் உயர்ந்த மேளக் கச்சேரியுடனும் கோயிலுக்கு எழுந்தருளுவார். இரவில் பஞ்சமூர்த்திகள் தங்கத் தொட்டிலில் திருவீதி உலா வருவர்.

எட்டாம் நாள் திருவிழா

சிவநேசருடன் திருஞான சம்பந்தர் மேற்கு மாடவீதிக் குளக்கரைக்கு எதிரில் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளுவார். பகலில் சிவநேசருக்கும் சம்பந்தருக்கும் மகா அபிடேகம் நடைபெறும். பிற்பகல் இரண்டு மணிக்குச் சிவநேசர் சம்பந்தருடன் கோயிலுக்கு எழுந்தருளி இறைவனிடம் உத்தரவு பெற்று மறுபடியும் குளக்கரைக்கு அங்கம் பூம்பாவையின் எலும்பைக் குடத்துடன் எழுந்தருளச் செய்து, யாவரும் கண்டு களிக்க. திருஞான சம்பந்தரின் 'மட்டிட்ட' என்னும் பதிகத்தையும் பாடி எலும்பைப் பெண் உருவாக்கி மண்டகப்படி நடத்துவர். பிறகு மாடவீதி வலம் வந்து பதினாறுகால் மண்டபம் சேருவர். அப்போது கபாலீசுவரர் பஞ்சமூர்த்திகளுடனும் அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் காட்சி கொடுத்தருளும் ஐதீகம் நடைபெறும். பின்பு வீதிவலம் வந்து பதினாறுகால் மண்டபத்தில் தீபாராதனையும் அறுபத்து மூன்று நாயன்மார் வலம் வரும் காட்சியும் நடைபெறும். இரவில் சந்திர சேகர சுவாமி குதிரை வாகனத்தின் மீது பரிவேட்டை உற்சவம், பரிவேட்டை மண்டபத்தில் மண்டகப்படி முடிந்து இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் கபாலீசுவரர் பஞ்சமூர்த்திகளுடன் திருவீதி உற்சவம் நடைபெறும்.

ஒன்பதாம் நாள் திருவிழா

காலையில் பஞ்சமூர்த்திகளின் தங்கத் தொட்டில் உற்சவம் நடைபெறும். மாலை ஆறுமணிக்குப் பிச்சாண்டி நாதர் முனி பத்தினிகள் சூழ்ந்த சௌடால் விமானத்தில் புறப்படுவார். மேற்கு மாடவீதியில் மோகினியுடன் சந்திக்கும் காட்சி நடைபெறும். இரவில் பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலா நடைபெறும்.

பத்தாம் நாள் திருவிழா

காலை ஐந்து மணிக்கு நடராஜப் பெருமானுக்குச் சாந்து சேர்வை, வெள்ளை சாத்தல், சப்தபத உற்சவம் ஆகியவை நடைபெறும். பிறகு தீர்த்தவாரி நடக்கும்; பின் திருவீதி உற்சவம் நடைபெறும். கபாலீசுவரர் பஞ்ச மூர்த்திகளுக்கு

குளக்கரையில் தீர்த்தவாரி நடக்கும். பிறகு திருவீதி உற்சவமும் நடைபெறும். மாலையில் கபாலீசுவரர் கோயிலுக்குள் புன்னை வன நாதர் சந்நிதியில் கற்பகாம்பாள் மயிலுருவாக இருந்த சாபம் நீங்க, இறைவனைப் பூசித்து, கபாலீசுவரர் காட்சி பெற்றுத் தன் சுய உருவடைந்து திருக்கல்யாண மண்டபமடைந்து, திருக் கல்யாணம் நடைபெறும். பின்னர்க் கபாலீசுவரரும், கற்பகாம் பிகையும் துவஜாரோகண மண்டபத்திற்கு எழுந்தருளி, மலர் ஊஞ்சலில் ஆடி, இராவணேஸ்வர வாகனத்தில் எழுந்தருளி இன்னிசைக்குழு இல்லாமல் மெள்ள ஊர்வலமாகப் புல்லாங்குழல் இசையுடன் வீதிவலம் வருவர். அப்போது அஸ்திர தேவருடன் நவ சந்தி திக்பந்தன விசர்ஜனம் செய்து கொண்டு கோயிலை அடைந்து துவஜாரோகண மண்டபம் எழுந்தருளி துவஜா அவரோகணம் (கொடி இறக்குதல்) நடைபெற்று இறைவன் கற்பகாம்பாளோடு கல்யாண மண்டபம் சேர்வார். சண்டேசு வரர் திருவீதி உற்சவமும் நடைபெறும்.

பதினோராம் நாள் திருவிழா

காலையில் கல்யாண மண்டபத்தில் உமாமகேசுவரக் காட்சி, இறைவனின் திருவனந்தல் காட்சியாகும். அன்று காலையில் இறைவன் இருக்கும் அறையைத் திறக்கும் போது யானை, இடபம், நடன மங்கையர், சாமரம், கண்ணாடி, தீபம் முதலிய மங்கலப் பொருள்களுடன் கதவைத் திறந்து பூசை செய்வர். மாலையில் பந்தம் பறி உற்சவம் நடைபெறும். பஞ்ச மூர்த்திகளுடன் உற்சவம் கொண்டருளித் தேரடியில் இறைவன் வருவான். அப்போது அம்பாள் ஊடல் கொண்டு கோயிலுக்கு எழுந்தருளிக் கதவை மூடித் தாளிட்டுக் கொள்ளும் ஐதீகம் நடைபெறும். இறைவன், சுந்தரரை வரவழைத்து மும்முறை ஊடல் நடத்துவார். இறைவனுக்கும் இறைவிககும் இடையில் பட்டோலை வாசித்துச் சமாதானம் பெற்று அம்பாள் இறைவனை வலம் வந்து கோயிலுக்குள் எழுந்தருளும் காட்சி நிகழும். இவ்வாறாகக் கபாலீசுவரர் கோயிலில் பங்குனித் திங்களிலே பதினோரு நாள் பிரம்மோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும்.

பவித்ரோற்சவம்

இத் திருவிழா எல்லாக் கோயில்களிலும் நடைபெறும். ஆண்டுதோறும் பூசை முதலிய வழிபாடுகளில் நிகழும் குறை களைத் தீர்க்கும் முறையில் செய்யப்படும் சடங்குகள் நிறைந்த

விழாவே பவித்ரோற்சவம் எனப்படும். இதனைப் புண்ணியா வசனம் என்றும் கூறுவர். திருஞான சம்பந்தர் தன்னுடைய 'மட்டிட்ட புன்னையங் கானல்' பதிகத்தில் பெருஞ் சாந்தி விழா என்று குறிப்பிடுவது இதனைத்தான் குறிக்கிறது என்பர் மு. அருணாசலம்.[112] கபாலீசுவரர் கோயில் பவித்ரோற்சவம் ஆடித்திங்களில் நடைபெறுறது.[113]

கும்பாபிடேகப் பெருவிழா

இவ் விழா ஏற்கனவே கட்டிய கோயில்களுக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்த வேண்டும் என்னும் விதி இருக்கிறது. ஆனால் நடைமுறையில் நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகள் கழித்துக் கோயிலில் பழுது பார்க்கும் பணிகள் முடிவடைந்த பிறகு கும்பாபிடேக விழா நடைபெறுகிறது.

கும்பாபிடேகம்-விளக்கம்

கும்பவஸ்த்ரம் தோல்; மேல் பூசிய செம்மண் இரத்தம், கும்பத்து மண்—மாமிசம்; உதகம் (தண்ணீர்)—மேதை; கூர்ச்சம் —எலும்பு; மேல் சுற்றிய நூல் நரம்பு; கும்பத்திலிடும் பொன், பூ முதலியன வீரியம். நியதிக்கப்பட்ட மந்திரம்—உயிர்: கீழிட்ட நெல் முதலிய தானியம்—ஆசனம்; கும்பத்தை முதலில் கோயிலிலுள்ள பிம்பத்தின் அருகில் வைத்துத் தர்ப்பை' மாவிலை முதலியன கொண்டு மந்திரங்களைச் சொல்லி பிம்பத்தில் விளங்கும் மூர்த்தியைக்கும்பத்தில் ஆவாகனம் செய்வார்கள்' ஆவாகனமாவது மந்திரங்களைச் சொல்லிக் கும்பத்தில் அபிமுகமாகச் செய்தலாகும். பிறகு அக் கும்பத்தை மங்கல முழக்குடன் யாக சாலைக்கு எழுந்தருளச் செய்வார்கள்.

யாக சாலையானது முப்பத்தாறு தத்துவ சொரூபமானதும் சிவபெருமானது அட்ட மூர்த்த வடிவானதும் ஆகும். யாக சாலையில் ஒன்பது குண்டங்களில் அக்கினி வளர்க்கப் பெறும். மந்திரம், கிரியை, பாவனை மூன்றினாலும் வளர்க்கப்படும் அக்கினியிலிருந்து எழும் புகையும் வேத, ஒலி, சிவகாம ஒலி தமிழ் மறை ஒலி இவற்றுடன் உத்தம மெய்ன்பர்களின் நல்லெண்ணங்களும், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய அருட் சக்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும். அப்போது அக் கும்பம் தெய்வீக சக்தி, கலைகள் நிரப்பியதாகும்

இவ்வாறு யாக சாலையில் நடைபெற வேண்டிய கிரியைகள் முற்றுப் பெற்றவுடன் மீண்டும் தெய்வீக சக்தி கோயிலுள்ள பிம்பத்தினிடமாக அமைய வேண்டி, அச்சக்தியைச் செலுத்தும் சக்தி வாய்ந்த தருப்பைக் கயிற்றின் வழி அச் சக்தியைப் பிம்பத்தில் சேர்ப்பித்துக் கும்பத்திலுள்ள நீரினால் சிகரங்களிலும் பிம்பத்திலும் அபிடேகம் செய்வார்கள். இதுவே கும்பாபிடேகமாகும்.[114] கபாலீசுவரர் கோயிலில் கிழக்கு இராஜ கோபுரம் ஏறத்தாழ 1902 ஆம் ஆண்டில் கட்டப் பெற்றதாகக் கூறுகிறார்கள். அப்போது கும்பாபிடேகம் நடைபெற்றிருக்கிறது.

1946இல் உள்கோபுரங்கள், மற்றும் இராஜகோபுரம், விமானங்கள் எல்லாம் மகா கும்பாபிடேகம் நடத்தும் பொருட்டுச் சீர்திருத்தப் பெற்றன. இராஜகோபுரத்தின் மேல் நவ கலசங்களும், கொடி மரமும் பொன்னால் செய்யப்பட்டு அமைக்கப்பட்டன. இவையாவும் சுமார் ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் நிறைவேறின. மகா கும்பாபிடேகம் ஆனித் திங்கள் 10ஆம் நாள் 23-6-48இல் தொடங்கிப் பதினான்காம் நாள் 27-6-48இல் முடிவடைந்தது.[115]

அன்மைக் காலத்தில் கபாலீசுவரர் கோயில் கும்பாபிடேகம் செய்ய வேண்டும் என்று எண்ணி 27-8-1980இல் கோயிலில் திருப்பணி செய்யத் தொடங்கினர். கோயில் கோபுரங்கள், விமானங்கள், மண்டபங்கள், நீராழி மண்டபம் ஆகியவைகளில் திருப்பணி வேலைகள் செய்து வண்ணப் பூச்சுகளால் அலங்கரித்தனர். கபாலீசுவரர், கற்பகாம்பாள் மூலத்தான கருவறை முதல் அர்த்தமண்டபம் வரையிலும் சலவைக்கல் பதித்து மேற்படி மூலத்தான வாயிற் கதவுகளுக்கு வெள்ளி அணிவித்துத் திருப்பணி நடந்தேறியது. 8-7-1982 வியாழக்கிழமை காலையில் மகா கும்பாபிடேகம் நடைபெற்றது.[116]

இவ்வாறு கபாலீசுவரர் கோயிலில் நாள்வழிபாடு முதல் கும்பாபிடேகம் வரை எல்லா வகையான திருவிழாக்களும் கொண்டாடப்படுகின்றன. ஆண்டில் எல்லாக் காலத்திலும் கபாலீசுவரர் கோயில் திருவிழாக்கோலம் பூண்டு விளங்குகிறது

குறிப்புகள்

1. M. A. Dorai Rangaswamy, **Religion and Philosophy of Tevaram,** Book I, p. 372.
2. ,, pp. 372-373.
3. ஆ. சிங்காரவேலு முதலியார், **அபிதான சிந்தாமணி,** ப. 335.
4. **தேவாரம்,** இரண்டாம் திருமுறை, பதிகம் 183.
திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர், 1982.
5. M A. Dorai Rangaswamy, **The Religion and Philosophy of Tevaram,** Book I, p. 392.
6. 'The Kapaliswara Temple At Mylapore', **திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர்,** 1982.
7. K. V. Raman, **The Early History of the Madras Region,** p. 196.
8. David N. Lorenzen, **The Kapalikas and Kalamukhas· Two Lost Saivite** Sects, Thmson Press, New Delhi, 1972, p. 27.
9. Ramendra Nath Nandi, **Religious Institutions and Cults in the** Deccan (A D 600-A.D,1000) 'Motilal Banarsidass, Delhi, 1973, p. 86.
10. மு. கோ. ராமன் (பதிப்பு), **திருமயிலை உலா,** கண்ணி 186.
11. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 23
12. ,, p. 4.
13. இற்றைக்கு நூறாண்டுகளுக்கு முன்பு என்று கணக்கிடுக.
14. பம்மல் சம்பந்த முதலியார், திருமயிலைக் கோயிலைப் பற்றிய சரித்திர வரலாறு, **திருமயிலைத் தல புராணம்,** சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, சென்னை, 1948, பக். 20-21.
15. ப. சம்பந்த முதலியார், **சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும்,** நான்காம் பாகம், இரத்தின விலாஸ் அச்சுக்கூடம், சென்னை, 1948, ப. 61.
16. இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு என்று கணக்கிடுக.
17. சி. எம். இராமச்சந்திர செட்டியார், 'திருமயிலையினைப் பற்றிய சரிதக் குறிப்புக்கள் 1', **பூம்பாவை,** கோவைத் தமிழ்ச் சங்கம், கோயமுத்தூர், 1950, பக். 65-66
18. இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு என்று கணக்கிடுக.

19. ம. பாலசுப்பிரமணிய முதலியார், 'திருமயிலையினைப் பற்றிய சரிதக் குறிப்புகள்', **பூம்பாவை**, ப. 68.

20. K. V. Raman, **The Early History of the Madras Region,** pp. 32-36.

21. Census of India 1961, Volume IX, Part XI-D, **Temples of Madras State, 1. Chingleput District and Madras City**, Madras, 1965, p. 204.

22. N. S. Ramaswami, 'Mylapore Temple,' **Tamil Civilization, Vol. I, No. 3,** Quarterly Research Journal of the Tamil University, Thanjavur, September 1983, pp. 16-20.

23. Census of India 1961, **Temples of Madras State, 1. Chingleput District and Madras City,** p. 204.

24. இற்றைக்கு எழுபதாண்டுகளுக்கு முன்பு என்று கணக்கிடுக.

25. ,, ,,

26. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, **சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**, பக். 91-96.

27. S. Kalyanasundaram A Short History of Mylapore, p. 4.

28. மு. கோ. ராமன் (பதிப்பு), **திருமயிலை உலா**, கண்ணிகள் 116-120.

29. இற்றைக்கு நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்பு என்று, கணக்கிடுக.

30. மு. கோ, ராமன் (பதிப்பு), **திருமயிலை உலா** கண்ணி 118.

31. மயிலை சீனி, வேங்கடசாமி, 'மயிலாப்பூர் வரலாறு', **மயிலை நேமிநாதர் பதிகம்**, நல்லறிவு மன்றம், ஆரணி, 1985, ப. 8.

32. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 8.

33. கே. ஆறுமுக நாவலர், **இந்து மத இணைப்பு விளக்கம்**, ப. 35.

34. ப. அருணாசலம், **சைவ சமயம்** (ஓர் அறிமுகம்), ப. 62-63.

35. Census of India 1961 **Temples of Madras State, 1 Chingleput District and Madras City,** 1965, p. 205.

36. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 25.

37. **திருமயிலைத் தல புராணம்**, கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, சென்னை, 1948, ப. 40.

38. **திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர், 1982,** கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு.

39. கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட செய்திகள்.
40. ஸ்ரீ அமிர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்**, குமரவேள் பூசித்த சருக்கம், பா-ள். 86-87.
41. **மயிலையே கயிலை**, கோயில் விளக்கக் கையேடு, திருமயிலைக் கபாலீச்சரம், சென்னை.
42. பம்மல் சம்பந்த முதலியார், 'திருமயிலைக் கோயிலைப் பற்றிய சரித்திர வரலாறு', **திருமயிலைத் தலபுராணம்** கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, ப. 20.
43. உ வே. சாமிநாதையர் (பதிப்பு), 'திருமயிலைச் சித்திரச் சத்திர புகழ்ச்சி மாலை', **ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு**, சென்னை, 1910, பா. 4.
44. மு. கோ: ராமன் (பதிப்பு), **திருமயிலை உலா**, கண்ணிகள் 37, 48, 51, 54.
45. ,, ,, கண்ணி 94.
46. ,, ,, கண்ணி 300.
47. ,, ,, கண்ணி 564.
48. மொ. அ துரை அரங்கசாமி, 'கபாலீச்சுரத்தின் வளர்ச்சி பற்றிய கருத்துக்கள்', **சமயக் கலைமலர்**, திருமயிலைக் கபாலீச்சுரம், சென்னை, 1965, ப. 81.
49. திருஞானசம்பந்தர், **தேவாரம்**, 2-183-பா. 9.
50. **மயிலையே கயிலை**, கோயில் விளக்கக் கையேடு, திருமயிலை கபாலீச்சரம், சென்னை
51. சி. குமாரஸ்வாமி, 'திருமயிலைச் சிங்காரவேலர்', **திருமயிலை கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர்** 1982.
52. Census of India 1961, **Temples of Madras State, 1. Chingleput and Madras City,** p. 204.
53. மு கோ. ராமன் (பதிப்பு), **திருமயிலை உலா**, கண்ணிகள் 116-120.
54. கபாலீசுவரர் கோயில் குளத்தின் கிழக்குக் கரைக கைப் பிடிச் சுவரின் வடக்கு முனையில் உள்ள கல்வெட்டு.
55. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 25
56. H D. Love, **Vestiges of Old Madras**, Vol. III, p. 531.
57. **திருமயிலை உலா**, கண்ணி 34.
58. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்**, தீர்த்தச் சருக்கம், பா. 25.

59. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணம்**, தீர்த்தச் சருக்கம்.
60. ,, பா. 25.
61. மா. இராசமாணிக்கனார், 'திருமயிலைக் கபாலீச்சரம்', **சமயக் கலை மலர்**, ப. 141.
62. S. Kalyanasundaram, **A Short History of Mylapore,** p. 25.
63 பம்மல் சம்பந்த முதலியார், ''திருமயிலைக் கோயிலைப் பற்றிய சரித்திர வரலாறு', **திருமயிலைத் தல புராணம்**, கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, பக். 21-22.
64. நஜன் (எஸ். நடராஜன்), **மயிலை கற்பகம்**, பிரதிபா பிரசுரம், சென்னை-4, 1982, பக். 15-16.
65. பம்மல் சம்பந்த முதலியார் குமாரர் திரு. வரதராஜன் அவர்களுடன் நேரில் கலந்துரையாடியபோது பெற்ற கருத்து.
66. Census of India 1961, **Temples of Madras State, 1, Chingleput and Madras City**, pp. 204-205.
67. **திருமயிலை உலா**, கண்ணி 37.
68. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், **திருமயிலைத் தல புராணர்**, திருவிழாச் சருக்கம்.
69. **திருத்தொண்டர் புராணம்**, திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம், பூம்பாவை வரலாறு.
70. இரா. நாகசாமி (பதிப்பு), **சென்னை மாநகர்க் கல்வெட்டுக்கள்**, தொடர் எண் 1967/120.
71. **திருமயிலை உலா**, கண்ணி 94.
72. சுந்தரர், **தேவாரம்**, 7ஆம் திருமுறை, திருத்தொண்டத் தொகை. பா. 400.
73. மா. து. குப்புசாமி முதலியார், **கயிலையே மயிலை, மயிலையே கயிலை**, கும்பாபிஷேக நினைவு வெளியீடு, 1982, ப. 14.
74. திருநாவுக்கரசர், **தேவாரம்**, 6-216-1.
75. **திருமயிலை உலா**, கண்ணிகள் 117-118; 214-215.
76. H. D. Love, **Vestiges of Old Madras,** Vol I, pp. 321-22.
77. Census of India 1961, **Temples of Madras State, Chingleput And Madras City**, p, 205.
78. **தமிழ்ப் பேரகராதி**, தொகுதி 6. சென்னைப் பல்கலைக் கழகம், 1936, ப. 3720.
79. M. Arunachalam, **Festivals of Tamil Nadu**, Gandhi Vidyalayam, Thanjavur, 1980, p. 9.

80. R. N. Nandhi, **Religious Institutions and Cults in the Deccan** (600 A.D. -1000), p 32.
81. சம்பந்தர், **தேவாரம்**, 2-183-1.
82. ,, 2-183-2.
83. ,, 2-183-3.
84. ,, 2-183-4.
85. ,, 2-183-5.
86. ,, 2-183-6.
87. ,, 2-183-7.
88. ,, 2-183-8.
89. ,, 2-183-9.
90. ,, 2-183-10.
91. சி. கே. சுப்பிரமணிய முதலியார் (உரை.). **பூம்பாவை**, கோவைத் தமிழ்ச் சங்கம், 1950, ப. 69.
92. ,, ப. 69.
93. ,, ப. 69.
94. M. Arunachalam, **Festivals of Tamil Nadu**, pp. 293-294.
95. **திருத்தொண்டர் புராணம்**, அறுபத்து மூவர் வரலாற்றுச் சுருக்கம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வெளியீடு, 1950.
96. **திருமயிலைத் தல புராணம்**, கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, பக். 24-25.
97. **அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், இரக்தாக்ஷி ஆண்டு சிறப்பு நாட்கள் நிகழ்ச்சி நிரல்**, மயிலாப்பூர், 1984.
98. ,,
99. **ஆடிப்பூரம், ஆடி சுவாதி, ஆடி கிருத்திகை**, ஸ்ரீ கபாலீஸ்வரர் தேவஸ்தானம், மயிலாப்பூர், 1971.
100. **நூறாயிரம் (லக்ஷம்) திருவிளக்குப் பெருவிழா மலர்**, ஸ்ரீ கபாலீசுவரர் திருக்கோயில் வெளியீடு, திருமயிலை, சென்னை-4, 1963.
101. **சங்காபிடேகம்** (ஆனிச் சதயம்), ஸ்ரீ கபாலீஸ்வரர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4, 1971.
102. **திருமயிலைத் தல புராணம்**, ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, ப. 23.
103. M. Arunachalam, **Festivals of Tamil Nadu**, p. 284
104. கே. ஆறுமுக நாவலர், **இந்துமத இணைப்பு விளக்கம்**, பக். 170-171.
105. ,, ப, 155.

106. அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், இரக்தாக்ஷி ஆண்டு சிறப்பு நாட்கள், நிகழ்ச்சி நிரல்.
107. M. Arunachalam, **Festivals of Tamil Nadu**, pp. 227-228.
108. சம்பந்தர், **தேவாரம்** 2-183-5.
109. ,, 2-183-6.
110. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார், **திருவிழாவின் தத்துவ விளக்கம்**, திருமயிலை ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, சென்னை, 1958, ப. 7.
111. கே. ஆறுமுக நாவலர், **இந்துமத இணைப்பு விளக்கம்**, பக். 146-150.
112. M. Arunachalam, **Festivals of Tamil Nadu**, p 286.
113. அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், இரக்தாக்ஷி ஆண்டு சிறப்பு நாட்கள், நிகழ்ச்சி நிரல்,
114. 'சிவாலயத் தத்துவமும் மகா கும்பாபிஷேகமும்'. **திருமயிலை கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர், 1982.**
115. **திருமயிலைத் தல புராணம்**, ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, ப. 40.
116. மா. து. குப்புசாமி முதலியார், 'கயிலையே மயிலை, மயிலையே கயிலை', **திருமயிலை கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர் 1982**.

இயல் 5

திருமயிலையின் தனிச்சிறப்புகள்

திருமயிலையின் தனிச்சிறப்புகள்

நகரங்களில் சிறந்தது என்றும், காமாட்சியம்மன் கோயில் உள்ள இடம் என்றும், வடமொழிக் கல்லூரி இருந்த இடம் என்றும், அண்ணா பிறந்த இடம் என்றும் காஞ்சி மாநகரம் புகழப்படுதலைப்போலத் திருமயிலையும் சில தனிச்சிறப்புகளைப் பெற்று விளங்குகிறது.

திருவள்ளுவர் திருவடிகள் போற்றப்படும் இடம், பேயாழ்வார் பிறந்த இடம், செயின்ட் தாமஸின் கல்லறை உள்ள இடம், அங்கம் பூம்பாவையான இடம், வாயிலார் நாயனார் முத்தி அடைந்த இடம், சமயங்களின் வளர்ப்புப் பண்ணையாக உள்ள இடம், இராமகிருட்டின மடம் உள்ள இடம், சித்திரச் சத்திரம் விளங்கும் இடம், அறுபத்து மூவர் திருவிழாவும் தண்ணீர்ப்பந்தல் தருமமும் நடைபெறும் இடம், அழகிய கடற்கரை உள்ள இடம், சென்னைக் கலங்கரை விளக்கம் ஒளிவிடும் இடம், வடமொழிக் கல்லூரி விளங்குமிடம் என்னும் தனிச் சிறப்புகளைத் திருமயிலை பெற்று இலங்குவது இவ் வியலில் விளக்கப்படுகின்றது.

திருவள்ளுவரின் திருவடிகள்

திருமயிலையிலுள்ள திருவள்ளுவர் கோயில் பற்றி மூன்றாம் இயலில் கூறப்பட்டுள்ளது. திருவள்ளுவர் கோயில் திருமயிலைக்குச் சிறப்பு சேர்க்கின்றது. இப்போது அங்குத் திருவள்ளுவருடைய உருவச்சிலை வழிபடப்படுகின்றது. ஆனால், முன்னர் அவருடைய திருவடிகளே வணங்கப்பட்டு வந்தது என்பதை அங்குள்ள திருவடிகள் பதிக்கப் பெற்ற பீடம் உணர்த்துகிறது.

இக் கோயில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நயினார் கோயில் என்றும், நாயனார் கோயில் என்றும் வழங்கி வந்தது என்று கூறுகிறார்கள். நாயனார் கோயில் என்பது சமணர் கோயிலை உணர்த்தும் என்பது அடியார்க்கு நல்லார் உரை

யால் புலப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்தின் ஆரம்பத்தில் கூறப்பெறும் அருகன் வாழ்த்தில் அறிவன் என்னும் சொல் காணப்பெறுகிறது. அறிவன் கோயில் என்பதற்கு நாயனார் கோயில் என அடியார்க்கு நல்லார் உரை எழுதியுள்ளார். சமண முனிவர்களை நாயனார் என்று குறிப்பிடும் வழக்கம் கல்வெட்டுகளால் புலனாகின்றது.[1] 'உரிஞ்சாய வாழ்க்கை அமண்' என்று சம்பந்தர் குறிப்பிடுவதால் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருமயிலையில் சமணர்கள் இருந்தது புலப்படுகிறது.[2] சமணர் ஆதிக்கம் பெற்றிருந்த இடங்களிலே தான் சம்பந்தர் அற்புதச் செயல்கள் நிகழ்த்தியிருக்கிறார். திருநூற்றந்தாதி என்னும் நூலினாலும், நேமிநாதம் என்னும் நூலினாலும் மயிலையில் நேமிநாதர் கோயில் இருந்தது என்பதையும் சமணர் மயிலையில் இருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

"நேமிநாதரை வழிபட்டதைப் போன்று திருக்குறளாசிரியரையும் வழிபட மயிலையில் கோயில் ஒன்று அமைத்தார்கள். அக் கோயிலில் திருக்குறளாசிரியரின் திருவடிச் சின்னங்களைப் பொறித்து வைத்து வழிபாடியற்றி வந்தனர்" என்று ஜீவபந்து ஸ்ரீபால் கூறுகிறார்.[3]

திருவடிகள்

கி.பி. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மயிலையிலிருந்த சமணர்கள் நேமிநாதர் கோயிலைக் கைவிட்டு அச் சிலையைச் சித்தாமூருக்குக் கொண்டு சென்ற காலத்திலேயே, திருவள்ளுவர் கோயிலைச் சமணர்கள் கைவிட்டிருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. அக் கோயிலில் முதலில் திருவள்ளுவரின் திருவடிகளே வழிபாட்டில் இருந்து வந்தது என்று கூறுகின்றனர். இந்துக்கள் வசம் கோயில் வந்த பிறகு திருவள்ளுவரின் திருவடிகளுடன் திருவள்ளுவர் சிலையையும் வைத்து வழிபடத் தொடங்கினர். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் திருவடிகள் அடங்கிய பீடம் கருவறையிலிருந்து வெளியே மண்டபத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்டது என்று கூறுகிறார்கள். சில ஆண்டுகள் கழித்து அச் சின்னத்தை அக் கோயிலின் மதிற்சுவரில் வைத்து மூடிவிட்டார்கள். அதனை அறிந்த பொதுமக்கள் எதிர்க்கவே புதைத்த இடத்திலேயே திறந்து வைத்துவிட்டார்கள் என்று ஜீவபந்து ஸ்ரீபால் கூறுகிறார்.[4] ஜீவபந்து 1945ஆம் ஆண்டில் திருவள்ளுவர் திருவடிகளைப் படமாக வரைந்து 'ப்ளாக்' செய்து ஒரு பிரசுரம் வெளியிட்டுள்ளார்கள்.[5]

இப்போது திருவள்ளுவர் திருவடிகள் இருக்குமிடம்

திருவள்ளுவர் திருவடிகள் அடங்கிய பீடம், திருவள்ளுவர் கோயிலின் கிழக்குப் பக்க மதில் சுவரில் கோயிலுககு வலப் பக்கததுச் சுவரில் பொருததப்பட்டிருந்தது. கோயிலல் திருப் பணி நடந்தபோது அநதப பீடம் அகறறப்பட்டு இபபோது கோயிலில் வழிபாடு இயற்றும் வீர சைவருடைய வீட்டின வெளிபபுறத்தில் திறநத வெளியில் அம்மிககலலுககுப் பக்கத்தில் கல்லோடு கலலாக இருக்கிறது.

இத் திருவடிகள் வட்ட வடிவமான பீடத்தில் செதுக்கப்பட் டுள்ளது. திருவடிகளின் நீளம் ஏறத்தாழ ஒனபது அங்குல அளவில் உளளது. செருப்பணிந்த கால்கள் போலக் கட்டை விரலுக்குப் பக்கததில் குமிழகமொடு உள்ளது.

இத் திருவடிகளின் நிழற்படம் அந்த வீரசைவரின் வீட்டில் உள்ளது. அதை அவர்கள் வழிபடுகினறனர். அந்தபபடம் மானிடவியல அறிஞர் பிலோ இருதயநாத் அவர்களால் எடுக்கப் பட்டது என்று திரு. ஆறுமுகம கூறுகிறார். இவர்தான் இப் போது திருவளளுவா கோயிலில் பூசைகளைச் செய்து வருகிறார்.

இவ்வாறு உண்மையான திருவடிச் சின்னம் ஒதுக்குப்புறத் திலே கிடக்க, அதன் நிழற்படம் பூசையறையிலே வீறறிருபபது வியப்பைத் தருவதாக உளளது.[6]

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழிதத தொழித்து விடின்

என்று பாடிய வள்ளுவரை வழிபடுவதற்கு அவர் திருவடிகளே பொருததமானவை என்று ஜீவபந்து ஸ்ரீபால் கூறுகிறார்.[7]

கி. பி. பதினாறாம் நூற்றாண்டுக்கு முன்னர், திருவள்ளுவர் திருவடிகளே வணங்கபபட்டது என்பதையும், திருவள்ளுவர் உருவச்சிலை வழிபாடு கி. பி. பதினாறாம் நூற்றாண்டிலேதான் தொடங்கியிருககவேண்டும் என்பதும் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த திருவள்ளுவரின் உருவச்சிலையாலும்,[8] இப்போதுள்ள உருவச் சிலையினாலும் தெள்ளிதின் புலப்படுகின்றது.

பேயாழ்வார் பிறந்த இடம்

வைணவ ஆழ்வார் பன்னிருவரில், முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வார் பிறந்த தலம் என்னும் பெருமையைத் திருமயிலை பெற்றுள்ளது. திருமயிலையிலுள்ள பெருமாள் கோயில் இவர் பெயரோடு சேர்த்து ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் பேயாழ்வார் கோயில் என்றழைக்கப்படுகிறது. பேயாழ்வார் வீற்றிருக்கும் கோலத்தில் தெற்கு முகமாகக் காட்சியளிக்கிறார். பேயாழ்வாருக்கு இக் கோயிலில் ஆண்டிற்கொருமுறை ஐப்பசித் திங்களில் பத்து நாள் உற்சவம் நடைபெறுகிறது. ஐப்பசித் திங்கள் சதய நட்சத்திரத்தில் சாற்றுமுறை நடைபெறுகின்றது.[9]

முற்காலத்தில் மயிலாப்பூரிலிருந்து திருவல்லிக்கேணிக்கு ஓடிக்கொண்டிருந்த ஒரு நீரோடைக்குத்தான் 'கைரவிணி' என்ற பெயர் என்று கூறுகிறார்கள். அந்த ஓடையில் ஓர் அல்லிப்பூவில் பேயாழ்வார் அவதரித்தார். அந்த நீரோடையின் ஒரு பாகமே கிணறாக அமைத்துப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. அதே நீரோடையின் மற்றொரு பாகம் திருவல்லிக்கேணியில் ஒரு தடாகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இரண்டும் கைரவிணி தீர்த்தத்தின் இரண்டு தனிப் பாகங்கள் என்றும், அந்த நீரோடையின் மற்றப் பாகங்கள் நாளடைவில் சாலைகளாகவும் தோட்டங்களாவும், வீடுகளாகவும் மாறின என்றும் கூறுகின்றனர். மேலும், முற்காலத்தில் இந்த ஓடையின் வழியாகப் படகுகளில் கேசவன் சந்நிதிக்கும் பார்த்தசாரதி சந்நிதிக்கும் அர்ச்சகர்கள் போய் வந்து கொண்டிருந்தார்கள் என்று கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.[10]

மயிலையில் கைரவிணி தீர்த்தம் இப்போது அருண்டேல் தெரு என்று அழைக்கப்படும் தெருவில் பெரிய கிணறு வடிவில்உள்ளது. அந்தக் கிணற்றின் உள் மாடத்தில் பேயாழவார் உருவச் சிலை ஒன்றுள்ளது.[11] இந்தத் தெரு முற்காலத்தில் பக்காழி தெரு என வழங்கி வந்தது. பேயாழ்வார் என்பதன் திரிபுதான் பக்காழி என்று கூறுகின்றனர்.[12] இவற்றால் பேயாழ்வார் பிறந்த இடம் என்னும் பெருமையைத் திருமயிலை பெற்றிருப்பது புலப்படும்.

செயின்ட் தாமஸ் கல்லறை உள்ள இடம்

கி. பி. முதல் நூற்றாண்டில் மயிலையில் செயின்ட் தாமஸ் இருந்தார் என்று கிறித்தவ மரபுவழிச் செய்தி கூறுகிறது, மலபார் முதலிய இடங்களில் பிரச்சாரம் செய்து வந்து திரு

மயிலையில் செயின்ட் தாமஸ் இறுதியாகத தங்கினார் என்பர். மயிலையில் ஆலயம் அமைத்து வழிபாடு இயற்றி வந்தார் என்றும் கூறுவர். உள்ளூரிலிருந்த இந்துக்கள் அவருக்கு எதிராக எழுந்து அவரைத் தாக்கினர் என்றும் அவர் செயின்ட் தாமஸ் மலைக்கு ஓடினார் என்றும், அங்கு வாளால் வெட்டிக் கொல்லப்பட்டார் என்றும் கூறுகின்றனர்.

பல ஆராய்ச்சியாளர்கள் இந்த மரபுவழிச் செய்தியை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். இந்தக் கதை, உள்ளூரிலிருந்த கிறித்தவர்களால் உருவாக்கப்பட்டது என்று கூறுகின்றனர்.[13] இதைப் போர்த்துக்கீசியர் போலிச் செயல் (Portuguese Fraud) என்று சில ஆராய்ச்சியாளர் கூறியிருக்கின்றனர்.[14]

இந்த வரலாறு உண்மை என்று கூறுவோர், போர்த்துக்கீசிய வணிகர்களுக்கு முற்பட்ட மேல்நாட்டார் மயிலையைப் பற்றிக் குறிப்பிடும் செய்திகளை ஆதாரமாகக் காட்டுகின்றனர். இந்தியாவில் ஏசுநாதரின் திருத்தூதுவர் ஒருவரின் கல்லறை மீது கட்டப்பெற்ற ஒரே ஆலயம் சாந்தோம் ஆலயம் என்பது மயிலைக்குரிய பெருமைகளில் ஒன்றாகும்.[15]

அங்கம் பூம்பாவையான இடம்

திருஞான சம்பந்தர் பாடிய 'மட்டிட்ட புன்னையங்கானல், என்று தொடங்கும் பதிகம், பூம்பாவையின் வரலாற்றுக்கு அடிப்படையாக உள்ளது. இப் பதிகத்தில் உள்ள பதினோரு பாடல்களில், முதல் பத்துப் பாடல்களில் மயிலை கபாலீசுவரத்தில் நடைபெறும் திருவிழாக்களைக் கூறி இவற்றையெல்லாம் 'காணாதே போதியோ பூம்பாவாய்' என்று விளிக்கின்ற முறையிலே பாடல்கள் முடிகின்றன.[16] பூம்பாவையின் தந்தை சிவநேசர் என்றோ, சிவநேசரின் மகள் பூம்பாவை, பாம்பு கடித்து மாண்டாள் என்றோ, அவளுடைய எலும்புச் சாம்பல் மீண்டும் பெண்ணுருவாகியது என்றோ இப் பாடல்களில் குறிப்பிடப் படவில்லை. சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் இரண்டாங் காண்டத்தில், வம்பறாவரி வண்டுச் சருக்கத்தில் திருஞான சம்பந்த சுவாமிகள் புராணத்தில், பூம்பாவை வரலாறு எண்பத்து எட்டுப் பாடல்களில் கூறப்படுகின்றது.[17]

அங்கம் பூம்பாவையாக்கிய செயல் கற்பனையென்று சி. கே. சுப்பிரமணிய முதலியார் கூறுகிறார்.[18] இவ்வுலகத்துள் நின்று

இறந்து சென்ற உயிரை நன்னெறிப்படுத்துதற்கு அது வாழ்ந்த உடலில் எலும்பினை வைத்துச் சடங்கு செய்ய, அப்பயன், அவ்வுயிரைச் சாரும் என்ற உண்மையினை நிறுவிக் காட்ட பிள்ளையார், குடத்துள் நின்ற எலும்பினை நோக்கி, அவ்வெலும்புக் கூட்டினைக் கொண்ட உடலினுள் முன் வாழ்ந்த உயிராகிய பூம்பாவையாரின் பெயர் சொல்லி அழைத்துப் பாடினார். இவ்வுண்மை உலகம் தெளிந்தறிதற்பாலது என்று சேக்கிழாரே குறிப்பிட்டுள்ளார்.[19] மக்கள் காலங் காலமாக நம்பி வரும் மரபு அங்கம் பூம்பாவை உயிர்பெற்றெழுந்த செயலாகும். பூம்பாவை பிறந்து வாழ்ந்து சிவனடி அடைந்ததாலும், திருஞான சம்பந்தரின் திருப்பதிகம் பெற்றதாலும் திருமயிலையின் சிறப்பு நன்கு விளங்கும்.

வாயிலார் நாயனார் மூத்தி அடைந்த இடம்

சைவத் திருத்தொண்டர் அறுபத்து மூவருள் ஒருவர் மயிலையைச் சேர்ந்தவர் என்பதால் மயிலை மேலும் சிறப்புப் பெறுகிறது. 'தொன்மயிலை வாயிலான்' என்று சுந்தரர் போற்றுவதால் இவர் மயிலையில் பிறந்தவர் என்பது நன்கு விளங்கும்.[20] மன்னுசீர் மயிலைத் திருமா நகரில் தொன்மை நீடிய வேளாளர் குலத்தில் தோன்றியவர் வாயிலார் என்னும் தபோதனர்' என்று சேக்கிழார் புகழ்கிறார்.[21] அப்பெயர் அவருடைய இயற்பெயரன்று; குடிப்பெயர் என்பது 'வாயிலா ரென நீடிய மாக்குடி' என்று சேக்கிழார் கூறுவதால் புலப்படுகிறது.[22] இறைவனை ஒருபோதும் மறவாமையாகிய மனக்கோயிலில் இருத்தி' உறவாதிதனை உணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி, இறவாத ஆனந்தம் என்னும் திருமஞ்சனம் ஆட்டி, அறவாணர்க்கு அன்பெனும் அமுது படைத்து அருச்சனை செய்தார். அகமலர்ந்த அருச்சனை நெடுநாள் செய்து சிவபெருமான் திருவடி நீழலடைந்து சீவன் முத்தி பெற்றார் வாயிலார்.

மன ஆலயத்துள் அருச்சனை செய்த வாயிலார் நாயனாருக்குக் கற்பகாம்பாள் சந்நிதி எதிரில் தனிச்சந்நிதி அமைத்து அவரைப் போற்றி வழிபடுகின்றனர். வாயிலார் நாயனார் புராணத்தில் இவர் வரலாற்றைச் சேக்கிழார் பத்துப் பாடல்களில் பாடுகின்றார். இவர் அறுபத்து மூவருள் ஐம்பத்தொன்றாம் நாயன்மார் ஆவார். இவர் இலிங்க வழிபாடு செய்தவர். இவருக்குரிய திருநட்சத்திரம் மார்கழித் திங்கள் இரேவதி நட்சத்திரமாகும்.[23]

வாயிலார் புகழ் தொண்டை நாடு கடந்தும் பரவியது. தாராசுரம் கோயிலிலும் வாயிலாருக்குச் சிலை உள்ளது. இரு மரங்களுக்கிடையில் காலைக் குறுக்காக மடித்து உட்கார்ந்த நிலையில் தாடியுடன் காட்சியளிக்கிறார். மார்பில் புனித நூல், கழுத்தில் உருத்ராட்ச மாலை ஆகியவற்றுடன் இடக்கை தொடையில் இருக்க, வலக்கை சின் முத்திரை காட்டுகிறது.

சமஸ்கிருத, கன்னட மரபுகள் வாயிலாரு நாயனார் அல்லது வாக்மி என்று குறிப்பிடுகின்றன. வாயிலார் என்பதன் மொழி பெயர்ப்பே வாக்மி என்பதாகும்.[24] இவ்வாறு வாயிலார் புகழ் எங்கும் பரவியுள்ளது மயிலைக்குச் சிறப்பேயாகும்.

சமயங்களின் வளர்ப்புப் பண்ணை

மயிலையின் வரலாறு தெரிகின்ற காலத்திலிருந்து பார்த்தால் மயிலை சமயங்களின் வளர்ப்புப் பண்ணையாக இருந்து வந்ததை அறியலாம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரங்களாலும், கபாலீசுவரர், மற்றும் பல சிவன் கோயில்கள் இருக்கின்ற காரணத்தினாலும், குன்றக்குடி ஆதீனம், குமார தேவர் மடம் முதலிய மடங்கள் இருக்கின்ற காரணத்தினாலும் திருமயிலையில் சைவ சமயம் செழித்தோங்கியதை அறிய முடிகின்றது. காபாலிகம் தழைத்ததைக் கபாலீசுவரர் கோயிலால் அறியலாம்.[25] பேயாழ்வார் அவதரித்த தலமாகையினாலும் திருமால் கோயில்கள் இருக்கின்ற காரணத்தினாலும் வைணவம் வளர்ந்ததை அறிய முடிகின்றது.

திருஞான சம்பந்தரின் பூம்பாவைப் பதிகத்தில் சமணரைப் பற்றிய குறிப்புக் காணப்படுவதாலும், திருமயிலையில் நேமி நாதர் கோயில் இருந்த செய்தியாலும், திருநூற்றந்தாதி பாடிய அவிரோதி யாழ்வார் மயிலையில் பிறந்தவர் என்பதாலும், நேமிநாதர் நூலை இயற்றிய குணவீர பண்டிதர் மயிலையைச் சேர்ந்தவர் என்று கூறப்பெறுவதாலும், திருமயிலையில் சமண சமயமும் விளங்கியது அறியப் பெறுகின்றது. தொல்பொருள் ஆய்வுத் துறையினர் மயிலையில் கண்டெடுத்த புத்தர் சிலை களினால் பௌத்த சமயமும் மயிலையில் இருந்தமை அறியப் பெறுகின்றது.[26]

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் வருகைக்குப் பின்னர் மயிலையில் கிறித்தவ சமயம் நன்கு

வளர்ந்ததை அறியலாம். அதற்கு முன்னரே ஏசு கிறிஸ்துவின் சீடர் செயின்ட் தாமஸ் மயிலையில் இருந்து சமயப் பிரச்சாரம் செய்து உயிர்த்தியாகம் செய்தார் என்னும் வரலாற்றாலும் மயிலையில் கிறித்தவ சமயம் நிலவியதை அறியலாம்.[27] கி. பி. பதினாராம் நூற்றாண்டில் நவாப்புக்களின் ஆட்சிக்கு மயிலை உட்பட்டபோது இசுலாமும் இங்கே செழித்தது. குணங்குடி மஸ்தான் சாகிபு இங்கே வாழ்ந்தார் என்று கூறுகிறார்கள்.[28]

இந்த இருபதாம் நூற்றாண்டில இராமகிருட்டின மடத்தின் தமிழ்நாட்டுத் தலைமையகம் மயிலையில் நிறுவப்பட்டதும், இந்து முசுலிம் ஒற்றுமை உணர்ச்சியை வளரச் செய்யும் அகில இந்திய சாயி சமாஜம் திருமயிலையில் நிறுவப்பட்டதும், மயிலை சமய வளர்ச்சிக்கு மிகப் பொருத்தமான இடம் என்பதை உணர்த்தும்.

இராமகிருட்டின மடம்

இராமகிருட்டின மடத்துச்சாலை, மேற்கு மாடவீதியோடு சேருமிடத்தில் கிழக்குப் பக்கத்தில் இராமகிருட்டின மடம் உள்ளது. இந்த மடம் 1897இல் பகவான் ஸ்ரீ இராமகிருட்டினரின் சீடராகிய சுவாமி இராமகிருட்டினானந்தர் என்பவரால் தொடங்கப்பட்டது. முதலில் அவர் திருவல்லிக்கேணியில் இம் மடத்தைத் தொடங்கி வைத்தார். இப்போது விவேகானந்தர் இல்லம் என்று அழைக்கப்படும் இடம் முன்னர்க் கெர்னான் மாளிகை என்று வழங்கப்பட்டது. அங்குப் பத்தாண்டுக் காலம் இம் மடம் செயல்பட்டது. விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியவுடன் 1897இல் இம் மாளிகையில் ஒன்பது நாட்கள் தங்கியிருக்கிறார்.[29]

திருவல்லிக்கேணியிலிருந்து இம் மடம் 1906-1907இல் இராமகிருட்டினானந்தரால் மயிலாப்பூரிலுள்ள மடத்திற்குச் சொந்தமான வீட்டில் மாற்றப்பட்டது. அந்த வீடு இப்போதுள்ள மடத்தின் எல்லைக்குள் மேற்குப் பக்கத்தில் சிறிது தள்ளி இருந்தது. இந்தச் சிறியவீடு இடிக்கப்பட்டு இப்போதுள்ள கட்டிடம் கட்டப்பட்டது. புதிய மடத்திற்கு இராமகிருட்டினானந்தரால் 1916இல் கால்கோள் இடப்பட்டு 1917இல் கட்டிட வேலை முடிந்து மடம் திறக்கப்பட்டது.[30]

இங்கு இராமகிருட்டினரின் திருவுருவப்படம் வழிபடப்படுகின்றது. காலை 5.00 மணிக்கு மங்கள ஆரத்தி தொடங்கி, பூசைகள் நடைபெறுகின்றன. மாலையில் பஜனைகளும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. வழிபடுமிடத்தில் காலஞ்சென்ற துறவியரின் திருவுருவப் படங்கள் உள்ளன. ஏகாதசி அன்று இராமநாம பஜனை நடைபெறுகிறது. அன்று ஆடவரும் மகளிரும் பெருமளவில் கலந்து கொள்கின்றனர்.[31] ஞாயிற்றுக் கிழமைதோறும் மாலைவேளையில் இராமகிருட்டினருடைய போதனைகள், ஆன்மீகத் தத்துவச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. ஆங்கிலத்தில் வேதாந்த கேசரி என்னும் இதழும், தமிழில் இராமகிருஷ்ண விஜயம் என்னும் இதழும், தெலுங்கில் இராமகிருஷ்ண பிரபா என்னும் இதழும் வெளிவருகின்றன.[32]

பகவான் இராமகிருட்டினர், சுவாமி விவேகானந்தர், சாரதா தேவியார் ஆகியோருடைய பிறந்த நாள் விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சிவராத்திரியில் இரவு வழிபாடும், பகலஹரிணி காளிகா பூசை போன்றவையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.[33]

இங்குள்ள துறவியர் பல்வேறு இடங்களுங்குச் சென்று பிரச்சாரம் செய்கின்றனர். அதுமட்டுமல்லாமல் இம் மடத்தில் துறவு நெறியில் செல்ல விரும்புவோரைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மடத்தின் நூல் வெளியீட்டு நிறுவனம் 270 நூல்களுக்குமேல் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகியவற்றில் வெளியிட்டுள்ளது. அவை வேதம், உபநிடதங்கள், இதிகாசம் புராணம், பக்தி தத்துவம், துதி இலக்கியம், இராமகிருட்டினர்-விவேகானந்தர் ஆகியோரின் போதனைகள் ஆகியவற்றைக் கூறும் வகையில் உள்ளன.[34]

மடத்தினுள் பொது நூலகம் ஒன்று உள்ளது. பெரியவர்களும், சிறுவர்களும் படித்துப் பயனடைய பல்வேறு மொழிகளில் பல்வேறு துறைகளை விளக்கும் ஆயிரக்கணக்கான நூல்கள் உள்ளன. இலவசப் படிப்பகம் ஒன்று நூலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அங்கு ஏறத்தாழ 260 இதழ்களுக்குமேல் படிப்பதற்குக் கிடைக்கின்றன. நூலகம் இருக்கும் இடத்திற்குமேல் விவேகானந்தர் பிறந்த நாள் நூற்றாண்டு விழா அரங்கு உள்ளது. அங்குப் பொது நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.[35]

ஏழை மக்களுக்கு உதவுவதற்காக இலவச மருத்துவமனை ஒன்று உள்ளது. இராமகிருட்டின மடம் கல்விப்பணியில் அதிக நாட்டங் கொண்டுள்ளது. பல்வேறு கல்வி நிறுவனங்களை நடத்துகிறது. சென்னை ஜார்ஜ் பட்டணத்தில் இராமகிருட்டின மடம் தேசிய ஆரம்பப்பள்ளி, விவேகானந்தர் நூற்றாண்டு விழா மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆகியவை மடத்தின் நேரடி நிருவாகத்தில் உள்ளன.

இராமகிருட்டின சமயப் பரப்புக் குழுவின் நிருவாகத்தில் இராமகிருட்டினர் மாணவர் இல்லம், இராமகிருட்டினர் நூற்றாண்டு விழா ஆரம்பப்பள்ளி ஆகியவை மயிலாப்பூரிலும், இராமகிருட்டினர் உயர்நிலைப்பள்ளி உத்திரமேரூரிலும் உள்ளன.

மேலும் சென்னைத் தியாகராய நகரில் இராமகிருட்டினர் மேல்நிலைப் பள்ளியும், வடகுக்கிளை உயர்நிலைப்பள்ளியும், தெற்குக்கிளை உயர்நிலைப்பள்ளியும், கிரிப்பித் சாலை, இராஜா பாதர் சாலை, பஸுல்லா சாலை ஆகியவற்றில் ஆரம்பப்பள்ளிகளும், மாணவர் விடுதி ஒன்றும், சாரதா வித்யாலயா மகளிர் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், மகளிர் நடுநிலைப்பள்ளி, அடிப்படைப் பயிற்சிப் பள்ளி, மாதிரிப் பயிற்சிப் பள்ளி, மாணவியர் விடுதி, சாரதா தேவி இல்லம், பணிபுரியும் மகளிர் விடுதி, விவேகானந்தர் கல்லூரி ஆகியவையும் சமயப்பரப்புக் குழு நிருவாகத்தில் உள்ளன.[36]

இயற்கையின் உற்பாதங்களினால் மக்கள் தொல்லைப்படும் போது அவர்களுக்கு உதவிபுரியும் செயலையும் இம் மடம் செய்து வருகிறது. 1933இல் தஞ்சைப் புயல் நிவாரணம், 1941இல் மலபார் புயல் நிவாரணம், 1848இல் மயிலாப்பூர் தீவிபத்து நிவாரணம், 1953இல் இராயலசீமை பஞ்ச நிவாரணம், 1955-57இல் பரமக்குடி வேதாரண்யம் ஆகிய இடங்களில் புயல் நிவாரணம், மறுவாழ்வுப் பணி, 1957 இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் கலவரம் நடந்தபோது நிவாரணப்பணி, 1961இல் திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு வெள்ள நிவாரணப்பணி, 1962இல் லால்குடி தீ விபத்து நிவாரணப்பணி, 1965இல் தனுஷ்கோடி, இராமேசுவரம் நிவாரணப்பணி போன்றவற்றையும், தொடர்ந்து பல்வேறு நிவாரணப் பணிகளையும் இம் மடம் செய்து வருகிறது.[37]

"இந்தச் சங்கம் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் உடம்பே அன்றி வேறில்லை. இந்தச் சங்கத்தில்தான் அவர் எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இந்தச் சங்கத்தில் உள்ள சாதுக்களை ஏதாவது ஒன்றுபடுத்துகிறது என்றால் தெள்ளத் தெளிவாக அது அவருடைய ஆணை ஒன்றுதான். யாரெல்லாம் இந்தச் சங்கத்தை வழிபடுகிறார்களோ அவர்களெல்லாம் அவரை வழிபடுகிறார்கள். யாரெல்லாம் சங்கத்தை அவமதிக்கிறார்களோ அவர்கள் எல்லாம் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரை அவமதிக்கிறார்கள்" என்று சுவாமி விவேகானந்தர் இராமகிருட்டின மடத்தைப் பற்றிக் கூறியுள்ளார்.[38] இத்துணைச் சிறப்புகள் மிகுந்த இராமகிருட்டின மடம், தமிழ்நாட்டில் திருமயிலாப்பூரில் இடங்கொண்டிருப்பது, மயிலையின் சிறப்பை மேலும் உயர்த்துகிறது.

வியாசர்பாடி விநாயக முதலியார் சித்திரச் சத்திரம்

திருமயிலையில் தெற்கு மாடவீதியில் இச் சத்திரம் உள்ளது. ஏறத்தாழ 1852ஆம் ஆண்டில் இச் சத்திரம் தொண்டை மண்டலம் சோழிய வேளாளர் மரபைச் சேர்ந்த திருமயிலையிலிருக்கும் வியாசர்பாடி அர்ச்சுன முதலியார் மகன் வீநாயக முதலியாரால் கட்டப்பட்டதாகும். விநாயக முதலியார் கட்டிடக் கலை வல்லுநராவார். இவர் முதலில் கான்ஸ் துரை என்பவரிடம் பணியாற்றினார். பின்பு நவாப்பிற்குக் கட்டிட வேலைகள் செய்து கொடுத்தார். இவர் உருதுமொழியில பேச வல்லவர்.[39] இவர் இந்தச் சித்திரச் சத்திரத்தைக் கட்டித் தான தருமம் செய்யத் தன்னுடைய சொத்துக்களையும் தரும சாசனம் செய்து வைத்தார். இந்தச் சாசனம் 1851ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.[40] அதுமட்டுமல்லாமல் இத் தானத்தைக் கல்வெட்டிலும் குறித்திருக்கிறார். இக் கல்வெட்டு இப்போதும் இச் சத்திரத்தின் முன்பகுதியில் உள்ளது.[41] 1868இல் எழுதிய உயிலிலும் விநாயக முதலியார் இத் தானத்தைக் குறிப்பிடடுள்ளார்.[42]

தான் சேர்த்த கலைப்பொருள்களை இச் சத்திரத்தில் சேர்த்து வைத்துப் பொதுமக்கள் காண்பதற்கு ஏற்பாடு செய்தார். இது வெறும் தரும சத்திரமாக இல்லாமல் ஒரு சிறிய கலைக்கூடமாக விளங்குகிறது.

அறக்கட்டளையில் வரும் வருவாயைக் கொண்டு சத்திரத்தில் அந்தணர்களைக் கொண்டு திருவிளக்கு, தீபாராதனை, துவாதசி தோறும் பிராமண போஜனம், தண்ணீர் கொடுத்தல், மராமத்து முதலியவைகளை ஒழுங்காகச் செய்ய ஏற்பாடுகள் செய்தார்.

புலவர்களைப் போற்றும் புரவலராய் விநாயக முதலியார் விளங்கினார். இச் சத்திரத்தைப் புலவர் பலர் புகழ்ந்து பாடியுள்ளனர். இவர் தன்னுடைய 66ஆம் வயதில் 1868ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 21ஆம் நாள் இயற்கை எய்தினார்[43].

சத்திரத்திலுள்ள கலைப்பொருள்கள்

இச் சத்திரத்திலுள்ள ஓவியங்கள் குறிப்பிடத்தகுந்தவையாகும். இரண்டடிக்கு எட்டடிப் பலகைகளில் கிழியில் வரையப்பட்ட ஓவியங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றைச் சத்திரத்தின் சுவர்களில் நிலையாக நிறுத்தியிருக்கிறார்கள்.

திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் பிரம்மோற்சவத்தின் போது இந்த ஓவியங்களைத் திறந்து வைக்கிறார்கள். பொது மக்கள் இவற்றைக் காண அனுமதிக்கப்படுகின்றனர். திருவிழா முடிந்தபிறகு நீலத்துணி கொண்டு மூடி வைத்து விடுகின்றனர். இச் சத்திரத்தைப் பொதுமக்கள் 'பொம்மைச் சத்திரம்' என்றழைக்கின்றனர்.[44]

ஓவியங்கள்

சிவபெருமானுக்குரிய பஞ்ச ஸ்தலங்கள், மதுரை மீனாட்சி கல்யாணம், சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமக்கும் காட்சி, தியாகராசர், தில்லை நடராசர், பார்வதி கல்யாணம், யானை ஊர்வலம், மயிலை கபாலீசுவரர் கோயில் ரிஷப வாகனக் காட்சி, சம்பந்தர் அங்கம் பூம்பாவையாக்குதல், அறுபத்து மூவர் உலா, ஆகிய ஓவியங்கள் உள்ளன. யம தண்டனையை விவரிக்கும் காட்சிகள ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இவை இச் சத்திரத்தின் சிறப்புகளாகக் கருதப்படுகிறது. விநாயக முதலியார் உருவப்படம், நவாப் ஓவியம், சோழ ராஜா ஓவியம், கிருஷ்ணன் படம் ஆகியவையும் உள்ளன. இங்குள்ள பொய்க் கதவு (False Door) குறிப்பிடத்தக்கதாகும். கண்ணாடியாலான பறவை, விலங்கு உருவங்கள் உள்ளன. ஐரோப்பியப் பெண் மணியின் வெள்ளை ஓவியம், இரவிவர்மாவின் மகாவிஷ்ணு,

சிவபெருமான் ஓவியங்கள், வள்ளி தெய்வயானை, கிருஷ்ணலீலா அரிச்சந்திர புராணம், தசாவதாரம், பன்னிரு ஆழ்வார்கள் முதலிய ஓவியங்கள் உள்ளன. வட்டப் பலகையில் கயிலாய வைகுண்டக் காட்சிகள் ஓவியங்களாக உள்ளன. ஐரோப்பியப் பெண்மணியின் கண்ணாடி ஓவியம் உள்ளது.[45]

கண்ணாடிகள்

சத்திரத்தின் உள்ளிருக்கும் எல்லாப் பொருள்களையும் ஒரே நேரத்தில் பார்க்கும் வகையில் குழி, குவி கண்ணாடிகள் நான்கு பக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.[46]

மரப்பலகை உருவங்கள்

மரப்பலகையில் முழு உருவிற்கு வெட்டப்பட்ட கலைப் பொருள்கள் உள்ளன. போலீஸ்காரர், அந்தணர், தயிர் விற்பவர், மண்வெட்டியோடு நிற்பவன், பழம் விற்கும் கூடைக்காரி ஆகியவை உள்ளன. மான் தலை உருவங்களும் உள்ளன. கீதோபதேசக் காட்சி சிலைவடிவில் உள்ளது. இராவண சம்காரம், பலராமன், சிசுபாலன், கஜேந்திர மோட்சம் ஆகியவற்றைக் குறிக்கும் ஓவியங்களும் உள்ளன. துணியில் வரையப்பட்ட துவாரபாலகர் ஓவியங்களும் உள்ளன.[47] மயிலைப் பிரம்மோற்சவத்தைக் குறிக்கும் தஞ்சாவூர் கலைப்பாணி படங்கள் உள்ளன.[48]

தவிட்டுப் பொம்மைகள்

தசாவதாரம், கிளி, காகம், மற்றும் பல உருவங்கள் தவிட்டினால் செய்யப்பட்டு வண்ணம் பூசப்பட்டு அழகாகக் காட்சியளிக்கின்றன.[49]

கடிகாரங்கள்

சுவரில் பொருத்தும் பழைய கனமான கடிகாரங்கள்-உரோம எண் குறிக்கப்பட்டவை உள்ளன.[50]

சிலை

கை, கால்களை அசைக்கக் கூடிய ஆண் பெண் சிலைகள் உள்ளன.[51]

விநாயக முதலியார் காலத்துக்குப் பிற்பட்ட கலைப் பொருள்கள்

வெங்கடேசப் பெருமாள், விநாயகர், முருகர் ஆதிசேஷன் உருவச் சிலைகள் விநாயக முதலியாருக்குப் பிறகு வந்தவர்களால் சேர்க்கப்பட்டதாகும். ஐம்புலிங்க முதலியார் அளித்த அருணகிரிநாதரின் பஞ்சலோகச் சிலையும் உள்ளது.[52]

அறச்செயல்

இக்காலத்தில் திங்கள்தோறும் வரும் இரண்டு துவாதசி திதி நாட்களில் காலை 7 மணிக்குள் முப்பது பேருக்கு விரத உணவு அளிக்கப்படுகிறது. அறக்கட்டளையில் வரும் வருவாயில் 1/8 பங்கு உணவு வழங்குவதற்குச் செலவிடப்படுகிறது. $\frac{3}{8}$ பங்கு பிரம்மோற்சவத்தின் போது செலவிடப்படுகிறது.[53]

சத்திரத்தின் மீது பாடப்பட்ட நூல்கள்

காஞ்சிபுரம் சபாபதி முதலியார், திருமயிலையிலிருக்கும் வியாசர்பாடி விநாயக முதலியார் தர்மசத்திரமாலை என்னும் நூலை நூறு நேரிசை வெண்பாப் பாடல்களால் பாடியுள்ளார்.[54] மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை என்னும் நூலை நூறு விருத்தப் பாடல்களால் பாடியுள்ளார்.[55] கா. சபாபதி முதலியார், புரசை-அஷ்டாவதானம் சபாபதி முதலியார் ஆகியோர் இச் சத்திரத்தின் மீது கீர்த்தனைகள் இயற்றியுள்ளனர்.[56] அப்பாசாமி முதலியார் என்பவர் 45 அடிகள் கொண்ட அகவற்பா ஒன்றை இச் சத்திரத்தின் மீது பாடியுள்ளார்.[57] கலை நலமும், கவி நலமும் அறநலமும் ஒருங்கு வாய்க்கப் பெற்ற இச் சித்திரச் சத்திரத்தால் திருமயிலை மேலும் புகழ் பெறுகின்றது.

அறுபத்து மூவர் திருவிழாவும் தண்ணீர்ப் பந்தல்களும்

பல்லவர் காலத்தில் சமண சமயத்தவர் சூழலில் வாழ்ந்த சைவத் துறவியர் சமணர்கள் பின்பற்றும் மரபுகளைப் போன்று, சைவ சமயத்திலும் மரபுகளை உருவாக்கினர். அவற்றுள் ஒன்றே அறுபத்து மூவர் நாயன்மார் வழிபாடு.

கி. பி. எட்டாம் நூற்றாண்டு, ஒன்பதாம் நூற்றாண்டு களிலேயே சமண சமய நூல்களில் அறுபத்து மூன்று சலாகா

புருஷர்கள் (Salaka Purusas) என்னும் மரபு குறிக்கப்பட்டுள்ளது அதைப் பின்பற்றியே சைவ சமயத்திலும் அறுபத்து மூன்று நாயன்மார் என்று வரையறை செய்து போற்றும் பழக்கம் பதினோராம் நூற்றாண்டில் தழைத்தது என்பதைப் பெரிய புராணம் உணர்த்துகிறது. சமணர் கோயில்களில் சலாகா புருஷர்களுக்குத் தெய்வத்தன்மை கொடுத்து வணங்கத் தொடங்கியதைப் பின்பற்றித் தமிழ்நாட்டுச் சிவன் கோயில் களிலும் அறுபத்துமூவர் திருவுருவச் சிலைகளை வைத்து வழி படும் பழக்கம் ஏற்பட்டது.[58]

சிவலிங்கம் இருக்கும் கருவறையைச் சுற்றியுள்ள பிரகாரத் தில் அறுபத்து மூவர் இடம் பெற்றனர். இவர்கள் மூலவர்கள்; கருங்கற் சிலைகளாகக் காட்சி அளிக்கிறார்கள். சிவபெருமான் பிரம்மோற்சவ காலத்தில் திருவீதி ஊர்வலம் வரும்போது உடன்கொண்டு செல்ல பஞ்சலோகத்திலும் அறுபதது மூவருக்கு உற்சவச் சிலைகள் செய்தனர். குறிப்பாக, அறுபத்து மூவர் வழிபாடு கபாலீசுவரர் கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அத்துடன் தண்ணீர்ப் பந்தல் தருமமும் அன்று செய்யப்படுகின்றது.

கபாலீசுவரர்கோயில் அறுபத்து மூவர் திருவிழா

சேக்கிழார் பெரியபுராணம் இயற்றிய பிறகே தமிழ்நாட்டில் அறுபத்து மூவர் வழிபாடு பெருகியது. சேக்கிழார் பிறந்த இடம் குன்றத்தூர். அதற்கு அருகில் உள்ள மயிலையில் அறுபத்து மூவர் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவதில் வியப்பில்லை.

கபாலீசுவரருக்குப் பங்குனித் திங்களில் நடைபெறும் பிரம்மோற்சவத்தின் போது எட்டாம் நாள் விழா அறுபதது மூவர் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. அருகிலுள்ள சைதாப்பேட்டை காரணீசுவரர் கோயிலில சித்திரைத் திங்களில் நடைபெறும் பிரம்மோற்சவததின் எட்டாம் நாளும் அறுபத்து மூவர் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கி.பி. 12ஆம நூற்றாண்டில் திருவொற்றியூர் சிவன் கோயிலில் அறுபதது மூவர் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பது தெரிய வருகிறது.[59]

திருமயிலையில் அறுபத்து மூவர் விழாவன்று கபாலீசுவரர் பஞ்சமூர்த்திகளுடன் அறுபத்து மூவரின் வெண்கலச் சிலைகள்

ஊர்வலமாக கொண்டுவரப்படுகின்றன. கபாலீசுவரர் வெள்ளி விமானத்தில் வர, நாயன்மார்கள் நானகு நான்கு பேராக மஞ்சங்களில் வைத்துத் தூக்கி வருவர். இந்த விழா பிற்பகல் மூன்று மணிக்கே தொடங்குகிறது. ஊர்வலத்தில் நாயன்மார் திருவுருவங்கள் கபாலீசுவரரைப் பார்த்த நிலையில் கொண்டு செல்லப்படுகினறது. விழாவன்று சென்னை நகரிலுள்ள அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களுக்குப் பிற்பகல் அரைநாள் விடுமுறை அளிக்கப்படுகிறது. சென்னை மற்றும் சுற்றுப் புறமுள்ள ஊர்களிலிருந்து இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து இக் காட்சியினைக் காண்பர்.

இவ் விழாவின் மற்றுமொரு சிறப்பு, மயிலைத் திருவள்ளுவர் கோயிலிலிருந்து திருவள்ளுவர் உற்சவச் சிலையும் ஊர்வலமாக வந்து இந்த வீதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்.

சிந்தாதிரிப்பேட்டை சுவாமி

இந்தச் சுவாமியை 'வைர சுவாமி' என்றும் அழைப்பர். சிந்தா திரிப்பேட்டையிலிருந்து சுப்பிரமணிய சுவாமி தங்க, வைர நகை ஆபரணங்களை அணிந்து கொண்டு அறுபத்து மூவர் விழா வீதி வலத்தில் கலந்துகொள்வார்.

அறுபத்து மூவர் விழாவினைச் சிறப்பித்து ஒருவர் 1888ஆம் ஆண்டில் 'திருமயிலை அறுபத்து மூவர் வழிநடைச்சிந்து' என்னும் பாடலைப் பாடியுள்ளார்.[60]

தண்ணீர்ப்பந்தல் தருமம்

அறுபத்து மூவர் விழாவன்று மயிலையிலும் மயிலையின் சுற்றுப்புறங்களிலும் தனியாரும் பொது நிறுவனங்களும் தண்ணீரப் பந்தல்கள் அமைத்து மோரும், அன்னமும் தானஞ் செய்கின்றனர். முற்காலத்தில் வாகன வசதிகள் இல்லாததால் நடந்துவரும் மக்களின் களைப்பைத் தீர்க்க இத் தருமம் செய்யும் பழக்கம் தோனறியது.

தண்ணீர்ப்பந்தல் அமைக்கும் வழக்கம் கி. பி. ஏழாம் நூற்றாண்டிலேயே இருந்து வந்தது என்பதை அப்பூதியடிகள் நாயனார் திருநாவுக்கரசர் பெயரில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து அறம் செய்தார் என்று பெரிய புராணம் போற்று

வதால் புலப்படுகின்றது. இந்த மரபு மயிலையில் பின்பற்றப் படுவது மயிலைக்குச் சிறப்பாகும்.

திருமயிலை அறுபத்து மூவர் வழிநடைச் சிந்துப் பாடலில் மயிலாப்பூரிலுள்ள ஒரு தண்ணீர்ப்பந்தல்,

> தாண்டவராயன் தண்ணீர்ப்பந்தல்
> உண்டு இளைப்பாறி ஒருமித்துப் போசலாம்[61]

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் காலத்தில் இந்தியன் வங்கி போன்ற நிறுவனங்களும் அறுபத்து மூவர் விழாவில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து மோர் வழங்குகின்றன. தயிர்ச் சாதம் சாம்பார் சாதம் என்ற உணவு வகைகளையும் தானமாக அளிக்கின்றன.

ஆண்டவனின் அடியார்களைச் சிறப்பித்து விழா எடுப்பதும், அந் நாளில் அறச் செயல் செய்வதும் மயிலைக்குச் சிறப்பைத் தருவனவாகும்.

அழகிய கடற்கரை

இப்போதுள்ள பட்டினப்பாக்கத்திலிருந்து இராணி மேரி கல்லூரி வரை திருமயிலையின் கடற்கரைப்பகுதி இருக்கிறது. திருமயிலை எப்படி திருவொற்றியூருக்கும் திருவான்மியூருக்கும் இடையே நடுநாயகமாக இருக்கிறதோ அப்படித் திருமயிலைக் கடற்கரையும் மரீனா கடற்கரைக்கும், எலியட்சு கடற்கரைக்கும் இடையில் இருக்கிறது. சாந்தோம் கதீட்ரலிலிருந்து காந்தி சிலை வரையுள்ள கடற்கரைப் பகுதி, 'சாந்தோம் கடற்கரை' என்றழைக்கப்படுகின்றது. பரந்துபட்ட மணல்பரப்பு கடற் கரைக்கு அழகூட்டுவதாக அமைந்துள்ளது. இக் கடற்கரை, பழைய கபாலீசுவரர் கோயில், நேமிநாதர் கோயில் ஆகிய வைகளைக் கொண்டிருந்த பெருமையையுடையதாகும். செயின்ட் தாமஸின் கல்லறை மீது கட்டப்பட்ட பேராலயம் இக் கடற் கரைக்கு மேலும் பெருமையைக் கூட்டுகிறது. மாசி மகம் கடலாட்டு விழா இக் கடற்கரையில் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. பல்லவர் துறைமுகப்பட்டினமாக விளங்கிய பெருமையும், போர்த்துக்கீசியர் கோட்டை கட்டி வாணிகம் செய்த பெருமையும் இக் கடற்கரைக்கு உண்டு. நவாப் சததுல்லாகானின் அமைச்சரான துக்கணாராய் 1917இல் சூரிய

கிரகணத்தின் போது மயிலைக் கடலில் நீராடிய செய்தி வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.[62] இப்போது இக் கடற் கரைக்கு மேலும் சிறப்பளிக்கும் வகையில் கலங்கரை விளக்கம் கட்டப்பட்டுள்ளது. மகாத்மா காந்தியடிகளுக்கு இக் கடற் கரையில் சிலை வைக்கப்பட்டுள்ளது.[63]

கலங்கரை விளக்கம்

திருமயிலையில் சாந்தோம் கடற்கரைப் பகுதியில் அகில இந்திய வானொலி நிலையத்தின் எதிரில் மணல் பரப்பில் சென்னைக் கலங்கரை விளக்கம் உள்ளது.

வரலாறு

சென்னையில் முதன் முதலில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் 1796ஆம் ஆண்டு கலங்கரை விளக்கம நிறுவப்பட்டது. அந்த இடத்தில் 1843ஆம் ஆண்டுவரை செயல்பட்டது. பின்னர் இப்போதுள்ள உயர்நீதிமன்ற எல்லைப் பகுதிக்குள் ஒரு பெரிய கல்தூணின்மீது 1844இலிருந்து 1894 வரை கலங்கரை விளக்கம் ஒளி வீசியது. பின்னர் உயர்நீதிமன்றக் கட்டிடத்தின் உயர்ந்த சிகரப் பகுதியில் 1894இலிருந்து 1977 வரை இயங்கி வந்தது.

அந்தக் கலங்கரை விளக்கத்தை இந்திய அரசு வேறுஇடத்தில் வைக்க எண்ணியபோது திருமயிலைப் பகுதியைத் தேர்ந் தெடுத்தது. கலங்கரை விளக்கத்திற்கான உயர்ந்த கட்டிடம் கட்டி முடிக்கப் பெற்று 1977ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பத்தாம் நாள் இந்திய அரசின் கப்பல் மற்றும் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் ஜி. எஸ். தில்லான அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கலங்கரை விளக்கம்

இந்தக் கலங்கரை விளக்கம் பத்து அடுக்குக் கட்டிடத்தில், பத்தாம் அடுக்கில் செயல்படுகின்றது. இந்தியாவிலேயே எந்தக் கலங்கரை விளக்கத்திற்கும் இல்லாத பெருமை மயிலைக் கலங்கரைவிளக்கத்திற்கு உண்டு. இங்குக் கீழேயிருந்து உச்சிவரை செல்ல 'லிஃப்ட்' (Lift) வசதி உள்ளது. மற்றக் கலங்கரை விளக்கங்களில் படிக்கட்டுகளில்தான் ஏறிச் செல்ல வேண்டும்.

இந்தக் கலங்கரை விளக்கத்தில் ஏறிப் பார்ப்பதற்குப் பொதுமக்கள் சாதாரண நாட்களில் பிற்பகல் இரண்டு மணியிலிருந்து நான்கு மணி வரையிலும், வீடுமுறை நாட்களில் மேற்கொண்டு காலை பத்து மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரையிலும் அனுமதிக்கப்படுகிறார்கள். பெரியவர்களுக்குக் கட்டணமாக ஒரு ரூபாயும், பள்ளிச் சிறுவர்களுக்கு ஐம்பது காசுகளும் வசூலிக்கப்படுகின்றது.

செயல்படும் முறை

இக் கலங்கரை விளக்கம் கடல் மட்டத்திற்கு மேல் ஐம்பத்து எட்டு மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஒளியைப் பிரதிபலிப்பதற்கு நான்கு சட்டங்கள் (Panel) உள்ளன. ஒரு நிமிடத்திற்கு மூன்று முறை விளக்கு சுழலுகிறது. நிலப்பகுதியை நோக்கி இருக்கும் சட்டங்கள் மறைக்கப்பட்டுள்ளன. ஆகவே, சுழலும் விளக்கின் ஒளி நகர்ப்புறத்தில் விழாது. பத்து வினாடிகளுக்கு ஒரு முறை ஒளியைப் பாய்ச்சும் முறையில் அமைக்கப் பட்டுள்ளது. இங்கு வெள்ளை நிற ஒளி வெளிப்படுகிறது. இக் கலங்கரை விளக்கம் மின்சாரத்தினால் செயல்படும்போது 24,42,000 மெழுகுவர்த்தி ஒளியை வெளிப்படுத்துகிறது. மின் தடங்கல் ஏற்படும் நேரங்களில் எரிவாயுவைப் பயன்படுத்தி விளக்கை எரிய விடுவர். அப்போது 1,29,900 மெழுகுவர்த்தி ஒளியை வெளிப்படுத்தும் மின்சாரத்தினால் இயங்கும் போது குறைந்த அளவு 18 கடல் மைல்களுக்கும், அதிக அளவு 28 கடல் மைல்களுக்கும் இந்த ஒளி தெரியும். எரிவாயுவினால் இயங்கும் போது குறைந்த அளவு 14 கடல் மைல்களுக்கும், அதிக அளவு 20 கடல் மைல்களுக்கும் தெரியும்.

இந்தக் கலங்கரை விளக்கம் புதிய கட்டிட அமைப்பு முறையில், குறுகலான பல அடுக்கு மாடி போலக் கட்டப் பட்டுள்ளது. இது கப்பல் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப் படுகிறது. சென்னைக் கலங்கரை விளக்கம் மயிலைக்கு ஒரு தனிச்சிறப்பைத் தருவதாகும்.[64]

வடமொழிக்கல்லூரி

திருமயிலையில் இராயப்பேட்டை நெடுஞ்சாலை அருகே யுள்ள திருவள்ளுவர் சிலைக்குப் பக்கத்தில் உள்ளது.

வரலாறு

1905 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் பூர்வாங்கமாக இக் கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டது. 1906 பிப்ரவரித் திங்கள் முதல் நாளிலிருந்து வி. பாஷ்யம் அய்யங்கார் என்பவருக்குப் பலாத்தோப்பு என்னுமிடத்தில் சொந்தமாக இருந்த வாடகை வீட்டில் இக் கல்லூரி முறையாகத் தொடங்கப் பட்டது.

1907இல் அறக்கட்டளை ஒன்று நிறுவப்பட்டது. திருவாளர்கள் வி. கிருஷ்ணசாமி ஐயர், ஸர். சி. பி. இராமஸ்வாமி ஐயர், இராவ்பகதூர் ஏ. கிருஷ்ணசாமி ஐயர், ஏ. எஸ். பால சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் அறங்காவலர்களாகப் பொறுப் பேற்றனர். திரு வி. கிருஷ்ணசாமி ஐயர் நாற்பத்து ஐந்தாயிரம் ரூபாய் வடமொழிக் கல்லூரிக்குக் கொடையாகக் கொடுத்தார். பிரமஸ்ரீ எஸ்.குப்புசாமி சாஸ்திரிகள் இக் கல்லூரியின் முதல் முதல்வராகப் பணியாற்றினார்.

இக் கல்லூரி அத்வைத வேதாந்தம், மீமாம்சம், தர்ம சாஸ் திரம்; வேத பாஷ்யம் ஆகியவைகளைப் போதிக்கிறது. இங்குப் படிக்கும் மாணவர்களுக்கு இலவச இட உதவியும், உணவும் அளிக்கப்படுகின்றன. 1907இல் இக் கல்லூரிக்கு அரசினர் அங்கீகாரம் அளித்தனர். இக் கல்லூரியில் படிப்புக் காலம் ஐந்தாண்டுகளாகும். இங்கு அளிக்கும் சான்றிதழ் 'விசாரதா' எனப்படுகிறது. 1910ஆம் ஆண்டில் இப்போது கல்லூரி இருக்கும் கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்றது. மாணவர் விடுதியும் இத் துடன் கட்டப் பெற்றது. 1912ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. இக் கல்லூரியின் பொன்விழா 1956ஆம் ஆண்டு நடைபெற்றது. இக் கல்லூரியும் மயிலைக்குரிய தனிச் சிறப்புகளில் ஒன்றாகும்.[65]

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

இம் மன்றம் முன்னர், 'சைவ சித்தாந்த மகா சமாஜம்' என அழைக்கப்பட்டது. சைவத்தையும், தமிழையும் ஒருங்கே வளர்த்துவரும் இம் மன்றம் வெங்கடேச அக்கிரகாரச் சாலையில் உள்ளது. தமிழில் 'சித்தாந்தம்' என்னும் திங்கள் இதழையும், ஆங்கிலத்தில் 'Saiva Siddhantha' என்னும் இதழையும் வெளி யிடுகிறது.

ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், ம. பால சுப்பிரமணிய முதலியார் போன்ற பெருமக்களால் தொடங்கி வைக்கப்பெற்ற பெரு மன்றம் எண்பது ஆண்டுகட்கும் மேலாகச் செயல்பட்டு வருகிறது. சைவ சித்தாந்தம் தொடர்பான பல அரிய நூல்களை இப் பெருமன்றம் வெளியிட்டுள்ளது. பெரு மன்றம் வெளியிட்டுள்ள சங்க இலக்கியம் குறிப்பிடத்தக்க பதிப்பாகும். சைவ சித்தாந்த சாத்திர வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தி வருவதும் குறிப்பிடத் தக்கது.

குறிப்புகள்

1. ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால், 'நயினார் கோயில்', **திருக்குறள் மூலமும் கட்டுரைகளும்**, ஜைன இளைஞர் மன்றம், சென்னை, ப. 121.
2. திருஞான சம்பந்தர், **தேவாரம்**, 2-183.10.
3. ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால், 'நயினார் கோயில்', **திருக்குறள் மூலமும், கட்டுரைகளும்**, ப. 122.
4. ,, ப. 125.
5. ,, ப. 125.
6. கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட செய்திகள்.
7. ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால், 'நயினார் கோயில்', **திருக்குறள் மூலமும் கட்டுரைகளும்**, பக். 126-127.
8. **The Hindu**, December 4, 1974.
9. சி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார், **மயிலாப்பூர் ஸ்ரீ ஆதி கேசவப் பெருமாள், பேயாழ்வார் கோயில் ஸ்தல புராணம்**, ப. 9.
10. ,, பக். 11-12.
11. கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட செய்தி.
12. S. Kalyanasundaram, **A Short History of Mylapore**, p. 27.
13. K. V. Raman, **The Early History of the Madras Region**, p. 14.
14. ,, p. 15.
15. S. Muthiah, **Madras Discovered**, Affiliated East-West Press Private Ltd., 1981, p. 81.
16. திருஞானசம்பந்தர், **தேவாரம்**, 2-183-பா-ள். 1-10
17. சேக்கிழார், **திருத்தொண்டர் புராணம்**, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வெளியீடு, 1950, திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம், பா-ள். 1033-1120.
18. சி. கே. சுப்பிரமணிய முதலியார், **பூம்பாவை**, கோவை தமிழ்ச்சங்கம், 1950, பக். 101-102.
19. **திருத்தொண்டர் புராணம்**, திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் வெளியீடு, திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம், பா. 1086.
20. சுந்தரர், **தேவாரம்**, 7ஆம் திருமுறை, பா. 400.
21. **திருத்தொண்டர் புராணம்**, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் வெளியீடு, வாயிலார் நாயனார் புராணம், பா. 6.
22. ,, பா. 7.

23. **திருத்தொண்டர் புராணம்,** திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் வெளியீடு, அறுபத்து மூவர் வரலாற்றுச் சுருக்கம்.
24. M. A. Dorai Rangaswamy, **The Religion and Philosophy of Tevaram,** Book II, p. 1041.
25. மு. கோ. ராமன் (பதிப்பு). **திருமயிலை உலா,** கண்ணி 189.
26. **தினமணி,** செப்டம்பர் 21, 1974.
27. K. V. Raman, **The Early History of the Madras Region,** p. 14.
28. நஜன், **மயிலை கற்பகம்,** ப. 69.
29. ரா. ராமகிருஷ்ணன், **சுவாமி ராமகிருஷ்ணானந்தர்,** ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 1970, பக். 75-76.
30. **Sri Ramakrishna Math and Mission, Madras, A Bird's-Eye view,** Sri Ramakrishna Math, Madras, p. 10.
31. ,, pp 10-11.
32. ,, pp. 11-12.
33. ,, p. 12.
34. ,, pp 12-14.
35. ,, p. 15.
36. ,, pp. 16-26.
37. ,, pp. 27-28
38. சுவாமி தபஸ்யானந்தர், **ஸ்ரீ ராமகிருஷ்ண மடமும் சங்கமும்,** ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 1980, ப. 18.
39. **தொண்டை மண்டலம் சோழிய வேளாள மரபு வியாசர்பாடி விநாயக முதலியார் சித்திரச் சத்திர தரும பரிபாலனம்,** அரோரா அச்சுக்கூடம், 1925, ப. viii
40. ,, ப. 1.
41. ,, பக். 5-6.
42. ,, பக். 7-10.
43. ,, ப. X.
44. கள ஆய்வில் பெறப்பட்ட செய்திகள்.
45. ,,
46. ,,
47. ,,
48. ,,
49. ,,
50. ,,

51. கள ஆய்வில் பெறப்பட்ட செய்திகள்
52. ,,
53. வி. விநாயக முதலியார் சாரிடீஸ் செயலாளர் திரு சி. சம்பந்தன் கூறிய செய்தி.
54. காஞ்சிபுரம் சபாபதி முதலியார், **திருமயிலையிலிருக்கும் வியாசர்பாடி விநாயக முதலியார் தர்ம சத்திர மாலை,** முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம்.
55. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, **திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை,** பெங்களூர் ஆ. நமச்சிவாய முதலியார் (பதிப்பு), 1856.
56. காஞ்சிபுரம் சபாபதி முதலியார், **திருமயிலையிலிருக்கும் வியாசர்பாடி விநாயக முதலியார் தர்ம சத்திர மாலை,** நூலின் இறுதியில் உள்ளது.
57. ,, ,,
58. R. N. Nandi, **Religious Institutions and Cults in the Deccan** (A. D. 600-A. D. 1000), pp. 81-82.
59. **The Hindu**, February 10, 1980.
60. ஏ. கே. செட்டியார் (தொகுப்பு), **தமிழ்நாடு** (பயணக் கட்டுரைகள்), ஆர். ராமச்சந்திரன்-ஏ. வீரப்பன் வெளியீடு. 1968, பக். 97-98.
61. ,, ப. 98.
62. H. D. Love, vestiges of Old Madras, Vol II, p. 179.
63. கள ஆய்வு மூலம் பெறப்பட்டது.
64. ,,
65. **The Madras Sanskrit College and S. S. V. Pathasala, Madras, Golden Jubilee Souvenir,** 1956, pp. 45-49.

தொகுப்புரை

மயில்களின் ஆர்ப்பரிப்பினால் இத் தலம் 'மயிலார்ப்பு' எனப் பெயர்பெற்றது. பின்னர் இப் பெயர் வழக்கில் 'மயிலாப்பு' என்றாகியது. மயில் ஆர்ப்பு ஊர், இச் சொற்களைப் புணர்த்திக் கூறுங்கால் மயிலார்ப்பூர் ஆகும். மயிலார்ப்பூர் என்பது நாளடைவில் மயிலாப்பூர் என்று வழங்கப்பட்டு, அதன்பின் மயிலைஎன மருவி வழங்கலாயிற்று என்று மயிலையின் பெயர்க் காரணம் உணர்த்தப்பட்டது.

திருமயிலை மிகவும் தொன்மை வாய்ந்த தலம் என்பது தால்மியின் குறிப்புகளினாலும், புராணங்களினாலும், இலக்கியங்களினாலும், மரபுவழிச் செய்திகளாலும். வெளிநாட்டறிஞர் குறிப்புகளினாலும், தொல்பொருள் ஆய்வுச் செய்திகளினாலும், கல்வெட்டுகளினாலும் நிறுவப்பட்டது.

பல்லவர் ஆட்சியில் மயிலை சிறப்புமிக்க நகரமாக விளங்கியதும், போர்த்துக்கீசியர் ஆங்கிலேயர் ஆட்சியில் சாந்தோம் சிறப்புப்பெற்றுவிளங்கியதும்,பழங்காலந்தொட்டே வரலாற்றுச் செய்திகளோடு தொடர்புடைய நகரமாக இருந்து வந்ததும் விளக்கப்பட்டது. திருவிழாக்கள் மலிந்த நகரம் மயிலை என்பதும், ஆங்கிலேய அதிகாரிகள் விரும்பித் தங்கிய இடம் என்பதும் விளக்கப்பட்டது.

திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலை மையமாகக் கொண்டு பல்வகைச் சிற்றிலக்கியங்கள் தோன்றின. திருமயிலை இலக்கியங்களில் தொடக்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் கபாலீசுவரர் பெருமையைக் கூறுபவையாகவும், இடைக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சிங்காரவேலர் பெருமையைக் கூறுபவையாகவும், அதற்குப் பிற்பட்ட இலக்கியங்கள் கற்பக வல்லியின் புகழ் பாடுபவையாகவும் அமைந்துள்ளன என்பது குறித்தும் ஆராயப் பெற்றன. திருமயிலைச் சிற்றிலக்கியங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் , என்னும் அடிப்படையில் அமைந்துள்ளன. திருமயிலை பற்றிப் பழைய இலக்கியங்கள் குறிப்பிடும் குறிப்பினால் அழகிய மாடவீதிகள் நிறைந்த ஊர் மயிலை என்பது புலப்படும்.

முல்லைத் திணைக்குரிய கார்காலம் எல்லாக் கலம்பகத்திலும் காணப்படுகிறது. ஆனால், மயிலைக் கலம்பக ஆசிரியர் கார்காலத்திற்கு இரு பாடல்கள் பாடியதோடல்லாமல் வெண்பனிக் காலத்தையும் வெயிற்காலத்தையும் பாடுகின்றார் என்னும் கருத்து குறிப்பிடத்தக்கது. திருமயிலை தாச்சி அருணாசல முதலியார் இயற்றிய எட்டுப் பாடல்கள் அடங்கிய கபாலீசர் பதிகம் 1872இல் ஊ. புஷ்பரத செட்டியாரால், கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டிருந்தும், அப் பாடல்களில் முதல் ஐந்து ஆசிரியர் பெயர் தெரியாமல் டாக்டர் உ. வே. சாமிநாதையரால் திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம் என்னும் பெயரால் வெளியிடப்பட்டதும், அதைத் தொடர்ந்த இரு பாடல்களும் ஆசிரியர் பெயர் தெரியாமல் பிற துதிகள் என்னும் பெயரில் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டதும் திருமயிலை தாச்சி அருணாசல முதலியாரின் பாடல்களே என்பது குறிப்பிடப் பெற்றது.

கி. ஊ. பா. கங்காதர நாவலர், விநாயகருக்கும் சிவனுக்கும் மேலாக ஒரு கடவுளை ஏற்கவில்லை என்பதும், கணபதியே கூட இவருக்குக் கபாலீசுவரரின் மாற்றுருவம் என்பதும் இவர் நூல்களால் விளங்குகிறது. சிவபரம்பொருட்கும் விநாயகர்கட்கும் வேறுபாடு காணாது சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர் என்பதற்கு ஏற்ப கணபதியமே சைவமாகின்றது என்னும் கருத்து கருதத்தக்கது.

கோவை நூல்கள் 400 பாடல்களைக் கொண்டிருக்கும். அம்பலவாணக் கவிராயர் இயற்றிய திருமயிலைக் கோவை 463 பாடல்களைக் கொண்டுள்ளது. கோவை நானூறும் அறுபத்து மூவர் நினைவாக மேற்கொண்டு இணைத்துப் பாடினாரோ என்று எண்ணும்படி தோன்றுகிறது. கோவையாசிரியர் திருக்குறள் கருத்துக்களையும் பழமொழிகளையும் எடுத்தாளுவது குறிப்பிடப் பெற்றது. தமிழ்ப்பற்றும், தமிழிசைப் பற்றும் இவர் தம் பாடல்கள் மூலம் புலனாகின்றன. மேலும், கலியாணி, சங்கராபரண இராகங்களைக் குறிப்பிடுகின்றார்.

உ. வே. சாமிநாதையர் நூலகத்தில் உள்ள 'மயிலைச் சிங்கார வேலர் கொச்சகம்' என்னும் பெயரிலுள்ள சுவடியில் உள்ள இருபது பாடல்கள் திருமயிலை தாச்சி அருணாசல முதலியார் பாடிய சிங்கார வேலர் மாலை என்னும் நூலில் உள்ள முப்பது பாடல்களில் இருபது ஆகும் என்பது குறிபபிடப்பட்டது.

திருமயிலைச் சிற்றிலக்கியங்கள், தல புராணங்கள் அனைத்தும், உமை, மயில் வடிவில் சிவனை வழிபட்டதையும் சம்பந்தர் அங்கம் பூம்பாவையாக்கிய அற்புதச் செயலையும் குறித்துப் பாடுகின்றன.

தல புராணங்களின் தோற்றத்திற்கு அரசியல் சூழ்நிலை, பக்திப் பாடல்களின் வளர்ச்சி, சமயப் புலவர்களிடையே போட்டி, ஆதீனங்களின் இலக்கியப் பணி, வடமொழியிலிருந்து தமிழாக்கம் ஆகியவையே காரணமாக அமைந்தன. திருமயிலைத் தல புராணங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றின் சிறப்பினைப் புலப்படுத்துவதாய் அமைகிறது. ஒவ்வொரு சருக்கத்தின் ஈற்றிலும் அப்பகுதியில் கூறிய நிகழ்ச்சியும், இனி கூற வேண்டிய நிகழ்ச்சி பற்றியும் முனிவர்கள் வாயிலாக உணர்த்தப்பட, அதன்படி அகத்திய முனிவர் கூறிச் செல்வதாக அமைந்துள்ள முறை, பெரியபுராணம், கம்பராமாயணம், திருவிளையாடற்புராணம் ஆகியவற்றை அடியொற்றி அமைந்துள்ளதுபோல் உள்ளது.

பெரும்பாலான தல புராணங்களில் நேமிவன முனிவர்கள், அவர்கள் இடத்திற்குச் சூத முனிவர் என்பவர் எப்பொழுதாவது வரும்போது அவரிடம் கதை கேட்கும் முறையில் அமைந்துள்ளது. திருமயிலைத் தல புராணங்கள் பொதியமலையில் வீற்றிருக்கும் அகத்தியரிடம், முனிவர்கள் சென்று கதை கேட்பதாக அமைந்துள்ளது.

ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய திருமயிலைத் தல புராணத்தில் பாயிரச் சருக்கத்திலுள்ள அவையடக்கப் பாடல்கள், நூலுக்கு ஒரு நல்ல முன்னுரையாகவே அமைந்துள்ளது. தவம், வேள்வி, பூசை, துதி ஆகியவற்றாலேயே சிவபெருமான் மகிழ்ச்சியடைகிறான் என்பது வழிபடு கதைகள் வாயிலாக உணர்த்தப்படுகிறது. அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய திருமயிலைத் தல புராணத்தில் கந்த புராணக் கதை குமரவேள் அருச்சனைச் சருக்கத்தில் கூறப்படுகின்றது. இராமாயணக் கதை முழுமையாகத் திருவிழாச் சருக்கத்தில் கூறப்படுகின்றது. திருமயிலைக்கு உரிய பல்வேறு பெயர்களும் அவற்றுக்கான காரணங்களும், திருமயிலையில் கபாலீசுவரரை வழிபட்டவர்கள் பிரதிட்டை செய்த சிவலிங்கங்களும், தீர்த்தங்

களும் கூறப்படுகின்றன. திருமயிலைத் தீர்த்தங்கள் ஏழு சிறப்பாகக் கூறப்படுகின்றன. பல கதைகளின் மூலமாக, பாவச்செயல் புரிந்தோர் மயிலைத் தீர்த்தங்களில் நீராடினால் பாவம் நீங்கப் பெறுவர் என்பது விளக்கப்படுகின்றது.

மயிலை நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தல புராணத்தில், அக்காலத்தில் உள்ள செய்திகளும் சேர்த்து எழுதப் படும் மரபு உருவாகியுள்ளது. இவர் தல புராணத்தை ஒரு வரலாற்று நூல்போல அமைத்துப் பழைய தல புராணத்தில் கூறப்படாத, மயிலையிலுள்ள கோயில்களைப் பற்றிய கதையை, சரித்திரம் என்னும் பெயரால் முண்டகக் கண்ணம்மை சரித்திரம், இந்திரன் கரமுகமான சரித்திரம், மல்லீசர் சரித்திரம், காரணீசுரர் சரித்திரம், விருபாட்சீசர் சரித்திரம், தீர்த்த பாலீசர் சரித்திரம், வாயிலார் சரித்திரம் என்னும் பகுதிகளாக எழுதியுள்ளது போற்றத் தக்கதாகும். கூத்தாடும் விநாயகர், திருவள்ளுவர், பூம்பாவை பேரில் படலங்கள் அமைந்திருப்பது புதுமையான தாகும். நாதமுனி முதலியார் தலபுராணம் பழமையும் புதுமையும் இணைந்த ஒன்றாக விளங்குவது குறிப்பிடத் தக்கதாகும்.

திருமயிலையிலுள்ள வியாசர்பாடி விநாயக முதலியார் கட்டிய சித்திரச் சத்திரத்தின் மீது மாலை வகை நூல்கள் இயற்றப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இயற்றிய தர்ம சத்திர மாலையும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலையும் நூறு நூறு பாடல்களைக் கொண்டு சத்திரத்தின் உணவிடும் சிறப்பையும், கலைச் சிறப்பையும் விரிவாகக் கூறியிருப்பது இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இவற்றுள் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இயற்றிய தர்ம சத்திர மாலை, இலக்கியமாக மட்டுமல்லாமல், வியாசர்பாடி விநாயக முதலியாரின் வரலாறு, சத்திரத்தின் வரலாறு, சத்திர விளக்கம், சத்திரத்திற்கான அறக்கட்டளை ஆகியவற்றை விரிவாகக் கூறுவதால் இந் நூல் வரலாற்றுக் களஞ்சியமாக விளங்குகிறது.

திருமயிலையிலுள்ள இறைவன் பெயர் கபாலீசுவரர் அன்று. கபாலீசுவரர் என்றால் கபாலங்களுக்குத் தலைவர் என்று பொருள்படும். ஆகவே இப்பெயர் பொருந்தாது. காபாலிகர்

களின் கடவுள் ஆனதால் 'காபாலீசுவரர்' என்பதே இங்குள்ள இறைவனின் பெயர். இக் கோயிலில் இருந்ததாகத் திருமயிலை உலா கூறும் மகா விரத வேதியர் காபாலிகரே என்பதும் உணர்த்தப்பட்டது. கபாலீசுவரர் கோயில் காபாலிகர்களுக்கு உரியது. இக் கோயிலிலுள்ள இறைவன் பெயர் காபாலீசுவரர். இப்பெயரே மருவிக் கபாலீசுவரர் என்று வழங்குகிறது என்பதும் உணர்த்தப்பட்டது.

பழைய கபாலீசுவரர் கோயில் சாந்தோம் கடற்கரையில் இருந்ததென்பதும், கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துக்கீசியரால் அழிக்கப்பட்டது என்பதும், கி. பி. பதினாராம் நூற்றாண்டில் இப்போதுள்ள இடத்தில் புதிய கோயில், மயிலை நாட்டு நயினியப்ப முதலியார் மகன் முத்தியப்ப முதலியாரால் கட்டப்பெற்றது என்பதும் குறிப்பிடப்பட்டது.

இங்குள்ள சிவலிங்கம் மேற்கு நோக்கியது. இதற்குச் சத்தியோ ஜாதம் என்று பெயர். வழிபடுவோர்க்கு உடனே காட்சி தந்து அருள் வழங்குவது என்பது குறிப்பிடத் தகுந்தது.

சிங்காரவேலர் என்னும் பெயர் வழக்கு கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் இல்லை என்பது அருணகிரிநாதர் திருப்புகழால் உணர்த்தப்பட்டது. சிங்காரவேலர் என்னும் பெயர் வழக்கு, புதிய கபாலீசுவரர் கோயில் கட்டப்பட்ட பிறகு ஏற்பட்ட ஒன்று என்பது கருதத்தக்கது.

திருமயிலைத் திருக்குளம், இசுலாமியருக்குரிய இடத்தில் தோண்டப்பட்டது என்பது விளக்கப்பட்டது.

திருஞான சம்பந்தர் பூம்பாவைப் பதிகத்தில் கூறும் திரு விழாக்கள் இப்போதும் கபாலீசுவரர் கோயிலில் நடைபெறுகிறது என்பது எடுத்துக்கூறப்பெற்றது.

திருவள்ளுவர் கோயிலில் கி.பி. பதினாறாம் நூற்றாண்டுக்கு முன்னர், திருவள்ளுவர் திருவடிகளே வணங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்தது.

சமயங்களின் வளர்ப்புப் பண்ணையாக மயிலை விளங்கு கிறது என்பது உணர்த்தப்பட்டது.

மயிலையிலுள்ள கலங்கரை விளக்கம் இந்தியாவிலேயே தனிச்சிறப்புப் பெற்ற கலங்கரை விளக்கம் என்பது குறிப்பிடத் தகுந்தது.

பின்னிணைப்பு

திருமயிலை இலக்கியங்கள் - ஆசிரியர் பெயர் - நூற்பெயர் அட்டவணை

எண் 1	ஆசிரியர் பெயர் 2	நூற்பெயர் 3	காலம் 4	வடிவம் 5
1.	அப்பாசாமி முதலியார், திருமயிலை	கபாலீசர் குறுங்கழி நெடில்	19ஆம் நூற்றாண்டு	ஏட்டுச்சுவடி
2.	அமுர்தலிங்கத் தம்பிரான் சுவாமிகள்	திருமயிலைத் தல புராணம்	1892	அச்சிடப்பட்டது
3.	அம்பலவாணக் கவிராயர்	திருமயிலைக் கோவை	1772	,,
4.	அருணாசல முதலியார், திருமயிலை	கபாலீசர் பதிகம் கற்பக வல்லியம்மை பதிகம், சிங்காரவேலர் மாலை	1872	,,
5.	அருளானந்தம், ரா. பாலகவி	திருமயிலைக் கற்பகவல்லி திருப்பதிகம்	1982	,,
6.	கங்காதர நாவலர், கி.ஊ.பா.	சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரரின் சிவபரத் திருநெறி	1907	,,
		,, சிவஞானப்பூரணம்	1911	,,
		,, சிவஞானச் சிந்தாமணி	1912	,,
		,, சிவஞானத் திவாகரம்	1913	,,
		,, சிவஞானத்ரயம்	1915	,,
		,, சிவஞானபாஷ்ய வியூகம்	1916	,,
		,, சிவஞான ரமணியம்	1917	,,

	கங்காதர நாவலர், கி.ஊ.பா.	சென்னைத் திருமயிலை சிவஞான ஸத்வாம்ருதம்	1919	அச்சிடப்பட்டது
		,, சிவஞான பௌதிகம்	1920	,,
		,, சிவஞான மஹத்வசுகத்வம்	1927	,,
7.	கணேசன், சி.	முண்டகக்கண்ணியம்மன் பாமாலை	1975	,,
8	——	கற்பகவல்லிமாலை	19ஆம் நூற்றாண்டு	கையெழுத்துப்படி
9.	கனகசபை நாயகர், பு.	திருமயிலைப் பதிற்றுப் பத்தந்தாதி	1883	அச்சிடப்பட்டது
10.	கனகராஜையர், நா.	கற்பகவல்லி மாலை, திருமயிலைக் கபாலீசன் திருமாலை, பூம்பாவைத் தவச்சிறப்பு மாலை	1969	கையெழுத்துப்படி
11.	கிருஷ்ணமூர்த்தி, மு.	பத்ரகாளி அம்மன் பக்திப் பாடல்கள்	1981	அச்சிடப்பட்டது
12.	கிருஷ்ண ராவ்,	முண்டகக்கண்ணி அம்மன் பஞ்சகம்	1968	,,
13.	குமாரதேஸிகர், கு. ஆ. புதுவை	சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரர் அருள்வளர் மல்லிகைப்பா	1911	,,
14.	கோடீஸ்வர ஐயர், என்.	திருமயிலை ஸ்ரீகபாலீசுவரர் துதி, மயிலை சித்தி விநாயகர் பதிகம், மயிலைச் சண்முகப் பஞ்சரத்தின மாலை	1915	,,

1	2	3	4	5
15.	கோவிந்தராசன், சீனி. மயிலை	திருமயிலை நான்மணிமாலை	1918	அச்சிடப்பட்டது
16,	கோவிந்தராசன், சே.	திருமயிலை வெண்பா அந்தாதி	1960-80	,,
17.	சந்திரசேகர கவிராஜ பண்டிதர், தில்லையம்பூர்	திருமயிலைக் கபாலீசர் பதிகம்	1876	,,
18.	சபாபதி முதலியார், காஞ்சீபுரம்	திருமயிலையிலிருக்கும் வியாசர் பாடி வீநாயக முதலியார் தர்மசத்திர மாலை	1880	,,
19.	சரவணபவானந்தர், சுவாமி	கற்பகாம்பிகை அந்தாதிப்பதிகம்	1965	,,
20.	சிவப்பிரகாச குமரகுரு தேசிகர்	சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரரின் தோத்திர பூஷணம்	1920	,,
21.	சிவன், பாபநாசம்	கீர்த்தனைகள்	1920-70	,,
22.	சுத்தசத்வானந்தா (என். எஸ். சிதம்பரம்)	ஸ்ரீ கற்பகாம்பாள் அந்தாதி	1982	,,
		திரு கோலவிழி அம்மன் போற்றி, இசைமாலை	1980	,,
23.	சுந்தர முதலியார், வியாசர்பாடி	திருமயிலாப்பூர் தல மகிமைக் கீர்த்தனம்	1948	,,
24.	சுப்பராய முதலியார், தேனாம்பேட்டை	திருமயிலைக் கபாலீசர் இரட்டை மணிமாலை	1883	,,
25.	செம்பொற் செவ்வேள்	முண்டகக் கண்ணி முப்பது	1981	,,
26.	சேதுராமன், அருட்கவி	கபாலீசர், கற்பகவல்லி, சிங்கார வேலர் மீது பதிகங்கள்	1962	,,

27.	சோமசுந்தரம் ஐயர், ஆர்.	திருமயிலை ஸ்ரீ கற்பகாம்பாள் அஷ்டகம்	1982	அச்சிடப்பட்டது
28.	சௌந்தரா கைலாசம்	அதர்வண பத்ர கோலவிழி அம்மன் பிரதியங்கரா தேவி	1982	,,
29.	ஞானசித்த சுவாமிகள், ஸ்ரீமத். திருக்குருகூர்	திருமயிலாப்பூர் பதிகம், திருமயிலைக் கற்பகவல்லி பதிகம், திருவள்ளுவ நாயனார் பதிகம்	1893	,,
30.	தண்டபாணி சுவாமிகள், வண்ணச்சரபம்	திருமயிலாபுரிப் பதிகம் 1	19ஆம் நூற்றாண்டு	கையெழுத்துப்படி
		திருமயிலாபுரிப் பதிகம் 2, 3 திருமயிலைக் குகன் பதிகம் திருவள்ளுவ நாயனார் பதிகம்	1878	அச்சிடப்பட்டது
31.	தாண்டவராய கவிராயர்	திருமயிலை யமக அந்தாதி	1756	,,
		திருமயிலை சிங்காரவேலர் பிள்ளைத் தமிழ்	,,	,,
32.	தாண்டவராய செட்டியார்	திருமயிலை செங்கழுநீர் விநாயகர் பதிகம்	1885	,,
33.	——	திருமயிலாபுரிப் பத்து	16ஆம் நூற்றாண்டு	,,
34.	——	திருமயிலை உலா	,,	,,
35.	——	திருமயிலைக் கலம்பகம்	,,	,,
36.	தெய்வசிகாமணி நாயனார்	திருமயிலைக் கற்பகவல்லி அஷ்டகம்	1900	,,

1	2	3	4	5
37.	——	திருமயிலை வெண்பா	18ஆம் நூற்றாண்டு	அச்சிடப்பட்டது
38.	நடராஜ சர்மா, யு. எஸ்.	ஸ்ரீ கற்பகாம்பாள் பாடல்கள்	1964	,,
39.	நடலிங்க கவிராசர், திருநெல்வேலி	திருமயிலை உவமை வெண்பா	18ஆம் நூற்றாண்டு	,,
40.	நாதமுனி முதலியார், மயிலை	திருமயிலைத் தல புராணம்	1924	,,
41.	——	மயிலை ஞான சுந்தர விநாயகர் விருத்தம்	18ஆம் நூற்றாண்டு	ஓலைச்சுவடி
42.	--	மயிலை நேமிநாதர் பதிகம் (மயிலாப்பூர் பதிகம், திருமயிலாப்பூர் பத்தும் பதிகம், திருமயிலாப்பூர் ஸ்ரீநேமிநாத ஸ்வாமி பதிகம்)	16ஆம் நூற்றாண்டு	அச்சிடப்பட்டது
43.	மயில் வாகனம்	மயிலை மும்மணி மாலை	1897	,,
44.	மாணிக்க முதலியார், மதுரகவி, குன்றத்தூர்	கற்பகவல்லியம்மை பஞ்சரத்தினம்	1905	,,
45.	மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மகாவித்துவான்	திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை	1856	,,

46.	முத்துசாமி முதலியார், ஆலந்தூர்	திருமயிலைக் கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம்	1855	அச்சிடப்பட்டது
47.	முருகேஸம் பிள்ளை, ந. பாலகவி	சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் துதிப்பா மாலை	1913	,,
48.	முனிசாமி முதலியார், மோசூர்	ஸ்ரீ கபாலீச்சுரர் தோத்திரம், ஸ்ரீ கபாலீச்சுரர் மாலை	1910	,,
49.	முனிசாமி பிள்ளை, வீ.	சென்னை திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்சுவரர் துதிப்பா மாலை	1911	,,
50.	வேங்கடசுப்பிரமணியம், ஈ. வே.	திருமயிலைக் கற்பகாம்பிகைப் பிள்ளைத் தமிழ்	1982	,,
51.	ஜகந்நாதன், கி. வா.	திருமயிலாபுரிக் கற்பகாம்பிகை மாலை	1966	,,
	,,	திருமயிலைச் சிங்காரவேலர் பதிகம்	1966	,,
		மயிலைச் சிங்காரவேலன் இரட்டை மணிமாலை	1961	,,

துணைநூற் பட்டியல்

தமிழ் நூல்கள்

... **அகநானூறு**, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை, 1958.

அமுர்தலிங்கத் தம்பிரான் சுவாமிகள், **திருமயிலைத் தல புராணம்**, காஞ்சிபுரம் சபாபதி முதலியார் பொழிப்புரை, ஆதிகலாநிதி அச்சுக் கூடம், சென்னை, 1892.

அருணகிரிநாதர், **திருப்புகழ்**, த. சுப்பிரமணிய பிள்ளை (பதிப்பு), இரண்டாம் பாகம், சென்னை, 1923.

... **திருப்புகழ்**, திருமுருக கிருபானந்த வாரியார் (பதிப்பு), இரண்டாம் பதிப்பு, சென்னை, 1965.

... திருமயிலை **திருப்புகழ்**, அம்பை சங்கரன் (பதிப்பு), பார்க்கர் பிரஸ், சென்னை-1.

அருணாசலம், ப., **சைவசமயம் (ஓர் அறிமுகம்)** நாகர் கோயில், 1979.

அருணாசலம், மு., **தமிழ் இலக்கிய வரலாறு, பதினைந்தாம் நூற்றாண்டு**, காந்தி வித்தியாலயம், தஞ்சை, 1969.

... **தமிழ் இலக்கிய வரலாறு, பதினாறாம் நூற்றாண்டு**, முதல் பாகம், காந்தி வித்தியாலயம், தஞ்சை, 1977.

அருணாசல தேசிகர், (பதிப்பு), **நந்திக் கலம்பகம்**, பாரி நிலையம் நான்காம் பதிப்பு, சென்னை, 1977.

அருணாசல முதலியார், தாச்சி, திருமயிலை, **கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம், சிங்காரவேலர் மாலை**, ஊ. புஷ்பரத செட்டியார் (பதிப்பு), சென்ன பட்டணம், 1872.

அவிரோதியாழ்வார், **திருநூற்றந்தாதி**, ரா. இராகவையங்கார் (பதிப்பு), தமிழ்ச் சங்க முத்திராசாலை, இரண்டாம் பதிப்பு, மதுரை, 1935.

அனந்தநாத நயினார், தி.,	**திருக்குறள் ஆராய்ச்சியும், ஜைந சமய சித்தாந்த விளக்கமும்**, ஸ்ரீ ஆதிமூலம் அச்சியந்திர சாலை, சென்னை, 1932.
ஆறுமுக நாவலர், கே.,	**இந்து மத இணைப்பு விளக்கம்**, மூன்றாம் பதிப்பு, நாகர்கோவில், 1975.
ஆழ்வார்கள்,	**நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**, காரப்பங்காடு ஸ்ரீ கோபாலாச்சாரியார் ஸ்வாமி, இரத்தின நாயக்கர் அண்ட் சன்ஸ். சென்னை, 1971.
...	**நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**, கி.வேங்கடசாமிரெட்டியார்(பதிப்பு), திருவேங்கடத்தான் மன்றம், முதற் பதிப்பு, சென்னை, 1973.
இரவீந்திரநாத் டாகுர்,	**மனிதனின் சமயம்**, கலைமகள் வெளியீடு, சென்னை, 1959.
இராகவன், வி. எஸ். வி.,	**தாலமி**, மணிவாசகர் நூலகம், சென்னை, 1978.
...	**மார்க்கோ போலோ**, மணிவாசகர் நூலகம், ஆறாம் பதிப்பு, சென்னை, 1979.
இராசமாணிக்கம் பிள்ளை, மா.,	**பல்லவர் வரலாறு**, கழக வெளியீடு. மறு பதிப்பு, சென்னை, 1977.
இராமசேஷன், ஆர்.. கிருஷ்ணன், ஆர்., வலயைப்பேட்டை.,	**அருணகிரிநாதர் அடிச்சுவட்டில்**, சுவாமிநாத சுவாமி திருக்கோயில் வெளியீடு, சுவாமிமலை, 1981.
இளங்கோவடிகள்	**சிலப்பதிகாரம்**, பொ. வே. சோம சுந்தரனார் உரை, கழகம், 1969.
உதீசித் தேவர்	**திருக்கலம்பகம்**, காஞ்சி திருவேங்கட முதலியார் பதிப்பு, சென்னை, 1883,
...	**ஐங்குறுநூறு**, எஸ்.ராஜம் வெளியீடு, சென்னை, 1957.
கங்காதர நாவலர், கி. ஊ. பா.,	**சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரரின் சிவபரத் திருநெறி**, ஸ்ரீ ஜெய விநாயக சிவப்பிரகாச அச்சுக்கூடம், சென்னை, 1907.

கங்காதர நாவலர், **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீ ஸ்வரரின் சிவஞானப் பூரணம்,** ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடம் சென்னை, 1911.

... **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீ ஸ்வரரின் சிவஞானச் சிந்தாமணி** ஸ்ரீஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக் கூடம், சென்னை, 1912.

... **சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீ ஸ்வரரின் சிவஞானத் திருவாகரம்,** ஸ்ரீஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக் கூடம் சென்னை, 1913.

... **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீ ஸ்வரரின் சிவஞானத்ரயம்,** புரசை சரஸ்வதி அச்சியந்திர சாலை, சென்னை, 1915.

... **சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீ ஸ்வரரின் சிவஞான பாஸிய வியூகம்,** ஸ்ரீ ஜெயவிநாயக சிவப்ர காஸ அச்சுக்கூடம், சென்னை, 1916.

... **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீ ஸ்வரரின் சிவஞான ரமணியம்** ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக் கூடம், சென்னை, 1917.

... **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீ ஸ்வரரின் சிவஞான ஸத்வாம் ருதம்,** ஸ்ரீஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடம், சென்னை, 1919.

... **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீ ஸ்வரரின் சிவஞான பௌதிகம்,** ஸ்ரீ ஜெயவிநாயக சிவப்ரகாஸ அச்சுக் கூடம், சென்னை, 1920.

... **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீ** ஸ்வரரீன் சிவஞான **மஹத்வ சுகத்வம்,** ஸ்ரீ ஜெயவிநாயக சிவ ப்ரகாஸ அச்சுக்கூடம், சென்னை, 1927.

கணேசன், சி., **முண்டகக்கண்ணியம்மன் பாமாலை,** சென்னை, 1975.

கண்ணபிரான், எம். சி., **திருமயிலைத் தல புராணம்**, சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, சென்னை, 1948.

கண்ணப்ப முதலியார், பாலூர்., **தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவ தலங்கள்**, பாரி நிலையம், சென்னை, 1969.

... **கபீர் அருள் வாக்கு**, சாகித்ய அகாதெமி, புதுடெல்லி, 1964.

... **கலித்தொகை**, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை, 1957.

கலியாணசுந்தரனார், திரு. வி, **முருகன் அல்லது அழகு**, சாது அச்சுக்கூடம், எட்டாம் பதிப்பு, சென்னை, 1950.

கல்யாணசுந்தரம், ஏ. **திருச்செந்தூர் முருகன் கோயில் வரலாறு**, பிஎச்.டி. பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப் பெற்ற ஆய்வேடு, திருக்குமரன் பதிப்பகம், திருச்செந்தூர், 1980.

கனகசபை, வி., **ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்**, (தமிழாக்கம்) கா. அப்பாதுரை, கழக வெளியீடு, மறு பதிப்பு, சென்னை, 1962.

கனகசபை நாயகர், பு., **திருமயிலைப் பதிற்றுப் பத்தந்தாதி** மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1883.

கிருஷ்ணசாமி, வே., **தமிழில் தல புராண இலக்கியம்**, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோயில், 1974.

கிருஷ்ணமூர்த்தி, மு., **பத்ரகாளியம்மன் பக்திப் பாடல்கள்**, சென்னை, 1981.

கிருஷ்ண ராவ், **முண்டகக் கண்ணி அம்மன் பஞ்சகம்**, ஆதி விநாயகர் அச்சகம், சென்னை, 1968.

குணவீர பண்டிதர், **நேமிநாதம்**, கா. ர. கோவிந்தராச முதலியார் (குறிப்புரை), கழக வெளியீடு, மறுபதிப்பு, 1973.

குப்புசாமி முதலியார், மா. து.,	**கயிலையே மயிலை, மயிலையே கயிலை,** கும்பாபிஷேக நினைவு வெளியீடு. 1982.
குமார தேசிகர், கு. ஆ. புதுவை.,	**சென்னை திருமயிலை ஸ்ரீ கபாலீசுவரர் அருள்வளர் மல்லிகைப்பா,** ஸ்ரீ ஜீவரத்தின விநாயக சம்பந்தர் அச்சுக்கூடம், சென்னை, 1911.
கோடீஸ்வரய்யர், என்.,	**தோத்திரத் திரட்டு.** வி. கல்யாண ராமய்யர் அண்டு கம்பெனி, சென்னை, 1915.
கோவிந்தராசன், சீனி. மயிலை.,	**திருமயிலை நான்மணி மாலை,** கணேச அச்சியந்திர சாலை, சென்னை, 1918.
கோவிந்தராசன், சே.,	**திருமயிலை வெண்பா அந்தாதியும் திருப்போரூர் முருகன் புகழ் மாலையும் சீகாவித் தண்டலம் படைவீட்டம்மன் பதிகமும்,** சென்னை,
கைலாசபதி, க.,	**பண்டைத் தமிழர் வாழ்வும், வழிபாடும்,** பாரி நிலையம், சென்னை, 1966.
சண்முகம் பிள்ளை, மயிலை, (பதிப்பு),	**திருமயிலைக் கலம்பகம்,** எம்பார் அச்சுக்கூடம், சென்னை, 1903.
சதாசிவ பண்டாரத்தார், டி. வி.,	**பாண்டியர் வரலாறு,** கழக வெளியீடு ஏழாவது பதிப்பு, சென்னை, 1969.
சதாசிவ பண்டாரத்தார், தி. வை.	**பிற்காலச் சோழர் வரலாறு,** (மூன்று பாகங்கள்), அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, அண்ணாமலை நகர், 1974.
சந்திரசேகரன், டி,. (பதிப்பு),	**திருமயிலைப் பிரபந்தங்கள்,** அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வெளியீடு, அரசு அச்சகம், சென்னை, 1953
சந்திரசேகர கவிராஜ பண்டிதர், தில்லையம்பூர்.,	**திருமயிலைக் கபாலீசர் பதிகம்,** இலட்சுமி நிவாஸ் அச்சுக்கூடம், 1876.
சபாபதி முதலியார், காஞ்சீபுரம்.,	**திருமயிலையிலிருக்கும் வியாசர்பாடி விநாயக முதலியார் தர்ம சத்திர மாலை,** முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம், 1880.

சம்பந்தன், மா. சு., **சென்னை மாநகர்**, தமிழர் பதிப்பக வெளியீடு, பாரி நிலையம், சென்னை, 1955.

சம்பந்த முதலியார், ப., **சிவாலயங்கள் இந்தியாவிலும், அப்பாலும்**, நான்காம் பாகம், இரத்தின விலாஸ் அச்சுக்கூடம், சென்னை. 1948.

சரவண பவானந்தர், சுவாமி., **கற்பகாம்பகை அந்தாதிப் பதிகம்**, அருஞ்சுடர் வெளியீட்டகம், சென்னை, 1965.

சாத்தனார் சீத்தலை, **மணிமேகலை**, பொ. வே. சோமசுந்தரனார் உரை, கழகம், சென்னை, 1971.

சாமிநாதையர், உ. வே, **ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்**, பாகம் 1, 2, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1938,

சாமிநாதையர், உ, வே. (பதிப்பு), **பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும்**, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1956.

சிவபாத சுந்தரம், சோ., **சேக்கிழார் அடிச்சுவட்டில்**, வானதி பதிப்பகம், சென்னை, 1978.

சிவப்ரகாச குமரகுரு தேசிகர், **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரரின் தோத்திர பூஷணம்**, ஸ்ரீ ஜெய விநாயக சிவப்பிரகாச அச்சுக்கூடம், சென்னை, 1920.

சின்னத்தம்பி பிள்ளை, **சிவ க்ஷேத்திர மான்மிய சங்கிரகம்**, கோயமுத்தூர் கலாநிதி அச்சுக்கூடம், 1882.

சீனிவாசன், இரா., **சக்தி வழிபாடு**, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1975.

சுத்த சத்வானந்தா. **திருகோல விழி அம்மன் போற்றி இசைமாலை**, ஸ்ரீ சத்குருதேவ் அறநிலையக் குழு, சென்னை, 1980.

சுத்த சத்வானந்தா (என். எஸ். சிதம்பரம்), 'ஸ்ரீ கற்பகாம்பாள் அந்தாதி' **அந்தாதி ஐந்து**, சென்னை, 1982.

சுந்தரர், **தேவாரம்**, ஏழாம் திருமுறை, தருமையாதீனம், 1964.

சுந்தரர், **தேவாரம்** (தலமுறை), திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு, ஸ்ரீவைகுண்டம், 1965.

சுந்தர முதலியார், வியாசர்பாடி, **திருமயிலாப்பூர் தலமகிமைக் கீர்த்தனம்**, கா. சோ. காஞ்சனமாலை அம்மாள் பதிப்பு, சென்னை, 1948.

சுப்பராய முதலியார், தேனாம்பேட்டை, **திருமயிலைக் கபாலீசர் இரட்டை மணிமாலை**, கலாரத்நாகர அச்சுக் கூடம், சென்னை, 1883.

சுப்பிரமணியன், ஏ. வி., **புதிய கோணங்களில் சங்க இலக்கியம்**, வானதி பதிப்பகம், சென்னை, 1983.

சுப்பிரமணியன், ச. வே., **இலக்கணத் தொகை, யாப்பு-பாட்டியல்**, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978,

சுடிகாசலம், ந., **தமிழ் இலக்கியக் கொள்கை**, தொகுதி 6, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981.

சுப்பிரமணியம், கே., (பதிப்பு), **பதினோராந்திருமுறை**, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு, ஸ்ரீ வைகுண்டம், 1972.

சுப்பிரமணிய பிள்ளை, இ. மு., **சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**, அறநிலையத் துறை, தமிழ் நாடு அரசாங்கம், சென்னை, 1964.

சுப்பிரமணியபிள்ளை, கா., **இலக்கிய வரலாறு. இரண்டாம் பாகம்**, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், மூன்றாம் பதிப்பு, சென்னை, 1949.

சுப்பிரமணிய பிள்ளை, த. வடக்குப்பட்டு., **சிவ ஸ்தல மஞ்சரி**, சவுத் இந்தியன் அச்சுக்கூடம் இரண்டாம் பதிப்பு, சென்னை, 1912.

சுப்பிரமணிய முதலியார், சி. கே. (பதிப்பு), **பூர் பாவை**, கோவைத் தமிழ்ச் சங்கம், 1950

செட்டியார், ஏ. கே. (தொகுப்பு), **தமிழ்நாடு** (பயணக் கட்டுரைகள்) ஆர். ராமச்சந்திரன்—ஏ. வீரப்பன், வெளியீடு, 1968.

செந்தில்வேலு முதலியார், திருமயிலை, (பதிப்பு), **திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராம் திருமுறை ஆக நான்கு திருமுறைகளும்,** கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை, 1900.

செம்பொற் செவ்வேள், **முண்டகக் கண்ணி முப்பது,** ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1981.

செயராமன், ந. வீ., **சிற்றிலக்கியச் செல்வங்கள்,** மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1967.

சேக்கிழார், **திருத்தொண்டர் புராணம்,** சி கே. சுப்பிரமணிய முதலியார் உரை, ஐந்தாம் பகுதி, கோவைத் தமிழ்ச் சங்கம், 1950.

,, **திருத்தொண்டர் புராணம்,** தி. பட்டுச்சாமி ஓதுவார் (பதிப்பு), திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு, திருச்சி, 1950.

சேதுப்பிள்ளை, ரா. பி., **தமிழகம் ஊரும் பேரும்,** பழனியப்பா பிரதர்ஸ், ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1976.

சோமசுந்தரம்செட்டியார் கயப்பாக்கம், **திருவிழாவின் தத்துவ விளக்கம்,** திருமயிலை ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, சென்னை, 1958.

சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், ஸ்ரீமத். (பதிப்பு), **திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஒன்பதாந்திருமுறை,** தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1969.

ஞானசித்த சுவாமிகள், ஸ்ரீமத். திருக்குருகூர், **திருமயிலை, திருமணவூர், திருவான்மியூர், சாமளவல்லியார் பதிகங்கள்,** இராகவ முதலியார் பதிப்பு, இந்து யூனியன் அச்சியந்திர சாலை, சென்னை, 1893.

... **டால்ஸ்டாய் கட்டுரைகள்** 'மதமும் வாழ்வும்., வானதி பதிப்பகம், சென்னை, 1960.

தண்டபாணி சுவாமிகள், வண்ணச்சரபம், **சென்னைக் கந்தரிதழகலந்தாதி,** கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை, 1880.

தண்டபாணி சுவாமிகள், வண்ணச்சரபம், **சென்னை மாநகர்க் கந்தசுவாமி பேரிற் கலம்பகம், திரிபந்தாதி, அநுபவப் பதிகம், சென்னைச் சிவன் பதிகம், திருவொற்றியூர்ப் பதிகம், திருவள்ளுவ நாயனார் பதிகம், திருவல்லிக்கேணிப் பதிகம்**, மு. ஏழுமலைச் செட்டியார் பதிப்பு, ஸ்ரீநிதி அச்சுக்கூடம் சென்னை, 1878.

... **தண்டியலங்காரம்**, கழக வெளியீடு, மறுபதிப்பு, சென்னை, 1963.

தபஸ்யானந்தர், சுவாமி, **ஸ்ரீராமகிருஷ்ண மடமும் சங்கமும்**, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 1980.

தாண்டவராய கவிராயர், **திருமயிலை யமக அந்தாதி**, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, மறு பதிப்பு, சென்னை, 1975.

தாண்டயராய செட்டியார் **திருமயிலை செங்கழுநீர் விநாயகர் பதிகம்**, தயாநிதி அச்சுக்கூடம், சென்னை, 1885.

தாமோதர முதலியார், வீச்சூர் (பதிப்பு) **சூடாமணிப் புலவர் அருளிய வைசிய புராணமும் ஔவையாரருளிச்செய்த நாகந்தைப் பந்தனந்தாதியும் மற்றுஞ்சிலராற் செய்யப் பட்ட அம்மானையும் கைவளமும்**, கல்விக் கடல் அச்சுக்கூடம், தஞ்சை, 1855.

... **தாயுமான சுவாமிகள் பாடல்**, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு, இரண்டாம் பதிப்பு, ஸ்ரீ வைகுண்டம், 1963.

திரிகூடராசப்பக் கவிராயர், **திருக்குற்றால யமக அந்தாதி, திருக்குற்றாலநாதர் உலா, திருக் குற்றாலச் சிலேடை வெண்பா**, கோயில் வெளியீடு, 1939.

திருவள்ளுவர், **திருக்குறள்** (பரிமேலழகர் உரை), திருக்குறள் அற நிலையம், திருவள்ளு வர் ஆலயம், சென்னை, 1954.

... **திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள்**, கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் பதிப்பு, கழக வெளியீடு, சென்னை, 1927.

... **திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்**, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1975.

... **திருஞானசம்பந்தர் தேவாரம்** (தல முறை), திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு, ஸ்ரீ வைகுண்டம், 1980.

... **திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரர் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்**, கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் பதிப்பு, கழக வெளியீடு, 1928.

... **திருநாவுக்கரசு சுவாமிகள் சுந்தரர் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்**, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1973.

... **திருநாவுக்கரசர் தேவாரம்** (தல முறை), திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு, ஸ்ரீ வைகுண்டம், 1976.

... **திருமயிலை உலா**, மயிலை சண்முகம் பிள்ளை பதிப்பு, எம்பார் அச்சுக்கூடம், சென்னை, 1903.

... **திருமயிலை உலா**, மு. கோ. ராமன் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

... **திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம்**, கலைமகள் வெளியீடு, மறு பதிப்பு, எம்.எல்.ஜே. அச்சகம், மயிலாப்பூர்.

திருமயிலைச் சிறப்பு, ஜனரல் சப்ளைஸ் கம்பெனி, சென்னை, 1911.

...	**திருமயிலைத் தோத்திரங்கள்,** அமுதநிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1960.
திருமூலர்,	**திருமந்திரம்**, மாவை. வே. விசுவநாத பிள்ளை பதிபபு, சென்னை. 1912.
திருவேங்கடபாரதி,	**பாரதி தீபம்**, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1980.
தூக்கோவளன், இ.,	**மயிலை நோக்கி**, சேகர் பதிப்பகம், சென்னை, 1975.
...	**தொண்டைமண்டலம் சோழிய வேளாள மரபு வியாசர்பாடி விநாயக முதலியார் சித்திரச்சத்திர தரும பரிபாலனம்**, விநாயக முதலியார் சாரிடீஸ், அரோரா அச்சுக்கூடம், சென்னை, 1925.
தொல்காப்பியர்,	**தொல்காப்பியம்**, தி.சு பாலசுந்தரம் பிள்ளை பதிப்பு, கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1954.
,,	**தொல்காப்பியம்**, எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1950.
,,	**தொல்காப்பியம்**, பொருளதிகாரம், இளம்பூரணம், கழக வெளியீடு, மறு பதிப்பு, சென்னை, 1982.
நடராஜன், எஸ்., (நஜன்),	**தமிழர் பண்டிகைகளும் பண்பாடும்**, வானதி பதிப்பகம், சென்னை, 1972.
,,	**மயிலை கற்பகம்**, பிரதிபா பிரசுரம், சென்னை, 1982.
...	**நற்றிணை**, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை, 1957.
நாகசாமி, இரா. (பதிப்பு),	**சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்,** தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை. 1970.
நாதமுனி, ப. கோ. (தொகுப்பு),	**ஸ்ரீ கணபதி**, தெய்வீக வாழ்க்கைச் சங்கம், காஞ்சிபுரம், 1973.
நாதமுனி முதலியார், மயிலை.,	**திருமயிலைத்தலபுராணம்**, நோபில் பிரஸ், சென்னை, 1924.

படிக்காசுப் புலவர், **தொண்டை மண்டல சதகம்**, சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை பதிப்பு, இந்துபிரஸ், 1854.

பட்டாபிராம முதலியார், கொ. மயிலை., **மயிலை திருவல்லிக்கேணி மஹாத்மியம்**, ஸ்ரீவைஷ்ணவ முத்ரணாலயம், சென்னை, 1928.

... **பதிற்றுப் பத்து மூலமும் உரையும்**, கழக வெளியிடு, மறுபதிப்பு, சென்னை, 1958.

பரமசிவானந்தம், அ.மு., **தமிழ் நாட்டு விழாக்கள்**, தமிழ்க் கலைப் பதிப்பகம், சென்னை, 1956.

... **பரிபாடல்**, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை, 1957.

... **பாண்டியர் செப்பேடுகள் பத்து**, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, 1967.

பாலசுந்தரம் பிள்ளை, தி. சு. (உரை.). **நாலடியார்**, கழக வெளியீடு, மறு பதிப்பு, சென்னை, 1961.

பாலசுப்பிரமணிய முதலியார், ம., **திருமயிலாப்பூர் தல புராணம்**, சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1932.

பாஸ்கரத் தொண்டைமான், தொ. மு., **வேங்கடம் முதல் குமரி வரை-பாலாற்றின் மருங்கினிலே**, எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை பதிப்பு, 1964.

பாஸ்கர மார்த்தாண்டன், பொன்., **தேவி தரிசனம், மயிலை உறையும் மகா சக்திகள்**, அம்பாள் பதிப்பகம், சென்னை, 1981.

,, **கற்பகாம்பாள்**, அம்பாள் பதிப்பகம், சென்னை, 1982.

... **புறநானூறு**, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை, 1958.

... **புறநானூறு**, கழக வெளியீடு, சென்னை, 1970.

மாசிலாமணி, மயிலை.,	**திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த பூம்பாவைத் திருப்பதிக உரை,** திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரர் தேவஸ்தானம், சென்னை, 1956.
...	**மயிலை நேமிநாதர் பதிகம்,** நல்லறிவு மன்றம், ஆரணி, 1955.
மயில்வாகனம், க.,	**மயிலை மும்மணி மாலை,** அச்சுவேலி ஞானப்பிரகாச இயந்திர சாலை, 1897.
மாணிக்க முதலியார், மதுரகவி, குன்றத்தூர்,	**திருமயிலை ஸ்ரீ கபாலீசர் திருப் பதிகம், கற்பக வல்லியம்மை பஞ்ச ரத்தினம், பூம்பாவையார், சரித்திரம், சிங்காரவேலர் பதிகம், திருத்தொண்டத் தொகை,** மநோன்மணி விலாச அச்சுக்கூடம், 1905.
மாணிக்கவாசகர்,	**திருவாசகம்,** திருமுருக கிருபானந்த வாரியார் பதிப்பு, தி. அ. சண்முகம் செட்டியார் வெளியீடு, காஞ்சிபுரம்.
மீனாட்சிசுந்தரம் பிள்ளை,	**திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை,** நமச்சிவாய முதலியார் பதிப்பு, பெங்களூர், 1856.
...	**ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் பிரபந்தத் திரட்டு** உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1910.
முத்துக் கணேசன், ரெ., (உரை.),	**முத்தொள்ளாயிரம்,** பாரி நிலையம், சென்னை, 1957.
முத்துசாமி பிள்ளை, ஜி. எம்.,	**திருமயிலையும் பூம்பாவையும்,** சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை, 1965.
,,	**சைவ புண்ணியக் கண்கள்,** சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை, 1976.
,,	**சிவலிங்க வழிபாடு,** திருப்பணிக் குழு, திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில் வெளிடு, சென்னை, 1979.

முத்துசாமி முதலியார், ஆலந்தூர், **திருமயிலைக் கபாலீசர் பதிகம்**, அமெரிக்கன் அச்சுக்கூடம், சென்னை, 1855.

முருகவேள், ந. ரா., **தெய்வத் திருவுருவங்கள்**, தணிகை பதிப்பகம், சென்னை, 1974.

முருகேச முதலியார், நெல்வேலி, **சிவதல மான்மியச் சுருக்கம்**, மனோன்மணி விலாச அச்செந்திர சாலை, 1894.

முருகேஸம் பிள்ளை, ந. பாலகவி, **சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் துதிப்பா மாலை**, ஸ்ரீ ஜீவ ரத்திந வீநாயக சம்பந்தர் அச்சுக்கூடம், சென்னை, 1913.

முனிசாமி முதலியார், மோசூர், **திருமயிலைப் புராண வசனம்**, கபாலி அச்சுக்கூடம், சென்னை, 1910.

முனிசாமி பிள்ளை, வீ., **சென்னை திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரர் துதிப்பா மாலை**, ஸ்ரீ ஜீவ ரத்திந சம்பந்தர் அச்சுக்கூடம், சென்னை, 1911.

ராதாகிருஷ்ண பிள்ளை, எம்., **தென்னாட்டுத் திருக்கோயில்கள்**, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, 1956.

ராமகிருஷ்ணன், ரா., **சுவாமிராமகிருஷ்ணானந்தர்**, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 1970.

ராஜா, எம். என்., **திருமயிலை சென்று பார்ப்போம்**, கிரி டிரேடிங் ஏஜன்ஸி, சென்னை.

வித்தியானந்தம், சு., **தமிழர் சால்பு**, பாரி புத்தகப் பண்ணை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1971.

வீரமணி, யாழ்ப்பாணம், **திருமயிலைக் குறவஞ்சி**, திருமயிலை கபாலீசுவரர் கோயில் வெளியீடு, சென்னை, 1957.

வெள்ளைவாரணன், க., **பன்னிரு திருமுறை வரலாறு, முதற் பகுதி**, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் நூல் வெளியீடு, 1962.

,, **பன்னிரு திருமுறை வரலாறு இரண்டாம் பகுதி**, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் நூல் வெளியீடு, 1969.

வேங்கடசாமி, சீனி, மயிலை., **பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்**, சாநதி நூலகம், சென்னை, 1962.

,, **சமணமும் தமிழும்**, கழகம், மறு பதிப்பு, சென்னை, 1970.

வைத்தியநாதன், எச்., **ஸ்ரீ திருவல்லிக்கேணி மகாத்மியம்**, பாரதி புக் சென்டர், இரண்டாம் பதிப்பு; சென்னை, 1978.

ஜகந்நாதன், கி. வா. **மயிலைச் சிங்காரவேலன் இரட்டை மணிமாலை**, அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1961.

,, **திருமயிலைச் சிங்காரவேலர் பதிகம்**, அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1966.

ஜெயங்கொண்டார், **கலிங்கத்துப் பரணி**, கோபாலையர் பதிப்பு, கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, 1923,

,, **கலிங்கத்துப் பரணி**, கழக வெளியீடு, சென்னை, 1950.

... **ஜைனம் (ஓர் அறிமுகம்)**, ஜைன இளைஞர் மன்றம், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1984.

ஸ்ரீபால், டி. எஸ். ஜீவபந்து, **'நயினார் கோயில்', திருக்குறள் மூலமும், கட்டுரைகளும்** ஜைன இளைஞர் மன்றம், சென்னை.

ஸ்ரீனிவாஸய்யங்கார், சி. ஆர். **மயிலாப்பூர் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள், பேயாழ்வார் கோயில் ஸ்தல புராணம்**, சென்னை, 1973.

ஆராய்ச்சி நெறியியல் நூல்கள்

சுப்பிரமணியன், ச. வே., **ஆராய்ச்சி நெறிமுறைகள்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

பெரிய கருப்பன் (தமிழண்ணல்), இராம., & இலக்குமணன். எம். எஸ்,. **ஆய்வியல் அறிமுகம்**, ஏரக வெளியீடு, இரண்டாம் பதிபபு, மதுரை, 1979.

முத்துச் சண்முகன் & வெங்கடராமன், சு., **ஆய்வுக் கட்டுரை எழுதும் முறை**, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1976.

விசுவநாதன், ஈ.ச.,
ஆய்வுநெறிமுறைகள் தமிழ்ப் புத்தகாலயம், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1981.

அச்சிடப்படாத ஆய்வு நூல்

பத்மநாபன், குமார.,
திரிகூட ராசப்பக் கவிராயர் நூல்கள்—ஓர் ஆய்வு, பிஎச். டி பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப் பெற்ற ஆய்வேடு, சென்னை, ஜுன், 1981

அச்சில் வெளிவராத கையெழுத்துப் படிகள்

அப்பாசாமி முதலியார், **கபாலீசர் குறுங்கழி நெடில்,** உ. வே. சாமிநாதையர் நூலகம், எண். 880.

ஆதொண்ட சக்கிரவர்த்தி வரலாறு, அ. கீ. சு. நூ. எண். 3827.

கற்பகவல்லிமாலை, உ. வே. சாமிநாதையர் நூலகம், எண். 1651.

கனகராஜையர், நா., **திருமயிலை கபாலீசன் மாலை,** அ. கீ. சு. நூ., எண். ஆர். 8589.

,, **திருமயிலை கற்பகவல்லி மாலை,** அ. கீ. சு, நூ., எண். ஆர். 8384.

,, **பூம்பாவை தவச்சிறப்பு மாலை,** அ. கீ. சு. நூ., எண். ஆர். 8608.

ஞானப்பிரகாசப் பிள்ளை, **மைலாப்பூர் கந்தப்பராசன் சரித்திரம்,** அ. கீ. சு. நூ., எண். டி. 2858.

தண்டபாணி சுவாமிகள், **மைலாபுரிப் பதிகம் 1, திருமயிலைக் கபாலீசர் தோத்திரக் கீர்த்தனை,** திருவாமாத்தூர் மடம், அ. கீ. சு. நூ., எண். ஆர். 6591.

திருமயிலைக் கபாலீசன் மாலை, அ.கி.சு. நூ., எண். ஆர். 8523

தொண்டைமான் சக்கிரவர்த்தி வரலாறு, அ. கீ. சு. நூ., எண். டி. 3822.

நடராஜ சர்மா, யு. எஸ். **ஸ்ரீ கற்பகாம்பாள் பாடல்கள்,** திருமயிலை கபாலீசுவரர் கோயில் நூலகம்.

மயிலை கற்பகவல்லியம்மன் பேரில் விருத்தம், அ.கீ.சு.நூ., எண். ஆர். 6672.

மயிலை ஞானசுந்தர விநாயகர் விருத்தம், உ. வே. சாமிநாதஅய்யர் நூலகம், எண். 1545.

யாமநாதபுரம் அல்லது பழைய மயிலாப்பூரினுடைய மகாவிசேஷித்த கைபீது, அ. கீ. சு. நூ., எண். 3415.

அகராதி, தொகுப்பு நூல்கள்

இராமசாமிப் புலவர், சு. அ., **சிலேடையகர வரிசை**, கழகம் 1890.

கழகத் தமிழ் அகராதி, கழகம், மறு மதிப்பு, சென்னை, 1980.

சிங்காரவேலு முதலியார், ஆ., **அபிதான சிந்தாமணி**, ஏசியன் எடுகேஷனில் சர்வீஸ், புது தில்லி, மறு மதிப்பு, 1982.

தமிழ் நூல் விவர அட்டவணை, முதல் தொகுதி-இரண்டாம் பகுதி, தமிழ்நாடு அரசு வெளியீடு, சென்னை, 1962.

தமிழ் நூல் விவர அட்டவணை, முதல் தொகுதி-மூன்றாம் பகுதி, தமிழ் நாடு அரசு வெளியீடு, சென்னை, 1963.

தமிழ் நூல் விவர அட்டவணை, முதல் தொகுதி, ஐந்தாம் பகுதி, தமிழ் நாடு அரசு வெளியீடு, சென்னை. 1964.

தமிழ் நூல் விவர அட்டவணை, இரண்டாம் தொகுதி-முதற் பகுதி, தமிழ் நாடு அரசு வெளியீடு, சென்னை, 1965.

தமிழ் லெக்சிகன், தொகுதி 5, பகுதி 2, சென்னைப் பல்கலைக் கழகம், மறு மதிப்பு, சென்னை, 1982,

தமிழ் லெக்சிகன், தொகுதி 6, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1936.

பாட்டும் தொகையும், எஸ். ராஜம் வெளியீடு, சென்னை, 1958.

பெரியசாமித் தூரன், ம. ப., **கலைக்களஞ்சியம்**, தொகுதி 7, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை. 1960.

" **கலைக்களஞ்சியம்**, தொகுதி 8, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1961.

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையச் சுவடிகளின் விளக்கம், தொகுதி2, 1961.

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே, சாமிநாதையர் நூல் நிலையச் சுவடிகளின் விளக்கம், தொகுதி 3, 1962.

Classified Catalogue of Tamil printed Books with Introductory Notices compiled by John Mordock, Tamil Development Research Council, Government of Tamil Nadu, Reprint, 1968.

இதழ்கள்

கல்வெட்டு, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை, ஐப்பசி (1976-77).

சித்தாந்தம், வைச சித்தாந்த மகாசமாஜம், சென்னை, நவம்பர், 1951.

சித்தாந்தம், சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை, ஆகஸ்டு, *1954.*

சித்தாந்தம், சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை, ஜனவரி, *1958.*

சித்தாந்தம், சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை, ஏப்ரல், *1963.*

சித்தாந்தம், சைவ சித்தாந்த மகாசமாஜம் சென்னை, ஜூலை, *1964.*

சித்தாந்தம், சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை, ஆகஸ்டு, *1970.*

செந்தமிழ்ச் செல்வி, கழகம், தொகுதி *36*, சூன், *1962.*

செந்தமிழ்ச் செல்வி, கழகம், தொகுதி *37*, செப்டம்பர் *1962.*

திருக்கோயில், அறநிலையத் துறை, ஜனவரி & பிப்ரவரி, *1976.*

முக்குடை, ஜைன இளைஞர் மன்றம், செப்டம்பர், *1979.*

நூல் இதழ்கள்

தினத்தந்தி, செப்டம்பர் *24, 1982.*

தினமணி, செப்டம்பர் *24, 1974.*

மாலை முரசு, மார்ச்சு *29, 1980.*

மலர்கள்

ஆடிப்பூரம், ஆடி சுவாதி, ஆடிக் கிருத்திகை, ஸ்ரீ கபாலீஸ்வரர் தேவஸ்தானம், சென்னை, *1971.*

இலட்ச தீப விழா சித்திரை வசந்தவிழா, வைகாசி விசாக விழா, ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தானம், சென்னை, *1971.*

சங்காபிடேகம் (ஆனிச் சதயம்), ஸ்ரீ கபாலீஸ்வரர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை, *1971.*

சமயக் கலை மலர், திருமயிலைக் கபாலீச்சரம், *1965.*

சிவகளை அருள்மிகு சோரநாத விநாயகர் குடமுழுக்கு விழா நினைவு மலர், சிவகளை, *1976.*

தண்டபாணி தேசிகர், ச., 'கணபதி', **எடுத்தணிவயல் ஸ்ரீ பஞ்சாக்ஷரவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக மலர்**, திருவாவடுதுறை ஆதீனம், *1956.*

திருமயிலை கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர், 1982.

நூறாயிரம் (லக்ஷம்) திருவிளக்குப் பெருவிழா, மலர், ஸ்ரீ கபாலீசுவரர் திருக்கோயில் வெளியீடு, திருமயிலை சென்னை, *1963.*

ராஜா அண்ணாமலைபுரம் ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா மலர், சென்னை, *1982.*

பிற

அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், இரக்தாக்ஷி ஆண்டு சிறப்பு நாட்கள் நிகழ்ச்சி நிரல், மயிலாப்பூர், 1984.

திருமயிலை ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் பேயாழ்வார் திருக்கோயில் ருத்ரோத்காரி வருஷ உற்சவப் பஞ்சாங்கம், 1983-84.

திருமயிலைக் கபாலீச்சுரர் பங்குனிப் பெருவிழா அழைப்பு, 1984.

மயிலையே கயிலை, கோயில் விளக்கக் கையேடு, திருமயிலைக் கபாலீச்சரம், சென்னை,

பேட்டிகள்

அந்தோணி தாஸ், மறைத்திரு., செயின்ட் லாசரஸ் சர்ச், மயிலாப்பூர்.

ஆறுமுகம், கு., வீரசைவர், திருவள்ளுவர் கோயில், மயிலாப்பூர்,

காளத்தி முதலியார். எஸ்., காண்டிராக்டர். மயிலாப்பூர்.

கோதண்டராமன், ஏ., அறங்காவலர், பரிபூரண விநாயகர் கோயில்,

கோதண்டராமன், பொன்,. பேராசிரியர், தமிழ் இலக்கியத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

சந்திரு, வீர சைவர், ஆயத்துறை ஸ்ரீ ஞானசுந்தர விநாயகர் கோயில், மயிலாப்பூர்.

சம்பந்தன், சீ., செயலாளர், சித்திரச் சத்திரம், மயிலாப்பூர்,

சம்பந்த முதலியார், சீ. பி., அறங்காவலர், சித்திரச் சத்திரம், மயிலாப்பூர்.

மணிகண்டன் குருக்கள், ஸ்ரீ மணிகண்டன் கோயில், மயிலாப்பூர்,

லோகநாத முதலியார், பொய்யாவரசித்தி விநாயகர் கோயில், மயிலாப்பூர்.

வரதராஜ முதலியார், ச., முன்னாள் அறங்காவலர் கபாலீசுவரர் கோயில், மயிலாப்பூர்.

BOOKS IN ENGLISH

... **A Guide to the City of Madras and Its Suburbs,** Higginbotham and Co., Second Edition, Madras, 1875.

... **Around Madras,** Director of Information and Publicity, Govt. of Madras, Second Edition, Madras, 1967.

Arunachalam, M., **An Introduction to the History of Tamil Literature,** Gandhi Vidyalayam, Thiruchitrambalam, 1974.

" **Festivals of Tamilnadu**, Gandhi Vidyalayam, Thiruchitrambalam, 1980.

Barlow, Glyn., **The Story of Madras,** Oxford University Press, Madras, 1921.

Dorai Rangaswamy, M. A., **The Religion and Philosophy of Tevaram**, Book I & II, University of Madras, Madras, 1958.

Foote, Robert Bruce, **The Foot Collection of Indian Prehistoric and Protohistoric Antiquities**, Madras, 1914.

Gopalan, R., **History of the Pallavas of Kanchi**, University of Madras, 1928.

Harshananda, Swami, **All About Hindu Temples,** Sri Ramakrishna Ashrama, Second Edition, Mysore, 1981.

Hosten, H. The Rev., **Antiquities from Santhome and Mylapore,** The Diocese of Mylapore, Madras, 1936.

Jagadisa Ayyar, **South Indian Festivities**, Higginbothams Limited, Madras, 1921.

Kalyanasundaram, S., **A Short History of Mylapore,** Law Printing House, Mount Road, Madras, 1913.

Krishnamamacharlu, C. R. (General Editor), **South Indian Inscriptions**, Volume XII, Archaeological Survey of India, Madras, 1943.

Krishnaswamy Aiyangar, **South India and Her Mohammadan Invaders**, OXford Press, Madras, 1921.

Lorenzen, David, N., **The Kapalikas and Kalamukhas**, Two Lost Saivaite Sects, Thomson Press, New Delhi, 1972.

Love, Henry Davison, **Vestiges of Old Madras,** Volume I, Published for the Government of India, London, John Murray, Albemarle Street, 1913.

" **Vestiges of Old Madras**, Volume II, Published for the Government of India, London, John Murray, Albemarle Street, 1913.

" **Vestiges of Old Madras**, Volume III, Published for the Government of India, London, John Murray, Albemarle Street, 1913.

" **Vestiges of Old Madras**, Index Volume, Published for the Government of India, London, John Murray, Albemarle Street, 1913.

... **Manual of the Administration of the Madras Presidency,** Volume I, Government Press, 1855.

Meenakshisundaram, T. P., **A History of Tamil Literature,** Annamalai University, Annamalai Nagar, 1965.

Muthiah, S., **Madras Discovered,** Affiliated East West Press Private Ltd., Madras, 1981.

Muthuswamy, G. M., **Sivalinga Worship,** The Renovation Committee Marundheeswarar Temple, Thiruvanmiyur, 1979.

Nambiar, P. K. & Krishnamurthy, N., **Census of India, Volume IX, Part XI-D, Temples of Madras State, 1. Chingleput District and Madras City,** Madras, 1965.

Nambi Arooran, K., **Glimpses of Tamil Culture Based on Periapuranam**, Koodal Publishers, Madurai, 1977.

Nandi, Ramendra Nath, **Religious Institutions and Cults in the Deccan** (A.D. 600-A. D. 1000), Motilal Banarsidass, Delhi, 1973.

Nilakanta Sastri, K.A , **Foreign Notices of South India From Megesthenes to Ma Huan,** University of Madras, Reprint, 1972.

Radhakrishnan, S., **Indian Philosophy**, Part I, 10th Edition, George Allen & Unwin Ltd , London, 1977.

Raman, K.V., **The Early History of the Madras Region**, Thesis awarded **Master** of Letters Degree by the Madras University, 1957, Amudham Publishers. National Art Press, Madras, 1959.

Sewell, Robert, **Lists of the Antiquarian Remains in the Presidency of Madras,** Volume I, Govt. press, Madras, 1882.

,, **The Historical Inscriptions of Southern India** (Collected till 1923) and Outlines of Political Theory, Madras University, 1932.

Shulman, David Dean, **Tamil Temple Myths,** Princeton University Press, New Jercey, United States of America, 1980.

Srinivasan, C.R., **Kanchipuram Through the Ages,** Agam Kala Prakashan. Delhi, 1979.

Srinivasachari, C.S., **History of the City of Madras,** P. Varadachary & Co., Madras, 1939.

... **Sri Ramakrishna Math and Mission, Madras**, A Bird's Eye View, Sri Ramakrishna Math, Modras.

... **The Madras Guide Book,** Aiita Kumar & Co., Madras, 1936

... **The Madras Tercentenary Commemoration Volume,** Madras Tercentenary Celebration Committee, Oxford University Press, Madras, 1939.

Wheeler, Tolboys, J., **Madras in the Olden Time,** Volume I, J. Higginbotham & Co., Madras, 1861.

ஓ23,38:2111M
N89

128507

Wheeler, Tolboys, J., **Madras in the Olden Time,** Volume II, J. Higginbotham & Co , Madras, 1861.

,, **Madras in the Olden Time,** Volume III, J. Higginbotham & Co., Madras, 1862.

Zvelebil, K.V., **Tamil Literature,** Leiden/Koin, E.J., Brill, 1974.

SOUVENIRS

Our Lady of Guidance Church (St. Lazarus Church) **Raja Annamalaipuram, Madras, Golden Jubilee Souvenir,** 1928-1978.

Raja Annamalaipuram Sri Ayyappa Swami Temple Trust Souvenir 14-4-1980.

The Madras Sanskrit College and S.S.V. Pathasala, Madras, Golden Jubilee Souvenir, 1956.

JOURNALS

Bulletin of the Institute of Traditional Cultures, Madras, January to June 1974.

Jain Journal, A Quarterly on Jainology, Jain Bhavan Publication, Calcutta, April 1978.

Tamil Arasu, November, 1974.

Tamil Civilization, Quarterly Research Journal of the Tamil University, Tanjavur, September 1983.

NEWS PAPERS

Indian Express, September 21, 1974.

The Hindu, September 27, 1974.

The Hindu, December 4 1974.

The Hindu, Feburary 10, 1980.

The Hindu, May 22, and 30, 1980.

The Hindu, March 29, 1981.

The Hindu, September 24, 1982.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
79	3	பாடியுள்ளனர்:	பாடியுள்ளனர்.[1]
81, 83, 85, 87, 89, 91, 93, 95, 97, 99, 101, 103, 105, 107, 109, 111	பக்கத் தலைப்பு	தொன்மை வரலாறு	இலக்கியங்கள்

சு. ரரஜசேகரன்

பெற்றோர் :
அ. சுப்பிரமணியன், சு. ராஜலட்சுமி
பிறப்பு :
23 - 9 - 1944, திருமயிலாப்பூர், சென்னை
முன்னோர் :
தி. வீ. அருணாசல முதலியார்—தந்தை வழிப் பாட்டனார் (சென்னை சைதாப்பேட்டை மேனாள் நகராட்சி உறுப்பினர்)
வைத்தியர் அண்ணாமலை முதலியார் — தாய் வழிப் பாட்டனார் (திருமயிலை, சித்த வைத்தியர்—குமார சஞ்சீவினி)
படிப்பு :

பி.ஏ; (தமிழ்)	சென்னைப் பல்கலைக் கழகம்	1966
எம்.ஏ, (தமிழ்)	,,	1970
பிஎச்.டி.	,,	1986

பணி :
தமிழ்ப் பயிற்றுநர், மாநிலக் கல்லூரி, 1966-70
தமிழ்த் துணைப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, சேலம், செங்கல்பட்டு, 1970-80
தமிழ்ப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி செங்கல்பட்டு, 1980-81
தமிழ்ப் பேராசிரியர், அரசு ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை, 1981 முதல்

MK Color Process, Madras-14 Phone : 848311
Design by P. N. Anandan